
அதிகாரகிரகம், நாமநாடி விதிகள் உள்ளடங்கிய

ராஜநாடி

ஜோதிட சாஸ்திரம்



ajanaadi
Complete astrology solution

ராஜநாடி கா பா

லலாடம் ஜோதிடம் குழுமம்

CamScanner

ராஜநாடி சாஸ்திரம்

அதிகாரகிரகம் மற்றும் நாமநாடி விதிகள் உள்ளடங்கியது

Rajanaadi
Complete astrology solution

GROUP OF RAJANAADI ASTROLOGY EDUCATION

ஜோதிடக்கலை அரசு, பால்வீதி ஜோதிடன்

ராஜநாடி **கா.பார்த்திபன்**

வெளியீடு

லலாடம் ஜோதிட குழுமம்,

22, லட்சுமிபுரம்,செம்பரம்பாக்கம்,

சென்னை- 600123,

9941220631, 8610578792

Parthig27@gmail.com

நூல் குறிப்பு

நூலின் பெயர் ; ராஜநாடி சாஸ்திரம் (அதிகாரகிரகம், நாமநாடி, அதிகார ராசி)

ஆசிரியர் ; ராஜநாடி, கா.பார்த்திபன்

உரிமை ; ஆசிரியருக்கு மட்டுமே உரிமையானது

பதிப்பிட்டோர் ; லலாடம் ஜோதிடப் பதிப்பகம்
ராஜநாடி ஜோதிட பயிற்சி மையம்
22, லட்சுமி புரம்,
செம்பரம்பாக்கம், சென்னை - 600123

பதிப்பு ; மூன்றாம் பதிப்பு - 30/01/2024

பிரதிகள் ; 1000

நூல் அச்சிடுதல்; சிவா பிரிண்டர்ஸ்,
பக்கிங்காம் தெரு,
கரையான் சாவடி,
சென்னை -600 056

பக்கம் ; 483

நூலின் பொருள்; ஜோதிடம்

விலை ; ₹1100

குறிப்பு ; இந்த நூலில் உள்ள அனைத்து தகவலும் ஆசிரியருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது, ஆசிரியரின் அனுமதி இன்றி இந்த நூலில் உள்ள தகவலை பயன்படுத்துவது சட்டப்படியும், தர்மத்தின் படியும் குற்றமாகும், குரு சாபமும் உண்டாகும்,

பொருளடக்கம்

தலைப்பு	பக்கம்
1. ஆசிரியர் முன்னுரை	1
2. ஜோதிடம் காலம்	8
3. புத்தகத்தின் சுருக்கம்	19
4. காலமும் ராசிமண்டலமும்	21
5. பஞ்சாங்கம் என்றால் என்ன	44
6. வாரம்	45
7. நட்சத்திரம்	48
8. யோகம்	51
9. திதி	52
10. கரணம்	53
11. அயனம்	54
12. இருது	56
13. ஜோதி	57
14. முன்குறிப்பு	60
15. ராசிகள்	67
16. ராசியின் அதிபதிகள்	70
17. மேஷம்	75
18. ரிஷபம்	79
19. மிதுனம்	82
20. கடகம்	85
21. சிம்மம்	88
22. கன்னி	90
23. துலாம்	93
24. விருச்சகம்	96
25. தனுசு	99
26. மகரம்	102

27. கும்பம் 104
28. மீனம் 107
29. ராசிகளின் பகுதிகள் 110
30. கிரக காரகம் 112
31. சூரியன் 113
32. சந்திரன் 117
33. செவ்வாய் 120
34. புதன் 124
35. சுக்கிரன் 127
36. குரு (வியாழன்) 130
37. சனி 133
38. ராகு 136
39. கேது 140
40. ராஜநாடியின் பொது விதிகள் 143
41. அதிகாரகிரகம் கண்டறியும் விதி 148
42. நாமநாடி 155
43. பெயரியலில் அதிகார விதிகள் 165
44. பெயரும் அதிகார கிரகமும் 172
45. கிரகங்கள் குறிக்கும் பெயர்கள் 176
46. கிரக இணைவு குறிக்கும் பெயர்கள் 181
47. விளிம்பில் உள்ள கிரக பலன்கள் 190
48. கிரக வக்கிரம் 200
49. வக்கிர கிரக பலன்கள் 210
50. கிரக பரிவர்த்தனை 214
51. பரிவர்த்தனை கிரக பலன்கள் 217
52. உடன் இணைந்து கெட்ட கிரகம் 230
53. பலனறியும் நுட்பம் 235
54. அதிகாரகிரக பலனறியும் விதிகள் 241
55. அதிகார சூரியன் 244
56. அதிகார சந்திரன் 250
57. அதிகார செவ்வாய் 255

CamScanner

58. அதிகார புதன் 260
59. அதிகார சுக்கிரன் 266
60. அதிகார வியாழன் 271
61. அதிகார சனி 276
62. அதிகார ராகு, கேது 282
63. கிரகங்கள் ராசியில் உள்ள பலன் 290
64. கிரக இணைவு பலன்கள் 327
65. நடப்பு கிரக பலன் கூறுதல் 377

சிறப்பு பகுதி

1. காபாநூறு அனுபவ குறிப்புகள் 405
2. கல்வி அறிதல் 418
3. அதிகார கிரக மருத்துவ ஜோதிடம் 429
4. அதிகார ஆரூடம் 434
5. பலன் கூறுவதற்கான ஒழுக்கம் 435
6. மஹாதசாவில் அதிகார கிரக பலன் 441
7. அதிகார ராசி 463

உருவாக்கம்

ஜோதிடக் கலை அரசு, பால்வீதி ஜோதிடன்

ராஜநாடி. **காந்திராஜன். பார்த்திபன்**

லலாடம் ஜோதிட குழுமம்,

ராஜநாடி ஜோதிட பயிற்சி மையம்,

22, லட்சுமிபுரம்,செம்பரம்பாக்கம்,

சென்னை- 600123,

9941220631, 8610578792

Parthig27@gmail.com

ராஜநாடி

முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகளில் கிடைத்த ஆதரவை தொடர்ந்து மூன்றாம் பதிப்பில் இந்த ராஜநாடி ஜோதிட சாஸ்திரம் நூலை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், இந்த பதிப்பிலும் பல புதிய தகவல்கள் இணைத்துள்ளேன், மேலும் இந்த பதிப்பில் இன்னும் கூட எளிதான புரிதலுக்காக பல உதாரணங்களையும் கொடுத்துள்ளேன்,

முன்னுரை



எனது ஆசான், உயர்திரு. சா. ராஜகோபால் அவர்கள்,

ஜோதிடம் என்பது வாழ்வு பற்றிய தேடுதல்களுக்கும், நாளை குறித்த கேள்விகளுக்கும், பல்வேறு முறையில் விடை காண முற்பட்ட துறையே ஜோதிட துறையாகும், அந்த அடிப்படையில் பலர் பல்வேறு கோணங்களில் ஜோதிடத்தை அணுகினாலும் குறிப்பிட்ட ஒரு ஒற்றுமையை கடந்து எவராலும் பயணிக்க இயலாது, அதன் ஒருபடியே நமது ராஜநாடி ஜோதிட சாஸ்திரமும்,

இந்த முறையானது எனது குரு மற்றும் எனது தாய் வழி தாத்தாவுமான அய்யம்பாளையம் உயர்திரு. **சா.ராஜகோபால்** அவர்களால் தோற்றுவிக்கபட்ட இரண்டாவது முறையாகும், அவரது முதற் படைப்பான **கோரா** முறையும் அதற்குப் பின் நமது ராஜநாடி முறையும் உருவாக்கப்பட்டது, அவர் தனியாக,

தானாக எந்த ஒரு விதியையும் கண்டறியவில்லை எனவும், முன்னோர்களின் ஓலைகள், ஆதி நூல்கள் மற்றும் பெரியோர்களின் அனுபவ அறிவுரைகளின் வழிகாட்டுதல்களாலும் தனது பலவருட அனுபவத்தையும் சேர்த்து கொண்டு தேவையானவற்றை எடுத்துக் கொண்டும், தேவையற்றவற்றை நீக்கியும் அனைவரும் எளிதில் கிரகித்து கொள்ளும் வடிவத்தில் வழங்கியுள்ளதாக அடிக்கடி கூறுவார்,

பொதுவாக நாடி என வழக்கத்தில் கூறுவது கிரகங்களையும், ராசி சக்கரத்தையும் மட்டுமே மையமாக கொண்டு பலன் கூறும் முறையாகும். அதன் வழியே நமது **ராஜநாடி** எனும் முறையிலும் பின்பற்றப்பட்டுள்ளது. இம்முறையானது தேவையான விசயங்களில் மட்டுமே கவனம் செலுத்துவதால் தேவையற்ற பல விசயங்கள் புறந்தள்ளப்பட்டிருக்கும். இந்நூல் உங்களது ஜோதிடத் திறனை வளமைப்படுத்தும் என என்னால் உறுதியாக கூறமுடியும். ஜோதிடம் என்பது விஞ்ஞான பூர்வமானது அறிவியல் பூர்வமானது, தத்துவப் பூர்வமானது, என்பதை அரிதியிட்டு கூறும் வகையில், ஒவ்வொரு அத்யாயமும் விளக்கப்பட்டுள்ளது. இதுவரை ஜோதிடம் குறித்து கூறப்பட்ட விசயங்களை போலல்லாமல் அனைத்தையும் அறிவியல் பூர்வமாக விளக்கம் அளித்துள்ளேன்.

இந்நூலானது வழக்கத்தில் உள்ள மற்ற முறைகளான மஹரிசி பராசரர், ஜெய்மினி, அகத்தியர், வராகமிகிரர், வசிஷ்டர் போன்றவற்றிலிருந்தும், பிருகு நந்தி நாடி, சப்தரிசி நாடி, துருவநாடி, போகர் நாடி, காகபுஜண்டர் நாடி, சுகர் நாடி, சந்திர நாடி, சந்திரகலா நாடி, இன்னும் இதுபோன்ற பல நாடிகளில் இருந்தும் முற்றிலும் வேறுபட்டது. இந்த நூலை படிக்கும் போது அந்த முறை போல உள்ளது இந்த முறை போல உள்ளது எனவும் ஏற்கெனவே ஜோதிடம் கற்றவருக்கு தோன்றலாம் முழுவதும் படித்த பின்பு அவ்வாறு இல்லை என புரிந்து கொள்ள

CamScanner

முடியும், ஏனெனில் ஜோதிடம் என்பது பொதுவாகவே சில அடிப்படைகளில் இருந்து உருவானதுதானே, ஆனால் பார்க்கும் கோணம் மாறுபாடானது,

ஜோதிடம் என்பது மிகவும் எளிதான ஒன்று, 100 வருடங்களை கடந்து வந்த கல்வி முறைகள் இவ்வளவு எளிதாக புரிந்து கொள்ள முடியும் போது பல்லாயிரம் வருடங்கள் கடந்துவந்த ஜோதிடம் அதனினும் எளிதாகத்தானே இருக்க வேண்டும், அதன் படி ஜோதிடம் என்பதன் அடிப்படையே தெரியாதவரும் இந்த நூலை படித்தவுடன் பலன் கூறமுடியும் என்ற அளவு எளிமைப் படுத்தியுள்ளேன்,

பெரும்பாலும் மக்களின் தேவைகள் தொழில், திருமணம், சொத்து, வீடு, வாகனம், கடன், நோய் இதைத்தாண்டி எப்போதும் சிந்திப்பதில்லை, என்னதான் மக்கள் ஆன்மீகமெனும் தளத்தில் தன்னை இருத்திக் கொண்டாலும் அந்த ஆன்மீகமும் மேற்கண்டவற்றில் எதாவது முன்னேற்றம் தந்துவிடாதா என்பதற்காகவே பின் தொடர்கிறார்கள், உண்மையில் இறைவனிடம் அனைத்தையும் சரண் கொடுத்து விட்டு எல்லாம் அவன் செயல் எனக்கூறுவோர் கோடியில் ஒருவர்தான் இதிலும் கூட கோடியில் ஒருவர் என்பதும் கூட அதிகமே, நூறு கோடியில் ஒருவர் என்றே கூறவேண்டும், அப்படிப்பட்டோர் எப்போதும் ஜோதிடம் பார்க்கத் தேவையில்லை, நாம் பலன் கூறப்போவது சராசரியாக இன்பத்தைத் தேடி காத்திருக்கும் மக்களுக்கே, எனவே இநநூலில் பெரும்பாலன இடங்களில் தொழில், திருமணம், சொத்து, வீடு, வாகனம், கடன், நோய் இவைகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கும்,

ஜோதிடம் என்பது வானவியல் சார்ந்த ஒரு வாழ்வியல் கலை நமது வாழ்வு எவ்வாறு வடிவமைப்பை பெற்றுள்ளது எனத் தெரிந்து கொண்டு அதற்குத் தக்கவாறு வாழ்வியல் முறைகளை அமைத்துக் கொள்வதும், தேவையற்ற ஆசைகளை தூரமாக

வைத்துவிட்டு எதார்த்தமாக வாழவும் இந்த துறையினை பற்றிய புரிதல் வழிவகை செய்யும், இந்த நூலை படித்து முடிக்கும் போது நீங்களும் ஒரு நல்ல ஜோதிடராவது உறுதி. இந்த நூலில் நாம் பலன் கூறுவது மட்டுமல்லாமல் உங்களது ஜோதிடத்தின் அடிப்படை கட்டமைப்புகளுக்கான வானியல் மற்றும் ஜோதிடம் சார்ந்த பல்வேறு விசயங்களை கூறியுள்ளேன், இதன் மூலம் தங்களது ஜோதிடம் சார்ந்த கண்ணோட்டம் மேலும் சிறப்படையும்,

இந்த நூல் **ராஜநாடி** ஜோதிட முறையின் அடுத்த கட்ட படைப்பான **நாமநாடி** சாஸ்திரத்தைப் பற்றியும் விவரிக்கிறது, இருப்பினும் இந்த நூலில் ராஜநாடியின் அடிப்படை மற்றும் நாமநாடியின் விரிவுரை இரண்டையும் கலந்து அளித்துள்ளேன், ஜோதிடம் என்பது நமது விதிப்பயனை கண்டு உணர்வதற்கான வழியாக இருக்கிறது, மேலும் விதி பற்றிய காலத்தை புரிந்து கொள்ள இந்த ஜோதிடம் என்பதினைத் தவிர வேறு வழிகளும் இல்லை,

இந்த நூலில் ஜோதிடம் பற்றி எனது அனுபவத்தில் நான் புரிந்து கொண்டதை முடிந்தவரை எளிமையாக புரிய வைக்க முயற்சி செய்துள்ளேன், இந்த புத்தகம் வழக்கமான புத்தகம் போல இல்லாமல் உங்கள் டைரி குறிப்புகள் போல இருக்கலாம், எனக்கு புத்தக ஆசிரியராகவோ, எழுத்தாளராகவோ ஆக வேண்டும் என்று ஆசை இல்லை, எனக்குள் காட்டாற்று வெள்ளமாக பிரவாகித்து ஓடிக் கொண்டிருக்கும் ஜோதிட எண்ணங்களை மடை திருப்பி உங்களுக்குள்ளும் பாய்ச்ச மட்டுமே இந்த நூல் உதவியாக இருக்கும் என்பதால் ஒரு நூலுக்கான வரைமுறை கட்டமைப்பு இவைகள் இல்லாமல் போகலாம், ஆனால் நிச்சயமாக இந்த நூல் உங்களுக்கு ஜோதிடத்தில் புதிய கதவுகளை திறந்து வைக்கும்

CamScanner

ராஜநாடி என்ற ஜோதிட விருட்சம் தமிழகம் மட்டுமல்லாமல் பல நாடுகளில் கிளை பரப்பி செழித்து வளர உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி அனைவரும் ஜோதிடம் கற்று வாழ்வு குறித்த அச்சத்தில் இருந்து விலகி முழு உற்சாகத்துடன் ஆனந்தத்துடன் வாழ இந்த ராஜநாடி சாஸ்திரம் உங்களுக்கு உதவும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

- ஜோதிடக்கலை அரசு, பால்விதி ஜோதிடன்

ராஜநாடி. கா.பார்த்திபன்

துவக்கத்திலேயே சரியான புரிதலில் இருந்து துவங்குவது இலக்கை சரியாக அடைவதற்கு ஏதுவாக அமையும், நமது முறை கிரகங்களின் தன்மைகளை வைத்து மட்டுமே பலனை காணும் விதிகளை உடையது, எல்லா ஜோதிட முறைகளுமே ஏறத்தாழ கிரகங்களை மட்டுமே முக்கிய விசயமாக கொண்டாலும் அதையும் கடந்து நட்சத்திரம், பாவகம், தசா, புத்தி, சாரம், பாதகம், முக்கியமாக கிரகங்களை குறிப்பிட்ட வீட்டின் அதிபதியாக கூறுவது என்று கையாள்வார்கள், மேலும் திதி, யோகம், கரணம், அஷ்டவர்க்கம், போன்றவைகளையும் கையாள்வார்கள், அது மட்டுமின்றி அங்கீசம் எனக்கூடிய நவாம்சம், திரேகாணம், போன்ற 28 வகை கட்டங்களை பயன்படுத்துவார்கள் ஆனால் நாம் ஆரம்பத்தில் இருந்தே கிரகங்களின் நிலையை வைத்து மட்டுமே பலன் கூறப் போகிறோம், ராசி பிரிவுகளை வைத்துக் கூட கிரகங்களை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர அந்த ராசியின் விளக்கத்தை தேடப் போய் சிக்கிக் கொள்ளக் கூடாது, எனவே இந்த மொத்த நூலும் கிரகங்களை மட்டுமே முன் நிறுத்தி பேசும்,

இந்த நூலானது முதலில் ராசிகள் மற்றும் கிரகங்களின் பொதுவான காரகங்களை பற்றியும் அடுத்து அவைகளை

CamScanner

கையாளும் முறைகள் குறித்தும், அதன் பிறகு அதனுடைய பலன்களையும் விவரித்து இருக்கும், இறுதியாக நிகழ்வுகளின் காலங்களை கண்டறியும் விதி காலங்களில் ஏற்படும் நிகழ்வுகளின் பலன்களையும் விவரிக்கிறது, அதோடு மட்டுமல்லாது, பெயரின் உதவியுடன் ஜாதகத்தை அறிவது, ஜாதகத்தின் உதவியால் பெயரை அறிவது இவைகளின் அடிப்படையில் வாழ்க்கையை அறிவது என விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது, அனைத்தும் குருட்டு மனப்பாடம் போல் அல்லாமல் அனைத்திற்குமான காரணங்களை விவரித்தும் உள்ளது, ஒரு சீட்டுக் கட்டில் உள்ள சீட்டுகளின் பின் பகுதி ஒரே மாதிரியாக அச்சிட்டு இருக்கும் ஆனால் ஒவ்வொரு சீட்டும் திருப்பி பார்க்கும் போது தனித்துவமானது, ஒரு துணிக்கடைக்கு செல்லும் போது அங்கு இருக்கும் பொம்மைகள் ஒன்று போலவே இருக்கும் அதில் எதுவும் வேறுபாடுகள் கிடையாது, ஆனால் அதிலும் கடைக்காரர் ஏதாவது ஒன்றை புரிந்து வைத்திருப்பார், ஒரே நிறுவனத்தின் தயாரிப்பு, ஒரே நிறம் கொண்ட கார்கள் கூட்டமாக நின்றாலும் உங்கள் காரை நீங்கள் எளிதாக கண்டறிந்து விடுகிறீர்கள், அதில் ஏதோ ஒரு தனித்துவம் உங்களுக்கு புரிகிறது, அதுபோலவே எல்லா மனிதர்களும் ஒன்றுதான் என்றாலும் ஏதோ ஒரு தனித்துவம் இருக்கிறது, அதை ஜாதகத்தில் கண்டறிய வேண்டும், ஜாதகத்தில் எல்லாம் சராசரியாக இருந்தாலும் ஏதோ ஒரு கிரகத்தின் ஏதோ ஒரு நிலை தனித்துவமானது அதுதான் அந்த ஜாதகரின் தனித்துவம்,

இந்த நூலில் இரண்டு விதமான அணுகுமுறைகளை குறித்துள்ளேன், ஒரு கிரகம் வேறொரு கிரகத்துடன் கலக்கும் போது தன்மைகளில் மாறுபட்டு பிரதிபலிக்கும், உதாரணமாக ஒரு நிறத்தில் உள்ள பெயிண்டில் மற்றொரு நிறத்தின் பெயிண்ட் கலக்கும் போது இரண்டும் இல்லாமல் வேறு ஒரு நிறம் வருவது போல என புரிந்து கொள்ளுங்கள் ஆனால் அதிலும் இரு சிறிய மாற்றம் இதில் நாம் கவனிக்கும் கிரகம் பிரதானமானதால் அதனுடைய பண்பு கலந்த கிரகத்தின் சிறு குணங்களை எடுத்துக்

CamScanner

கொள்ளும், உதாரணமாக ராம் என்பவன் டிரைவராக இருக்கிறார் அவர் குமாருடன் நட்பில் இருக்கிறார், குமார் மருத்துவர் அப்படி இருந்தால் ராம் சில மருத்துவ குறிப்புகளை இயல்பாகவே ஓரளவுக்கு தெரிந்து வைத்திருப்பார், தனது சுற்றத்தில் உள்ளவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடம் அதைப்பற்றி பேசுவார், அது போல் நாம் ஒவ்வொரு கிரகத்தை கணிக்கும் போதும் அதனுடன் இணைந்து இருக்கும் குணத்தை அந்த பிரதான கிரகம் பெற்று பலனாக நடக்கும் உதாரணமாக சூரியன் என்றால் தந்தை சூரியனுடன் சந்திரன் சேர்ந்தால் ஜாதகரின் தந்தை குழப்பமானவர், இதில் சந்திரன் குழப்பத்தை குறிக்கும் சூரியனுடன் இணையும் போது இந்த பலன் நடக்கும் இது போல கிரக இணைவுகளை புரிந்து கொள்ளுங்கள், இந்த கலவை ஒரே ராசியில் மட்டுமே இல்லாமல் சில குறிப்பிட்ட தூரத்தில் உள்ள ராசிகளையும் வைத்துக் கணிக்கப்படுகிறது, அதற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு கிரகமும் அமர்ந்திருக்கும் இடத்தின் முக்கியத்துவத்தை வைத்தும், கிரகங்கள் பெற்ற நிலைகளின் அடிப்படையிலும் ஜாதகரின் வாழ்க்கை தன்மைகள் புரிந்து கொள்ளப்படுகிறது,

நாம் விதிகள் மற்ற விபரங்களை காணும் முன்பு பொதுவான ஜோதிடம் பற்றிய அடிப்படையான தகவல்களை பார்க்கலாம்,

CamScanner

ஜோதிடம்

காலம்

ஜோதிடம் என்பது வாழ்க்கையை பற்றி அறிந்து கொள்ள மனிதனுக்கு கிடைத்த ஒரு ஒப்பற்ற கருவி, இந்த கருவி ஒரு மனிதனின் வாழ்க்கையை அளவிட உதவுகிறது, வாழ்க்கை என்பது தொடர் முன்னோகிய இயக்கம் அவ்வளவுதான் அதை கடந்து விவரிக்க அல்லது விளக்குவதும், யானையை தடவிய குருடன் கதை போல மாறிவிடும், வாழ்க்கை எதாகவோ இருக்கிறது, அதற்கு காரணம் கூட அறிய முடியாத ரகசியங்கள் கொண்டது, அதை கண்டறிய எத்தனையோ ஞானிகள் தங்களது மொத்த வாழ்நாளையும் தவத்தில் கழித்ததை நாம் அறிவோம், பெருமைக்காக கர்மா வினை என பேசினாலும் உண்மையில் அதன் தாத்பர்யம் என்ன என்பது பற்றி தெளிவான புரிதல் உள்ளவர்கள் சகஜ வாழ்க்கையில் இல்லை என்றுதான் கூறவேண்டும், பெருமைக்காக கணவான் போலவும், பக்திமான் போலவும் உடையணிவதும், வார்த்தைகளை கற்று அதன் படி பேசுவது புரிதல் ஆகாது,

உண்மையில் இந்த வாழ்க்கையின் காரண காரியங்களை யாரும் அறிந்திலர், எனவே அது பற்றி நமக்கு என்ன கூறினாலும் நமது அனுபவம் ஆசை, வாழ்க்கை சூழல் போன்றவற்றின் வழியாக அதை நிச்சயமாக தவறான கண்ணோட்டத்தில் மட்டுமே புரிந்து கொள்வோம்,

, "முன்னொரு காலத்தில்" என்ற இந்த வார்த்தையை நாம் கூறவே காலம் ஒன்று தேவைப்படுகிறது, இதற்கு முன் நடந்தவைகளின் தொடர் நிகழ்வுகளாக தற்போது நடந்து கொண்டுள்ளது, இனி வருபவைகளும் தற்போதைய சூழலின் தொடர்ச்சியாக இருக்கும் என்பதை அவர்கள் அனுமானித்ததன் விளைவே தற்போது காலம் என்ற ஒன்றை நாம் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்,

CamScanner

நாம் தற்போது பயன்படுத்திக் கொண்டுள்ள கால அளவைகளான வினாடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், வருடம் என்பது எல்லாமே இந்த தேடுதலினால் கிடைத்தவைகளே, இந்த கால அளவைகளான வினாடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், வருடம் என்பது எல்லாமே ஜோதிடமே,

மனிதன் நடந்தவைகள், நடந்து கொண்டுள்ளவைகள், நடக்க இருப்பவைகளை, தரம் பிரித்து அறிய வேண்டிய அவசியத்தை உணர்ந்ததன் அடுத்த நகர்வே காலம் என்பதன் கண்டுபிடிப்பாகும், காலம் என்பது வெறும் அலகு என்பதில் இருந்து துவங்கி இன்று நமது வாழ்வில் இருந்து பிரித்துக் கூட பார்க்க இயலாத ஒன்றாகிப்போனது, நீங்கள் கற்பனை செய்து பாருங்கள், காலம் என்ற ஒன்று இல்லாமல் உங்களால் எதையுமே நினைத்து கூட பார்க்க இயலாது,

நாம் வெறுமனே நம் முன்னோர்களை ஞானிகள் என்ற வார்த்தை அலங்காரத்துடன் மட்டும் பெருமைப்படுத்திவிட இயலாது, அவர்கள் நமக்களித்த பொக்கிஷங்களான அனைத்தின் நிதர்சனமான, உள்ளார்த்தமான புரிதலை மேம்படுத்திக் கொள்ளவேண்டும், அதை புரிந்து கொண்டு அதை கண்டறிய எவ்வளவு சிரத்தை எடுத்திருப்பர் என புரிந்து அவர்களுக்கு நன்றி கூறுவதே அவர்களை நாம் போற்றுவதற்கான சரியான வழிமுறையாகும், மேலோட்டமான பெருமைபாடுதலால் பயனில்லை, அதன் வகையிலே நாம் இந்த நூலில் பெரும்பாலும் அறிவியல் ரீதியாகவே அணுக உள்ளோம்,

நீங்கள் மற்ற ஜோதிட புத்தகத்திற்கும் இந்த புத்தகத்திற்கும் இதிலேயே மாற்றத்தை உணர்ந்திருப்பீர்கள், எடுத்தவுடனேயே மெய்பொருள் ரகசிய சூட்சமம் என்று உங்களை குழப்ப விரும்பவில்லை,

CamScanner

ஜோதிடம் என்பது வாழ்க்கையை ஒரு சில அனுபவ கணிதங்கள் அடிப்படையில் அளவிடக்கூடிய பண்டைய கருவி, மேலும் மனிதனை பற்றி முன் அனுமானிக்க இதுவரை இதைத்தவிர வேறு எந்த கருவியும் புழக்கத்தில் இல்லை, இனிமேல் கண்டுபிடிக்கப் படலாம்,

அப்போது மனிதர்கள் கிரகங்களுக்கு பதிலாக வேறு ஒன்றை பயன்படுத்தலாம், உதாரணமாக மணி கண்டறிய முன்னோர்கள் சூரிய ஒளியின் அடிப்படையில் நிழல் விழும் நிலைகளை கையாண்டனர், அதன் பிறகு மண் கடிகாரம் வந்தது, இப்போது பேட்டரியில் இயங்கும் குவார்ட்ஸ் கடிகாரம் உள்ளது, மேலும் தற்போது யாரும் அதையும் பார்ப்பதில்லை ஆண்ட்ராய்டு மொபைலில் மணி பார்க்கிறார்கள், இங்கு பயன்பாடு மட்டுமே முக்கியம், எல்லா கருவிகளும் அடுத்த நுட்பம் வந்தவுடன் காலவதியாகலாம், இன்னும் சிலகாலங்களில் கிரகங்கள் இல்லாமல் வேறு வகையில் காலங்களை குறிக்க எதாவது கண்டுபிடிக்கபடலாம்,

வாழ்க்கை என்பது என்ன என்பது புரியாத புதிர் ஆனால் இயங்கிக் கொண்டிருக்கும் எதோ ஒன்று என்று மட்டும் புரிகிறது, எனவே வாழ்க்கையை புரிய இயலாவிட்டாலும் அந்த இயக்கத்தை புரிந்து கொள்ள முடியும்

உதாரணமாக கொஞ்சம் கோதுமை உங்களிடம் கொடுக்கப்படுகிறது, அது என்ன காரணங்களுக்கு எனத் தெரியாது, அது விதை எனவும், அதை மண்ணில் விதைத்தால் வளர்ந்து மகசூலை தரும் என்பதும் தெரியாது, ஆனால் அதை வைத்து ரொட்டி சுட முடியும் என்பது தெரியும், இன்று காலை 5 நபர்களுக்கு ரொட்டி சுட வேண்டும் என்றால் ஒரு கிலோ மாவு தேவை இந்த அளவுமுறை உங்களுக்கு சொல்லி கொடுக்கப்பட்டுள்ளது, நீங்கள் கோதுமையை பற்றி பேசும் போது எத்தனை கிராம் எடை என்ற அளவில் மட்டுமே பேசுவீர்கள்,

ஆனால் உண்மையில் அந்த கோதுமையை இயற்கை படைத்ததற்கான காரணம் வேறாக இருக்கலாம், அதுபோல இந்த மனிதனுடைய வாழ்க்கை எதற்காக என்ற உண்மை எதுவாகினும் நாம் அதன் ஓட்டத்தை பற்றி மட்டுமே அளவிட போகிறோம், கோதுமை எடையை வைத்து புரிந்து கொள்ளக் கூடியது, அது போல வாழ்க்கை இயக்கத்தை வைத்து புரிந்து கொள்ள வேண்டும், இருப்பினும் கோதுமை என்பது எதற்காக பூமியில் இருக்கிறது, அது படைக்கப்பட்டதற்கான காரணம், அது எப்போது நிறைவேறும் என எந்த காரணமும், காரியமும் நமக்கு தெரியாது, அது போல நமது வாழ்க்கையின் காரணம் நமக்கு தெரியாவிட்டாலும் அந்த வாழ்க்கையை அளவிட ஒரு வழி இருக்கிறது,

கோதுமை எதற்காக இருந்தாலும் நம்மை பொருத்தவரை அது உணவு, அதைப்போல வாழ்க்கை எதற்காக இருந்தாலும் அது மனிதனின் இயக்கம் அவ்வளவுதான், நாம் கோதுமை படைக்கப்பட்டதற்கான காரணத்தை அளவிட முடியாது, நமது பயன்பாட்டிற்கு தேவையான கோதுமையின் எடை என்ன என பார்க்கிறோம், அது போல மனிதனின் இயக்கம் காலத்தின் அடிப்படையில் அளவிடப்டுகிறது, எனவே பொதுவான இயக்கத்தை வைத்து வாழ்க்கையை புரிந்து கொள்கிறோம், இயக்கம் என்பது கால் அதாவது மனிதன் இயங்க தேவைப்படும் உறுப்புக்கு கால் என்று பெயர், மேலும் இயக்கத்தில் உள்ள சுவாசத்தின் பெயரும் சரம் எனப்படும் கால்தான், கால் என்றால் இயக்கம் எனவேதான் இயக்கத்தில் உள்ள யாராலும் புரிந்து கொள்ள இயலாத பிரபஞ்ச நிகழ்விற்கு காலம் எனப்பெயர் கால் உடன் இலக்கணப்படி அம் விகுதி சேரும் போது காலம் ஆகிறது,

காலம் என்பது இயக்கம் எனவே சீரான இயக்கத்தினை சார்ந்து காலத்தை அளவிடுகிறோம், அவ்வாறு சீராக இயங்கக் கூடிய பொருட்கள் அண்டத்திலேயே கிரகங்கள் மட்டுமே அதிலும் குறிப்பாக கண்களுக்கு தெரிய கூடிய சனி கிரகம் வரைக்கும்

CamScanner

மட்டுமே ஜோதிடம் கையாள்கிறது, இருப்பினும், ஜோதிட சாஸ்திரத்தில் மொத்த பிரபஞ்சத்தின் இயக்கம் மற்றும் அதன் கணிதம் விளக்கப்பட்டுள்ளது, காரணம் நமது வாழ்க்கை என்பது என்ன என நேரடியாக புரிந்து கொள்ள எளிதான வழிகள் எங்குமே இல்லை எனவே காலத்தை புரிந்து கொள்வதன் மூலமாக தெளிவை பெறுகிறோம், அதற்காக கிரகங்களின் முழுமையான புரிதல் மிக முக்கியமானது,

காலம் என்பது தீர்மானிக்க சாத்தியமற்றதை தீர்மானிக்க கற்பனையாக நாமாகவே இயற்கை பொருட்களை வைத்து புரிந்து கொண்டாலும் அது இன்றியமையாத ஒன்றாகும், இந்த காலம் என்ற ஒன்றை நாம் தீர்மானிக்க எதாவது ஒன்றை சார்ந்து புரிந்து கொள்ள வேண்டியுள்ளது, அப்படிப்பட்ட தேடுதல்களுக்கு பரிசாக கிடைத்ததே வானியல், நாம் வானியலின் உதவியுடன் காலங்களை பல்வேறு கோணங்களில் பகுத்து ஆராய்ந்து அதில் கிடைத்த விசயங்களின் அடிப்படையில், மனித வாழ்வு காலங்களுக்கு ஊடாக எவ்வாறு பயணிக்கிறது என்று அனுமானிக்கவும், அந்த அனுமானத் திறனை வளர்த்துக் கொள்வதால் வரும் காலங்கள் பற்றிய புரிதல்களையும் அதிகப்படுத்த முடிந்தது,

ஜோதிடம் என்பது மனிதனுக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்தே உள்ள ஒன்று, அப்போது வெவ்வேறு பெயர்களில் இருந்திருக்கும், அதாவது மனிதன் அடுத்து ஏதோ நடக்க உள்ளது என்ற ஒன்றை உணர துவங்கிய உடனேயே சிக்கல்களும், அச்சங்களும், வேதனைகளும், ஆசைகளும் பெருக துவங்கியது, அதன் அடுத்த கட்டமாக அதற்கான தீர்வுகளை தேட துவங்கியவனுக்கு, அனைவரது வாழ்விலும் ஒரு ஒற்றுமை தன்மை உள்ளதை உணர்கிறான், எனவே ஒருவருக்கு சில சூழல்களில் நடந்த விசயங்கள் அதே சூழலில் மற்றவருக்கும் நடக்கும் என்பதை முன்கூட்டியே அனுமானிக்கின்றனர்,

இதில் பல்வேறு தீர்மானிக்க இயலாத முரண்பாடுகள் இருக்கவே, காலம் என்ற ஒன்றின் குறிகாட்டிகளான வானியலின் துணைகொண்டு நகர்வது பல சாதகங்களை ஏற்படுத்தி தந்தது.

எனவே உலகம் முழுமையிலும் எதிர்கூறுதல் எனும் வாழ்வை முன் அனுமானித்தல் பெரும்பாலும் வானியலை சார்ந்து பின்பற்றபட்டது. மற்ற முறை எதிர்கூறுதல் (குறி சொல்லுதல்) புழக்கத்தில் இருந்த போதிலும் அவைகள், ஒரு தீர்மானமான கருத்துக்களை முன்நிறுத்த இயலாமையால் பின் தள்ளப்பட்டன. மேலும் அம்முறைகள் வட்டாரம் சார்ந்த பிரிவினர்களுக்கு இடையே பல்வேறு மாற்றங்களையும், சிலரது நம்பிக்கை தன்மையின் அடிப்படையிலும் இயங்கி வந்தபடியால் ஒரு ஒன்றுபட்ட விதிகள் இன்றி இயங்கி வந்தது.

இதில் வானவியல் சார்ந்த எதிர்கூறல் துறை தனக்கென ஒரு ஒன்றுபட்ட அடிப்படை தளத்தை அமைத்து கொண்டது. இத்துறை காலம் என்ற ஒன்றை அடித்தளமாக கொண்டு கட்டமைக்கபட்டதால் உலகம் முழுமையிலும் ஒரே தன்மையில் ஒரளவு கொண்டு வரவும், அனைத்து பகுதிவாழ் மக்களுக்கும் பொதுவான ஒரு கட்டமைப்பை அமைத்து கொண்டது. முன் எப்போதும் இல்லாத அளவு, அடுத்த ஒன்றை உணர காலம் என்ற ஒன்றை உருவாக்கியது. அந்த காலமும் உலகம் முழுமையிலும் எங்கிருந்தாலும் ஒத்துபோக கூடிய காரணிகளான வான் பொருட்களை சார்ந்து இருந்தபடியால் அமோக ஆதரவை பெற்றது.

மேலும் இந்த வானியல் காலம் என்ற ஒன்றை கூறு போட பல்வேறு அலகுகளை வழங்கியது. மக்களால் இப்போது வருடம் என்பதையும் தனக்கு இத்தனை வயது என்பதையும் உணர முடிந்தது. மணி, சாமம், நாள், வாரம், மாதம், திதி, நட்சத்திரம், என பல அலகுகள் கிடைத்தன. இப்போது தனது வாழ்வையே ஒப்பீட்டு பொருளாக புரிந்து கொள்ள முடிந்ததால்,

அதில் இன்னும் பல்வேறு முன்னேற்றங்களை மக்கள் அடைந்தனர், அதன் ஒரு பகுதியான ஏன் மொத்த பகுதியுமே ஜோதிடம் என அழைக்கப்பட்டது.

நாம் வான் பொருட்களை ஒளியின் உதவி கொண்டு அறிவதால், இந்தியாவில் ஜோதிஷம் என அழைக்கப்படுகிறது. இத்துறை முன்பிருந்த எதிர்கூறல் நம்பிக்கைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு பல கணிதங்களை உள்ளடக்கியதால் அனைவராலும் வரவேற்கபட்டது.

பெரும்பாலான மக்கள் உடற்கூறு தத்துவத்தால் ஒன்றுபட்டு இருப்பினும் கலாச்சாரம், கல்வி, மற்றும் வாழ்வியல் முறைகள் போன்ற மாற்றங்களும் அவற்றிற்குள்ளும் சமூகம் சார்ந்த குணாதிசியங்கள், குடும்ப முறைகள், செல்வநிலைகள், தொழில் நிலைகள், என பல்வேறுபட்ட காரணிகளால் பெரும்பாலும் வேறுபட்டே காணப்படுகின்றனர்.

இது குறித்த ஆய்வில் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த உலகம் முழுமையிலும் இருந்த அறிஞர் பெருமக்கள் பலருடைய வாழ்க்கையில் ஒன்றுபட்ட சம்பவங்கள் சில சூழல்களில் நடப்பதையும் அவை நாம் ஏற்கெனவே கண்டறிந்த காலம் என்ற அலகுடன் ஒத்துப் போவதையும் உணர்ந்தனர்.

அதன் விளைவாக கிடைத்த அனைத்து தரவுகளையும் சேகரித்து அதன் அடிப்படையில் உள்ள ஒற்றுமைகளை ஒழுங்குபடுத்தி இனிவரும் காலங்களில் மனிதன் சந்திக்கவுள்ள நிகழ்வுகளை முன்னனுமானிக்கும் பல விதிகளை கட்டமைத்தனர், மேலும் இந்த விதிகள் ஒரு ஒழுங்கமைப்போடும், முன் இருந்த நம்பிக்கை அடிப்படையில் அனுமானிக்கும் துறையில் இருந்தும் முற்றிலும் மாறுபட்டு பொதுவான அனைவரும் புரிந்து கொள்ளத்தக்க முறையில் இருந்ததாலும் வரவேற்பைப் பெற்றது.

இத்துறை பல்வேறு கோணங்களில் காலத்தை பிரித்தறிவதால் நுணுக்கங்களும் கிடைத்தது. மேலும் ஜோதிடம் என்பது வெறும் ஊக கணிதம் என்ற நிலையில் இருந்து ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட துறையாக மாறியது. ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஒரு குறிப்பிட்ட பொருளை பகுத்து ஆராயும் போது கிடைக்க கூடிய பலதரப்பட்ட அனுபவங்களை ஒரு குறிப்பிட்ட வழிமுறைகளுக்குள் உட்படுத்தி ஒழுங்குபடுத்தும் முயற்சியே அறிவியல் என குறிப்பிட்டுள்ளார். அதன் படி பார்க்கும் போது ஜோதிடம் என்பது அறிவியலின் முன்னோடி.

ஜோதிடத்தில் சில முறைகளே உள்ளன. அதிலும் குறிபிட்ட சில முறைகள் ஒரே அடிப்படையில் அமைந்து இருக்கும். மேலும் கைரேகை என்பது ஜோதிடமும் அல்ல அது ஹஸ்த சாஸ்திரத்தை சார்ந்தது. அதாவது ஜோதிடம் என்பது மனிதனின் வாழ்க்கையை பற்றி காலம் மற்றும் அதற்காக கிரகங்களை பயன்படுத்தி அதன் அடிப்படையில் அனுமானிக்கும் துறையாகும். ஆனால் கைரேகை கலை என்பது உடலமைப்பு சார்ந்த அனுமானம் அதிலும் கிரகங்கள் பெயர் வந்தாலும் அவைகள் வெறுமனே குறியீடுகளுக்காக மட்டுமே இருக்கிறது. ஆனால் ஜோதிடம் என்பது கிரகங்களை உண்மையான இயக்கம் மற்றும் அது சார்ந்த காலத்தையும் கையாண்டு பலன் கூறும் முறையாகும்.

இவ்வாறு கிரகங்களை நேரடியாக கையாளும் உத்திகளில் மூன்று பிரிவுகள் உள்ளது. ஒன்று கிரகத்தின் நிலையை அப்படியே எடுத்துக் கொண்டு அதை மீண்டும் எண்களாக மாற்றி அதன் அடிப்பையில் நன்மை தீமைகளை வகைப்படுத்தும் முறை. உடனே இதை நியூமராலஜி என்று கருத வேண்டாம் நியூமராலஜி என்பதும் ஜோதிடம் இல்லை. அஷ்டவர்க்க பரல்கள் என்ற ஒரு முறைகிரக நிலைகளை உள்ளபடியே கணித செய்து அதை பிந்துக்களாக அதாவது பரல்களாக மாற்றி மதிப்பு தரும் ஒரு முறை. இது ஒரு விசயத்தினை கண்டறிய பல அடுக்குகளாக

கணக்கு செய்து குழப்பிக்கொள்ள வேண்டும் உதாரணமாக நேரங்கள் சிறு வயதில் இருக்கும் போது சிலர் ஒவ்வொரு வார்த்தையிலும் எதாவது ஒரு எழுத்தை கூடுதலாக போட்டு பேசிக் கொள்வார்கள் அது கேட்பதற்கு புதுமையாக அதே நேரம் குழப்பமாக இருக்கும் இதை பெரும்பாலும் பெண்கள் பேசுவார்கள், நேற்று எப்போது வந்தாய் என்பதை நேகற்று எகப்போது வகந்தாய் என இரண்டாவது "க" போட்டு வேகமாக பேசுவார்கள் அது போல கிரகங்களை கண்டறிந்து மீண்டும் அதை பரல்களாக்கி அதன் பிறகு பல சோதனைகள் செய்து பினாஷ்ட, சர்வாஷ்ட, ப்ரஷ்தார வர்க்கமென விரிந்து கொண்டே போகும் இது ஒரு வகையான முறை இதையும் வைத்து பலன் கூறும் பலரும் உண்டு,

அடுத்த படியாக நிலையான கிரக குறியீடுகளை தினசரி நாள் கணிதத்தில் சுழற்சி முறையில் உட்படுத்தி அதனை நேர அடிப்படையில் புரிந்துகொண்டு குறி சொல்வது போல அதே நேரம் ஜோதிட அடிப்படையில் பலன் கூறுவது, இது சில அணுகுமுறை விதிகள் வழியாகவும், அல்லது ஜாதக பலன் கூறும் போது உள்ள கிரக நிலைகள் வழியாகவும் இரண்டும் கலந்தும் கையாளப்படுகிறது, இது ஆருடம் என அழைக்கப்படுகிறது, ஜாமக்கோள் ஆருடம், பிரசன்னமென பல பெயர்களில் இருக்கிறது, இதன் அடிப்படை அணுகுமுறை ஒரு ஜாதகத்திற்கு பலன் கூறுவதை போலதான் ஆனால் பிறந்த ஜாதகத்திற்கு பதிலாக வேறு எதோ ஒரு கணித அடிப்படையில் பலன் கூறுவது ஆகும்,

மூன்றாவது கிரகங்களின் உண்மை நிலையை கொண்டு அதன் அடிப்படையில் காலத்தை அறிந்து வாழ்க்கையை அறிவது, இதுதான் சரியான ஜோதிடம் என உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளபட்டது, இதிலும் நூற்றுக் கணக்கான முறைகள் உண்டு, பொதுவாக பாவத்தை வைத்து பலன் அறிதல், அதாவது ஸ்தானபலம் புரியும் படி சொல்வது என்றால் லக்னம் துவங்கி 12 ஆம் வீடு வரை உள்ள ஸ்தானம் அதன் அதிபதி, அது அமர்ந்த

பாவத்தின் அதிபதி, பார்த்த மற்றும் சேர்ந்த கிரகம், அதன் பாவ ஆதிபத்யம், ஒவ்வொறு பாவாதிபதியும் வாங்கிய சாரம் என விரியும், அடுத்து வெறுமனே கிரகத்தை மட்டுமே வைத்து பலன் கூறும் முறை இதில் கிரகம் பெற்ற முக்கியத்துவம் அந்த கிரகங்களுடன் இணைந்த கிரகம், போன்ற அடிப்படையில் அதாவது கிரகத்தின் தனித்துவத்தை மட்டுமே கொண்டு பலன் கூறுவது, இவை இரண்டிலும் சிறு மாற்றங்கள் மட்டுமே அணுகு முறையில்,

இதில் பாவகத்தை வைத்து பலன் கூறுவதிலும் சில பிரிவுகள் உண்டு, அதாவது பாவகம் என்பது பூமியின் நிலை, கிரகங்கள் இருக்கும் இடம், அதாவது வான் வெளியில் ஒரு கிரகம் எந்த இடத்தில் ஜாதகர் பிறக்கும் போது இருந்தது என்பது மாறாது எப்படி கணித்தாலும் குறிபிட்ட பாகையில் மட்டுமே இருக்கும், ஆனால் பூமி சுற்றி வருவதால் பூமியில் இருந்து பார்க்கும் போது பின் முன் பக்கவாட்டில் என்பதில் மாற்றம் இருக்கும் காரணம் பூமி நான்கு நிமிடங்களில் ஒரு பாகை சுழலும், ஒரு நாளில் பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றுவதற்கு 24 மனி நேரம், அதை நிமிடமாக மாற்றினால் 1440 நிடங்கள் 360 பாகையை கடக்க எனில் முழு சுற்று என்பது 360 பாகை, எனவே ஒரு பாகையை நான்கு நிமிடங்களில் கடக்கும், இது தோராய கணிதம்தான் காரணம் பூமியின் வேகம் மாறுதல் பருவம், பூமியின் சாய்வு போன்ற காரணிகளால் ஆண்டின் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மாற்றம் இருக்கும் இருப்பினும் ஏறத்தாழ 4 நிமிடங்களில் ஒவ்வொரு கிரகமும் நாம் இருக்கும் பகுதியில் இருந்து மாறி விடும், இது நொடிக்கு நொடி நடக்கிறது,

இருப்பினும் பொதுவாக பூமியின் மையத்தில் இருந்து பொது பார்வை பார்ப்பது எனில் மாறாது, அதாவது ராசியில் மாறாது, ஏனெனில் ராசி என்பது பூமி ஒரு புள்ளியாக வைத்து அதிலிருந்து பார்ப்பது,

ஆனால் பாவகம் என்பது பூமி சுற்றுவதால் நாம் சந்திரனை பார்த்து சில மணி நேரத்தில் பூமிக்கு பின் செல்லும் அது போல லக்னம் சுற்றிக் கொண்டே இருப்பதால் இதில் பொது ராசி கணிதம் கடந்து பாவக கணிதம் தேவை, இன்னும் அதிகமாக ஒரு பாவம் உதாரணமாக லக்னம் எந்த ராசியில் உள்ளதோ அந்த ராசி அதிபதி லக்னாதிபதி என்பார்கள், ஆனால் ஒரு லக்னம் ஒரு ராசியில் தோராயமாக அதிகபட்ச சாத்தியமாக இரண்டு மணி நேரங்கள் இருக்கும் எனவே இரண்டு மணி நேரம் பிறந்த அனைவருக்கும் ஒரே பலனா எனக் கூறி சிலர் ராசி அதிபதியை விட்டு விட்டு நட்சத்திர அதிபதியை வைத்துக் கொள்வார்கள்

மேச லக்னம் எனில் லக்னாதிபதி செவ்வாய், காரணம் மேச ராசியின் அதிபதி செவ்வாய், ஆனால் நட்சத்திர அடிப்படையில் பார்த்தால் அந்த மேசத்தில் கேது, சுக்கிரன், சூரியன் நட்சத்திரம் உள்ளது அதில் எதாவது ஒரு அதிபதி லக்னாதிபதியாக இருக்கலாம்

இன்னும் சிலர் நட்சத்திர அதிபதியும் தோராயமாக 50 நிமிடங்களுக்கு ஒரே மாதிரியாக இருக்கலாம், என அதையும் ஒன்பதாக பிரிக்கின்றனர், இவைகளில் இன்னும் தசா புத்தி போல கிரகங்களும் மாறிக்கொண்டே இருக்கும் லக்னமும் மாறி கொண்டே இருக்கும் என பழைய நூல்களில் பலரும் கையாண்டு பலன் கூற பல விதிகள் குறிப்பிட்டுள்ளனர்,

இதில் நாம் எது எளிதோ அதை, அதிலும் அதிக பயன் தரும் விதியை மட்டுமே எடுத்துக் கொள்கிறோம், ஒரு துறையில் எல்லாவற்றையும் கற்பது சிறப்புதான் இருந்தாலும் ஆரம்ப நிலையில் எந்த புரிதலும் இல்லாமல் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் சிக்கி பலரும் வெளியேறி விடுகின்றனர்,

நமது ராஜநாடி முறையில் இதெல்லாம் தேவையில்லை உங்களுக்கு பொது புரிதல் வர வேண்டும் என்பதற்காகதான் இவைகளை குறிப்பிடுகிறேன்,

CamScanner

புத்தகத்தின் சுருக்க குறிப்படக்கம்

நாம் கிரகங்களை கொண்டே பலன் காணப் போகிறோம், அதிலும் ஒரு சராசரி மனிதனின் தேவை குறித்தே பலன் காணப் போகிறோம், அவ்வாறு உள்ள ஒரு மனிதனுக்கு அதிகபட்சமாக குழந்தையாக உள்ள போது உடல் நலம், விளையாட்டு, உடை பொம்மைகள் பின்பு கல்வி, வேலை அல்லது தொழில், திருமணம், குழந்தை பேறு, உடல் நலம், கடனில்லாத நிம்மதியான வாழ்க்கை, தாய் தந்தை நிலை, பொருளாதாரம், வீடு, வாகனம், குடும்ப பிரச்சனைகள் இவற்றை கடந்து ஒரு சராசரியான நபருக்கு தேடுதலோ, தேவையோ இருக்காது, அது அல்லாமல் பிறவி, கர்மா போன்றவைகளை பற்றி யாருக்கும் அதிக அக்கறையும் இருக்காது, ஒரு ஜாதகர் நம்மிடம் வரும் போது மேற்கண்ட விசயங்களில் ஏதோ ஒன்று நடைபெறுவதில் தடை உள்ளதால் மட்டுமே வருவார், மேலும் சகோதரர் எண்ணிக்கை, தாய் தந்தையுடன் பிறந்தோர் எண்ணிக்கை இவைகளெல்லாம் தத்துவார்த்தபடி பார்த்தால் ஜாதகருக்கு உதவாது, ஏனெனில் அந்த எண்ணிக்கையை கேட்க அவர் உங்களை நாடவில்லை, அவர் மனம் அவ்வாறு பழக்கப்பட்டுள்ளது, சில ஜோதிடர்களும் இதற்கு பழகி துருவ கணித குறிப்புகளை கையாண்டு, வருபவர்களை திருப்தி படுத்துவதாக கருதி, ஏமாற்றிப் பிழைக்கும் நிலைக்கு போகிறார்கள், ஆரம்ப நிலையில் உள்ள ஜோதிடர்களுக்கு இது போல துருவ குறிப்பு பற்றிய விழிப்புணர்வு இல்லாதபடியால், அவர்களும் இப்படி உறவினர் எண்ணிக்கையை கூறுவதில் சூட்சுமம் ஒளிந்து இருப்பதாக கருதுகின்றனர், ஆனால் வந்தவரின் குறிப்பறிந்து அவருக்கு தேவையான சரியான ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பு ஜோதிடராகிய நமக்கு உள்ளதால், தேவையற்றவைகளை நீக்கி ஜாதகருக்கு முக்கிய தேவைகளை புரிந்து உள்வாங்கி பலனுரைக்க வேண்டும், எனவே கிரகங்கள் உணர்த்தும் பண்புகளை மனதில் வைத்து கொண்டு அதில் நமக்கு

எது குறித்த விசயம் தேவையோ அதற்காக உள்ள கிரகங்களின் பண்புகளையும் இணைத்து பலன் கூற வேண்டும்,

ஆரம்பத்தில் சிறிது குழப்பம் இருந்தாலும் அனுபவப்பட்டவுடன் எளிதாக அனைத்தையும் கூறிவிடலாம், மேலும் நமது முறையில் நட்பு, பகை, தசா புத்தி, பாவகம், போன்றவைகள் இல்லை, எனவே எந்த ஒரு விசயத்தையும் மனனம் செய்ய தேவையில்லை,

மேலும் நீங்கள் விதிகள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அதன் படி பலன் கூறி வந்தால் அந்த அனுபவமே உங்களை சிறந்த ஜோதிடராக மாற்றும், சிலர் இரண்டு ஜாதகங்களை மட்டுமே வைத்துக் கொண்டு எல்லா வகுப்பிலும் கலந்து கொண்டு உண்மையை தேடுவார்கள் ஜோதிடம் விதிகளில் உள்ளது, ஆனால் அந்த விதி வேலை செய்ய அனுபவம் மிகவும் அவசியம், நீங்கள் எந்த முறையை பின்பற்றினாலும் முழு நம்பிக்கையுடன் இருக்க வேண்டும், சில ஜாதகர்கள் நீங்கள் சொல்லும் பலன் சரியாக இல்லை என கூறலாம் உடனே விதிகளை மாற்றக் கூடாது, ஏனெனில் சில ஜாதகர்களுக்கு போதிய பொறுமை இருக்காது, அவர்களுக்கு எதார்த்தத்தை விட ஆசை அதிகமாக இருக்கும், அதுவும் இல்லாமல் அவர்களுக்கு நடப்பது பற்றிய புரிதல் இல்லாமல் இருக்கலாம், ஒருவர் கூறிய கருத்துகளுக்காக விதிகளை மாற்றிக் கொண்டே இருக்க தேவையில்லை, நீங்கள் எவ்வளவு நம்பிகை வைக்கிறீர்களோ அந்த அளவுக்கு விரைவாக ஜோதிடம் கைகூடும்,

CamScanner

காலமும் வானியல் ராசிமண்டலமும்

ஆகவே நாம் குறிப்பாக புரிந்து கொள்ள வேண்டும் வாழ்க்கை காலமாக காட்சியளிக்கிறது. காலம் இயக்கமாக இருக்கிறது. அதை அளவிட இயக்கத்தில் உள்ள பொருட்களை சார்ந்து கணிதம் செய்கிறோம். இருப்பினும் நாம் கணிதம் செய்வது இயக்கத்தை மட்டுமே. அதன் அலகுகளை காலமாக புரிந்து கொள்கிறோம். மற்ற வாழ்க்கை பற்றிய தகவல்களை அனுமானத்தின் அடிப்படையில் குறியீடுகளாக மட்டுமே புரிந்து கொள்கிறோம். சரியாக புரிந்து கொள்ளுங்கள். நம்மால் இப்போதும் கூட வாழ்க்கையை நேரடியாக புரிந்து கொள்ள முடியாது. வேறொன்றை அளவிட்டு அதனைக் கொண்டு அனுபவத்தின் வாயிலாக அனுமானத்தின் அடிப்படையில் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

எனவே நகர்வு அதாவது இயக்கம் என்பது நமக்கு பொது காரணி. வாழ்க்கை நகர்கிறது. கிரகங்களும் நகர்கிறது. இந்த நகர்தலை அளவிட நாம் கையாளும் அளவீடு முறைக்கு பெயர் காலம்.

காலம் என்ற அளவீடு இல்லாமல் நம்மால் எதையும் கற்பனை செய்ய முடியாது. உங்களுடைய வாழ்க்கையை காலம் என்ற அலகை பயன்படுத்தாமல் நினைக்க முடிகிறதா பாருங்கள். நிச்சயமாக முடியாது. நாள், மாதம், வருடம், காலை, மாலை, நேற்று, இன்று, நாளை, போன ஆண்டு என எல்லாமே காலத்தினால் உங்களை நீங்கள் புரிந்து வைத்துள்ளீர்கள். ஆம் நாம் நம்மைக் கூட நேரடியாக புரியாமல் அளவீடுகளை சார்ந்து புரிந்துள்ளோம். காலம் என்ற அளவுகள் பயன்படுத்தப்படும் முன்பு மனிதன் தனது வாழ்க்கை பற்றி எப்படி புரிந்து கொண்டு இருப்பான் என யோசித்துப் பாருங்கள் நிச்சயமாக தலை சுற்றும். எந்த விடையும் கிடைக்காது. இப்போது கூட விலங்குகள் கடிகாரம் காலெண்டர்கள் இல்லாமல் வாழ்கிறது. இருப்பினும்

அதுவும் எதாவது இயக்கத்தை சார்ந்து வாழ்க்கையை நினைவு வைப்பது, திட்டமிடுவது, வாழ்வது என இருக்கும்,

ஆக எல்லாமே இயக்கத்தை சார்ந்தது அதுதான் கால அலகாக இருக்கிறது, எனவே நாம் நமது வாழ்க்கையில் உள்ள அனைத்தையும் இயக்கத்தின் நீளம் அடிப்படையில் பிரிக்க வேண்டும்

உதாரணமாக நம்முள் மிக விரைவாக மாற்றத்தில் இருப்பது மனம், கிரகத்தில் விரைவான மாற்றமுள்ளது சந்திரன், எனவே மனம் சந்திரனை ஒத்து இருக்கிறது, ஆனால் மனம் சந்திரன் அல்ல, இதில் கவனமாக இருக்க வேண்டும் சந்திரன் வேறு மனம் வேறு, சந்திரனை நம்மால் பார்க்க முடியும் நாளை அல்லது, அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி சந்திரன் எப்படி இருக்கும் என கணிதம் செய்ய முடியும், அதனை கொண்டு சந்திரனைப் போல நகரும் மனது என்ன நிலையில் இருக்கும் என உணரலாம்,

ஒரு வேளை சந்திரன் மற்று மனம் இவை இரு இயக்கத்திலும் நூலிழை அளவு வித்யாசம் வரலாம், அல்லது சரியாக பொருந்தி போகலாம், பொதுவாக மனிதனின் முக்கியமான வாழ்க்கை இயக்கங்களும் நாம் பயன்படுத்தும் கிரகங்களின் இயக்கங்களும் சற்று ஏறக்குறைய சரியாக பொருந்துகிறது, அதில் உள்ள நூலிழை வித்யாசத்தையும் அனுபவத்தில் சில கணிதங்களின் மூலம் சரிகட்ட முடியும் எல்லாம் அனுபவம்தான்,

உதாரணமாக சந்திரனின் நிலையை வைத்து நாம் மனதின் ஓட்டத்தை கணிக்கிறோம், எண்ணம் போல வாழ்க்கை என்பது போல சந்திரனை சார்ந்து வாழ்க்கையின் போக்கை கணிக்கிறோம், அதில் அனேக ஜோதிடர்கள் சந்திரன் நின்ற நட்சத்திர அதிபதியின் திசையில் குழந்தை பிறந்ததாக கணிக்கின்றனர், இருப்பினும் சந்திரனின் இயக்கமும் மனதின் இயக்கமும் சிறிய நுண்ணிய

மாற்றம் இருப்பதை உணர்ந்து அவர்கள் வாழ்க்கை நகர நகர திசா புத்தி அந்தரம் மாறுவதாக கணிக்கிறார்கள், இதுபோல அனுபவத்தின் அடிப்படையில் உலகம் முழுவதும் எண்ணற்ற அனுமான கணித முறைகள் இருக்கிறது, இருப்பினும் அனைத்து ஜோதிடத்தின் அடிப்படையும் ஒன்றுதான்,

அதுபோல சந்திரனின் வேகம் மனதாகவும் அதனை விட சற்று குறைந்த வேகமான புத்தியை அதற்கு ஏற்ப சந்திரனுக்கு அடுத்த வேகம் கொண்ட புதனையும், முறையே அடுத்த அடுத்த வேகமுள்ள கிரகங்களில் சுக்கிரன் ஆசையாகவும், அடுத்து சூரியன் அறிவாகவும், அடுத்து செவ்வாய் உடல் ஆற்றலாகவும், அடுத்து தான் என்ற உணர்வான சுயம் குருவாகவும், அடுத்தபடியாக கர்மம் அதாவது தொழில் சனியாகவும், புரிந்து கொள்ளப்படுகிறது, இதுவே மிக அடிப்படையான காரகம், இது போல நமது வாழ்க்கை முழுவதும் நாம் காணும் அனைத்தையும் தரம் பிரித்து அவைகளின் இயக்கத்தை அதற்கான குறிப்பிட்ட கிரகத்தின் இயக்கத்தினை வைத்து கணிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்

நாம் பயன்படுத்தும் எல்லா கால அளவைகள் அதனுள் உள்ள அலகுகள் அனைத்தும் கிரகங்களின் இயக்கம் மட்டுமே எனவே நாம் அனைத்தையும் காலமாக அதன் வெவ்வேறு குறியீடுகளாக புரிந்து கொள்ள வேண்டும்

அதற்கு ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு குறியீடுகள் உருவாகலாம் அனைத்தும் ஒன்றுதான், ஒரு காலத்தில் மணிக்கு பதிலாக லக்கினம் என்ற வார்த்தையை பயன்படுத்தினர், நேரம் குறிக்கும் பத்திரிக்கையை வழக்கத்தில் லக்கின பத்திரிக்கை என கூறுவது உண்டு, அதற்கு முன் நாழிகையை பயன்படுத்தினர் அதற்கும் முன் ஓரை எனவே அந்தந்த காலத்தின் நடைமுறைக்கு ஏற்ப புரிந்து கொள்ள வேண்டும்,

CamScanner

25/05/2000 என்றால் ஒரு குறிப்பிட்ட நாளை குறிக்கும் தேதி, இதில் மாதம் நாள் ஆண்டு போன்ற குறிப்புகள் உள்ளது இதையே 500 ஆண்டுகளுக்கு முன் எப்படி சொல்வது ஏனென்றால் அப்போது இந்த ஆங்கில முறையான கிருகோரியன் காலெண்டர் இல்லை, அதை விக்ரம ஆண்டு வைகாசி மாதம் 12 ஆம் தேதி என கூறலாம் அல்லது அன்றைய கிரக நிலைகளை ராசிகளில் எழுதலாம் எல்லாம் ஒன்றுதான், குறிக்கும் போது அல்லது பிறரிடம் தகவலை பரிமாறும் போது சுருக்கமாக இருக்க வேண்டும் அவ்வளவுதான், அப்படி சுருக்கமாக் கூறியதை நாம் விரிவாக பிரித்து நமக்கு தேவையானதை அறிய முடியும் அதற்குதான் இவ்வளவு அதிகமான காலக் குறியீடுகள் உள்ளது, எல்லா குறியீடுகளும் குறிக்கத்தான் , நாம் எது மாதிரியான கால அலகுகளை வைத்திருந்தாலும் இறுதியில் பிரிக்கப் போவது ராசி கட்டமாகத்தான் ஏனெனில் அந்த கிரகங்களை வைத்துதான் அதிக தகவல்களை நாம் அனுபவத்தில் குறித்து வைத்துள்ளோம் எனவே வாழ்க்கையை பற்றி விவரிக்க ஏதாவது வகையில் நாம் அவரது பிறந்த கால கிரக நிலையை தெரிந்து கொள்ள முயல்கிறோம், அதற்கு நிலையான ராசி கட்டம் நிச்சயமாக தேவை கொஞ்சம் அனுபவம் வந்ததும் அதுவும் தேவை இல்லாமல் ஆகிவிடும், அவற்றை வரிசையாக பின்வரும் பகுதிகளில் காணலாம்,

பொதுவாக கால அலகுகள் நமது பண்டைய முறையில் எல்லையில்லாமல் விரிவாக உள்ளது அதெல்லாம் எதற்காக என்பது விடை காண முடியாத புதிராக இருக்கிறது, எல்லாமே அனுபவ தரவுகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட குறிப்புகளை மையமாக கொண்டுதான் அறியப்படுகிறது, உதாரணமாக ஒவ்வொரு காலத்திலும் நடக்கும் எல்லா நிகழ்வுகளும் குறிக்கப்பட்டுள்ளது, ஒரே போல நிகழ்வுகள் மீண்டும் நடக்கும் போது அவை இரண்டிற்குமான பொது காரணிகளை ஆராய வேண்டி இருக்கிறது, அதே நிகழ்வு பல முறை நிகழுமாயின் இன்னும் அதிகமான நம்பகத்தன்மை வாய்ந்த தகவல்கள் கிடைக்கலாம் அந்த தகவலின் அடிப்படையில் அடுத்து நடக்கும்

காலத்தை கணித்து அது சரியானதா என சோதித்தும் பார்க்கலாம் ஆனால் வரலாறுகளுக்கு ஒரு எல்லை உண்டு, பெரும்பாலும் மிக முக்கியமான நிகழ்வுகள் சில நூறு ஆண்டுகள் வரலாற்றில் இருக்கலாம், சில தகவல்கள் நமது வாழ்நாள் முழுவதும் நாம் அனுபவிக்காமலே போகலாம், உதாரணமாக சில தொற்றினால் உலகமே பல மாதங்கள் முடங்கிவிடலாம், இது நமது வாழ்க்கையில் அல்லது நமக்கு தெரிந்த வரலாற்றில் இல்லை, ஆனால் இது போல பலமுறை இந்த உலகில் நடந்து இருக்கலாம், ஆனால் நமக்கு தவல்களின் சேகரிப்பு இல்லை,

பண்டைய மக்கள் பல கோடி ஆண்டுகளுக்கு கால கணிதங்களை வைத்து இருக்கிறார்கள் அவைகள் யாருக்கான பயன்பாடு என தெரியவில்லை

இருப்பினும் அவை ஒரு ஒழுங்கு முறையில் இருக்கிறது, மனிதனின் உடல் அமைப்பு அவனது உயிர் அமைப்பு இந்த அண்டத்தின் அமைப்பு இவை அனைத்திலும் ஒற்றுமையை கண்டுள்ளனர், இது எதை உணர்த்துகிறது இதை வைத்து எதை அறிவது என்பதற்கான எந்த தகவலும் புரியும் படி இல்லை, நமது சுவாசத்தின் எண்ணிக்கையும் இந்த காலத்தின் எண்ணிக்கையும் அதன் பிறகு அந்த கணிதங்களில் உள்ள சில தகல்வல்களும் இந்த கிரகங்களின் பௌதீக அளவுகளுடன் எதோ ஒரு ஒற்றுமையாவதும் புரிந்து கொள்ள முடிகிறது, ஆனால் இதனால் என்ன நடக்கும் இதெல்லாம் சூட்சுமம் என தப்பித்து கொள்ளவும் விரும்பவில்லை, ஆனால் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்பதற்கு ஆன்மீகமாக இயற்பியலாக பல விளக்கங்கள் ரகசியங்கள் வெளிவராத உண்மைகள் புதைந்து கிடக்கலாம்,

ஆனால் நமக்கு இவைகளுக்கு விடை கிடைக்கவில்லை அதற்காக பல ஜோதிடர்கள் செய்யும் மோடி மஸ்தான் வித்தைகளுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை,

ஜோதிடம் என்பது காலம் பற்றிய கலை என்பதால் அனைத்து சொற்களும் காலத்தை பற்றியே குறிக்கும், மேலும் காலம் பற்றிய கணிதங்களின் கணிதக் குறியீடுகளாகவே இருக்கும், அவைகளை பற்றி ஓரளவுக்கு தெரிந்து கொள்வோம், காலங்களின் அமைப்பு இந்த பிரபஞ்சம் பற்றிய காலக் குறிப்பாகவும், மனிதனின் உயிர் இயக்க காலக் குறிப்பாகவும் உள்ளது,

பல கோடி ஆண்டுகளை கணிதத்திற்குள் கொண்டுவந்து அதற்கான அடிப்படை விதிகள், அதனைக் கொண்டு உருவான பிரிவுகள் என பல்வேறு காலம் பற்றிய தகவல்கள் நமது முன்னோர்களின் ஆய்வில் இருந்து அறியப்பட்டவை, அதன் படி உயிர்கள் அதிலும் மனித இனம் இந்த பிரபஞ்சத்தின் கால அமைப்புகள் பற்றி அறிவதும், அதன் மூலமாக மனிதனின் உயிர்நிலையை பற்றி அறிவதிலும் கவனம் செலுத்தியுள்ளனர்,

மனிதனின் உயிர் இயக்கமும் இந்த பிரபஞ்ச கால இயக்கமும் குறிப்பிட்ட காலக்கணித விகிதங்களில் ஒத்துப் போகிறது இதுதான் ஜோதிடத்தின் அடிப்படைக் கருத்தாகவும் இருக்கிறது, நமது கலாச்சாரம், பண்பாடுகள், வழக்கங்கள் அனைத்தும் இந்த அடிப்படையில் இருந்தே கட்டமைக்கப்பட்டுள்ளது,

நம்மை பொறுத்தவரை காலம் என்பது கடிகாரம் மற்றும் நாட்காட்டி என்ற அளவில் சுருங்கிப் போய்விட்டது, ஆனால் காலம் பற்றி பலவித கோணங்களில் பண்டைய கால வானியலாளர்களாக இருந்த ஞானிகள், அறிஞர்களின் ஆய்வு ஆச்சர்யத்திற்குரியது, நாம் பொதுவாக வருஷம், மாதம், வாரம், நாள், பகல், இரவு, மணி, நிமிடம், நொடி என இவைகளை மட்டுமே தெரிந்து வைத்துள்ளோம், ஆனால் காலம் பற்றிய பிரிவுகள் இன்னும் அதிகமாக உள்ளது,

CamScanner

காலம் ஆறு அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை.

பிரும்ம, மஹாகல்பம், கல்பம், மனு, யுகம், பரியாயம்,

100 கல்பம் சேர்ந்தது ஒரு மஹா கல்பம், இது இன்னும் கூட நீண்டு கொண்டே செல்கிறது, 360 மஹா கல்பம் என்பது ப்ரும்ம என்ற கால அளவின் ஒரு பிரிவு,

கல்பம் மொத்தம் 30, சில நூல்கள் கல்பம் ஆறு மட்டுமே உள்ளது எனக் கூறினாலும் கணித ரீதியாக விடைகள் ஒன்றாகவே வருகிறது, இவை சுழற்சி முறையில் மீண்டும் மீண்டும் வரும்

ச்வேத, நிலொஹித, வாமதேவ, ரதந்த்ர, ரௌரவ, தேவ, விஹத், க்ண்டார்ப, சத்ய, இஷ்ன, தாம, சரஸ்வத, வுடன, கருட, கூர்ம, நரஸிம்ம, சமன, அக்னேய, சோம, மானவ, தத்புமான், வைகுந்த, லட்சுமி, சாவித்ரி, அஹோரா, வராஹ, வைரஜ, கௌரி, மஹேஷ்வர, பித்ர இவைகள் முப்பதும் கல்பங்கள் ஆகும், ஒவ்வொரு கல்பத்திலும் பதினான்கு மனு உள்ளது, இதை மனுவந்த்ரம் எனவும் கூறுவர், இவையும் சுழற்சி முறையில் வரும், இந்த பதினான்கும் முடிந்தவுடன் அடுத்த கல்பத்தில் முதல் மனுவில் இருந்து காலம் துவங்கும்,

ஸ்வயம்பு, ஸ்வாரோசிச, உத்தம, தாமச, ரிதவ, சாசித, வைவஸ்வத, ஸவார்னி, தக்ஸவார்னி, பிரம்மஸ்வார்னி, தர்மஸ்வார்னி, ருத்ரஸ்வார்னி, தேவஸ்வார்னி, இந்த்ரஸ்வார்னி, இந்த 14 மனுவும் முடிந்தவுடன் அடுத்த கல்பம் துவங்கும்,

ஒவ்வொரு மனுவுக்கும் நான்கு யுகங்கள், அவை

க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபாரயுகம், கலியுகம்,

நான்கு யுகம் முடிந்ததும் அடுத்த மனு துவங்கும், இவ்வாறாக சுழற்சி முறையில் காலங்கள் அளவிடப்படுகிறது

தற்போது வராஹ கல்பத்தில் உள்ள வைவஸ்வத மனுவில் கலியுகம் நடந்து கொண்டுள்ளது, அதாவது 26 ஆவது கல்பத்தில் 7 ஆவது மனுவில் 4 ஆவது யுகம் நடைபெற்றுக்கொண்டுள்ளது,

ஒவ்வொரு யுகத்திற்குள்ளும் பல பரியாயங்கள் உள்ளன, பரியாயம் என்பது நாம் வழக்கத்தில் கூறும் ஆண்டு என்ற பதத்தை கொண்டது, இந்த பரியாயம் 60 பிரிவுகளை உடையது, இது சந்திர மானத்தின் ஆண்டுகளின் சுழற்சியாகும், இதில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு, இந்த ஆண்டுகளின் பெயர்களே தற்போது தமிழ் ஆண்டுகளாக பயன்படுத்தப்படுகிறது, **அவை**

பிரபவ, விபவ, சுக்ல, பிமோதூத, பிரஜோற்பதி, ஆங்கிரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்கிரம, விஷூ, சித்ரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, சர்வஜித்து, சர்வாரி, விரோதி, விக்குருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, ஹேவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வாரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, ராட்சச, நள, பிங்கள, காளயுக்தி, சித்தாத்திரி, ரௌத்ரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரத்தாட்சி, குரோதன, அட்சய இவைகள் அறுபதும் வருடங்கள், இவைகளும் அறுபதாவது வருடம் முடிந்ததும் மீண்டும் முதல் வருடத்தில் இருந்து சுழற்சி முறையில் துவங்கும்,

இந்த ஒவ்வொரு ஆண்டுக்குள்ளும் மாதங்கள் அயனங்கள், வாரங்கள், நாட்கள், திதிகள், நட்சத்திரங்கள், நாழிகை, ஓரை, மணி, ஜாமம், என பல்வேறு பிரிவுகளாக சக்கர சுழற்சியில் வரும் அதனால்தான் காலத்தை சக்கரம் எனவும் ஆழி எனவும் கூறுவார்கள்,

CamScanner

இந்த அறுபது ஆண்டுகள் சந்திரமான காலத்தை அனுசரித்து உருவானவை, வான் கணிதத்தில் மிக முக்கியமான பங்கு வகிப்பவைகள் சந்திரன், சூரியன் மற்றும் நட்சத்திரம் இவைகள் மூன்றுமே அளவீடுகளின் ஆதாரமாக இருக்கின்றன, இதற்கு காரணம், வானவெளி அனாதியாக இருப்பதால் அதை அடையாளம் காண ஒளிரும் பொருட்களை சார்ந்து அலகுகளை உருவாக்கியுள்ளனர், எனவே தினந்தோறும் தெரியும் ஒளிரும் பொருட்களாக இவை உள்ளதால் இவைகளை சார்ந்து பலவிதமான அளவீடுகள் உருவாக்கப்பட்டுள்ளது, இதில் சந்திரனின் நகர்வுகளை கொண்டு உருவான கணிதங்கள் சந்திரமானம் என்றும் சூரியனைக் கொண்டு அளவிடுவது சௌரமானம் என்றும், நட்சத்திரத்தை கொண்டு அளவிடப்படும் அளவீடுகளுக்கு நட்சத்திரமானம் என்று பெயர்,

சந்திரமான தினம் என்பது ஒரு திதி, தினகதி என்பதன் சுருக்கமே திதி, மொத்தமாக 30 திதிகளை கொண்டது சந்திரமான மாதம், இவ்வாறான 12 மாதங்கள் அடங்கியது சந்திரமான வருடம், சந்திரமான வருடம் 360 தினங்களைக் கொண்டது அதாவது திதிகளைக் கொண்டது.

பரியாயத்தில் உள்ள பிரபவாதி வருஷ வட்டமாகிய 60 ஆண்டுகளுக்கு 60*360 = 21600 தினங்கள்,

குறிப்பு: ஜோதிடத்தில் பல இடங்களில் ஆதி என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் இதன் பொருள் துவங்கி என புரிந்து கொள்ளவும், இதில் உள்ள பிரபவாதி வருசம் என்றால் பிரபவ என்று துவங்கும் வருட வரிசையில் உள்ள அனைத்து வருடங்களும் என்று புரிந்து கொள்ள வேண்டும், மேசாதி ராசிகள் என்றால் மேசம் துவங்கி 12 ராசிகளும் என பொருள், அசுபதியாதி நட்சத்திரங்கள் என்றால் அசுபதி துவங்கி 27 நட்சத்திரங்களும் எனப் புரிந்து கொள்ள வேண்டும்,

CamScanner

மனிதன் இரண்டு காலங்களை எதிர் கொள்கிறான், அவை ஒன்று பௌதீக காலம் இது இயற்கையில் இருப்பது, மற்றொன்று மனோகாலம் இது மனதினால் உண்டாவது, இரண்டும் வேறுபாடுகளுடன் இருந்தாலும் பெரும்பாலும் சமமாய் இருக்கிறது, எனவே இந்த இரண்டு கால அளவுகளும் ஏறக்குறைய ஒரே இயற்கை விதிகளின் வழியாகவே செயல்பட வேண்டும், அதன் அடிப்படையில் இந்தியாவில் பலவித கணிதங்களில் ஒற்றுமையுடன் அமைத்துள்ளனர், மேலும் மனிதனின் செயல்பாட்டின் கணித அளவீடுகளும் இயற்கையின் செயல்பாட்டு கணித அளவீடுகளும் சற்றேறக்குறைய ஒன்று போலவே இருப்பதால் மனிதனின் இயக்கத்தை வைத்தும் வான் கணிதங்களை வரையறை செய்தனர்,

ஒவ்வொரு கல்பமும் இறுதியுரும் போதும் பிரளயம் உண்டாகும் என்பதும், பிரளயம் என்பது மனிதனுக்குள் நடைபெறும் செயல்தான் அதை வைத்துதான் இப்படி நடக்கும் என்று கருதுகின்றனரே ஒழிய பிரளயத்தை பார்த்து சாட்சி கூறி அதன் கணிதத்தையும் யாரும் கூறவில்லை,

இரண்டு மஹா கல்பத்திற்கு இடையே ஒடுக்கம் உண்டாகிறது அந்த ஒடுக்கமே பிரளயம், இந்த பிரளயம் நான்கு விதமாக நடக்கிறது,

நித்தியம், 2, நைமித்திகம், 3,பிரலிருதம், 4, ஆதியந்தகம்

இதில் நித்தியம் என்பது மரணம், நைமித்திகம் என்பது மாயை ஒடுங்கிய கணமே பிரலிருதமும் ஒடுங்கும் அப்போது உண்டாகும் ஒடுக்கம், பிரகிருத பிரளயம் என்பது மகத்துவ விஷேச வரையிலான ஒடுக்கத்தினை அடைவது, நான்காவதாக ஆதியந்திக பிரளயம் என்பது யோகி தனக்குள் தத்துவ ஞானத்தினால் ஒடுங்குவது, இவை அனைத்தும் மனிதனுக்குள் நடப்பது, எனவே அது போலவே இயற்கையும் இருக்கும் என்பதன்

CamScanner

அடிப்படையில் காலங்களை பற்றிய கணிதங்களும் உருவாகியுள்ளன,

முதல் யுகத்திற்கு நாள் 8, இரண்டாம் யுகத்திற்கு நாள் 6, மூன்றாம் யுகத்திற்கு நாள் 4, நான்காம் யுகத்திற்கு நாள் 2

அதன் படி ஒரு நாளுக்கு = நாழிகை 60 = ஒரு நாழிகைக்கு விநாடி 60 = ஒரு வினாடிக்கு தற்பறை 60 = எனவே 60*60*60 = 21600

எனவே இரண்டு நாட்களை கொண்ட கலியுகத்திற்கு 21600*2= 43200 ஆண்டுகள், இது போலவே மற்ற யுகங்களுக்கும் கணிதம் செய்து தெரிந்து கொள்ளுங்கள் இவை ஞான மார்க்க விசயங்கள், இருப்பினும் இந்த காலம் பற்றிய கணிதங்கள் மனிதனின் இயக்கத்தினை ஒட்டியும் அமைக்கப் பட்டுள்ளது, ஒரு நாளில் மனிதன் விடும் மூச்சின் எண்ணிக்கை 21600 இதுவும் மேற்படி கணிதங்களும் ஒன்றிபோகும்,

ஒரு நாளுக்கான மூச்சின் எண்ணிக்கையை பகல் இரவாக பிரித்தால் 21600 ல் பாதி 10800 இந்த எண்ணிக்கை பகலிலும் இரவிலும் நடக்கும், இதில் ஒன்றை கவனியுங்கள் 10800, இது ஒரு புறம் இருக்க நமது மூச்சு இடது மற்றும் வலது நாசிகளில் மாறிக்கொண்டே இருக்கும், சில சமயங்களில் இரண்டிலும் வருவது போல் இருப்பினும் எதாவது ஒரு பக்கம் அதிகமாக இருக்கும், ஒரு மனிதனுக்கு சராசரியாக 200 முறை இந்த மாற்றம் ஏற்படும், இந்த மாற்றத்தை யோக மார்க்கத்தில் இடது பக்க சுவாசத்தை சந்திர கலை எனவும், வலது பக்க சுவாசத்தை சூரிய கலை எனவும் கூறுவர், இந்த மாற்றம் அக மற்றும் புற சூழல்களை வைத்து மாறிக்கொண்டே இருக்கும்

இதுவும் காலத்தினை குறிக்க உதவும் இதனை சர கலை என்று கூறுவர், இதை வைத்தும் பலன் கூறுவர், ஆனால் வெளி சுவாசத்தை வைத்து மட்டும் இடகலை, பிங்கலையில் சரம்

CamScanner

ஓடுகிறது என்பதை முடிவு செய்யக்கூடாது, காரணம் சரகலை என்பது பிராணன் ஓடுவதுதானே தவிர சுவாசம் ஓடுவது இல்லை, பிராணன் நாசியில் மட்டுமல்ல உடலில் எல்லா இடங்களிலும் ஓடும், பல நேரங்களில் வெளியே போய் நசிந்து கொண்டே இருக்கும், இந்த விசயம், இங்கு அதிகம் பேசத் தேவையில்லை,

அவ்வாறாக மாறும் கலைகளில் பாதி சந்திரன், பாதி சூரியனுக்கான கணிதமாக இருப்பதால் ஒரு நாளுக்கான சுவாசம் பகலில் 10800 இரவில் 10800 பகலில் 100 முறை மாற்றம், இரவில் 100 முறை மாற்றம் எனவே 10800/100=108, எனவே 108 மூச்சுக்கு ஒருமுறை இந்த சுழற்சி மாறுகிறது, சிலருக்கு ஒரு நாசியிலேயே பல நாழிகை நிற்கும் அது சூழலைப் பொருத்தது, இருப்பினும் சுவாச எண்ணிக்கை 108 ன் மடங்குகள் வரும் போதே மாறும், எனவேதான் தியான மாலைகளின் மணி 108, போற்றி பதிகங்கள் 108 பல கோயிலகள் புராதான கட்டமைப்புகள் 108 ன் மடங்கின் அளவிலேயே நிர்மாணிக்கப்பட்டது, இது இயற்கைக்கும் மனிதனுக்கும் தொடர்புகளை ஏற்படுத்த அவர்கள் செய்த முயற்சியாக இருக்கலாம், ஜோதிடத்தில் கூட நட்சத்திர பாதங்கள் 108 தான்,

மேலும்

4328100 / 40075 = 108 = அதாவது சூரியனின் சுற்றளவு பூமியின் சுற்றளவை போல் 108 மடங்கு பெரியது,

1376136 / 12742 = 108 = அதாவது சூரியனின் விட்டம் பூமியின் விட்டத்தைப் போல் 108 மடங்கு பெரியது,

375213 / 3474 = 108 = இதில் பூமியில் இருந்து சந்திரன் உள்ள தூரம் சந்திரனின் விட்டத்தைப் போல 108 மடங்கு உள்ளது,

மேலும் ராசிச்சக்கரம் என்பது 360 பாகை கொண்டது, அதில் உள்ள 12 ராசிகள் ஒவொன்றிற்கும் தலா 30 பாகைகள்,

CamScanner

இந்த ராசி சக்கரத்தில் நட்சத்திரத்திற்கும் இடமுண்டு, எனவே 27 நட்சத்திரத்திற்கும் தலா 13.20 பாகை

இந்த சக்கரத்தில் இரண்டு அளவீடுகளும் உள்ளபடியால் அதை சமமாக இருக்கும் படியான புதிய ஒரு அளவீடு தேவை எனவே 12 ராசிகளுக்கும், 27 நட்சத்திரங்களுக்கும் இடையே உள்ள பொதுவான ஒற்றுமைகளை கவனிக்கும் போது, இரண்டுமே 3 என்ற எண்ணால் வகுபடும்,

அவ்வாறெனில்

12 / 3 = 4
27 / 3 = 9

எனவே ராசிகளுக்கும் நட்சத்திரத்தினால் கிடைத்த விடையுடன் ஒரு தொடர்பையும், நட்சத்திரங்களுக்கு ராசிகளால் கிடைத்த விடையுடன் ஒரு தொடர்பையும் உண்டாக்கினால் இரண்டுக்கும் பொதுவான ஒரு அளவீட்டை ஏற்படுத்தலாம், ஆகையால்

12 * 9 = 108
27 * 4 = 108

இதில் கிடைத்த 108 என்பது பொதுவானதாக இருக்கும், எனவே ஒரு ராசிக்கு 9 பாதங்களும், ஒரு நட்சத்திரத்திற்கு 4 பாதங்களும் அளிக்கும், பொது சரியாக தனித்தனி பிரிவுகளாக பிரிக்கப்பட்டது, இப்போது ஒரு ராசி சக்கரத்தில் 12 ராசிகளும், 27 நட்சத்திரங்களும், இவை இரண்டையும் இணைத்துக் கட்டும் 108 பாதங்களும் கிடைத்து விட்டது,

எனவே மனிதனின் அக மற்றும் புற இயக்கங்களும், பிரபஞ்ச இயக்கங்களும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதால் நம்மால் உணர முடிந்த நமது இயக்கங்களை வைத்து இயற்கையின் அறிய முடியாதவைகளை தீர்மானிப்பதன் மூலம்,

CamScanner

இயற்கையில் நம்மால் தெரிந்து கொள்ளத்தக்க இயக்கங்களை வைத்து மனிதனின் அறிய முடியாத எதிர்காலத்தை புரிந்து கொள்ள முடியும், ஏனெனில் இயற்கை இயக்கமும், மனிதனின் இயக்கமும் ஒன்று போலவேதான் இருக்கிறது, காரணம் மனிதனும் இயற்கையின் அங்கம்தானே, இதன் அடிப்படையிலும் கூட மனிதன் அவனது வாழ்க்கை, காலம், மற்றும் அண்ட இயக்கம் என அனைத்தும் ஏதோ ஒற்றுமையில் இருப்பது புரிந்து கொள்ள முடிகிறது, இருப்பினும் நமது பிறப்பின் நோக்கம் இந்த வாழ்க்கையின் அர்த்தம் நமது நிரந்தரமான நிலை என எல்லாமே புரியாத புதிர் மட்டுமே, நிகழ்வது, இதற்கு முன் நிகழ்ந்த நமக்கு தெரிந்த தகவல்கள் இவைகளை கொண்டு அடுத்து வரும் காலம் இப்படி இருக்கும் என காலக் கணித உதவியுடன் தெரிந்து கொள்ள முற்படுகிறோம்,

ஜோதிடம் எனும் வாழ்வியல் வான்கணிதம், பல கூறுகளாக பிரபஞ்சத்தை கூறுபோட்டுள்ளது, நாம் இவ்வாறு பல்வேறு முறையில் பிரபஞ்சத்தை பிரிப்பதற்கான காரணம் அதை புரிந்து கொள்ளவே, அனைத்து கிரகங்களும் ஒரு ஒழுங்கில் இருந்தால் பிரிப்பது எளிதானது, ஆனால் துரதிஸ்டவசமாக அவ்வாறு இல்லை, எனவே கூடுமானவரை பிரித்து ஒருநிலை வரை எடுத்துச் சென்று அதற்குள் ஒரு ஒற்றுமையை அடையும் வரை பிரிக்க வேண்டியது அவசியம், அவ்வாறாக ஒவ்வொரு கணிதமும் மற்றொன்றுடன் ஒன்றிப்போகும் வரை பிரித்தாக வேண்டும், ஏனெனில் இவை அனைத்தையும் நாம் ஒரே அளவைக்குள் கொண்டுவரும் போதே இவற்றின் மொத்த கூற்றை புரிந்து கொள்ள முடியும்,

உதாரணமாக நிமிடம் பார்க்க ஒரு கடிகாரமும், நொடியை பார்க்க ஒரு கடிகாரமும், மணியை பார்க்க ஒரு கடிகாரமும் இருப்பது குழப்பத்தினை ஏற்படுத்தும் எனவே மூன்றையும் ஒரே வட்டத்துக்குள் கொண்டு வந்தாக வேண்டும், அவ்வாறு

கொண்டுவருவதற்கு 12- அதை 60 க்குள் அடக்க வேண்டும், அதற்குள் மற்றொரு 60 வர வேண்டும்.

தேதி, மாதம், வருடம், மணி, நிமிடம், நொடி, நாள் என பல தகவல்கள் கொண்ட ஒரே கடிகாரத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள், அதற்குள் அவர்கள் இவற்றை ஒருங்கிணைக்க பல்வேறு கணிதம் செய்து பற்சக்கரங்களை அமைத்திருப்பர். அதன் இயந்திர வடிவமைப்பு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும், ஆனால் அவ்வளவு குழப்பமான வடிவமைப்பு கடிகாரத்தில் எளிதாக தேதி, மாதம், வருடம், மணி, நிமிடம், நொடி, நாள் போன்றவற்றை புரிந்து கொள்ளவே என்பதுதான் உண்மை. கடிகாரம் என்பதோ மணி என்பதோ நாம் உருவாக்கி கொண்டது, ஒரு நாளுக்கு 10 மணி நேரம் என்று கூட நாம் தீர்மானித்துக் கொள்ளலாம், ஆனால் பிரபஞ்சத்தினை நாமாக தீர்மானிக்க முடியாது, நாம் ஒரே வட்டத்திற்குள், சந்திரன், மற்றும் சூரியனை புரிந்து கொள்ள வேண்டும் எனில் அவை ஒன்றி போகும் கணிதம் வரும் வரை பிரித்தாக வேண்டும், ஒருவேளை அதே வட்டத்திற்குள் சனியை புரிந்து கொள்ள வேண்டும் எனில் இப்போது மீண்டும் மூன்றுக்குமான ஒற்றுமை வரும் வரை பிரித்து புரிந்து ஒன்றிணைக்க வேண்டும், இவ்வாறாக சந்திரன் மற்றும் சூரியனின் உதவி கொண்டு பிரிக்கப்பட்ட அளவு மானியில் ஒன்பது கோள்களை அடைத்து அதற்குள் உள்ள ஒற்றுமைகளை காண பல பிரிவுகளை ஏற்படுத்தி ஒன்றுபடுத்தியதே ராசிமண்டல கணிதம், அந்த கணித உதவியோடு காலத்தை புரிந்து கொள்வதே ஜோதிடம், இதில் வடிவமைப்பு அவ்வளவு சிக்கலானது, ஆனால் இந்த சிக்கல் அனைத்தும் எளிதாக புரிந்து கொள்வதன் பொருட்டே ஒழிய மேலும் சிக்கலாக்க அல்ல,

நீங்கள் யாரென முடிவு செய்ய ஜோதிட வடிவமைப்பை புரிந்து கொள்வது ஒருவிதம், மற்றொன்று பயன்படுத்துவதும் ஒருவிதம் இரண்டும் தெரிந்தவரே ஜோதிடர், நமது முறை

CamScanner

இரண்டையும் உங்களுக்கு எளிதாக வழங்கும் வண்ணம் வடிவைக்கப்பட்டது.

இவைகளைப் போன்றே பஞ்சாங்கம் என்பதும் கால அளவிடுதான் பஞ்சாங்கம் என்றதும் எதோ ஒரு புத்தகம் என நினைக்க வேண்டாம் பஞ்ச அங்கம் அதாவது ஐந்து பிரிவுகளாக காலத்தின் அளவீடுகளையும் கூறுவதுதான்,

மிக முக்கியமாக நமது வானியல் கணிதங்கள் சூரியன் மற்றும் சந்திரனை சார்ந்தே இருக்கும் காரணம் இரண்டும் நம்மால் தினமும் பார்க்க முடியும், மற்ற கிரகங்களை அவ்வாறு காண இயலாது உதாரணமாக சூரியனுடன் இணைந்த கிரகங்களை நம்மால் இரவில் காண முடியாது ஏனெனில் அது பகலில் சூரியனுடனே வானில் தெரியும் என்பதால் சூரிய ஒளியில் நமக்கு தெரியாது அவ்வாறு சூரியனுடன் இணைந்த கிரகங்கள் மாத கணக்கில் சூரியனுடனே இருக்கும்,

ஆனால் சந்திரன் அதிகபட்சமாக இரண்டு நாட்களுக்கு மேலாக சூரியனுடன் இருக்காது என்பதாலும் ஓரிரு நாட்களை தவிர பார்வைக்கு கிடைக்கும், எனவே அதன் அடிப்படையில் சூரியனும், சந்திரனும் இந்த பிரபஞ்சத்தை அளவிடும் மாணியை நிர்மானிக்க உதவியாக கொள்ளப்பட்டன,

நாம் காணும் பிரபஞ்சத்தை சுற்றி பார்த்தால் பூமிக்கு அடுத்த பக்கமும், மேலும் கீழும் அது விரிந்துள்ளது அதை அளக்க பூமியின் நடுப்பகுதியில் இருந்து அளவிட நமக்கு பல கற்பனை அனுமான திறன் முக்கியம், நம்மால் பிரபஞ்சத்தின் பாதியை தவிர மற்ற பாதியை பார்க்க முடியாது,

அவ்வாறு காண 12 மணி நேரம் காத்திருக்க வேண்டும், அப்படி காத்திருந்து பார்த்தாலும் ஏற்கெனவே பார்த்த பகுதி இப்போது உங்களுக்கு தெரியாது, மேலும் நாளை இதே நேரத்தில் பார்த்தால் பூமி வேறு இடத்தில் இருந்து பிரபஞ்சத்தை வேறு

மாதிரியாக காட்டும், பிரபஞ்ச கணிதம் மிகவும் குழப்பமானது ராசி மண்டலம் சாய்ந்துள்ளது ஆனால் அது சாயவில்லை, நமது பூமி சாய்ந்துள்ளது, அதுவும் அல்லாமல் நாம் சுற்றி வரும் சூரியனை நோக்கி சாய்ந்திருந்தாலும் எளிதாக கணிக்கலாம், அதுவோ வேறேதோ ஒரு பக்கமாக அதுவும் நிலையானதாக இன்றி சாய்ந்துள்ளது எனவே நாம் இப்போது பார்க்கும் ராசி மண்டலம் இன்னும் இரண்டு மணி நேரத்தில் வேறு கோணத்தில் இருக்கும், காலை இன்னும் அதிகமாக திரும்பி இருக்கும், அடுத்த மாதம் இதே நாள் எதோ ஒரு கோணத்தில் இருக்கும்,

நீங்கள் பார்க்கும் வானம் மேற்கு கீழ் வானம் துவங்கி கிழக்கு வரை அடுத்த அடுத்த ஏழு ராசிகள் உள்ளது ஒவ்வொரு நொடியும் கிழக்கு பகுதி அடுத்த பகுதியை அடைந்து கொண்டே உள்ளது, ராசி மண்டலமும் வடக்கில் இருந்து தெற்காக, தெற்கில் இருந்து வடக்காகவும் ஆடிக்கொண்டே உள்ளது இதை வைத்து கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் நாளை இதே நேரம் நாம் பார்க்கும் பிரபஞ்சம் இன்னும் நான்கு நிமிடங்கள் கழித்து இன்று நாம் காணவிருக்கும் பகுதி , எனவே நாம் பார்க்கும் ஒவ்வொன்றையும் ஒன்றிணைத்து நமக்குள் ஒரு பிரபஞ்சத்தினை வடிவமைத்து சுழலவிட வேண்டும், இப்போது எல்லாம் புரியும்,

நாம் சூரியனை சுற்றி வந்தாலும் நம்மை சூரியன் சுற்றுவது போல தெரிவதாக ஏற்கெனவே பார்த்தோம், அவ்வாறு சுற்றிவரும் போது, சந்திரனும் சுற்றி வருகிறது, சூரியனை நாம் ஒரு வேகத்திலும், நம்மை சந்திரன் ஒரு வேகத்திலும் சுற்றி வருகிறது, இப்போது இருவேறு நிகழ்வுகள் நடை பெறுகிறது, ஒன்று நாம் சுற்றி வருகிறோம், சந்திரன் நம்மை சுற்றுகிறது, சந்திரன் நம்முடன் இணைந்து சூரியனையும் சுற்றுகிறது, எனவே நாம் சந்திரன் மீது சூரிய ஒளிபட்டு பிரதிபலிப்பதை வெவ்வேறு கோணத்தில் இருந்து பார்க்கிறோம்,

CamScanner

அவ்வாறு காணும் போது சந்திரன் ஒரே மாதிரியாக மீண்டும் மீண்டும் வருகிறது, என்பதால் அவற்றை ஒரு அளவிடாக கொள்ளலாம், அதன் பெயர் தின கதி என்ற பெயர், அது திகதியாகி தேதியாகிவிட்டது, ஜோதிடத்துறை திதி என்கிறது, இவ்வாறாக நாம் சூரியனை சுற்ற துவங்கிய இடத்தை அடைவதற்குள் 12 முறை முழு ஒளி பொருந்திய சந்திரனை காண்கிறோம், ஒளி பொருந்திய சந்திரனுக்கு பெயர் திங்கள் ஆனால் நாமோ திங்கள் என்றால் மாதம் என கற்பிக்கப்பட்டுள்ளோம், சந்திரன் அந்த பௌர்ணமி எந்த நட்சத்திரத்திற்கு நேராக பயணிக்கிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரே, அந்த மாதத்தின் பெயர், இவ்வாறாக 12 மாதங்களின் பெயரும் உருவாக்கப்பட்டன, சூரியனை வைத்துக் கூறும் மாதங்களுக்கு பெயர் வேறெதுவும் இல்லை, சந்திரன் அந்த மாதம் வரும் பௌர்ணமி நாளின் நட்சத்திரம்தான்

அவை

சூரியன் உள்ள ராசி -	சந்திரன் உள்ள நட்சத்திரம்	-மாதப்பெயர்
மேசம் -	சித்திரை -	சைத்திரம் (சித்திரை)
ரிசபம் -	விசாகம் -	வைசாகம் (வைகாசி)
மிதுனம் -	கேட்டை -	ஜேட்டம் (ஆனி)
கடகம் -	பூராடம் -	ஆராடம் (ஆடி)
சிம்மம் -	திருவோணம் -	சிராவோணம் (ஆவணி)
கன்னி -	பூரட்டாதி -	போத்ரபதம் (புரட்டாசி)
துலாம் -	அசுவனி -	ஆஜ்விசம் (அற்பசி)
விருச்சகம் -	கார்த்திகை -	கார்திகம் (கார்திகை)
தனுசு -	மிருகசீரிடம் -	மார்கசிரம் (மார்கழி)
மகரம் -	பூசம் -	பூஷியம் (தை)
கும்பம் -	மகம் -	மாகம் (மாசி)
மீனம் -	உத்ரம் -	பால்குனம் (பல்குனி)

ராசி என்பது பூமியுடன் இணைந்து பவனி வரும் ஒரு கற்பனை அளவுகோல், ஜோதிடம் என்பது பிரபஞ்சத்தை பூமியில்

இருந்து கணிக்கும் ஒரு துறை என்பதால், சூரியக் குடும்பத்தில் உள்ள அனைத்து கிரகங்களும் சூரியனை சுற்றி வந்தாலும், நாம் இந்த பிரபஞ்சத்தை பூமியில் இருந்தே பார்க்கிறோம்,

நாம் பூமியில் இருந்து பார்க்கும் போது மற்ற கிரகங்கள் நமக்கு எவ்வாறு காட்சி தருகின்றன என்பதும், அவைகள் சூரியனை சுற்றி வந்தாலும் நம்மை எவ்வாறு சுற்றுகின்றன என்பதும் இத்துறையில் கணிக்கப்படுகிறது, மேலும் சூரியன் நிலையான ஒன்றாக இருந்தாலும் பூமி சுழலும் போது பூமியில் உள்ள நமக்கு சூரியன் நகர்வது போல பிறழ்வு தோற்றமாக தெரிகிறது,

எப்படி இருப்பினும் நகரும் பொருளில் இருந்து பார்க்கும் போது நிலையான பொருள் நகர்வது போல தெரிந்தாலும் நம்மால் நிலையான இடத்தில் இருந்து கொண்டு முழு பிரபஞ்சதையும் பார்க்க இயலாததாலும் நாம் நகரும் பொருளில் இருந்து கொண்டே வான் பொருட்களின் நிலைகளை புரிந்து கொள்கிறோம், மேலும் சூரியன் நிலையானது என்பதையும் நம்மால் தீர்க்கமாக கூற இயலாது, இது பற்றி பின்வரும் பகுதிகளில் விரிவாக காண்போம்,

ஏனெனில் அதை நாம் தீர்க்கமாக கூற சூரிய குடும்பத்திற்கு வெளியே செல்ல வேண்டும், அப்படி பார்க்கும் போது பூமியில் இருந்து கொண்டு நாம் பார்க்கும் விசயங்களின் அடிப்படையில் சூரியன் மையமாக மற்றும் நிலையானதாக இருக்கலாம் என்ற ஒற்றை முடிவிற்கு வருகிறோம், எனவே சூரியன் மையமானது என்பதும், அதுவே நிலையானதும் என்பதே ஒரு அனுமானமே, ஏனெனில் சூரியனும் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பால்வீதியில் பவனி வருகிறது

ஒரு வேளை பூமி சந்திரனை அழைத்துக் கொண்டு சூரியனை சுற்றி வருகிறது, என நாம் தற்போது நினைத்து கொண்டுள்ளது போல் இல்லாமல், சூரியன் தனது நிலாக்களான

CamScanner

புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி போன்றவற்றை அழைத்து கொண்டு பூமியை சுற்றியும் வரலாம்,

எது எப்படியோ நமக்கு தேவை காலம் என்ற ஒன்று அதை நாம் பூமியில் இருந்து பார்க்கும் போது நமக்கு தெரிந்தவைகளை கொண்டு தீர்மானிக்கிறோம், எனவே ஜோதிடத்தை பொறுத்தவரை ஜாதகர்தான் மையம், அவரை இந்த அண்டசராசரமே சுற்றிக் கொண்டுள்ளது,

சூரியன் உதயமாவதும், மறைவதும் நாள் என புரிந்து கொள்ளப்பட்ட உடனேயே அடுத்த தேடல் துவங்கியது, பண்டைய மனிதர்கள் தனக்கு நிகழும் நிகழ்வுகளை காலம் என்ற ஒன்றின்மையால் பிரித்தரிய இயலாமல் இருந்தனர், பின்பு எல்லாம் ஏதோ ஒற்றுமையான சுழற்சிக்கு உட்பட்டு நடப்பதை அறிந்தனர், முதலில் பருவ மாற்றங்கள் காலங்களை உணர்த்தின, அந்த பருவமாற்ற கால புரிதல் ஏற்பாடு பல முன்னேற்றங்களை வழங்கவே, அதை இன்னும் ஆழமாக அறிய முற்பட்டனர், அதன் விளைவாக

இந்த பருவ மாற்றங்கள் சூரிய சுழற்சியால் ஏற்படலாம் என்றும் அந்த சூரியனும் ஒரு ஒழுங்கு முறைக்குள்ளேயே சுற்றி வருவதையும் புரிந்து கொண்டு சூரிய நகர்வை கவனித்தனர்,

சூரியனின் பிரகாசம் மற்றும் வெப்பம் ஒவ்வொரு நாளும் மாறுபாட்டில் உள்ளது, அவைகளும் கால சுழற்சியை அறிய உதவின, இதில் துவங்கு புள்ளி இல்லாமல் எதைக் கொண்டு தீர்மானிப்பது? எனவே அதிக வெப்பம் மற்றும் பிரகாசம் உள்ள காலத்தை தேர்ந்தெடுத்து மீண்டும் அதே காலத்தில் புதிதாக துவங்குவதாய் கணித்தனர், இது வருடம் என அழைக்கப்பட்டது .

வானில் தெரியும் நகரும் பொருட்களின் சுழற்சியின் அடிப்படையில் பார்க்கும் போது நிலா எனும் சந்திரன் தனது ஒளியின் ஏற்ற இறக்கங்களால் வேறொரு விசயத்தையும்

CamScanner

வழங்கியது, சூரியனின் ஒரு சுழற்சி வருடம் எனவும், சந்திரனின் ஒரு சுழற்சி மாதம் எனவும் காலங்களை பகுத்தறிய கிடைத்த விசயங்களின் துல்லியத்தை அதிகப்படுத்தும் போது அடுத்தடுத்த விசயங்கள் கிடைத்தன,

வருடம் மற்றும் மாதம் கிடைத்தவுடன் அதையும் பிரிக்க வான் நகர்வுகள் கவனிக்கப்பட்டன, சூரிய உதயம் ஒவ்வொரு நாளும் நிகழும் போதும் ஒரே இடத்தில் (திசையில்) இல்லாமல் நகர்ந்து கொண்டே உள்ளது என்பதையும், அது மீண்டும் அதன் நிலையை அடைந்து, மீண்டும் நகர்ந்து கொண்டுள்ளதையும் வைத்து வருடம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது, சூரியன் கிழக்கில் உதித்தாலும் வருடத்தின் ஒரு பகுதியில் வடகிழக்கிலும், சில குறிப்பிட்ட இடைவெளியில் தென்கிழக்கிலும் உதயமானது, இந்த மாற்றம் அயனம் என அழைக்கப்பட்டது, வடக்கு அயனம், தெற்கு அயனம் எனப்படும், இந்த விசயமே பூமி நேராக இல்லாமல் சாய்ந்துள்ளது என்பதை கண்டறிய துவக்கமாக இருந்தது,

நாம் இப்போது பயன்படுத்தும் பெரும்பாலான வார்த்தைகள் வடமொழி சொல்லால் ஆட்கொள்ளபட்டுள்ளது, இது அனேகமாக அன்னிய தேசத்தாரால் நமது நாடு அடிமைப்படுத்தப்படும் போது தமிழ் சார்ந்த வானவியல் ஏடுகள் அழிக்கப்பட்டிருக்கலாம், பின்பு நாம் வடமொழி ஏடுகள் வழியாக மீட்டெடுத்திருக்கலாம், எனவே ஜோதிடம் வடமொழியால் நிரம்பியுள்ளது, ஒருவேளை தமிழ் சொல்களாகவே இருந்திருந்தால் இவ்வளவு குழப்பம் தமிழக ஜோதிட துறையில் இருந்திருக்காது, சூரியனின் மாற்றங்கள் வருடம், வருடத்திற்கு இரண்டு அயனம் என்பதும், சந்திரனின் நிலைமாற்றம் மாதம், சூரிய உதயம் நாள், என்பதையும் அளித்தது,

சூரியன் ஒரு சுற்றை முடிப்பதற்குள்ளாக சந்திரன் பன்னிரெண்டு அமாவாசையும், பன்னிரண்டு பௌர்ணமியும் வந்தபடியால் இப்போது வருடத்தை 12 ஆக பிரிக்க ஒரு எண்

CamScanner

கிடைத்தது மேலும் சந்திரன் நகர்வு கணக்கும், சூரிய நகர்வு கணக்கும் சில இடங்களில் கணித குழப்பத்தை எற்படுத்துவதாலும் முற்றிலுமான சூரிய கணிதம் தேவைப்பட்டது.

(இந்த இடத்தில்தான் இந்திய வானசாஸ்த்திரம் உலக அரங்கத்தில் தனது தனித்துவத்தை தக்கவைத்துக் கொண்டது. அது என்னவெனில் உலகம் முழுமையிலும் சூரிய மண்டலத்தின் அடிப்படையில் ஏற்படும் பருவகால மாற்றங்களை முன்நிறுத்தி ராசி மண்டலமானது வடிவமைப்பை பெற்றுள்ளது ஆனால் இந்திய வானியலோ அதையும் கடந்து சார்பு புள்ளிகளாக நட்சத்திரங்களை மையமாக கொண்டது. எனவே இந்திய ராசி மண்டல முறை நட்சத்திர ராசி மண்டலம் என்றும், மற்ற நாட்டு ராசி முறைகள் பருவகால ராசி மண்டலம் என்றும் அழைக்கப்படுகிறது.)

அவ்வாறாக சூரியன் ஒரு முறை சுற்றுவதாக காட்சி தரும் அதே கால அளவில் சந்திரனின் ஒளிமாற்றங்களின் அளவான அமாவாசை மற்றும் பௌர்ணமி 12 முறை வந்து விடுவதால் ஒரு வருடத்தை 12 மாதங்களாக பிரிக்க முடிந்தது. இனி சூரியனை மட்டும் வைத்து காலங்களை பிரிக்கலாம், சந்திரனின் தேவையில்லாமல் காலங்களை பிரித்தாலும் சந்திரனை வைத்தும் காலங்களை பிரித்துக் கொண்டனர். இப்போது சந்திரன் சார்ந்த கால அளவைகளும், சூரியன் சார்ந்த கால அளவைகளும் கிடைத்தது. இதுவரை கிடைத்த தரவுகள் வானியலை அதிக நுணுக்கத்துடன் அருகில் செல்ல ஆர்வத்தையும், அதற்கான வாய்ப்புகளையும் வழங்கியது.

அந்த ஆய்வின் தொடர்ச்சியாக தூரத்தில் ஒளிரும் சில பொருட்கள் அனைத்தும் நட்சத்திரங்கள் அல்ல அவற்றில் சிலவை கிரகங்கள் என்றும் தூர வேறுபாடுகளால் அவற்றின் அளவுகள் குறைந்து காணப்படுகின்றன என்றும் உணர முடிந்தது. அக்கிரகங்களும் ஒரு குறிப்பிட்ட கால அளவுகளுக்குள்ளேயே

ஒரு நிலையான மையத்தை சுற்றி வருகின்றன என்றும் நாம் ஏற்கெனவே கண்டறிந்த நாள், மாதம், வருடம் என்பதுடன் ஒப்பிட்டு பார்க்கவும் முடிந்தது, எனவே சூரியன் ,சந்திரன் அல்லாது இப்பொழுது மேற்கொண்டு புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன் ,சனி என மொத்தம் ஏழு பொருட்கள் காலத்தை அளவிட துணைக்கு வரும்,

பூமியின் தற்சுழற்சி நாளாகவும், பாதையில் நகர்ந்து சூரியனை சுற்றி வரும் சுழற்சி 12 என்ற இலக்கம் 12 மாதங்களாகவும் பிரிக்கப்பட்டவுடன் மற்ற கிரகங்களின் பயன்பாட்டையும் உணர்ந்து ஏழு நாட்கள் கொண்ட கூட்டம் வாரமென பிரிக்கப்பட்டது. மணி, நாள், வாரம், மாதம், வருடம் என்றால் என்ன என்பதை அதற்கான பகுதியில் காணலாம்,

இவ்வாறாக பல பிரிவுகளின் துணைகொண்டு காலங்களை நாம் உணர்ந்தாலும், இவற்றை குறித்து வைக்க அலகுகளும், சில குறிப்பு அடையாளங்களும் தேவை, ஒருநாளை 24 மணி நேரம் என்பதை இரண்டு சுற்றுகளால் மாற்றி அதை வட்ட வடிவ தட்டுக்குள் அடக்கி நடுவே சுழலும் முள்ளை பொருத்தி அதிலும் நுணுக்கமாக மேலும் இரண்டு முட்களை இணைத்து வடிவமைக்காவிட்டால் நமக்கு கடிகாரம் என்ற ஒன்றோ, அதை எவ்வாறு பயன்படுத்துவது என்றோ தெரிந்திருக்காது,

அது இல்லாத போது தற்போது போல் எளிதாக நேரத்தை கூற முடியாது, அதன் முன்னேறிய வடிவமே மின்னணு கடிகாரங்களாகிவிட்டது , இருப்பினும் இவைகளின் அடிப்படை பூமி தன்னை தானே சுற்றி கொள்வதே அன்றி வேறில்லை, அது போலவே இந்த கால குறியீடுகளை புரிந்துகொள்ள கடிகாரம் போன்ற ஒன்று தேவை, நாம் புரிந்து கொள்வதற்காகவே இங்கு கடிகாரத்தை உதாரணமாக்கியுள்ளோம், ஏனெனில் ஜோதிடத்தின் அடிப்படையை வைத்தே கடிகாரம் உருவாக்கபட்டது, கடிகாரம் ஜோதிடத்தின் கடைசி வாரிசு, அதே போல நடைமுறை வருட

கணக்குகளும் உண்டு, அதாவது நாம் பயன்படுத்தும் வருட முறை கிறிஸ்து பிறப்பை கொண்டு கணிக்கப் படுகிறது, இது போல பல வருட முறைகள் புழக்கத்தில் உள்ளது, அதை சகாப்தம் என அழைப்பார்கள், நமது இந்திய முறை சாலிவாகண சகாப்த முறையை அரசு முறையாக பாவிக்கிறது

பஞ்சாங்கம் என்றால் என்ன ?

நம் நாட்டு வானியல் துறையான ஜோதிடத்துறை காலங்களை பொது பயன்பாடிற்காக ஐந்து வெவ்வேறு அலகுகளாக பிரித்து அவற்றை கொண்டு காலங்களை கணித்து வாழ்வியல் முறைகளை கட்டமைத்து உள்ளது, பெரும்பாலான கலாச்சர நிகழ்வுகளுக்கும் ஜோதிடம் மற்றும் மனிதனின் சமூக செயல்பாடுகள் குறிப்பாக வேளாண்மை போன்றவைகளுக்கும் இது பயன்படுகிறது, முதன் முதலாக பஞ்சாங்கத்தை வடிமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தவர் ஆரியபட்டர் ஆவார், பின்பு பல மாற்றங்களை சுமந்து தற்போது வரை பயணித்துள்ளது, பஞ்சாங்கத்தின் வயது கிட்டதட்ட 800 வருடங்கள் இருக்கும், அவ்வாறான பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்களை உடையது, அந்த ஐந்து அங்கங்களும் நாம் முன்பு பார்த்தது போலவே சூரியன் மற்றும் சந்திரனின் ஒருங்கிணைப்பிற்காக உருவாக்கப்பட்டவையே, **அவை :**

1. வாரம்,
2. நட்சத்திரம்.
3. யோகம்
4. திதி,
5. கரணம்,

வாரம்

நாம் நாட்களை குறிபிட்ட கூட்டங்களாக புரிந்து கொள்ள கிரகங்களின் பெயர்களை பயன்படுத்துகிறோம் என்பது அனைவரும் அறிந்ததே, ஆனால் ஏன் இந்த வரிசையில் உள்ளது என தெரிந்தால் பண்டைய மனிதனின் அறிவை கண்டு பிரமிப்படைவோம்,

காலங்களை அறிய நாம் கிரகங்களை சார்ந்து இருக்கிறோம், அப்படியாக நாம் நமது வெறும் கண்களால் பார்க்க முடிந்த அளவுள்ள சனி கிரகம் வரை மட்டுமே பயன்படுத்துகிறோம் அதில் மொத்தம் பூமியை தவிர்த்து ஏழு கிரகங்கள் மட்டுமே இருக்கிறது எனவே ஏழு நாட்கள்,

சூரியனை சுற்றி அனைத்து கிரகங்களும் சுற்றி வருகிறது, அதில் பூமியும் ஒன்று, பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வரும் கிரகங்கள் உள் வட்ட கிரகங்கள் என்றும், அவ்வாறு வர இயலாத கிரகங்கள் வெளிவட்ட கிரகங்கள் என்று தரம் பிரிக்கபட்ட அவற்றின் சுற்றுகால அடிப்படையில் இறங்கு வரிசையில் அமைத்து தனித்தனி குழுவாக வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி அவற்றை இணைத்தால் ஒரு வரிசை உருவாகும் **அவை:**

உள்வட்டகிரகம்:

1. சூரியன் - 365.24 நாட்கள்,
2. சுக்கிரன் - 224 நாட்கள்,
3. புதன் - 115 நாட்கள்,
4. சந்திரன் - 27.4 நாட்கள்,

வெளிவட்டகிரகம்:

1. சனி - 30 வருடங்கள்,
2. குரு - 12 வருடங்கள்,

3. செவ்வாய் - 1.8 வருடங்கள், இதன் படி

சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, வியாழன், செவ்வாய் என்ற எழு கிரகங்களின் வரிசைப் படி வார நாட்கள் பெயரிடப்பட்டன, இதனை ஓரை வரிசை எனவும் கூறுவர், ஆனால் இந்த வரிசையில் வார நாட்கள் இல்லையென உங்களுக்கு தோன்றலாம்,

நாம் இப்பொழுது பயன்படுத்தும் ஹவர் என்ற சொல் ஹோரா என்ற சொல்லில் இருந்து தோன்றியது (hour-hora) ஹோரா என்பது ஓரை என்பதன் மாற்று சொல், நமது பூமி தன்னை தானே சுற்றிவர எடுத்து கொள்ளும் ஒரு நாளை 12 பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் 5 நாழிகை என்றும், 24 ஓரைகளென்றும் பிரித்து கொண்டார்கள், நாழிகை என்பது அட்ச, தீர்க்க ரேகையை பொருத்து மாறுபடும் என்பதால் அனைவருக்கும் பொதுவானதாக ஓரை எனும் மணியை பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்தினர், அதன்படி ஒரு நாளுக்கு 24 ஓரை,

பல்வேறு நாடுகளில் ஒரு நாள் என்பது சூரிய உதயத்தில் இருந்தே கணக்கிடப்படுகிறது, தற்போதைய இரவு 12 மணியுடன் நாள் முடிவடைகிறது என்பது உலகம் சார்ந்த கணிதத்திற்காகவே, ஏனெனில் ஒவ்வொரு நாடும் தனது மணியை பொதுவாக ஒரே மாதிரியாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே, சந்தைகள் அனைத்தும் உலக பொதுவாக மாற்றபட்டதால் அனைத்தும் பொது கணிதங்களாக மாற்றபட்டுள்ளன, அதிலும் பூமிக்கான நேரம் என்பது கூட ஒரு பொதுவான இடத்தில் இருந்தே கணக்கிடப்டுகின்றன, அந்த இடம்தான் "கிரீன்விச்" எது எப்படி இருந்தாலும் வழக்கத்தில் நாள் என்பது விடிந்த பின்புதான்,

மேற்கண்ட ஓரைகளுக்கான கிரக வரிசையை கொண்டு நாட்களுக்கு பெயரிட்டுள்ளனர், ஒரு நாளின் சூரிய உதயம்

CamScanner

தோராயமாக காலை 6 மணி துவங்கி அடுத்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் அடுத்த அடுத்த ஓரையாக வரும்.

உதாரணம்:

இன்று ஞாயிறு காலை 6-7 சூரியனின் ஓரை, எனவே இன்று ஞாயிற்றுகிழமை

அடுத்தடுத்த ஓரைகளாக வரிசைப்படி (சூரியன்), சுக்கிரன், புதன், சந்திரன், சனி, வியாழன், செவ்வாய் மீண்டும் சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, வியாழன், செவ்வாய் இவ்வாறு மீண்டும் மீண்டும் சுழற்சி முறையில் வந்து கொண்டே இருக்கும், கீழ் உள்ள வரிசை உதாரணங்களை பாருங்கள்,

இன்று ஞாயிறு என்பதால் காலை 6 மணி முதல் 7 மணி வரை சூரியன் ஓரை அடுத்து, 7 - 8 சுக்கிரன் ஓரை, 8 - 9 புதன், 9 - 10 சந்திரன், 10 -11 சனி, 11 - 12 வியாழன், 12 - 13 செவ்வாய், 13 - 14 சூரியன், 14 - 15 சுக்கிரன், 15 - 16 புதன், 16 - 17 சந்திரன், 17 - 18 சனி, 18 - 19 வியாழன், 19 - 20 செவ்வாய், 20 - 21 சூரியன், 21 - 22 சுக்கிரன், 22 - 23 புதன், 23 - 24 சந்திரன், 24 - 1 சனி, 1 - 2 வியாழன், 2 - 3 செவ்வாய், 3 - 4 சூரியன், 4 - 5 சுக்கிரன், 5 - 6 புதன், அடுத்த நாள் 6 - 7 என்பது சந்திரன் ஓரையில் துவங்கும் எனவே அன்று சந்திரநாள் (திங்கள்) - moon ,

இது போலவே ஒவ்வொரு நாளும் ஓரை வரிசை அடிப்படையிலேயே சுழற்சி முறையில் பெயரிடப்பட்டுள்ளது.

இது வாரம் எனும் நாட்களுக்கான கூட்டு கணிதம், இதே போல ஓரைகள் வரிசைக் கிரமமாக மாறிக்கொண்டே இருக்கும் அதன் அடிப்படையில் சூரிய உதயத்தின் போது முதலில் வரும் முழு ஓரையின் பெயரே அன்றைய கிழமையாகும்,

CamScanner

குறிப்பு:

தமிழ் வருடம் சித்திரை முதல் நாள் எந்த கிழமையில் பிறக்கிறதோ அதிலிருந்து கீழே குறிப்பிட்ட அத்தனையாவது கிழமையில் அந்த மாதம் பிறக்கும், உதாரணமாக ஒரு ஆண்டு சித்திரை மாதம் முதல் தேதி வியாழன் எனக் கொள்வோம், அப்படி என்றால் வியாழன் ஒன்று, வெள்ளி இரண்டு, சனி மூன்று, ஞாயிறு நான்கு, எனவே கீழுள்ள அட்டவனையின் படி வைகாசி முதல் தேதி ஞாயிறாகும்,

வைகாசி - 4வது நாள், ஆனி - 7வது நாள், ஆடி - 4வது நாள், ஆவணி - 7வது நாள், புரட்டாசி - 3வது நாள், ஐப்பசி - 6வது நாள், கார்த்திகை - அதே நாள், மார்கழி - 2வது நாள், தை - 4வது நாள், மாசி - 5வது நாள், பங்குனி - 7வது நாள், அடுத்த சித்திரை - 2வது நாள் இது எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் மாறாதது,

வார நாட்கள் 7 ஆகும்

நட்சத்திரம்

உலகின் வானியல் துறை பெரும்பாலும் நமக்கு அதிகமாக தெரியக் கூடிய பொருட்களான கிரகங்களை சார்ந்தே உள்ளது, அதனாலேயே சனி கிரகம் கடந்து ஜோதிடத் துறை செல்லவில்லை, தற்போது புளுட்டோ, நெப்டியூன் பயன்பாட்டில் உள்ளது, இருப்பினும் ஜோதிட துறையில் இடையில் புகுந்தவையே இவைகள், நாம் வெறும் கண்களால் (ஆங்கிலத்தில் **"நேக்டு ஐ விசன்"** எனக் கூறுவர்) பார்க்கக் கூடிய கிரகங்களுக்கு முன்னுரிமை, அதிலும் சூரியன் மற்றும் சந்திரன் முக்கியமானவை, அவ்வறாக இந்த இரு கிரகங்களின் நிலையை கொண்டு பல விசயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, அவற்றில் முதலாவதாக நட்சத்திரம்,

நாம் ஒரு பொருளின் நிலை அறிய அதை காணும் போது அருகே கிடைக்கும் அடையாளங்களை வைத்து புரிந்து கொள்கிறோம். இப்போது தனியாக அந்த அடையாளம் நமக்கு கிடைத்த மற்றொரு கருத்து.

அதாவது ஒன்றை அடையாளம் காண கண்டுபிடித்த ஒன்றை நாம் அது தவிர இன்னும் மற்ற பல விசயங்களை புரிந்து கொள்ள உபயோகிக்கலாம். அந்த அடையாளமும் அது எதற்காக அடையாளமாக உருவானதோ அதுவும் நமது நிலையை புரிந்து கொள்ள உதவும்.

பூமி பிரபஞ்சத்தில் எங்கு உள்ளது, எந்த பக்கம் திரும்பியுள்ளது என எதுவும் தெரியாத நிலையில், பூமியை பூமியுடனே பயணித்துக் கொண்டு பூமியையும் சுற்றி வரும் பொருள் சந்திரன். இது பூமியை சுற்றி ஒரு அரண் போல உள்ளதால் நாம் சந்திரன் உள்ள நிலையை அதற்கான அடையாளத்தினை கொண்டு அறிவதன் மூலம் நாம் எங்கு எந்த நிலையில் உள்ளோம் என புரிந்து கொள்கிறோம்.

பூமியில் இருந்து நமது பார்வையில் சந்திரன் வரும் போது அந்த சந்திரன் எங்கு உள்ளது என புரிந்து கொள்ள அதற்கு நேராக தொலைவில் உள்ள நட்சத்திரத்தை பயன்படுத்திக் கொள்கிறோம். நட்சத்திரம் என ஜோதிடத்தில் குறிக்கப்படுவது சந்திரனின் நிலையையே. ஜோதிடத்திற்குள் அடுத்த நகர்வு செல்லும் போது அதுவும் பிரிக்கப்பட்டுள்ளதை அறிந்து கொள்வீர்கள். தற்போது நட்சத்திரம் என்பது நமது பார்வையில் சந்திரனுக்கு நேராக தொலைவில் உள்ள நட்சத்திரத்தின் பெயரே. சந்திரன் நகர்ந்து செல்வதால் அடுத்து மற்றொரு பகுதிக்கு செல்லும் அப்போது அதற்கு நேராக தெரியும் நட்சத்திரம் அன்றைய நாளின் நட்சத்திரம்.

உதாரணத்திற்கு ஒரு மைதானத்தின் நடுவே தாங்கள் அமர்ந்து கொண்டு, உங்களை சுற்றி ஓடிவரும் ஒரு நபரை

CamScanner

பார்க்கின்றீர், மைதான ஓடுபாதையில் ஒவ்வொரு பத்து மீட்டருக்கும் ஒரு அடையாளம் உள்ளது எனக் கொண்டால், அந்த நபர் ஓட துவங்கியதும், மைதானத்தின் ஓடுபாதைக்கு வெளியே ஊண்றப்பட்ட முதல் பத்து மீட்டர் கல்லும் அவரும் ஒன்றாக தெரிவர், அதற்கடுத்து அவர் ஓடும்போது 20 மீட்டர் கல்லும் அவரும், இது போல மைதானம் எவ்வளவு பிரிவுடன் உள்ளதோ அத்தனை கல்லும் அவரும் ஒன்றாக உள்ளது போல் நடுவில் உள்ள உங்களுக்கு காட்சி அளிக்கும், அது போல நம்மை மையமாக கொண்டு சுற்றும் சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரமாக கடந்து செல்வது போல தோன்றும், அவ்வாறு வந்ததே நட்சத்திரம்,

சந்திரன் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரம் துவங்கி அதே இடத்தை அடைய 27.34 நாட்கள் ஆகிறது, அதனால் 27 என்ற முழுமையான பிரிவுகளாக்கி அந்த பிரிவுகளுக்கு நேராகத் தெரியும் நட்சத்திர பெயரால் அன்றைய நாளின் நட்சத்திரம் குறிக்கப்படுகிறது, பிரபஞ்சத்தில் மாறாத நட்சத்திர துவக்க புள்ளியான அசுவனி துவக்கப் பாகையை பூஜ்ஜியம் எனக் கொண்டால் அடுத்த அடுத்த 13.20 பாகையும் ஒவ்வொரு நட்சத்திர பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது, (கொசுறு நாட்களை நிரப்ப இருந்த அபிஜித் என்ற நட்சத்திரம் தற்போது வழக்கத்தில் இல்லை) நாம் இப்பொழுது பயன்படுத்தும் நாள் என்பது நட்சத்திரத்தின் மறுபெயர்தான், தினம் என்பது திதியின் மறுபெயர்,

மேலும் நாம் தமிழில் அழைக்கும் தமிழ் மாதங்களின் பெயரும் நட்சத்திர அடிப்படையில் வந்தது என முன்பே பார்த்தோம், மொத்தம், இருபத்து ஏழு நட்சத்திரங்கள் வழக்கத்தில் உள்ளது,

CamScanner

அவைகள்;

அசுவனி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்ராடம், திருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி, உத்ரட்டாதி, ரேவதி. இந்த 27 ம் நட்சத்திரத்தின் பெயர்கள்,

யோகம்

நட்சத்திரங்கள் 27 உள்ளது போல யோகமும் 27 உள்ளது அது எப்படி ஒரே மாதிரி எண்ணிக்கையுள்ள இரண்டு சாத்தியம், ஒன்றைப் போலவே உள்ள மற்றொன்று எதற்கு என நீங்கள் நினைக்கலாம், யோகம் என்றவுடன் நமக்கு சடாரென நினைவுக்கு வருவது நல்லது அதுவும் பெருத்த நல்லது அதாவது அதிஷ்டம் போன்ற எதோ ஒன்று என்றுதான், ஆனால் யோகம் என்ற வார்த்தை இணைவு என்பதை குறிக்கும் ஒரு சொல்,

கிராம புறங்களில் பாட்டிகள் வழக்கமாக கூறும் ஒரு சொல் யோகம், குமாரும் சரவணனும் இப்போது முன்ன மாதிரி இல்லை யோகமாகிட்டானுக எப்ப பாத்தாலும் சேந்தே சுத்துறானுக, என்பது இருவரும் நட்பாகி விட்டனர் என்பதை கூறுவதாகும், ஆனால் நாமோ யோகம் என்றவுடன் கூரையை பிய்த்துக் கொண்டு கொடுக்கப்படும் அதிர்ஷ்டமான ஒன்றாக கருதுகிறோம், முன்பு பார்த்தது போலவே சந்திரன் சுற்றி வருவதை நாம் பிரித்து புரிந்து கொண்டது போல், அதே பார்வையின் வழித்தடத்தில் உள்ள ராசி மண்டலத்தில் சூரியனும் மற்ற கிரகங்களும் சுற்றி வருகிறது என்பதால்,

சூரியன் சென்று கொண்டுள்ள பாகை மற்றும் சந்திரன் சென்று கொண்டுள்ள பாகையை கூட்டினால், (இருவரையும் சேர்த்து யோகமாக்கியது (நட்பாக்கியது) போல) வரும் பாகையின்

ஒவ்வொரு 13.20 பாகையும் ஒவ்வொரு யோகமாகும், 27 யோகங்களின் பட்டியல் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது,

விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபக்யம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், ஹர்ஷனம், வச்சிரம், ஸித்தி, வியதிபாதம், வரியான், பரீகம், சிவம், ஸித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், ப்ராம்மம், மாஹேந்திரம், வைதிருதி, இவைகள் 27 ம் யோகங்கள்,

திதி

நாம் ஏற்கெனவே பார்த்தது போல சந்திரனின் தின கதியை நாம் புரிந்து கொள்வது அதன் ஒளியை வைத்துதான், அந்த ஒளி சந்திரனின் சுய ஒளியல்ல, சூரியனில் இருந்து வரும் ஒளி பிரதிபலிப்பை பூமியில் இருந்து பார்ப்பதால் மாறிக் கொண்டே இருப்பது போலத் தோன்றும் அவ்வாறு தோன்றும் ஒளி மாறுபாடு ஒரு குறிப்பிட்ட மாற்றங்களுக்குள் இருப்பதால், அது வகைபடுத்தப்பட்டது, அதன்படி சூரியனில் இருந்து ஒவ்வொரு 12 பாகைக்கும் ஒவ்வொரு திதியாக மொத்தம் 30 திதிகளாக பிரிக்கப்பட்டது, சந்திரன் சூரியனுடன் சேர்ந்துள்ளது அம்மாவாசை அன்று முழுவதும் ஒளி இழந்த சந்திரன் ஒவ்வொரு திதியாக வெளிச்சம் அடைந்து கொண்டே அதாவது வளர்ந்து கொண்டே வருவது வளர்பிறை என்றும் அதாவது சுக்லபட்சம், சுக்லம் என்றால் பிரகாசம் எனப்பொருள் பட்சம் என்பது இயக்கத்தின் இடையே உள்ள ஒரு நிலை, அதேபோல் பௌர்ணமியில் இருந்து ஒளி குறைந்து கொண்டே போவது தேய்பிறை என்றும் அதாவது கிருஷ்ண பட்சம் என்றும் பெயர்,

சந்திரனின் பாகையில் இருந்து சூரியனின் பாகையை கழிக்க வரும் பாகையில் 12 பாகைக்கு ஒன்றாக ஒவ்வொரு திதியும் வரும்.

CamScanner

மொத்தம் 30 கதியில் 15 கதி வளர்வது, 15 தேய்வது என்பதால் அதன் நிலைகளை ஒன்று, இரண்டு, மூன்று என 14 வரை வடமொழியில் பெயர் வைத்துள்ளதால் வளர்பிறை மற்றும் தேய்பிறை ஒரே எண்ணிக்கை கொண்ட கதிகளானன திதிகளின் பெயர்கள் ஒன்றாகவே இருக்கும் 30 திதிகளின் பெயர்கள்

அமாவாசை, இதற்கு பிறகு நிலா வளரும் எனவே அடுத்து வருவது அனைத்தும் வளர்பிறை திதிகள், இதை சுக்கிலபட்ஷம் என்பார்கள், பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி, சதுர்தசி,

பௌர்ணமி, இதற்கு பிறகு நிலா தேயும் எனவே அடுத்து வருவது அனைத்தும் தேய்பிறை திதிகள், இதை கிருஷ்ணபட்ஷம் என்பார்கள், பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி, சதுர்தசி மீண்டும் அம்மாவசை வரும் இது சுழற்சியாக நடக்கும்,

கரணம்

கரணம் என்ற சொல்லுக்கான சரியான பொருள் பாகம், பிரிவு, பழங்காலத்து நூல்களில் முக்கிய அத்யாயத்திற்கு கீழே வரும் உள் பிரிவுகளுக்கு பிரகரணம் என்றே போடுவர், ஆன்மீகத்தில் கரணம், அந்தகரணம் என்பது ஒரு புலனின் உள் செயலூக்கிகளை கூறுவதற்காக பயன்படுதியுள்ளனர், எனவே வார்த்தையின் பொருளையும் கரணம் என்ற ஒன்று அமைக்கபட்ட கணித அடிப்படையிலும் பார்க்கும் போது கரணம் என்பது உட்பிரிவு என்பதை காட்டுகிறது, எனவே கரணம் என்பது கூடுமான வரை பிரித்த பிரிவு என்பதை கூறுவதற்காகவே பயன்படுத்தியுள்ளனர், திதி என்பது சூரிய சந்திர இடைவெளியை

ஒவ்வொரு 12 பாகைகளாக பிரிப்பது, அதில் பாதி என்றால் அந்த இடைவெளியை 6 பாகைகளாக பிரிப்பது,

கரணம் என்பது மொத்தமே 11 அதிலும் 4 கரணம் அம்மாவாசை மற்றும் அதற்கு அடுத்து அருகே உள்ள சிறிது தூரம் வரை நான்கு நிலைகள் மட்டும் கரணங்கள் தனித்தனியாகவும் மற்ற 56 கரணங்களும் ஏழு பிரிவுகளாக, ஒவ்வொரு பிரிவுகளுக்கும் எட்டு கரணங்கள் இருக்கும்

சந்திரனின் பாகையில் இருந்து சூரியனின் பாகையை கழிக்க வரும் பாகையில் 6 பாகைக்கு ஒன்றாக ஒவ்வொரு கரணமும் வரும்,

பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, வணிசை, பத்திரை, சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிம்ஸ்துக்னம் இவைகள் 11 ம் கரணங்கள்,

குறிப்பு: 19 வருடங்களுக்கு ஒரு முறை திதி, நட்சத்திரம், யோகம், கரணம் மீண்டும் அதே நாளில் (தேதியில்) வரும்,

அயனம்


பூமியானது ஒருபுறமாக குறிப்பாக கிழக்கு நோக்கி சாய்ந்துள்ளது என்பதால் அது சூரியனை சுற்றி வரும் போது சூரியனில் இருந்து நிலையானதாக இல்லாமல் தோன்றும்,


உதாரணமாக ஒரு காகிதத்தில் நடுவில் வட்டமிட்டு அதை சூரியன் எனக் கொண்டால், அந்த சூரியனுக்கு இடப்புறமாக பூமியை வரைந்தால் அது சூரியனுக்கு எதிர் புறமாக சாய்ந்திருக்கும், வலப்புறம் பூமியை வரைந்தால் இப்பொழுது சூரியனை நோக்கி சாய்ந்திருக்கும்,

CamScanner

பூமியை மேல், கீழ் என பிரித்து கோடு போட்டால் அந்த கோடு பூமத்திய ரேகையாகும் அதுவும் கிடைமட்டத்தில் இருந்து 23.5 பாகை சாய்ந்திருக்கும், சூரியனின் மையப் புள்ளியில் இருந்து பூமியின் மையப் புள்ளி வரை ஒரு கோடு வரைந்தால், இடப்புறமாக வரைந்த பூமியின் பூமத்தியரேகைக்கு கீழ் புறத்தில் அந்த கோடு செல்லும் இது மகரரேகை, வலப்புறம் வரைந்த பூமியின் பூமத்தியரேகைக்கு மேல் புறத்தில் செல்லும் இது கடக ரேகை,

இவ்வாறு பூமி சூரியனை இடது புறத்தில் இருந்து வலது புறமாக சுற்றி கொண்டுள்ளதாக கற்பனை செய்யுங்கள், சூரியனின் மையப் புள்ளிக்கோடு பூமியின் மகரரேகையில் இருந்து மெதுவாக மேலேறி கடகரேகையை அடைந்து மீண்டும் கீழிறங்கி மகரரேகையைத் தொடும் இது தொடர்ச்சியாக நடந்த வண்ணம் உள்ளது,





ஆகையால் பூமியில் இருந்து பார்க்கும் போது சூரியன் கிழக்கில் உதித்தாலும் சரியாக கிழக்கில் நடுவே உதிக்காமல் வடகிழக்கு துவங்கி, தென்கிழக்கு வரை பயணப்பட்டு மீண்டும் வடகிழக்கை அடையும், 6 மாதங்கள் வடக்கு நோக்கியும் பின்பு 6 மாதம் கிழக்கு நோக்கியும் சூரியனின் பாதை சலனப்பட்டுக் கொண்டே

CamScanner

இருக்கும் இதன் பெயர் அயனம் ஆகும், இதை வைத்தே பூமி ஒரு புறமாக சாய்ந்துள்ளது என்பது உறுதிப் படுத்தப்பட்டது,

சூரியன் மகரம் முதல் மிதுனம் வரை செல்லும் பயணம் உத்தராயனம் என்றும், கடகம் முதல் தனுசு வரை செல்லும் பயணம் தட்சினாயனம் என்றும் பெயர், உத்தராயனம் என்பது சூரியப் பாதை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்வது, தட்சினாயனம் என்பது சூரியப் பாதை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்வது,

இருது

பூமியின் மீது சூரிய கதிர்கள் வருடம் முழுவதும் ஒரே போல விழுவதில்லை ஏனெனில் பூமியின் சாய்வால் அயனம் உருவாவதை நாம் பார்த்தோம், அதனால் சூரிய கதிர்களின் கோணத்தில் மாறுபாடுகள் ஏற்படுவதாலும் பூமி சூரியனை சுற்றி வரும் போது சில காலங்கள் அருகிலும் சில காலங்கள் தொலைவிலும் என நீள்வட்டப்பாதையில் சுற்றுவதாலும் பருவங்களில் மாற்றம் ஏற்படுகிறது, அவை குறிப்பாக 6 நிலை மாற்றங்களை அடைகிறது, பண்டைய மக்கள் பருவங்களை வைத்தே காலங்களை புரிந்து கொண்டனர்,

அவை:

1.	வசந்த இருது	- இளவேனில்	- சித்திரை, வைகாசி
2.	கிரிசும் இருது	- முதுவேனில்	- ஆனி, ஆடி
3.	வருச இருது	- கார் காலம்	- ஆவணி, புரட்டாசி
4.	சர இருது	- கூதிர் காலம்	- அற்பசி, கார்த்திகை
5.	ஹேமந்த இருது	- முன் பனி	- மார்கழி, தை
6.	சசி இருது	- பின்பனி	- மாசி, பல்குனி

CamScanner

ஜோதி

ஜோதிடம் என்றால் ஜோதி பற்றியது என்பது எடுத்தவுடன் அனைவரும் கூறும் ஒன்றுதான், ஆனால் ஜோதி என்றால் என்ன என்றவுடன் நமக்கு நமது நம்பிக்கை மெதுவாக குறைய துவங்கும் ஏனெனில் ஜோதி என்பது என்ன என்று நம்மில் பலருக்கு தெரியாது, பிறகு எவ்வாறு அது பற்றி பேச முடியும்.

அப்படியெனில் நாம் ஜோதி பற்றி தெரிந்து கொண்டு ஜோதிடத்திற்குள் செல்வோம், நாம் இரண்டு பொருளை காண்கிறோம் ஆனால் வெவ்வேறு நிறத்தில், அந்த பொருளின் மீது படும் வெளிச்சம் ஒரே நிறமாகினும் இப்போது இரு நிறத்தில் தெரிகிறது காரணம்,

ஒளி என்பது தனது பயணத்தின் போது தெரியாது, அதன் பயணம் எதாவது பொருளால் தடுக்கப்பட்டால் அப்பொருளின் மீது ஏற்படுத்தும் வினையால் அப்பொருள் அதற்கு எதிர்வினை புரிவதை நாம் நிறங்களாக புரிந்து கொள்கிறோம், சரி அப்படியென்றால் அது ஒளியின் செயல்பாடுதானே ஆனால் நாம் பேசத் துவங்கியது ஜோதி பற்றியல்லவா, ஒளி வேறு ஜோதி வேறா எனில் ஆம் வேறு, ஒளி என்பது ஜோதியின் மிகச்சிறிய கூறு மட்டுமே,

முதலில் ஜோதி என்றால் என்ன என தெரிந்து கொள்வது ஜோதிடம் என்றால் என்ன என நாம் புரிந்து கொள்ள வழிவகுக்கும், பிரபஞ்சம் என்பது ஒருவித கூட்டு கலவை என்று கூறுவதை விட, ஒரே வஸ்துவின் விரிவாக்கம் என்றே கூறுவது பொருத்தமாக இருக்கும், ஏன் எனில் இங்கு உள்ள அனைத்து ஒன்றிலிருந்தே உருவானவை, நான் ஏதோ இறை பற்றிய விசயம் பேசுவதாக நினைக்க வேண்டாம், இங்குள்ள பொருட்கள், உயிருள்ளதோ, உயிரற்றதோ அனைத்தும் உருவம் பெறும் முன்பாக அவை எங்கு இருந்தன, என்றால் பதில் நமக்கு

தெரியாது. இப்பிரபஞ்சம் என்பது அறிவியலில் அறியப்பட்ட பிரபஞ்சம் என்றே அழைக்கப்படுகிறது காரணம் உண்மையான பிரபஞ்சம் எவ்வளவு தூரம் விரிந்துள்ளது என யாருக்கும் தெரியாது.

பொருட்கள் இருளில் இருந்து படிப்படியாக தோன்றினவைதான் ஆகாசம் என்பது ஜோதி நிலையில் இருந்து இருளாக மாறி பின்பு நாதமாக (ஒலி) மாறி, பின்பு அயனிகளாக மாறுகிறது. எலெக்ட்ரான்களின் விளைவுகளால், அது படிப்படியாக மூலக்கூறுகளாக மாறி உருவமாக மாறுகிறது. இதைத்தான் மதங்கள் உலகம் ஓங்கார நாதத்தில் இருந்து உருவானதாக கூறுகிறது.

ஆனால் நாம் ஜோதி என்பதினை புரிந்து கொள்ள இவ்வளவு சுற்று சுற்ற வேண்டுமா எனில் வேண்டாம். இன்னும் எளிதாக புரிந்து கொள்ளலாம்.

சுயமாக ஒளிரும் தன்மை கொண்ட பொருட்கள் பிரபஞ்சத்தில் பல இருப்பினும் நாம் உணர்வது சூரியன் மட்டுமே. ஆனால் ஆயிரம் கோடி சூரியனை போல ஒன்று உள்ளது என்று தமிழ் ஞானிகளின் நூல்கள் கூறுகின்றன. அதன் பெயர் "ரூ" நாம் காணும் சூரியன் பெயர் "ரா" அதனாலேயே ருத்ரா அதாவது பெரும் சூரியனின் மகன் என சூரியனை அழைக்கிறோம்.

நாம் காணும் சூரியனில் இருந்து வெளிப்படும் வெளிச்சம் எனப்படும் ஒளி என்பது நாம் உணர்வது 36 சதவீதம் மட்டுமே.

முதலில் ஒளி என்பது என்ன என்பது பற்றி பார்ப்போம். ஏதோ ஒரு காந்த அலை எங்கிருந்தோ உருவாகி பரவுகிறது. அது தான் பரவும் இடங்களில் உள்ள அனைத்து பொருட்களின் மேற்பரப்பின் மீது உள்ள மூலக்கூறுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதால் அப்பொருளின் மேற்பரப்பில் உள்ள எதிர்வினை காரணமாக, அப்பொருளும் ஒரு வித காந்த அலைவரிசயை

உண்டு பண்ணுகிறது. அது தொடர் கதையாக இவ்வாறு அடுத்தடுத்து தொடர்கிறது. அந்த அலைவரிசை நமது விழி திரையில் ஒருவித அதிர்வை ஏற்படுத்துவதே நாம் ஒளியாக உணர்கிறோம்.

அந்த அதிர்வலைகளும் ஒரு எல்லைக்குள்ளேயே நமது கண் உணரும் தன்மை உடையது. வௌவால்கள் எழுப்பும் ஒலி நமது காதுகளுக்கு கேட்காது. சூரியன் வெடித்து சிதறி எரிந்து கொண்டுள்ள சத்தமும் நமது காதுகளுக்கு கேட்காது அவ்வாறு கேட்டால் நமது காதுகள் கிழிந்து போகும் மற்ற சப்தங்களை கேட்க முடியாது. அது போலவே பிரபஞ்சம் குறிப்பாக சூரியன் உமிழும் மின்காந்த அதிர்வலைகளில் அகச்சிவப்பு கதிர்கள் துவங்கி புற உதா கதிர்கள் வரை உள்ளவைகளுக்கு மட்டுமே நமது கண்கள் எதிர்வினை புரியும் அதற்கு மேலோ அல்லது கீழோ நமது கண்களால் அறிந்து கொள்ள இயலாது.

அவ்வாறு சூரியனில் இருந்து வெளியேற்றப்படும் காந்த அலைகள் எக்ஸ்ரே, லேசர், ரேடியோ அலைவரிசை, காமா, நுண் அதிர்வலைகள் என இன்னும் பல உண்டு. அவற்றில் 100ல் 15 பங்கு மட்டுமே ஒளி. அதிலும் நமது கண்களால் பார்க்க முடியும் எல்லைக்குள் உள்ளவற்றிலும் நாம் பார்க்கும் அளவுக்கு உள்ளது 36 சதம் மட்டுமே.

ஆனால் நாமோ ஒளியை ஜோதி என கூறி கொண்டு உள்ளோம். அவ்வாறு பிரபஞ்சத்தில் பரவிக்கிடக்கும் அனைத்து விதமான மின் காந்த அதிர்வலைகளின் ஒட்டு மொத்தத்தின் பெயரே ஜோதி.

இவ்வாறு ஒளி, இருள், பொருள், நாதம் என பன்முகத்துடன் உள்ள அதிர்வலைகளின் கூட்டு பெயரே ஜோதி. அவ்வறான அதிர்வலைகள் நமது வாழ்வை எவ்வாறு வழி நடத்துகிறது என்பது பற்றி அறிவதே ஜோதிடம்.

CamScanner

இது வரை நாம பார்த்த விபரங்கள் பொதுவான அனைத்து வகையான ஜோதிடத்தின் அடிப்படையானது ஆகும் அவைகள் பற்றி எதுவும் தெரியாமலும் பலன்கள் கூறலாம், ஜோதிடம் மூன்று பிரிவுகளை உடையது, கிரகநிலைகளை கணிதம் செய்வது ஒன்று, இரண்டாவது அதை வைத்து பலன் கூறுவது, மூன்றாவது, பொதுவாக சமூகம் மற்றும் அதன் வாழ்முறை பற்றி கூறுவது, நாம் இதில் இரண்டாவது பகுதியில் கவனம் செலுத்த வேண்டும் ஏனெனில் ஒரு தனிமனிதனின் வாழ்க்கை பற்றி புரிந்து கொள்வதே ஜோதிடத்தின் முக்கியமான பகுதியாகும், இனி அதற்கான தகவல்களை காணலாம்,

முன் குறிப்பு

தெரிந்து இருக்க வேண்டியவைகள்

பொதுவாக ஜோதிடம் என்பது மூன்று பெரும் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டது

அதில் முதல் பகுதி கிரகங்களின் நிலைகளை கண்டறிவதும் அதன் அடிப்படையில் கணிதங்கள் செய்து பல விதமான குறிப்புகளை உருவாக்குவதும்தான் இந்த பிரிவு பஞ்சாங்கம் கணிப்பவர்களால் பயன்படுத்தப்படுகிறது இதில் கிடைத்த தகவல்களைக் கொண்டு ஒரு பிறந்த தேதி, நேரம், ஊர் அடிப்படையில் ஜாதகம் எழுதுவதும் ஒரு பிரிவுதான் இருப்பினும் பஞ்சாங்கம் கணிப்பது போல அதிக கடினமானது கிடையாது, பஞ்சாங்கத்தில் உள்ள குறிப்புகளை அப்படியே எழுதுவதுதான் ஜாதக கணிதம், எப்படி இருந்தாலும் தற்காலத்தில் ஜோதிடர்கள் கூட கம்ப்யூட்டரின் உதவியுடன்தான் ஜாதகத்தையே எழுதித் தருகின்றனர்,

CamScanner

இந்த நூலிலும் ஜாதகம் எழுதும் குறிப்புகள் இல்லை இந்த நூலானது பலன் கூறுவதில்தான் கவனம் செலுத்துகிறது. எனவே தற்போது இணையதளத்தில் பலவிதமான இலவச மென் பொருட்கள் வந்துவிட்டது அதில் ஒன்றை பயன்படுத்திக் கொள்ளுங்கள். யார் ஜாதகம் கொடுத்தாலும் உங்களுக்கு பிடித்த மென்பொருளில் அந்த குறிப்புகளை வைத்து ஜாதகத்தை கணித்துக் கொண்டு பலன் சொல்ல வேண்டும்.

குறிப்பு: மேலும் கிரக நிலைகள் கணிப்பது, பஞ்சாங்கம் பற்றி தெரிந்து கொள்வது, சில நூறு ஆண்டுகளுக்கு கிரகநிலையை கணிக்க கற்றுக் கொள்வது, ஜோதிடம் பற்றிய அறிவியல் மற்றும் கணித ரீதியான விளக்கங்கள் குறித்த பயிற்சி மற்றும் நூல்கள் போன்றவைகளுக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் அருகில் அய்யம்பாளையத்தில் வசிக்கும் ஜோதிடர், உயர்திரு **ரா.அருள்வேல்** பஞ்சாங்க கணிதர் அவர்களை தொடர்பு கொள்ளவும், அவரது அலைபேசி எண் 9842841497, அவரது விலாசம் - ஆன்மிகன் ஜோதிட குழுமம், செட்டியார் தெரு, அய்யம்பாளையம்-624204, திண்டுக்கல் மாவட்டம்,

அடிப்படையாக பலன் கூறுவதற்கு கிரக பெயர்கள் மற்றும் ராசி பெயர்கள், கிரக காரகங்கள் பற்றிய அதிகமான புரிதல் வேண்டும், மேலும் சில தகவல்களை தெரிந்து வைத்திருப்பது அவசியம், அதேபோல் மூட்டை மூட்டையாக விதிகளை கொடுத்து அதை மனப்பாடம் செய்யச் சொல்வதில் எனக்கு உடன்பாடு கிடையாது,

நாம் இது நாள் வரை ஜோதிடம் என்ற உடனேயே ராசி பலன்கள் பற்றி பேசுவோம், அதையும் கடந்து லக்ன பலன் பற்றி பேசுவோம், பிறந்த மாதப் பலன், நாளுக்கான பலன், என பொதுவாக பேசினாலும் முறையான ஜோதிடம் என்றால் லக்னம் துவங்கி தனு பாவகம், தன பாவகம், சகோதர பாவகம், மாதுரு பாவகம், புத்திர பாவகம், சத்ரு பாவகம், களத்திர பாவகம், ஆயுள்

பாவகம், பிதுர் பாவகம், ஜீவன பாவகம், லாப பாவகம், விரய பாவகம், என்ற 12 பாவகங்களின் பிரிவுகள், அந்த பாவக அதிபதிகள், அந்த அதிபதி அமர்ந்த பாவகம், அந்த அதிபதி பெற்ற சாரங்கள், அந்த சாரநாதனின் ஆதிபத்யம், அவர் அமர்ந்த பாவம், அதன் வலிமை, எனவும், ஒவ்வொரு கிரகங்களுக்கும் இயற்கை குணங்கள் அவை அமர்ந்த, பார்த்த பாவங்கள், பகை, நட்பு, சமம், சூன்யம், தியாச்சியம், அங்கிசம், திருஷ்டி, யோகம், வர்க்கபலம், என பலவகையான பலங்களை சீர்தூக்கி பார்த்து இருப்பு தசை, நடப்பு தசை, புத்தி, அந்தரம், சூட்சுமம், என பல்வேறு கூட்டு கணிதங்களை கொண்டு பலன் உரைக்கப்படுகிறது.

நமது முறையானது பொதுவாக ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை இது போன்ற புரிந்து கொள்ள சிக்கலான விசயங்களில் இருந்து வெளி வந்து, மிகவும் குறைக்கபட்ட விதிகளை கொண்டு பலன் கூறுமளவு வடிவமைக்கபட்டுள்ளது, விதிகள் குறைவு என்றவுடன் பலன்களும் சரியாக வராதோ என்ற குழப்பம் வேண்டாம் முன்புள்ள முறைகளில் அதை புரிந்து கணிதம் செய்து பலன் எடுப்பதில் தவறுகள் வரலாம் ஏனெனில் விதிகள் ஏராளம், நமக்கு தெரிந்த சில விதிகளை கவனித்து பலன் கூறியிருப்போம், ஆனால் நமக்கும் தெரியாமல் அதனுடய துணை விதிகளை மறந்தோ அல்லது தெரியாமலோ கூட இருந்திருப்போம், எனவே அதிக விதிகள் அதிக பிழைகளுக்கான மிக முக்கிய காரணம்.

நமது ராஜநாடி முறையில் விதிகள் மனனம் செய்யாமல் அதன் அடிப்படை கருத்துக்களையே கூறிவிடுவதால் விதிகளை நீங்களே உள் மனதில் வடிவமைத்துக் கொள்ளலாம், எனவே பிழைகளே வர வாய்ப்பில்லை,

ஜோதிட துறை கிரகங்கள், இராசி, பாவகம் என்ற இம்மூன்றின் அடிப்படையில் ஒருவரது வாழ்க்கையை கணிக்கிறது, இராசி என்பது மாறா பண்பு கொண்டது மற்ற

கிரகங்களும், பாவகங்களும் ஒவ்வொருவருக்கும் மாறும் தன்மை கொண்டது ஆகையால் ஒன்றை கொண்டு மற்றொன்றை புரிந்து கொள்கிறோம்,

- கிரகங்களை வைத்து பாவக வலிமையை புரிந்து கொள்வது.
- கிரகங்களை வைத்து மற்றொரு கிரக வலிமையை புரிந்து கொள்வது,
- பாவகத்தை வைத்து பாவ வலிமையை புரிந்து கொள்வது.
- பாவகத்தை வைத்து கிரக வலிமையை புரிந்து கொள்வது.
- இராசிகளை வைத்து கிரக மற்றும் பாவக வலிமையை புரிந்து கொள்வது

என்ற அடிப்படையில் பலன்கள் கூறப்படுகிறது, இதில் இராசிகளை வைத்து கிரக மற்றும் பாவக வலிமையை புரிந்து கொள்வது, என்ற ஒரு விதி மட்டும் பொதுவானது, மற்றவற்றில் இருந்து ஏதாவது ஒரு விதியை மட்டும் எடுத்து, ஒவ்வொரு ஜோதிட முறைகளிலும் பயன்படுத்தி விதிகள் அமைக்கப்பட்டுள்ளன, பெரும்பாலும் இந்த அடிப்படைகளை தாண்டி விதிகளே கிடையாது,

நாமும் இவற்றில் இருந்து சில அடிப்படைகளை எடுத்தே பலன் கூறப் போகிறோம்,

- கிரகங்களை வைத்து மற்றொரு கிரக வலிமையை புரிந்து கொள்வது,
- இராசிகளை வைத்து கிரக வலிமையை புரிந்து கொள்வது.

இந்த இரு விதிகளை மட்டும் வைத்து திருப்தியாக பலன் கூற முடியும்,

CamScanner

பொதுவாக அனைத்து ஜோதிட முறைகளின் அடிப்படையும் கால புருச தத்துவத்தையே மையமாக கொண்டு அமைக்கப் பட்டிருக்கும், அதன்படி மேசமென்பது முதல் வீடு அதாவது லக்னம் என்ற பன்புகளை கூறும் வீடு, அடுத்து படிப்படியாக ஒவ்வொரு வீடுகளும் அடுத்த அடுத்த பாவகங்களையும் அதன் தன்மைகளையும் குறிக்கும்,

பாரம்பரிய ஜோதிடத்தில் காலபுருச தத்துவத்தில் முதல் விடான மேசத்தின் பண்புகளை லக்னம் கொண்டிருக்கும் என்பதால் யாருடைய ஜாதகமாக இருந்தாலும் லக்னம் என்பது கால புருச தத்துவத்தின் முதல் வீடு கூறும் பண்புகளை கூறுவதாக புரிந்து கொள்கிறோம், ஆனால் நாமோ அதே கால புருச தத்துவத்தின் முதல் விடான மேசம் கூறும் பண்புகளை அதன் விட்டு அதிபதியான செவ்வாய் செய்வதாக புரிந்து கொள்கிறோம், அனைத்தும் ஒன்றே, ஏன் எனில் ஒருவீடு கூறும் பண்புகளும் அந்த விட்டின் அதிபதியும் பண்புகளும் ஒத்துப்போவது போலவே காலப்புருச தத்துவம் அமைக்கபட்டுள்ளது,

- லக்னம்- உருவம் ,தோற்றம், உடல், - **செவ்வாய்,**
- இரண்டாம் பாவகம்- தனம் ,குடும்பம், வாக்கு சாதுர்யம் - **சுக்கிரன்,**
- மூன்றாம் பாவகம்- தொடர்புகள், கல்வி - **புதன்,**
- நான்காம் பாவகம் - தாய், மனம், வீடு, வாகனம் - **சந்திரன்,**
- ஐந்தாம் பாவகம்- பூர்வம், உருவாக்கம், நுணுக்கம் - **சூரியன்,**
- ஆறாம் பாவகம்- வழக்குக்கான சிந்தனை, கெட்ட தொடர்புகள்- **புதன்,**
- ஏழாம் பாவகம்- களத்திரம், சமூகம், செல்வம்- **சுக்கிரன்,**
- எட்டாம் பாவகம்- உடல் ஆரோக்கியம், வம்பு, திடீர் செயல்கள்- **செவ்வாய்,**
- ஒன்பதாம் பாவகம்- தர்மம், பிறப்புக்கான நோக்கம்- **குரு,**
- பத்தாம் பாவகம்- கர்மம், ஜீவனம், தொழில்- **சனி,**
- பதினொன்றாம் பாவகம்- தொழிலால் கிடைக்கும் லாபங்கள்- **சனி,**
- பன்னிரண்டாம் பாவகம்- ஜாதகனின் நோக்கம் வெற்றி- **குரு,**

ஆக நாம் ஒன்றை வெவ்வேறு கோணத்தில் புரிந்து கொள்கிறோம் ஆனால் எளிமையாக, இனி நம்மால்

ஒருபாவகத்தை தேடாமல் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய குணங்களை நேரடியாக கிரகத்தின் மூலமாகவே தெரிந்து கொள்ளலாம், எனவே நாம் இனி பலன் காணப்போகும் ஜாதகத்தில், ஒவ்வொரு கிரகங்களும் உள்ள விட்டின் பாகையின் அடிப்படையில் பலன் அறிந்து கொள்வோம், பாவகம், லக்னம் என்பதற்கு பதிலாக நாம் நேரடியாக கிரகங்களை கொண்டு பலனறிவோம்,

ஒவ்வொரு குறிபிட்ட பலன்களையும் ஒவ்வொரு பாவகங்கள் வழங்குவது போல, ஒவ்வொரு கிரகங்களும் ஒவ்வொரு பலன்களை அறிய உதவும்

அவை:

1. சூரியன் - ஜாதகரின் தந்தை, மகன், ஆளுமை திறன்,
2. சந்திரன் - ஜாதகரின் தாய், மனம்,
3. புதன் - ஜாதகரின் கல்வி, மகள், கேட்கும் திறன், பேசும் திறன்,
4. சுக்கிரன் - ஜாதகரின் பெண் தோழிகள், மனைவி, செல்வம்,
5. செவ்வாய் - ஜாதகரின் ஆண் தோழர்கள், கணவன், உடல் நலம், கடனில்லா வாழ்க்கை,
6. குரு - ஜாதகர், அவரின் குணங்கள், ஜாதகர் தனக்குள் தன்னை பற்றி ஒரு முடிவு அல்லது அனுபவத்தை வைத்திருப்பார், அது பெருமையானதாகவோ அல்லது அருவருப்பானதோ அனைத்து முடிவுகளும் கூடி அவர் யார் என அவருக்கு மட்டுமே தெரிந்த அவரது சுயம் வியாழன்,
7. சனி - ஜாதகரின் தொழில், லாபம்,

ராகு மற்றும் கேதுகளுக்கு தனியாக பண்புகள் இருந்தாலும் பொதுவாக நாம் பயன்படுத்துவதில்லை, மேலும் கிரகங்களுக்கு

CamScanner

கூறியுள்ள பண்புகள் அதிகமான பயன்பாட்டிற்கானது, மேலும் அதிகமான கிரக மற்றும் இராசியின் பண்புகள் புத்தகத்தில் கொடுக்கப் பட்டுள்ளது, இனி ஜாதகத்தில் பலனறிய பாவகத்தை காண வேண்டியதில்லை, நேராக கிரகத்தின் உதவியோடு காணலாம்,

உதாரணம்:

ஒரு ஜாதகரின் தொழில் அல்லது பணி குறித்து காண சனி அமர்ந்துள்ள இடத்தை வைத்து புரிந்து கொள்ளலாம், அது எவ்வாறு என அதற்கான பகுதியில் விளக்கப்பட்டுள்ளது,

நமது முறையில் ஒரு கிரகம் அமர்ந்த இடம், அந்த கிரகத்துடன் இணைவு பெற்ற கிரகங்களின் குணம் போன்றவற்றை வைத்து அந்த முதன்மை கிரகம் ஜாதகருக்கு வழங்கும் நன்மை, தீமைகளை தீர்மானிக்கிறோம், இணைவு என்றால் ஒரே ராசிக்குள் இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை, நமது முறைப்படி ஒரு ராசியில் இருந்து 1, 5, 7, 9 ஆம் ராசிகளும் ஒரே தன்மையுள்ள ராசிகளே,

மேலும் அந்த 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் இருந்து ஒவ்வொரு ராசிக்கும் அதே போல 1, 5, 7, 9 ஆம் ராசிகள் எது என பார்த்தால் நாம் முதலில் பார்த்த ராசியில் இருந்து 3 மற்றும் 11 ஆம் ராசிகள் வரும், எனவே இந்த 3, 11 ஆம் ராசிகள் பாதி அளவு இணைவு கிடைக்கும்,

நட்சத்திர ஜோதிடத்தில் நட்சத்திரங்களை விட அதன் அதிபதிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும்

உதாரணமாக, ஒரு கிரகமோ அல்லது பாவகமோ அசுவனி, மகம், மூலம் என இந்த மூன்று நட்சத்திர சாரம் பெற்றிருந்தாலும் அந்த கிரகத்தையோ அல்லது பாவகத்தையோ கேதுவின் சாரம் என்றே பொதுவாக கூறுகிறோம், இதில் இந்த

CamScanner

மூன்று நட்சத்திர பாதங்களும், 1, 5, 9, வீடுகளில் குறிப்பிட்ட பாகையில் இருக்கும், நாமும் அதே அடிப்படையையே பயன்படுத்தி கொள்கிறோம், மேலும் அனைத்து கிரகங்களும் பிரபஞ்ச தட்டில் சரியான சம தளத்தில் சுழலவில்லை, ஒவ்வொரு கிரகமும் மேலும், கீழுமாக தனக்கென தனிப் பாதை அமைத்து சுற்றி வருகிறது பக்கவாட்டில் பார்க்கும் போது ஒன்று மேலும், மற்றவை கீழுமாக இருப்பதால் ஒளி அலைகள் பூமியையும் கடந்து எதிர் பக்கம் அதாவது 7 ஆம் ராசியிலும் பட்டு பிரதிபலிக்கும், எனவே 1, 5, 7, 9, மற்றும் 3, 11 என்ற ராசிகளும் சமமானவையே, ஆகவே ஒரு கிரகம் அமர்ந்துள்ள ராசியில் இருந்து 1, 5, 7, 9, மற்றும் 3, 11(50%) ராசிகளும் நமது முறையில் இணைவு உள்ள ராசிகள்,

இராசிகள்

இராசி என்பது கூட்டம் என்ற பொருள் பதத்தை கொண்டது, நாம் பூமியில் இருந்து பிரபஞ்சத்தை காணும் போது பிரபஞ்சத்தில் சுற்றி வரும் பொருட்களை அதன் இடங்களை குறிப்பிட்டு சொல்ல குறிப்பிட்ட எல்லைகளை உடைய பகுதிகள் தேவை, ஏனெனில் பிரபஞ்சம் என்பது தொடக்கம் மற்றும் முடிவுகளை அறிய முடியாத வண்ணம் பரந்து விரிந்து இருளாக காட்சியளிப்பதால் அங்குள்ள பொருட்களை நமக்கு மிக நெருக்கத்தில் உள்ள நட்சத்திரமான சூரியனில் இருந்து வெளிப்படும் ஒளியின் பிரதிபலிப்பை கொண்டே தெரிந்து கொள்கிறோம்,

அவ்வாறு தெரிந்து கொண்ட பொருட்கள் எங்கு உள்ளன, என்பதை கூற பிரிவுகள் தேவை என்பதால் மொத்த பிரபஞ்ச பகுதியையும் கூறிட்டு எல்லைகளை பிரித்து வைத்துள்ளோம்,

இந்த ராசி மண்டலமானது பூமியில் இருந்து காணும் போது கிழக்கு, உச்சி, மேற்கு, பூமிக்கு பின் புறம் வழியாக

CamScanner

வளையம் போல் காட்சி தருகிறது. இதை இன்னும் புரியும் படி கூறினால் சூரியன் செல்லும் பாதையை மனதில் வைத்துக் கொள்ளுங்கள், சூரியனானது கிழக்கில் உதயமாகி உச்சியை நோக்கி பயணித்து, பிறகு மேற்கில் மறைகிறது அதன் பிறகு இது போலவே பூமிக்கு பின் பகுதியில் சுற்றி மீண்டும் கிழக்கை அடைகிறது.

இந்த சூரியன் சுற்றி வரும் பாதையை நாம் பார்க்கும் கோணத்தில்தான் அனைத்து கிரகங்களும் சுற்றி வருகிறது. அனால் தூரங்கள் வேறுபடும், தூரங்கள் வேறுபட்டாலும் அனைத்து கிரகங்களும் சூரியன் செல்லும் பாதையின் கோணத்தில் இருந்து வடக்கு, தெற்காக சற்று விலகி அதிக பட்சமாக 7 பாகை வரை விலகி இருக்குமே தவிர மொத்தமாக விலகி முழுவதுமாக தெற்கிலோ அல்லது வடக்கிலோ செல்வது இல்லை, எனவே இந்த பாதையில் மட்டுமே அனைத்து கிரகங்களும் சுற்றுவதால், நமக்கு இந்த ராசி சக்கரம் கிரக நிலைகளை தெரிந்து கொள்ள உதவுகிறது.

சூரியனை பூமி சுற்றி வருகிறது, அந்த பூமியை சந்திரன் சுற்றி வருகிறது, பூமியில் இருந்து பார்க்கும் போது சூரியனின் ஒளியை சந்திரன் பிரதிபலிப்பதை நாம் பார்க்கும் போது சந்திரனின் நிலைகள் மாறுவது போல் நமக்கு தோன்றுகிறது. பூமி சூரியனை சுற்றும் காலத்தை விட சந்திரன் பூமியை சுற்றும் காலம் விரைவானது என்பதால் நாம் நகரும் அதே வேளையில் சந்திரன் வேகமாக நகர்கிறது எனவே சந்திரன் பிரதிபலிப்பு நிலை மாறிக்கொண்டே உள்ளது.

அவ்வாறு மாறுவதை நாம் திதிகள் என அழைக்கிறோம். சூரியனுக்கும் நாம் உள்ள பூமிக்கும் நடுவே சந்திரன் வரும் போது சூரியனின் ஒளி சந்திரனில் நாம் பார்க்கும் பகுதிக்கு எதிர் பக்கத்தில் விழும் என்பதால் சந்திரனின் இருண்ட பகுதியையே நம்மால் காணமுடியும். அவ்வாறு இருண்ட பகுதியானது பிரபஞ்ச

இருளில் நம்மால் பிரித்தறிய முடியாமையால் நமக்கு சந்திரன் இல்லாதது போல் தோன்றுகிறது. இந்த நிலையை அமாவாசை என அழைக்கிறோம்.

அது போலவே நமது பூமியின் பின்பக்கமாக அதாவது சூரியன் சந்திரன் இரண்டிற்கும் நடுவே பூமி உள்ள நிலையில் சந்திரன் மீது விழும் சூரிய ஒளியின் அனைத்து பிரதிப்பலிப்பையும் நாம் பார்ப்பதால் சந்திரன் முழு பிரகாசத்துடன் காணப்படுகிறது. இந்த நிலையை பௌர்ணமி என அழைக்கிறோம். இவ்வாறு சந்திரன் தனது சுழற்சியில் நிலை மாறிக்கொண்டே உள்ளது. பூமி ஒரு முறை சூரியனை சுற்றி வருவதற்குள்ளாக 12 அமாவாசை மற்றும் பௌர்ணமி வருகிறது.

எனவே இந்த மொத்த பிரபஞ்சத்தையும் 12 பாகங்களாக பிரித்து, நாம் பூமியில் இருந்து பார்க்கும் போது குறிப்பிட்ட பிரிவுகளுக்கு நேராக உள்ள நட்சத்திர கூட்டங்களின் அமைப்பை நமக்கு தெரிந்த உருவகங்களுடன் ஒப்பிட்டு பெயரிட்டுக் கொண்டோம்.

எனவே ராசி என்பது நாம் அளவீடுகளுக்காக பிரித்துக் கொண்ட ஒரு அலகு மட்டுமே. ஆனால் அவ்வாறு பிரிக்கப்பட்ட அளவீடுகளுக்குள் நமது வாழ்விற்கு தேவையான காலக்கணிதம் கிடைத்தது.


சுற்றியுள்ள 360 பாகையை 12 கூறுகளாக மாற்றி ஒவ்வொரு கூறுக்கும் 30 பாகை அளவுகளில் பிரிவுகளை அமைத்து அவற்றிற்கு இராசி என பெயரிட்டுள்ளோம். மொத்த கூட்டத்தை ராசி மண்டலம் என அழைக்கிறோம்.

CamScanner

12 இராசிகள்

1. மேசம் - ஆட்டின் கொம்புகள்
2. ரிசபம் - காளை மாடு,
3. மிதுனம் - கடாயுதத்துடன் ஆணும், வீணையுடன் மங்கையும்,
4. கடகம் - நண்டு,
5. சிம்மம் - சிங்கம்,
6. கன்னி - படகில் நெற் கதிர்களுடன் அமர்ந்துள்ள பெண்,
7. துலாம் - தராசு,
8. விருச்சகம் - தேள்,
9. தனுசு - வில் தாங்கிய குதிரை மனிதன்,
10. மகரம் - ஆட்டின் தலையும் மீன் உடலைக் கொண்ட விலங்கு,
11. கும்பம் - நீரில்லா பானையை தோளில் தாங்கிய கரிய ஆண்
12. மீனம் - இரட்டை மீன்கள்,

ராசியின் அதிபதிகள்



படத்தில் (வலது புறம்) உள்ள பாதைகள் முறையே:

1. சூரியன்,
2. புதன்,
3. சுக்கிரன்,
4. சந்திரன்,

5. செவ்வாய்,
6. குரு,
7. சனி,

இதில் சூரியனை மையமாக கொண்டு அனைத்து கிரகங்களும் சுற்றிவருகின்றன, பூமி உட்பட, நாம் முன் அத்தியாயத்தில் பார்த்தது போல புவிமைய மற்றும் சூரியமைய ஒருங்கிணைப்பை கூறுவதே ராசி அதிபதிகள்,

சூரியனை மற்ற கிரகங்கள் சுற்றிவரும் கற்பனை பாதையையும், நம்மை அதாவது பூமியை சூரியன் சுற்றி வரும் கற்பனை பாதையும் சந்திக்கும் இடம் நமது ராசி மண்டலத்தில் எந்த ராசியை நோக்கி உள்ளதோ அந்த இடம் வெட்டும் பாதையை உடைய கிரகத்தின் அதிபதி தன்மையை பெறும், இது ராசி மண்டலம், கிரக பாதை, புவிமைய கோட்பாடு போன்றவற்றினை உள்ளடக்கிய கணிதம்.

படத்தில் கவனியுங்கள் 2 என்பது வெட்டும் இடம் புதனுடய பாதை இது மிதுனம் ,கன்னி ராசிபகுதியை குறிக்கும், 3 என்பது வெட்டும் இடம் சுக்கிரனுடைய பாதை இது ரிசபம், துலாம் ராசிபகுதியை குறிக்கும், 5 என்பது வெட்டும் இடம் செவ்வாயுடைய பாதை இது மேசம், விருச்சகம் ராசிபகுதியை குறிக்கும், 6 என்பது வெட்டும் இடம் குருவினுடைய பாதை இது மீனம், தனுசு ராசிபகுதியை குறிக்கும், 7 என்பது வெட்டும் இடம் சனியினுடைய பாதை இது கும்பம், மகரம் ராசிபகுதியை குறிக்கும், 1 சூரியனையும் சிம்மத்தையும், 4 என்பது சூரியனில் இருந்து 12 பாகை பின்னுள்ள அம்மாவாசை சந்திரனையும் கடகத்தையும் குறிக்கும், இதில் அம்மாவாசை சந்திரன் வர வேண்டிய அவசியம் என்ன என்பதை பின்பு பார்க்கலாம்

இந்த ராசி மண்டலமானது பூமியில் இருந்து பார்ப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும், மேலும் ராசி மண்டலம்

CamScanner

பூமியின் மத்திய கோட்டில் இருந்து கிடைமட்டமாக இல்லாமல் சாய்ந்துள்ளது அதற்கு காரணம் பூமியின் சாய்வு கோணமே, எனவே இந்த ராசி மண்டலத்தில் இருந்து வரும் அதிர்வலைகள் அனைத்து ராசிகளுக்கும் ஒன்றாக இல்லாமல் வேறுபட்டு உள்ளது, இவற்றின் பண்புகள் சரியாக அதன் அதிபதியின் தன்மையுடனும் ஒத்துப்போவதால் ஒவ்வொரு ராசியின் அதிபதிகளின் தன்மைகளை வைத்தே ராசிகளின் தன்மைகளை அறிந்து கொள்ளலாம்,

இருப்பினும் ராசிகளின் தன்மைகளில் கிரக தன்மைகளை தாண்டியும் புரிந்து கொள்ளவேண்டியவைகள் உள்ளன, அவற்றின் தன்மைகள், ஒவ்வொரு ராசிகளையும் அதற்கான உருவங்களை வைத்தே பல தன்மைகளை புரிந்து கொள்ளலாம்,

பொதுவாக தற்போது ஜோதிடத்துறையில், வழக்கத்தில் சந்திரன் உள்ள இராசிகளை வைத்தே ராசி பலன்கள் என கூறப்படுகிறது, ஆனால் நாமோ இராசிகளை அவ்வாறாக பயன்படுத்தாமல் கிரகங்களின் தன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொரு கிரகமும் உள்ள ராசிகளுடன் இணைத்து அந்த கிரகம் குறிக்கும் உறவுகள், பொருட்களை இனம் கண்டு, தரம் பிரித்து அறியப் போகிறோம்,

மீனம் குரு	மேசம் செவ்வாய்	ரிசபம் சுக்கிரன்	மிதுனம் புதன்
கும்பம் சனி			கடகம் சந்திரன்
மகரம் சனி			சிம்மம் சூரியன்
தனுசு குரு	விருச்சகம் செவ்வாய்	துலாம் சுக்கிரன்	கன்னி புதன்

CamScanner

எனவே ஒரு கிரகம் எவற்றையெல்லாம் குறிக்கிறதோ, யாரையெல்லாம் குறிக்கிறதோ அந்த பொருளோ நபரோ அந்த ராசியின் இயல்பான தன்மைகளை பெற்றிருப்பார், கீழ் உள்ள பகுதியில் அளிக்கபட்டுள்ள ராசிகளின் பண்புகளை கொண்டு எப்போதும் போல ராசி பலன் பார்ப்பது போல பார்க்க வேண்டாம், அந்த ராசிகளில் எந்த கிரகம் அமர்ந்துள்ளதோ, அந்த கிரகம் எந்த விசயத்தை குறிக்குமோ அதனுடனோ, அந்த கிரகம் எந்த உறவை குறிக்குமோ அவர்களுடனோ பொருத்திப்பார்க்க வேண்டும்,

மேலும் ஒவ்வொரு ராசிகளுக்கும் கல்வி, தொழில், இடம், உறுப்பு, நோய், பொருட்கள், என கூறியுள்ளவற்றை அந்த ராசியில் ஜாதகத்தில் உள்ள கிரகங்களுடன் பொருத்திப்பார்த்து பலன் கூற வேண்டும், உதாரணமாக ஒரு ராசியில் சனி இருக்குமானால், சனி என்பது ஜாதகரின் தொழிலைக் குறிக்கும் எனவே ஜாதகரின் தொழில் அந்த ராசி குறிக்கும் தொழிலை சார்ந்து இருக்கும், அது போலவே அந்த ராசியில் ஒரு வேளை சூரியன் இருக்குமானால் அந்த ஜாதகரின் தந்தைக்கோ அல்லது மகனுக்கோ அந்த ராசி குறிக்கும் குணம், தொழில், கல்வி, வசிக்கும் இடம், போன்றவைகள் இருக்கும், இந்த பலன்களை ஜாதகரின் தந்தை அல்லது மகனுக்கு கூற வேண்டும், இது போலவே ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு ராசியில் இருக்கும் போது அந்த கிரகம் குறிக்கும் உறவுகள் அந்த ராசியின் தன்மையுடன் இருப்பார்கள், மேலும் இது மட்டுமே பலனை தீர்மானிக்காது, அந்த கிரகங்களுடன் இணைந்த கிரகங்கள், அந்த கிரகங்களின் வெவ்வேறு நிலைகளை வைத்தும் முடிவுக்கு வர வேண்டும் அந்த பலன்கள் பின் வரும் அதிகார கிரகம் மற்றும் நாமநாடி மற்றும் கிரக இணைவு பலன் பகுதியில் அளித்துள்ளோம்,

இனிவரும் பகுதியில் ராசிகள் மற்றும் கிரகங்களின் காரகங்களை காணலாம், இந்த பகுதி உங்களுக்கு ஜோதிட பலன் கூறுவதற்கு அடிப்படையானது, ஒருவர் எவ்வளவு அதிகமான

கிரக மற்றும் ராசி காரகங்களை தெரிந்து வைத்துள்ளாரோ அந்த அளவுக்கு ஜோதிடத்தில் நிபுணத்துவம் பெற்றவர், அதே போல் தெரிந்த காரகத்தை சமயோசிதமாக கையாள்வது அதைவிட மிக முக்கியமானது, உதாரணமாக ஜாதகம் பார்க்க வந்தவர் கொண்டு வந்த பையில் உள்ள பாட்டில் சரியாக மூடாமல் எப்படியோ தண்ணிர் கசிந்து சட்டை வேட்டியும் நனைந்துள்ளது, உடனே ஈரமான துணி புதனைக் குறிக்கும் எனவே புதனுடைய காரகம் தொடர்பான விசயம் என யோசிக்க வேண்டும், அதே போல ஜாதகரின் பெயர் பிரேமலதா பிரேம் என்றால் அன்பு எனவே அது சந்திரன் ஜாதகர் சந்திரன் தொடர்பான நபரென முடிவுக்கு வர வேண்டும், இது மட்டுமல்லாது ஜாதக பலன் கூறும் போது சமயத்திற்கு ஏற்ப பல காரகங்களை கையாள வேண்டும்

இந்த பகுதியிலும் கூட நான் குறைந்த அளவு காரகங்களை அதாவது பொது பயன்பாட்டில் அதிகமாக கையாளும் காரகங்களை மட்டுமே கொடுத்துள்ளேன் எனவே மனப்பாடம் செய்யாமல் பொறுமையாக ஊன்றி படித்து உள்வாங்கிக் கொள்ளுங்கள், அதே போல ஒவ்வொறு ராசியின் மரம், செடி, இடம் உலோகம் என கொடுத்துள்ளேன் இதை சமயத்திற்கேற்ப கையாளவும், உதாரணமாக ஒருவர் ஜாதகத்தில் புதன் மிக முக்கியமானது உடனே அவர் வீட்டுக்கு அருகில் பூங்கா இருக்கும் என கூறலாம் சிமெண்ட், எலெக்ட்ரிக் சார்ந்த பணியில் ஒருவர் இருப்பர் எனவும் விட்டு வாசலின் திசை தெற்கு எனவும் கூறலாம், இது போல புதனின் செடி துளசி, துளசிக்கு பிருந்தா என பெயர் உண்டு எனவே பிருந்தா என்றவரின் உதவி கிடைக்கும் எனக் கூறலாம், ஆனால் இதெல்லாம் நீங்கள் சொல்லிப் பார்த்து அனுபவத்தில் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும்

மேலும் ஒரு உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சுக்கிரன் மேச ராசியில் இருக்கிறது எனவே ஜாதகரின் மனைவி வசிக்கும் வீட்டுக்கு அருகில் சுரங்கம், சுங்கசாவடி அல்லது மருத்துவமனை

இருக்கும் எனக் கூறலாம் இது போல சமயோசிதமாக கையாள வேண்டும்

மேசம்

இந்த பகுதி ஆட்டின் தலைப்பகுதியின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 0 டிகிரி முதல் 30 டிகிரி வரை உள்ளதாகும், பொதுவாக இது தலை பகுதியை குறிக்கும் இராசியாகும், இது ராசி மண்டலத்தின் துவக்க ராசியாகும், ஆடு போன்ற சுறுசுறுப்பை குறிக்கும் ராசியாக குறிக்கப்படுகிறது, தேசிய அளவில் விருதுகள் பெறுதல் குறிப்பாக வீர விருதுகள் பெறுவது போன்றவற்றை குறிக்கும், விடாப்பிடியான குணத்தை இந்த ராசி குறிக்கும், இந்த ராசியில் சுக்கிரன் இருந்தால் சொந்தத்தில் திருமணம் அல்லது தெரிந்த நபரை திருமணம் செய்து கொள்வார், இந்த ராசி எதையும் தாங்கும் திறனையும் குறிக்கும்,

பொருட்கள்:

மின்கருவிகள், உலை, அடுப்பு, மின் கருவிகள், ஆயுதங்கள், கற்கள், கூர்மையான பொருட்கள், முட்கள் போன்றவை இந்த ராசி காரகம் வகிக்கும் பொருட்களாகும்,

பகுதிகள்

மேச ராசியானது கிழக்கு திசையை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, அரசியல்வாதி, தலைவர்கள், முக்கியஸ்தர் கூடும் இடங்கள், காட்டுப் பகுதிகளைக் குறிக்கும், தமிழகத்தில்

ஆந்திரா ஒட்டிய பகுதிகள், வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, ஆற்காடு போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் காஷ்மீர் ஒட்டிய பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் வடக்கு எல்லைப்பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

மத்திய அரசு பணிகள், மருத்துவம், சவரத்தொழில், பொறியியல், மெக்கானிக், வாகனம் தொடர்பான தொழில்கள், காவல், திருடுதல், சண்டை தொழில்கள், அடியாட்க்கள், விளையாட்டு வீரர்கள், தற்காப்பு கலைகள், சமையல், உணவு விடுதிகள், சுரங்க பணிகள், ஆயுதம் தயாரிப்பு, ஆயுதப்படை, இராணுவம், அரசு சர்வாதிகாரம், எலெக்ட்ரிக்கல் சார்ந்த தொழில்கள், சிற்ப பணிகள், ரியல் எஸ்டேட், கட்டிடத்துறை பொருட்கள் விற்பனை, கூலி மற்றும் கடின உழைப்பு, வித்தை காட்டுதல், போர் தளவாட உற்பத்தி, தீவிரவாதம், மண்பாண்ட உற்பத்தி, மந்திரம், உருக்காலை, இயந்திர உற்பத்தி, குழு தலைமை, விவசாயப் பொறியியல், தீயணைப்புத் துறை, செங்கல் சூலை, ரசாயன தொழில், சமையல் பாத்திரம் உற்பத்தி மற்றும் விற்பனை, லேத், தொழிற்சாலை பணிகள், மருந்து உற்பத்தி, தையல், தாதுபொருட்கள் தொழில், இன்சூரன்ஸ், ரவுடித் தொழில், வெல்டிங், செக்யூரிட்டி, கைவினைஞர், லேப், மருத்துவ உபகரணம் உற்பத்தி மற்றும் விற்பனை, சேனாதிபதி, தொல்பொருள் ஆய்வு தொடர்பான தொழில்கள், நுணுக்கப்பொருட்கள் உற்பத்தி, அகழாய்வுத் துறை இதில் குறிப்பிட்டுள்ள தொழில்கள் அனைத்தையும் மேச ராசி பிரிவு குறிக்கும்,

கல்வி:

இயந்திர நுட்பம், மருத்துவம், வேளாண்மை, அரசியல், ஆகிய கல்விகள் மேஷ ராசியின் பகுதி குறிக்கும்,

குறிக்கும் பகுதிகள்:

சுரங்கம், வெப்பம் நிறைந்த பகுதியை குறிப்பது, சுங்கசாவடி, நெருப்புள்ள பகுதி, பள்ளத்தாக்கு, குப்பைமேடு, கசாப்பு கடைகள், மருத்துவமனை, அறுவைசிகிச்சை கூடம், மயானம், பிரசவ மையங்கள், சமையல் அறை, காடு, சாலை ஆகியவைகள்,

உடல் உறுப்புகள்:

ஆண் மற்றும் பெண்களின் மர்ம உறுப்புகள், நகம், பல், நெற்றி, நாசி, புஜங்கள், எலும்பு மஞ்சை, இயக்க நரம்புகள், மூக்கு, சிவப்பனு, இருதயம், புருவம் இந்த அவையங்கள் அனைத்தும் மேச ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், ரத்த புற்று, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம் கலைதல், செப்டிக், டான்சிலஸ், விதவை போகத்தால் நோய்கள், இணைவுகளில் வலி மற்றும் வீக்கம், தழும்பு, பித்த நோய்கள், மூளை காய்ச்சல், ஊனம் மேற்கண்ட நோய்கள் மேச ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

பொதுவாக இந்த ராசியின் தன்மை வீரம், தீரம், பராக்கிரமம், வெற்றி, விபத்து, பேராசை, அதிக காமம், நடத்தை குறைபாடு, போர், கோபம், விவேகம், அதிகாரம், விடுதலை

CamScanner

வேட்கை, பகைமை பாராட்டுதல், துடிப்பு, துணிச்சல், சாமர்த்தியம், எதிரி, தீ பயம், கடன், பழிவாங்குதல், மன வலிமை ஆகியவைகளாகும்,

மேலே கண்ட தலைப்புகளில் உறுப்பு, நோய், பொருள், வேலை, இடம் என அனைத்திலும் கொடுத்துள்ளவைகள் அந்த ராசியின் பகுதியின் குறிப்புகளாக எடுத்துக் கொள்ள வேண்டும் உதாரணமாக, சூரியன் என்பது தந்தையை குறிக்கும் கிரகம் ஆகும்,

ஒரு ஜாதகத்தில் சூரியன் மேச ராசியில் இருந்தால் அந்த ஜாதகரின் தந்தையின் குணம், அவர் செய்யும் தொழில், அவர் கற்ற வித்தை, அவருக்கு எந்த உறுப்பில் குறை, எது மாதிரியான நோய், எந்த இடங்களில் குடி இருப்பார் என மேசத்திற்குரிய குறிப்புகளை வைத்து கூற வேண்டும், இது மட்டுமல்லாமல் கிரகங்களுக்கும் காரகங்கள் இருக்கும் அந்த கிரகங்கள் எந்த ராசிக்கு அதிபதியோ அந்த காரகங்களை கையாளலாம், உதாரணமாக மேச ராசியின் அதிபதி செவ்வாய், எனவே செவ்வாய் முதுகு மற்றும் புருவத்தை குறிக்கும் எனவே ஜாதகரின் தந்தையின் முதுகு அல்லது புருவத்தில் வெட்டுக்காயம் அல்லது மச்சம் வடு, மரு இருக்கும் என கூறலாம்,

அதுமட்டுமல்லாமல் ஜாதகரின் தந்தை கடன் சிக்கலில் இருக்கலாம் அது செவ்வாயின் எண்களான 7 அல்லது 9 லட்சமாக அல்லது 70 அல்லது 90 ஆயிரமாக இருக்கும், சில சமயம் 6 கோடியாக கூட இருக்கும் இதில் நீங்கள் அடிப்படையை புரிந்து கொள்ள வேண்டும், எனவே ராசி மற்றும் கிரக காரகங்களை அனைத்தும் ஜாதக பலன் கூறும்போது பல தகவல்களை கூற உதவும் என்பதால் வாய்ப்பு கிடைக்கும் போது எல்லாம் ஒரு ஒரு காரகமாக புரிந்து கொள்ள வேண்டும், சூரியன் என்பது தந்தை மட்டுமல்லாமல் குழந்தைகளையும் குறிக்கும்

CamScanner

அவர்கள் பண்புகளும் இது போல இருக்கும் எனக் கூறவேண்டும், அடுத்து மீதம் உள்ள மற்ற ராசிகளின் காரகங்களையும் காணலாம்,

ரிசபம்

இந்த ராசிப்பகுதி காளையின் உருவத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 30 டிகிரி முதல் 60 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் இரண்டாவது ராசியாகும், பணப்பயிர் வேளாண்மை, விற்பனை போன்றவற்றை குறிக்கும் ராசியாகும், இந்த வீடு பிரபல்யத்தை குறிக்கிறது, இந்தவீட்டில் உள்ள கிரகங்கள் குறிக்கும் தன்மைகள் செழுமையாக பிரபல்யமாக இருக்கும், சொந்தத்தில் திருமணம், மேலும் இந்த ராசி செழிப்பைக் குறிக்கும் ராசியாகும்

பகுதிகள்

ரிஷப ராசியானது தெற்கு திசையை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, வங்கி, சந்தை, முதலீடுகள், கடன், நிதி மற்றும் பணப்பயிர்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் இடங்கள், கழனி, வயல், சதுப்புப் பகுதிகள், தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் வடக்கு போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் உத்ரகாண்ட், உத்திர பிரதேசம், பீகார் ஒட்டிய பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக, அறையாக இருந்தாலும் வடகிழக்கில் வடக்கு சார்ந்த எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களை பற்றிய தவல்களை குறிகாட்டும் ராசியாகும்,

CamScanner

பொருட்கள்:

மகிழுந்து, வாசனை திரவியங்கள், கண்ணாடி, ஆடை ஆபரணங்கள், ஆடம்பர உணவு, பர்னிச்சர், மது பானம், நறுமண பொருட்கள், பணம், இனிப்பு, விலைஉயர்ந்த உணவு, பழங்கள், மலர்கள், வாகனம், ரெக்சின், மைக்கா, வசந்தகால பயிர்கள் மேற்கண்ட பொருட்கள் போன்ற அனைத்தும் ரிஷப ராசியின் காரகங்களை சார்ந்தது

தொழில்கள்:

பாடகன், நடிகன், வீடு விற்பனை, திருமணம் சார்ந்த தொழில்கள், மீடியா, ஒப்பனை, மார்கெட்டிங், பெய்ண்டிங், விலை உயர்ந்த கால்நடை விற்பனை, பணப்பயிர் வியாபரம், வங்கிப்பணி, சொகுசுவாகன உற்பத்தி மற்றும் வியாபாரம், அயல்நாட்டுப் பணி, நட்சத்திர ஹோட்டல் மற்றும் விடுதிகள், கருவூலம், அலங்கார பொருட்கள் விற்பனை, கண்ணாடி தொழிற்சாலை பணி, அழகு நிலையம், இரத்தின வியாபாரி, பொன் வியாபாரம், பழ வியாபாரம், வட்டித்தொழில், கவிஞர், நிதித்துறை, அரச விருந்தினர், மாளிகை பணி, மருந்து விற்பனை, ஆப்ட்டிகல்ஸ், பட்டு விற்பனை, தொலைக்காட்சி, நடனம், விளம்பர பணிகள், நுகர்வோர் தொடர்பு பணிகள், இசை கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனை, வாகன தொழில், புதுமையான தொழில்கள், ஆடிட்டர், சலவையகம், பெண் தொழிலாளர்களை கொண்டு செய்யும் தொழில்கள், வேற்று மொழி கற்பித்தல் ஆகிய தொழில்கள் ரிஷப ராசியின் காரக தொழில்களாம்,

கல்வி:

பொருளாதாரம், வணிகவியல், உணவுசார்கல்வி, விடுதி மேலாண்மை, கணிதவியல் போன்ற கல்விகளை இந்த ராசி குறிக்கும்,

CamScanner

குறிக்கும் பகுதிகள்:

ரிசப ராசியானது செல்வங்களை முதலீடு செய்யும் இடங்களை குறிக்கும் அதனாலேயே பங்கு சந்தையின் சின்னமாக காளை வைக்கப்பட்டுள்ளது, சுரங்கம், ஆடம்பரவீடு, கேளிக்கை விடுதி, திரையரங்கம், தோட்டம், பெண்கள் கூடும் இடங்கள், ஷோரூம், விளையாட்டு அரங்கம், விழா அரங்கங்கள், வீடு, பயிர் செய்யும் பகுதிகள் ஆகியவற்றை இந்த ராசியின் பகுதிகளாக எடுத்து பலன் கூற வேண்டும்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது முகம் மற்றும் முக உறுப்புகளை குறிக்கும் இராசியாகும், கண்கள், தொண்டை, ஆண்குறி, கன்னம், தாடை, புலன்கள், கர்பப்பை, முகம், கருமுட்டை, கழுத்து, தோள்பட்டை இவைகள் இந்த ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

பித்தம், சன்னி நோய்கள், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், பால்வினை நோய்கள், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு, உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள், போதை தொடர்பான நோய்கள், மேற்கண்ட நோய்கள் ரிஷப ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

காதல், வசீகரம், கலை, நடிப்பு, கவர்ச்சி, உல்லாசம், பாலுணர்வு, சிற்றின்ப நாட்டம், திருமணம், பட்டப்பெயர், இளமை, பேச்சாற்றல், கடின உழைப்பு, அடுத்தவரை கவரும் திறன் போன்ற தன்மைகளை குறிக்கும் ராசியாக இந்த ராசி இருக்கிறது,

CamScanner

மிதுனம்

இந்த பகுதி இரட்டையர்கள், அவர்களுடன் இசை கருவி உள்ளது போன்ற உருவகத்தால் குறிக்கப்படுகிறது, மேலும் பெரும்பாலான ஜோதிட நூல்களில் ஒரு பெண் பண்டைய இசைக் கருவி வைத்திருக்கிறாள், அவளுடன் ஒரு ஆண் போர் கருவியுடன் உள் அர்த்தம் நிறைந்த சந்திப்பாக இருப்பது போல இந்த ராசியின் உருவம் குறிக்கப்படுகிறது, மைதுனம் என்பது கலவி அதாவது இணை சேருதல் எனவும் பொருள்படும், இந்த பகுதி ராசி மண்டலத்தில் 60 டிகிரி முதல் 90 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் மூன்றாவது ராசியாகும், இந்த ராசி சமூகத்தில் பிறருடன் தொடர்பு கொள்வதற்கான கற்கும் திறனை குறிப்பதாகும், இசை, நாட்டியம், நளினங்களை வெளிப்படுத்தும் பகுதியாக இந்த மிதுனராசி இருக்கிறது,

பொருட்கள்:

புத்தகம், தொலைபேசி, கடிதம், ஒலிபெருக்கி, ஓவியங்கள், மென்மையான பொருட்கள், படரும் கொடிகள் ஆகியவைகள் இந்த ராசியின் காரக பொருட்களாகும்,

பகுதிகள்

மிதுன ராசியானது மேற்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, கல்வி நிலையம், பதிவு அலுவலகம், நிலம் சார் நபர்கள் உள்ள இடங்கள் மற்றும் தோட்டம் ஊர் பகுதிகள், தமிழகத்தில் வங்காள விரிகுடா ஒட்டிய பகுதிகள், விழுப்புரம், புதுச்சேரி, பெரம்பலூர், கடலூர், அரியலூர் போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் ஜார்கண்ட், மேற்கு வங்காளம், சட்டீஸ்கர் பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் வடகிழக்கு அதில் கிழக்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

CamScanner

தொழில்கள்:

ஆசிரியர், புத்தக எழுத்தாளர், கணக்குபிள்ளை, பதிவுதுறை, மேடைப்பேச்சாளர், தபால் துறை, சில்லரை வியாபாரம், கணிதப் புலமை, அனைத்து வியாபாரங்களும், சட்டத்துறை, சிற்ப தொழில், ஓவியர், வரலாற்று ஆசிரியர்கள், தொலை தொடர்பு துறை, தூதரக பணிகள், சிற்ப தொழில், செய்தித்துறை, புத்தக கடை, ஸ்டேசனரி, அச்சு தொழில், தரகு, சூதாட்டம், மீடியா, ஐடி, கேமரா, மளிகை கடை, கல்விசார்ந்த ஆராய்ச்சி, நவீன தொழில் நுட்பம் இவைகள் மிதுன ராசியின் தொழில்கள்,

கல்வி:

கணிதம், கணினி, பொறியியல், வணிகவியல், கல்வித்துறை போன்றவை மிதுன ராசி குறிக்கும் கல்விகள் ஆகும்,

குறிக்கும் பகுதிகள்:

தானிய சேமிப்புக் கிடங்கு, பள்ளிகூடம், நூலகம், மறைவான பகுதி, படிக்கும் அறை, வரவேற்பறை, பூங்கா, கடைவீதி, மண்டபம், கடலுக்கு அருகில், மலர்த்தோட்டம், நந்தவனம் ஆகியவை மிதுன ராசி குறிக்கும் பகுதிகளாம்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது கழுத்து மற்றும் தோள்பகுதியை குறிக்கும் இராசியாகும், மூளை தொடரிகள், தோள்பட்டை, தோல், உள்ளங்கை, தொண்டை, காது, நாக்கு, நரம்புமண்டலம், நுரையீரல், முதுகுத்தண்டு, புலன்கள், மூக்கு, இடுப்பு இவை யாவும் மிதுன ராசியின் காரக உறுப்புகளாகும்,

CamScanner

நோய்கள்:

ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, விபச்சாரத்தின் மூலம் ஏற்படும் நோய்கள், வாதம், நரம்பு தளர்ச்சி, மூளை கோளாறு, பைத்தியம், ஹோமா, தோல் நோய்கள், சொறி, சிரங்கு, வெண்குஷ்டம், மேற்கண்ட நோய்கள் மிதுன ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

கலைகள், தொடர்பு, காதல், கல்வி, எழுத்து, வெளிப்படுதும் தன்மை, பேச்சு, கேட்கும் திறன், கேள்வி ஞானம், சாதுர்யம், கள்ள தொடர்பு, அறிவுக்கூர்மை இவைகள் மிதுன ராசியின் பொதுவான குணங்களாகும்,

CamScanner

கடகம்

இந்த பகுதி நண்டின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது. இந்த பகுதி ராசி மண்டலத்தில் 90 டிகிரி முதல் 120 டிகிரி வரை உள்ளதாகும். இது ராசி மண்டலத்தில் நான்காவது ராசியாகும். ஒரு ஜாதகரது வாழ்வில் ஒவ்வொரு கணமும் ஆதாரமாக இருந்து அரவணைப்பு வழங்கும் அனைத்தையும் இந்த ராசி குறிக்கும். பாதுகாப்பு, சுகம், சிந்தனை வளம், தாய் வழி உறவின் தொடர்ச்சி சொந்தத்தில் திருமணம், போன்றவற்றை குறிக்கும். சபலம் மற்றும் அவமானத்தையும் குறிக்கும் பகுதி கடகம்தான்.

பொருட்கள்:

படகு, திரவப்பொருள், குளிர்பானம், ஆடை, வாகனம், பால், தயிர், எண்ணெய், முத்து, சங்கு, நீர் சத்து காய்கனிகள், தினமும் விற்றுத்தீரும் பொருள், உணவு, உப்பு, வெண்மை நிறப் பொருட்கள், நீர்ப் பம்புகள், வாகனம், விரைவாக வளரும் செடி கொடிகள், குளிர்சாதன பொருட்கள் அனைத்தும் கடக ராசியின் காரக பொருட்கள்

பகுதிகள்

கடக ராசியானது வடக்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது. வயல், தோட்டங்கள், ஓடை மற்றும் வாய்க்கால் ஒட்டிய பகுதிகள், தமிழகத்தில் வங்காளவிரிகுடா ஒட்டிய பகுதிகள், தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் ஒரிசா, தெலுங்கானா, வடகிழக்கு ஆந்திரபிரதேசம், யனம் பகுதிகள், மேலும் எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் கிழக்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

பொது வசதி தொழில்கள், கலைகள், ஜோதிடம், அரிசி வியாபாரம், பூ மற்றும் பழவியாபாரம், கவிதை, கட்டுரை, இலக்கியம், ஓவியம், நீர் தொடர்பான தொழில், ஏமாற்றுத் தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, அயல்நாட்டு பணி ,அயல்நாடு தொழில், வேளாண்மை, மாலுமி, கப்பல் பணி, செவிலியர், மருத்துவம், போக்குவரத்து தொழில், வாகன உற்பத்தி, வாகன பழுது நீக்குதல், குளிர்சாதன பொருட்கள் உற்பத்தி மற்றும் பழுதுநீக்குதல், கலை சார்ந்த கல்வி, பேச்சாளர், சலவை, கட்டிடத்துறை, மாறும் அரசியல்வாதி, ஆடு மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, சாஸ்திர விற்பனர், நடிப்பு, இசை, எழுத்தாளர், ரயிலே பணிகள், விமான நிலைய பணிகள், சுற்றுலாத் துறை, சேவை நிறுவனம், தோட்ட வேலை ஆகியவை கடக ராசி குறிகாட்டும் பணிகள்,

கல்வி:

செவிலியர், கலை, இலக்கியம், உணவுசார் கல்வி, வேளாண்மை, கப்பல் மேலாண்மை, விடுதி மேலாண்மை போன்ற கல்விகள் கடக ராசிக்கானது

குறிக்கும் பகுதிகள்:

நீர் நிலை, ஆறு, குளம், குளியல் அறை, வயல், வீடு, தெய்வஸ்தலம், விருந்து, சப்பாட்டு மேசை, மதுக்கடை, கடல், உப்பளம் இப்படிப்பட்ட இடங்கள் கடகராசி சார்ந்தவைகளாகும்

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது மார்பு பகுதியை குறிக்கும் இராசியாகும், இடது கண் (ஆண்களுக்கு), வலதுகண் (பெண்களுக்கு), சுரப்பிகள், புருவம், பெண்களின் மார்பகம், சிறுநீரகம், புலன்கள், வயிறு,

CamScanner

இரத்த நாளங்கள், கர்பப்பை, மூளையின் தொடரிகள் ஆகியவை இந்த ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

சளி, சிறுநீர் தொற்று, திடீர்தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், குடல்வால், மூளை புற்று, உணவு குழாய் தொடர்பான நோய்கள், காற்றின் ஈரப்பதம் தொடர்பான் தோல் நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், விரைவீக்கம், இரத்தசோகை, சிறுநீரக கல், தூக்கமின்மையால் வரும் நோய்கள், ஆசை தொடர்பால் வரும் நோய்கள், நீர்க் கட்டிகள். மேற்கண்ட நோய்கள் கடக ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

அழகு, பயணம், இடமாற்றம், கலை, கற்பனை, சபலம், மாறும் புத்தி, வெண்மை, பிடிவாதம், மகிழ்ச்சி, அன்பு, தயவு, தூக்கம், உறுதியின்மை, அவப்பெயர், சகிப்புத்தன்மை, கள்ளத்தனம் கடக ராசியின் பொது குணங்களாகும்

CamScanner

சிம்மம்

இந்த பகுதி சிங்கத்தின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 120 டிகிரி முதல் 150 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் ஐந்தாவது ராசியாகும், உயரமான, ரம்யமான, ஆளுமையான நிலைகளை குறிக்கும், ஆளுமைப் பண்பு, உற்பத்தி ஸ்தானம் போன்றவற்றை இந்த ராசியானது குறிக்கும், சொந்தத்தில் திருமணம், தந்தை வழி உறவுகளில் நாட்டம் மற்றும் பிறரால் புகமுடியாத அல்லது அடைய முடியாத கட்டமைப்பை இந்த ராசிப் பகுதி குறிக்கும்,

பொருட்கள்:

மாணிக்கம், விலை மதிப்பு மிக்கவை, தலைமை நாற்காலி, பிரகாசிக்கும் பொருட்கள், பல்ப் கண்ணாடி, விலை உயர்ந்த உலோக பொருட்கள், தந்தை வழி சொத்து இவைகள் சிம்ம ராசியின் காரக பொருட்களாகும்,

பகுதிகள்

சிம்ம ராசியானது கிழக்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, மலை பகுதிகள், மூத்தோர்கள், காவலர்கள் உள்ள பகுதிகள், தமிழகத்தில் வங்காள விரிகுடா ஒட்டிய பகுதிகள், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் தெலுங்கானா, ஆந்திரபிரதேசம், புதுவை மற்றும் வட தமிழக பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் தென்கிழக்கில் கிழக்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

CamScanner

தொழில்கள்:

அரசியல், அரசுப்பணி, தந்தை தொழில், மகன் தொழிலில் உதவி, அனுபவத் தொழில், தலைமை நிர்வாகம், காவல், பொன் வியாபாரம், இராணுவம், அறுவை சிகிச்சை, இரத்தின வியாபாரம், துப்பறிதல், நீதிபதி, தலைமை, சமூகசேவகர், மந்திரி, மருத்துவர், பண்பாளர், அரசு அதிகாரிகள், உயர்நிலைப் பதவி, காவல், ஆராய்ச்சிப் பணிகள், அரசு உதவி பெரும் தொழில்கள், நரம்பியல் அறுவை சிகிச்சை, மருத்துவம், பேச்சாளர், நூற்புத்தொழில், ரசாயனத்தொழில் ஆகியவை சிம்ம ராசி குறிக்கும் தொழில்களாகும்,

கல்வி:

அரசியல், மனிதவளம், நிர்வாக மேலாண்மை, மருத்துவம், சமூக்கல்வி, பொருளாதாரம் ஆகியவை சிம்ம ராசியின் கல்விகள் ஆகும்,

குறிக்கும் பகுதிகள்:

தர்மஸ்தாபனம், மேடை, அலுவலகம், அலுவலகம், அரண்மனை, குகை, உயரமான பகுதி, நிர்வாக அலுவலகம் தலைநகரம் மேற்கண்ட இடங்கள் சிம்ம ராசியின் தன்மை நிறைந்தவைகளாகும்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது மேற்புற வயிறுக்கு இணையான (முதுகு) சுற்று பகுதியை குறிக்கும் இராசியாகும், வலதுகண் (ஆண்களுக்கு), இடதுகண் (பெண்களுக்கு), கணையம், பல் மற்றும் எலும்புகள், விந்தனு உற்பத்தி, தலை, சிலிர்த்த ரோமங்கள் அனைத்தும் இந்த சிம்ம ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

பித்தநீர் சுரப்பி குறைபாடுகள், விந்தணு உற்பத்தி குறைபாடுகள், கடினமான பகுதி உடைந்து சிதருதல், ஜுரம், ஒற்றை தலைவலி, வியாதியுள்ளோரிடம் உறவு கொள்ளுதல், பாலியல் நோய்கள், மஞ்சள் காமாலை, தானியங்கு உறுப்புகள் தொடர்பான நோய்கள், சூடு தொடர்பான நோய்கள், வாதம், மேற்கண்ட நோய்கள் சிம்ம ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

மேற்பார்வை, நிர்வாகத் திறன், தைரியம், அஞ்சாமை, தன்னம்பிக்கை, மதிப்பு, விடாமுயற்சி, புகழ், ஆளுமைதிறன், தலைமைப் பண்பு, கௌரவம், அடக்கியாளுதல், செல்வாக்கு போன்ற தன்மைகள் சிம்ம ராசியின் பொதுவான குணங்கள்,

கன்னி

இந்த பகுதி இரட்டை பெண்களின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இருப்பினும் ஒரு பெண் ஓடத்தில் அம்ர்ந்து கொண்டு ஒரு கையில் நெற்கதிரையும் மற்றொரு கையில் கைவிளக்கையும் வைத்திருப்பது போல குறியீடு இருக்கும், இந்த பகுதி ராசி மண்டலத்தில் 150 டிகிரி முதல் 180 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் ஆறாவது ராசியாகும், ஜாதகர் தனது வரட்டு பிடிவாத குணத்தால் ஏற்படுத்தி கொள்ளும் சிக்கல்களை இந்த ராசியில் காணலாம், சமூகத்தில் தனக்கு கிடைக்க வேண்டியவற்றை தனது வாத திறமையால் தனது வித்தை திறமையால் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கும் பகுதியாக இது வர்ணனை செயப்படுகிறது, இது வணிக தலைமை

மேலும் சச்சரவுகளை, சொத்து தகராறுகளை குறிக்கும், காதல், தாய் வழி சொந்தங்களின் வழியாக பற்றுதல் மற்றும் வரன் போன்றவற்றை குறிக்கும், இவைகள் கன்னி ராசியின் பொது காரகங்கள் ஆகும்,

பொருட்கள்:

புத்தகம், தொலைபேசி, கடிதம், ஒலிப்பெருக்கி, ஓவியங்கள், மென்மையான பொருட்கள், படமும் கொடிகள் இவைகள் கன்னிராசி பகுதி குறிக்கும் பொருட்கள்,

பகுதிகள்

கன்னி ராசியானது தெற்கு திசையை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, விதவைகள், கன்னிகள், கேளிக்கை நடக்கும் இடங்கள் மற்றும் நீர், உள்ள ஊர் பகுதிகள், தமிழகத்தில் வங்காள விரிகுடா ஒட்டிய பகுதிகள், கன்னியாகுமாரி, தூத்துகுடி, நாகர்கோயில், திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் கேரளா, தமிழ்நாடு லட்சத்தீவு பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் தென்கிழக்கில் தெற்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

ஆவணப்பணிகள், அலுவலகங்கள், செய்தி இதழ்கள் போன்றவற்றை இந்த ராசி குறிக்கும் ஆசிரியர், புத்தக எழுத்தாளர், கணக்குப்பிள்ளை, பதிவுத்துறை, மேடைப்பேச்சாளர், தபால் துறை, சில்லரை வியாபாரம், கணிதப் புலமை, அனைத்து வியாபாரங்களும், சட்டத்துறை, சிற்பத் தொழில், ஓவியர், வரலாற்று ஆசிரியர்கள், தொலை தொடர்புத் துறை, தூதரகப் பணிகள், சிற்பத்தொழில், தரகு, செய்தித்துறை, புத்தகக் கடை,

CamScanner

ஸ்டேசனரி, அச்சுத்தொழில், தரகு, சூதாட்டம், மீடியா, ஐடி, கேமரா, மளிகை கடை, கல்வி சார்ந்த ஆராய்ச்சி, நவீன தொழில் நுட்பம் அனைத்தும் கன்னி ராசியின் தொழில்களாகும்,

கல்வி:

கன்னி ராசி கணிதம், கல்வித்துறை, கணினி பொறியியல், மின்னணுவியல், வணிகவியல், சட்டம் போன்ற கல்விகளை காரகமாக கொண்டுள்ளது,

குறிக்கும் பகுதிகள்:

தானிய சேமிப்புக் கிடங்கு, பள்ளிக்கூடம், நூலகம், மறைவான பகுதி, படிக்கும் அறை, வரவேற்பறை, பூங்கா, கடைவீதி, மண்டபம், படுக்கை அறை, கடலுக்கு அருகில், ஆசுவாசப்படுத்தும் நந்தவனம், பெண்கள் குழுமிய விடுதி, சூதாட்டம் நடைபெறும் கிளப்கள், கூடி அமர்ந்து பேசி முடிவுக்கு வரும் தனிமையான பொது இடங்கள், நாட்டிய மேடைகள், பஞ்சாயத்து கூடங்கள், மன்றங்கள், கோர்ட் இவைகள் கன்னி ராசியின் பகுதிகளாம்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது அடி வயிறுக்கு இணையான (கீழ் முதுகு) சுற்று பகுதியை குறிக்கும் இராசியாகும், மூளை தொடரிகள், தோள்பட்டை, தோல், உள்ளங்கை, தொண்டை, காது, நாக்கு, நரம்பு மண்டலம், நுரையீரல், முதுகுத்தண்டு, புலன்கள், மூக்கு, இடுப்பு, ஆகியவை இந்த ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

ஊமை, செவிடு, திக்குவாய், பார்வைக் குறைபாடு, விபச்சாரத்தின் மூலம் ஏற்படும் நோய்கள், வாதம், நரம்பு தளர்ச்சி,

CamScanner

மூளை கோளாறு, பைத்தியம், கோமா, தோல் நோய்கள், சொறி, சிரங்கு, வெண்குஷ்டம், மேற்கண்ட நோய்கள் கன்னி ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

கலைகள், தொடர்பு, காதல், கல்வி, எழுத்து, வெளிப்படுத்தும் தன்மை, பேச்சு, கேட்கும் திறன், கேள்வி ஞானம், சாதுர்யம், கள்ள தொடர்பு, அறிவுக்கூர்மை யாவும் கன்னி ராசியின் பொதுவான கரகங்கள்,

துலாம்

இந்த பகுதி தராசு எனும் துலாக்கோலின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 180 டிகிரி முதல் 210 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் ஏழாவது ராசியாகும், சமூகத்தில் நாம் தொடர்பு கொள்ளும் அனைத்தையும் குறிக்கும், வணிகம், பரிவர்த்தனை, நமக்கு ஏற்ற உறவுகள், பிறருடன் தன்னை பகிருதல், ஆடம்பரம், சந்தைப்படுத்தும் மற்றும் விளம்பர குணம், ஒருபொருளை விளம்பரம் மற்றும் செய்திகளாக சமூகத்திடம் சேர்ப்பது, ஒரு நிறுவனத்தின் புகழை உலகம் முழுவதும் பரப்புவது, சொந்தத்தில் திருமணம், தனது கொள்கைகளை உயர்த்தி பிடித்து அதை பிரசங்கம் செய்வது போன்றவற்றை இந்த ராசி குறிக்கும்,

பொருட்கள்:

மகிழுந்து, வாசனை திரவியங்கள், கண்ணாடி, ஆடை ஆபரணங்கள், ஆடம்பர உணவு, பர்னிச்சர், மது பானம், நறுமண

பொருட்கள், பணம், இனிப்பு, விலை உயர்ந்த உணவு, பழங்கள், மலர்கள், வாகனம், ரெக்சின், மைக்கா போன்றவை துலா ராசி குறிக்கும் பொருட்களாகும்,

பகுதிகள்

துலாம் ராசியானது மேற்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, தொழில், வணிகம், அரசியல் சார்ந்த இடங்கள் மற்றும் ஆற்றங்கரை, குளக்கரை பகுதிகள், தமிழகத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதிகள், கேரளா ஒட்டிய பகுதிகள், திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் கேரளா, கர்நாடகம் ஆந்திரப்பிரதேசம் மேற்கு பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் தெற்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

பாடகன், நடிகன், வீடு விற்பனை, திருமணம் சார்ந்த தொழில்கள், மீடியா, ஒப்பனை, மார்கெட்டிங், பெய்ண்டிங், விலை உயர்ந்த கால்நடை விற்பனை, பணப்பயிர் வியாபரம், வங்கிப்பணி, சொகுசுவாகன உற்பத்தி மற்றும் வியாபாரம், அயல்நாட்டுப் பணி, நட்சத்திர ஹோட்டல் மற்றும் விடுதிகள், கருவூலம், அலங்கார பொருட்கள் விற்பனை, கண்ணாடி தொழிற்சாலை பணி, அழகு நிலையம், நறுமண பொருட்கள் விற்பனை உற்பத்தி, இரத்தின வியாபாரி, பொன் வியாபாரம், பழவியாபாரம், பணப்பயிர் வேளாண்மை, வட்டித்தொழில், கவிஞர், நிதித்துறை, அரச விருந்தினர், மாளிகை பணி, மருந்து விற்பனை, ஆப்டிகல்ஸ், பட்டு விற்பனை, தொலைக்காட்சி, நடனம், விளம்பர பணிகள், நுகர்வோர் தொடர்பு பணிகள், வேசி, இசை கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனை, வாகன தொழில், புதுமையான தொழில்கள், ஆடிட்டர், சலவையகம், பெண் தொழிலாளர்களை கொண்டு

செய்யும் தொழில்கள், வேற்று மொழி கற்பித்தல், வசந்தகால பயிர்கள் சார்ந்த விவசாயம் போன்ற அனைத்தும் துலாம் ராசியின் தொழில் காரகங்களாகும்

கல்வி:

வேற்றுமொழி இலக்கியம், ஊடகவியல், ஒப்பனையியல், கலை, வணிகவியல், தாதுப்பொருள் சார்ந்த கல்வி அனைத்தும் துலாம் ராசிப் பிரிவின் கல்விகளாகும்,

குறிக்கும் பகுதிகள்:

துலாம் ராசி ஆடம்பரவீடு, கேளிக்கை விடுதி, திரையரங்கம், தோட்டம், பெண்கள் கூடும் இடங்கள், ஷோரூம், விளையாட்டு அரங்கம், விழா அரங்கங்கள், வீடு, சந்தை, கடைவீதி, துறைமுகம், போன்ற பகுதிகளைக் குறிக்கும்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது இடுப்பு மற்றும் அதன் சுற்று பகுதியை குறிக்கும் இராசியாகும், கண்கள், தொண்டை, ஆண்குறி, கன்னம், தாடை, புலன்கள், கர்ப்பபை, முகம், கருமுட்டை, கழுத்து, தோள்பட்டை, ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

பித்தம், சன்னி நோய்கள், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், பால்வினை நோய்கள், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு, இரத்த சோகையால் வரும் தோல் நோய்கள், போதை தொடர்பான நோய்கள், மேற்கண்ட நோய்கள் துலாம் ராசி உணர்த்தும் நோய்களாம்,

பொதுவான தன்மைகள்:

காதல், வசீகரம், கலை, நடிப்பு, கவர்ச்சி, உல்லாசம், பாலுணர்வு, சிற்றின்ப நாட்டம், திருமணம், பட்டப்பெயர், இளமை, பேச்சாற்றல் ஆகியவை துலாம் ராசியின் குணங்கள்,

விருச்சகம்

இந்த ராசிப்பகுதி தேள் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 210 டிகிரி முதல் 240 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் எட்டாவது ராசியாகும், உடல் நலம், பங்குதாரர்களிடமுள்ள சுமூக உறவு, அறுவை சிகிச்சை, வனாந்திர பணி, தனிமை, திடீரென உருவாகும் அனைத்தையும் இந்த ராசி குறிக்கும், தனக்கு மட்டுமே தன்னைப் பற்றி தெரிந்த உண்மைகளையும் அதை பாதுகாப்பது, சொந்தத்தில் திருமணம், கலாட்டாத் திருமணம், உறவுகளுக்குள் தனது வாழ்க்கையை அமைப்பது மேலும் தான் பெற்ற செல்வங்களை பராமரித்து பாதுகாப்பது போன்ற பண்புகளை விருச்சக ராசிப் பிரிவு குறிக்கும்,

பொருட்கள்:

அடுப்பு, மின் கருவிகள், ஆயுதங்கள், கற்கள், கூர்மையான பொருட்கள், முட்கள் இவைகள் விருட்சக ராசிக்குரிய பொருட்கள்,

பகுதிகள்

விருட்சக ராசியானது வடக்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, மிருகங்கள், மருத்துவம், காவலர்கள், இயந்திரம், சார்ந்த இடங்கள் மற்றும் கிணறு, பள்ளம், குட்டை பகுதிகள், தமிழகத்தில் கேரளா ஒட்டிய பகுதிகள், தேனி, பெரியகுளம், திண்டுக்கல், கம்பம், குமுளி போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் மஹாராஷ்ட்ரா, குஜராத், மத்திய பிரதேச மேற்கு பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் தென்மேற்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

மருத்துவம், சவரத்தொழில், பொறியியல், மெக்கானிக், வாகனம் தொடர்பான தொழில்கள், காவல், திருடுதல், சண்டைத் தொழில்கள், அடியாட்கள், விளையாட்டு வீரர்கள், தற்காப்புக் கலைகள், சமையல், உணவு விடுதிகள், சுரங்கப் பணிகள், ஆயுதம் தயாரிப்பு, ஆயுதப்படை, இராணுவம், அரசு சர்வாதிகாரம், எலெக்ட்ரிக்கல் சார்ந்த தொழில்கள், சிற்பப் பணிகள், ரியல் எஸ்டேட், கட்டிடத்துறை பொருட்கள் விற்பனை, கூலி மற்றும் கடின உழைப்பு, புரட்சியாளர், வித்தை காட்டுதல், போர் தளவாட உற்பத்தி, தீவிரவாதம், மண்பாண்ட உற்பத்தி, மந்திரம், உருக்காலை, இயந்திர உற்பத்தி, குழு தலைமை, விவசாயப் பொறியியல், தீயணைப்புத்துறை, செங்கல் சூலை, ரசாயனத் தொழில், சமையல் பாத்திரம் உற்பத்தி மற்றும் விற்பனை, லேத், தொழிற்சாலை பணிகள், மருந்து உற்பத்தி, தையல், தாதுப்பொருட்கள் தொழில், இன்சூரன்ஸ், ரவுடிதொழில், வெல்டிங், செக்யூரிட்டி, கைவினைஞர், லேப், மருத்துவ உபகரணம் உற்பத்தி மற்றும் விற்பனை, சேனாதிபதி, தொல்பொருள் ஆய்வு தொடர்பான தொழில்கள், நுணுக்கப்பொருட்கள் உற்பத்தி,

அகழாய்வுத் துறை போன்றவைகள் விருட்சக ராசி குறிக்கும் தொழில்களாகும்,

கல்வி:

இயந்திரநுட்பம், மருத்துவம், ரசாயனம், சமூகவியல், மேலாண்மை, வேளாண்மை இவை விருட்சக ராசியின் கல்வி காரகங்களாகும்,

குறிக்கும் பகுதிகள்:

நெருப்புள்ள பகுதி, பள்ளத்தாக்கு, குப்பைமேடு, சுரங்கம், கசாப்பு கடைகள், மருத்துவமனை, அறுவைசிகிச்சை கூடம், மயானம், பிரசவ மையங்கள், சமையல் அறை, மின்கருவிகள், காடு, போர்க்களம், சாலை, விச ஜந்துக்கள் வாழும் பகுதி, உலை இந்த பகுதிகள் அனைத்தும் விருட்சக ராசிக்கான பகுதிகள்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது மறைவு ஸ்தானம் அதன் சுற்று பகுதியை குறிக்கும் இராசியாகும், ஆண் மற்றும் பெண்களின் மர்ம உறுப்புக்கள், நகம், பல், நெற்றி, நாசி, புஜங்கள், எலும்பு மஞ்ஜை, இயக்க நரம்புகள், மூக்கு, சிவப்பணு, இருதயம், புருவம், அம்மை ஆகையவை இந்த ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், ராஜ பிளவை, குடல் இறக்கம் ரத்தப் புற்று, அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம் கலைதல், செப்டிக், டான்சிலஸ், விதவை போகத்தால் நோய்கள், இணைவுகளில் வலி வீக்கம், தலும்பு, பித்த நோய்கள்,

மூளை காய்ச்சல், ஊனம், மேற்கண்ட நோய்கள் விருட்சக ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

வீரம், தீரம், பராக்கிரமம், வெற்றி, விபத்து, பேராசை, அதிக காமம், நடத்தை குறைபாடு, போர், கோபம், விவேகம், சாமர்த்தியம், அதிகாரம், விடுதலை வேட்கை, பகைமை பாராட்டுதல், துடிப்பு, துணிச்சல், சாமர்த்தியம், எதிரி, தீ பயம், கடன், பழிவாங்குதல், மன வலிமை போன்றவைகள் விருட்சக ராசியை கொண்டு அறியும் குணங்களாகும்,

தனுசு

இந்த பகுதி வில்லேந்திய குதிரை மனிதனின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 240 டிகிரி முதல் 270 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் ஒன்பதாவது ராசியாகும், ஒருவரின் ஈகை குணம், அதே நேரம் அவரின் குறுக்கு புத்தி, ஆலோசனை வழங்கும் திறன் போன்றவற்றை குறிக்கும், கௌரவம் கண்ணியம் போன்ற போற்றுதலுக்குரிய குணங்களை உடையது, சூத்திரதாரியாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் ஆற்றல் போன்றவை இந்த ராசியின் குணங்களாம்,

பொருட்கள்:

தங்கம், எழுதுகோல், உயர் மதிப்புள்ள சீருடைகள், நிதி நிறுவன பெட்டகங்கள், அலுவலர் மேசை ஆகிய பொருட்கள் தனுசு ராசியின் காரக பொருட்கள்,

பகுதிகள்

தனுசு ராசியானது கிழக்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, முக்கிய நபர்கள், சுபவேலை தொடர்பான ஆட்கள் உள்ள இடங்கள் மற்றும் தோட்டம், ஊர் பகுதிகள், தமிழகத்தில் கேரளா ஒட்டிய பகுதிகள், கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் ராஜஸ்தான் குஜராத், மத்திய பிரதேச மேற்கு பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் மேற்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

ஆசிரியர், நிதித்துறை, பொன் வியாபாரம், ஞான உபாசகர்கள், கௌரவப் பணியாளர்கள், உயர்பதவிகள், யாத்திரைத் தொழில்கள், ப்ரோகிதம், பொதுப்பணிகள், பக்தி மார்க்கம், அறிவுரை மற்றும் ஆலோசனை பணிகள், சேவை நிறுவனங்கள், நீதித்துறை, ஆன்மீகப் பணிகள், தர்மகர்த்தா, அறநிலையத்துறை, தலைவர் பொறுப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாதுகாப்புத் துறை, திருப்பணிகள் போன்றவைகள் இந்த ராசியின் காரக தொழில்கள்,

கல்வி:

மனிதவள மேலாண்மை, பொருளாதாரம், வேதம், கணிதவியல், மனோதத்துவம் இவையாவும் இந்த ராசி குறிக்கும் கல்விகள்

குறிக்கும் பகுதிகள்:

நீதிமன்றங்கள், கோயில், அரச சபைகள், பஞ்சாயத்து கூடங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், சேவை ஸ்தாபனங்கள், பூஜை அறை இவைகள் தனுசு ராசியினால் குறிக்கப்படுகிறது.

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது தொடையில் இருந்து முழங்கால் வரையுள்ள சுற்று பகுதியை குறிக்கும் இராசியாகும், மூளை, வயிறு, தசை மற்றும் தசை நார்கள், அனைத்து ஈரல்களும், கொழுப்பு, பாதம், தொடை, மூக்கு, சீரண உறுப்புகள் இவைகள் தனுசு ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

மூளை தொடர்பான நோய்கள், நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசைப் பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை, மேற்கண்ட நோய்கள் தனுசு ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

கௌரவம், இனிப்பு, நலம், செல்வாக்கு, உயர் அந்தஸ்த்து, செல்வம், புகழ், தந்திரம், நினைவுத்திறன், வித்தை, மேதவித்தனம் ஆகியவைகள் தனுசுவின் குணங்கள்.

CamScanner

மகரம்

இந்த பகுதி முதலை போன்ற நிலம் நீர் வாழ் உயிரினத்தின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 270 டிகிரி முதல் 300 டிகிரி வரை உள்ளதாகும், இது ராசி மண்டலத்தில் பத்தாவது ராசியாகும், இந்த ராசி பொருள் ஈட்டும் குணம், ஜீவனம் செய்வதற்கான வழிகள், சமூகத்துடன் இணக்கம், உழைப்பு, செயல்பாடுகளினால் கிடைக்கும் பிரதிபலன் போன்றவற்றை குறிக்கும் ராசியாகும், உழைப்பு, தேசமெங்கும் பயணம், திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவதற்கான அமைப்பை குறிக்கும் ராசியாகும்,

பொருட்கள்:

முடி, கம்பளி, வழவழப்பான பொருட்கள், மண் சார்ந்த வேதி பொருட்கள், எண்ணெய் வகைகள், கரி, கல், மண் மகரத்தின் காரகங்கள்,

பகுதிகள்

மகர ராசியானது தெற்கு திசையை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, நண்பர்கள், போக்குவரத்து, மக்கள் விருப்பம் நிறைந்த இடங்கள் மற்றும் அகழி, நதி பகுதிகள், தமிழகத்தில் கர்நாடகா ஒட்டிய பகுதிகள், ஈரோடு, உதகை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் ராஜஸ்தான் ஹரியானா, பஞ்சாப், தில்லி பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் வடமேற்கில் வடக்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்,

தொழில்கள்:

கூலிவேலை, எடுபிடி வேலை, சதி தொழில்கள், கல் மற்றும் மண் வியாபாரம், திருட்டு தொழில்கள், ஆயில் கிரீஸ் தொழில்கள், இரும்புத் தொழில்கள், டீக்கடை, ஹோட்டல், துப்புரவுப் பணி, கருமை நிற தானிய வியாபாரம், சுரங்க தொழில்கள், தாதுப் பொருள் விற்பனை, சிறை காவலர் பணி, பழைய பொருள் வியாபாரம், அடிமைத்தொழில், கால்நடை வளர்ப்பு, முடி வியாபாரம், கம்பளித் தொழில்கள், மர வேலை, அடிமைகளை வைத்து வேலைவாங்குதல், கழிவுத்தொழில், முடி திருத்துபவர், தோல் தொழில்கள், ரியல் எஸ்டேட், சூதுத் தொழில்கள், பலநாள் செய்து முடிக்கும் பணிகள், அயல் நாட்டு பணிகள் யாவும் மகர ராசியுடைய பணிகளாகும்,

கல்வி:

ரசாயனம், அன்னியவழிக் கல்வி, வேளாண்மை, கனிம அறிவியல், வேதியியல் போன்ற கல்விகள் மகரத்தினுடையது.

குறிக்கும் பகுதிகள்:

நீதி மன்றம், மயானம், தூக்குமேடை, சேமிப்புக் கிடங்கு, கிணறு ஆகிய இடங்கள் மகர ராசியுடைய பகுதிகளாகும்,

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது முழங்கால் சுற்று பகுதியை குறிக்கும் இராசியாகும், முழங்கால், எலும்பு, கணுக்கால், தொடை, தாடை, காது, இயக்க நரம்புகள் இந்த ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

ஊனம், சித்த பிரமை, பித்த நோய்கள், காசநோய், குஷ்டம், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், மலடு, அங்க ஊனம்,

CamScanner

கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் மேற்கண்ட நோய்கள் மகர ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

மகர ராசி பொதுவாக சோம்பேறித்தனம், பீதி, தயக்கம், துயரம், சந்தேகம், மந்த புத்தி, தோல்விபயம், காரியதாமதம், கருமித்தணம், தண்டனை, சிறைபடுதல், குறையுள்ள நபர்களுடன் இணை சேருதல், பிடிவாதம், விரக்தி போன்றவற்றை குறிக்கும்,

கும்பம்

இந்த பகுதி வெற்றுப் பானையை கரிய நிறமுள்ள வீரன் அதுவும் அடிமை வீரன் வைத்துள்ள உருவகத்தால் குறிக்கப்படுகிறது, இந்த பகுதி ராசி மண்டலத்தில் 300 டிகிரி முதல் 330 டிகிரி வரை உள்ளதாகும், இந்த ராசியானது மறைமுகமான ராசியாக கூறப்படுகிறது, இது ராசி மண்டலத்தில் பதினொன்றாவது ராசியாகும், செயலின் விளைவு, செய்தனவற்றின் பயன்கள், உழைப்பின் லாபத்தை குறிக்கும், தேடுதல், கண்டறிதல், சோதித்தல் ஆகிய குணத்துடன் இருக்கும், உள்ளே பலவிதமான ரகசியங்களை கொண்ட ராசியாகும்,

பொருட்கள்:

முடி, கம்பளி, வழவழப்பான பொருட்கள், மண் சார்ந்த வேதி பொருட்கள், எண்ணெய் வகைகள், கரி, கல், மண்,

புதையல், மறைத்து வைத்தவை, அராய்ச்சிக்கான கருவிகள் போன்றவைகள் யாவும் கும்பத்தின் காரக பொருட்கள்,

பகுதிகள்

கும்ப ராசியானது மேற்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, பரிசோதனை, அறைகள், தேடுதல் கண்டறிதல், சோதனை செய்யும் இடங்கள் மற்றும் கடல், ஏரி, தாங்கல் பகுதிகள், தமிழகத்தில் கர்நாடகா ஒட்டிய பகுதிகள், சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, திருப்பூர் மேற்கு போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் தில்லி, ராஜஸ்தான் கிழக்கு, உத்திரபிரதேசம் மேற்கு, மத்திய பிரதேசம் வடக்கு பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் வடக்கு எல்லைப் பகுதிகளை ஒட்டிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்

தொழில்கள்:

புலனாய்வுதுறை, ஆராய்ச்சித்துறை, போன்றவற்றை குறிக்கிறது கூலிவேலை, எடுபிடி வேலை, சதி தொழில்கள், கல் மற்றும் மண் வியாபாரம், திருட்டுத் தொழில்கள், ஆயில், கிரீஸ் தொழில்கள், இரும்புத் தொழில்கள், டீக்கடை, ஹோட்டல் துப்புரவு பணி, கருமை நிற தானிய வியாபாரம், சுரங்க தொழில்கள், தாது பொருள் விற்பனை, சிறைக்காவலர் பணி, பழைய பொருள் வியாபாரம், அடிமைத் தொழில், கால்நடை வளர்ப்பு, முடி வியாபாரம், கம்பளி தொழில்கள், மர வேலை, அடிமைகளை வைத்து வேலை வாங்குதல், கழிவு தொழில், முடி திருத்துபவர், தோல்த் தொழில்கள், ரியல் எஸ்டேட், சூதுத் தொழில்கள், பலநாள் செய்து முடிக்கும் ப்ணிகள், அயல் நாட்டு பணிகள் ஆகிய அனைத்தும் கும்ப ராசி குறிக்கும் தொழில்கள்,

CamScanner

கல்வி:

ஆய்வுக்கல்வி, மனோதத்துவம், சட்டம், தத்துவம், மரபுசார் மருத்துவம் போன்ற கல்விகள் கும்ப ராசியினுடையது

குறிக்கும் பகுதிகள்:

நீதி மன்றம், மயானம், தூக்குமேடை, சேமிப்புக்கிடங்கு, கிணறு இவைகள் கும்ப ராசி குறிக்கும் பகுதிகள்

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது கணுக்கால் பகுதியை குறிக்கும் இராசியாகும், முழங்கால், எலும்பு, கணுக்கால், தொடை, தாடை, காது, இயக்க நரம்புகள் ராசியின் காரக உறுப்புகளாகும்,

நோய்கள்:

ஊனம், சித்த பிரமை, பித்த நோய்கள், காசநோய், குஷ்டம், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், மலடு, அங்க ஊனம், கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயுப் பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் மேற்கண்ட நோய்கள் கும்ப ராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

கும்ப ராசி சோம்பேறித்தனம், பீதி, தயக்கம், துயரம், சந்தேகம், மந்த புத்தி, தோல்விபயம், காரியதாமதம், கஞ்சம், தண்டனை, சிறைபடுதல், குறையுள்ளவர்களுடன் இணை சேருதல், பிடிவாதம், விரக்தி போன்றவற்றை குறிக்கும்

CamScanner

மீனம்

இந்த பகுதி இரட்டை மீன்களின் உருவகத்தால் குறிக்கப்படுகிறது. ஒரு மீனின் வால் மற்றொரு மீனின் வாயில் இருப்பது போல மாறி மாறி பிடித்து இருக்கும் இந்த பகுதி ராசி மண்டலத்தில் 330 டிகிரி முதல் 360 டிகிரி வரை உள்ளதாகும். இது ராசி மண்டலத்தில் பன்னிரண்டாவது ராசியாகும். இராசியாகும். ஒவ்வொரு செயலின் நிறைவு, அதன் முடிவுகளை கூறும் ராசி, இறுதியில் மிஞ்சியது என்ன என வெளிப்படுத்தும், ஒரு மனிதனின் மொத்த வாழ்க்கையின் மதிப்பெண்ணைக் கூறும் ராசியாகும்

பொருட்கள்:

தங்கம், எழுதுகோல், உயர் மதிப்புள்ள சீருடைகள், நிதி நிறுவன பெட்டகங்கள், அலுவலர் மேசை ஆகியவை மீன ராசியின் காரக பொருட்கள்

பகுதிகள்

மீனம் ராசியானது வடக்கு திசை நோக்கி செல்லும் அல்லது அந்த திசையில் இருந்து அனைவரையும் ஈர்க்கும் குணம் கொண்டது, கண்ணாடி, கடல், தங்கம், சோஃபா தயாரிக்கும் வணிகம் செய்யும் இடங்கள் மற்றும் சுனை, அருவி, ஊற்று பகுதிகள், தமிழகத்தில் தமிழக மையப் பகுதி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை போன்ற மாவட்டங்கள், இந்தியாவில் மத்தியபிரதேசம், சட்டிஷ்கர், மஹாராஷ்ட்ரம், தெலுங்கானா வடக்கு பகுதிகள், எந்த ஊர் மற்றும் நாடு அல்லது சிறிய இடமாக இருந்தாலும் மையப் பகுதிகளை சுற்றிய இடங்களைப் பற்றி இந்த ராசியை வைத்து அறியலாம்.

CamScanner

தொழில்கள்:

ஆசிரியர், நிதி துறை, பொன் வியாபாரம், ஞான உபாசகர்கள், கௌரவப்பணியாளர்கள், உயர்பதவிகள், யாத்திரை தொழில்கள், ப்ரோகிதம், பொதுபணிகள், பக்தி மார்க்கம், அறிவுரை மற்றும் ஆலோசனை பணிகள், சேவை நிறுவனங்கள், நீதித்துறை, ஆன்மீகப் பணிகள், தர்மகர்த்தா, அறநிலையத்துறை, தலைவர் பொறுப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாதுகாப்பு துறை அமைச்சர், திருப்பணிகள் இவைகள் யாவும் இந்த ராசியின் தொழில்களாகும்,

கல்வி:

பொருளாதாரம், நிதிமேலாண்மை, மனிதவளம், வணிகம் ஆகியவை மீனராசி பிரிவின் கல்வி காரகங்களாகும்,

குறிக்கும் பகுதிகள்:

இது ராசி மண்டலங்களின் கஜானா என அழைக்கப்படுகிறது, பணம் புழங்கும் இடங்களை குறிக்கும், நீதிமன்றங்கள், கோயில், அரச சபைகள், பஞ்சாயத்துக் கூடங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், சேவை ஸ்தாபனங்கள், பூஜை அறை இந்த பகுதிகள் மீனராசியினால் குறிக்கப்படுகிறது

உடல் உறுப்புகள்:

பொதுவாக இது கால் விரல்கள், பாதம் போன்ற பகுதியை குறிக்கும் மூளை, வயிறு, தசை மற்றும் தசை நார்கள், அனைத்து ஈரல்களும், கொழுப்பு, பாதம், தொடை, மூக்கு, சீரண உறுப்புகள் யாவும் மீனராசியின் காரக உறுப்புகளாகும்,

CamScanner

நோய்கள்:

மூளை தொடர்பான நோய்கள், நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை மேற்கண்ட நோய்கள் மீனராசி உணர்த்தும் நோய்களாம்

பொதுவான தன்மைகள்:

கௌரவம், இனிப்பு, நலம், செல்வாக்கு, உயர் அந்தஸ்து, செல்வம், புகழ், தந்திரம், நினைவு திறன், வித்தை, மேதாவித்தனம், உபதேசம் போன்றவை மீன ராசியின் காரக தன்மைகளாகும்

மேலே பார்த்த சில தகவல்களைப் போல இன்னும் ஆயிரம் ஆயிரம் காரகங்கள் ராசிகளுக்கு உண்டு அவற்றை நீங்கள் அனுபவத்தில் புரிந்து கொள்வீர்கள், மேலும் ஜோதிடத்தை நீங்கள் காரணங்களோடு புரிந்து கொள்ளுதல் இன்னும் அதிகமாக ஒவ்வொன்றையும் பிரித்துப் பார்க்கும் ஆற்றல் அதிகரிக்கும் உதாரணமாக பிளாஷ்டிக் பொருட்களை குறிக்கும் ராசி எது என்றால் பண்டைய நூல்களில் தேடினால் கிடைக்காது, அப்படி என்றால் பிளாஷ்டிக் பற்றிய தகவல்களை வைத்துக் கொண்டு எந்த ராசி என்று புரிந்து கொள்ள திறம் வேண்டும் வேறு வகையில் பார்த்தால் பிளாஷ்டிக் எந்த கிரகத்தை வைத்து குறிக்க வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக கட்டுமானம் அல்லது ஒட்டுதல் இணைத்தல் போன்ற குணங்களை குறிக்கும் கிரகம் புதன் ஆகும் இதற்கு நெகிழும் குணமும் காரகமாகும் பிளாஷ்டிக் கூட கட்டுமானம் இணைத்தல் அதாவது சிமெண்ட் போன்ற குணம் உடையது


சிமெண்ட் கூட புதன் குறிக்கும் பொருள்தான், அதைப் போல் பிளாஷ்டிக்கும் புதன்தான். புதன் மிதுனம் மற்றும் கன்னியின் அதிபதியாகும், மிதுனம் கன்னி இவைகளில் இணைப்பை குறிக்கும் ராசி மிதுனம், மிதுனம் என்பது மைதுனம் என்ற வார்த்தையின் திரிபுதான், மைதுனம் என்றால் இணைதல் எனப் பொருள், இது போல ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும்,

அடுத்த பகுதியில் கிரக காரகங்கள் கொடுத்துள்ளேன், பொதுவாக ராசி காரகங்களும் அந்த ராசியின் அதிபதியான கிரகத்தின் காரகமும் ஏறதாழ ஒன்றாகவே இருக்கும், மேலும் அதிகமான காரகங்களை தெரிந்து கொள்ள அடுத்து வரும் பகுதியில் கிரக காரகங்கள் தந்துள்ளேன் அதை வைத்து தேவையான ராசியின் காரகங்களை அதன் அதிபதி காரகங்களை வைத்து புரிந்து கொள்ளவும்,


ராசிகள் குறிக்கும் நாட்டின் பகுதிகள்


மேலும் ஒவ்வொரு ராசியும் குறிக்கும் மாவட்டங்களை தந்துள்ளேன் அது போல ஒவ்வொரு ராசிகளும் குறிக்கும் ஒவ்வொரு மாநிலத்திற்கும், இந்தியாவிற்கும், மற்ற நாடுகளுக்கும் நிலப்பரப்பை எப்படி கண்டறிவது, படத்தில் கவனியுங்கள் சுருள் போல கொடுத்துள்ளேன், பிரபஞ்சமே சுருள் அடிப்படையில்தான் இருக்கிறது, அந்த சுருளில் எந்த பகுதி எந்த ராசி என குறித்துள்ளேன், அதை மாதிரியாக வைத்துக் கொண்டு எந்த நாட்டிற்கும், எந்த ஊருக்கும், எந்த மாநிலத்திற்கும் பொருத்தலாம், உங்களின் விட்டைக் கூட இதன் அடிப்படையில் ராசிகளாக பிரிக்கலாம்,

CamScanner



அந்த படத்தில் மேல் பக்கம் வடக்கு என புரிந்து கொள்ளவும் அதை வைத்து இந்த படத்தினை பயன்படுத்தி எதனை வேண்டுமானாலும் பிரித்துக் கொள்ளலாம், மேலும் ராசிகள் குறிக்கும் பகுதிகளை தெரிந்து கொண்டால் ஒவ்வொரு ராசியும் குறிக்கும் பகுதியை அந்த ராசி அதிபதி குறிக்கும் எனவே அதிலிருந்து ராசிக்கான மற்றும் கிரகங்களுக்கான பகுதிகள், நாடுகள், மாநிலங்கள், மாவட்டங்கள், ஊர்கள், தெருவுகள், வீடுகள், அதிலும் எந்த அறை என்பது வரை எளிதாக புரிந்து கொள்ள முடியும், இன்னும் சரியாக அந்த அறையில் எந்த பகுதி என்பது வரை சரியாக பிரிக்க முடியும்,





இதில் தமிழகத்தை பிரிக்கும் முறையை படத்தில் கொடுத்துள்ளேன், மேலும் ஒவ்வொரு ஊரும், நாடும், மாநிலமும் வட்டமான பகுதிகளாக இருக்காது ஒழுங்கற்ற வடிவத்தில் பரந்து இருக்கும், அதுமட்டும் அல்லாமல் கால சூழலுக்கு ஏற்ப சில பகுதிகள் இரண்டு மூன்றாக பிரிக்கப்படலாம், எனவே சுருள் போல நாம புரிந்து கொண்டாலும் சூழலுக்கு ஏற்ப அந்த வடிவத்தை பரப்பின் வடிவத்திற்கேற்ப மாற்றி கையாள வேண்டும் இந்த இரண்டு படங்களைப் பாருங்கள் அதில் முதல் படத்தில் தமிழ்நாட்டின் பகுதியை வட்டமாக பிரிக்கும் போது சரியாக புரியவில்லை அதையே இரண்டாவது படத்தில் பாருங்கள், தமிழ்நாட்டின் வடிவத்திற்கேற்ப பிரிக்கும் போது சரியாக பிரிக்கலாம், சரியாக புரிந்து கொள்ளவும் முடியும்,

கிரக காரகம்

கடந்த பகுதியில் ஒவ்வொரு ராசியின் காரகங்களை பார்த்தோம், அதே போல இனி வரும் பகுதியில் கிரகங்களின் காரகங்களை காணலாம், ராசியை விட அதிகமான காரகங்கள் கிரகங்களுக்கு கொடுத்துள்ளேன், அதற்கான காரணம் நாம் பெரும்பாலும் கிரகங்களை வைத்துதான் பலன்கள் கூறப் போகிறோம் இருப்பினும் சில சமயங்களில் ராசிகளையும் பயன்படுத்த வேண்டும், அதுவும் இல்லாமல் தேவை இருந்தால் கிரக காரகங்களை வைத்துக் கொண்டு அந்த கிரகம் அதிபதியாக உள்ள ராசியின் குணத்தையும் தெரிந்து கொள்ளலாம், இதில் வரும் காரகங்களில் நிறம், பறவை, விலங்கு, தூரம், திசை, சாதி, உலோகம், இடம் என பல்வேறு வகையிலும் தனித்தனியாக ஒவ்வொரு கிரகத்திற்கும் கொடுத்துள்ளேன், அவற்றை ஒவ்வொரு கிரகமும் முக்கியத்துவம் அடையும் இடத்தில் காலத்திற்கேற்ப

CamScanner

கையாளலாம், உதாரணமாக, ஒருவருக்கு சந்திரன் மிக முக்கியமான கிரகம் என முடிவுக்கு வந்து விட்டீர்கள், அது எப்படி என வரும் பகுதிகளில் காணலாம், இப்போது புரிதலுக்காக பேசுகிறோம்,

ஒருவேளை சந்திரன் மிக முக்கியமானது ஜாதகத்தில் என முடிவுக்கு வந்து விட்டால், சந்திரனுக்கான ஜாதி வெள்ளாளர், கோனார் எனவே ஜாதகர் அந்த பிரிவிலோ அல்லது அந்த ஜாதியை சார்ந்த பகுதியிலோ வசிக்கலாம் அல்லது மிகவும் முக்கியமான நண்பர்கள் அந்த பிரிவில் இருக்கலாம், அல்லது அந்த ஜாதியில் கலப்பு திருமணம் குடும்பத்தில் யாராவது செய்யலாம், ஜாதகரின் வீட்டு கதவு தெற்கு திசையை பார்த்து இருக்கலாம், வீட்டு எண் 21 ஆக இருக்கும், ஜாதகரின் குலதெய்வம் அவர் வசிக்கும் பகுதியில் இருந்து 16 கிலோமீட்டர் கிழக்கில் இருக்கலாம், இது போல சந்திரனின் காரகத்தினை உங்கள் அனுபவம் மற்றும் சிந்தனைக்கு தக்கபடி கையாளலாம், பலன் சொல்ல சொல்ல அனுபவத்தில் இன்னும் அதிகமாக பலன்கள் வரும்,

சூரியன்

பிரதான தன்மைகள்;

ஒரு ஜாதகத்தில் சூரியன் என்ற கிரகத்தின் நிலையை வைத்து ஜாதகரின் ஆளுமை, உருவாக்கும் திறன் மற்றும் சுய தொழில் வாய்ப்புகள் போன்றவற்றையும் தந்தை, மாமனார் மற்றும் குழந்தைகள் குறிப்பாக மகன் பற்றியும் அறியலாம்,

இடம்;

தலைநகரம், மரவேலை செய்யும் இடங்கள், குடோன், வன இலாகா அலுவலகம், தர்ம ஸ்தாபனம், மேடை,

CamScanner

அரண்மனை, குகை, உயரமானபகுதி, நிர்வாக அலுவலகம், ஆகிய இடங்கள் சூரியன் குறிப்பிடும் பகுதிகளாகும்

பொருள்கள்;

விலைமதிப்பு மிக்கவை, தலைமை நாற்காலி, பிரகாசிக்கும் பொருட்கள், விலை உயர்ந்த உலோக பொருட்கள், கண்ணாடி, மின்விளக்கு, தலைநகரம், தந்தை வழி சொத்து ஆகியவை சூரியனால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

தொழில்கள்;

அரசியல், அரசுப்பணி, தந்தை தொழில், மகன் தொழிலில் உதவி, அனுபவ தொழில், தலைமை நிர்வாகம், காவல், பொன் வியாபாரம், இராணுவம், அறுவைசிகிச்சை, இரத்தின வியாபாரம், துப்பறிதல், நீதிபதி, தலைமை, சமூகசேவகர், மந்திரி, மருத்துவர், பண்பாளர், அரசு அதிகாரிகள், உயர்நிலை பதவி, ஆராய்ச்சி பணிகள், அரசு உதவி பெரும் தொழில்கள், நரம்பியல் அறுவைசிகிச்சை மருத்துவம், பேச்சாளர், நூற்புதொழில், ரசாயனத்தொழில் இவைகள் யாவும் சூரியனின் காரகத்துவ தொழில்களாகும்,

பொது தன்மைகள்;

மேற்பார்வை, நிர்வாகத் திறன், தைரியம், அஞ்சாமை, தன்னம்பிக்கை, மதிப்பு, விடாமுயற்சி, புகழ், நிதானம், பொறுப்பு, ஆளுமைதிறன், தலைமைப்பண்பு, கௌரவம், அடக்கியாளுதல், செல்வாக்கு, போன்றவை சூரியனின் பொதுவான தன்மைகள் ஆகும்,

CamScanner

உறுப்புகள்;

பொதுவாக சூரியன் தலையை குறிக்கும், வலதுகண் (ஆண்களுக்கு), இடதுகண் (பெண்களுக்கு), கணையம், பல் மற்றும் எலும்புகள், கபாலம் விந்தணு உற்பத்தி, தலை, சிலிர்த்த ரோமங்கள் ஆகியவை சூரியனின் காரக உறுப்புகள்,

நோய்கள்;

பித்தநீர் சுரப்பி குறைபாடுகள், விந்தணு உற்பத்தி குறைபாடுகள், கடினமான பகுதி உடைந்து சிதருதல், ஜுரம், ஒற்றைத் தலைவலி, வியாதியுள்ளோரிடம் உறவு கொள்ளுதல், பாலியல் நோய்கள், மஞ்சள் காமாலை, தானியங்கு உறுப்புகள் தொடர்பான நோய்கள், சூடு தொடர்பான நோய்கள், வாதம் இவைகள் யாவும் சூரியனால் குறிக்கப்படும் நோய்களாகும்,

மேலும் கீழ்காணும் ஒவ்வொன்றும் கூட சூரியனின் காரகங்களாகும் இந்த காரகங்களை சூரியனின் நிலை முக்கியமாகும் போது அந்த ஜாதகருக்கு கூறும் பலன்களில் கூறலாம், உதாரணமாக சூரியன் தலைவலி, டென்ஷன், ஒரு ஜாதகத்தில் சூரியன் முக்கியமாகும் போது ஜாதகருக்கு இந்த பிரச்சனை அதிகமாகும் அவரது வீடு அரசு அலுவலகம் அருகில் இருக்கும், அவரும் அரசுப்பணி அல்லது சொந்த தொழிலில் இருப்பர், எப்பொதும் தந்தை மகனுடன் கருத்து வேறுபாட்டுடன் இருப்பார், அவருக்கு இடுப்பு பகுதியில் சிறிய கட்டி, தழும்பு இருக்கும், அவர் குடும்பத்தில் ராஜா, சங்கர், ரவி, சூர்யா, நாதன், பாஸ்கர் என பெயர்கள் இருக்கும், மேலும் ஜாதகர் வன்னியர் (படையாட்சி), விஷ்வகர்மா, மறவர் போன்ற பிரிவுகளில் இருக்கலாம், அல்லது அவர்களுடன் நெருக்கமான நட்பில் இருக்கலாம், இது போல ஒவ்வொரு கிரக காரகத்தையும் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும் கீழே சூரியனின் மற்ற காரகங்களையும் அதைத் தொடர்ந்து மற்ற இரக காரகங்களையும்

CamScanner

அளித்துள்ளேன் இந்த காரக பகுதியை மட்டும் கொஞ்சம் மெனக்கெட்டு புரிந்து கொண்டால் போதும் ஜோதிடம் மிகவும் உங்களுக்கு சரளமாக வந்துவிடும்.

நிறம் ; ஆரஞ்சு, ரோஸ், பிங்க், மெரூன்

விலங்கு ; சிங்கம், குதிரை, ராஜாளி, மர வண்டுகள்

வயது ; 50

உருவம் ; சதுரம்

தூரம் ; 120, 50 கிலோமீட்டர்

சுவை ; காரம்

தூபம் ; சந்தனம்

உலோகம் ; தாமிரம் (செம்பு)

மலர் ; செந்தாமரை, சூரிய காந்தி,

தானியம் ; கோதுமை, தனியா, மிளகு

துணி ; முரட்டுத் துணி

கனி ; ஆப்பிள்

இடம் ; வலது பக்க ஜன்னல்

மரம் ; வில்வம், எருக்கு

எண் ; 5, 1

திசை ; மேற்கு, மேல் பக்கம்

தாவரம்	; சூரியகாந்தி, எருக்கு,
உணவு	; கோதுமை பண்டம்
மருந்து	; பட்டை
ஜாதி	; ஷௌராஷ்ட்ரா, ப்ராமணர், சைவர், மறவர், வன்னியர், விஷ்வகர்மா, ஆச்சாரி
மருவடு	; இடைப் பகுதியில்

சந்திரன்

பிரதான தன்மைகள்;

ஒரு ஜாதகத்தில் சந்திரன் என்ற கிரகத்தின் வழியாக தாய், மாமியார், மனம், மாற்று பெண் (வேறு பெண்), வீடு, வாகனம், அயல்நாட்டு பயணம் போன்றவைகளை அறிந்து கொள்ள முடியும்,

இடம்;

சந்திரன் பொதுவாக நீர் நிலை, ஆறு, குளம், குளியல் அறை, வயல், வீடு, தெய்வ ஸ்தலம், பொது வசதி தொழில்கள், விருந்து, சாப்பாட்டு மேசை, மதுக்கடை, கடல், உப்பளம், படகு குழாம் போன்ற இடங்களை குறிக்கும்,

பொருள்கள்;

திரவப்பொருள், குளிர்பானம், ஆடை, வாகனம், பால், தயிர், எண்ணெய், முத்து, சங்கு, நீர் சத்து காய்கனிகள், தினமும்

CamScanner

விற்றுதீரும் பொருள், உணவு, உப்பு, வெண்மை நிறப்பொருட்கள், நீர் பம்புகள், வாகனம், விரைவாக வளரும் செடி கொடிகள், குளிர்சாதன பொருட்கள் ஆகிய பொருட்கள் சந்திரனின் காரகத்துவமுள்ள பொருட்களாகும்,

தொழில்கள்;

கலைகள், ஜோதிடம், அரிசி வியாபாரம், பூ மற்றும் பழம் வியாபாரம், கவிதை, கட்டுரை, இலக்கியம், ஓவியம், நீர் தொடர்பான தொழில், ஏமாற்றுத் தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, அயல்நாட்டு பணி ,அயல்நாட்டு தொழில், வேளாண்மை, மாலுமி, கப்பல், கப்பல் பணி, செவிலியர், மருத்துவம், போக்குவரத்து தொழில், வாகனம், வாகன உற்பத்தி, வாகன பழுது நீக்குதல், குளிர்சாதன பொருட்கள் உற்பத்தி மற்றும் பழுது நீக்குதல், கலை சார்ந்த கல்வி, பேச்சாளர், சலவை, கட்டிடத்துறை, மாறும் அரசியல்வாதி, தினமும் விற்றுதீரும் பொருள் விற்பனை, ஆடு மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, சாஸ்திர விற்பனர், நடிப்பு, இசை, எழுத்தாளர், ரயில்வே பணிகள், விமான நிலைய பணிகள், சுற்றுலாத்துறை, சேவை நிறுவனம், தோட்ட வேலை மேற்கண்ட தொழில்களை சந்திரனை வைத்து குறிப்பார்கள்,

பொது தன்மைகள்;

அழகு, பயணம், இடமாற்றம், கலை, கற்பனை, சபலம், மாறும் புத்தி, வெண்மை, பிடிவாதம், மகிழ்ச்சி, அன்பு ,தயவு, தூக்கம், உறுதியின்மை, அவப்பெயர், சகிப்புதன்மை, கள்ளத்தனம் ஆகிய குணங்கள் சந்திரனுடயதாகும்,

உறுப்புகள்;

பொதுவாக சந்திரன் முகத்தை குறிக்கும், இடது கண் (ஆண்களுக்கு), வலதுகண் (பெண்களுக்கு), சுரப்பிகள், புருவம், பெண்களின் மார்பகம், சிறுநீரகம், புலன்கள், வயிறு, இரத்த

நாளங்கள், கர்பப்பை, மூளையின் தொடரிகள் இவைகள் சந்திரனின் காரக உறுப்புகள்,

நோய்கள்;

சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுப்போக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், குடல்வால், மூளை புற்று, உணவு குழாய் தொடர்பான நோய்கள், காற்றின் ஈரப்பதம் தொடர்பான தோல் நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், விரைவீக்கம், இரத்தசோகை, சிறுநீரக கல், தூக்கமின்மையால் வரும் நோய்கள், ஆசை தொடர்பால் வரும் நோய்கள், நீர் கட்டிகள் ஆகிய உபாதைகளை சந்திரனே குறிக்கும்,

நிறம்	; சாம்பல், மங்களான வெளிர் நிறம்
விலங்கு	; ஆடு, மாடு, கோழி, புறா, வெளிநாட்டு பறவைகள், முயல், மற்றும் நீர்வாழ் உயிரினம்
வயது	; 70
உருவம்	; வட்டம்
தூரம்	; 15, 70 கிலோமீட்டர்
சுவை	; துவர்ப்பு,
தூபம்	; பால் சாம்பிராணி,
உலோகம்	; ஈயம்
மலர்	; வெள்ளரளி
தானியம்	; அரிசி, உப்பு, மோர், வெள்ளரி, முள்ளங்கி

CamScanner

துணி	; புதிய துணி
கனி	; சாத்துக்குடி
இடம்	; இடது பக்க ஜன்னல், நீர்த்தொட்டிக்கு அருகில்
மரம்	; முருங்கை, வாழை
எண்	; 2, 21
திசை	; தெற்கு, கிழக்கு, நேராக பார்க்கும்,
தாவரம்	; கரும்பு, கிழங்கு
உணவு	; தயிர், அரிசி சாதம், வெண்ணெய்
மருந்து	; கிழங்கு
ஜாதி	; வெள்ளாளர், கோனார், மருத்துவர், வள்ளுவர், சுண்ணாம்புகாரர், நாடார்
மருவடு	; தலைப் பகுதியில்

செவ்வாய்

பிரதான தன்மைகள்;

சகோதரன், நண்பன், உடல்நலம், கடனற்ற வாழ்வு, கணவன் ஆகியவற்றை செவ்வாயை வைத்து அறியலாம்,

CamScanner

இடம்;

நெருப்புள்ள பகுதி, பள்ளத்தாக்கு, குப்பைமேடு, சுரங்கம், கசாப்பு கடைகள், மருத்துவமனை, அறுவைசிகிச்சைக் கூடம், மயானம், பிரசவ மையங்கள், சமையல் அறை, மின்கருவிகள், காடு, போர்க்களம், சாலை, விச ஜந்துகள் வாழும் பகுதி ஆகியவை செவ்வாயின் காரக பகுதிகளாகும்,

பொருள்கள்;

உலை, அடுப்பு, மின் கருவிகள், ஆயுதங்கள், கற்கள், கூர்மையான பொருட்கள், முட்கள் ஆகியவை செவ்வாயினால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

தொழில்கள்;

மருத்துவம், சவரத்தொழில், பொறியியல், மெக்கானிக், வாகனம் தொடர்பான தொழில்கள், காவல், திருடுதல், சண்டை தொழில்கள், அடியாட்கள், விளையாட்டு வீரர்கள், தற்காப்புக் கலைகள், சமையல், உணவு விடுதிகள், சுரங்கப் பணிகள், ஆயுதம் தயாரிப்பு, ஆயுதப்படை, இராணுவம், அரசு சர்வாதிகாரம், எலெக்ட்ரிக்கல் சார்ந்த தொழில்கள், சிற்பப் பணிகள், ரியல் எஸ்டேட், கட்டிடத் துறை பொருட்கள் விற்பனை, கூலி மற்றும் கடின உழைப்பு, புரட்சியாளர், வித்தை காட்டுதல், போர் தளவாட உற்பத்தி, தீவிரவாதம், மண்பாண்ட உற்பத்தி, மந்திரம், உருக்காலை, இயந்திர உற்பத்தி, குழுத் தலைமை, விவசாயப் பொறியியல், தீயணைப்புத் துறை, செங்கல்ச் சூலை, ரசாயனத் தொழில், சமையல் பாத்திரம் உற்பத்தி மற்றும் விற்பனை, லேத், தொழிற்சாலை பணிகள், மருந்து உற்பத்தி, தையல், தாதுப்பொருட்கள் தொழில், இன்சூரன்ஸ், ரவுடித்தொழில், வெல்டிங், செக்யூரிட்டி, கைவினைஞர், லேப், மருத்துவ உபகரணம் உற்பத்தி மற்றும் விற்பனை, சேனாதிபதி, தொல்பொருள் ஆய்வு தொடர்பான தொழில்கள்,

CamScanner

நுணுக்கப்பொருட்கள் உற்பத்தி, அகழாய்வுத் துறை போன்ற தொழில்கள் யாவும் செவ்வாயினுடையது

பொது தன்மைகள்;

செவ்வாயின் பொதுவான குணங்களாக வீரம், தீரம், பராக்கிரமம், வெற்றி, விபத்து, பேராசை, அதிக காமம், நடத்தை குறைபாடு, போர், கோபம், விவேகம், சாமர்த்தியம், அதிகாரம், விடுதலை வேட்கை, பகைமை பாராட்டுதல், துடிப்பு, துணிச்சல், எதிரி, தீ பயம், கடன், பழிவாங்குதல், மன வலிமை அகியவைகள் இருக்கிறது,

உறுப்புகள்;

பொதுவாக செவ்வாய் மார்புப் பகுதியை குறிக்கும், ஆண் மற்றும் பெண்களின் மர்ம உறுப்புக்கள், நகம், பல், நெற்றி, நாசி, புஜங்கள், எலும்பு மஞ்சை, இயக்க நரம்புகள், மூக்கு, சிவப்பணு, இருதயம், புருவம் மேற்கண்ட உறுப்புகள் செவ்வாயின் காரக உறுப்புகளாகும்

நோய்கள்;

அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், ராஜ பிளவை, குடல் இறக்கம், ரத்தப் புற்று, அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம் கலைதல், செப்டிக், டான்சிலஸ், விதவை போகத்தால் நோய்கள், இணைவுகளில் வலிவீக்கம், தழும்பு, பித்த நோய்கள், மூளைக் காய்ச்சல், ஊனம் இவை அனைத்து உபாதைகளும் செவ்வாயினால் குறிக்கப்படுகிறது

நிறம் ; வெளிர் சிவப்பு,

விலங்கு	; நாய், கூர்மையான கொம்பு மற்றும் பற்கள் உள்ள மிருகம், கொசு, எறும்பு, சேவல் மற்றும் பருந்து
வயது	; 19
உருவம்	; பட்டை மற்றும் உடுக்கை போன்ற உருவம்
தூரம்	; 150, 19 கிலோமீட்டர்
சுவை	; கரிப்பு
தூபம்	; குங்குமம்
உலோகம்	; செம்பு
மலர்	; செண்பகம், சம்பங்கி
தானியம்	; துவரை, பாகற்காய், பீட்ருட்
துணி	; எரிந்த துணி
கனி	; மாதுளை
இடம்	; பெட்ரூம், உத்திரம்
மரம்	; வேம்பு, வேலி கருவேம்பு
எண்	; 7, 9
திசை	; வடக்கு, பக்கமாக பார்த்தல்
தாவரம்	; கொக்கி முள் உள்ள செடி, மாதுளை,
உணவு	; சூடான பதார்த்தம்

CamScanner

மருந்து : பூ

ஜாதி ; செட்டியார், கவுண்டர், கம்மாளர், குயவர், கொல்லர், வடுகர், வணிகர், கொங்கணர்

மருவடு ; முதுகு, நெற்றிப் பகுதியில்

புதன்

பிரதான தன்மைகள்;

ஒரு ஜாதகத்தில் புதனை வைத்து ஜாதகருடைய கல்வி, காதல், தகவல் தொடர்பு உறுப்புகள் மற்றும் தன்மை, மாமா, மகள், காதலி, சகோதரி போன்றவற்றின் தன்மைகளைப் பற்றி அறியலாம்,

இடம்;

பள்ளிக்கூடம், நூலகம், மறைவான பகுதி, படிக்கும் அறை, வரவேற்பறை, பூங்கா, கடைவீதி, மண்டபம், கடலுக்கு அருகில் இவைகள் புதன் குறிக்கும் பகுதிகளாகும்,

பொருள்கள்;

புத்தகம், தொலைபேசி, கடிதம், ஒலிப்பெருக்கி, ஓவியங்கள், மென்மையான பொருட்கள், படரும் கொடிகள், தானிய சேமிப்புக் கிடங்கு ஆகியவை புதனால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

CamScanner

தொழில்கள்;

ஆசிரியர், புத்தக எழுத்தாளர், கணக்குப்பிள்ளை, பதிவுத்துறை, மேடைப்பேச்சாளர், தபால் துறை, சில்லரை வியாபாரம், கணித புலமை, அனைத்து வியாபாரங்களும், சட்டத்துறை, சிற்பத்தொழில், ஓவியர், வரலாற்று ஆசிரியர்கள், தொலை தொடர்புத் துறை, தூதரகப் பணிகள், தரகு, செய்தித்துறை, புத்தகக்கடை, ஸ்டேசனரி, அச்சுத் தொழில், தரகு, சூதாட்டம், மீடியா, ஐடி, கேமரா, மளிகைக்கடை, கல்வி சார்ந்த ஆராய்ச்சி, நவீனத் தொழில் நுட்பம் ஆகியவை புதனின் தொழில்களாகும்,

பொது தன்மைகள்;

புதனின் பொது தன்மைகளாக கலைகள், தொடர்பு, காதல், கல்வி, எழுத்து, வெளிப்படுத்தும் தன்மை, பேச்சு, கேட்கும் திறன், கேள்வி ஞானம், சாதுர்யம், கள்ள தொடர்பு, அறிவுக்கூர்மை போன்றவை இருக்கிறது

உறுப்புகள்;

பொதுவாக புதன் இடை பகுதி மற்றும் முதுகை குறிக்கும், மூளை தொடரிகள், தோள்பட்டை, தோல், உள்ளங்கை, தொண்டை, காது, நாக்கு, நரம்புமண்டலம், நுரையீரல், முதுகுதண்டு, புலன்கள், மூக்கு, இடுப்பு ஆகியவற்றை குறிக்கும்,

நோய்கள்;

ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, விபச்சாரத்தின் மூலம் ஏற்படும் நோய்கள், வாதம், நரம்பு தளர்ச்சி, மூளை கோளாறு, பைத்தியம், கோமா, தோல் நோய்கள், சொரி, சிரங்கு, வெண்குஷ்டம் இவைகள் யாவும் புதன் குறிக்கும் நோய்களாகும்,

CamScanner

நிறம்	; அருகம்புல் பச்சை
விலங்கு	; பூனை, புறா, கிளி, சிறிய இனக்கழுகு, பாண்டாக் கரடி, சித்து மாடு,
வயது	; 20
உருவம்	; முக்கோணம்
தூரம்	; 120, 70 கிலோமீட்டர்
சுவை	; உவர்ப்பு
தூபம்	; கற்பூறம்
உலோகம்	; பித்தளை
மலர்	; வெண்காந்தல்
தானியம்	; பச்சைப்பயிறு, வெந்தயம்
துணி	; ஓரத்தில் ஈரமானத் துணி
கனி	; கொய்யாப்பழம்
இடம்	; படிக்கும் அறை, வரவேற்பு அறை
மரம்	; கொய்யா
எண்	; 9, 5
திசை	; தெற்கு, கீழ் பக்கமாக பார்ப்பது
தாவரம்	; துளசி, கொடி,
உணவு	; கீரை

மருந்து ; இலை, வசம்பு, துளசி

ஜாதி ; முதலியார், நாயுடு, பிள்ளை, அம்பலகாரர், ரெட்டியார், கோமுட்டி, செட்டியார், மேளக்காரர், வைசியர், வாணிபர், தச்சர், சித்திரக்காரர், கவிவாணர்,

மருவடு ; கைக்குக் கீழ்ப் பகுதியில்

சுக்கிரன்

பிரதான தன்மைகள்;

ஒரு ஜாதகத்தில் மனைவி, பெண் தோழிகள், செல்வநிலை ஆகியவற்றின் தகவல்களை சுக்கிரனை வைத்து கணக்கிடவேண்டும்,

இடம்;

ஆடம்பரவீடு, கேளிக்கை விடுதி, திரையரங்கம், தோட்டம், பெண்கள் கூடும் இடங்கள், ஷோரூம், விளையாட்டு அரங்கம், விழா அரங்கங்கள் போன்றவை சுக்கிரனின் இடங்களாகும்,

பொருள்கள்;

வீடு, மகிழுந்து, வாசனை திரவியங்கள், கண்ணாடி, ஆடை ஆபரணங்கள், ஆடம்பர உணவு, பர்னிச்சர், மதுபானம், நறுமண பொருட்கள், பணம், இனிப்பு, விலை உயர்ந்த உணவு, பழங்கள், மலர்கள், வாகனம், ரெக்சின், மைக்கா ஆகியவை சுக்கிரனால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

தொழில்கள்;

பாடகன், நடிகன், வீடு விற்பனை, திருமணம் சார்ந்த தொழில்கள், மீடியா, ஒப்பனை, மார்கெட்டிங், பெய்ண்டிங், விலை உயர்ந்த கால்நடை விற்பனை, பணப்பயிர் வியாபாரம், வங்கிப்பணி, சொகுசுவாகன உற்பத்தி மற்றும் வியாபாரம், அயல்நாட்டுப் பணி, நட்சத்திர ஹோட்டல் மற்றும் விடுதிகள், கருவூலம், அலங்கார பொருட்க்கள் விற்பனை, பர்னிச்சர், கண்ணாடி தொழிற்சாலை பணி, அழகு நிலையம், நறுமணப் பொருட்கள் விற்பனை உற்பத்தி, இரத்தின வியாபாரி, பொன் வியாபரம், பழவியாபாரம், பணப் பயிர் வேளாண்மை, வட்டித்தொழில், கவிஞர், நிதித் துறை, அரச விருந்தினர், மாளிகைப் பணி, மருந்து விற்பனை, ஆப்டிகல்ஸ், பட்டு விற்பனை, தொலைக்காட்சி, நடனம், விளம்பரப் பணிகள், நுகர்வோர்த் தொடர்பு பணிகள், வேசி, இசை கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனை, வாகனத் தொழில், புதுமையான தொழில்கள், ஆடிட்டர், சலவையகம், பெண் தொழிலாளர்களை கொண்டு செய்யும் தொழில்கள், வேற்று மொழி கற்பித்தல், வசந்தகாலப் பயிர்கள் ஆகியவை சுக்கிரனின் காரக தொழில்கள்,

பொது தன்மைகள்;

காதல், வசீகரம், கலை, நடிப்பு, கவர்ச்சி, உல்லாசம், பாலுணர்வு, சிற்றின்ப நாட்டம், திருமணம், பட்டப்பெயர், இளமை, பேச்சாற்றல் இவையாவும் சுக்கிரனின் பொதுவான தன்மைகள்,

உறுப்புகள்;

பொதுவாக சுக்கிரன் பிறப்பு குறியை குறிக்கும், கண்கள், தொண்டை, கன்னம் ,தாடை, புலன்கள், கர்பப்பை, முகம், கருமுட்டை, கழுத்து, தோள்பட்டை ஆகிய உறுப்புகள் சுக்கிரனின் காரக உறுப்புகளாகும்,

CS CamScanner

நோய்கள்;

பித்தம், சன்னி நோய்கள், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், பால்வினை நோய்கள், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு, இரத்த சோகையால் வரும் தோல் நோய்கள், போதை தொடர்பான நோய்கள் யாவும் சுக்கிரனின் உபாதைகள்

நிறம்	; வெள்ளை, வானின் நீலம்,
விலங்கு	; மாடு, குதிரை, ஆடம்பர நாய், காதல்ப் பறவை, வண்ணப் பறவைகள், ஜோடிக் கிளிகள், தொட்டி மீன்கள்.
வயது	; 7
உருவம்	; எண்கோணம்
தூரம்	; 240, 7 கிலோமீட்டர்
சுவை	; புளிப்பு
தூபம்	; ஏலக்காய்,
உலோகம்	; வெள்ளி
மலர்	; வெந்தாமரை,
தானியம்	; மொச்சை, புளி
துணி	; கெட்டியான ஜீன்ஸ் போன்ற துணி
கனி	; மாம்பழம், அன்னாசி

இடம்	; சமையல் அறை
மரம்	; மாமரம், புளியமரம், நெல்லி
எண்	; 6, 16
திசை	; வடக்கு, மேற்கு, கீழ்ப்பக்கம் பார்ப்பது
தாவரம்	; எலுமிச்சை, புளியாரை
உணவு	; புளிப்பு பதார்த்தம், செயற்கை இனிப்பு
மருந்து	; காய்
ஜாதி	; கவுண்டர், வேளாலர், யாதவா, இடையர், முடிவெட்டும் பிரிவு, வண்ணார், ரெட்டி, செட்டி
மருவடு	; முகத்தில், முன் வரிசை பல்லில்

குரு

பிரதான தன்மைகள்;

குருவைக் கொண்டு ஜாதகரின் சுயம், ஜாதகர் மிகவும் கௌரவமாக மதிக்கும் நபர் மற்றும் ஜாதகரின் சுய கௌரவம் போன்றவற்றை பற்றி அறியலாம்,

இடம்;

நீதிமன்றங்கள், கோயில், அரச சபைகள், பஞ்சாயத்துக் கூடங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், சேவை ஸ்தாபனங்கள், பூஜை அறை ஆகிய பகுதிகள் குருவினால் குறிக்கப்படுகிறது,

CamScanner

பொருள்கள்;

தங்கம், எழுதுகோல், உயர் மதிப்புள்ள சீருடைகள், நிதி நிறுவன பெட்டகங்கள், அலுவலர் மேசை ஆகியவை குருவினால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

தொழில்கள்;

ஆசிரியர், நிதித் துறை, பொன் வியாபாரம், ஞான உபாசகர்கள், கௌரவப் பணியாளர்கள், உயர் பதவிகள், யாத்திரைத் தொழில்கள், ப்ரோகிதம், பொதுப்பணிகள், பக்தி மார்க்கம், அறிவுரை மற்றும் ஆலோசனைப் பணிகள், சேவை நிறுவனங்கள், நீதித்துறை, ஆன்மீகப் பணிகள், தர்ம கர்த்தா, அறநிலையத் துறை, தலைவர் பொறுப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாதுகாப்பு துறை, அமைச்சர், திருப்பணிகள் ஆகியவை குருவின் காரக தொழில்கள்,

பொது தன்மைகள்;

குருவின் பொது தன்மைகள் கௌரவம், இனிப்பு, நலம், செல்வாக்கு, உயர் அந்தஸ்த்து, செல்வம், புகழ், தந்திரம், நினைவு திறன், வித்தை, மேதவித்தனம் ஆகியவை ஆகும்,

உறுப்புகள்;

பொதுவாக குரு வயிற்றை குறிக்கும்,மூளை, வயிறு, தசை மற்றும் தசை நார்கள், அனைத்து ஈரல்களும், கொழுப்பு, பாதம், தொடை, மூக்கு, சீரண உறுப்புகள் இவை அனைத்தும் குருவின் உறுப்புகள் ஆகும்,

நோய்கள்;

மூளை தொடர்பான நோய்கள், நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று

CamScanner

வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை இவையாவும் குருவின் காரக உபாதைகள்

நிறம்	; மஞ்சள்
விலங்கு	; யானை, குதிரை, புறா, அன்னம், மயில், காமதேனு
வயது	; 30
உருவம்	; நீள்வட்டம்
தூரம்	; 135, 30 கிலோமீட்டர்
சுவை	; கசப்பு
தூபம்	; அம்பர், ஜவ்வாது
உலோகம்	; தங்கம்
மலர்	; முல்லை, மல்லிகை
தானியம்	; சுண்டல், தேன், சீரகம்
துணி	; ஒருமுறை மட்டும் உடுத்திய துணி
கனி	; ஆரஞ்சு, பலா
இடம்	; பூஜை அறை
மரம்	; தென்னை, அரசமரம், எலுமிச்சை
எண்	; 10, 3
திசை	; தெற்கு, மேற்கு, நேருக்கு நேராக பார்க்கும்,

தாவரம்	; எலுமிச்சை, வெற்றிலை
உணவு	; இயற்கை இனிப்புகள், தேன், நெய் பதார்த்தங்கள்
மருந்து	; பழம், கடுக்காய், தேன், நெய், சீரகம்,
ஜாதி	; ஜைனர், சமணர், பிராமணர், சிவ குலத்தார்
மருவடு	; கைப் பகுதியில்

சனி

பிரதான தன்மைகள்;

சனி என்ற கிரகத்தினைக் கொண்டு ஜாதகரின் தொழில், ஜாதகரின் வம்ச ரீதியான எல்லா சிக்கலையும் அறியலாம்,.

இடம்;

நீதி மன்றம், மயானம், தூக்குமேடை, சேமிப்புகிடங்கு, கிணறு இந்த பகுதிகள் யாவும் சனியின் காரக பகுதிகள்

பொருள்கள்;

முடி, கம்பளி, வழவழப்பான பொருட்கள், மண் சார்ந்த வேதி பொருட்கள், எண்ணெய் வகைகள், கரி, கல், மண் ஆகியவை சனியினால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

CamScanner

தொழில்கள்;

கூலிவேலை, எடுபிடி வேலை, சதித் தொழில்கள், கல் மற்றும் மண் வியாபாரம், திருட்டுத் தொழில்கள், ஆயில் கிரீஸ் தொழில்கள், இரும்புத் தொழில்கள், டீக்கடை, ஹோட்டல் துப்புரவுப் பணி, கருமை நிற தானிய வியாபாரம், சுரங்கத் தொழில்கள், தாதுப் பொருள் விற்பனை, சிறை காவலர் பணி, பழைய பொருள் வியாபாரம், கால்நடை வளர்ப்பு, முடி வியாபாரம், கம்பளி தொழில்கள், மர வேலை, அடிமைகளை வைத்து வேலைவாங்குதல், கழிவுத்தொழில், முடி திருத்துபவர், தோல்த் தொழில்கள், ரியல் எஸ்டேட், சூதுத் தொழில்கள், பலநாள் செய்து முடிக்கும் பணிகள், அயல் நாட்டுப் பணிகள் ஆகியவை சனியின் தொழில் காரகங்களாகும்,

பொது தன்மைகள்;

சோம்பேறித்தனம், பீதி, தயக்கம், துயரம், சந்தேகம், மந்த புத்தி, தோல்வி பயம், காரிய தாமதம், கஞ்சம், தண்டனை, சிறைபடுதல், குறையுள்ளவர்களுடன் இணை சேருதல், பிடிவாதம், விரக்தி ஆகியவை சனியின் பொது குணங்களாகும்,

உறுப்புகள்;

பொதுவாக சனி தொடை பகுதிகளை குறிக்கும், முழங்கால், எலும்பு, கணுக்கால், தொடை, தாடை, காது, இயக்க நரம்புகள் ஆகியவற்றையும் சனி குறிக்கும்,

நோய்கள்;

ஊன்ம், சித்த பிரமை, பித்த நோய்கள், காசநோய், குஷ்டம், உடல் இளைத்தல் , கக்குவான் இருமல், மலடு, அங்க ஊனம், கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம்,

CamScanner

உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் இவைகள் சனியினால் குறிக்கப்படும் நோய்களாகும்,

நிறம்	; நீலம்
விலங்கு	; எருது, கழுகு, பன்றி, கழுதை, காகம். குயில்
வயது	; 13
உருவம்	; சுளகு போன்ற ஒரு பக்கம் விரிந்து ஒரு பக்கம் சுருங்கியுள்ள உருவம்
தூரம்	; 300, 10 கிலோமீட்டர்
சுவை	; கசப்பு
தூபம்	; கரிமுள்ளி
உலோகம்	; இரும்பு, எ:கு
மலர்	; கருங்குவளை
தானியம்	; எள், கடுகு
துணி	; கிழிந்த துணி
கனி	; திராட்சை
இடம்	; சாப்பிடும் அறை, சேமிக்கும் அறை,
மரம்	; மூங்கில், பனை
எண்	; 4, 8
திசை	; கிழக்கு, பல பக்கம் சுற்றும் முற்றும் பார்ப்பது

CamScanner

தாவரம் ; மூங்கில்

உணவு ; சேகரிக்கப்பட்டு பதனிட்ட உணவு

மருந்து ; வேர், சாம்பிராணி, கரிசாலை

ஜாதி ; நாடார், குளுவ, சேனைக்குடி, பள்ளர், வாணிபர், இலை வண்ணார், அருந்ததியினர், பறையர், மூப்பார், பழங்குடி

மருவடு ; கால், தொடைப் பகுதியில்

ராகு

பிரதான தன்மைகள்;

ராகு தந்தை வழி மூதாதையர்களையும், ஜாதகரின் ஏக்கத்தினையும், அதீத ஆசைகளையும் குறிக்கும்.

இடம்;

மாற்றுமதக் கோயில்கள், நிழலான பகுதி, பரந்து விரிந்த பகுதி ஆகியவை ராகுவின் காரக பகுதிகளாகும்,

பொருள்கள்;

காய்ந்த மரம், பதனிட்ட தோல்கள், ரசாயன பொருட்கள், தார், ரப்பர், பிளாஸ்டிக், மக்காத தன்மையுள்ள பொருட்கள், அகண்ட வாயுள்ளவைகள் ஆகியவை ராகுவினால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்

CamScanner

தொழில்கள்;

சட்டத்திற்கு புறம்பான தொழில்கள், விபச்சாரம், கீழ்தர தொழில்கள், சிறைப்பணிகள், மாயாஜாலம், மந்திரம் தந்திரம் பில்லி சூனிய வேலைகள், தலைமறைவுத் தொழில்கள், தனிமையாக செய்யும் தொழில்கள், தூர தேச தொழில்கள், விஷமருந்து உற்பத்தி மற்றும் விற்பனை, லாட்டரி மற்றும் சூதாட்டக் கிளப்புகளில் பணி, சூதாட்ட வருமானம், பங்கு சந்தை, தரகு, பெரிய நிறுவனங்களில் பணிகள், உளவுத்துறை, கனரக வாகன பணிகள், பட்டாசு தொழில்கள், அன்னிய தேச மற்றும் பாஷை தொழில்கள், புலனாய்வுத் துறை, மருந்து, சித்த வைத்தியம், சோதிடம், அக்குபஞ்சர், எலெக்ட்ரானிக்ஸ், தூதுவர்கள், போட்டோ, வீடியோ தொழில்கள், அச்சுத் தொழில், நடிப்பு, வேற்று சதித் தொழில்கள், மதம் மாற்றும் தொழில்கள், அயல்நாட்டுப் பணிகள் போன்றவை ராகுவின் காரக தொழில்களாகும்,

பொது தன்மைகள்;

ராகுவின் பொது தன்மைகளாக பைத்தியம், வறுமை, நோய், மயக்கம், விதவை போகம், கேடு நினைத்தல், குலத்தின் பெயரைக் கெடுத்தல், திடீர் அதிர்ஷ்டம், அலட்சியம், களவு, லஞ்சம் லாவண்யம், சாதி மாறுதல், கடின வார்த்தைகளை உபயோகித்தல் ஆகியவை இருக்கிறது,

உறுப்புகள்;

பொதுவாக ராகு கைகளைக் குறிக்கும், வாய், கை, குடல், உதடு, காது, மலக்குடல் ஆகியவற்றையும் குறிக்கும்,

CamScanner

நோய்கள்;

விஷ மரணம், வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, ராஜபிளவை, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து மரணங்கள், தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள் யாவும் ராகுவின் நோய்களாகும்,

நிறம்	; அடர் கருப்பு
விலங்கு	; பல்லி, முதலை, உடும்பு, காட்டுப்பன்றி, கோட்டான், கின்னிக்கோழி, பாம்பு, வண்டு
வயது	; 10
உருவம்	; மாலை வடிவம்
தூரம்	; 10 கிலோமீட்டர்
சுவை	; கசப்பு
தூபம்	; கடுகு
உலோகம்	; கருங்கல்
மலர்	; மந்தாரை
தானியம்	; உளுந்து, கேழ்வரகு, புகையிலை
துணி	; நைந்த துணி
கனி	; வாழை
இடம்	; மாடிப்படி, குடோன்

CamScanner

மரம்	; கருவேலம்
எண்	; 4
திசை	; வடக்கு, கிழக்கு, பக்கவாட்டில் திருட்டுப் பார்வை
தாவரம்	; புகையிலை
உணவு	; பழைய உணவுகள், அசைவ உணவுகள்
மருந்து	; கொடி
ஜாதி	;ஆதி திராவிடர், முதலியார், பண்டாரம், மலைவாழ், கள்ளர், புலையர், பாம்பாட்டி, இருளர், முகமதியர்
மருவடு	; கால்பகுதியில்

CamScanner

கேது

பிரதான தன்மைகள்;

கேதுவின் வழியாக ஜாதகரின் தாய் வழி மூதாதையர்கள் பற்றியும் ஜாதகரின் தேடல் மற்றும் வரம்பு மீரல்களை குறிக்கும்,

இடம்;

கோயில், ஆசிரமம், பொது மருத்துவமனை, பாடசாலை, குறுகிய சந்துகள், வலைப் பொந்துகள், சாக்கடைக் குழாய்கள் இவைகள் கேது குறிக்கும் பகுதிகளாகும்,

பொருள்கள்;

வயர்கள், பூஜை சாமான்கள், பண்டைய பொருட்கள், நூல் ஆகியவை கேதுவினால் குறிகாட்டப்படும் பொருட்களாகும்,

தொழில்கள்;

சன்னியாசம், சட்டம், எலெக்ட்ரானிக்ஸ், நவீன தொழில் நுட்பங்கள், கயிறு உற்பத்தி மற்றும் விற்பனை, கூடை, பாய் போன்ற முடைதல், நீதிபதி, ரசாயன தொழில்கள், உயர் பதவிகள், பொது தொண்டு நிறுவனங்கள், மாந்த்ரீகம், வேத உபாசகம், மண்பாண்ட தொழில், சுரங்க தொழில்கள், ஏமாற்றுத் தொழில்கள், குழாய் விற்பனை, தத்துவ நூலாசிரியர்கள், பழமையான மருத்துவம், டெய்லெரிங், நூல் விற்பனை, தொடு சிகிச்சை, வர்மம், ஆராய்ச்சி பணிகள், ஜோதிடம், பாவத்தொழில்கள், விபச்சாரம், சிறைவாசம், சுற்றுலாத் துறை, அன்னிய மொழி ஆசிரியர், ஆசிரமம் சேவை நிறுவனங்கள், இறுதியடையும் பணிகளை செய்வது, ரகசியபணிகள், தேசாந்திரம் சார்ந்த வைத்தியம் போன்றவை கேதுவின் காரக தொழில்கள்,

CamScanner

பொது தன்மைகள்;

விரக்தி, ஞானம், தெளிவு, பற்றின்மை, பரதேசம், ஆய்வு, உதவுதல், பயமின்மை, பிறரை பற்றி சிந்திக்காமல் செயல்படுதல், கொலை சிந்தனை, தற்கொலை சிந்தனை, ஆய்வு, வறுமை ஆகியவை கேதுவின் பொது தன்மைகள் ஆகும்,

உறுப்புகள்;

பொதுவாக கேது கால்களை குறிக்கும், காது, முடி, நரம்பு, நகம், ஆசனவாய், பிறப்புறுப்பு, தோல், குடல் ஆகியவற்றையும் குறிக்கும்,

நோய்கள்;

பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், பீளை வெளியேருதல், தோல் உரிதல் அரிப்பு ,வயிறு நோய்கள், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, விடைதெரியாத நோய்கள், குடல்ப் புழுக்கள், தேக மெலிவு மேற்கண்ட நோய்கள் கேதுவினுடையதாகும்,

நிறம் ; கருஞ்சிவப்பு

விலங்கு ; கீரி, எலி, அணில், போன்ற பொந்தில் வாழும் சிறு உயிரினங்கள், பலகால்கள் உள்ள விஷத் தேள், பூரான் வகைகள், குளவி, தேனி, அஸ்வினி பூச்சிகள்,

வயது ; 10

உருவம் ; மாலை வடிவம்

CamScanner

தூரம்	; 10 கிலோமீட்டர், அளவில்லாத தூரம்,
சுவை	; கசப்பு
தூபம்	; செந்தூரம்
உலோகம்	; துருக்கல் (காக்காபுன்), மைக்கா
மலர்	; செவ்வாலி, கற்றாளை பூ
தானியம்	; சோளம், கொள்ளு
துணி	; முருக்கிய சுருண்ட துணி
கனி	; விளாம்பழம்,
இடம்	; ஒய்வறை, மரத்தின் கீழ், மாடிக்கு கீழ்
மரம்	; ஆலமரம், அசோகமரம்,
எண்	; 4, 7
திசை	; தெற்கு, மேற்கு, பக்கவாட்டில் பார்த்து முழித்தல்
தாவரம்	; கற்றாழை
உணவு	; நாற்றமுள்ள மருத்துவ குணமுள்ள உணவு
மருந்து	; கொடி வகையான மருந்து,
ஜாதி	; கிருத்துவர், முடி திருத்துபவர், இருளர், மீனவர், பௌத்தர், வேடர்
மருவடு	; கால் பகுதியில்

ராஜநாடியின் பலன் காணும் பொது விதிகள்

இது வரை கிரகங்கள், ராசிகள் மற்றும் பொதுவான ஜோதிடம் பற்றிய தகவல்கள் பார்த்தோம், இனி வரும் பகுதிகளில் அவைகளை கையாளும் நுட்பங்கள் அது தொடர்பான விதிகள் குறித்துக் காண்போம்,

ஒவ்வொரு பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்திற்கும் அந்த பகுதியிலேயே விளக்கம் இருந்தாலும் பொதுவான பார்வைஎ்ய இங்கு உங்களுக்கு வழங்குவது ஆரம்பத்திலேயே சரியான துவக்கத்தினை வழங்கும்

இந்த நூலில் ராஜநாடியை நான்கு பிரிவுகளாக புரிந்து கொள்ள வேண்டும், முதலில் கிரகங்களின் சில நிலைகளை மட்டுமே வைத்து அறியப்படும் ஜாதகரின் மிக முக்கிய வாழ்க்கை பற்றிய தகவல்கள், அடுத்து ஜாதகர் மற்றும் ஜாதகரை சுற்றியுள்ள அனைவரது பொது குணம் மற்றும் தன்மை, ஜாதகரின் வேலை துவங்கி அவருக்கு கிடைக்கும் அனைத்தின் ஏற்ற இறக்கம், நன்மை தீமை என அனைத்தையும் தெரிந்து கொள்வது, இது கிரகங்களின் கூட்டு பலன்கள், கிரக பார்வை, மற்றும் ஒவ்வொரு கிரகங்களுக்கும் உண்டான தொடர்பு அடிப்படையில் கூறுவது, அடுத்தபடியாக ஒருவரின் பெயர், அவர் உறவுகளின் பெயர், அவரது உடை துவங்கி அனைத்தையும் கொண்டு குறிப்புகள் அறிந்து அவருடைய இத்தனை குறிப்புகளும் குறிகாட்டும் கிரகங்களின் தன்மைகளையும் வைத்து அவர் உறவினர்களின் பெயர் அவரது வாழ்க்கை பற்றிய தகவல்களை சேகரிப்பது, இறுதியாக மேற்கண்ட வழிமுறைகளின் வழியாக புரிந்து கொண்ட வாழ்க்கை பலன்கள் எந்தெந்த காலங்களில் நடைபெறும் என்ற நிகழ்வுகளை கண்டறிவது,

கொஞ்சம் ஆழ்ந்து புரிந்து கொள்ளவும், ஜோதிடம் என்பது கிரகங்களை கையாள்வதில் உள்ள அனுபவத்தின் தேர்ச்சி

CamScanner

மட்டுமே, எனவே கிரகங்களை சரியாக கவனித்துப் புரிந்து கொண்டால் நிச்சயமாக சிறந்த ஜோதிடர் ஆகலாம்,

நாம் இந்தப் பகுதியில் காணும் விதிகள் மொத்தமாக ராஜநாடி முறையின் தனித்துவமான விதிகளாகும் எனவே முற்றிலுமாக புரிந்து கொள்ளுங்கள் சில விசயங்களை படித்து விட்டு இதுதான் தெரியுமே என்று பாதி ராஜநாடி மீதிப்பாதி வேறு ஏதோ விதிகளை வைத்துக் குழப்பிக் கொள்ளாதீர்கள்,

பொதுவாக ஜோதிடத்தில் லக்னம் என்ற ஒன்றில் இருந்து துவங்கி ஒவ்வொரு வீட்டினையும் வைத்து அந்த ஸ்தானங்களுக்கு பலன் கூறுவர், நாம் அதையே கிரகங்களை வைத்து கூறுகிறோம்,

இந்த பகுதியில் அதிகாரகிரகம், நாமநாடி மற்றும் ராஜநாடியின் அனைத்து பிரிவுகளும் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது,

ஜாதகர் அவரது வாழ்க்கையில் அனுபவிக்கும் அனைத்திலும், பொதுவாக சமூகத்தில் அனைவருக்கும் சராசரியாக கிடைக்கும் வாழ்க்கையை வைத்தே தனது வாழக்கை பற்றி அளவீடு செய்கிறார், அவ்வாறு அனைவருக்கும் கிடைக்கும் இன்பம் தனக்கு குறிப்பிட்ட காலங்களில் கிடைக்காத போது அதைத் துன்பமாக கருதுகிறார், இதைத்தான் ஜோதிடர்கள் தோஷம், சாபம், பாபம், செய்வினை என கதைகட்டி விடுகிறார்கள்,

ஆனால் மனிதன் பிறக்கும் போது அவன் எதுவும் இல்லாமலேதான் பிறக்கிறான், அதன் பிறகு அவனுக்கு கிடைக்கும் ஒவ்வொன்றுமே வரம்தான், சிலருக்கு அது காலகாலத்தில் கிடைக்கும், சிலருக்கு தாமதமாக் கிடைக்கும், லட்சத்தில் ஒருவருக்கு கிடைக்காமல் கூட போகும், ஆனால் இவைகள் எல்லாம் கிரகங்களின் எதிர்மறை செயல்கள் என

CS CamScanner

முடிவுக்கு வருவது அறியாமை, கிரகங்களின் காரகங்களின் வழி ஜாதகருக்கு காலம் வழங்கிக் கொண்டே இருக்கிறது, அதை பெறுவதில் ஏதாவது தடை இருந்தால் அது வந்து சேர்வதில் சிக்கல் உண்டாகிறது, கிரகங்கள் கொடுப்பது இல்லை, கிரகங்கள் அவற்றை குறிகாட்டுகிறது, அதன் படி அவைகள் குறிக்கும் இன்பம் ஜாதகருக்கு வந்து சேர்வதில் ஏற்ற இறக்கங்கள் உள்ளது, அந்த ஏற்ற இறக்கங்கள் எவை என்பதை அறிவதே ஜோதிடம்,

அதன் படி எல்லா கிரகங்களும் தனது காரகங்களை முழுமையாக வழங்குகிறது, நன்மை மற்றும் தீமை அனைத்தையும் முழுமையாக வழங்குகிறது அது எப்பொழுதும் நல்ல காரகம் அல்லது தீய காரகம் என பகுத்து வழங்குவது இல்லை, எல்லாம் கலந்ததுதான் வாழ்க்கை, அதை ஜாதகர் பெறுவதற்கு சில அமைப்புகள் தேவை, உதாரணமாக ஒருவர் உங்களுக்கு செல் போனில் அழைக்கும் போது உங்கள் செல் போனில் கதிரலைவரிசை சரியாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே உங்களுக்கு அழைப்பு வரும், அருகில் எத்தனை செல் போன் இருந்தாலும் அவைகளுக்கு அந்த அழைப்பு போகாது, காரணம் உங்கள் எண்ணுக்கு என ஒரு தனித்துவம் உள்ளது ,அவர் அழைத்தது அந்த தனித்துவத்தை மட்டுமே, எனவே உங்கள் செல்போன் அதை பெற்று உங்களுக்கு அறிவிக்கிறது,

அது போல ஜாதகம் என்பது ஒரு தனித்துவமானது, ஒவ்வொரு செல்போனுக்கும் தனித்தனியாக அழைப்பு, குறுஞ்செய்தி, மின்னஞ்சல் வருவது போல ஒவ்வொரு நபருக்கென தனித்தனியாக வாழ்க்கை அமைப்பு இருக்கிறது,

இதில் ஜாதகரின் வாழ்க்கை எப்படி அமையும் என ஜாதகத்தில் உள்ள கிரகங்கள் அமைந்துள்ளதை வைத்து முடிவுக்கு வரமுடியும்,

CamScanner

ஒரு ஜாதகத்தில் ராகு அல்லது கேது உள்ள ராசியில் இருந்து 1, 5, 9 ஆம் ராசிகளிலுள்ள கிரகங்களின் தன்மைகள் ஜாதகரை வந்தடைவதில் சிக்கல், தாமதம் உண்டாகும், அதன் வழியாக ஜாதகர் எப்பொழுதும் ஆர்வத்துடன் இருக்கும் சூழல் உருவாகும்,

அடுத்தபடியாக, வக்ரம் பெற்ற கிரகம், பரிவர்த்தனை பெற்ற கிரகங்கள், விளிம்பு கிரகம் (**ஒரு ராசியின் துவக்கம் மற்றும் இறுதியில் 2 பாகைக்குள் உள்ள கிரகம் இதை விளிம்பு கிரகம் எனக் கூறலாம்**) வழியாக ஜாதகர் மாற்றங்களை, குழப்பங்களை, முக்கியமானவற்றை சந்திப்பார், மற்றும் அவ்வாறு உள்ள கிரகத்துடன் ஒரே ராசியில் உள்ள கிரகத்தினாலும் அவமானத்தினை அடைவார்,

ஆட்சி பெற்ற கிரகங்கள், உச்சம் அல்லது நீசமான கிரகங்கள், தனது ராசியை ஏழாம் பார்வையாக பார்க்கும் கிரகங்கள் வழியாக ஜாதகரின் வாழ்க்கை அடையாளம் பெறும், நன்மை மற்றும் தீமை இரண்டுமே இதன் வழியாக நடைபெறும்,

எந்த ஒரு ராசியானாலும் அந்த ராசியின் துவக்கம் மற்றும் இறுதி 1.5 பாகையில் உள்ள கிரகம் அதாவது ராசியின் முன் அல்லது பின் முனையில் உள்ள கிரகம் ஜாதகரின் வாழ்க்கையின் ரகசியங்களை எடுத்துக்காட்டும்,

மேற்ண்ட நிலைகளில் உள்ள கிரகங்களுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்களும் முக்கியமானதாக இருக்கும்,

இந்த நிலைகளில் உள்ள கிரகம்தான் அந்த ஜாதகரின் வாழ்க்கையில் அவரது துன்பங்களாக, ஏக்கங்களாக, வருத்தங்களாக, குழப்பங்களாக மற்றும் அடையாளமாக முக்கியமானதாக இருக்கும், இதில் எது உயர்வானது எது தொல்லையை தரும் என பிரித்து பார்க்காதீர்கள், ஒரு கிரகம் உச்சமானாலும் நீச்சமானாலும் அந்த கிரகத்தின் நன்மை மற்றும்

CamScanner

தீமைகள் அதிக அளவில் நடக்கும் இரண்டு நிலைக்கும் எந்த வேறுபாடுமே இல்லை, உச்சத்தை விட ஆட்சி நன்மை செய்யும் என்றும் நினைக்க வேண்டாம், எல்லாம் ஒன்றுதான்

இதை முதலில் தெரிந்து கொண்டால் போதும் அவரது வாழ்க்கை தனித்துவத்தை கண்டுபிடித்து விடலாம், அடுத்தபடியாக ஒவ்வொரு கிரகமும் எந்த ராசியில் உள்ளது, மேலும் ஒருகிரகம் உள்ள ராசியில் இருந்து எந்த கிரகங்களுடன் இணைகிறது என்பதை புரிந்து கொண்டால் அவர் எதையெல்லாம் எப்படி பெறுவார் என்பதை கண்டறியலாம்,

அவ்வளவுதான் அவரை பற்றிய தகவல்கள் முழுவதும் உங்கள் கைகளில் வந்துவிட்டது, இனி எதெல்லாம் எவ்வெப்போது நடக்கும் என்பதை கூறிவிட்டால் ஜாதகரது மொத்த வாழ்க்கையையும் பத்து நிமிடத்தில் சுருக்கி கூறிவிடலாம், அதை எப்படி தெரிந்து கொள்வது என விளக்கமாக காணலாம்,

பொதுவாக நாம் பலன் காணும் விதிகள் இரண்டு நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது,

அவை;

1. பிறப்பு கிரகநிலை சார்ந்த பலன் அறிதல்,
2. நடப்பு (கோச்சார) கிரகநிலை பலன் அறிதல்,

ஜாதகரின் பொதுவான வாழ்க்கை குறித்த ஒட்டு மொத்த தன்மைகளை பிறப்பு கிரக நிலைகளை வைத்தும் அதாவது ஜாதகத்தை வைத்தும், அந்த பலன்களை ஜாதகர் எப்போது பெறுவார் என்ற கோணத்தில் வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடக்கும் பலன்களை அறிய நடப்பு கிரக நிலைகளையும் அதாவது கோச்சார நிலைகளை எடுத்து பலனறிய வேண்டும்,

நடப்பு கிரக நிலை என்பது பிறந்த போது கிடைத்த நிலைகளில் இருந்து நடப்பு துவங்குவதாக பாவித்து பலன் கூறுதல் வேண்டும், இதற்கு கிரக சுற்று காலங்களை வைத்து வயது வாரியாக பலன் கூறலாம்,

பிறப்பு ஜாதகத்தில் உள்ள பலன்களின் தன்மைகளை மட்டுமே நடப்பு கிரகங்கள் மூலமாக வழங்கும்,

விதிகள்

1. ஒரு ஜாதகத்தில் முதலில் அதிகாரம் பெற்ற கிரகத்தை கண்டறிய வேண்டும்,

அதிகார கிரகம் அறியும் விதிகள்

- வக்ரமான கிரகம்,
- பரிவர்த்தனை பெற்ற கிரகம்,
- ராசியின் விளிம்பில் நின்ற கிரகம்
- வக்ரமான கிரகம், விளிம்பு நிலையில் உள்ள கிரகம் அல்லது பரிவர்த்தனை அடைந்த கிரகங்களுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்கள்,
- ராகு அல்லது கேது உள்ள ராசிக்கு திரிகோணத்தில் (5,9 ஆம் ராசிகளில்) உள்ள கிரகம்
- ஒரு ஜாதகத்தில் தனது சொந்த ராசியில் அமர்ந்த கிரகம்,
- சொந்த ராசிக்கு ஏழில் அமர்ந்த கிரகம்,
- உச்சம் அல்லது நீச்ச ராசியில் உள்ள கிரகம்,
- சொந்தராசி, அல்லது ஏழாம் ராசி அல்லது உச்ச நீச ராசிகளில் உள்ள கிரகங்களுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்கள்,
- ஒருநாள் முன் பின் தேதிகளில் மாற்றமான கிரகம்,

இவ்வாறு அதிகாரம் பெற்ற கிரகங்கள் வழியில் ஜாதகர் எல்லா அனுபவங்களையும் அடைவார், நன்மை மற்றும் தீமை

இரண்டுமே, அதுமட்டுமல்லாமல் அந்த ஜாதகரின் மிக முக்கியமான தேடுதல் சிக்கல் வேதனை ஆச்சர்யம் ஆசைகள் எல்லாமே அந்த கிரகத்தின் காரகமாகவே இருக்கும், அந்த ஜாதகர் வாழ்க்கை முழுவதும் அந்த கிரகத்தின் காரகம் அதாவது உறவு, வேலை, பொருட்கள் என அனைத்திலும் அதை மட்டுமே நோக்கி ஓடிக் கொண்டே இருப்பார், கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்,

ஒரு ஜாதகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அதிகார கிரகங்கள் இருக்கும் அப்போது எதை முதலில் கூறுவது என்ற குழப்பம் உருவாகும், எனவே மேலே குறிப்பிட்ட விதிகளை சில வரிசையில் கையாள வேண்டும் முதலில் வக்கிரம், பரிவர்த்தனை மற்றும் விளிம்பு கிரகங்களுக்கான பலன்கள் முக்கியமானது, அதன் பிறகு அதனுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்களை பற்றி பேச வேண்டும், அதற்கு அடுத்தபடியாக ராகு அல்லது கேது உள்ள ராசிக்கு 1,5,9 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களைப் பற்றி கூற வேண்டும், அடுத்து ஆட்சி, தனது ராசிக்கு 7 ஆம் ராசியில் உள்ள கிரகம், உச்சம், அல்லது நீசமான கிரகங்களை பேச வேண்டும், இறுதியாக அதிகாரமான கிரகங்களுடன் இணைந்த கிரகங்களை பற்றி கூற வேண்டும்,

2. ஜாதகரின் வாழ்க்கை அதிகாரகிரகம் எதுவோ அதன் அடிப்படையிலேயே அமைந்து இருக்கும், அதிகார கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்துள்ள கிரகமும் பாதி அதிகாரத் தன்மையை அடையும்,

3. வக்கிரம், பரிவர்த்தனை அல்லது விளிம்பில் உள்ள கிரகத்துடன் ஒரே ராசியில் உள்ள கிரக காரகம் பிறராலும் பயன்படுத்தபடக் கூடியதாக இருக்கும், உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சுக்கிரனுடன் உள்ள கிரகம் பரிவர்த்தனை பெற்றால் அந்த ஜாதகர் ஏற்கெனவே திருமணமான பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் நிலை உண்டாகும்,

CamScanner

4. வக்கிரம் ஆன கிரகத்திற்கு பின் ராசியில் உள்ள கிரகங்கள் பாதிக்கப்படும்

5. ஒரு கிரகம் தான் அமர்ந்துள்ள ராசியின் தன்மையை பெற்றிருக்கும்.

6. ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு உறவு மற்றும் ஒவ்வொரு தன்மை கொண்டுள்ளதால், நாம் எது சார்ந்த விசயத்திற்கு பலன் காண விரும்புகிறோமோ அதன் தன்மை கொண்ட கிரகம் இருக்கும் ராசியை முதல் வீடாக கொள்ள வேண்டும்,

7. ஒரு கிரகம், தான் இருக்கும் ராசியில் இருந்து 1, 5, 7, 9 ராசியில் உள்ள கிரகத்துடன் தொடர்பு கொள்ளும். இது முதல் கட்ட இணைவு ஆகும்.

8. பிறப்பு ஜாதகத்தில் பலன் காணவிருக்கும் கிரகம் உள்ள ராசியில் இருந்து 3, 11 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களின் பாதியளவு குணாதிசியங்களை நாம் பலன் காணும் முதன்மை கிரகம் கலந்து ஜாதகருக்கு வழங்கும், இது இரண்டாம் கட்ட இணைவு

9. ஒரு கிரகம் இருக்கும் ராசியில் இருந்து 1, 5, 9 ல் ராகு அல்லது கேது இருந்தால் அந்த கிரகம் வழங்கும் தன்மைகளையும், அந்த கிரகம் குறிக்கும் உறவுகளின் தன்மையில் பாதிப்பை வழங்கும். அவ்வாறு தொடர்பு பெறுமாயின் ஜாதகர் அந்த கிரகம் குறிக்கும் உறவுகள் மற்றும் நன்மைகளை குறைவாகவோ, தாமதமாகவோ, அல்லது பெறாமலேயே கூட போகலாம்,

CamScanner

10. ஒரு கிரகம் உள்ள ராசிக்கு அடுத்த ராசியில் ராகு அல்லது கேது இருந்தால், அந்த கிரகத்தின் காரகத்தின் வழியாக சிக்கல் உண்டாகும்

11. ஒரு கிரகம் அமர்ந்த ராசியில் இருந்து அடுத்து வரக்கூடிய கிரகம், அடுத்து வரக்கூடிய எத்தனையாவது ராசியில் இருந்தாலும் அந்தகிரகத்தின் தன்மையை பெறும், இதில் கவனிக்க வேண்டியது பிரதான கிரகம் மெதுவாக நகரும் கிரகமானால் பலன் மாறுபடும், அடுத்து வரக்கூடிய கிரகம் ராகு அல்லது கேதுவானால் பலன் அதிகமாகும்,

12. அவ்வாறு இணைவில் உள்ள கிரகமும் பரிவர்த்தனை அல்லது வக்ரத்தில் அல்லது விளிம்பில் உள்ளதா என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்,

13. பரிவர்த்தனை பெற்ற கிரகங்களை தனது ஆட்சி ராசியிலேயே போட்டு பலன் காண வேண்டும், நடப்பில் (கோச்சார) அந்த கிரகம் தனது ஆட்சி ராசியில் நுழையும் போது ஜாதகத்தில் எழுதியுள்ளது போல் போட்டு பலன் காண வேண்டும்,

14. வக்ரம் பெற்ற கிரகங்களை அந்த கிரகம் உள்ள பின் ராசியில் வைத்து பலன் காண வேண்டும், நடப்பில் (கோச்சார) அந்த கிரகம் வக்ரம் பெற்ற கிரகம் உள்ள ராசிக்கு 12 ல் வரும் போதும் தனது இடத்திற்கே வரும் போதும் அடுத்த ராசிக்கு வரும் போது அதாவது வக்ரம் பெற்ற கிரகம் அமர்ந்துள்ள ராசிக்கு 12, 1, 2 ல் அதே கிரகம் நடப்பில் (கோச்சாரத்தில்) வரும் போது அந்த கிரகத்தை ஜாதகத்தில் உள்ளது போல வைத்தே பலன் கூறவேண்டும் ,

15. நடப்பில் (கோச்சாரத்தில்) உள்ள எல்லா கிரகங்களும் தான் உள்ள இடத்தில் இருந்து 1, 5, 7, 9, ஆம் ராசியில் உள்ள பிறப்பு

CamScanner

கிரகங்களை தூண்டும், மேலும் 3, 11 ஆம் ராசியில் உள்ள பிறப்பு கிரகங்களை 30% தூண்டும்,

16. பிறப்பு ஜாதகத்தில் ஏற்கெனவே ராகு அல்லது கேதுவுடன் 1, 5, 9 ல் இணைவு பெற்ற கிரகங்களை, அந்த ராசிக்கு 1, 5, 7, 9 ல் நடப்பு (கோச்சார) கிரகம் வந்து தூண்டும் போது, அக்காலகட்டத்தில் ஜாதகர் அந்த ராகு அல்லது கேதுவுடன் இணைவு பெற்ற கிரகத்தின் தன்மைகளை நுகர்வதில் சிக்கலை சந்திப்பார்,

17. என்னதான் ஜாதகத்தில் ராகு அல்லது கேதுவுடன் 1, 5, 9 ல் இணைவு பெற்ற கிரகங்களை, அந்த வீட்டிற்கு 1, 5, 9 ல் நடப்பு (கோச்சார) கிரகம் வந்து தூண்டும் போதும், அந்த கிரகத்தின் தன்மைகளை ஜாதகர் குறையுடனாவது பெற்றுவிடுவார்,

18. நடப்பில் (கோச்சாரத்தில்) ஒரு கிரகம் ராகு கேது இணைவு பெற்ற பிறப்பு கிரகத்தின் தன்மையை தூண்டும் போது, அக்கிரகத்தின் உறவுத் தன்மைகள் அல்லது உணர்வுத் தன்மைகள் என்ற இரண்டில் எதாவது ஒன்றையே கெடுக்கும்,

19. கிரகங்களில் சூரியன், சந்திரன் ,செவ்வாய், புதன், சுக்கிரன், போன்ற கிரகங்கள் குறைவான நாட்களே ஒவ்வொரு ராசிகளிலும் நகர்ந்து வருவதால் குறுகிய கால மாற்றங்களை அவற்றை வைத்து அறியலாம்,

20. பெரும்பாலும் மக்கள் ஜோதிடத்தை நாடுவதே மெதுவான வாழ்க்கை மாற்றமான திருமணம், பணி, தொழில், செல்வம், வீடு, சொத்து, கல்வி, கடன், ஆரோக்கியம் போன்றவைகளுக்காக என்பதால் சனி, குரு, ராகு, கேது போன்ற கிரக நடப்புகளை பயன்படுத்த வேண்டும், அதிலும் சனி மிக முக்கியதுவம் வாய்ந்த கிரகம்,

CamScanner

21. நமது முறையில் இணைவு என்பது 1, 5, 7, 9. அந்த ஒவ்வொரு வீடுகளில் இருந்தும், 1, 5, 7, 9 ஆம் வீடுகளும் என பார்த்தோம், முதலில் இந்த முறையை பயன்படுத்தி பலன் கூற பழகிய பிறகு, நாம் பலனளிக்க தேர்ந்தெடுத்த கிரகம் உள்ள பாகையை கருத்தில் கொள்ள வேண்டும், அவ்வாறு அந்த கிரகம் உள்ள பாகையில் இருந்து முன்னும் பின்னும் 15 பாகைகளை அந்த முதன்மை கிரகம் ஆளுமை செய்யும், எனவே முதலில் பொதுவாக கிரகம் உள்ள வீடு என்று கருதி வந்ததில் இருந்து சிறிது மேம்பட்டு, பாகை ரீதியாக கணிக்க வேண்டும்,

உதாரணம்:

மேசத்தில் ஒரு கிரகம் உள்ளது என கொள்வோம், முதலில் அந்த ராசியில் இருந்து 1, 5, 7, 9 ஆன மேசம், சிம்மம், துலாம், தனுசு போன்ற ராசிகளில் உள்ள கிரகங்களை இணைவு பெற்றதாக எடுத்து கொண்டிருந்தோம், பாகை ரீதியாக, அந்த கிரகம் மேசத்தில் 22 பாகையில் உள்ளதெனில் 22 லிருந்து முன் 15 பாகையிலிருந்து பின் 15 பாகை வரை முதல் வீடாக கொள்ள வேண்டும்,

அப்படியெனில்

22 - 15 = 7 மேசம் 7 பாகை துவங்கி,

22 + 15= 37 -30(மேசம் 30 பாகயை கழிக்க) = 7 , ரிசபம் 7 பாகை வரையுள்ள கிரகத்துடன் இணையும் மேசம் 7 பாகை துவங்கி ரிசபம் 7 பாகை வரை உள்ளது போல அந்த கிரகம் அமர்ந்த பாகை புள்ளியிலேயே 1, 5, 7, 9 ராசிகளையும் கணிக்க வேண்டும்

முதல் ராசி- மேசம் 7- ரிசபம் 7,
ஐந்தாம் ராசி - சிம்மம் 7 - கன்னி 7,
ஏழாம் ராசி - துலாம் 7 - விருச்சகம் 7,

CamScanner

ஒன்பதாம் ராசி - தனுசு 7 - மகரம் 7 , என கணித்து இணைவுகளை எடுக்க வேண்டும், இது பாகை ரீதியாக பழக்கம் வருவதற்கான வழிமுறை மட்டுமே இது ஓரளவுக்கு பழகிய பிறகு, ஒரு கிரகம் செல்லும் திசையில் 18 பாகையும் அது கடந்து வந்த திசையில் 12 பாகையும் அதனுடைய ஆளுமை பகுதியாகும், உதாரணமாக மேஷ ராசியில் சனி 4 பாகையில் உள்ளது, சனி மேசத்தில் இருந்து ரிசபத்தை நோக்கி செல்லும், எனவே 4+18=22, மேசத்தில் சனியின் எல்லை 22 பாகை வரை, அது போல சனிக்கு பின் பக்கம் கணிக்க வேண்டும் பின் பக்கம் 12 பாகை, இதில் எளிதாக கணிக்க முன் கணித்த பாகையான 22 பாகையை பின் ராசியில் பயன்படுத்தலாம் எனவே மீனம் 22 பாகையில் இருந்து மேஷம் 22 பாகை வரை மேஷத்தில் 4 பாகையில் உள்ள சனியின் ஆளுமை இருக்கும் இந்த எல்லைக்குள் எதாவது ஒரு கிரகம் இருந்தால் சனியுடன் இணைந்துள்ளது எனப்பொருள், அதே போல 5,7,9,3,11 ஆம் ராசிகளையும் எல்லைகளை கணிதம் செய்து கொள்ள வேண்டும், இருப்பினும் பலன் கூறிப் பழகும் வரை இந்த பாகை கணிதத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம், பொதுவாக ராசிகளின் எண்ணிகையை வைத்து மட்டும் பலன் கூறுங்கள்,

முக்கிய குறிப்பு

நமது முறையில் நட்பு, பகை, சுபர், அசுபர், கிரக யுத்தம், அஸ்தங்கம், யோகி, அவயோகி, மாரகம் பாதகம் போன்ற எதுவும் இல்லை, இவைகள் எல்லாம் பலனை நிர்ணயம் செயவதற்காக உருவானதே தவிர கிரகங்களுக்குள் சண்டை சச்சரவுகள் கிடையாது, இவைகள் எல்லாம் பலம் நிர்ணயம் செய்வதற்கான வழிமுறைகள், ஆனால் நாம் இது போல ஜோதிடத்தை அணுகுவது இல்லை,

எனவே கிரகங்கள் உணர்த்தும் பண்புகளை மனதில் வைத்து கொண்டு அதில் நமக்கு எது குறித்த விசயம் தேவையோ

அதற்கான கிரகம் பெற்றுள்ள நிலையையும், அமர்ந்துள்ள ராசியின் குணங்களையும், அந்த ராசியில் இருந்து 1,5,7,9,3,11 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களின் பண்புகளையும் இணைத்து பலன் கூற வேண்டும்,

உதாரணம் சனி துலாமில் உள்ளது, சனி என்பது ஒரு ஜாதகரின் தொழில் மற்றும் பணி பற்றி கூறுவதால் துலாம் ராசியின் பண்புகள் கொண்ட தொழில் அல்லது பணி என்றும், துலாமில் இருந்து 1,5,7,9,3,11 ராசி--களிலும் உள்ள கிரகங்களின் பண்புகள் கொண்ட தொழில் அல்லது பணி என்றும், இவை அனைத்தையும் இணைத்து கலவையாக புரிந்து அது வழக்கத்தில் உள்ள எந்த தொழிலோடு ஒத்து போகிறதோ, அதை ஜாதகரின் கல்வி நிலை போன்றவற்றை அனுசரித்து கூற வேண்டும், ஆரம்பத்தில் சிறிது குழப்பம் இருந்தாலும் அனுபவம் வந்தவுடன் எளிதாக அனைத்தையும் கூறிவிடலாம்,

நாமநாடி

தமிழ் இலக்கணத்தில் இடுகுறிப்பெயர் மற்றும் காரணப்பெயர் என இரண்டு வகையான பெயர்களை பார்த்திருப்போம், இடுகுறிப் பெயர் என்றால் ஒன்றை குறித்து பேசுவதற்காக வைத்த பெயர், இதற்கு அந்த பொருள் அல்லது அந்த உயிரின் குணம், பண்புகள் என எதுவும் முக்கியம் இல்லை, அந்த பெயர் குறிப்பதற்கு மட்டுமே உதாரணமாக மரம், மாடு, இதற்கு அர்த்தம் தெரியாது, பழங்காலத்தில் இருந்து இருக்கிறது, இருப்பினும் அறிஞர்கள் அதுவும் காரணத்தோடு வைத்ததுதான் என கூறுகின்றனர், எப்படி இருந்தாலும் நமக்கு அர்த்தம் தெரியாது எனவே அது ஒன்றை இட்டு குறிக்க மட்டுமே வைத்தது.

CamScanner

அடுத்து காரணப்பெயர், இது அதன் காரணத்தை அறிந்து அதற்கு வைத்த பெயர் திருப்பு(உ)ளி, தண்ணீர்த் தொட்டி இது போல அந்த பெயரை வைக்க அதன் பயன்பாடு, உருவம் போன்ற எதோ ஒரு காரணம் இருக்கும்

இதன்படி பார்க்கும் போது மனிதர்களுக்கு வைக்கும் பெயர்கள் இடுகுறி பெயர்களாகவே இருக்கும், ஏனெனில் அந்த மனிதனுக்கு பெயர் வைக்கும் போது அவருடைய வாழ்க்கை யாருக்கும் தெரியாது எனவே அழைப்பதற்கு ஒரு பெயர் மட்டுமே, இதற்கு எந்த காரணமும் இல்லை, ஆனாலும் கூட தாத்தா பெயர், சாமிப்பெயர் என எதாவது காரணம் இருக்கலாம், ஆனால் காரணப் பெயர் என்றால் அவருடைய தனித்துவம் அதில் இருக்க வேண்டும், வம்சப்பெயர், தாத்தா பெயர், பாட்டி பெயர் என்பது நேரடி காரணமாகது, மேலும் சிலருக்கு அதுவும் சில காலங்களுக்கு பிறகு காரணப்பெயர் கிடைக்கலாம், கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் கங்கையை வெற்றி கொண்டதால் வந்தது, கரிகாலசோழன் என்பது அவனது கரிய கால்களினால் வந்தது, இதுபோல சில பெயர்கள் பிறக்கும் போது வைக்க முடியாது அந்த மனிதனின் செயல்கள் மற்றும் எதாவது அடையாளங்களை வைத்துதான் வரும், அதுவும் கோடியில் ஒருவர் பிறக்கும் போது கருப்பாக இருந்தார் எனவே கிருஷ்ணன் என பெயர் வைத்ததாக கூறுவார்கள், இது போல எதாவது ஒரு சில பெயர்கள் இருக்குமே தவிர மற்ற பெயர்கள் அனைத்தும் இடுகுறி பெயர்களாகவே வைக்கப் படுகிறது,

ஆனால் நம்மையே அறியாமல் அதுவும் காரணப் பெயராகவே இருக்கிறது, அந்தப் பெயருக்கான பண்புகளை நாம் பெற்று இருக்கிறோம், மேலும் மனிதன் மட்டுமே இல்லை இந்த உலகில் உள்ள அனைத்துப் பெயர்களும் காரணப் பெயர்களே, நமக்கு காரணம் புரிந்துகொள்ள முடியவில்லை என்று கூறலாம், ஆனால் இயற்கையாக பெயர் காரணமானதாக இருக்கிறது,

CamScanner

ஒரு மனிதனுக்கு மட்டுமல்ல ஒரு மிருகத்திற்கு பெயர் வைத்தாலும் அந்த பெயரின் தன்மையுடனான வாழ்க்கையில் அந்த நாய் வாழும், நாய் மட்டுமல்ல ஊரின் பெயர், தெருவின் பெயர் துவங்கி ஒருவருக்கு வைக்கும் பட்டபெயர் கூட அவரது வாழ்க்கை பற்றிய தகவலை சுமந்து கொண்டிருக்கும்,

ஒரு கூட்டத்தில் நீங்கள் ஒருவரை அழைக்க வேண்டும், ஆனால் அதில் உள்ள பெயர்கள் உங்களுக்கு தெரியாது, எனவே அந்த கண்ணு பெருசா உள்ளவர் வாங்க என அழைப்பது போல, எத்துப்பல், முட்டை கண்ணன், கோனை வாய், சொட்டை, என்று அவர்களுடைய குறைகள் பெயராவதும், சிலரை பெரிய அப்துல்கலாம் இவரு, ஜிடிநாயுடு மாதிரினு சொல்வது அவருடைய பெருமைகளையும், சிலரை காதல் மன்னன் என்றும், சிலரை சண்டியர் என்றும் அழைப்பது அவர்களுடைய குணம் மற்றும் செயல்களை வைத்துதான், இவைகள் நமக்கு தெரிந்த பிறகு வைத்த பெயர்கள், ஆனால் பிறந்த சில நாட்களில் வைக்கும் பெயர்கள் நம்மை பற்றி தெரியாததற்கு முன்பே வைத்தது, இருப்பினும் இயற்கையாகவே நமது வாழ்க்கை பற்றிய அனைத்துடனும் அந்த பெயர் பொருந்துகிறது,

பெயர் மாற்றினால் வாழ்க்கை மாறுமா என்றால் விதிப்படி மாற்றம் இருந்தால் மட்டுமே பெயரும் மாறும் என்பதுதான் உண்மை,

ஒரு மனிதனின் பெயர் அவனது குறைகள் மற்றும் நிறைகளை சார்ந்து வடிவமைப்பை இயற்கையாகவே பெறுகிறது, நம்மைச் சுற்றி உள்ள மனிதர்களை நாம் பல சமயங்களில் பட்டப் பெயரை வைத்து அழைப்போம், அந்த பெயர்கள் அவரது சிறப்பு அல்லது குறையினால் உருவாகியிருக்கும், நாம் இவ்வாறு வைக்கும் பெயர்கள் போலவே இயற்கையாகவும் அமைந்த பெயர்கள் நமது குறை மற்றும் சிறப்புகளை வைத்து இயற்கையாக அமையப் பெறுகிறது, இதை நாம்

விழிப்புணர்வுடன் புரிந்து கொள்ள துவங்கினால், மனிதனின் பெயர் மட்டுமல்ல, ஒவ்வொரு ஊரின் பெயர், ஒவ்வொரு தெருவின் பெயர் என அனைத்துமே பல விந்தைகளை நிகழ்த்துகிறது, ஒரு நபரின் பெயர் அந்த குடும்பத்தில் உள்ள அனைவரது பெயர் மற்றும் அவர்கள் தொழில் நன்மை மற்றும் தேவைகளை குறிக்கிறது அது போலவே ஒவ்வொரு ஊரின் பெயரும் அந்த ஊரில் நடக்கும் நிகழ்வுகள், அந்த ஊரின் அமைப்பு அந்த ஊரில் நடக்கும் தொழில் போன்ற அனைத்தின் மூலத்தினை சரியாக புரிந்து கொள்ள வழிவகை செய்கிறது,

நமது ராஜநாடியின் விதிகளை புரிந்து கொண்டால் மட்டுமே போதும் ஒரு பெயர் மற்றும் அந்த நபரை சுற்றியுள்ளவர்களின் பெயர்கள் அனைத்துமே அதிகாரம் பெற்ற கிரகங்களின் வழியாக மற்றும் இணைவு பெற்ற கிரகங்களின் வழியாக மட்டுமே இருக்கும் என்பதை நீங்கள் காண முடியும், மேலும் ஒரு பெயரை கேட்டதும் அவர் ஜாதகத்தில் எந்த கிரகம் எந்த நிலையில் இருக்கும், எந்த எந்த கிரகங்கள் சேர்ந்து இருக்கும் என்று கூறிவிட முடியும், அதே விதிகளின் அடிப்படையில் ஒரு ஜாதகத்தை பார்த்தவுடன் அந்த ஜாதகத்துடன் தொடர்புள்ள பெயர்களை கூறிவிடவும் முடியும், பெயர்களினைக் கூறுவதால் என்ன பயன் என்றால் அந்த பெயர்களை வைத்து மிக முக்கிய ஜாதக அமைப்பை கண்டுகொள்ள முடியும், அதன் வழியாக ஜாதகமே இல்லாமல் மிகச்சரியாக அவருடைய பலனை கூறமுடியும்,

இதில் நாம் பாவகம் போன்ற கணிதங்களும், தசா புத்தி போன்ற கணிதங்களும் செய்ய வேண்டிய அவசியமில்லை, ராசி காரகங்கள் பற்றி ஓரளவுக்கு மேலோட்டமான புரிதலும், கிரக காரகங்கள் பற்றிய நல்ல புரிதலும் இருந்தால் போதும், இந்த முறையில் நாம் கிரகங்கள் அடிப்படையில் மட்டுமே பலன் கூறப்போகிறோம்,

CamScanner

இதில் முக்கியமானது ஒருகிரகம் மட்டுமே குறிகாட்டினால் அதற்கு பலன் கூறிப் பழக வேண்டும், உதாரணமாக சூரியா என்றால் சூரியனைக் குறிக்கும் இதற்கு என்ன பலனைக் கூறுவது? மிகவும் எளிதானது, நமது புத்தகத்தில் சூரியன் அதிகாரமான பலன்கள் தனியாக கொடுத்துள்ளேன் அதேபோல அனைத்து கிரகத்திற்கும் தந்துள்ளேன் அதை நேரடியாக கூறலாம் உதாரணமாக சூரியாவுக்கு சூரியனுக்கான நற்பலன், தீயபலன் அருகில் உள்ள இடம், ஜாதி, மச்சம், அடையாளம், வேலை, என அனைத்தையும் கொடுத்துள்ளேன் நீங்கள் கண்களை மூடிக்கொண்டு அந்த பலன்களைக் கூறலாம்,

ஒரு பெயரை அதில் உள்ள எழுத்துக்களுக்கான எண்களாக மாற்ற தேவையில்லை, ஒவ்வொரு பெயருக்கும் காரணம் அல்லது அர்த்தம் என ஒன்று இருக்கும் அல்லது அந்தப் பெயர் குறிக்கும் தன்மை, பொருள், அர்த்தம் போன்றவற்றை புரிந்து கொள்ள வேண்டும், ஆரம்பத்தில் சற்று குழப்பமாக இருந்தாலும் சில மாதங்களில் பழகிவிடும்

உதாரணமாக சந்திரா என்ற பெயர் நேரடியாக புரிகிறது சந்திரனை குறிக்கிறது என்று, இது போல ஒருவரின் பெயரை எதாவது கிரகத்திற்கு பொருத்திப் பார்க்க வேண்டும்,

சங்கர் என்றால் சூரியன் என்று பொருள் இது போல பார்க்க வேணடும், ஒருவருக்கு மனோகரன் என்ற பெயர் இருந்தால் மனோ+கரன் = மனோ என்பது சந்திரன், கரன் என்பது சூரியன் எனவே அவர் இந்த இரண்டு கிரக பிரிவுகளுக்கு உட்பட்டவர் என்று பொருள்,

இது போல பல பெயர்களுக்கான கிரகங்களை உங்களுக்கு கொடுத்துள்ளேன் இதன் அடிப்படை பழகப் பழக பிடிபட்டுவிடும் பின்னர் நீங்களாகவே பெயர்களை புரிந்து கொள்ள முடியும், ஒரு சிலரின் பெயர் புரியாத போது அவரின் தாய், தந்தை, மனைவி,

CamScanner

மக்கள் பெயர்களை கேட்டு அதற்கான கிரகத்தினை வைத்து அந்த நபரின் பெயரினை புரிந்து கொள்ள முடியும், காரணம் ஒரு மனிதனுடன் உறவில் உள்ள அனைவரும் ஒரே மாதிரியான ஜாதக அமைப்பு உடையவர்களாகத்தான் இருப்பார்கள்.

அவ்வாறு புரிந்து கொண்ட பெயர்களை அது எந்த கிரகத்தின் தன்மை என புரிந்து கொண்டால் போதும் மேற்கண்ட கிரகப் பிரிவில் உள்ள பலன்களை வரிசையாக கூறலாம்,

இவ்வாறு நாம் பெயரை வைத்து கண்டறியும் கிரகங்களை **அதிகார கிரகம்** என்று அழைக்கிறோம்,

அப்படி பெயரை வைத்து கண்டறிந்த அதிகார கிரகம் இயற்கையாகவே அந்த நபரின் ஜாதகத்தில் ஒரு குறிப்பிட்ட அமைப்பில் இருக்கும்,

நீங்கள் இப்போது இரண்டு வகையில் பலன் கணிக்கலாம் ஒன்று பெயரை வைத்து ஜாதகத்தை அனுமானம் செய்யலாம், அதைக் கொண்டு பலன் கூறலாம், அல்லது ஜாதகத்தை வைத்து அவரை சுற்றி உள்ள அனைத்து பெயர்களையும் அனுமானிக்கலாம், அதன் வழியாக அவரை சுற்றியுள்ள உறவின்ர்களைப் பற்றியும் கூட கூறலாம்,

அப்படி பெயர்களை வைத்து கண்டறிந்த அதிகார கிரகங்கள் கீழ்கண்ட விதிகளில் ஒரு ஜாதகத்தில் அமைந்து இருக்கும், மேலும் கீழே உள்ள விதிகள் அடிப்படையில் ஒரு கிரகத்தை மட்டுமே வைத்துக் கொண்டு பலன் அறியும் அதிகார கிரக விதிகளும் அதற்கான பலன்களும் அளித்துள்ளேன்,

பெயரை வைத்து சொல்லலாம் அல்லது ஜாதகத்தினை பார்த்து அதிகாரகிரக விதிகளின் அடிப்படையில் சில நிமிடங்களில் பலன்களைக் கூறலாம்,

CamScanner

அதிகார கிரக விதிகள்

- வக்ரமான கிரகம்,
- பரிவர்த்தனை பெற்ற கிரகம்
- ராசியின் விளிம்பில் நின்ற கிரகம்
- வக்கிரம், விளிம்பு, பரிவர்தனை கிரகத்துடன் ஒரே ராசியில் உள்ள கிரகம்,
- ஒரு ஜாதகத்தில் தனது சொந்த ராசியில் அமர்ந்த கிரகம்,
- சொந்த ராசிக்கு ஏழில் அமர்ந்த கிரகம்,
- உச்சம் அல்லது நீச்ச ராசியில் உள்ள கிரகம்,
- சொந்தராசி, அல்லது ஏழாம் ராசி மற்றும் உச்ச நீச ராசிகளில் உள்ள கிரகங்களுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்கள்,
- மற்ற கிரகத்துடன் (1 ,5, 7, 9 ஆம் ராசிகளில்) கூடி நின்ற கிரகம்,
- ராகு மற்றும் கேது உள்ள ராசிக்கு திரிகோணத்தில் (5,9 ஆம் ராசிகளில்) உள்ள கிரகம்
- ஒருநாள் முன் பின் தேதிகளில் மாற்றமான கிரகம்,

இந்த அனைத்து விதிகள் இருப்பினும்

- ஒரு ஜாதகத்தில் தனது சொந்த ராசியில் அமர்ந்த கிரகம்,
- சொந்த ராசிக்கு ஏழில் அமர்ந்த கிரகம்,
- உச்சம் மற்றும் நீச்ச ராசியில் உள்ள கிரகம், இந்த விதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்,

குறிப்பு ;

- **வக்கிரமான கிரகங்கள் அல்லது விளிம்பு கிரகம் அல்லது பரிவர்த்தனை பெற்ற கிரகங்கள்** அதிகார தன்மையுடன் இருக்கும்,
- வக்கிரமான, பரிவர்த்தனையான விளிம்பில் உள்ள கிரகத்துடன் **ஒரே ராசியில் இணைந்த கிரகம்** அதிகாரம்

CamScanner

பெறும், அந்த ஜாதகரின் உறவுகள் ஜாதகத்தில் இந்த கிரகங்கள் நேரடியாக அதிகாரத்தில் இருக்கும்

இந்த விதிகளின் வழியாக கண்டறியப்பட்ட கிரகத்தின் பெயர்களே அவருக்கு இருக்கும், அல்லது அவரது பெயரை கொண்டு கண்டறிந்த கிரகங்கள் ஜாதகத்தில் மேற்கண்ட நிலைகளில் இருக்கும், அவரது உறவினர், நண்பர்கள், தொழில் செய்யும் இடம் துவங்கி எதிரி வரை அந்த கிரகங்களே இருக்கும்,

எனவே நாம் ஜாதகத்தில் கண்டறிந்த அதிகார கிரகத்தின் பெயரே அவருக்கு இருக்கும் அல்லது அவருடைய பெயருக்கான கிரகமே அதிகார கிரகமாக இருக்கும்

ஒரு ஜாதகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அதிகார கிரகங்கள் இருக்கலாம், அவை அனைத்தையும் நாம் பலன் கூற பயன்படுத்த வேண்டும், இருப்பினும் அந்த கிரகங்களுக்குள் இயற்கையாகவே அதிக பலம் வாய்ந்த அதிகார கிரகமாக அவரது பெயர் குறிக்கும் கிரகம் முன்னிலை பெறும் எனவே நாம் ஜாதகத்தினை பார்த்து விதிகளை பயன்படுத்தி புரிந்து கொண்டாலும், எடுத்த எடுப்பிலேயே பெயரை வைத்து அதிகார கிரகத்தினை கண்டு கொள்ள முடியும்,

எனவே ராஜநாடி முறையில் நாமநாடியின் நோக்கம் தேர்ச்சியடைந்த பிறகு ஒரு பெயரை மட்டுமே வைத்துக் கொண்டு அவரது வாழ்க்கை அவரது உறவினர்கள் வாழ்க்கை என அனைத்தையும் கூறிவிட முடியும், காரணம் அவர் பெயரை கேட்டவுடன் அவரது ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளை கற்பனையாக புரிந்து கொள்ள முடியும் இந்த பெயருக்கு எந்த கிரகங்கள் அதிகாரம் பெறும் என்று புரிந்து கொள்ளும் ஆற்றல் வந்து விடும்,

அதிகார கிரகம் தனது முக்கியத்துவத்தை நிரூபித்துக் கொண்டே இருக்கும், சூரியன் அதிகார கிரகமாக இருந்தால் தந்தை மிக முக்கிய பொறுப்புகளில் இருப்பார், அரசுத்துறை

CamScanner

அல்லது பூர்விகத் தொழிலை செவ்வனே செய்வார், குடும்பத்தில் நற்பெயருடனும், சமூகத்தில் நல்ல மதிப்புடனும் இருப்பார், குடும்பத்தில் ஒருவரையாவது அரசு பணிக்கோ அல்லது வம்சா வழியாக செய்யும் பணிக்கோ உட்படுத்தி விடுகிறது, ஜாதகர் தந்தையின் பெயரை கூறி தன்னை அடையாளம் செய்து கொள்வார், தந்தையை உயர்வாக நினைக்கும் அளவுக்கு தந்தை இருப்பார், ஆனால் தந்தையை ஜாதகர் சிறு வயதில் இருக்கும் போது பிரிந்து விட நேரிடும், சரியாக இதை கவனியுங்கள், இங்கு சூரியனின் காரகத்தின் தந்தை முக்கியமானவராக இருந்தாலும் ஜாதகருக்கு அதை ஒரு குறையாகவும் மாற்றிவிடுகிறது, அதாவது அதிகமான நன்மையை கொடுத்து அதனை உயர்த்தி, அதை அனுபவிக்க விடாமல் செய்வதன் மூலமாக வாழ்க்கை முழுவதும் அதை ஒரு மிக முக்கியமான குறையாக மாற்றி தன்னை எப்போதுமே முக்கியமான ஒன்றாக அந்த கிரகம் செய்து கொள்கிறது, ஒரு படத்தில் வரும் வசனம் போல கல்யாணமா இருந்தால் நான்தான் மாப்பிள்ளை, சாவு வீடாக இருந்தாலும் நானுதான் பிணம் எப்படி இருந்தாலும் மாலையும் மரியாதையும் எனக்குத்தான் விழ வேண்டும் என்பது போல அதிகார கிரகங்கள் செயல்படும்,

சூரியன் அதிகார கிரகமாக இருந்தால் அரசு உத்யோகம் கிடைக்கலாம், அப்படி என்றால் அரசினால் தொல்லை வருமா என்றால், ஆம் நீங்கள் அரசு ஊழியர் ஆனதால் எப்போதுமே உங்கள் பணியின் மூலமாக அரசுடன் சிறு சிறு தகராறுகளை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறீர்கள்,

ஒருவரிடம் அவரது தந்தைக்கும் அவருக்கும் இடையில் உள்ள உறவு எப்படிபட்டது என்று கேட்டால் அவ்வளவு நல்ல படியாக இருக்காது, ஒருவர் உலகிலேயே அதிகமாக திட்டு வாங்கியது அவரின் தந்தையிடம்தான், அதே போல ஒருவரை பற்றி அதிகம் அக்கறை எடுத்துக் கொள்வதும் அவரது தந்தைதான், தந்தையின் உறவை பற்றி தனியாக அமர்ந்து யோசித்து பாருங்கள் அளப்பரியதாக இருக்கும், ஒரு வேளை

தந்தை இறந்திருந்தால் கூட அவரது சொத்து, வேலை, என எதாவது ஒரு விதத்தில் உதவி இருக்கும், இது போலவே ஒருவருக்கு தாயின் உறவும் மிக முக்கியமானது,

ஒருவரது வாழக்கையில் எப்படி தாய், தந்தையோ அது போல ஜாதகத்தில் உள்ள **ராஜநாடியின் அதிகாரகிரகம்** எல்லாமுமாக இருக்கும்,

ஒரு ஜாதகத்தில் அதிகாரம் பெற்ற கிரகம் அந்த ஜாதகரின் வாழ்க்கையில் நடக்கும் **நன்மை தீமை** அனைத்தையும் செய்யும் அதிகாரம் படைத்தது,

மேலும் ஒருவர் தனது சொந்தமான இடத்தில் அல்லது தெருவில் அல்லது ஊரில் இருக்கும் போது எப்படி பெரிய ஆளைப் போல காட்டுவாரோ அது போல் ஒவ்வொரு கிரகமும் சில குறிப்பிட்ட ராசிகளில் அல்லது குறிபிட்ட நிலைகளில் அதிகாரமாக இருக்கும் அந்த கிரகங்கள்தான் ஜாதகரின் வாழ்க்கை தனித்துவத்தின் அடையாளம் ஆகும்,

இந்த விதி வழியாக கண்டறியப்பட்ட கிரகத்தின் காரகத்தின் தன்மைகளின் படியே வாழ்க்கை அவருக்கு இருக்கும், அவரது உறவினர், நண்பர்கள், தொழில் செய்யும் இடம் துவங்கி எதிரி வரை அந்த கிரகங்களின் முக்கியத்துவம் இருக்கும்,

ஒரு ஜாதகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அதிகார கிரகங்கள் இருக்கலாம், அவை அனைத்தையும் நாம் பலன் கூற பயன்படுத்த வேண்டும், அதே சமயம் அந்த குடும்பத்தில் உள்ள அனைவரின் ஜாதகத்திலும் ஒரே போல சில கிரகங்கள் பொதுவாக அதிகாரம் பெற்று இருக்கும் அந்த கிரகத்தின் தாக்கம் ஒவ்வொரு நபரின் வாழ்க்கையிலும் இருக்கும்,

CamScanner

அதிகமாக கிரக காரகங்களை தெரிந்து வைத்திருப்பது மிக முக்கியம், ஆரம்பத்தில் இந்த புத்தகத்தினை கையில் வைத்துக் கொண்டு பலன் கூறலாம் காலம் போகப் போக பழக்கத்திற்கு வந்து விடும்,

பெயரில் அதிகார கிரகத்தை பயன்படுத்தும் விதிகள்

ஒருவருடைய பெயரின் மூலமாகவோ அல்லது ஜாதகத்தின் மூலமாகவோ கண்டறிந்த அதிகார கிரகத்தினை வைத்துக் கொண்டு கீழ் கண்டவாறு பலன் உரைக்க வேண்டும்,

லட்சுமி என்ற பெயர் சுக்கிரனின் பெயர், நாம் இந்த பெண்ணுக்கு சுக்கிரனின் பலன்களை கூற வேண்டும் ஒவ்வொரு கிரகத்திற்குமான பலன்களையும் இந்த புத்தகத்தில் விரிவாக கொடுத்துள்ளேன், அதோடு இவரின் தொழில், இவர் குடும்பத்தில் உள்ள தொழில், அவர்கள் பெயர், என சங்கிலி தொடர் போல பலன் சொல்லிக் கொண்டே போகலாம்,

அது மட்டுமல்லாமல், இந்த பெண்ணின் தாயார் பெயரை கேட்கும் போது முத்துரத்தினம் என்று கூறுவதாக வைத்துக்கொள்வோம், இதில் முத்து = சந்திரன், ரத்தினம்= சுக்கிரன் எனவே இப்போது சந்திரனின் குணம், தொழில், பெயர்களையும் கூறலாம், அவரின் தாயாருக்கு சந்திரன் மற்றும் சுக்கிரன் குறிக்கும் நோய்கள், மற்றும் இந்த இரு கிரகங்களுக்கான பலன்களையும் கூறலாம், அந்த பெண் ஜாதகத்தில் பார்த்தால் சந்திரனும் அதிகார கிரக விதிகளின் அடிப்படையில் அமைந்து இருக்கும், மேலும் அவருடைய உறவினர்கள், உடன் இருப்பவர்கள் அனைவரும் சந்திரனின் பெயர்களில் இருப்பார்கள், முத்து ரத்தினம் என்பது சந்திரன் சுக்கிரன் எனவே இந்த இணைவு ஆசிரியரை குறிக்கும் அவரது

CamScanner

குடும்பத்தில் ஆசிரியர் அல்லது தையல் வேலை செய்பவர் இருப்பர்,

அவருக்கான பெயருக்கு உண்டான கிரகத்திற்குரிய மற்ற வேறு பெயர்களைக் கூறி அவரது நட்பில், உறவில் உள்ளார்களா என்று கேட்டு உறுதி செய்ய வேண்டும்,

ஒரு வேளை அவர் அண்ணன் பெயர் ராம் என்று கூறினால் ராம் என்பது புதன் உடனடியாக அந்த விட்டின் அருகே எலெக்ட்ரிக்கல் உள்ளதா என்று கேட்கலாம் காரணம் புதன் எலெக்ட்ரிகலை குறிக்கும், மேலும் வீட்டுக்கு அருகே பள்ளி, வங்கி, பிரிண்டர், போஸ்ட் ஆபீஸ், கொரியர் உள்ளதா என கேட்கலாம், இதில் ஒன்றோ இரண்டோ இருக்கும் அடுத்து வங்கி மற்றும் டெக்ஸ்டைல் தொழில் செய்யும் ஒருவர் உள்ளார் என கூறலாம்,

இது போல் புதனுடய அனைத்தையும் கூறலாம், உறவுகளில் அதிகமான ஒற்றுமையாக எந்த கிரகம் வருகிறதோ அது குறிக்கும் ஜாதி இருக்கும், இது போல பழக பழக லாவகமாக கையாள முடியும், இதையெல்லாம் சரி பார்த்த பிறகு அவருக்கான கிரகத்தை சரியாக கணித்து பலன் கூறலாம்,

உதாரணமாக ராம் என்பவருக்கு புதன் கிரகம் அதிகாரமாக வரும், உடனே புதனின் வேறு பெயர்களான வெங்கட், விஜயா, மோகன், யுவராஜா, கீதா, மாலதி, பாலா உள்ளனரா என உறுதி செய்ய வேண்டும்,

அடுத்து, புதனின் தொழிலான கல்வி, வங்கி, தபால், எலெக்ட்ரிக், சிவில் போன்ற தொழில்களில் யார் இருந்தார் என உறுதி செய்ய வேண்டும்,

CamScanner

இதிலேயே பலருடைய பெயர் வரும் அதில் வரும் தொடர்பு பெயர் அவர்களுடைய கணவன் மனைவி பெயர்களை வைத்து சில கேள்விகள் கேட்கலாம், உதாரணமாக விஜயா என யார் இருக்கிறார் எனக் கேட்டால் அக்கா பெயர் விஜயலட்சுமி என கூறினால் அவருக்கு பணம் தொடர்பான பிரச்சினை உள்ளதா, அவர் மகளுக்கு சிக்கல் உள்ளதா என கேட்கலாம் காரணம் விஜயலட்சுமி என்பது புதன் மற்றும் சுக்கிரனின் பெயரும் கூட உடனே அக்கா கணவர் பெயர் என்ன எனக் கேட்டால் மணிகண்டன் என கூறிய உடன் டிரான்ஸ்போர்ட்டா என கேட்கலாம் காரணம் மணிகண்டன் சனி செவ்வாய் அந்த தொழில் பிரச்சனையை கேட்கலாம்,

இது போல ராம் என்பதற்கான பெயரை சுற்றி புதன்தான் அதிகமாக உள்ளது என்று தீர்மானம் செய்துவிட்டால், அவரை சுற்றி அருகில் உள்ள அடையாளம், தொழில், நோய், நன்மை, தீமை, என அனைத்துமே புதனுடைய பகுதியில் கொடுத்துள்ள பலன்களை கூறலாம், அவர் வீட்டின் திசை, அவருடைய சாதி,

புதனுடன் வேறு கிரக தன்மையும் இணைந்துள்ளது என சந்தேகம் வந்தால் அதற்கான சில பலன்களையும் இணைத்துக் கூறலாம், இதையெல்லாம் கூறிய பிறகு அந்த கிரகத்திற்கான மிக முக்கிய பிரச்சனை குறித்து ஆலோசனை தரலாம்,

அவருக்கு அப்போது என்ன கேள்வியோ அதற்கு ஏற்ப நடப்பு நிலை பலன்களை கூறலாம், ஆனால் அவர் கூறுவதற்கு முன்பே அவருக்கான பிரச்சனை என்ன என்று நாமே கூறிவிடலாம் அதிகார கிரகத்தின் பிரச்சனைதான் அவரின் வாழ்க்கை முழுவதும் இருக்கும்,

CamScanner

சில சமீபத்திய நிகழ்வுகள் நடந்ததை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் அடுத்து நடக்கவிருப்பதை அனுமானித்து பலன் கூறவேண்டும்,

அதிகாரம் பெற்ற கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்து இருக்கும் கிரகமும் ஜாதகத்தில் மிகவும் முக்கியத்துவம் அடையும், **அவரது மனைவி மகள், மகன், நண்பர்கள் போன்ற அவருக்கு நெருக்கமான நபர்கள் ஜாதகத்தில் இந்த கிரகம் அதிகாரம் பெற்று இருக்கும்**,

அடுத்தபடியாக ஒரு நபரின் பெயரை வைத்து அவருடைய பிரச்சனை இதுதான் என புரிந்து கொண்டால், அவருக்கு எளிதாக பலன் கூற முடியும், அதே நேரம் அவர் தனக்கு எப்போது வேலை கிடைக்கும் என்று கேட்டால், நமது ராஜநாடி நடப்பு விதிகள் அடிப்படையில் பலன் கூறலாம், இதுதான் சரியானது, ஆனால் நாம் அவரிடம் ஜாதகமே வாங்கவில்லை, பெயரை வைத்து மட்டுமே பலன் கூறுகிறோம் என்றால், அவர் கேட்ட கேள்விக்கான கிரகத்தின் காரக விசயம் சமீபத்தில் நடந்திருக்குமானால் அவர் கேட்டது விரைவில் நடக்கும் அதாவது அடுத்து வரவுள்ள சனி, குரு, ராகு, கேது பெயர்ச்சி காலங்களில் நடக்கும் என கூறலாம், உதாரணமாக அந்த நபர் தனக்கு எப்போது வேலை கிடைக்கும் என கேட்டால், உங்களுக்கு சமீபத்தில் பல் வலி வந்ததா என கேட்க வேண்டும், ஆம் எனக்கூறினால் வரும் குறிபிட்ட அதாவது அடுத்த பெயர்ச்சியை வைத்து அந்த மாதத்திற்கு மேல் கிடைக்கும் எனக் கூறலாம்,

இதில் அனைவருக்கும் பல்வலியை கேட்கக் கூடாது, சூரியன் பெயர் குடும்பத்தில் இருந்தால் மட்டுமே பல் வலி இருக்கும், அப்படி இல்லாத நபர்களுக்கு, சூரியனின் வேறு

காரகத்தை கேட்கலாம், சூழலுக்கு தக்க கையாள வேண்டும், இதுவும் அனுபவம் வரவர வந்து விடும்,

ஒருவர் வீடு சம்பந்தமாக கேள்வி கேட்கிறார், உடனே ஒரு வாரத்திற்குள் வீட்டில் கழிவு நீர் குழாய் சரி செய்தீர்களா என கேட்கலாம், அல்லது குழாய், தண்ணீர் பானை, வாங்கினீர்களா என கேட்கலாம், இவைகள் அனைத்தும் சந்திரனின் காரகங்கள், இதை நாம் கேட்க காரணம் வீடு பற்றிய கேள்வி, வீடு சந்திரனை சார்ந்தது, இதில் எதுவும் இல்லை என்றால் வயிற்று வலி, மார்பக வலி, போன்ற சந்திரனின் நோய்களை கேட்கலாம், ஆம் என்றால் அடுத்து வரும் பெயர்சிக்குள் மாற்றங்கள் இருக்கும்,

மிக முக்கியமாக ஒரு நபரின் வாழ்க்கையில் ஒன்றோ அல்லது பலவோ அதிகார கிரகங்கள் இருக்கலாம், அவரின் வாழ்க்கையின் அனைத்து நன்மையும், தீமையும் அதன் காரகத்தின் வழியாக மட்டுமே நடக்கும், பொதுவாக ஒரு குடும்பத்தில் வெவ்வேறு அதிகார கிரகங்கள் இருந்தாலும் நிகழ்வுகளை வைத்து எது முக்கியமான பங்காற்றுகிறது என புரிந்து கொள்ள முடியும், அதைப்போல ஒரு நபர் குடும்பத்தில் புதிதாக இணையும் போது வாழ்க்கை மாற்றம் நிகழும்,

ஒருவர் ஒரு ஊர் மாறியதும் வாழ்க்கை மாறும், அந்த ஊரின் பெயரும் இவருடைய பெயரின் கிரகத்தை சார்ந்தோ அல்லது இவர் ஜாதகத்தில் உள்ள அதிகார கிரகத்தை சார்ந்தோ அமையும்,

உதாரணமாக பூர்ணிமா அவருடைய கணவன் பெயர் சரவணன் அவர் சுப்பிரமணிய புரத்தில் இருந்தார், இப்போது பூர்ணிமா, சரவணன் இவை இரண்டும் பூர்ணிமா= சந்திரன்+சூரியன், சரவணன் = சந்திரன் + செவ்வாய் + சூரியன்,

சுப்பிரமணியபுரம் =சனி + செவ்வாய், சுப்பிரமணி என்றால் நகர்ந்து கொண்டே என பொருள், எனவே சரவணன் போக்குவரத்து பணியில் இருந்தார், எதோ காரணத்தால் சென்னை அடையாறுக்கு வந்து விட்டனர், அடையாறு ஆறு என்றால் சந்திரன், சரவணின் தந்தை மளிகை கடை வைத்திருந்தார், எனவே இவர்களும் சரவணனின் தந்தை தொழிலான மளிகை கடையும் அதை ஒட்டி டீ கடையும் வைத்தனர், இது போல் ஊர் பெயர் தெருவின் பெயர் என அனைத்தயும் வைத்து பலன் கூறலாம், மேலும் கொஞ்சம் அனுபவம் வந்து விட்டால் பெயரை வைத்து அவர் தெருவின் பெயர், ஊரின் பெயர், உடன் உள்ளவர்கள் விபரம் என அனைத்தையும் கூறிவிட முடியும்,

அடுத்த படியாக ஒருவர் திருமணம் செய்து கொள்ள உள்ள பெண் பெயர் துவங்கி அந்த பெண் குடும்பத்தில் உள்ள நபர்கள் பெயர் வரை கூறலாம்,

எனவே நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு பெயருக்கான கிரகம் எது என்பதைத்தான், அதற்கு இந்த நூலில் மிக முக்கியமான, அதிக பயன்பாட்டில் உள்ள பெயர்களை கொடுத்துள்ளேன், அப்படி புரியாத அல்லது வேறு மதம் நாட்டு பெயர்கள் வந்துவிட்டால் கவலை இல்லை, ஜாதகத்தின் அடிப்படையில் அதிகார கிரகத்தை கண்டறிய முடியும், சிலருடைய பெயர் தஸ் புஸ் என இருக்கும் அப்போது அவருடைய தாய் தந்தை மற்ற குடும்பத்தினர் பெயர்களை வாங்கி பார்க்கலாம்,

இந்த புத்தகத்தில் கிரகங்களுக்கு உண்டான உலோகம், நிறம், துணி, பழம், தானியம் மேலும் பல தகவல்களையும் கொடுத்துள்ளேன், இவை ஒரு ஜாதகத்தில் அதிகாரம் பெற்ற

CamScanner

கிரகம் எதுவோ அவைகளுடைய இடம், உலோகம், பழம், நிறம், உருவம், வடு, மரு என இவைகள் அனைத்தும் ஜாதகருக்கு இருப்பதாகவோ அல்லது அவரை சுற்றியோ இருக்கும், மேலும் அவருக்கு ஒரு நிகழ்வு நடக்கும் போது அதற்கு உரிய கனி, நிறம், என எதாவது ஒன்றை திடீரென பயன்படுத்துவார், இது நிகழ்வுகளின் சங்கிலி போன்றது,

எல்லா கிரகங்களும் எப்போதுமே பலனை தரும் எனினும் சில கிரகங்கள் சில காலங்களில் மட்டுமே குறிப்பிட்ட சம்பவங்களுக்கு வழி விடும் இதை கால நிர்ணய கணிதங்கள் மூலமாக அறியலாம், இருப்பினும் நாம் மேலே பார்த்தது போல ஒரு கிரகத்தின் தன்மை கொண்ட ஏதோ சில பொருட்கள், நிறங்கள், துணி இது போல சில தொடர்புகள் ஏற்படும் போது அந்த கிரகம் தனது வேலையில் உள்ளது என்று பொருள், கொஞ்சம் அனுபவம் வந்து விட்டால், நீங்கள் தசா புத்தி அல்லது கோச்சார நிலைகளை வைத்து பலன் கூறுவது போல நிகழ்வுகளை வைத்து பலன் கூறலாம்,

மேலும் ஜாதகரை சுற்றி நிகழ்வதை சரியாக கூறலாம், உதாரணமாக ஒருவர் ஜாதகத்தில் அதிகாரம் பெற்ற கிரகம் எதுவோ அதன் நிறம் என்ன என்று பாருங்கள், ஜாதகர் தனது மனைவியை முதலில் பார்க்கும் போது அவர் உடுத்தியுள்ள ஆடையின் நிறம் அதுவாக இருக்கும், அவர்கள் இருவரும் சந்தித்த இடம் அந்த கிரகத்தின் இடமாக இருக்கும், இது போல அனைத்தையும் உங்களின் அனுபவம் மற்றும் கற்பனைத் திறனுக்கு தக்கபடி பலன் கூறலாம்,

மேலும் ஜாதகருக்கு மனம், உடல் நலம், வாழக்கையில் சிக்கல் வரும் போது அவைகளை பயன்படுத்த ஆலோசனை கூறலாம், மனோ திடமும், சமாளிக்கும் திறமையும், அதற்கு உண்டான யோசனைகளையும் அவை மனதளவில் பெற்று தரும்,

மேலும் அவைகளை புதிதாக தொடங்கி இருந்ததாக கூறினால் அது தொடர்பான வேறொரு பலன் நடக்கும்,

உதாரணமாக ஒருவர் ஜாதகத்தில் சூரியன் அதிகார கிரகம் அவர் சில மாதங்களாகவே வேலைக்கு காத்துக் கொண்டு இருக்கிறார், அந்த காலத்தில் பல் வலி துவங்குகிறது, எனவே பல் வலிக்கு காரணம் சூரியன், அவருடைய ஜாதகத்தில் சூரியனின் காரகத்துவம் தனது வேலையை துவங்கி விட்டது ஆகவே வேலைக்கு காரக கிரகமும் சூரியன்தான் அதுவும் கிடைக்கப் போகிறது என்று பொருள்,

ஒருவர் தான் வெளிநாட்டிற்கு செல்வதாக கேட்கிறார், அவரது ஜாதகத்தில் சந்திரன் அதிகார கிரகமாக இருக்கிறது, எனவே சமீபத்தில் வீட்டில் பிளம்மிங் வேலை பார்த்தீர்களா என்றால் அவரும் ஆம் என்றால் பயணத்திற்கு காலம் நெருங்கி விட்டது என்று பொருள், காரணம் பிளம்மிங் வேலை சந்திரனுடையது, எனவே பயணமும் நடக்கும், உதாரணமாக ஒரு வீட்டில் கழிவுநீர்த் தொட்டி சுத்தம் செய்த சில நாட்களில் சற்று தூரமான பயணம் செய்ய வேண்டிய நிலை உண்டாகும்,

பெயர்களும் அதிகார கிரகங்களும்

ஒவ்வொரு கிரகத்திற்கும் சில குறிப்பிட்ட பண்புகள் உண்டு, அதை தெரிந்து கொண்டால் போதும், அந்த பெயரில்தான் அந்த கிரகத்தையே அழைத்தனர், உதாரணமாக பண்டைய நூல்களில் ஒவ்வொரு கிரகத்திற்கும் என்ன பெயர் வைத்தார்கள் என கொடுத்துள்ளேன் அதை வாசிக்கும் போது அந்த கிரகத்தின் காரகம் புரியும், அது போல ஒவ்வொரு ராசிக்கும் உள்ள பெயர்களை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் அந்த ராசியின் அதிபதியின் குணம் பிரதிபலிக்கும்,

கிரகங்கள் மற்றும் இராசிகளின் நூற்பெயர்கள்

சூரியன்

கதி, கதிரவன், பகலோன், கிரகபதி, சண்டன், சவிதா, சாயாபதி, சாவித்ரன், சான்றோன், சித்ரபானு, சுடரோன், சூரன், செஞ்சுடர், சோதி, தபனன், தரணி, தமிராநி, திவாகரன், எல், யாண்டு, பருதி, செங்கதிரோன், அசீதகரன், அரி, அரியமா, அருணன், அலரி, அனலி, ஆதவன், ஆதி, ஆத்மன், இருள்வலி, இனன், உதயா, அயிறிலி, எல்லவன், எல்லி, என்று, ஏழ்பரியோன், ஒளி, கசன், கனலி, ஞாயிறு, பக்கரை, பரி, ஏழூர்தி, என்றூழ், புண்டரீசன், திவாகரன், அருக்கன், பானு, மார்த்தாண்டன், தினகரன், இரவி, ஆதித்தன், அலரி, அகர்பதி, நபமணி, பகல், பங்கயன், பதங்கன், பதுமபானி, பார்க்கன், பனிப்பகன், பாற்கரன், பிரபாகரன், மணிமான், மித்ரன், முளரி, விகத்தனன், விண்மணி, வெய்யோன், வெய்யில்

சந்திரன்,

அம்புலி, மதினாட்கேள்வன், சோமன், இந்து, பிறை, வெண்ணிலா, திங்கள், உவா, நிலா, மதி, அலவன், அல்லோன், இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, எல்லிநாதன், கங்குக, கலையினன், குபேரன், குமுதன், குரன்கி, சசி, சீதன், சுதா, சுதாகரன், சோமன், தன்சுடர், தண்ணவன், தாராபதி, நிசா, பனிகதிர், விது,

புதன்

அறிவன், புலவன், கணக்கன், தூதன், புந்தி, அருணன், மால், மேதை, சாமன், அறிஞன், அனுமதி, சவுமன், சௌமியன், பாகன், நேமி, நிபுணன், பண்டிதன், மதிமகன், மாதுலன், மாலவன்

CamScanner

சுக்கிரன்,

வெள்ளி, புகர், மழைக்கோள், பிருகு, சுங்கன், சிதன், பார்கவன், ஏநாவிலன், ஆசனன், உசனன், ஒள்ளியோன், களத்திரன், கவி, காப்பியன், காம்ன், சல்லியன், சீதகன், புயல்

செவ்வாய்

சேய், அங்காரகன், நிலமகன், குருதி, ஆரல், குசன், தீ, அரத்தன், அழலவன், அழலோன், அழல், அறியவன், உலோகிதன், உதிரன், பௌமன், மங்களன், வக்கிரன்,

குரு,

அந்தணன், இறைவன், பொன், மறை, வியாழன், சீவன், பீதகன், பார்ப்பனன், வானோன், மந்திரி, அமைச்சன், அரசன், சிகிண்டிசன், சுகர்குரு, தேசிகன், தேவ மந்திரி, பிரகஸ்பதி, புங்கவன், பொன்னவன், மறை,

சனி

காரி, முடவன், முதுமகன், மந்தன், நீலன், கரியவன், பங்கு, கதிர்சேய், சுன், அஞ்சனன், அந்தகன், கதிர்மகன், கீழ்மகன், சந்தில், சவுரி, சாவகன், தமனிய்டன், நோய்முகன், பன்குபாதன்,ன் பாதங்கி, பிணிமுகன், மேற்கோள்,

ராகு

கருங்கோள், கரும்பாம்பு, பணி, மதிப்பகை, மதியுனி, அரவு, நாகன், தமம், இந்திரி, அகி, யோகன்

கேது,

சென்கோள், கதிர்பாகை, கதிருனி, செம்பாம்பு, கேசம், சிகி, ஞானி,

CamScanner

மேசம்

தகர், ஏழகம், எல்லை, வருடை, ஆடு, மொத்தை, மறி, மெல்லை, வற்காலி, மேழகம்,

ரிசபம்

விடை, பாண்டில், எருது, புல்லம், ஏறு, காளை, சே, குண்டை, ஆன்

மிதுனம்

யாழ், வீணை, இரட்டை, தண்டு, தாரம், கவிஞன், தொத்துவம்

கடகம்

குளிர், கொண்டல், நண்டு, அலவன், கார், சேக்கை, நள்ளி,

சிம்மம்

அரி, அரிமா, விலங்கரசு, சீயம், வேங்கை, யாளி, மா, மலைமா, கோண்மா, கடுவன், காண்டீவரம்,

கன்னி

மாது, மங்கை, தெரிவை, பெண், தையல், கரந்தை

துலாம்,

தூக்கு, துலை, கோல், நிறை, செட்டி, வணிகன், நிறைக்கோல், கட்டளை,

விருச்சகம்,

தேள், நளி, தெறுக்கால், துடர்மணி, விட்டன், துட்டன், புந்தேள், கீடம்,

CamScanner

தனுசு,

வில், சிலை, கார்முகம், கொடுமரம், சாபம், காண்டீபம், சராசரணம்

மகரம்,

மான்றாலை, சுரு, கலை, மான், சுறவம், புல்வாய், சுறா, கேது, நக்கீரம்

கும்பம்,

குடம், சாடி, சால், கடம், கரகம், கலசம், குட்டுவம்

மீனம்,

மீன், கயல், சேல், கெண்டை, மிருது, ரோகம்

இவற்றை மேலோட்டமாக தெரிந்து கொண்டால் எந்த பெயராக இருந்தாலும் பிரித்து ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும்,

கிரகங்கள் குறிக்கும் பெயர்கள்

சூரியன்

ஆளுமை செய்யும் பெயர்கள், அரசர்களின் பெயர்கள், அதே போல சத்யம், ரட்சித்தல், தியாகம், தானம், நித்யம், அதீத மகிழ்ச்சி போன்ற தலைவனுக்கு உண்டான குணங்களின் பெயர்கள், தலைமை கடவுள் உதாரணமாக சிவன், கரன், தரன், சங்கரன் போன்ற பெயர்கள் இந்து மதத்தில் உள்ளது போல அல்லா, ரஹ்மான் போன்ற பெயர்கள் முகமதியத்தில் இறைவனுடைய பெயர்கள் எனவே அதிகாரம் மிக்க அல்லது

CamScanner

மிகவும் உயர்வானதாக உள்ள அர்த்தங்களை பெற்ற பெயர்கள் அனைத்தும் சூரியன்,

அருண், ராஜா, நாதன், லாவன்யா, சாமி, அசோகன், காந்தி, அப்பன், அரிமா, பானு, சேட்டு, பிரகாஷ், ராஜன், சிவ, சங்கர், உதயன், கதிர், சவிதா, தினகரன், பாஸ்கரன், பிரபாகரன், மித்ரன், வேதா, கார்திக், ரகு, ஆனந்தன், ரேகா, ஹரன், தரன், வரன், லிங்கம், ரவி, ராதிகா, ரேவதி, அவாந்திகா, நடராஜ, ஆதி, சாவித்ரி, உஷா, விஷ்வா, ரேணுகா, கீர்த்தி, மூர்த்தி, கிருஷ்ணன், லிங்க, மித்ரா, அருணன், ஆதவன், விஷ்வா, ஆதித்யன், பரிதி, சத்யா, தியாக, லீலா, சேட்டு, பிரபா, பிரவின், ஆதி, திவாகர், பிரபு, ஷீலா, ரபீக், அபு, ஜாபர், ரஹ்மான், குதூஷ், சாத்விக், லேகா, சமத், ஜென்னி, இவைகள் சூரியனின் பெயர்கள்,

சந்திரன்

சந்திரனின் பெயர்கள், நதிகளின் பெயர்கள், நட்சத்திரப் பெயர்கள், நீர் நிலைகளின் பெயர்கள், தாய்மை, ஆதரவு, பேணுதல் குணம், இருள் மற்றும் நிறைவு போன்ற அர்த்தம், பூமியின் வேறு பெயர்கள், உடலிற்கு உள்ள வேறு பெயர்கள், உணவு தொடர்பான பெயர்கள், அம்மாள், தாய், பெண், ராணி போன்ற அர்த்தங்களை சந்திரன் குறிக்கும்,

சந்திரா, மதி, சுமதி, உமா, சுதா, மாதா, பேகம், அன்ன, பூரணி, அழகு, முகம், தர்சன், தருண், சுதாகர், இந்து, முத்து, கிருஷ்ண, அமுதா, பாரதி, ஜனார்தனன், அம்மாள், அம்மன், ஜலம், கோதை, இந்து, குமுதா, ராமன், பனி, யாமினி, வள்ளி, வல்லி, வெண்மதி, லாவண்யா, மனோ, ரத்தின, நாயகி, சசி, காயத்ரி, அழகு, சிந்து, ரஜினி, பிறை, பூர்னிமா, நிலா, காமாட்சி, மருது, மாதா, நாயகி, பழனி சரவணன், கார்த்தி, சலம், அழகு, கௌரி, பன்னீர், பார்வதி, பாலாஜி, பிரேமா, அகில, பூமி. பார், உலக, அட்ஷயா, பவித்ரா, காந்தி, அம்பிகா, பிரீத்தி, ரித்திக், தமிழ்,

CamScanner

தான்ய, மயில், மஞ்சுளா ஜரினா, பக்ருதீன், சேது, வருன் முகம், சான், ஷாம், வர்சினி, திவ்யா, தேவி, நந்தினி, பிரபு, பாரத், மஞ்சுளா, ஆர்த்தி, நந்தினி, செல்வி, சரவணன், பிரியா, அருவி, நட்சத்திரம், நதிகளின் பெயர்கள்,

புதன்

கற்றுத்தருதல், கணக்கு வைத்தல், விரல் நுணுக்க கலைகள், எழுத்து, இசை ராகம், நளினம், போன்ற அர்த்தங்களை கொண்ட பெயர்கள், இலை, பசுமை, தோட்டம், போன்ற அர்த்தம் கொண்ட பெயர்கள், விஷ்னு, பெருமாள், ராம போன்ற கர்த்தாக்களின் வேறு பெயர்கள், இளமையை குறிக்கும் பெயர்கள், அனைத்தும் புதனுடையது,

வித்யா, ராம, பால, இளைய, குமர, கன்னி, மங்கை, இள, குமரி, வெங்கட், விவேக், திருமால், மீனாட்சி, வேணி, சரஸ்வதி, கீதா, சங்கீதா, கோபி, வேணி, கொடி, கோடி, மாலதி, யுவ, அரவிந்த், இளங்கோ, பதி, மரகதம், நளினி, முரளி, துளசி, நந்த, நவனீத், தம்பி, நாராயணன், விஜய, பெருமாள், ஹரி, முரளி, கோகிலா, விஷ்னு, வாசன், விஷ்வா, சார்லஸ், ரேஸ்மா, பர்ஜானா, ஆயிஷா, அல்தாப், அர்சத், அஷ்கர், ஏஞ்சல், விமலா, அனிதா, மில்டன், பிருந்தா, வில்வா, துளசி, லதா, வல்லி, கவி,

சுக்கிரன்

ஆடம்பரம், அழகு, பகட்டு, இன்பம், சுகம், செல்வம், செழிப்பு, மழை, வளமை போன்ற பெயர்கள், அரசிகளின் பெயர், அம்மனின் பெயர் விலைமதிப்பு மிக்கவைகளின் பெயர் போன்றவைகள் சுக்கிரனுடைய பெயர்களாகும்

ஸ்ரீ, கோபால், லதா, கலை, காவியா, லட்சுமி, ராதா, மலர், தங்கம், மாரி, மதன், அழகன், செல்வி, இனியா, ரங்கன், பன்னீர், பட்டு, விஜயா, பாபு, பிரபு, கல்யாணி, திரு, கோபி, வெள்ளை, சௌந்தர்யா, ஐஸ்வர்யா, பத்மா, தாமரை, பரிமளம், ரஞ்சிதம்,

CamScanner

சித்ரா, கமலா, சுகந்தி, புஷ்பா, ராகவன், கவிதா, கீர்த்தி, பிரபு, கண்ணன், வர்சினி, மேரி, ரோசி, சுகன்யா, நிஷா, ஜமிலா, வருண், துரை, வசந்த், மதன், ரஞ்சிதா, காவியா, மகிழ், ரம்யா, போன்ற பெயர்கள் சுக்கிரனைக் குறிக்கும்,

செவ்வாய்

அதிகாரம், வீரம், தளபதி தன்மை, மருத்துவம், வெற்றி, தீ, போன்ற பெயர்கள், ஆயுதங்கள், காவல், பாதுகாப்பு போன்றவற்றைக் குறிக்கும் பெயர்கள், முருகனின் பெயர்கள் செவ்வாயால் குறிக்கப்படுகிறது

நாதன், சேகர், மாறன், ஜெய, வெற்றி, செந்தில், குமரன், முருகன், சண்முகம், கந்தன், வீர, தீபன், மணி, சுந்தரம், வெங்கட, கண், விக்டர், ஜோதி, பாணி, வேல், குகன், திலகம், மங்களம், ஆஞனேய, வைத்ய, சரவணன், பிரனவ், பரத், விக்ரம், ஜித், பார், ஜோசப், கிரி, சதாம், சஹீனா, ரஜீக், அப்லஹ், அர்ஜுன், தியா,

குரு

உபதேசம் செய்யும் தன்மையுள்ள பெயர்கள், கௌரவமான பெயர்கள், தங்கம், மற்றும் ஞான நிலை, பாக்கியம், உலகம் பற்றிய பெயர்கள், வரலாற்றில் மக்களுக்கு உதவிய பெயர்கள், கடவுள் பணி செய்தவர்கள் பெயர்கள் குருவினால் குறிக்கப்படும்,

ராஜ், ஹேமா, தன, குமார், அகில, பூமி. பார், உலக சுவாமி, ஸ்வர்ண, பிரனவ், மஹா, துரை, விகாஸ், சயத், யாசர், முக்மது, அஹமது, பாக்கியம், பொன், நிதி, ஆசை, கனக, தனம், சந்தான, கோ, ரத்தினம், மூர்த்தி, செல்வி, உலக, அகில, பூமி, பிரபு, ராஜன், குமார், சேகர்,

சனி

கருணை, ஆட்சி என முடியும் பெயர்கள், தூய்மை, பொதுப் பணி சார்ந்த பெயர்கள், ஆயுளை, வாழ்வை குறிக்கும் பெயர்கள், கருமை, வன்மம், அகாயம், இறுதியான நிலை, முதுமை மற்றும் அனுபவத்தைக் குறிக்கும் பெயர்கள் கரகரப்பான பெயர்கள் சனியால் குறிக்கப்படும்,

தர்ம, சாந்தி, அஞ்சலி, அமர், கஷ்தூரி, ஈஸ்வரி, நிர்மலா, சாமி, சஞ்சய், இந்திரன், பாலாஜி, ஜீவா, தாசன், கரு, சுப்பு, மீனாட்சி, வனஜா, தாஸ், வான, காம, சாரதா, முகில், மஞ்சுளா, நிஷா, காமாட்சி, விசாலாட்சி, தயா, தியாக, அஸ்வத், ரூபினா, மக்தூம், அப்தூல், பிரேமா, பிர, ஜான், என்ற பெயர்கள், "ரா" சத்தம் முக்கியமாக தெரியும் பெயர்கள்

ராகு

பாம்பு, கரடு, மலை, பிரமாண்டமான இடங்கள், வினோதமான எண்ணங்களை குறிக்கும் பெயர்களை ராகுவுக்கு பொருத்தலாம், காளி, துர்கா, நாக, மலை, அய்யனார், இசக்கி, வினோத், மாயா, பவானி, மானசா, மாலினி, வாசுகி, நவீன், அபி

கேது

கேது என்பது ஆயுதங்கள், விரக்தி, தர்மம் மற்றும் ஞானம் தொடர்பான பெயர்களை குறிக்கும்

கணபதி, கணேஷ், வினாயகம், வேல், தவ, பாணி, கேச, மாணிக்கம், வைத்திய, ஞான, கலா,

கிரக இணைவு பெயர்கள் மற்றும் குறிப்புகள்

இந்த பகுதியில் ஒவ்வொரு கிரகமும் மற்ற கிரகத்துடன் இணைவு பெற்றால் அதற்கான பெயர்களை கொடுத்துள்ளேன். இணைவு என்றால் ஒரு கிரகமும் அந்த கிரகம் உள்ள ராசியில் இருந்து 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் உள்ள கிரகமும் இணைவு பெற்றுள்ளது என்று பொருள்

சூரியனுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

சூரியன் + சந்திரன்

ராம் பிரசாத், ரவிசந்திரன், காந்திமதி, பானுமதி, கார்த்திகா, பழனிசாமி, சுதாகரன், பாரதிராஜா, தமிழரசி, சசிரேகா, முத்தரசன், முத்துசாமி, அருணாசலம், மனோகரன், அரவிந்த், சன்மதி, பானுசந்திரன், உஷாராணி, சிவகாமி, சிவசக்தி, பழனிசாமி, முத்துராஜ், பரணிதரன், உதயசந்திரன், கிருஷ்ணமூர்த்தி, அழகப்பா, அறிவழகன், அன்பரசன், உமாசங்கர், காந்திராஜன், சதாசிவம், சுதாகர், இருதயராணி,

சூரியன் + புதன்

ராம்மூர்த்தி, ராம்சங்கர், ராமலிங்கம், ராகவன், யுவராஜா, மங்கையர்கரசி, இளையராஜா, சிவபாலன், தாமோதரன், நடராஜ், ராமகிருஷ்ணன், ரகுபதி,

சூரியன் + சுக்கிரன்

கலையரசி, கலைய்ரசன், கோடீஸ்வரன், பாக்கியலட்சுமி, ராஜலட்சுமி, புஷ்பராஜ், சுந்தரமாணிக்கம், எழிலரசன், அன்பழகன்,

சூரியன் + செவ்வாய்

சரவணன், கார்த்தி, சிவக்குமார், சிவபிரகாஷ், சிவ சுப்பு, சுப்புராஜ், சிவகாமி, வேல்ராஜ், கந்தையா, அருள்வேல், ஜெயராஜ், கந்தசாமி,

சூரியன் + குரு

செல்வராஜ், சிவக்குமார், மாணிக்கசுந்தரம், தங்கராஜ், அருண்குமார், ஆனந்தகுமார், உதயக்குமார், கதிர்செல்வன், கனகராஜ், குருமூர்த்தி, தென்னப்பன்,

சூரியன் + சனி

சுதர்சன், பிரவீன், கருப்பையா, சந்தோஷ், ரம்யா, சுகன்யா பிரியா, ஆனந்த், அனு, பிரியதர்சினி, மூர்த்தி, ராஜேந்திரன், ஹரினி, கருணாகரன், ராஜேஷ்வரி, பிரகதீஷ்வர், சங்கரசுப்பு, சதீஷ், ரவீந்திரன், கருப்பையா, முனிசாமி, ஈஷ்வரமூர்த்தி, சடையப்பா, பரமசிவம், சதீஷ், சிவமணி, சந்தோஷ், ரம்யா, மகிழ்,

சூரியன் + ராகு, கேது

நாகராஜ், காளிராஜ், மலையரசன், மலையாண்டி, கணேஷ்ராஜ், நாகப்பன், மாணிக்கம், வேல் ராஜ், சிவகணேஷ், ராஜகணபதி, துர்க்கைராஜ், கேசவராஜ், சடையப்பா,

சந்திரனுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

சந்திரன் + புதன்

முரளி, விஜய், அபிராமி, வெங்கடாசலம், செல்லம்மா, சின்னத்தாய், மரகதம்மாள், வித்யா, ராமச்சந்திரன், அறிவழகன்,

CamScanner

உமாபதி, சின்னமுத்து, துளசிராமன், வினோத், நவீன், ஷோம், இளமதி

சந்திரன் + சுக்கிரன்

தமிழ்செல்வி, கலைசெல்வி, மாரியம்மாள், சுமதி, எழிலழகன்,

சந்திரன் + செவ்வாய்

தமிழ்மாறன், சந்திரசேகரன், சண்முகம், ஜெயசந்திரன், பாலமுருகன், ஆறுமுகம், சரவணமுத்து,

சந்திரன் + குரு

கோமதி, கோவிந்தன், அகிலாதேவி, தேன்மொழி, உலகநாதன், கோபால், சசிக்குமார்,

சந்திரன் + சனி

சதீஷ், சரவணன், தினேஷ், முத்துமணி, இந்திராணி, அழகேசன்,

சந்திரன் + ராகு, கேது

வேலம்மாள், நாகராணி, நாகம்மாள், அபி, வாசுகி, மாலினி, சசிகலா, சக்திவேல், ஞானமுத்து, பூரணகலா,

புதனுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

புதன் + சுக்கிரன்

சுகுணா, சுகந்தி, சுகுமார், மகிழ், வசந்தி, ரம்யா, திருப்பதி, ஸ்ரீ வித்யா, திருமகள், மோகனசுந்தரம், அம்சவேணி

CamScanner

புதன் + செவ்வாய்

பாலமுருகன், வெங்கட், பாலசுப்பிரமணி, எழில்குமரன், வடிவேல், ஜெயபால்,

புதன் + குரு

ராம்குமார், ரங்கராஜ், செந்தில்குமார், இளங்கோ, மரகதசெல்வி, ஹேமலதா, ராஜகோபால், சரண்யா, பிரியா, ரமேஷ்குமார்,

புதன் + சனி

ரமேஷ், நிஷா, அழகர்சாமி, ஸ்ரீனிவாசன், துளசிமணி, துளசிதாஸ், கீதாஞ்சலி

புதன் + ராகு, கேது

ராமலிங்கம், கணபதி, குழந்தைவேல், தண்டபாணி,

சுக்கிரனுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

சுக்கிரன் + செவ்வாய்

ஜெயஸ்ரீ, வசந்த், சக்கரபாணி, மலர்கள் பெயர்கள், பத்மா, தாமரை, மல்லிகா, செண்பகம், ஜோதிலட்சுமி, வெள்ளிங்கிரி, தங்கமணி, துரைமுருகன், கனகா மாலதி, ரஞ்சிதம், பூங்கொடி, சைனப் மற்றும் மலர்களுடைய பெயர்கள்

சுக்கிரன் + குரு

விஜய், தங்கசெல்வி, ஸ்வர்ணலதா, ஹேமலதா, செல்வரத்தினம், தங்கத்துரை, திருசெல்வன்,

CamScanner

சுக்கிரன் + சனி

சுரேஷ், சுப்புலட்சுமி, சரோஜா, அண்ணாத்துரை, கமலினி, தயாநிதி,

சுக்கிரன் + ராகு, கேது

கஜலட்சுமி, திருமலை, கலாநிதி, செல்வகணபதி,

செவ்வாயுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

செவ்வாய் + குரு

ஜெய்கணேஷ், பார்த்திபன், குணசேகரன், உலகனாதன், ராஜசேகர், கோதண்டம், சரத்குமார்,

செவ்வாய் + சனி

முருகேசன், மணி, சுப்பிரமணி, மணிகண்டன், மணிமேகலை, பாண்டியன், வேலு, பானி, ஐயப்பன், கதிரேசன், ஜகதீஷ், குமரேஷ், இந்திரஜித், இசபெல்லா, பெல்ரிங்ஸ்

செவ்வாய் + ராகு, கேது

சாய், வேலுமணி, வேலு, ஞானசேகர், ஏழுமலை, வடிவேலு, குமரவேல், ஞானமணி, தண்டபானி,

குருவுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

குரு + சனி

ராஜேஷ், மீனாட்சி சுந்தரம், முனிராஜ், துரைசாமி, காசினாத், சபரிநாதன்,

CamScanner

குரு + ராகு, கேது

ஹேமாமாலினி, வினாயகம், கணேஷ்,

சனியுடன் இணையும் கிரகங்களுக்கான பெயர்கள்

சனி + ராகு, கேது

அஞ்சலி, சாந்தி, நாகேஷ்வரன், நீலகண்டன், விக்னேஷ்வரன், கோவிந்தன், நாகேந்திரன், அண்ணாமலை, அபினேஷ், காளி தாஷ், தர்மேந்திரன், தவமணி, தர்மலிங்கம், மேகலா

மேலே குறிப்பிட்டுள்ள பெயர்கள் அனைத்தும் உதாரணத்திற்கே, ஒவ்வொரு கிரக இணைவிற்கும் பெயர் கூற வேண்டும் என்றால் தனியாக புத்தகமே போட வேண்டும், இதில் வரும் பெயர்களை எப்படி பொருத்தியுள்ளேன் என்று யோசியுங்கள், பிறகு நீங்களே, பெயர்களை பதம் பிரித்து எந்த கிரகங்களின் இணைவு என எடுத்துக் கொள்ள முடியும்,

இதில் முக்கியமானது, சில பெயர்களே சில கிரக இணைவுகளை கூறிவிடும், அந்த இணைவுக்கு என்ன பலன் என தெரிந்து வைத்திருக்க வேண்டும், உதாரணமாக தமிழ்செல்வி இதில் உள்ள தமிழ் என்பது சந்திரன், செல்வி என்பது சுக்கிரன், எனவே சந்திரன் சுக்கிரன் இணைந்தால் என்ன பலன் என தெரிய வேண்டும், சந்திரன் மற்றும் சுக்கிரன் இணைவு ஆசிரியர் அல்லது டெக்ஸ்டைல்ஸ் தொழிலை குறிக்கும் உடனே உங்கள் குடும்பத்தில் ஆசிரியர் யார் என கேளுங்கள் நிச்சயமாக இருப்பார்கள்,

தமிழ்செல்வி என்றால் சந்திரன் குரு இணைவு கூட வரலாம், அப்படி என்றால் நீங்கள் அல்லது உங்கள் மகன், மகளை இதில் யாரோ உங்கள் அம்மாவோ அல்லது மாமியாருடைய அரவனைப்பிலோ வளர்ந்தவர்களாக இருக்கக்

கூடும், வாழ்க்கையில் பல தரப்பட்ட அவமானங்களை கடந்து வர வேண்டும் என பலன் கூறுங்கள் ஆம் என்பார்கள்,

எனவே பெயரை பிரித்து புரிந்து கொள்வது, அதன் பின்னர் அதன் அர்த்தம் கண்டுபிடித்து அதற்கான கிரகங்களை புரிந்து கொண்டு, அதை வைத்து கிரக இணைவுக்கான பலன்களை கூறவேண்டும்,

ஊரின் பெயர்களும் கிரகங்களும்

ஒருவரது ஜாதகத்தில் அதிகாரம் பெற்ற கிரகங்களின் வழியே அவர் அதிகமாக வசிக்கும், முக்கியமாக போய்வரும், தொழில் மற்றும் பணி செய்யும் ஊர்களின் பெயர்களை கூறமுடியும், இதில் பின் மற்றும் முன் ஒட்டு பெயர்களை ஓரளவுக்கு அனுமானித்துக் கூறலாம் உதாரணமாக புதனை ஊர் என்று கூறலாம் சுக்கிரன் திரு எனவே ஒரு ஜாதகத்தில் சுக்கிரன், புதன் அதிகாரம் அடையும் போது திருப்பூர் பகுதிக்கு முக்கிய காரியமாக சென்றே ஆக வேண்டும், மேலும் புதன் டெக்ஸ்டைல்ஸ், திரு ஆடைகள், எனவே அந்த பகுதியில் உள்ளவர்கள் அனைவருக்கும் இந்த அமைப்பு இருக்கும் திருப்பூர் பகுதியில் காதல் திருமணம் அதிகமாக நடக்கலாம் அதற்கு காரணம் சுக்கிரன்,புதன்

இனி ஒவ்வொரு கிரகமும் குறிக்கும் ஒட்டு பெயர்களை காணலாம்

சூரியன் : புரம், நகர், பட்டினம், குடி, புரி, வரம், மலை

சந்திரன் : குளம், பட்டி, பாக்கம், வாக்கம், ஏரி, தோப்பு, தாங்கல், சமுத்திரம், ஊர், துறை,

புதன் : பஜார், புரம், ஊர், சாலை, பள்ளி

CamScanner

சுக்கிரன் : ஸ்ரீ, திரு, புளி, பட்டு, வல்லி, மல்லி

செவ்வாய் : பாளையம், கோட்டை, பேட்டை, மேடு, கிரி, குன்று, மங்கலம், மலை,

குரு : சத்திரம், சாவடி, கோயில், பள்ளி,

சனி : சேரி, குப்பம், காலனி, வனம், காடு,

இந்த பெயர்களை ஒட்டியும் பயன்படுத்தலாம், உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சூரியன் சுக்கிரன் இணைந்து இருக்கிறது, சூரியன் புரம், சுக்கிரன் லட்சுமி எனவே லட்சுமிபுரம் என்ற பகுதியில் இவருக்கு தொடர்பு உண்டாக்கும், இது போல சொல்லி சொல்லி பழக சிறிது காலத்தில் இயல்பாகவே சரியாக கூற முடியும்,

கவனிக்க வேண்டியவை

குழந்தைகளுக்கு அழகான பெயர்களை வைப்பது பெற்றோர்களின் மற்றும் சமூகத்தின் கடமை, ஒரு பெயரை சொல்லி அழைக்கும் போது நன்மை, செழிப்பு, ஆன்ந்தம், நன்மதிப்பு போன்ற உணர்வுகளை உண்டாக வேண்டும்,

நல்ல பொருளைக் கொண்ட அர்த்தமுள்ள பெயர் மட்டுமே வைக்க வேண்டும் அது நட்சத்திர எழுத்துடன் பொருந்தாவிட்டாலும் பரவாயில்லை, நட்சத்திர எழுத்துப் படி வைத்த பெயர் அர்த்தமில்லாமல் இருந்தால் நிச்சயமாக சிக்கல் செய்யும்,

ஆயுதங்கள் பெயர் மற்றும் அமானுஸ்ய உணர்வை உண்டாக்கும் பெயர், மேலும் ஒன்றை மிகைப்படுத்த இணைக்கும் பெயர்களை தவிர்க்க வேண்டும், உதாரணமாக வேல், பாணி,

CamScanner

தண்டாயுதம், சக்கரபாணி போன்ற ஆயுதங்கள் பெயர், வினோத் போன்ற வினோத உணர்வுக்கான பெயர்கள், அபி போன்ற ஒன்றுடன் இணைந்து பிரமிக்கதக்க உணர்வை உண்டாக்கும் பெயர்களை தவிர்க்க வேண்டும், இந்த பெயர்கள் பெரும்பாலும் விடை தெரியாத நோய்கள், தீராத பிரச்சனைகளை குடும்பத்தில் தருகிறது,

கெட்ட நடத்தை மற்றும் சமூகத்தினால் பழிக்கப்பட்ட பெயர்கள் அரசினால் துன்பபட்ட பெயர்கள், சிறை வாசம் சென்ற தலைவர்கள், திருமணம் போன்ற விசயங்களில் ஈடுபடாத தலைவர்கள் பெயர்களை தவிர்க்கலாம், மேலும் சமூக கொள்கைகளுடன் மாறுபட்ட பெயர்களை சூட்டுவதை தவிர்க்க வேண்டும்,

பெயரை சுருக்கி அழைப்பதால் அர்த்தம் எதிராக போகலாம், உதாரணமாக அனாதரட்சகா என்ற பெயரை அழைப்பதற்காக சுருக்கி அனாதை என்று அழைத்தால் எல்லாம் மாறி விடும்,

குடும்பத்தில் நன்றாக வாழ்ந்த முன்னோர்கள் பெயரை வைக்கலாம், தாய், தந்தை, இன்சியலாக வைக்கலாம், கடவுள், குலதெய்வம் பெயரை வைக்கும் போது நேரடியாக வைப்பதில்லை, உடன் தாசன், குமார், என்று இணைக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகிறது, அதற்கு காரணம் அந்த பெயரின் வேதனையான எதுவும் நமக்கு வந்து விடக்கூடாது எனவே அந்த கடவுளின் அடிமை போன்ற உணர்வு வருவதால் நமக்கு ஆசிர்வதிக்கப் பட்ட அர்த்தம் வரும் என்பதால் இருக்கலாம்,

இவ்வாறு ஒரு பெயரை வைத்து கிரகங்கள், கிரக நிலைகள், முக்கிய கிரகங்கள், அதற்கான பலன்களை மிகத் துல்லியமாக வழங்கலாம்,

CamScanner

ராசியின் விளிம்பில் இருக்கும் கிரகபலன்

ஒரு ஜாதகத்தில் எந்த ஒரு கிரகமாக இருந்தாலும் அது உள்ள ராசியில் முன் அல்லது பின் விளிம்பில் இருந்தால் அந்த கிரகத்தின் காரகத்தின் வழியாக அதி முக்கியமான விளைவுகளை ஜாதகர் தனது வாழ்க்கையில் சந்திப்பார் என்பதை குறிக்கும்,

ஒவ்வொரு ராசிக்கும் 30 பாகை, அதில் உள்ள கிரகம் எந்த இடத்தில் உள்ளது என பாகையை குறித்து இருப்பார்கள், அதிலும் இரண்டு முறைகள் உண்டு, உதாரணமாக மிதுன ராசியில் 18 பாகையில் சனி கிரகம் இருக்கிறது, அதை குறிக்கும் போது மிதுன ராசியில் 18 பாகை என்றும் குறிப்பார்கள், சிலர் அதை 78 பாகையில் சனி எனவும் குறிப்பார்கள், இரண்டும் சரிதான் இருந்தாலும் முறைப்படி குறிப்பது என்றால் 78 பாகை என்பதுதான் சரி,

ஜோதிடத்தில் மிக முக்கியமான அளவுமானி ராசி சக்கரம்தான், இது 360 பாகை அளவுள்ள ஒரு முழுமையான சுற்று, இது 12 பிரிவுகளாக இருக்கிறது எனவே ஒவ்வொரு ராசிக்கும் தலா 30 பாகை இருக்கிறது, இந்த ராசி சக்கரத்தின் துவக்கம் என்பது மேச ராசியின் ஆரம்ப புள்ளிதான், அதனால்தான் மேஷாதி ராசிகள் என்பர், அப்படி என்றால் மேஷத்தை ஆதியாக கொண்ட ராசிகள் எனப்பெயர், இதில் 12 ராசிகள் தனித்தனியாக இருப்பினும் எல்லா ராசிகளும் மேஷத்தின் துவக்கத்தில் இருந்துதான் குறிக்கப்படும்,

0-30 மேஷம், 30-60 ரிஷபம் 60-90 மிதுனம் என ஒவ்வொரு ராசிக்கும் இருக்கும், இவ்வாறாக 12 ராசிகளுக்கும் இருக்கும், இறுதியாக 330-360 மீனம் என முடியும், சரியாக குறிக்க வேண்டும் என்றால் மேசத்தில் இருந்துதான் குறிக்க வேண்டும், ஆனால் பயன்படுத்த எளிதாக, குழப்பமில்லாமல் இருப்பதற்காக தற்போது ஒவ்வொரு ராசியில் 30 பாகையில் அந்த கிரகம் எந்த பாகையில் உள்ளது என ஒவ்வொரு ராசியின் ஆரம்பத்தில் இருந்து கூறுகின்றனர், எல்லாம் ஒன்றுதான்,

CamScanner

எப்படி கணித்தாலும் ஒரு ராசி துவங்கும் அல்லது முடியும் அதாவது முதல் அல்லது கடைசியாக உள்ள 1.5 பாகையில் ஏதாவது கிரகம் இருந்தால் அது அதி முக்கியமானது.

மேஷத்தில் 0 - 1.5 அல்லது 28.5 - 30 இந்த பாகை இடைவெளியில் கிரகம் இருந்தால் அது அதிகாரம் அடைந்துள்ளது. இதே போல எந்த ராசியாக இருந்தாலும் முதல் மற்றும் இறுதி 1.5 பாகையில் கிரகம் உள்ளதா என பாருங்கள், அவ்வாறு இருந்தால் முதலில் அந்த கிரகத்தின் காரகங்களை குறிப்பிட்டு ஜாதகர் அதனுடன் பிரச்சனையோ அல்லது அதை அடைவதற்கு படாதபாடு படுகிறார் எனக் கூறலாம்,

அதே போல ஒரு ஜாதகம் பார்க்க வந்தால் எப்போதும் அவர்கள் கொடுக்கும் ராசிக் கட்டத்தைப் பார்த்து பலன் கூற வேண்டாம், அது தவறுதலாக இருக்கலாம், எனவே அவர் பிறந்த தேதி, நேரம் ஊர் வாங்கி நீங்களே ஜாதகத்தை கணித்துக் கொள்ளவும், அப்படி பார்க்கும் போது ஜாதகர் பிறந்த தேதியில் இருந்து ஒரு நாள் முன் தேதி அல்லது ஒரு நாள் பின் தேதியில் போட்டு பாருங்கள், அதில் ஏதாவது ஒரு கிரகம் ஒரு நாள் முன் அல்லது பின் தேதிகளில் கிரக நிலை மாற்றம் ஒன்று ராசிகள் மாறி இருக்கலாம், அல்லது முன் நாள் வக்கிரம் முடிந்து இருக்கும் ஆனால் ஜாதகரின் பிறந்த ஜாதகத்தில் அது தெரியாது, அனால் அவரது வாழ்க்கையில் அந்த கிரகம் வக்கிரமாக இருந்த பலன் நடந்து கொண்டிருக்கும்,

இதற்கு காரணம் நாம் பார்க்கும் கணித முறையும் கூட மிக துல்லியமானது கிடையாது, இப்போது இது போல கணித முறைதான் நடைமுறையில இருக்கிறது, எனவே ஒரு கிரகம் ஒரு ஜாதகர் பிறந்த சில மணி நேரங்கள் முன் வேறு நிலையில் இருக்கலாம், அல்லது பிறந்து சில மணி நேரம் கழித்து மாறலாம், சில கிரகங்கள் பரிவர்த்தனை அடைந்து இருக்கும், வக்கிரம் ஆகி இருக்கும், ஆனால் ஜாதகத்தில் அந்த கிரகம் எதையும் உணர்த்தாமல் இருக்கும், எனவே இதையெல்லாம் சீர்தூக்கிப்

CamScanner

பார்த்து பலன் கூற வேண்டும், பொதுவாக இந்த நிலையை ஒரு கிரகம் இருந்தால் அந்த கிரகம் அதிகாரம் பெற்றதாக அர்த்தம் அதற்கான பலன்களை கூறலாம், அதே போல ஒரு கிரகம் ஒரு நாள் முன் அல்லது பின் வக்கிரம் துவங்கினால் அல்லது முடிந்தால் அதற்கு அந்த கிரகத்தின் வக்கிர பலனை கூற வேண்டும், இருந்தாலும் அது போன்ற கிரக நிலைக்கு எடுத்த உடனே சட்டென கூறும்படியான பலன்களை தனியாக இந்த பகுதியில் தருகிறேன், இதையும் கூறிவிட்டு, வக்கிரமான பலன்களையும் அதிகார பலன்களையும் தேவை இருந்தால் கூறலாம்,

விளிம்பில் உள்ள கிரகங்களின் பலன்கள்

சூரியன்

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம், சதா குழந்தைகள் பற்றிய கவலை, வேலையில் இருந்து தொழிலுக்கு மாறும் போது குழப்பம், அதன் காரணமாக எந்த ஒரு வேலையையும் தொடர்ந்து செய்ய முடியாத குழப்பம் இருக்கும், தலை தொடர்பான பிரச்சனைகள் வந்து போகும், அடிக்கடி தலை வலியால் அவதிப்படுவார், பல் பிரச்சனை, தந்தையின் அனுகூலம் குறைவு, தனது தந்தையிடம் நேரடியாக பழகுவதில் சிக்கல் இருக்கும் பல சமயங்களில் எதோ காரணத்தால் தந்தையுடன் தூரம் அதிகமாகும் இருப்பினும் இவரது வாழ்க்கையில் மிக முக்கிய அடையாளமாக தந்தை இருப்பார், மகன் தனது ஆசைப்படி செயல்படவில்லை என்று மிகுந்த கோபத்தினால் வெறுப்படைதல் உண்டாகும், அரசு அல்லது சொந்த தொழில், தனது வேலைகளை எடுத்தவுடன் அரசாங்கத்தை நாடி சரி செய்வதும் இருக்கும், தனது மற்றும் நண்பர்கள் விசயமாக காவல் நிலையம் மற்றும் அரசு அலுவலகம் செல்வார், எப்போதும் டென்ஷன் நிறைந்து காணப்படுவார், உயர் அதிகாரிகளுடன் கருத்து மோதல், அரசியல்

CamScanner

ஆர்வம் உள்ளவர், எல்லா இடங்களிலும் தான் பெரிய ஆள் என்பதை நிரூபிக்க நினைப்பார்,

சந்திரன்

வீடு தொடர்பான கேள்விகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும், சதா மனக் குழப்பம், பணி இடம் துவங்கி குடும்பம் வரை எல்லா விசயத்திலும் மன அழுத்தம், வயிறு, சுவாசம், சளி, கண், சிறுநீரகம் மற்றும் இதயம் சார்ந்த உடல் நலம் பிரச்சனை, குடும்பத்தில் நிம்மதி இல்லாமை, சதா புலம்பலான வாழ்க்கை அமைப்பு கொண்டவர், ஐடி, போக்குவரத்து, வேளாண்மை, உணவு சார் பணிகள், வெளிநாடு பணிகள் மற்றும் மருத்துவம் ஆகியவற்றில் இவர் மற்றும் இவரது குடும்பத்தினர் ஈடுபடுவார்கள், தொலை தூரம் செல்லும் ஆசை, நீரிழிவு தோல் சார்ந்த கோளாறுகள், பெண்களுக்கு குடும்ப நிம்மதியற்ற நிலை, யாருடைய விசயத்திலாவது தலையிடுவது பிறகு அதன் காரணமாகவே சண்டையை உண்டாக்கிக் கொள்வது, மேலும் தனது நிலை இவ்வளவு சிக்காலாக இருக்கிறது என்று பெரிதுபடுத்தி சொல்வதை மிக முக்கிய வேலையாக செய்து மற்றவர்கள் பாரமாக நினைக்கும் அளவுக்கு நடந்து கொள்வது இருக்கும், தாயின் உடல் நலம் மற்றும் தாயின் வாழ்க்கை மிகுந்த சிரமமானது, ஜாதகரின் குடும்ப வாழ்க்கையில் தாய் மற்றும் மாமியாரின் தலையீட்டால் நிம்மதி இழப்பு உண்டாகும்,

புதன்

மகள் மற்றும் சகோதரியின் வாழ்க்கை காதல் மற்றும் குடும்பச் சிக்கல் நிறைந்ததாக இருக்கும், ஜாதகரின் சகோதரிகளில் ஒருவரது குடும்ப வாழ்க்கையும் சிக்கலானது, ஜாதகரின் காதல், கல்வி ஆகியவற்றில் ஆரம்ப காலத்தில் பிரச்சனையை ஏற்படுத்தும் இருப்பினும் பிற்காலத்தில் கல்வி சீராகும், வாழ்க்கை முழுவதும் எதாவது கற்றுக் கொண்டே

CamScanner

இருப்பார், அது கல்வியாக கூட இருக்கும், நரம்பு, தோல் பிரச்சனை தோல் அழற்சி மரபு ரீதியான நோய்களுக்கான வாய்ப்புகள் இருக்கும், தொடர்பு உறுப்பு போன்றவைகள் தொடர்பான சிக்கல்கள் இருக்கலாம், அவைகள் நீண்ட கால நோய்களாக இருக்கும், அச்சப்படும் படியாக இல்லாமல் ஆனால் பிறரிடம் இருந்து மறைக்கும் படியான உபாதைகளாக இருக்கலாம், ஜாதகரின் பெயரில் சொத்துகள் இல்லாமலிருப்பது நல்லது, ஏனெனில் ஜாதகரின் பெயரில் உள்ள சொத்தின் மதிப்பின் அளவிற்கு ஏதாவது கடன் அல்லது அவசர சிக்கல் ஏற்பட்டு அந்த சொத்தை விற்று சரிகட்ட வேண்டிய அவசியம் உண்டாகும், தேவைவையற்ற நிலம் தொடர்பான பிரச்சனைகளை கடந்து வருவார், இவர் ஒரு இடத்தை விற்று அதில் வரும் பணத்தை வைத்து மற்றொரு நிலத்தை வாங்க திட்டமிடுவார், அல்லது சொத்தை விற்று தொழில் திட்டமிடுவார், அதற்காக விலை பேசி முன் பணம் பெற்ற பிறகு அது முடிவடையாமல் திட்டமிட்ட காரியங்கள் நிறைவடையாமல் பெரிய குழப்பத்தை உண்டாக்கிக் கொள்வார், இது போல ஒன்றை நம்பி மற்றொன்றை கற்பனையாகவே திட்டமிட்டு குழப்பங்களை சந்திப்பார், சகோதரிகள் வழியாகவும் சொத்து சிக்கல் உண்டாகும், இவர் சொத்துகள் வாங்கும் போது ஆவனங்களில் கவனமாக இருக்க வேண்டும், ஜாதகரின் பெயரில் சொத்துகள் இல்லாமலிருப்பது நல்லது, ஏனெனில் ஜாதகரின் பெயரில் உள்ள சொத்தின் மதிப்பின் அளவிற்கு ஏதாவது கடன் அல்லது அவசர சிக்கல் ஏற்பட்டு அந்த சொத்தை விற்று சரிகட்ட வேண்டிய அவசியம் உண்டாகும், தொடர்ச்சியாக வம்சத்தில் பெண்கள் குடும்பத்தை நடத்தும் நிலை இருக்கும், சகோதரி அல்லது மகள் குழந்தை பிறப்பு தொடர்பான பிரச்சனைகளை கடந்து வருவார், ஜாதகரின் குடும்பத்தில் கன்னிப் பெண்ணை வழிபடும் பழக்கம் இருக்கலாம், இவரது வம்சம் முழுவதும் பெண்களுக்கு எதாவது ஒரு பிரச்சனை மாறி மாறி உண்டாகும், நகைச்சுவை உணர்வுடன் பேசக்கூடியவர், வியாபார சிந்தனை மிகுந்தவர், எலெக்ட்ரானிக்,

CamScanner

கட்டுமானம் பிரிண்ட், வரைகலை, வங்கி, எழுத்து பணிகளில் இவர் அல்லது உறவினர் பணியாற்றுவர், பிறரிடம் பேசும்போது கூட கணக்கு போட்டுதான் பேசுவார், ஆனாலும் நடுநிலை சிந்தனை கொண்டவர், இரட்டை தன்மையுடன் பேசுவார் எந்த சூழலிலும் ஒன்றிப்போவார், சாதூர்யமானவர், துடுக்கு, சிறுபிள்ளை, நக்கல், நையாண்டி, செய்யும் குணம் கொண்டவர் அதே சமயம் நளினம், நிபுணத்துவமும் உண்டு, தன்னை இளமையாக வைத்திருப்பார், நறியுணர்வு கொண்டவர், மாமாவுடன் அவ்வப்போது பிரச்சனை வந்து போகும் இருப்பினும் ஆபத்து காலத்தில் மாமாவின் உதவிகள் உண்டு, கோள்மூட்டுதல் குணம் உண்டு,

சுக்கிரன்

திருமண வாழ்க்கை தடை, தாமதம், அல்லது குழப்பங்கள் இருக்கும், ஆண்கள் தாமதமாக திருமணம் நடந்தால் அதாவது 29 வயதிற்க்கு மேல் நடந்தால் ஓரளவுக்கு சமாளிக்கலாம், இவருக்கு பெரும்பாலும் அந்த வயதிற்கு மேல்தான் திருமணம் இருக்கும், அல்லது தெரிந்தவரை திருமணம் செய்தால் பிரச்சனை குறையும், பெண்ணாக இருந்தால் அவருக்கு வரும் கணவருக்கு திருமணத்தின் போது 29 வயதுக்கு அதிகமாக இருக்கும், பண விசயத்தில் கவனமாக இருக்க வேண்டும், யாரிடமாவது பணத்தை வாங்கி யாரிடமாவது கொடுத்து விட்டு அதற்கு ஜாதகர் பணம் செலுத்தும் நிலைக்கு ஆளாகலாம், ஆடம்பரமாக வாழ செலவுகள் செய்வார், அதனால் பொருளாதார முடையை சந்திப்பார், உறவுகளில் திருமணம், இவர் அதீத காம சிந்தனையால் ஏற்படும் மனழுத்தம், அல்லது பாலுறுப்பில் தொற்றுகளை சந்திப்பார், கெண்டை காலில் அரிப்பு ஏற்பட்டு மறையும், தீர்காயுள் கொண்ட முதியோர் இருப்பர், சிற்றின்ப வேட்க்கையும் அதில் தேவையற்ற சிந்தனைகளும் இருக்கும், நிதி, ஆபரணம், ஆடை, அழகுகலை, ஆசிரியர் பணிகளின் வழியாக ஜீவணம் செய்வார், சிறுநீரக தொற்று, சர்க்கரை நோய்,

சுரப்பிகள் பிரச்சனை, கண் சார்ந்த பிரச்சனையை குடுபத்தில் ஒருவர் சந்திப்பார்,

செவ்வாய்

கடன் மற்றும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை, உடல்நலம் சார்ந்த நீடித்த செலவுகள் வரும், ஜாதகர் பெண் எனில் திருமண வாழ்க்கை தாமதம் ஆகலாம் அல்லது குடும்ப உறவில் சிக்கல் உண்டாகும் இவர் 27 வயதிற்கு மேல் திருமணம் செய்தால் ஓரளவுக்கு நிலைமை கட்டுக்குள் இருக்கும், மாறாக அவசர திருமணம் குடும்ப விவகாரங்களில் நிம்மதி இழப்பை உண்டாக்கும், கணவனால் உடல் மற்றும் மனதளவில் காயப்படுவார்கள், ஒரு வேளை காதல் திருமணம் அல்லது முன்பே தெரிந்தவரை மணம் முடிப்பது நிம்மதியை உண்டாக்கும், ஜாதகர் பலரிடம் நம்பிக்கை துரோகங்களை வாழ்க்கையில் சந்திப்பார், முந்திரி கொட்டை போல அனைவரையும் நம்பி ஆர்வத்தில் முதலீடு உதவிகள் செய்து பணம் மற்றும் நிம்மதியை இழப்பார், அவசர புத்தி கொண்டவர், தான் செல்வந்தனாக வேண்டும் என சித்தர் சமாதி, நவீன யோகிகளை வழிபடுவார், உடல் வலிமையுடன் வாழ வேண்டும் என ஆசை உடையவர், உடற் பயிற்சி, விளையாட்டு ஆர்வமுள்ளவர், பல் உடைதல், எலும்பு முறிவு, நாய்க் கடி, சிறுநீரக கற்கள் போன்ற உடல் பிரச்சனை வரும் வாய்ப்பு உண்டு, சிடுசிடு என பிறரிடம் பேசுவார், தான் ஒரு பலவான் என காட்டிக் கொண்டாலும் உள்ளூற பயம் உடையவர், மருத்துவம், வாகனத் தொழில், காவல், கட்டுமானம், சார்ந்த பணிகளில் குடும்பத்தில் ஒருவர் இருப்பார், ஷேர் மார்கெட், சூது ஆகிய வழிகளில் பணம் சம்பாதிக்க நினைத்து நஷ்டமடைவார், இவர் பிறரை நம்பி பொருளாதர முடிவுகள் எடுக்ககூடாது, பங்கு தொழில் செய்வதினை தவிர்க்க வேண்டும், இவருக்கு சகோதரர் மற்றும் நண்பர்கள் ஆபத்து காலத்தில் கை கொடுப்பார்கள் இருப்பினும் பிற்காலத்தில் பகை உண்டாகும் பாட்னர்சிப் தொழில் செய்தே

CamScanner

ஆக வேண்டும் என அவசியம் இருந்தால் நிலையான சட்டப்படியான ஒப்பந்தம் செய்து இணைவது நல்லது.

குரு

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம், அதற்கான சிகிச்சை பெறுதல் நடக்கும். இவருக்கு எப்போதும் குழந்தைகளின் வாழ்க்கை பற்றிய பயம் இருக்கும். ஒரு சில கருகலைதல் இருக்கலாம். சுய தாழ்வு மனோபாவம், கௌரவத்திற்கு ஏங்குதல் இருக்கும். பணம் தொடர்பான சிக்கலை சந்திப்பார். வட்டி வரவு செலவு வழியான ஏமாற்றம் உண்டு. ஜாதகர் நடத்தை விசயத்தில் அவப்பெயரை அடைவார். தாழ்வு மனோபாவம் ஆனாலும் அதை வெளிகாட்டிக் கொள்ளாமல் இருக்க முயற்சி செய்வார். ஜாதகர் சீட்டு, வட்டி, நிதி, அறிவுரை கூறும் பணி, ஏஜென்சி ட்ராவல் மற்றும் கலாச்சார தொழில்கள் மூலம் ஜீவணம் செய்வார். ஒழுக்கம் நேர்மை பற்றி பலருக்கு ஆலோசனை தருவார் ஆனால் அவற்றை இவரால் பின்பற்ற முடியாது அவதிப்படுவார். கொஞ்சம் உடல் பருமன் பிரச்சனை இருக்கும். குடல், ஆசனவாய், இதய படபடப்பு சிக்கல்கள் உண்டாகும். உயர்வான பணிகளுக்கு செல்லும் ஆர்வம் மற்றும் முயற்சி உடையவர். நல்ல நினைவாற்றல் கொண்டவர். வாழ்க்கை முழுவதும் பாடம் இருந்து கொண்டே இருக்கும். தனது அடையாளத்தை நிரூபிக்க போராடுவார். தந்திரம் நிறைந்தவர்.

சனி

தனக்கான வருமானம் தொடர்பாக சதா குழப்பத்தில் இருப்பார். பலவிதமான திறமை இருதாலும் அது பிறருக்கு புரியவைக்க போராடுவார். இவருக்கு தொழில் மற்றும் பணி விசயத்தில் எப்போதும் தொடர்ந்து அவமானங்கள் நிகழ்வது போல தோன்றும். பொது பணி என்றால் ஓடி போய் செய்யும் ஆர்வம் கொண்டவர். தனது திறமையை அனைவரும் போற்ற

வேண்டும் என்ற ஆர்வம் உண்டு, பிறந்த இடத்தில் இருந்து வேறு பகுதிகளுக்கு குடி பெயர்ந்து ஜீவணம் செய்வார், இவருக்கு அடுத்தவர் வேலை செய்யும் போது பார்த்துக் கொண்டு சும்மா நிற்க முடியாது தானே இறங்கி செய்து விடும் மனோபாவம் கொண்டவர், உழைக்க தயங்காதவர் இருந்தாலும் அதிக நேரம் தூங்குவார், திடீரென தூங்காமல் வேலை செய்வார், தனது வித்தை மீது அதிக கர்வத்துடன் இருப்பார், இந்த குணங்களால் அடிக்கடி வேலையை இழக்கலாம், பணி மற்றும் தொழிலில் நிலையற்ற தன்மையுடன் இருப்பார், ஜாதகர் தனக்கான அங்கீகாரத்திற்காக ஏங்குவார், வம்ச ரீதியான பிரச்சனை, தனது குலம் சார்ந்த பெருமைகளை பேசிக் கொள்வது, பொது காரியங்களுக்கு முன் நிற்பதுமாக இருப்பார், கால் நரம்பு, எலும்பு பிரச்சனைகள் உண்டு, பரம்பரை தொடர்பான சண்டை, பூர்வீக சொத்துகள் வழியாக பிரச்சனை உண்டு, பஞ்சாயத்து அலுவலகம், அரசியல், சேவை நிறுவனம், ஏசி, கண்ணாடி தொழில்களில் இவர் குடும்பத்தில் இருப்பார்கள், காரணம் அறிய முடியாத குடும்ப பிரச்சனை ஒன்று மாற்றி ஒன்றாக வரும் செய்வினை கோளாறுகள் இருப்பதாக தோன்றும், அல்லது அப்படி யாரவது கூறி குழப்புவார்கள், திடீரென உறவுகளில் முக்கியமான பலருக்கு வரிசையாக உயிர் ஆபத்து வரை நிகழும், ஆனால் வயதானவர்கள் தீர்க்க அயுளுடன் இருப்பார்கள் 30, 40 வய்து முக்கியமான உறவினர்களுக்கு உடல்நிலை பிரச்சனை உண்டாகும், ஒன்றாக சேர்ந்து கூட்டமாக சந்தோசமாக திருவிழா போல வாழ்ந்த குடும்பம் பல் வேறு காரணங்களால் சிதறி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் வாழ்வார்கள், இப்படி இடம் மாறி வாழ்வது நன்மையானதாக இருக்கும், சாதி மாறிய திருமணம் இரட்டைகுழந்தை பிறப்பு குடும்பத்தில் நிகழும், உடலில் உலோகங்கள் வைத்து அறுவை சிகிச்சை செய்தல், வலிப்பு நோய், தைராய்டு ஆகியவை உறவுகளில் சிலருக்கு இருக்கும்,

ராகு, கேது

ஜாதகருக்கு காரணமே இல்லாமல் வாழ்க்கையை புரட்டிப் போடும் நிகழ்வுகள் ஏற்படும், பலவிதமான வாழ்க்கை சிக்கலை எதிர் கொள்வார், எப்பொழுதும் நிம்மதியை இழந்தது போல உணர்வார், எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்காவது போய்விட வேண்டும் என்று தோன்றும் உறவுகளால் தொல்லைகள் மட்டுமே மிஞ்சும், தனக்கு மட்டும் எதுவும் கிடைக்காதது போல தோன்றும், அதீத ஆசை உடையவர், தன்னை அனைவரும் கவனிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும், ஏன் வாழ வேண்டும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் எனத் தோன்றும், யார் எப்படி போனாலும் தனது காரியத்தை முடித்துக் கொள்ளும் குணம் இருக்கும், விடாப்பிடியாக எல்லாத்தையும் விட்டுவிட்டு பிடிவாதமாக செயல்படுவார்கள், மற்றவர்கள் பற்றி எந்த சிந்தனையும் இருக்காது, எப்போதும் மனம் பற்றி சிந்தனை இருக்கும், குறுக்கு வழியில் செய்து விட வேண்டும் என்று தோன்றும், உயர் பதவி கொடுத்தாலும் தனக்கு தொல்லையாக கருதினால் தூக்கி எறிந்து விடுவார், எதிர்மறை சிந்தனைகள் இருக்கும் அதே சமயம் யாரும் செய்யாத விசயத்தை சாதிக்க வேண்டும் என்று சிந்திப்பர், மனம் சம்பந்தபட்ட குழப்பமும் பற்களை இரவில் கடித்தல் கனவுகளால் உளருதல் போன்ற பயத்தினால் உண்டாகும் உடல் பிரச்சனைகளும் இருக்கும், எந்த ஒரு காரியம் ஆனாலும் வெறி பிடித்தது போல செய்து முடிப்பார், அதுவரை கவனத்தை சிதறவிடாமல் கண்டிப்புடன் செய்து முடிக்கும் குணம் கொண்டவர்,

CamScanner

கிரக வக்ரம்

வக்ரம் என்பது துண்டான அல்லது இயல்புக்கு மாறான என்று பொருள், ஒருகிரகம் தனது இயல்பான செயல்பாட்டில் இருந்து திரிந்து செயல்படுவதை வக்ரமென குறிப்பிடுகின்றனர், இதை ஜோதிட சாஸ்திரத்தில் சேஷ்ட பலம் என்று கூறுவர், தமிழில் சேட்டை பலம், சேட்டை என்றால் இயல்பான தனது செயலில் இருந்து திடீரென மாறி செயல்படுவது, அதன் படி சில கிரகங்கள் இது போன்ற நிலைகளை அடைகின்றன,

வக்ரமடைந்த கிரகங்கள் தான் சென்று கொண்டுள்ள திசையை மாற்றிக் கொண்டு எதிர் திசையில் செல்வது போல் தோன்றும், ஆனால் எந்த கிரகமும் தனது பாதையில் தான் செல்லும் திசைக்கு எதிராக செல்வது கிடையாது, பிறகு எப்படி இந்த நிலையை கிரகங்கள் அடைகிறது என உங்களுக்கு கேள்வி எழலாம்,

பொதுவாக நாம் ஜோதிடத்தில் சூரியக் குடும்பத்தில் அதுவும் வெறும் கண்களால் பார்க்கும் அளவிற்குள் உள்ள கிரகங்களை மட்டுமே பயன்படுத்துகிறோம் அதன் படி அதிக பட்சமாக சனி கிரகம் வரை ஜோதிடத்தில் உள்ளது, தற்போது புளூட்டோ, யுரேனஸ், நெப்டியூன் போன்ற கிரகங்கள் பயன்படுத்தப் பட்டாலும், இந்திய ஜோதிடம் சனி வரையே எல்லைகளை கொண்டுள்ளது,

நாம் முன்பே பார்த்தது போல புவி மையம் மற்றும் சூரிய மையம் என இருவேறு கோட்பாடுகள் வான் கணிதத்தில் பயன்படுத்தப்படுகிறது, இதில் ஜோதிடமானது, புவிமைய கோட்பாடை சார்ந்த கணிதம், அதாவது வான் மண்டலத்தை பூமியில் இருந்து பார்ப்பது போல உள்ள கணிதம்,

அதன்படி நமது பார்வையில் அனைத்துக் கிரகங்களும் நம்மை சுற்றுவது போல காட்சியளிக்கும் சூரியன் உட்பட நம்மை

CamScanner

சுற்றி வருவது போல நமது பார்வையில் இருப்பதால் அதை வைத்து கணிதம் செய்கிறோம், உங்களுக்கு தோன்றலாம் சூரியன் நிலையாகத்தானே உள்ளது பிறகு எப்படி ராசிகளில் சூரியன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ராசியாக நகர்கிறது என, நமது ஜோதிட கணிதம் என்பது நமது பார்வையில் இருந்து வானகணிதம் மூலம் காலத்தை கணிப்பதாகும், பூமிதான் சுற்றி வந்தாலும் நாமும் அந்த பூமியிலேயே இருப்பதால் நமது கணிதமானது பூமியை சார்ந்தே உள்ளது, இதில் இன்னும் அதிகமான நன்மையும் உள்ளது , சூரியனில் இருந்து ஒவ்வொரு கிரகமும் எங்குள்ளது என தெரிந்து கொண்டால் அதன் பிறகு பூமியில் இருந்து அதை சரியாக எங்குள்ளது என தெரிந்து கொள்ள மீண்டும் பூமியின் நிலை எப்படி உள்ளது என தெரிந்து கொண்டு மேலும் கணிதம் செய்த பின்தான் ஒரு கிரகம் எந்த திசையில் உள்ளது என அறிய முடியும், ஆனால் நாம் ஆரம்பத்திலேயே பூமியில் இருந்து எப்படி உள்ளது என கணிதம் செய்து விட்டால் நேரடியாக அந்த திசையில் அந்த கிரகத்தை காணமுடியும்,

இதில் பூமியை அனைத்து கிரகங்களும் சுற்றி வருவது போல தெரிந்தாலும் நேரடியாக பூமியை சுற்றுவது முதலில் சந்திரன் அடுத்து சூரியன் இவை இரண்டு மட்டுமே பூமியை நேரடியாக சுற்றுவது போல தோன்றும் மற்ற கிரகங்கள் சூரியனை சார்ந்து சுற்றிக் கொண்டிருப்பதால், நம்மையும் சுற்றிக் கொண்டே சூரியனையும் சுற்றுவது போல தோன்றும்,

இவ்வாறு சுற்றிக் கொண்டுள்ள கிரகங்களுக்கு இடையே பூமியும் சுற்றி வருகிறது, பூமியும் நகர்கிறது, மற்ற கிரகங்களும் நகர்கிறது ஆனால் வெவேறு வேகத்தில், சூரியனை அனைத்து கிரகங்களும் சுற்றி வரும் போது அவைகளின் நீள்வட்டப் பாதையில் சில சமயங்களில் பூமிக்கு அருகிலும் வரும் அப்போது நமது பூமியின் வேகம் மற்றும் அதன் சுற்று பாதை கோணம், அவ்வாறு அருகே வரக்கூடிய கிரகத்தின் சுற்று வேகம் அதன்

பாதைக் கோணம் வேறுபட்டு இருப்பதாலும் அந்த கிரகம் தனது பாதையில் இருந்து பின்னோக்கிச் செல்வது போல நமது ராசிமண்டல பாதையில் காட்சியளிக்கும் இதை வக்ரம் என்கிறோம்,

இவ்வாறு வக்ர நிலையை சந்திரன், சூரியன் அடைவது இல்லை காரணம் பூமியில் இருந்து காணும் போது சூரியனும் நகர்வதில்லை, பூமி மட்டுமே நகர்கிறது, அடுத்து சந்திரன் நகர்ந்தாலும் அது பூமியுடனே இணைந்து நகர்கிறது, எனவே சூரியன் மற்றும் சந்திரனுக்கு வக்ரகதி கிடையாது, மேலும் ராகு மற்றும் கேது இவை இரண்டும் சந்திர பாதையை வைத்து கணிதம் செய்யப் படுவதால் அவைகளுக்கும் வக்ரகதி இல்லை, ஆனால் அவைகள் எப்பொழுதுமே மற்ற கிரகங்கள் செல்வதற்கு எதிர் திசையில் செல்வதால் சிலர் அதை வக்ரகதி என்கின்றனர், ராகு கேதுவின் இயல்பான இயக்கமே அதுதான் என்பதால் அது வக்ரமில்லை,

இந்த வக்ரமானது சூரியனை மையமாக கொண்டு சுழன்று கொண்டுள்ள கிரகங்கள் பூமியை சுற்றுவது போலவும் தெரிவதால் ஏற்பட்ட மாற்றம் என்பதால், அத்தகைய வக்ர கிரகங்கள் வக்ர நிலையை அறிய சூரியன் உள்ள நிலையை சார்ந்து அதை அறிய முடியும்,

அதன் படி வக்ரமடையும் கிரகங்களான புதன், சுக்கிரன், செவ்வாய், குரு மற்றும் சனியின் வக்ர நிலையை கணக்கிட சூரியனின் நிலையும் அவசியமான ஒன்று,

பொதுவாக இந்த வக்ர நிலையை அடையும் கிரகங்களை இரண்டாக பிரிக்கலாம், ஒன்று பூமியின் சுற்று பாதைக்கு வெளியே உள்ள கிரகங்கள், இவைகளை வெளிவட்ட கிரகங்கள் என கூறலாம், மற்றொன்று பூமியின் ஓடு பாதைக்கு உள்ளே உள்ள கிரகங்கள் இவை உள்வட்ட கிரகங்கள்,

இதில் வெளி வட்ட கிரகங்களான செவ்வாய், குரு, சனி இவைகள் சூரியனில் இருந்து எத்தனை ராசிகள் வரையிலும் விலகி இருக்கும், காரணம் இவைகள் பூமி சுற்று பாதைக்கு வெளியே இருப்பதால் நம்மை முழுவதுமாக சூரியனில் இருந்து விலகி சுற்ற முடியும், ஆனால் உள்வட்ட கிரகங்களின் சுற்று பாதை பூமியின் பாதையை விட சிறியதாகையால் சுக்கிரன் மற்றும் புதன் சூரியனில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் மட்டுமே விலகி செல்ல முடியும் ஒரு குறிப்பிட்ட தூரம் சென்றதும் மீண்டும் தனது சுற்று பாதையில் திரும்பி சூரியனுக்கும் பூமிக்கும் இடையே வந்து பிறகு சூரியனுக்கு மறு பக்கம் செல்லும், ஆனால் வெளிவட்ட கிரகங்கள் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வர முடியாது,

வெளிவட்ட கிரகங்கள் சூரியனில் இருந்து எத்தனை பாகை வரையிலும் விலகி செல்லும், அனால் புதன் சூரியனில் இருந்து முன் பக்கம் அதவது சூரியனை கடந்து அதாவது சூரியனுக்கு கிழக்கு திசையில் 29 பாகைகள் வரையும் சூரியனுக்கு பின் பக்கமாக மேற்கு திசையில் 29 பாகைகள் வரை மட்டுமே செல்லும்

அதேபோல் சுக்கிரன் சூரியனில் இருந்து முன் பக்கம் அதாவது சூரியனை கடந்து சூரியனுக்கு கிழக்கு திசையில் 46 பாகைகள் வரையும் சூரியனுக்கு பின் பக்கமாக மேற்கு திசையில் 46 பாகைகள் வரை மட்டுமே செல்லும்

வெளிவட்ட கிரகங்களான செவ்வாய், குரு, சனி இவைகளை ராசி கட்டத்தில் பார்த்த மாத்திரத்தில் ஓரளவுக்கு வக்ரமாக உள்ளது என்று கணித்து விட முடியும், சூரியனுள்ள ராசியில் இருந்து 5 ஆம் ராசி துவங்கி 9 ஆம் ராசி வரை மேற்கண்ட வெளிவட்ட கிரகங்கள் இருந்தால் பெரும்பாலும் வக்ரம், ஆனால் புதனுக்கும், சுக்கிரனுக்கும் அவ்வாறு எளிதாக கணிக்க முடியாது,

CamScanner

எந்த கிரகமாக இருந்தாலும் பாகை ரீதியாக சூரியனில் இருந்து கணிதம் செய்து முடிவுக்கு வரவேண்டும்,

வெளிவட்ட கிரகங்களான

செவ்வாயில் இருந்து சூரியன் 133 பாகையை கடந்த பிறகு, செவ்வாய் வக்ரகதியை அடையும், மீண்டும் சூரியன் செவ்வாயிற்கு 133 பாகையை நெருங்கும் போது, செவ்வாய் வக்ரகதியை முடித்துக் கொள்ளும்,

அதைப்போல் குருவில் இருந்து சூரியன் 116 பாகையை தாண்டிய பிறகு குரு வக்ரமாகும், மீண்டும் சூரியன் குருவிற்கு 116 பாகையை நெருங்கும் போது வக்ரம் முடியும்,

சனிக்கு சூரியன் 109 பாகையை கடந்த பிறகு வக்ரம் துவங்கி மீண்டும் 109 பாகையை நெருங்கும் வரை சனி வக்ரமாக இருக்கும்,

உள்வட்ட கிரகங்களான புதனும் சுக்கிரனும் சூரியனுக்கு கிழக்கில் தனது எல்லை வரை சென்று சூரியனை நெருங்கும் போது வக்ர கதியை துவங்கும், அதாவது ராசி சக்கரத்தில் சூரியனை கடந்து குறிபிட்ட பாகை வரை சென்ற புதனும் சுக்கிரனும் தனது சுற்று பாதையின் காரணமாக மீண்டும் சூரியனை நோக்கி வரத் துவங்கும் அப்போது புதன் சூரியனை 15 பாகை நெருங்கும் போது வக்ர நிலையை அடைந்து விரைவாக பின் நோக்கி நகர்ந்து சூரியனை தொட்டு, பிறகு சூரியனுக்கு மேற்கு நோக்கி பின் ராசி பகுதியில் பயணிக்கும் அப்போது சூரியனை விட்டு 22 பாகை சென்றவுடன் தனது வக்ரகதியை முடித்துக் கொள்ளும், அதே போல சூரியனுக்கு கிழக்கில் சுக்கிரன் சென்று மீண்டும் சூரியனை நெருங்கும் போது சூரியனுக்கு 27 பாகை வரும் போது வக்ரமாகி, சூரியனுக்கு மேற்கில் 24

பாகையை கடக்கும் போது வக்ர நிலையை முடித்துக் கொள்ளும், இந்த சுக்கிரன் மற்றும் புதனின் வக்ர நிலை பாகைகள் சூரியன் செல்லும் ராசிகளுக்கு தக்க மாறுபடும் இது புதனோட்டம் மற்றும் சுக்கிரவோட்டம் என்பதாக ஜோதிடத்தில் இந்த மாற்றங்கள் குறிப்பிடப்படுகிறது.

ஜாதகத்திலோ அல்லது மென்பொருட்களிலோ கிரகம் வக்ரமடைந்து உள்ளதா என் அறிந்து கொள்வது முக்கியம், பல ஜாதகங்களில் வக்ரம் குறிக்கப்படுவது இல்லை, எனவே எந்த ஜாதகமானாலும் அதன் பிறந்த தேதி, பிறந்த நேரம் மற்றும் பிறந்த ஊர் ஆகிய தகவல்களை பெற்று நீங்களாகவே கணித்துக் கொள்வது சிறப்பு, இது பலனறிவதில் தவறுகள் நடப்பதை தடுக்கும்,

தற்போது ஜாதகம் கணிக்க பலவிதமான மென்பொருட்கள் கிடைக்கிறது, அதுவும் இலவசமாகவே கிடைக்கிறது இருப்பினும் ஜோதிடத்தை தொழிலாக செய்ய விரும்புவோர் தனியாக விலை கொடுத்து நம்பகமான மென்பொருளை தனக்கென வைத்துக் கொள்வது சிறப்பு, அதில் கிரக வக்கிரத்தை குறிக்கும் படியான மென்பொருளாக பார்த்து வாங்கிக் கொள்வது மிக முக்கியம்,

நமது ராஜநாடி மென்பொருள் தற்போது கிடைக்கிறது, மேலும் அதில் ஜாதகம் மற்றும் முழுமையான பலன்களை அச்சிட்டுக் கொள்ளும் வசதியும், பலன் கூற தேவையான உதவிகளும் இருக்கிறது, மேலும் பயிற்சியில் இணையும் போது ஆண்டராய்டில் இயங்கும் அடிப்படை ராஜநாடி மென்பொருளும் வழங்கப்படும்,

எந்த ஒரு ஜாதகமானாலும் அதில் எந்த கிரகம் வக்ரமடைந்துள்ளது என்று கவனிப்பது மிக முக்கியமானது, ஒரு ஜாதகத்தில் வக்ரமடைந்த கிரகம் இருக்குமானால் அந்த வக்கிர கிரகம் குறிக்கும் காரகங்களை ஜாதகர் அனுபவிப்பதில்

குழப்பங்களை அடைவார், காரணம் எந்த ஒரு வாழ்க்கை நிகழ்வாக இருந்தாலும் நிலையாக இருக்கும் போது ஒரு வித நிம்மதி இருக்கும், ஆனால் வக்ரமடைந்த கிரக காரகங்கள் நிலைத் தன்மை அற்றதாக மாறி விடுவதால் அந்த ஜாதகர் அந்த கிரகம் குறிக்கும் காரக விசயத்தில் நிலையான முடிவை எடுப்பதில் பல வித சிரமங்களை சந்திப்பார், சுருங்க கூறினால், வக்ரமடைந்த கிரகங்கள் இரண்டு நிலைகளை அடையும், எனவே ஜாதகர் தனக்கான நிலை என்ன என்பதில் குழப்பமடைவார், உங்களுக்குள் சந்தேகம் எழலாம், அதென்ன இரட்டை தன்மை என்று, அதை விரிவாக காணலாம்,

ஒரு ஜாதகத்தில் ஒரு கிரகம் வக்ரமாக இருந்தால் அந்த கிரகம் தான் நின்ற ராசியில் இருந்தும் செயல் படும், தான் நின்ற ராசிக்கு 12 ஆம் ராசியில் இருந்து செயல்படும், இந்த செயல்பாடு மாற்றத்தால் அந்த வக்ர கிரகம் தான் உள்ள ராசியில் இருந்து 1,5,7,9 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களின் இணைவை பெற்றும் செயல்படும், அதே போல சில காலம் அதற்கு 12 ஆம் ராசியில் இருந்து 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களின் இணைவை பெற்றும் செயல் படும்,

பெரும்பாலும் ஒரு வக்ரம் பெற்ற கிரகம் தான் உள்ள ராசிக்கு 12 ஆம் ராசியில் இருந்து செயல்படும், அதே கிரகம் நடப்பில் (கோச்சாரத்தில்) தான் உள்ள ராசிக்கு 12 ஆம் ராசியில் சஞ்சாரம் செய்யும் போது பிறப்பு ஜாதகத்தில் உள்ள ராசிக்கு வந்து அதில் இருந்து அந்த வக்ரம் பெற்ற கிரகம் செயல்படத் துவங்கும், அடுத்து அந்த நடப்பு கிரகம் 12, 1, 2 ஆம் ராசிகளை கடந்து 3 ஆம் ராசிக்கு சென்றவுடன் இந்த வக்ர கிரகம் மறுபடியும் தான் உள்ள ராசிக்கு 12 ஆம் ராசியில் இருந்து செயல்படத் துவங்கும்,

CamScanner

இதை ஒரு உதாரணத்துடன் காணலாம்,

ஒரு ஜாதகத்தில் சிம்ம ராசியில் சனி வக்ரமடைந்து உள்ளது, எனவே முதலில் நாம் அந்த சனியை சிம்ம ராசியின் 12 ஆம் ராசியான கடகத்தில் வைத்துக் கொண்டு இணைவுகளை எடுக்க வேண்டும், நாம் மாற்றி எழுதக் கூடாது மனதில் கடகத்தில் உள்ளதாக நினைத்துக் கொள்ள வேண்டும், அவ்வாறு கணக்கிடும் போது, கடக ராசிக்கு 5 ஆம் ராசியான விருச்சிகம், 7 ஆம் ராசியான மகரம், 9 ஆம் ராசியான மீனம் ஆகிய ராசிகளில் உள்ள கிரகங்கள் அடிப்படையில் ஜாதகரின் தொழிலைப் பற்றி கூறுவோம், ஏனெனில் சனி ஒரு ஜாதகரின் தொழிலைக் குறிப்பதால்,

நமது கணக்கின் படி அந்த ஜாதகத்தில் சனி கடகத்தில் இருந்தே செயல்படுகிறது, இப்போது நடப்பு (கோச்சார) சனி ஒவ்வொரு ராசியாக நகர்ந்து ஒவ்வொரு ராசிக்கும் இரண்டரை ஆண்டுகள் வீதம் நகர்ந்து வருகிறது, ஜாதகத்தில் உண்மையில் சனி உள்ள சிம்ம ராசிக்கு 12 ஆம் ராசியான கடகத்தில் நுழையும் போது ஜாதகருக்கு தோராயமாக 27 வயது இருக்கும்,

அவ்வாறு ஜாதகத்தில் சனி உள்ள சிம்ம ராசிக்கு 12 ஆம் ராசியான கடகத்தில் நடப்பு சனி வந்ததும் நாம் பலன் கூறுவதற்காக பின் ராசியில் வைத்திருந்த சனி இப்போது தான் உள்ள ராசியில் இருந்தே செயல்படத் துவங்கும்,

சரியாக புரிந்து கொள்ளுங்கள்,

முதலில் ஜாதகத்தில் சிம்மத்தில் இருந்த சனியை நாம் கடகத்தில் வைத்து பலன் எடுத்தோம், அதே சனி கோச்சாரத்தில் அந்த ராசி அதாவது ஜாதகத்தில் அந்த கிரகம் உள்ள ராசிக்கு 12 ஆம் ராசியை நடப்பு சனி அடைந்ததும் சனியை சிம்மத்தில் வைத்து பலன் எடுக்க வேண்டும்,

CamScanner

அப்படி எனில் சிம்ம ராசியிலும் அதற்கு 5, 7, 9 ஆம் ராசிகளான தனுசு, கும்பம், மேச ராசிகளில் உள்ள கிரகங்களின் இணைவுகளின் அடிப்படையில் ஜாதகரின் தொழில் அமையும்,

இந்த நிலை ஜாதகத்தில் சனி உள்ள சிம்ம ராசிக்கு 12, 1, 2 ஆம் ராசிகளில் நடப்பு சனி சஞ்சரிக்கும் (நகர்ந்து செல்லும்) காலங்களில் இருக்கும், நடப்பு சனி துலாம் ராசியை அடைந்ததும் சனி மீண்டும் கடகத்தில் இருந்து செயல் படும்,

எனவே சனி வக்ரமடைந்த ஜாதகர்கள் தொழிலில் நிலையற்ற தன்மைகளை அனுபவிப்பார்கள், காரணம் சனி தொழில் மற்றும் வேலையை குறிக்கும் கிரகம்,

இந்த உதாரணத்தில் சனி உள்ள ராசியின் 12 ஆம் ராசியான கடகத்திற்கு நடப்பு சனி தோராயமாக 27 வயதில் வரும் அந்த வயதில் ஜாதரின் தொழில் சூழல் மாறும், பிறகு கடகம், சிம்மம், கன்னி ராசிகளை கடந்து நடப்பு சனி துலாமை அடையும் போது ஜாதகருக்கு 34 வயது ஆகிவிடும், பின்னர் சனி மீண்டும் கடகத்தில் இருந்து செயல்படும் போது ஜாதகரின் தொழில் சூழல் மீண்டும் மாறும்,

இது போலவே எந்த வக்ரமடைந்த கிரகமாக இருந்தாலும் பின் ராசியில் வைத்து பலன் கூற வேண்டும், அதே கிரகம் நடப்பில் தான் உள்ள ராசிக்கு 12, 1, 2 ல் வரும்போது ஜாதகத்தில் உள்ள ராசியில் வைத்து பலன் கூற வேண்டும்,

எந்த கிரகம் வக்ரமானாலும் அந்த கிரகம் குறிக்கும் காரகங்களை ஜாதகர் அடைவதில் குழப்பங்களை சந்திப்பார், குறிபிட்ட ஒரு தன்மையில் இருந்து திடீரென மற்றொரு தன்மைக்கு அந்த கிரகத்தின் காரகம் மாற்றம் அடையும் பிறகு நிலையாகும், எனவே ஜாதகர் வக்ரமடைந்த கிரகம் குறிக்கும் காரகங்கள் வழியில் பல வித பாடங்களை கற்றுக் கொள்வதால் அதில் மேம்பட்டவராகவும் தன்னை மாற்றிக் கொள்வார், எனினும்

CamScanner

இந்த நிலைக்கு வந்து சேர்வதற்குள் பலவித குழப்பங்களை ஜாதகர் சந்திப்பார், இதன் படி பார்க்கும் போது கிரகங்கள் வக்கரமடைவது நன்மை எனினும் ஜாதகர் அதில் நுணுக்கங்களை கற்க வேண்டும் என்பதற்காக வாழ்க்கை அவருக்கு வக்ரமான கிரகங்கள் குறிக்கும் காரகங்களின் வழியாக பல வித இன்னல்களை கொடுக்கும்,

சனி வக்ரமாக இருந்தால் அந்த ஜாதகர் பல தொழில்களில் ஈடுபடுவார், இழிவாக கருதப்படும் தொழிலாக இருப்பினும் மனமுவந்து செய்வார், இந்த ஜாதகர் பிறக்கும் போது அந்தக் குடும்பம் பொருளாதாரத்தில் சிக்கலில் இருந்திருக்கும், ஜாதகர் 27 வயது வரை ஒருவகையான தொழிலில் இருப்பார் பிறகு 27 வயது துவங்கி 35 வயது வரை தொழில் மாற்றம் இருக்கும், 35 வயதுக்கு பின் வாழ்க்கையில் பெற்ற பாடங்களைக் கொண்டு திருப்தியாக தொழில் செய்வார்,

மேலும் எந்த கிரகம் வக்ரம் ஆனாலும் ஜாதகர் அந்த கிரகத்தின் வழியாக அடையாளத்தை பெறுவார், அந்த கிரக காரகத்தின் வழியாக இரட்டை பலன்களை பெறுவார், அந்த கிரகத்தின் காரகத்திற்காக ஏங்குவார், அந்த கிரகத்தின் காரக வழியில் எந்த ஒரு புதுமையையும் ஏற்றுக் கொள்வார், உதாரணமாக சனி வக்ரம் சனி என்பது தொழிலை குறிக்கும் கிரகம், எனவே அந்த ஜாதகருடைய அடையாளமே அவரது வேலைதான், இவரை பெரும்பாலும் இவரது வேலையை வைத்துதான் அழைப்பார்கள், இவர் வேலையில் அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என சதா ஏங்கி கொண்டே இருப்பார், இவருக்கு குறிபிட்ட வயதிற்கு பிறகு இரண்டு வழிகளில் வருமானம் வரும், அதே போல் தனது தொழிலில் எந்த அப்டேட் வந்தாலும் முதலில் அதை நடைமுறைக்கு கொண்டுவருவார்,

வக்கிரமான கிரக பலன்கள்

புதன் வக்ரமானதன் பலன்

ஜாதகரின் சகோதரி மற்றும் மகளின் வாழ்க்கை சிக்கலானது, காதலின் வழியாக சிக்கலை சந்திப்பார், கல்வியில் தடை உண்டாகும் பிறகு நல்ல நிலையை அடைவார், நிலம் தொடர்பான பிரச்சனைகளை கடந்து வருவார், வாழ்க்கை முழுவதும் எதாவது கல்வி, பயிற்சியில் கலந்து கொண்டே இருப்பார், இவருடைய குடும்பத்தில் நரம்பு, கேட்டல், பார்த்தல், பேசுதலில் ஆரம்ப கால சிக்கலை ஒருவர் சந்திப்பார், நீர் சார் பணி, கடல்சார் பணி, தண்ணீர், ஆயில், பெயிண்ட், போர், போன்ற பணிகள் வழியாக ஆதாயம் உண்டு. இவரது குடும்பத்தில் ஒரு பெண் தொடர்பான துர் விசயங்கள் நடந்து இருக்கும், மேலும் பெண்களுக்கு சேர வேண்டிய சொத்துக்களைத் தராமல் ஏமாற்றி இருப்பார்கள், அதே போல முன் எப்போதாவது யாராவது தண்ணீரில் தவறி விழுதல், விசம் அருந்தி விடுதல் போன்ற வழியாக தற்கொலை வழியாக தவறி இருப்பார்கள், ஜாதகருக்கு சகோதரி வழியாக மிகுந்த இடையூறுகள் உண்டாகும், ஜாதகர் கல்வி வழியாக அல்லது தனது வித்தை வழியாக அடுத்தவர்களால் அடையாளப் படுத்தப்படுவார், ஜாதகர் புதிய கல்விகள் அல்லது புதிதாக வந்த ஏதாவது ஒன்றினைப் பற்றிய பயிற்சி பெறுவார், இவருக்கு தாய் வழி உறவுகளுடன் கருத்து மோதல் இருந்தாலும் திடீரென அவர்கள் உதவி கிடைக்கும், இவருடைய தாயிற்கு, இவருக்கு முன், பின் உருவான கரு கலைந்து இருக்கும், ஜாதகர் மற்றும் அவரடு குடும்பத்தில் நரம்பு மற்றும் தோல் பிரச்சனை உண்டு, யாராலும் கண்டறிய முடியாத ஒருவித மன அழுத்தம் இந்த குடும்பத்தில் அனைவரிடமும் இருக்கும், வம்ச ரீதியாக எதோ குறை தொடர்ந்து வருவது போல அடையாளங்கள் இருக்கும், ஜாதகரின் பெயரில் சொத்துகள் இல்லாமலிருப்பது நல்லது, ஏனெனில் ஜாதகரின் பெயரில் உள்ள சொத்தின் மதிப்பின் அளவிற்கு ஏதாவது கடன் அல்லது அவசர

CamScanner

சிக்கல் ஏற்பட்டு அந்த சொத்தை விற்று சரிகட்ட வேண்டிய அவசியம் உண்டாகும்,

சுக்கிரன் வக்கிரமானதன் பலன்

ஜாதகர் பெண் தோழிகள் வழியாக தேவையற்ற அவப் பெயர்களையும் மன உளைச்சலையும் சந்திப்பார், திருமண வாழ்க்கை பிரச்சனையானது தாமத திருமணம் அல்லது அசாதாரணமான திருமணம் நடக்கும், ஆடம்பரமான வாழ்க்கை மீது ஆசை உடையவர், போதை வஷ்துகள், இனிப்பு வகைகளின் மீது அலாதி பிரியம் உடையவர், நீரிழிவு நோய், கண் பார்வை குறைபாடுகளுக்கு ஆளாவார், இவரது குடும்பத்தில் இது போல உபாதை உள்ளவர்கள் இருப்பார்கள், காம சிந்தனை மிகுந்து இருக்கும், ஓரினக் கவர்ச்சி சில காலங்களில் வந்து மறையும், ஜாதகர் விலைமதிப்பு மிக்க, ஆடம்பரமான பொருட்கள் வழியாக பணம் ஈட்டுவார், ஜாதகர் பண விசயமாக வேறு ஊர்களுக்கு இடம் பெயர்வார், பொருளாதாரம் பற்றி பல கனவுகள் உடையவர், பொருளாதார விருத்தி குறித்து பல அனுபவங்கள் மற்றும் திட்டங்களை வைத்து இருப்பார், இவர் அதன் வழியாக பிறருக்கு கூறும் ஆலோசனைகள் மிக சிறந்த நன்மையை தரும் ஆனால் இவருக்கு சரியாக இருக்காது, பலவிதமான நம்பிக்கை துரோகங்களை சந்திப்பார், உதவி செய்யப் போய் கெட்ட பெயர் மற்றும் சங்கடங்களை ஏற்படுத்திக் கொள்வார், கர்பபை மற்றும் சிறுநீரகம் சார்ந்த மருத்துவ ஆலோசனை தேவைப்படும், இவரது குடும்பத்தில் பெண்கள் மற்றும் பொருளாதார காரணத்திற்காக தற்கொலை செய்தவர்கள் உண்டு, இவருக்கும் தற்கொலை சிந்தனை உண்டாகும்,

செவ்வாய் வக்கிரமானதன் பலன்

ஜாதகரின் கணவனுடனான வாழ்க்கை நிம்மதியற்று இருக்கும், குடும்பத்தில் கணவன் மற்றும் கணவனுடைய

குடும்பத்துடன் கருத்து வேறுபாடு தோன்றும், கடன் வழக்குகள் தொழிலில் பாட்னர்சிப் வழியாக துரோகங்களை கடந்து வர வேண்டும், பங்கு சந்தைகளில் பணத்தை இழப்பது நடக்கும், எதாவது ஒரு வகையில் வழக்கு ஏற்படும், மருத்துவம், பொறியியல் சார்ந்த வருமானம் குடும்பத்தில் எற்படும், நெருப்பு, வெல்டிங், மற்றும் கட்டிடப் பணிகளும் செய்வார்கள், குடும்பத்தில் தீவிபத்து மின் கசிவினால் விபத்து ஏற்படலாம், மருத்துவ செலவு அடிக்கடி இருக்கும் தனது கணவனுடன் வாழ்வதில் சிக்கலை சந்திப்பார், எலும்பு பிரச்சனை உண்டு, இவருக்கு முன்பின் உருவான கரு கலைந்து இருக்கும், கணவனால் மனதாலும் உடலாலும் காயப்படுத்தப் படுவார்,

குரு வக்கிரமானதன் பலன்

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம் உண்டு, கரு கலைதல் ஏற்படும், குழந்தைகளின் வாழ்க்கை தொடர்பான எதிர்பார்ப்பு இருக்கும், ஜாதகர் சுய கௌரவம் தொடர்பாக சதா எதிர்பார்ப்புடனே இருப்பார், பல அவமானங்களை கடந்து வருவார், குடல் தொடர்பான சிக்கலை சந்திப்பார், நிதி சார்ந்த பணிகளால் வருமானத்தை பெறுவார், தனக்கு என ஒரு உலகத்தில் வாழ்வார், ஜாதகருக்கு ரகசியங்கள் இருக்கும், வாய்ப்புகள் கிடைத்தால் எந்த எல்லையையும் கடந்து விடுவார், சமூகம் தவறாக நினைக்கும் விசயங்களைக் கூட செய்து பார்க்க ஆசைப்படுவார், ஜாதகருக்கு இரண்டு குணங்கள் உண்டு, வெளி உலகத்திற்கு ஒரு மாதிரியும் தனக்கு நெருக்கமான நபர்களிடம் வேறு மாதிரியும் இருப்பார், இவருக்கு மிகவும் அபாயகரமான சிந்தனைகள் இருக்கும் இருந்தாலும் வெளியே காட்ட மாட்டார், இவருடைய நடத்தை தொடர்பான விமர்சனங்களை சந்திப்பார், இவரது 9-12, 23-25, 35-37, 47-49, 59-61 ஆகிய வயதுகளில் எதாவது சமூகத்தின் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளால் அவப்பெயர் ஏற்படும், பலருடன் பழகுவார், தனது குறைகளை ஏற்றுக் கொண்டு மாற்றிக் கொள்ள முயலுவார், தான் அடிக்கடி

CamScanner

முடிவுகளை மற்றிக் கொண்டே இருப்பதாக நினைத்து தன் மீதே வருத்தம் அடைவார், எதாவது தொடர் பழக்கம் அதாவது மேனரிசம் உடையவர், போதை பழக்கம் இருந்தாலும் அதிலிருந்து மீண்டு வருவார்

சனி வக்கிரமானதன் பலன்

ஜாதகர் வேலை தொழில் விவகாரமாக நிம்மதி இல்லாமலும் நிலையில்லாமலும் அடிக்கடி இடம் மாறிக் கொண்டு இருப்பார், இழிவாக கருதப்படும் தொழிலாக இருப்பினும் மனமுவந்து செய்வார், இந்த ஜாதகர் பிறக்கும் போது அந்த குடும்பம் பொருளாதாரத்தில் சிக்கலில் இருந்திருக்கும், அல்லது வளர்ந்த பிறகு இருக்கும் நிலைக்கு சற்று உயர்ந்த நிலையில் இருந்து இருக்கும், பணியிடங்களில் விரோதங்களையும், மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமையும் கொண்டிருப்பார், இவரது 27-35. 57-65 ஆகிய வயதுகளில் வாழ்க்கை திடீரென மாறும் இதில் குறிப்பிட்ட வயது இடைப்பட்ட காலத்தில் ஜாதகர் தொழில் விசயமாக எல்லா அனுபவங்களையும் பெறுவார், இவரது 27 வயதில் மாற்றம் துவங்கி 35 வயது வரை சிக்கல்களை அனுபவித்து கடந்து பிறகு நல்ல நிலையை அடைவார், மீண்டும் 57 வயதில் சிக்கலை சந்திப்பார் இதனால் தான் பொதுவாக பணி ஓய்வு 58 வயதில் துவங்குகிறது இது அரசு நிர்ணயம் செய்தாலும் கிரகங்களின் விளையாட்டு அதில் உள்ளது, இவரது தொழில் சூழல் குழப்பமாகவே இருக்கும் வேலைக்காக பூர்வீகத்தில் இருந்து வெளியேறுவார், இவர் மற்றும் இவர் குடும்பத்தில் மரபு ரீதியான உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சனை உண்டு, திடீரென துர் நிகழ்வுகள் ஏற்படும் ஜாதகர் பொது நலம் சார்ந்த சிந்தனை உடையவர், பிறருக்கு தானம் செய்வார், குலதெய்வம் பற்றுதல் கொண்டவர், ஜாதகருக்கு அல்லது அவரது குடும்பத்தில் கால்

பிரச்சனை ஏற்படும், பொது சேவை பஞ்சாயத்து பணிகள் அரசியல் சார்ந்த சிந்தனைகள் உண்டு குடும்பத்தில் ஒருவருக்கு அப்படிபட்ட ஊருக்கு உழைக்கும் வேலையே இருக்கும்

கிரக பரிவர்த்தனை

பரிவர்த்தனை என்பது இரண்டு கிரகங்கள் தங்களது ஆட்சி ராசிகளில் மாறி மாறி அமர்வது

மகர ராசி சனியின் ராசி, சிம்ம ராசி சூரியனின் ராசி ஒரு ஜாதகத்தில் மகரத்தில் சூரியன், சிம்மத்தில் சனி இருந்தால் சனி சூரிய பரிவர்த்தணை, காரணம் இரண்டு கிரகங்களும் தங்களது ராசிகளை பரிமாறி இருக்கிறது, இதில் சனியும் சூரியனும் பரிவத்தனை பெற்று இருக்கிறது, எனவே, சனியை சூரியனும் சூரியனை சனியும் இடையூறு செய்யும், எனவே ஜாதகர் தொழில் மற்றும் பணியில் மாறுதல் அடைவார் அதற்கு காரணம் சூரியனின் காரகங்களான தந்தையாலோ, அல்லது அரசாங்கத்தாலோ நடைபெறும், இதில் சூரியன் தன்மையும் சனியால் இடையூறு செய்யப்படும் ஜாதகர் தனது மகன் மற்றும் தந்தையை பணி மற்றும் தொழில் காரணமாக பிரிந்திருக்கிறார்,

இதில் கவனிக்க வேண்டியது இரண்டு கிரகங்கள் பரிவர்த்தனை பெற்று இருப்பினும் அந்த பரிவர்த்தனை கிரகங்கள் மாறி மாறி இடையூறுகளை செய்து கொண்டாலும், அந்த இரண்டு கிரகங்களும் ஜாதகத்தில் ஒரே ராசியில் எந்த கிரகத்துடன் இணைந்துள்ளது என்று காண வேண்டும் .

பரிவர்த்தனை பெற்ற கிரகங்களை விட பரிவத்தனை பெற்ற கிரகங்களுடன் இணைந்த கிரகங்கள் அதிக அளவில் பாதிப்படையும்,

உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சனி செவ்வாய் பரிவர்த்தனை, அதில் சனியுடன் சுக்கிரன் இணைவு, சனி செவ்வாயால் பரிவர்த்தனை பெறும் போது சனி உள்ள ராசிக்கு செவ்வாய் வந்து சுக்கிரனுடன் இணைகிறது எனவே ஜாதகர் தொழில் விசயமாக வெளியே செல்லும் காலத்தில் சுக்கிரனுடன் செவ்வாய் சேர்வதால் ஜாதகரின் மனைவி வேறு தொடர்புகளை உண்டாக்கிக் கொள்கிறார்,

இது போல் எந்த கிரகம் பரிவர்த்தனை அடைந்துள்ளது, அவ்வாறு பரிவர்த்தனை பெற்ற கிரகங்களுடன் இணைவு பெற்ற கிரகங்கள் எவை என்பதையெல்லாம் சீர்தூக்கி பார்த்து முடிவுக்கு வர வேண்டும்,

சுக்கிரனுக்கு 3,11 ராசிகளில் உள்ள கிரகம் புதனுடன் பரிவர்த்தனை பெற்றாலோ, அல்லது புதனுக்கு 3,11 ராசிகளில் உள்ள கிரகங்கள் சுக்கிரனுடன் பரிவர்த்தனை பெற்றாலோ ஜாதகர் காதல் தொடர்பான விவகாரங்களில் சிக்கிக் கொள்வார், அவரது காதல் திருமணம் சில இன்னல்களை கடந்து நடந்தேறும்,

செவ்வாய் ராகு அல்லது கேது தொடர்பு பெற்று, அந்த செவ்வாய் குருவுடன் பரிவர்த்தனை பெற்று இருந்தால் ஜாதகன் தற்கொலை முயற்சியில் இறங்குவான்,

பரிவர்த்தனை பெற்ற கிரகங்களின் காரகத்தின் வழியாக பக்க விளைவுகள் உண்டாகும், உதாரணமாக தோல் அலர்ச்சிக்கு மருந்து சாப்பிடுவார் திடீரென சிறுநீரக கோளாறு வந்துவிடும், பெரும்பாலும் ஓவர் டோஸ் மருந்துகளை தவிர்க்க வேண்டும், மேலும் இவருக்கு எதாவது வேலை என எங்காவது இருக்க சொன்னால் அந்த இடத்தில் யாருடனாவது பழகி புது

CamScanner

பிரச்சனையாகும், இவருக்கு உடல்நலம் இல்லை என மனைவியின் விட்டில் வைத்து பார்த்தால் மனைவியின் சகோதரியுடன் பழகி பெரிய சிக்கலாக்குவார், ஆகவே ஒன்றினால் மற்றொன்று பிரச்சனையாகும்,

சில சமயங்களில் இதுபோல விசயங்கள் ஜாதகருக்கு நடக்காமல் பரிவர்த்தனை பெற்ற கிரகம் குறிக்கும் நபருக்கு அல்லது பரிவர்த்தனை கிரகத்துடன் சேர்ந்த கிரகம் குறிக்கும் நண்பருக்கு ஆகலாம், உதாரணமாக சுக்கிரன் ஏதாவது கிரகத்துடன் பரிவர்த்தனை என்றால் மனைவிக்கு நிலையற்ற சிந்தனை ஏற்படலாம், ஒருவேளை பரிவர்த்தனை பெற்ற சுக்கிரனுடன் புதன் இணைந்து இருந்தால் ஜாதகருடைய சகோதரி திடீரென காதல் திருமணம் செய்து கொண்டு வந்து நிற்பாள், காரணம் புதன் சகோதரி, இது போல ஒவ்வொரு வக்கிர பரிவர்த்தனை பலன்களை கையாள வேண்டும்

எந்த கிரகம் பரிவர்த்தனை அடைந்தாலும் அந்த கிரகத்தை தனது ராசியில் வைத்துக் கொண்டு அதிலிருந்து பலன் கூற இணைவு எடுக்க வேண்டும், அதே கிரகம் நடப்பில் அந்த ராசியில் வரும் போது ஜாதகத்தில் உள்ளது போல செயல்படுவதாக கணிக்க வேண்டும்,

உதாரணமாக சனி மற்றும் சுக்கிரன் பரிவர்த்தனை, சனி துலாம் ராசியிலும், சுக்கிரன் மகர ராசியிலும் உள்ளது ஆனால் நாம் ஜாதகத்திற்கு பலன் கூறும் போது சனி மகரத்திலும் சுக்கிரன் துலாமிலும் உள்ளதாக பாவித்து இணைவுகள் எடுத்து பலன் கூற வேண்டும், நடப்பு சனி மகரத்தை அடையும் போது அல்லது நடப்பு சுக்கிரன் துலாமை அடையும் போது அந்த காலத்தில் மட்டும் ஜாதகத்தில் உள்ளது போல சனி துலாம் ராசியிலும், சுக்கிரன் மகர ராசியிலும் உள்ளது போல வைத்து பலன் கூற வேண்டும், எனவே பரிவர்த்தனை அடைந்த கிரகங்கள்

CamScanner

இரண்டு ராசிகளில் இருந்து இயங்குவதைப் போல பலன்களை மாறிமாறித் தரும்

கிரக பரிவர்த்தனை பலன்கள்

கீழுள்ள பகுதியில் பரிவர்த்தனை ஆன பலன்களை கொடுத்துள்ளேன், அதில் எந்த ஒரு கிரகம் பரிவர்த்தனை பெற்றாலும் ஒரு குறிப்பிட்ட பலனே நடக்கும், காரணம் ஒரு கிரகம் பரிவர்த்தனை ஆவது அந்த கிரகம் தனது இயல்பான நிலையில் செயல்பட வாய்ப்பு இல்லாமல் இன்னும் அதிகமான ஒரு நிலையையும் அடையும், அதாவது ஒரு கிரகம் பரிவர்த்தனை ஆனால் குறிபிட்ட காலம் அந்த கிரகம் அதே ராசியிலும் மற்ற காலங்களில் பரிவர்த்தனை அந்த கிரகம் உள்ள ராசியிலும் இருந்து இயங்கும் எனவே ஒரு கிரகம் இரட்டை வேடம் போடுவது போல செயல்படும், இதனை ஜாதகரால் சமாளிக்க முடியாது குழப்பமடைவார், எனவே ஒரு கிரகம் பரிவர்த்தனை ஆனால் பலன்கள் ஏறத்தாழ ஒரே போலவே இருக்கும், அதே சமயம் அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றுள்ளது என்பதை பொறுத்து சில குறிபிட்ட பலன்களும் நடக்கும், ஒரு ஜாதகத்தில் பரிவர்த்தனை ஆனால் கீழுள்ள அதற்கான குறிப்பிட்ட பலன்களை கூற வேண்டும் மேலும் குறிபிட்ட அந்த பரிவர்த்தனை ஆனதோ அதற்கான பலன்களையும் சேர்த்தே கூற வேண்டும்

சூரியன் பரிவர்த்தனை

சூரியன் எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை ஆனாலும் அரசு வழியான வழக்குகள், தொல்லைகள் அல்லது ஆவணங்கள் மற்றும் வழக்கு தொடர்பாக அரசின் உதவியை பெறும் அவசியம் ஏற்படுதல், தந்தையின் வாழ்க்கை சிக்கலாகவும் அவரது அனுகூலம் குறைவாகவும் இருக்கும் தந்தை குடும்ப பொறுப்பு

இல்லாமலோ அல்லது ஜாதகருடன் இணக்கம் இல்லாமலோ இருப்பார், குழந்தை பிறப்பு சிக்கல் பூர்வீக சொத்துகளில் சிக்கல் ஏற்படும், குடும்பத்தில் தலை மற்றும் முதுகுத்தண்டு, பல், கண் சார்ந்த உபாதைகள் இருக்கும், ஜாதகர் பலவித இன்னல்களை அவமானங்களை கடந்து சொந்தமாக தொழில் செய்தல் அல்லது அரசு மற்றும் அதிகாரமான பதவிகளை பெறுவார்,

குறிப்பு; சூரியன் பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது அதையும் சேர்த்து சொல்லவும்,

சூரியன் சந்திரன் பரிவத்தனை

ஜாதகரின் தந்தை குடும்ப பிரச்சனைகளை சந்திப்பார், தாய் தந்தை இருவரும் எதாவது சில காரணங்களுக்காக பிரிந்து சில காலம் இருப்பார்கள், தந்தையினால் தாயையும் தாயினால் தந்தையையும் ஜாதகர் விரோதித்துக் கொள்வார், தாயின் காரணமாக ஜாதகர் தனது பணியை இழந்து விட்டு திரும்புவார், குடும்பத்தில் சிக்கல் வருவதற்கு தாயும் மிக முக்கிய காரணமாக இருப்பார், பெரும்பாலும் ஜாதகரின் தந்தை வெளி ஊர்களில் இருக்கும் வாய்ப்புகள் அதிகம்

சூரியன் புதன் பரிவர்த்தனை

ஜாதகரின் மகளின் வாழ்க்கையில் திடீர் திருப்பங்கள் ஏற்படும், ஜாதகருக்கு கிடைக்க வேண்டிய சொத்துக்களில் தந்தையினால் குழப்பங்கள் ஏற்படும், இவர் வைத்திருக்கும் சொத்துகள் சம்பந்தமாகவும் எதாவது தொல்லை உண்டாகும், குழந்தைகளின் வாழ்க்கை குறித்து சதா சிந்தித்துக் கொண்டே இருக்கும் நிலை உருவாகும், இவரது குழந்தைகள் மிகுந்த போராட்டங்களைச் சந்திப்பார்கள் அவர்களது உடல் நலமும் சிக்கலாகலாம் இதெல்லாம் திடீரென நடக்கும், ஜாதகரின் காதல்,

கல்வி ஆகிய அனைத்திலும் தந்தையின் தலையீடு நிம்மதி இழப்பை உண்டாக்கும், சகோதரியின் தொல்லை வாழ்க்கை முழுவதும் உண்டு.

சூரியன் சுக்கிரன் பரிவர்த்தனை

ஜாதகர் மனைவி விசயத்தில் சிக்கலை உணருவார், குழந்தை காரணமாக பிரிவுகள் அல்லது வேலை விசயமாக பிரிந்து வாழும் நிலை உண்டாகலாம், தந்தையுடன் கருத்து வேறுபாடு அதற்கு மனைவி அல்லது பணம் மற்றும் சொத்து காரணமாக இருக்கும், ஜாதகருக்கு பணம் கொடுக்கல் வாங்கலின் வழியாக அல்லது பங்குதாரர் வழியாக வழக்குகள் இழப்புகள் நிகழும், மனைவியும் ஜாதகருக்கு நிம்மதி இழப்புக்கு காரணமாவர், ஜாதகர் தனது மனைவியின் மீது சந்தேகமடைவார், ஜாதகரின் தந்தையின் பழக்க வழக்கங்கள் காரணமாக அவப்பெயரை அடைவார், சந்ததி விருத்தி குறைபாடுகளை சந்திப்பார், அது தொஅர்பான உடல் குறைபாடும் இருக்கும்,

சூரியன் செவ்வாய் பரிவர்த்தனை

ஜாதகர் தனது தொழில் மற்றும் பணி சம்பந்தமாக வழக்குகளை சந்திப்பார், குறிபிட்ட வேலையினால் குறிபிட்ட நோய் ஏற்படும், இதனை தொழில் தொடர்பான நோய் என்பார்கள், உதாரணமாக நின்று கொண்டே வேலை பார்த்தால் காலில் நரம்பு சுருட்டை நோய் வருவது போல, தொழில் தொடர்பான நோய்கள் உண்டாகும், ஜாதகரின் தந்தை நோய்வாய்ப்படுவார், ஜாதகரின் சகோதரன் மூலம் தொழிலில் இடையூறு ஏற்படும், குழந்தை பிறப்பு தாமதம் அதற்காக மருத்துவம் செய்வார், குழந்தைகாக கணவனை பிரியும் நிலை உண்டாகும்,

சூரியன் குரு பரிவர்த்தனை

ஜாதகர் தனது செயல்பாடுகளால் தனது பணி இடங்களில் விரோதங்களை வளர்த்துக் கொள்வார், தனது அறிவால்தான் நிறுவனமே உயர்ந்தது எனவும் ஆனால் தனக்கு மதிப்பு இல்லை எனவும் குறைபட்டுக் கொள்வதோடு மட்டும் இல்லாமல் அந்த பணியில் இருந்து விலகவும் முடிவு செய்வார், மேலும் தான் ஒரு தொழில் துவங்கி அதை நிலை நிறுத்த வாழ்க்கை முழுவதும் பல அவமானங்களையும் அடைவார், இவர் சில சமயங்களில் நீதிக்கு புறம்பான வழிகளில் கூட பொருள் ஈட்டும் நிலை ஏற்படலாம்,

சூரியன் சனி பரிவர்த்தனை

அடிக்கடி தொழில் மற்றும் வேலைகளை விட்டு நின்று விடுவார், அரசியல் ஆர்வம் உடையவர், தாடை பல் சிகிச்சை நடக்கும், கால் எலும்பு தேய்மானத்தால் பிற்காலத்தில் வேதனை அடைவார், தொழில் செய்வதற்காக வேலையை விட்டு விட்டு ஆரம்பத்தில் கஷ்டத்தை சந்தித்தாலும் பிற்காலத்தில் நல்ல நிலையை அடைவார், தொழில் விசயமாக பூர்வீகத்தை விட்டு வெளியேறுவார், மீண்டும் பூர்வீகத்தில் வாழ வேண்டும் என ஆசை கொண்டவர், தந்தை கால் நோய்களால் குடும்பத்தை கவனிக்க இயலாமல் போகலாம், இவருக்கு இளநரை இருக்கும்,

சந்திரன் பரிவர்த்தனை

ஜாதகர் தனது தாயின் ஆளுமையை வெறுப்பார், ஜாதகரின் தாய் திடீரென தந்தையுடன் கருத்து மோதலில் இறங்குவார், ஜாதகருக்கு மன அழுத்தம் அதிகமாக இருக்கும், ஜாதகர் மருத்துவம், கணினி, அயல்நாட்டு பணிகள் மற்றும் வாகனம்

CamScanner

தொடர்பான வருமானம் செய்வார், ஜாதகரின் குடும்பத்தில் மனநலம் தொடர்பான பிரச்சனை ஒருவருக்கு இருக்கும், கர்ப்பப்பை பிரச்சனை, தாய்மை அடைவதில் சிக்கலும் உறவுகளில் ஒரு சிலருக்கு இருக்கும், ஜாதகரின் தாயின் திருமணம் சிக்கல்களை கடந்து நடந்திருக்கும், ஜாதகருக்கு கண் பிரச்சனை சளி தொந்தரவுகள் இருக்கும், பெண் ஜாதகமாக இருந்தால் மாதவிடாய் கோளாறுகள் , குடும்ப வாழ்க்கை நிம்மதி இன்மை இருக்கும்

குறிப்பு; சந்திரன் பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது, அதையும் சேர்த்து சொல்லவும்,

சந்திரன் புதன் பரிவர்த்தனை

ஜாதகரின் காதல் தாயினால் தடுக்கப்படும், காதல் மட்டுமல்ல கல்வி, சொத்து போன்றவற்றிலும் தாயின் தலையீடுகள் அதிகமாக இருக்கும் ஜாதகருக்கு திடீரென தோல் அலர்ச்சி உண்டாகலாம், அது போன்ற காலங்களில் காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை கை விடுவது நல்லது, சிறுநீரக பிரச்சனையின் காரணமாக தோல் பிரச்சனை வரும், ஜாதகரின் சகோதரியின் வாழ்க்கை சிக்கலாக இருக்கும் அதற்கு காரணம் தாயாக இருப்பார், சொத்து மற்றும் காதல் விவகாரங்களில் ஜாதகருக்கும் தாயுடன் கருத்து வேறுபாடு ஏற்படும், சகோதரியுடன் பூர்வீக வீடு தொடர்பான பிரச்சனை உண்டாகும், மகளுக்காக நாடு, ஊர், மாநிலம் மாறும் நிலை ஏற்படலாம்,

சந்திரன் சுக்கிரன் பரிவர்த்தனை

ஜாதகர் தனது பொருளாதர விசயத்தில் தாயுடன் மோதல் போக்கை கையாள்வார், தாய் மற்றும் மனைவிக்கு இடையே

சிக்கிக் கொண்டு எந்த பக்கம் போவது என்ற முடிவுக்கு வர இயலாமல் விழி பிதுங்குவார், குடும்ப விசயத்தில் தாயின் தலையீடு அதிகமாக இருக்கும் மனைவியுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகும், இவரது குடும்பத்தில் ஆசிரியர் இருப்பார், மனைவிக்கு சாதகமாக இருப்பதாக நினைத்து தாய் வெறுப்பாவார், வீடு விசயமாக பொருளாதார சிக்கலை சந்திப்பார், பிறருக்கு உதவுதல் அல்லது பண விசயத்தில் அவமானம் ஏற்படும், ஜாதகருக்கு கர்ப்பபை பிரச்சனை, சிறுநீரக தொல்லைகள் உண்டு, ஜாதகருக்கு தாயிடமிருந்து திடீரென பொருளுதவி கிடைக்கும்,

சந்திரன் செவ்வாய் பரிவர்த்தனை

ஜாதகர் தனது கணவனுடன் கருத்து வேறுபாடு பிரிவு நிம்மதி இன்மை போன்றவற்றால் அவதியுறுவார், இதற்கு காரணமாக ஜாதரின் தாய் அல்லது மாமியார் இருக்கலாம், மேலும் கணவருக்காக தாயுடன் விவாதமும் செய்வார், மனதளவில் பாதிப்படைவார், குழப்பமான மனம் மற்றும் உடல் நலம் சார்ந்த சிக்கலில் இருப்பார், ஜாதகர் சகோதரர் மற்றும் நண்பர்களால் ஏமாற்றமடைவார், வீடு தொடர்பான நம்பிக்கை துரோகம் மற்றும் ஏமாற்றம் மற்றும் வழக்குகளில் சிக்கிக் கொள்வார், சிறுநீரகம் சார்ந்த பிரச்சனை வந்து போகும், அயல்நாட்டு பணிகள் தொடர்பாக பணம் கொடுத்தும் ஏமாற வாய்ப்பு உண்டு,

சந்திரன் குரு பரிவர்த்தனை

ஜாதகருக்கு தாழ்வு மனப்பான்மை அதிகம் இருக்கும், மன அழுத்தம் அதை தொடர்ந்து அவ்வப்போது தனது முடிவுகளை மாற்றிக் கொள்வது குடும்பத்தினருடன் கருத்து வேற்றுமைகளை உண்டாக்கிக் கொள்வது, தாயின் மீது விரக்தி போன்றவற்றால் எப்போதும் சதா நிம்மதி இழந்து இருப்பார், தாயின் வாழ்க்கையில்

CamScanner

அவமானங்கள் அதிகம் இருக்கும் மிகுந்த போராட்டங்களுக்கு இடையே ஜாதகரை வளர்ப்பார், ஜாதகர் தனது தாயின் நலனுக்காக பல விசயங்களில் விட்டுக் கொடுப்பார்,

சந்திரன் சனி பரிவர்த்தனை

ஜாதகர் பணி விசயமாக அயல் நாட்டிற்கு செல்லும் நிலை உருவாகும், தொழில் காரணமாக தாயினை பிரிவது அல்லது அவருடன் சண்டையிடுவது நடக்கும், ஜாதகர் வம்ச ரீதியாகவே மனகுழப்பம் உடையவர், காலில் நரம்பு பிரச்சனை உண்டாகும் இவர் பணி செய்யும் இடத்திற்கு தாயை அழைத்துக் கொண்டே செல்வார், தொடர்ந்து எல்லா விசயங்களிலும் தாயார் தலையிட்டு விரோதத்தை உண்டாக்கி கொள்வார், தொழில் விசயமாக வீட்டை விற்று விடலாம் என்ற முடிவுகளை ஜாதகர் எடுப்பார், வீட்டை ஒட்டியே தொழில் செய்ய வேண்டும் என விருப்பம் உடையவர்,

புதன் பரிவர்த்தனை அடைந்தால்

ஜாதகரின் சகோதரி மற்றும் மகளின் வாழ்க்கை சிக்கலானது, காதலின் வழியாக சிக்கலை சந்திப்பார், கல்வியில் தடை உண்டாகும் பிறகு நல்ல நிலையை அடைவார், ஜாதகரின் பெயரில் சொத்துகள் இல்லாமலிருப்பது நல்லது, ஏனெனில் ஜாதகரின் பெயரில் உள்ள சொத்தின் மதிப்பின் அளவிற்கு ஏதாவது கடன் அல்லது அவசர சிக்கல் ஏற்பட்டு அந்த சொத்தை விற்று சரிகட்ட வேண்டிய அவசியம் உண்டாகும், நிலம் தொடர்பான பிரச்சனைகளை கடந்து வருவார், வாழ்க்கை முழுவதும் ஏதாவது கல்வி, பயிற்சியில் கலந்து கொண்டே இருப்பார், இவருடைய குடும்பத்தில் நரம்பு, கேட்டல், பார்த்தல், பேசுதலில் ஆரம்ப கால சிக்கலை ஒருவர் சந்திப்பார், நீர் சார் பணி, கடல்சார் பணி, தண்ணீர், ஆயில், பெயிண்ட், போர், போன்ற பணிகள் வழியாக ஆதாயம் உண்டு. இவரது குடும்பத்தில் ஒரு

CamScanner

பெண் தொடர்பான துர் விசயங்கள் நடந்து இருக்கும், மேலும் பெண்களுக்கு சேர வேண்டியவற்றை தராமல் ஏமாற்றி இருப்பார்கள், அதே போல முன் எப்போதாவது யாராவது தண்ணீரில் தவறி விழுதல், விசம் அருந்தி விடுதல் போற வழியாக தற்கொலை வழியாக தவறி இருப்பாரகள், ஜாதகருக்கு சகோதரி வழியாக மிகுந்த இடையூறுகள் உண்டாகும்,

குறிப்பு; புதன் பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது, அதையும் சேர்த்து சொல்லவும்,

புதன் சுக்கிரன் பரிவர்த்தனை

ஜாதகர் காதல் வயப்படுவார், மேலும் திருமணத்திற்கு பிறகும் காதலினால் குடும்ப சிக்கலை எதிர் கொள்வார், ஜாதருக்கு திருமண வாழ்க்கையில் சிக்கல் பிரிவுகள் ஏற்படும் ஜாதகருடைய சகோதரி மற்றும் மகள் இருவரில் ஒருவர் வாழ்க்கை நிம்மதியற்றதாக இருக்கும் பொருளாதாரம் அல்லது தோழிகள் வழியாக தடை ஏற்படும் ஜாதகருடைய சகோதரியே ஜாதகிக்கு வில்லியாக வரும் நிலை உண்டாகும், நிலம் தொடர்பான பண விவகாரங்கள் ஏற்பட்டு சரியாகும், பொருளாதார நிலை காரணமாக கல்வித் தடை ஏற்படும்,

புதன் செவ்வாய் பரிவர்த்தனை

ஜாதகரின் கல்வி தடைபட்டு தொடரும் சிறுவயதில் உடல்நலக் குறையால் அவதியுறுவார், ஜாதகரின் கணவனுடைய நடத்தை குறித்து ஜாதகருக்கு சந்தேகம் தோன்றும் கணவரை விட்டு பிரியும் சூழல் கூட ஏற்படலாம், நிலம் தொடர்பான வழக்குகள் உண்டாகும் ஜாதகரின் சகோதரி சொத்து, பண விசயமாக தொல்லை தருவார், ஜாதகருக்கு தோல் அலர்ச்சி இருக்கும், எலும்பு தேய்மானம் நரம்பு வலி காரணமாக சிகிச்சை

CamScanner

பெறுவார், ஜாதகர் தொழில் விசயமாக நண்பர்களை நம்பி வீண் போவார், சகோதரியின் கணவருடன் இணைந்து செய்யும் தொழிலும் நலிவடையும்

புதன் குரு பரிவர்த்தனை

ஜாதகர் திடீரென கல்வி மீது நாட்டமில்லாமல் போனாலும் பிற்காலத்தில் கற்பார், ஜாதகர் நிலையில்லாத தன்மை உடையவர், காதல் விவகாரங்களினால் அவமானமடைவார், தற்கொலை முயற்சிகளை மேற்கொள்வார், போதைக்கு அடிமையாவார் பிறகு அதிலிருந்து மீண்டும் வருவார், இவருடைய சகோதரி மீது பாசம் இருப்பினும் மோதல் நடந்து கொண்டு இருக்கும் ஜாதகரின் மகள் கல்வி சம்பந்தமாக காதல் சம்பந்தமாக ஜாதகர் கவலை அடைவார், ஜாதகர் புதிய விசயங்களை, மாற்றங்களை ஏற்றுக் கொள்வார்,

புதன் சனி பரிவர்த்தனை

ஜாதகர் வேலையை விட்டு விட்டு திடீரென கல்வி கற்பார், காதலினால் பணியிட மாற்றம் உண்டாகும், கால்களில் பிரச்சனை, நரம்பு வலிகள் ஏற்படும், சகோதரர் மற்றும் மகளுக்காக வாழும் இடத்தில் இருந்து வெளியேறி மற்றொரு இடத்திற்கு குடி பெயர்வார், இவரது மகள் தொழில் விசயத்தில் பல போராட்டங்களை கடந்து நல்ல நிலையை அடைவார், தொழில் விசயமாக வழக்கு, சொத்து சிக்கல்கள் உருவாகும், கால் விரல்களில் உபாதைகள் வந்து சரியாகும் காலில் தோல் அழற்சி உண்டாகும், படிப்பதில் மந்தமாக இருப்பார்,

சுக்கிரன் பரிவர்த்தனை அடைந்தால்

ஜாதகர் பெண் தோழிகள் வழியாக தேவையற்ற அவப் பெயர்களையும் மன உலைச்சலையும் சந்திப்பார், திருமண வாழ்க்கை பிரச்சனையானது, தாமத திருமணம் அல்லது

அசாதாரணமான அல்லது எதிர்ப்பான திருமணம் நடக்கும், ஜாதகர் பண விசயமாக வேறு ஊர்களுக்கு இடம் பெயர்வார், பொருளாதாரம் பற்றி பல கனவுகள் உடையவர், பலவிதமான நம்பிக்கை துரோகங்களை சந்திப்பார், உதவி செய்யப்போய் கெட்ட பெயர் மற்றும் சங்கடங்களை ஏற்படுத்திக் கொள்வார், கர்பபை மற்றும் சிறுநீரகம் சார்ந்த மருத்துவ ஆலோசனை தேவைப்படும்,

குறிப்பு; சுக்கிரன் பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது, அதையும் சேர்த்து சொல்லவும்,

சுக்கிரன் செவ்வாய் பரிவர்த்தனை

ஜாதகர் திருமண வாழ்க்கையில் நிம்மதியற்றவராக இருப்பார், தனது துணையுடன் வாழ்வதில் தடை மற்றும் தகராறுகளை எதிர் கொள்வார், ஜாதகரின் சகோதரன் இவரது பொருளாதாரம் சார்ந்த சிக்கலுக்கு காரணமாவார், ஜாதகியின் கணவரின் நடத்தை தொடர்பான அவப்பெயர்கள் உண்டாகும் ஜாதகர் உடல் ரீதியான அவஸ்தகளை அனுபவிப்பார், பொருளாதார விசயத்தில் யாரையும் நம்பாமல் இருப்பது பாதுகாப்பானது, பணம் காரணமான வழக்குகளை சந்திப்பார்,

சுக்கிரன் குரு பரிவர்த்தனை

ஜாதகர் தனிமையை விரும்புவார், சுயகௌரவம் அதிகம் கொண்டவர், பெண்கள் மற்றும் மனைவி சம்பந்தமாக தான் அவமதிக்கப் படுவதாக உணருவார், ஜாதகர் காசு விசயமாக பெயரை கெடுத்துக் கொள்வார், தொடர் பழக்கங்களுக்கு அடிமையாவார், அதிலிருந்து சில காலங்களில் அவராக மீள்வார், ஜாதகருக்கு திருமணம் தாமதமோ அல்லது அமைந்த வாழ்க்கை நிமதியின்றியோ இருக்கும், மனைவியை மிக முக்கிய நபராக

நினைப்பார், இருந்தாலும் பல சமயங்களில் அவர் இல்லாமல் வாழ்வதே நிம்மதி என்ற முடிவுக்கு வருவார்,

சுக்கிரன் சனி பரிவர்த்தனை

தொழில் மற்றும் வேலை விசயமாக மனைவியை சில காலம் பிரிந்து வாழும் நிலை ஏற்படும் திருமணம் சிக்கலானது, திருமணத்திற்காக அல்லது மனைவிக்காக தொழிலையே விட்டு விடும் அளவுக்கு போவார், இவரது மனைவி தொழில் விவகாரங்களில் தலையிட்டு சிக்கலை உண்டாக்குவார், புதிய தொழில் மற்றும் எதாவது வேலைக்கு சேர பணத்தை கொடுத்து ஏமாற்றம் உண்டாகும், கடனை அடைக்க முடியாமல் பிறரிடம் இருந்து ஒதுங்கி வாழும் நிலை வரலாம்,

செவ்வாய் பரிவர்த்தனை அடைந்தால்

கடன் வழக்குகள் தொழிலில் பாட்னர்சிப் வழியாக துரோகங்களை கடந்து வர வேண்டும், பங்கு சந்தைகளில் பணத்தை இழப்பது நடக்கும், எதாவது ஒரு வகையில் வழக்கு ஏற்படும், மருத்துவம், பொறியியல் சார்ந்த வருமானம் குடும்பத்தில் எற்படும், வெல்டிங், மற்றும் கட்டிடப் பணிகளும் செய்வார்கள் குடும்பத்தில் தீவிபத்து மின்கசிவினால் விபத்து ஏற்படலாம், மருத்துவச் செலவு அடிக்கடி இருக்கும் தனது கணவனுடன் வாழ்வதில் சிக்கலை சந்திப்பார், எலும்பு பிரச்சனை உண்டு,

குறிப்பு; செவ்வாய் பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது, அதையும் சேர்த்து சொல்லவும்,

CamScanner

செவ்வாய் குரு பரிவர்த்தனை

தேவையற்ற நட்புகளால் வருத்தமடைவார், இடம் ஆவணங்கள் வழியாக பிறருக்கு உதவி அதன் வழியாக வழக்குகளை சந்திக்கலாம், ஜாதகரின் கணவர் மிகவும் கண்ணியமானவராக இருப்பினும் சிறிது சபல சிந்தனை இருக்கும், திருமண வாழ்க்கையில் தனது கணவருடன் அவ்வப்போது சண்டை சச்சரவுகள் உண்டு, உடல்நலக் குறையினால் தனது தனித்துவத்தை இழப்பார், கடன் மற்றும் பங்குதாரர்களால் அவமானமடைவார்,

செவ்வாய் சனி பரிவர்த்தனை

ஜாதகர் தொழில் ரீதியான சிக்கல் மற்றும் பங்குதாரர், நண்பர்கள் வழி ஏமாற்றம் சகோதரர் துரோகம் போன்றவற்றை சந்திப்பார், உடல்நலன், கடன், நண்பர்களின் தூண்டுதல் காரணமாக ஏமாற்றம், வழக்குகள் காரணமாக தனது பணியை இழப்பார், தொழில் தொடர்பான நோய்கள், வேலை விசயமான வழக்குகள், சகோதரனால் தொழிலில் இடையூறு போன்றவை ஏற்படும்,

குரு பரிவர்த்தனை அடைந்தால்

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம் உண்டு, கரு கலைதல் ஏற்படும், குழந்தைகளின் வாழ்க்கை தொடர்பான எதிர்பார்ப்பு இருக்கும், ஜாதகர் சுய கௌரவம் தொடர்பாக சதா எதிபார்ப்புடனே இருப்பார், பல அவமானங்களை கடந்து வருவார், குடல் தொடர்பான சிக்கலை சந்திப்பார், நிதி சார்ந்த பணிகளால் வருமானத்தை பெறுவார்,

குறிப்பு; குரு பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை

CamScanner

பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது, அதையும் சேர்த்து சொல்லவும்,

சனி பரிவர்த்தனை அடைந்தால்

ஜாதகர் வேலை தொழில் விவகாரமாக நிம்மதி இல்லாமலும் நிலையில்லாமலும் அடிக்கடி இடம் மாறிக் கொண்டு இருப்பார், பணியிடங்களில் விரோதங்களையும், மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமையும் கொண்டிருப்பார், இவரது தொழில் சூழல் குழப்பமாகவே இருக்கும் வேலைக்காக பூர்வீகத்தில் இருந்து வெளியேறுவார், இவர் மற்றும் இவர் குடும்பத்தில் மரபு ரீதியான உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சனை உண்டு, திடீரென துர் நிகழ்வுகள் ஏற்படும் ஜாதகர் பொது நலம் சாந்த்த சிந்தனை உடையவர், பிறருக்கு தானம் செய்வார், குலதெய்வம் பற்றுதல் கொண்டவர், ஜாதகருக்கு அல்லது அவரது குடும்பத்தில் காலில் பிரச்சனை ஏற்படும், பொது சேவை பஞ்சாயத்து பணிகள் அரசியல் சார்ந்த சிந்தனைகள் உண்டு குடும்பத்தில் ஒருவருக்கு அப்படிபட்ட ஊருக்கு உழைக்கும் வேலையே இருக்கும்

குறிப்பு; சனி பரிவர்த்தனை அடைந்தால் மேலே உள்ள பலனையும் கூறிவிட்டு, அது எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றதோ அதனுடைய பலனையும் அடுத்து வரிசையாக உள்ளது, அதையும் சேர்த்து சொல்லவும்,

குரு சனி பரிவர்த்தனை

ஜாதகர் தனது சுய மரியாதையின் காரணமாக தானாகவே பணியில் சிக்கலை ஏற்படுத்திக் கொள்வார், அடிக்கடி கோபத்தால் வேலையை மாற்றிக் கொள்வார், ஆனாலும் பல சமயங்களில் தொழில் மற்றும் வேலைகளினால் மரியாதையை இழக்க நேரிடும், தொலை தூரத்தில் பணி செய்தல், தானாக முன்னேறுதல் இவரது அடையாளம்,

குறிப்பு:

மேலும் சிலருக்கு கேள்வி எழலாம் ஒரே கிரகம் அதிகாரம் அடைந்துள்ளது அதே கிரகம் வக்ரமோ அல்லது வக்ரமாகி பரிவர்த்தனையோ அடைந்துள்ளது என்றால் எப்படி என்று தோன்றலாம் இப்படி மீண்டும் மீண்டும் ஒரு கிரகம் முக்கியத்துவம் அடைகிறது எனில் அந்த ஜாதகருக்கு மிக முக்கியமான வாழ்க்கை மாற்றங்களை அந்த கிரகம் இன்னும் அதிகமாக, வீரியமாக செய்யப் போகிறது என அர்த்தம், குழப்பம் வேண்டாம், வக்ரம் ஆனால் முக்கியம், அதே கிரகம் பரிவர்த்தனையானால் மிக முக்கியம் அதே கிரகம் அதிகார ராசியிலும் இருந்தால் மிகமிக முக்கியம் அவ்வளவுதான்,

உடன் இணைந்து கெட்ட கிரகம்

ஒரு ஜாதகத்தில் ஒரு கிரகம் அதிகாரமானால் அந்த கிரகத்தின் காரகத்தின் பண்புகளை கொண்டு பலன் கூறுகிறோம், அதே போல அப்படி அதிகாரமான கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்துள்ள கிரகமும் முக்கியமானதாகும், எனவே நாம் இதில் மிக கவனமாக இருக்க வேண்டும், பின்வரும் பகுதியில் அதற்கான பலனை காண்போம்,

அதிகார கிரகத்தினை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்,

1, **பிரதான அதிகாரம்**;

வக்கிரம், பரிவர்த்தனை மற்றும் விளிம்பு இவை மூன்றும் மிக முக்கியமானவைகளாகும் எடுத்தவுடன் கவனிக்க வேண்டியது இதைத்தான்,

2, **ராகு கேது இணைவு கிரகம்**

CamScanner

ராகு உள்ள ராஇக்கு அல்லது கேது ள்ள ராசிக்கு ஒன்று, ஐந்து அல்லது ஒன்பதாவது ராசியில் உள்ள கிரகமும் அதிகாரம்

3, **பொதுவான அதிகாரம்;**

உச்சம், நீசம், ஆட்சி மற்றும் தனது ராசியை ஏழாம் பார்வையாக பார்க்கும் கிரகம்,

இந்த மூன்றும் அதிகார கிரகத்தில் உள்ள பிரிவுகள்

இதில் பிரதான அதிகார கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்களின் உறவு காரகத்துவம் வழியாக ஜாதகர் அவமானத்தினை சந்திப்பார், உதாரணமாக ஒன்றை சொல்கிறேன், ஒரு ஜாதகத்தில் எதோ ஒரு கிரகம் வக்கிரமாக உள்ளது,

உதாரணமாக செவ்வாய் வக்கிரம் அது எந்த ராசியாக இருந்தாலும், அதே ராசியில் சூரியன் இருந்தால், சூரியன் தந்தையைக் குறிக்கும் கிரகம் அல்லது மகனைக் குறிக்கும் வக்கிரம் பெற்ற கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்த காரணத்தினால் சூரியன் குறிக்கும் உறவினர் இரண்டு வாழ்க்கையினை வாழ்வார், அதாவது தந்தை அல்லது மகனுக்கு இரண்டு திருமணமோ அல்லது இரண்டு உறவுகள் உண்டாகலாம், அதாவது அந்த உறவு காரகம் ஜாதருக்கு மட்டுமில்லாமல் பிறருக்கும் உரிமையாகலாம் அல்லது பிறரால் கவரப்படலாம் அல்லது பிறருக்கும் பயன்படலாம்,

மற்றொரு உதாரணம் பார்ப்போம் ஒரு ஜாதகத்தில் செவ்வாய் உடன் ஒரே ராசியில் புதன் வக்கிரமாக உள்ளது, அது ஒரு பெண் ஜாதகம் செவ்வாய் என்பது கணவனைக் குறிக்கும், எனவே புதன் பரிவர்த்தனைக்கான பலன்களை தனியாக கூறவேண்டும், ஆனால் முக்கியமாக வக்கிரமான புதனுடன் செவ்வாய் சேர்ந்துள்ளதால் செவ்வாய் குறிக்கும் கணவருக்கு இரண்டு தொடர்புகள் இருக்கலாம், அல்லது ஜாதகிக்கு

CamScanner

ஏற்கெனவே திருமணமான நபருடன் திருமணம் நடக்கும் வாய்ப்பு உள்ளது.

இது போலவே வக்கிரமான அல்லது பரிவர்த்தனை ஆன அல்லது விளிம்பில் உள்ள கிரகங்களுடன் ஒரே ராசியில் உள்ள கிரகம் குறிக்கும் உறவினரின் பழக்கவழக்கம் எதாவது ஒருவகையில் சிக்கலாகும் அல்லது சமூகத்தால் தவறாக பேசப்படும் நிலைக்கு உள்ளாவார்கள், அதன் காரணமாக ஜாதகர் அவமானம் அடைவார். அல்லது பாதிக்கப்படுவார்,

இந்த விதியில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விசயங்கள் ஒரு கிரகம் வக்கிரமாக இருந்தால் அந்த கிரகம் உள்ள ராசி மற்றும் அதற்கு பின் (12) ராசியில் எந்த கிரகம் இருந்தாலும் மேற் சொன்ன பாதிப்புகள் உண்டு, உதாரணமாக விருச்சகத்தில் குரு வக்கிரம், விருச்சகத்தில் சுக்கிரன், துலாம் ராசியில் சூரியன், இதே நிலையில் வக்கிரமான குருவுடன் இணைந்த காரணத்தால் சுக்கிரன் குறிக்கும் மனைவியின் பெயர் கெட்டுப் போகலாம் அல்லது ஜாதகர் ஏற்கெனவே திருமணம் ஆகி கணவனைப் பிரிந்த ஒரு பெண்ணை மணக்கலாம், அடுத்து வக்கிரமான குரு பின் ராசியான துலாமையும் இயக்கும் எனவே துலாம் ராசியில் உள்ள சூரியனும் பாதிப்படையும் ஆகவே ஜாதகரின் தந்தையும் வேறு உறவில் இருக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்களுக்கு சந்தேகம் வரலாம் ஒரு வேளை விருச்சகத்தில் உள்ள குரு வக்கிரமானதால் மட்டுமே இப்படியா அல்லது வேறு கிரகம் அங்கு இருந்து வக்கிரமானாலும் இதேதானா என்று, இந்த விதியில் வக்கிரமானது எந்த கிரகமானாலும் இதே பலன்தான், எந்த கிரகமானாலும் அது எந்த ராசியில் இருந்தாலும், வக்கிரமோ அல்லது பரிவர்த்தனையோ அல்லது விளிம்பு நிலையில் இருந்தாலும் அந்த கிரகம் உள்ள ராசியில் உடன் இணைந்த கிரகம் குறிக்கும் உறவுகளுக்கு இரண்டு திருமணமோ அல்லது தேவையற்ற தொடர்புகளுக்கோ வாய்ப்புள்ளது,

மற்றொரு உதாரணம் ஒரு பெண் ஜாதகத்தில் குரு மற்றும் செவ்வாய் இரண்டும் ஒரே ராசியில் இருந்து வக்கிரமும் ஆகி இருக்கிறது, இதில் குரு வக்கிரமான செவ்வாயுடன் இணைவதால் ஜாதகிக்கும் இரண்டு வாழ்க்கை, செவ்வாய் வக்கிரமான குருவுடன் இணைவதால் ஜாதகியின் கணவருக்கும் இரண்டு வாழ்க்கை, இந்த நிலையில் உள்ள ஜாதகிக்கு இரண்டாவது திருமணம் நடந்துள்ளது, அவருடைய கணவனும் ஏற்கெனவே திருமணமானவர்,

அதே போல விளிம்பு கிரகங்களுடன் இணைந்த கிரகங்களிலும் சில முக்கியமான விசயங்கள் கவனிக்க வேண்டும், விளிம்பு கிரகங்கள் என்பது ஒரு ராசியில் ஆரம்பம் அல்லது இறுதி இரண்டு பாகைகளில் இருப்பது ஆகும், அவ்வாறாக உள்ள கிரகங்கள் இரண்டு ராசிகளில் உள்ள கிரகங்களையும் உடன் உள்ள கிரகங்களைப் போல பாதிக்கும், உதாரணமாக சிம்ம ராசியில் சூரியன் மற்றும் சனி இருக்கிறது, கன்னியில் குரு உள்ளது, சிம்ம ராசியில் உள்ள சனி 28 பாகை 58 நிமிடங்களில் உள்ளது அப்படி என்றால் அது கன்னி ராசிக்கு மிக அருகாமைக்கு சென்று விட்டது, ஆகவே அந்த சனி சிம்ம ராசியிலுள்ள சூரியனை பாதித்து தந்தைக்கு இரண்டு திருமணம், கன்னி ராசியில் உள்ள குருவையும் பாதித்து ஜாதகருக்கும் இரண்டு தொடர்புகளை வழங்கிவிடும்,

வக்கிரம், விளிம்பு, பரிவர்த்தனை கிரகத்துடன் இணைந்த கிரகம் அது குறிப்பிடும் உறவுகள் தவறாக இருக்கலாம், அதே போல அந்த கிரகம் குறிப்பிடும் மற்ற விசயங்களும் பிறரால் வசமாக்கபடலாம், உதாரணமாக வக்கிரமான எதோ ஒரு கிரகத்துடன் ஒரே ராசியில் புதன் இணைந்து இருக்குமானால் ஜாதகரின் நிலங்கள் பிறரால் அபகரிக்கப்படலாம், இது போலவே வக்கிரம், விளிம்பு, பரிவர்த்தனை பெற்ற கிரகத்துடன் சனி இணைந்து இருந்தால் ஜாதகர் தொழில் பிறருக்கு பயன்படும்,

CamScanner

சூரியன்	-	தந்தை, மகன், மாமனார்
சந்திரன்	-	தயார், மாமியார்
புதன்	-	சகோதரி, மகள், நாத்தனார்
சுக்கிரன்	-	மனைவி, தோழி
செவ்வாய்	-	கணவன், சகோதரன்
குரு	-	ஜாதகர்
சனி	-	மூதாதையர்,

மேற்கண்ட கிரகங்கள் எதாவது வக்கிரம், விளிம்பு, பரிவர்த்தனை கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்து இருந்தால் இதில் குறிப்பிட்ட உறவினருடைய நடத்தை மீது அவப்பெயர் உண்டாகும்.

குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஜாதகத்தில் முக்கியமாகும் இணைந்த கிரகம்

அடுத்து பொதுவான அதிகார கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்களை காணலாம், பொதுவான அதிகார கிரகம் என்பது ஆட்சி பெற்ற கிரகம், தனது ராசிக்கு ஏழாம் ராசியில் உள்ள கிரகம், உச்சம் அல்லது நீசமான கிரகம், இந்த நான்கில் ஏதாவது ஒரு நிலையில் ஒரு கிரகம் இருந்தால் அது பொதுவான அதிகாரம் ஆகியுள்ளது எனப் பொருள், அவ்வாறு பொதுவான அதிகாரமான கிரகத்துடன் ஒரே ராசியில் இணைந்த கிரகம் அவரது குடும்பத்தில் உள்ள எல்லாருடைய ஜாதகத்திலும் மிக முக்கியமான அதிகார கிரகமாக இருக்கும் அவரது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மிக முக்கிய சிக்கலே அந்த கிரக காரகத்தினால் மட்டுமே இருக்கும்,

உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சிம்மத்தில் சூரியன் மற்றும் புதன் இதில் சூரியன் ஆட்சி, ஆனால் புதனுக்கு சிம்ம ராசியில் எந்த ஒரு சிறப்பு தகுதியும் இல்லை, இருப்பினும் ஆட்சியான சூரியனுடன் ஒரே ராசியில் உள்ள காரணத்தினால் அந்த புதன் மறைமுக அதிகாரமாகிவிட்டது, ஆகையால் அவரது குடும்பத்தில் அனைவருக்கும் புதனுடைய பெயர்கள் இருக்கும், அனைவரும் புதன் அதிகாரமான பலன்களை அனுபவிப்பார்கள், ஆனால் அந்த மறைமுக அதிகாரம் ஜாதருக்கு பெரிய பாதிப்பை வழங்காது,

குறிப்பு ; வக்கிரமான கிரகத்துடன் ஒரு ராசியில் இணைந்த கிரகம் குறிக்கும் உறவினரை ஜாதகை விரைவில் இழந்து விட நேர்கிறது, உதாரனமாக சூரியனுக்கு 1,5,7,9 ல் சந்திரன் இருந்தால் ஜாதக்ரின் தாய் குடும்ப பொறுப்புகளை எடுப்பார், தந்தையின் அனுகூலம் குறைவு, அதே சமயத்தில் சந்திரனுடன் ஏதாவது வக்கிரமான கிரகம் இணைந்து இருந்தால் அப்படி பொறுப்பில் ருந்தாலும் கூட தாயருக்கு அதிகமான உடல் நலக்கோளாறு வந்து விடுகிறது, து மாதிரி ஜாதக அமைப்பு உள்ளவர்களுக்கு தாயிருப்பதில்லை, சூரியனுடன் வக்கிரமான கிரகம் சேர்ந்து இருந்தால் பெரும்பாலும் தந்தி இருப்பது இல்லை,

பலனறியும் நுட்பம்

ஒரு ஜாதகத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தக்க கீழ்கண்ட கிரக நிலைகளை கருத்தில் கொண்டு, அதனுடன் இணைவு பெற்ற கிரகங்கள் நடப்பு கிரகங்களை இந்த கிரகங்களை தூண்டும் காலம் போன்வற்றை அறிந்து பலன் கூற வேண்டும்,

தந்தை -சூரியன்,

தாய் - சந்திரன்,

CamScanner

மகன் - சூரியன்,

மகள் - புதன்,

சகோதரி - புதன்,

சகோதரன் - செவ்வாய்,

அசையா சொத்து - புதன்,

வீடு - சந்திரன்,

மனைவி -சுக்கிரன்,

கணவன் - செவ்வாய்,

பணி மற்றும் தொழில் - சனி,

கல்வி -புதன்,

காதல் -புதன்,

திருமணம் - சுக்கிரன்,

பணவரவு - சுக்கிரன்,

சொகுசு வாகனம்- சுக்கிரன்,

தொழில் சார்ந்த வாகனம் - சந்திரன்,

தொழில் வேலை துவங்க - சூரியன்

கனரக வாகனம் - செவ்வாய்,

செல்வம் - சுக்கிரன்,

குழந்தை பிறப்பு - சூரியன்,

வழக்குகள் - செவ்வாய்,

சொத்து சார் வழக்குகள் - புதன்,

CamScanner

கடன் - செவ்வாய்,

பங்கு தாரர் - செவ்வாய்,

உடல் நலம் - செவ்வாய்,

தந்தை வழி பாட்டன், பாட்டி - ராகு,

தாய் வழி பாட்டன், பாட்டி - கேது,

ஒரு ஜாதகத்தில் உள்ள பலன்களை அறிய பல்வேறு காரணிகளைச் சார்ந்து ஒவ்வொரு பலன்களையும் கூற வேண்டியிருக்கிறது, உதாரணமாக, ஒரு ஜாதகத்தில் ஒரு குறிப்பிட்ட கிரக இணைவுக்கு பலன் கூறுகிறோம், அந்த பலனை அந்த ஜாதகர் மட்டுமே அனுபவிக்கும் அல்லது அந்த ஜாதகரின் தனிப்பட்ட முடிவுகள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களை சார்ந்து இருக்கலாம், அவர் ஒரு ஊருக்கு போகிறார், அங்கு ஓட்டலில் சாப்பிடுகிறார், சாப்பிட்ட பிறகு பாக்கெட்டில் உள்ள பர்ஸ் தொலைந்து விட்டதை அறிகிறார், இதில் ஜாதகர் மட்டுமே சம்பந்தபட்டுள்ளார், அடுத்து இந்த சுழலில் சம்பந்தப்பட்டவர் ஓட்டல் முதலாளி, அதற்கு அடுத்து அந்த பர்ஸை திருடிய நபர்,

ஒரு வேளை பர்ஸ் திருடப்படாமல் கீழே விழுந்து தவறி இருந்தால் திருடனுக்கும் இதில் தொடர்பு இல்லை, மேலும் அந்த ஓட்டல் கடைக்காரர் யாரென இதற்கு முன் தெரியாது, இனி அவரை சந்திக்காமல் கூட காலம் போகலாம், இப்போது அந்த ஜாதகருக்கு கூறும் பலன் அந்த ஜாதகரின் ஜாதகத்தை மட்டுமே முழுமையாக பார்த்துக் கூற வேண்டும் ஏனெனில் அந்த சம்பவம் பெரும்பாலும் ஜாதகரை மட்டுமே சார்ந்தது,

ஓட்டல் முதலாளி இதில் பங்கெடுத்தாலும் கூட ஜாதகர் தனது வங்கி கார்டு வழியாக அல்லது போன் பே வழியாக பணம் செலுத்தி இருந்தால் அந்த ஓட்டல் காரரும் இதில் சம்பந்தம் இல்லை, எனவே ஜாதகரின் நிலையை மட்டுமே புரிந்து கொள்ள ஒரு விதியோ அல்லது சில விதிகளோ இருக்கலாம், அதே விதி

மற்றொரு ஜாதகத்தில் தென்பட்டால் அதே பலன் அந்த ஜாதகருக்கும் நடக்கலாம், அவரும் தனது பணத்தை தொலைத்துவிட்டு அவதிப்படலாம்,

ஆனால் இதை வேறு மாதிரி பேசலாம், இப்போது ஒரு ஜாதகத்தில் சூரியன் சந்திரன் ஒரே ராசியில் அல்லது ஒன்றுக்கு ஒன்று 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் இருக்கிறது, மேலும் சூரியன் சிம்மத்திலும் இருக்கிறது, எனவே நாம் ஜாதகருக்கு தந்தையின் ஆதரவு அனுகூலம் போன்றவை இருக்காது ஜாதகர் தந்தையுடன் இருப்பதில் சிக்கல், தாயின் வாழ்க்கை தனியாக நின்று குடும்பத்தை வழிநடத்தும் நிலை உண்டாகும், பெரும்பாலும் ஜாதகரின் தந்தை ஏதவது ஒரு வகையில் ஜாதகரை பிரிந்து விடுவார் என நாம் யூகித்து பலனை கூறுவோம், இது சரியாக இருக்கலாம், அல்லது சற்று மாறி இருக்கலாம், அல்லது முற்றிலுமாக ஏற்புடையதாக இல்லை என ஜாதகரிடம் இருந்து மறுப்பு வரலாம், நாம் முதலில் பார்த்தது போல இந்த பலன் ஜாதகரின் நிலையை மட்டும் சார்ந்ததாக இல்லை, இதே அமைப்புள்ள பலருக்கு ஒரே போல இருக்க வேண்டும் என அவசியம் இல்லை,

ஜாதகர்களின் தாயின் ஜாதகங்கள் வெவ்வேறாக இருக்கலாம், ஒரு ஜாதகரின் தாயின் ஜாதகத்தில் அவருக்கு விவாகரத்துக்கான அமைப்பு இருக்கலாம், மற்றொரு தாயின் ஜாதகத்தில் கணவர் வெளிநாட்டில் இருப்பது போல பலன் இருக்கலாம், அது போல ஜாதகரின் சகோதர சகோதரிகள், மேலும் முக்கியமாக ஜாதகரின் தந்தை ஜாதகம் என பல்வேறுபட்ட ஒவ்வொரு தனிநபரின் ஜாதக அமைப்பின் ஒட்டு மொத்த பலனாக கூறும் போது முடிந்தவரை குடும்பத்தினர்கள் ஜாதகங்கள் மொத்தத்தையும் பார்த்து இன்னும் சரியாக உறுதிப்படுத்தி விட்டு பலன் கூறலாம், அதுவரை அந்த விதிகளின் பலன்களை அனைவருக்கும் பொருந்தும் படியான பொதுவான சொல்லாடலில் பலன்களை கூறலாம், உதாரணமாக, மேற்கண்ட ஜாதக

அமைப்பிற்கு ஜாதகரின் தந்தை தவறி விடுவார், அவர் பயனற்றதாகி விடுவார், தாய் கணவனை பிரிந்து விடுவார், என மொட்டையாக கண்களை மூடிக்கொண்டு பலன் கூறாமல், ஜாதகரின் ஜாதக அமைப்பின் படி ஜாதகர் தனது தந்தையுடன் இணக்கம் அற்றவராகவே இருப்பார், ஜாதகர் தன்னிச்சையாக வாழும் சூழல்களை சந்திப்பார், ஜாதகரின் தாயார் மிகவும் ஆளுமை குணம் நிறைந்தவராவார், சில சமயங்களில் குடும்பத்தைக் கூட நிர்வகித்துக் காட்டுவார், ஜாதகரின் தாயார் ஜாதகரை தானாக தன்னிச்சையாக தலைமை தாங்கி வழி நடத்தும் அளவுக்கு திறமை கொண்டவர், எனக் கூறி சில தகவல்களை உறுதி செய்து கொண்டுதான் பலன் கூறவேண்டும், ஒரு விதியை அப்படியே பலனாக கூறுவது சரியானதாக இருப்பினும் நாம் இயந்திரமோ கணினியோ இல்லை சூழல், பலன் கேட்பவரின் மனநிலை என அனைத்தையும் கருத்தில் கொண்டும் பலன் கூற வேண்டும், ஜாதக பலன் கூறுவது என்பது அவர் வாழ்க்கை பற்றி அவருக்கு தெரியாத மற்றும் அவர் எதிர்பார்த்து காத்துக் கொண்டுள்ள நிகழ்வுகளை முன்கூட்டியே கற்பனையாக கூறும் ஒரு கலையாகும், இது ஜோதிடரின் கற்பனையை மட்டும் சாராமல் ஜாதகரின் கற்பனையையும் சார்ந்ததாகும்,

உதாரணமாக ஜோதிடர் அடிக்கடி பார்த்த ஒரு இடம் அதை ஜாதகருக்கு விளக்குகிறார், ஒரு திருமண மண்டபம் அதன் அருகே பெரிய பூ மரம், அகன்ற சாலை, சாலை ஓரத்தில் ஒரு கல் வரிசை வைத்து கட்டிய நடை மேடை அதில் ஒரு பெண் ஓரமாக பூ விற்கிறாள், இடது பக்கமாக ஒட்டிய தெரு முனையில் ஒரு பெட்டிகடை, சற்று தொலைவில் சோடியம் விளக்கு வெளிச்சத்தில் கார் பார்க்கிங் அதனை கடந்து சற்று இடது பக்கம் ஒரு மின்கம்பம் அதன் அருகே ஒரு ஏடிஎம் அதற்கு அருகில் ஒரு பேன்ஸி ஸ்டோர் அதன் முன் பகுதியில் ஒரு தார்ப்பாய் கட்டியிருக்கிறது அந்த இடத்திற்கு போவீர்கள் என பலன்

CamScanner

கூறுகிறார், இதையெல்லாம், ஜாதகர் புரிந்து கொள்ள வேண்டும் என கூறுகிறார்,

உதாரணமாக ஒரு சிறிய தோட்டம் அதை கடந்து செல்ல வேண்டும் அதன் அருகில் ஒரு நீர் நிலை போல இருக்கிறது அங்கு போகும் வழியில் அடர்ந்த மரம் கடக்க வேண்டும் ஒரு மூங்கில் மரம் அதை தாண்டி சற்று தொலைவு யாரும் பெரிதாக செல்லாத வழித்தடம் அது கிழக்கு பக்கமான இடம் அதற்கு முன்புறம் கழனி வயல், வாழை இருந்த இடம், தோப்பு, வேப்பமரம் சில மாமரம் ஒன்று இரண்டு தேக்கு மரம் அருகில் இருக்கிறது, ஆள் உயர எலுமிச்சை மரம் அதன் முன் புறம் ஒரு சிலை அதில் இடது பக்கம் சிறியதாக சேதமாகி இருக்கிறது, உயரமான சிலை கருப்பு அல்லது மாடன் முனி அய்யனார் போல இருக்கிறது, அது மேடையில் மீது இருக்கிறது, அதற்கு சற்று பின் தள்ளி வலது பக்கமாக ஒரு மரம் அது வெட்டி மீண்டும் தளைந்துள்ள மரம் அதில் மாடம் இருக்கிறது சிறியதாக உள்ளது, அதில் நாகர் பிரதிஷ்டையாகி இருக்கிறது, நாகம்மாள் போல இருக்கிறது, அதற்கு வலது புறமாக ஒரு அம்மன் அதாவது பெண் தெய்வமாக இருக்கிறது, அது மட்டுமல்லாமல் வழி வழியாக ஒரு கன்னி தெய்வ வழிபாடும், கோயில் வழிபாடு சார்ந்த எதோ பொருள் அல்லது பெட்டி இருக்கும் பூர்வீக வீடு இருந்துள்ளது,

ஒருவேளை படித்துக் கொண்டுள்ள உங்களது குல தெய்வம் பற்றிய தகவலாகக் கூட நான் கூறிய தகவல் இருகலாம், இந்த தகவலை சொல்லும் போது உங்கள் அனுபவத்தின் வழியாக நீங்கள் பார்த்த பழகிய இடங்களைப் பற்றி யோசிக்க முடியும், அது போல அந்த ஜோதிடர் ஒரு இடம் பற்றி விவரிக்கிறார், அந்த இடத்தை தனக்கு தெரிந்த கற்பனைகளோடு விவரிக்கிறார், ஆனால் ஜாதகர் அதை அவருக்கு தெரிந்த மாதிரி புரிந்து கொள்வார், இரண்டு புரிதலும் தோராயமாக ஒன்றாக இருந்தால் பிரச்சனை இல்லை, உதாரணமாக ஜோதிடருக்கு தெரிந்த மீனாட்சி என்ற அழகான பெண் இருக்கிறார், ஜாதகர்

தனக்கு வரும் பெண் எப்படிப்பட்டவர் என கேட்கிறார், ஜோதிடர் மீனாட்சி என்ற ஒரு பெண் தெரியுமா அவரைப்போல வரன் வரும் என்கிறார், ஆனால் ஜாதகருக்கு தெரிந்த மீனாட்சி வேறு அவர் ஊருக்குள் நுழையும் இடத்தில் உள்ள மதுபான (சாராய) கடையின் அருகில் சுண்டல் விற்கும் பெண், இப்போது ஜாதகர் என்ன புரிந்து இருப்பார், எனவே கூடுமானவரை ஜாதகருக்கு நாம் சொல்லும் பலன்கள் சரியாக சென்று சேர்கிறதா என்பதை உறுதி படுத்திக்கொள்ள வேண்டும்,

அடுத்து வரும் பகுதிகள் பலன்கள் கூறுவதற்கான பகுதிகளாகும், அதில் ஒவ்வொரு கிரகமும் குறிப்பிட்ட ராசிகளில் இருந்தால் அதற்கான பலன்களை கொடுத்துள்ளேன், அந்த நிலையில் ஒரு கிரகம் இருக்குமானால் அதில் உள்ள பலன்களை கூறலாம், மேலும் ஒவ்வொரு கிரகமும் எந்தெந்த ராசிகளில் இருந்தால் அதிகார நிலையில் இருக்கும் என்று படமும் கொடுத்துள்ளேன், இந்த பகுதியில் ஒரு கிரகம் அதிகாரம் ஆனால் அதற்கான பலன்களாக அந்த கிரகத்திற்கான பலன்களைக் கூறலாம், மேலும் ஒருவரின் பெயரின் மூலமாக கண்டறிந்த கிரகதிற்கு இதில் வரும் பலன்களை கூறலாம், மீண்டும் ஒருமுறை அதிகாரம் பெறும் விதிகளை இங்கு தருகிறேன்,

அதிகார கிரகம் அறியும் விதிகள்

- வக்ரமான கிரகம்,
- பரிவர்த்தனை பெற்ற கிரகம்,
- ராசியின் விளிம்பில் நின்ற கிரகம்
- வக்ரமான கிரகம், விளிம்பு நிலையில் உள்ள கிரகம் மற்றும் பரிவர்த்தனை அடைந்த கிரகங்களுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்கள்,

- ராகு மற்றும் கேது உள்ள ராசிக்கு திரிகோணத்தில் (5,9 ஆம் ராசிகளில்) உள்ள கிரகம்
- ஒரு ஜாதகத்தில் தனது சொந்த ராசியில் அமர்ந்த கிரகம்,
- சொந்த ராசிக்கு ஏழில் அமர்ந்த கிரகம்,
- உச்சம் மற்றும் நீச்ச ராசியில் உள்ள கிரகம்,
- சொந்தராசி, அல்லது ஏழாம் ராசி மற்றும் உச்ச நீச ராசிகளில் உள்ள கிரகங்களுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்கள்,
- ஒருநாள் முன் பின் தேதிகளில் மாற்றமான கிரகம்,

இவ்வாறு அதிகாரம் பெற்ற கிரகங்கள் வழியில் ஜாதகர் எல்லா அனுபவங்களையும் அடைவார், நன்மை மற்றும் தீமை இரண்டுமே, அதுமட்டுமல்லாமல் அந்த ஜாதகரின் மிக முக்கியமான தேடுதல் சிக்கல் வேதனை ஆச்சர்யம் ஆசைகள் எல்லாமே அந்த கிரகத்தின் காரகமாகவே இருக்கும், அந்த ஜாதகர் வாழ்க்கை முழுவதும் அந்த கிரகத்தின் காரகம் அதாவது உறவு, வேலை பொருட்கள் என அனைத்திலும் அதை மட்டுமே நோக்கி ஒடிக் கொண்டே இருப்பார், கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்,

ஒரு ஜாதகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அதிகார் கிரகங்கள் இருக்கும் அப்போது எதை முதலில் கூறுவது என்ற குழப்பம் உருவாகும், எனவே மேலே குறிப்பிட்ட விதிகளை சில வரிசையில் கையாள வேண்டும் முதலில் வக்கிரம், பரிவர்த்தனை மற்றும் விளிம்பு கிரகங்களுக்கான பலன்கள் முக்கியமானது, அதன் பிறகு அதனுடன் ஒரே ராசியில் இணைந்த கிரகங்களை பற்றி பேச வேண்டும், அதற்கு அடுத்தபடியாக ராகு மற்றும் கேது உள்ள ராசிக்கு 1,5,9 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களைப் பற்றி கூற வேண்டும், அடுத்து ஆட்சி, தனது ராசிக்கு 7 ஆம் ராசியில் உள்ள கிரகம், உச்சம், மற்றும் நீசமான கிரகங்களை பேச வேண்டும், இறுதியாக அதிகாரமான கிரகங்களுடன் இணைந்த கிரகங்களை பற்றி கூற வேண்டும்,

இந்த விதிகளின் அடிப்படையில் உள்ள கிரகத்திற்கு பின்வரும் பகுதியில் உள்ள பலன்களை கூறலாம், மேலும் வக்ரம், பரிவர்த்தனை, விளிம்பு மற்றும் அத்னோடு ஒரே ராசியில் உள்ள கிரகத்திற்கான சிறப்பு பலன்களும் முன்பு பார்த்தோம், அதையும் இந்த பலன்களோடு இணைத்துக் கூறவேண்டும்,

மேலும் இதில் அதிகாரம் பெறும் கிரகங்களுக்கு அந்த கிரகம் குறிக்கும் பெயருள்ளவர்கள் குடும்பத்தில் இருப்பார்கள், உதாரணமாக சந்திரன் மேற்கண்ட விதிகள் அடிப்படையில் அதிகாரம் பெற்று இருந்தால் அவர் குடும்பத்தில் தேவி, ராணி, பாரதி, மதி, சிந்து, ஆர்த்தி, பூரணி, ஜனார்த்தனன், திவ்யா, கிருஷ்ணன், காந்தி, போன்ற பெயர்கள் இருக்கும்,

ஒரே ஜாதகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கிரகங்கள் அதிகாரம் அடைந்து இருந்தால் ஒவ்வொரு கிரகத்தின் பலனையும் கூற வேண்டும் அதில் குழப்பம் வேண்டாம், ஒன்பது கிரகங்களும் அதிகாரம் ஆனாலும் அனைத்து கிரக பலன்களையும் கூறவேண்டும், மேலும் ஒரு ஜாதகத்தில் எல்லா கிரகங்களும் அதிகாரம் பெற்று இருந்தால் ஜாதகரின் பெயரைக் கேட்டு அதற்கான கிரகம் மிக முக்கியமானதாக கருதி அந்த கிரகத்திற்கான பலன் கூறவேண்டும் அதேபோல இரட்டையர்கள் ஜாதகமாக இருந்தால் இருவருக்கும் ஒரே ஜாதகம் இருக்கும் ஆனால் பெயர் வெவ்வேறாகத்தான் இருக்கும், பெயரை வைத்து ஒவ்வொரு ஜாதகத்திலும் எது முக்கிய கிரகம் என ஒரு நொடியில் கண்டுபிடிக்கலாம், அதற்கு பலன் கூறுவது நமது முறையில் மிக எளிதானது, மேலும் ஒரு பெயர் இரண்டு கிரகங்களின் கூட்டுப் பெயராக வரலாம் அப்போது இரண்டு கிரகங்களின் பலன்களையும் கூறவும் அதோடு சேர்த்து கிரக இணைவுக்கான பலனையும் கூறலாம்,

CamScanner

அதிகாரகிரக பலன்கள்

பின்வரும் பகுதியில் பொதுவாக அதிகாரம் பெறக்கூடிய கிரகங்களை எளிதாக கண்டறியும் படம் அதோடு அதிகார கிரகங்களுக்கான பொது பலன்களையும் கொடுத்துள்ளேன், அதன் அடிப்படையில் ஒரு கிரகம் அதிகாரமானால் அந்தப் பகுதியில் உள்ள அனைத்து பலன்களையும் கூறலாம், இருப்பினும் முதன்மையாக அதிகாரமாகும் வக்ரம், பரிவர்த்தனை, விளிம்பு நிலையில் உள்ள கிரகங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் அதன் பிறகு ராகு கேதுவுக்கு 1,5,9 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களின் பலன்களையும் கவனித்து அதோடு பின்வரும் பகுதியில் வரும் பலன்களையும் இணைத்து கூறவேண்டும்,

சூரியன்

	சூரி		
சூரி			
			சூரி
		சூரி	

படத்தில் உள்ளது போல சூரியன் மேசம், சிம்மம், துலாம், கும்பம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம்

அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; சூரியன் விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

சூரியன் பரிவர்த்தனை பெற்றால் தந்தை தாய் வாழ்க்கை சிக்கலானது, தந்தையாலும் சிலசிக்கல் ஏற்படும், இந்த நிலையில் உள்ள சூரியனுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், அரசுப் பணி, சொந்த தொழிலில் இருப்பார்கள்,

நற்பலன்கள்:

ஜாதகர் யாருக்கும் அடிமையாக இருக்கமாட்டார், தனது தனித்துவத்தை ஆளுமையுடன் வெளிக்காட்டுவார், தலைமை பண்புகள் நிறைந்தவர், ஜாதகரின் குடும்பத்தில் அரசுப்பணி அல்லது சொந்தத் தொழில் அல்லது தந்தையின் தொழில் செய்பவர்கள் உண்டு, இவரது தந்தையும் மிகவும் முக்கியமான நிலையில் இருப்பார், இவர் சில காலங்களில் அரசியல் ஈடுபாடு கொள்வார், எந்த ஒரு செயலானாலும் சாதுர்யமாக அணுகக் கூடியவர், அரசுவழி ஆதாயம் இருக்கும், சுத்தமாக இருக்கும் இடங்களை விரும்புவார், தான் கொடுத்த வாக்கை காப்பாற்றும் சிந்தனை அதிகம் நிறைந்து இருக்கும், வெளிக்காட்டிக் கொள்ளாத அமைதியும் கம்பீரமும் கண்ணியமும் கொண்டவர், சுயமாக எதையும் உருவாக்கி தானகவே தலைமை ஏற்கும் பண்பு கொண்டவர், விடா முயற்சியுடன் இருப்பார்,

சிக்கலான பலன்கள்:

இவர் டென்சன் நிறைந்து காணப்படுவார், குழந்தை தாமதம் போன்ற பிரச்சனைகள் இருக்கும், தந்தை இவரது குடும்பத்திற்கு மிக முக்கியத்துவமானவராக இருப்பினும் தந்தையின் அனுகூலம் இவருக்கு குறைவாகவே இருக்கும், தந்தையுடன் இணக்கமற்ற நபராக இருப்பார், எப்போதும்

குழந்தைகள் பற்றிய கவலை இருந்து கொண்டே இருக்கும், அரசினால் தொல்லைகளும் இருக்கும், அதே சமயம் அதை நிறைவேற்றுவதிலும் சிக்கல் இருக்கும், இவரும் குடும்பத்தில் மிக முக்கியமானவராக இருப்பார் இருப்பினும் அதற்கு இடையூறுகள் ஏற்படும், மகனுடன் கருத்து வேறுபாடுகள் உண்டு, மகனும் சுய கௌரவத்திற்காக இவருடன் பேசுவதில் சிக்கல் ஏற்படும்,

பிரதான தன்மைகள்;

சூரியன் ஜாதகத்தில் தந்தை, மகன், உருவாக்கும் திறன், ஆளுமை போன்றவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை நோக்கியே சிந்திப்பார்,,

பொது தன்மைகள்;

இவர் மேற்பார்வை, நிர்வாகத் திறன், தைரியம், அஞ்சாமை, தன்னம்பிக்கை, மதிப்பு, விடாமுயற்சி, புகழ், ஆளுமைதிறன், தலைமை பண்பு, கௌரவம், அடக்கியாளுதல், செல்வாக்கு போன்ற தன்மைகளை கொண்டவராக இருப்பார்,

அருகில் உள்ள இடம் ;

இவர் வசிக்கும் இடம் தலைநகரம் அல்லது அதற்கு அருகாமையில் உள்ள பகுதியாக இருக்கலாம், அரசு அலுவலகம், மரவேலை மற்றும் தச்சர் பணிகள் நடக்குமிடம், பாரஸ்ட் ஆபீஸ், ஆசாரித் தெரு, குடோன், கோயில் நிலம், பந்தல், மேடை, அரண்மனை, குகை, உயரமானபகுதி, நிர்வாக அலுவலகம் போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த

CamScanner

சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ; மேற்கு பார்த்த வாசல்

குலம், சாதி ; சௌராஷ்ட்ரா, பிராமனர், சைவர், கன்னட, விஷ்வ கர்மா, ஆச்சாரி, வன்னியர் படையாட்சி, வேவுக்காரர், மறவர், சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; தாமிரம்

நிறம் ; ஆரஞ்சு

துணி ; முரட்டுத் துணி

பழம் ; ஆப்பிள்

தானியம் ; கோதுமை, மிளகு, தனியா

மலர் ; செந்தாமரை, சூரியகாந்தி,

மரம் ; வில்வம், எருக்கு

வடிவம் ; சதுரம்

தூரம் ; 120 கி.மீட்டர்

எண் ; 1, 5

மரு,வடு ; இடுப்பு பகுதியில் உண்டு

இது தவிர இன்னும் சில தகவல்கள் கிரக காரக பகுதியில் அளித்துள்ளேன், இந்த தகவல்கள் இந்த கிரகம் அதிகாரம் பெறும் போது ஜாதகரின் வாழ்க்கையில் எதாவது ஒருவகையில் பங்காற்றும், ஜாதகருக்கு மேலே குறிப்பிட்ட பகுதியில் மச்சம் தழும்பு இருக்கும், ஜாதகருக்கு அதில் குறிப்பிட்ட தூரத்தில்

CamScanner

வேலை கிடைக்கும், ஜாதகருக்கு பிடித்த பழமாக அதில் உள்ள பழம் இருக்கலாம், ஜாதகருக்கு அடிக்கடி வரும் உடல்நலப் பிரச்சனையின் போது அவர் அந்த பழத்தை, தானியத்தை உண்டால் சரியாகலாம், அதில் குறிப்பிட்ட சில துணி, உலோகம் போன்றவற்றை ஜாதகர் பயன்படுத்தும் போது பாதுகாப்பாக அல்லது ராசியானதாக உணரலாம், அல்லது ஜாதகரின் மிக முக்கியமான தருணத்தில் அந்த பழத்தின் பங்கு இருக்கலாம், இதில் உள்ள தகவல்கள் ஜாதகருக்கு மட்டுமே இல்லை அவருக்கு நெருக்கமானவருக்கு கூட இருக்கலாம், ஜாதகர் முதலில் தனக்கான துணையை சந்திக்கும் போது மேல்கண்ட சில தகவல்களை சந்திக்கலாம் இவை அனைத்தும் அதிக தகவலுக்காக மட்டுமே, உங்களின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ளவும், இதே போல ஒவ்வொரு கிரகத்தின் பகுதியிலும் அளித்துள்ளேன்,

பொருள்கள்;

இவர் அதிக விலை மதிப்பு மிக்கவை, தலைமை நாற்காலி, பிரகாசிக்கும் பொருட்கள், விலை உயர்ந்த உலோக பொருட்கள், தந்தை வழி சொத்து, கண்ணாடி, பல், மாணிக்கம் போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப் படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

தொழில்கள்;

அரசுப்பணி, அரசு உதவி பெறும் தொழில்கள், தந்தை தொழில், பூர்வீகம், அரசியல், பல் மருத்துவம், மருத்துவர், அறுவை சிகிச்சை, மகன் தொழிலில் உதவி, அனுபவ தொழில், புரோகிதம், பொன் வியாபாரம், மரம் வேலை, ஆசாரி, நூற்புதொழில், தலைமை நிர்வாகம், காவல், இராணுவம், இரத்தின வியாபாரம், துப்பறிதல், நீதிபதி, தலைமை, சமூகசேவகர், மந்திரி, ஆராய்ச்சி பணிகள், பேச்சாளர் மேற்கண்ட

CamScanner

தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

உறுப்புகள்;

பொதுவாக சூரியன் தலையை குறிக்கும், வலதுகண் (ஆண்களுக்கு), இடதுகண் (பெண்களுக்கு), கணையம், பல் மற்றும் எலும்புகள், கபாலம் விந்தணு உற்பத்தி, ரோமங்கள், போன்ற உறுப்புகளை குறிக்கும்,

நோய்கள்;

வலது கண் குறைபாடு, அக்கி, எலும்பு தொடர்பான நோய்கள், பல் உபாதைகள், மூளையில் பிரச்சனை, கால்சியம் குறைபட்டினால் வரும் கோளாறுகள், கடினமான பகுதி உடைந்து சிதறுதல், கோபத்தினால் உண்டாகும் ஒற்றை தலைவலி, சூடு தொடர்பான நோய்கள், திருட்டு பயம், பாம்பு பயம், அரசு தண்டனை, வாதம், மஞ்சள் காமாலை, தானியங்கு உறுப்புகள் தொடர்பான நோய்கள், ஜுரம், பித்தநீர் சுரப்பி குறைபாடுகள், விந்தணு உற்பத்தி குறைபாடுகள், வியாதியுள்ளோரிடம் உறவு கொள்ளுதல், பாலியல் நோய்கள், மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம் ; காய்ச்சல், பித்தம்

சந்திரன்



படத்தில் உள்ளது போல சந்திரன் ரிசபம், கடகம், விருச்சகம், மகரம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம் அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; சந்திரன் விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

சந்திரன் பரிவர்த்தனை பெற்றால் தாயின் வாழ்க்கை சிக்கலானது, தாயினாலும் சில தொல்லைகள் உண்டாகும், இந்த நிலையில் உள்ள சந்திரனுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், குடும்பத்தில் சன்யாசியைப் போல ஒருவர் இருப்பார், சமையல், மருத்துவம், வாகனத்தொழிலில் இருப்பார்கள்,

நற்பலன்கள்;

தாய்மை உணர்வுடனும் பாச பிணைப்பும் கொண்டவர்கள், ஜாதகர் கற்பனை வளமிக்கவர், அடுத்தவர்களுடைய நலன் குறித்து சிந்திப்பவர், தாயின் மீது மிகுந்த அக்கறையுடனும்

அவ்வப்போது சிறுசிறு விளையாட்டு போன்ற சண்டைகளும் செய்வார், பல மனிதர்களை சந்திப்பார், அனைவருடனும் எளிதில் பழகும் குணம் கொண்டவர், மனதிற்குள் எதையும் வைத்துக் கொள்ளாமல் வெளிப்படையாக பேசுவார், பிறர் என்ன சொல்வார்கள் என்பது பற்றி கவலைப் படாமல் செய்துவிட்டு அனைவரிடமும் நற்பெயர் வாங்க சமாளித்து பேசுவார், அடிக்கடி மனம் குறித்து பலருக்கு புத்தி மதி சொல்லுவார், உணவு பிரியர், அனைவருடனும் பழக வேண்டும் என்று சிந்தனை உடையவர், கட்டுப்பாடுகளற்ற ரசனை உடையவர், அடிக்கடி பயணம் செய்ய வேண்டும் என சிந்திப்பவர்,

சிக்கலான பலன்கள்;

உணர்ச்சி வசப்படக் கூடியவர், பயந்த சுபாவம் உடையவர், ஜாதகர் வீடு கட்டுதல் தொடர்பான சிந்தனை மற்றும் வீடு கட்டியவுடன் அதில் உள்ள சிக்கல் தொடர்பாக சதா சிரமப்பட்டுக் கொண்டே இருப்பார், ஜாதகருக்கு நிம்மதி இல்லாதது போலவே எப்போதும் பேசுவார், கற்பனையாக தனக்கு தவறு நடந்து விட்டது போல உணர்வார், புத்தி குழப்பம் மிக்கவர், கிளர்ச்சிக்கு அடிமையாதல், தனக்கு ஒரு வேலை ஆக வேண்டும் என்றால் சமயத்திற்கு ஏற்ப பொய்யும் பேசும் குணமுடையவர், எந்த ஒரு விசயத்தையும் நீட்டி சுவாரஸ்யமாக பேசுவார், திடீரென ஒருவரை புகழ்வதும் பிறகு அவரிடம் இருந்து காரணமே இல்லாமல் விலகுவதும் செய்வர், அடுத்தவர் வாழ்க்கையில் இவர்களாகவே முக்கியத்துவம் எடுத்துக் கொண்டு செய்வார்கள் பிறகு பகையும் உண்டாக்கிக் கொள்வார்கள், அனைவரின் மீதும் சந்தேகம், தூக்கம் தொடர்பான பிரச்சனை, திடீர் திடீரென சிந்தனை மாற்றம், எதன் மீதும் கவனமின்மை, மற்றவருக்கு உழைத்தல் பிறகு அதை சொல்லி காட்டி அவருடன் விவாதம் செய்யும் போக்குடையவர், மாறி மாறி பேசுபவர், பிறரை குறை கூறுதல், சதா புலம்பல் நிறைந்தவர், ஜாதகரின் தாய் குடும்பத்தில் மிகவும் முக்கியமான நபராக இருப்பார், அவர்தான் குடும்ப

CamScanner

பொறுப்புகளை முன்னெடுத்து செய்வார், இருப்பினும் தாயுடன் சுமூகமான சூழல் இருக்காது, கருத்து வேறுபாடு இருந்து கொண்டே இருக்கும், துணைவருடன் கருத்து வேறுபாடு, அவரையும் அவரது குடும்பத்தினரையும் எப்போதுமே குறை கூறுதல் ஆகிய குணங்களுடன் இருப்பார், முதலில் ஆண் அடுத்து பெண் குழந்தை இருக்கும்,

பிரதான தன்மைகள்;

சந்திரன் தாய், மாமியார், மனம், மாற்று பெண், வீடு அகியவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை நோக்கியே சிந்திப்பார்

பொது தன்மைகள்;

ஜாதகர் அழகு, பயணங்களில் விருப்பம், இடமாற்றம், கலை, கற்பனை, சபலம், மாறும் புத்தி, பிடிவாதம், மகிழ்ச்சி, அன்பு, தயவு, தூக்கம், உறுதியின்மை, அவப்பெயர், சகிப்புதன்மை, கள்ளத்தனம் போன்ற தன்மைகளை கொண்டவராக இருப்பார்,

அருகில் உள்ள இடம்;

பிள்ளையார் கோயில், சக்தி கோயில், ஆறு, குளம், நீர்நிலை, வயல் மளிகை கடை, சலவை நிலையம், இடது பக்கத்தில் உள்ள ஜன்னல், சாப்பாட்டு மேசை, குளியல் அறை, உணவகம், பால், கொரியர், விடுதி, மருத்துவமனை, கடல், உப்பளம், படகு, போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ; தெற்கு, கிழக்கு

குலம், சாதி ; வெள்ளாளர், கோணார், மருத்துவர், வள்ளுவர், நாட்டியர், சுண்ணாம்புகாரர் போன்ற சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; ஈயம்

நிறம் ; வெளிர் சாம்பல்

துணி ; புதிய துணி

பழம் ; சாத்துக்குடி

தானியம் ; அரிசி

மலர் ; வெள்ளரலி

மரம் ; முருங்கை, கரும்பு, வாழை

வடிவம் ; வட்டம்

தூரம் ; 15 கி.மீட்டர்

எண் ; 21, 2

மரு,வடு ; தலையில் காயம் தழும்பு, மரு வடு இருக்கும்

பொருள்கள்;

ஜாதகர் பாத்திரம், குழாய், தொட்டி, திரவப்பொருள், குளிர்பானம், ஆடை, வாகனம், பால், தயிர், எண்ணெய், முத்து, சங்கு, நீர் சத்து காய் கனிகள், உப்பு, வெண்மை நிறப் பொருட்கள், தண்ணீர் பம்புகள், வாகனம், போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

CamScanner

தொழில்கள்;

ஜாதகர் உணவு, கணினி வழி ஐடி துறை, நீர் தொடர்பான தொழில், ஸ்வீட், போக்குவரத்து, அயல்நாட்டுப் பணி, மளிகைக்கடை, கட்டிடத்துறை, கிரில், எண்ணெய், ஆடியோ மற்றும் வீடியோ விஷன், விசா, செல்போன், வேளாண்மை, கப்பல் பணி, செவிலியர், மருத்துவம், போக்குவரத்து தொழில், வாகனம், சுற்றுலாத்துறை, குழந்தை பேறு மருத்துவம், ரயில்வே பணிகள், விமான நிலைய பணிகள், கலைகள், ஜோதிடம், அரிசி வியாபாரம், பூ மற்றும் பழவியாபாரம், இலக்கியம், ஓவியம், ஏமாற்றுத் தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, வாகன உற்பத்தி, கலை சார்ந்த கல்வி, பேச்சாளர், சலவை, ஆடு மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, நடிப்பு, எழுத்தாளர், சேவை நிறுவனம், தோட்ட வேலை, மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

உறுப்புகள்;

பொதுவாக சந்திரன் முகத்தை குறிக்கும், இடது கண் (ஆண்களுக்கு), வலதுகண் (பெண்களுக்கு), சுரப்பிகள், பெண்களின் மார்பகம், சிறுநீரகம், புலன்கள், வயிறு, இரத்த நாளங்கள், கர்பப்பை, மூளையின் தொடரிகள் போன்ற உறுப்புகளை குறிக்கும்,

நோய்கள்;

சளி, சைனஸ், மனநோய், இடதுகண் கோளாறு, வயிறு மற்றும் செரிமான உபாதைகள், மார்பகம் கட்டி, இதயம், நீரிழிவு, சிறுநீர் தொற்று, மாதவிடாய் கோளாறுகள், கொம்புள்ள மிருகங்கள் தாக்குதல், உணவு குழாய் தொடர்பான நோய்கள், நீரின் வழியாக ஆபத்து, பெண்போக நோய், தோல் நோய், மண்ணீரல், நுரையீரல் குறைபாடு, சோம்பல், தாய் வழி நோய்கள், திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், காற்றின்

CamScanner

ஈரப்பதம் தொடர்பான தோல் நோய்கள், விரைவீக்கம், தூக்கமின்மையால் வரும் நோய்கள், ஆசை தொடர்பால் வரும் நோய்கள், நீர் கட்டிகள் மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; வாந்தி, பேதி, நீரின் வழியாக

செவ்வாய்

	செவ்	செவ்	
			செவ்
செவ்			
	செவ்	செவ்	

படத்தில் உள்ளது போல செவ்வாய் மேசம், ரிசபம், கடகம், துலாம், விருச்சகம், மகரம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம் அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; செவ்வாய் வக்ரம், விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

CamScanner

செவ்வாய் வக்ரம் அல்லது விளிம்பு, பரிவர்த்தனை பெற்றால் சகோதரன் மற்றும் கணவரின் வாழ்க்கை சிக்கலானது, இந்த நிலையில் உள்ள செவ்வாயுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், சகோதரன் மற்றும் கணவரால் ஜாதகர் சிக்கலை சந்திப்பார், ஜாதகி கணவரால் மனதாலும், உடலாலும் காயப்படுத்தப்படுவார், குடும்பத்தில் யாராவது தீ அல்லது மின்சாரத்தினால் தாக்கப்பட்டு இறந்திருக்கலாம், குடும்பத்தில் சமையல், மருத்துவம், மின்வாரியம், வெல்டிங், வாகனத்தொழிலில் இருப்பார்கள்,

நற்பலன்கள்:

எதனையும் வீரத்துடன் எதிர் கொள்ளும் துணிச்சல் மிக்கவர், கூட்டுத்தொழில் ஆர்வமுடையவர், ஆஜானுபாகுவான உடல்வலிமை மிகுந்து காணப்படுவார், சிலர் எலும்பாக இருப்பினும் வலிமை மிக்கவர்களாக இருக்கிறார்கள், உடற்பயிற்சி ஆர்வம் உடையவர், உடல் நலனில் அக்கறை உடையவர், கணவன் மீது எதிர்பார்ப்பு இருக்கும், கணவனும் முக்கியமான நபராக இருப்பார், ஜாதகர் சுற்றி உள்ளவர்களை அடக்கி ஆளுதல் மற்றும் முரட்டு சுபாவம் மிகுந்தவராக இருப்பார் ஊரில் அல்லது உறவில் முக்கியமான நபராக இருப்பார், ஜாதகர் இயங்கிக் கொண்டே இருக்கும் ஆற்றல் கொண்டவர், மேல்த்தீனி எனும் நொறுக்குத்தீனி பிரியர், புகழுக்கு அடிமையானவர், பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்வார்,

சிக்கலான பலன்கள்;

ஜாதகர் கடன் போன்ற சிக்கல்களில் சிக்கிக் கொள்வார், உடல்நலம் குறித்த பிரச்சனை அவ்வப்போது ஏற்படும், குறிப்பாக ஜாதகர் பெண்ணாக இருந்தால் அவரது உடல் நலம் மற்றும் திருமண வாழ்க்கையில் தடை மற்றும் தாமதம் உண்டாகும், மேலும் கணவனுடன் சிக்கல், சதா குடும்பத்தில் சண்டை உண்டாகும், இருப்பினும், தேவையற்ற வழக்கு, நம்பிக்கை

துரோகம், நட்பு வழி ஏமாற்றம் ஏற்படும், இவரது செயல்களில் வேகம் இருக்கும் அதே சமயம் அவசர கதியில் எதையாவது செய்து விட்டு பிறரின் எரிச்சலுக்கு உள்ளாவார், கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பார், தேவையற்ற சண்டை சச்சரவு, வீண் வம்புகளை வரவழைத்துக் கொள்வார், இவர் பங்கு வர்த்தகம், பங்கு தாரர் தொழில் கடன் கொடுத்தல் வாங்குதலில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும் முடிந்தால் தவிர்ப்பது நலம், ஜாதகர் நாய் வளர்க்கும் ஆசை கொண்டவர், சில சமயங்களில் நாயினால் கடி படுவார்,

பிரதான தன்மைகள்;

செவ்வாய் சகோதரன், நண்பன், உடல்நலம், கடனற்ற வாழ்வு, கணவன் போன்றவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை குறித்தே சிந்தனை செய்வார்,

பொது தன்மைகள்;

ஜாதகர் வீரம், தீரம், பராக்கிரமம், வெற்றி, விபத்து பயம், பேராசை, அதிக காமம், நடத்தை குறைபாடு, கோபம், விவேகம், சாமர்த்தியம், அதிகாரம், விடுதலை வேட்கை, பகைமை பாராட்டுதல், துடிப்பு, துணிச்சல், எதிரி பயம், தீ பயம், கடன், பழிவாங்குதல், மன வலிமை ஏற்றத்தாழ்வு போன்ற தன்மைகளுடன் இருப்பார்,

அருகில் உள்ள இடம்;

மெடிக்கல், மெக்கானிக், மின் மாற்றிகள் டவர், முருகன் கோயில், பட்டறை, கிரவுண்ட், ஹார்டுவேர், சமையல் கூடம், பாபா கோயில், அடிக்கடி விபத்து நடக்குமிடம், பட்டாசு தொழிற்சாலை மற்றும் கடை, நெருப்புள்ள பகுதி, பள்ளத்தாக்கு, குப்பைமேடு, சுரங்கம், கசாப்புக் கடைகள், மருத்துவமனை, அறுவைசிகிச்சைக் கூடம், போன்றவைகளுக்கு அருகில் இவரது

CamScanner

வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும் போது, பலன் கேட்க வரும் போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ; வடக்கு

குலம், சாதி ; செட்டியார், கவுண்டர், கம்மாளர், தச்சர், கொல்லர், மிலேச்சர், கொங்கணர், வடுகர், குயவர், வணிகர் சித்திரக்காரர் சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; செம்பு

நிறம் ; அடர் சிவப்பு

துணி ; எரிந்த துணி

பழம் ; மாதுளை

தானியம் ; துவரை

மலர் ; செண்பகம், சம்பங்கி

மரம் ; வேம்பு, வேலி கருவேலம்

வடிவம் ; பட்டை

தூரம் ; 105 கி. மீட்டர்

எண் ; 9, 7

மரு,வடு ; முதுகு, புருவம், தாடை போன்ற பகுதிகளில் இருக்கும்,

CamScanner

பொருள்கள்;

உலை, அடுப்பு, மின் கருவிகள், ஆயுதங்கள், கற்கள், கூர்மையான பொருட்கள், முட்கள், மிக்சி, கிரைண்டர், கத்தி போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

தொழில்கள்;

மோட்டார்வாகனம் தொழில்கள், மருத்துவம், சமையல், டூல்ஸ், பொறியியல், லேத், தொழிற்சாலை பணிகள், மருந்து உற்பத்தி, வெல்டிங், லேப், மருத்துவ உபகரணம் உற்பத்தி மற்றும் விற்பனை, விளையாட்டு, செங்கல் சூலை, மெக்கானிக், இராணுவம், உடற்பயிற்சி, வெப்ப உலை, இயங்கிக் கொண்டே இருக்கும் பணிகள், எலெக்ட்ரிக்கல் சார்ந்த தொழில்கள், கட்டிட் துறை பொருட்கள் விற்பனை, போர் தளவாட உற்பத்தி, மண்பாண்ட உற்பத்தி, மந்திரம், இயந்திர உற்பத்தி, விவசாயப் பொறியியல், சண்டை தொழில்கள், சுரங்க பணிகள், ஆயுதம் தயாரிப்பு, தீயணைப்பு துறை, ரசாயன தொழில், சமையல் பாத்திரம் உற்பத்தி மற்றும் விற்பனை, , சிற்ப பணிகள் மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

உறுப்புகள்;

பொதுவாக செவ்வாய் மார்பு பகுதியை குறிக்கும், ஆண் மற்றும் பெண்களின் மர்ம உறுப்புகள், நகம், பல், நெற்றி, நாசி, புருவம், புஜங்கள், எலும்பு மஞ்ஜை, இயக்க நரம்புகள், மூக்கு, சிவப்பணு, இருதயம், புருவம், போன்ற உறுப்புகளை குறிக்கும்,

CamScanner

நோய்கள்;

மூத்திர துவார தொற்று, சிறுநீரக கல், ரத்தம், பல், இதயம் சார்ந்த நோய்கள், புருவத்தில் வெட்டு தழும்பு, அம்மை, புதுமையான ஃப்ளு, உஷ்ண நோய், வெட்டு, ஜாயிண்ட் பெயின், குடல்வால், சண்டைகளால் காயம், விபத்து, மார்புபகுதியில் காயம், எலும்பு மஞ்ஜை, அம்மை, தீக்காயங்கள், மின்சாரம் தாக்குதல், நாய்க் கடி அல்லது நாய் வளர்த்தல் மூலமாக வரும் உபாதைகள், அறுவை சிகிச்சை, விதவை போகத்தால் நோய்கள், பித்த நோய்கள், மூளை காய்ச்சல், ரத்தப் புற்று, மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; விபத்து, ஆயுதங்களால் ஆபத்து

புதன்

புத			புத
புத			புத

படத்தில் உள்ளது போல புதன் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம்

CamScanner

அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; புதன் வக்ரம் விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

புதன் வக்ரம் அல்லது விளிம்பு அல்லது பரிவர்த்தனை பெற்றால் சகோதரி அல்லது மகளின் வாழ்க்கை சிக்கலானது, ஜாதகர் காதல் கல்வியில் இடையூறுகளை சந்திப்பார், கல்வியில் தடைகள் இருந்தாலும் ஓரளவுக்கு நல்ல கல்வியுடையவராக இருப்பார், இந்த நிலையில் உள்ள புதனுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், குடும்ப உறவுகளில் திருமணம் இல்லாமல் ஒருவர் இருப்பார், வம்சத்தில் மருந்து குடித்தோ, நிரில் மூழ்கியோ இறந்தவர் உண்டு, கப்பல் பணி, நீர் சார்பணி, மருந்துப்பணி, வங்கி, மின்னியல் தொழிலில் இருப்பார்கள், சகோதரி ஒருவர் சிறு வயதில் தவறி இருப்பார், அல்லது இவர் தாயிற்கு இவருக்கு முன் பின் உருவான கரு கலைந்து இருக்கும்,

நற்பலன்:

சுறுசுறுப்பானவர், கல்வியில் நல்ல நிலையை அடைவார், வாழ்க்கை முழுவதும் எதாவது கற்றுக் கொண்டே இருப்பார், மகள் மீது அதீத அன்பு கொண்டவர், இவர் சமயோசிதம் நிறைந்தவர், எந்த சூழலுடனும் ஒன்றிப் போகும் தன்மையுடன் இருப்பார், சுருட்டை மயிரும் இளமையான தோற்றமும் உடையவர், எதிர் பாலினத்தை ஈர்க்கும் புன்னகையுடையவர், நன்றி பெருக்கு உடையவர் எத்தனை ஆண்டுகளானாலும் நினைவில் வைத்து பிரதி உபகாரம் செய்யும் குணம் கொண்டவர், உடலில் பச்சை நரம்புகள் தெரியும், தாளமிடுதல், நடனமாடுதல், இசை போன்றவற்றில் பிரியம் கொண்டவர், மிகவும் தெளிவானவர், அனைவரிடமும் லாவகமாக பழகுதல், நுண்ணறிவு, எதையும் கற்கும் ஆர்வம் அதிகம் நிறைந்தவர்

CamScanner

என்பதால் கல்வியில் நல்ல நிலையடைவார், நேரம் தவறாமை பற்றி பிறருக்கு கூறிக் கொண்டே இருப்பார், உற்சாகமுடையவர், சாமர்த்தியசாலி, இவருக்கு பெண் குழந்தை பிறக்கும், மத்தியஸ்தம் செய்வது, இடையில் நடுநிலையாக இருப்பதில் வல்லவர், சிறுபிள்ளைத் தனமான குணங்கள் உண்டு

சிக்கலானபலன்;

இவரது மகளுடைய குடும்ப வாழ்க்கையில் கருத்து வேறுபாடு இடையூறுகள் ஏற்படும், ஜாதகர் நிலம் சார்ந்த சிக்கலை சந்திப்பார், பூர்வீக நிலம் தொடர்பான மன கசப்புகளுக்கு ஆளாவார், மகள் மீது அதீத அன்பு கொண்டவர், அதே சமயம் இவரது மகளுடன் திடீரென கருத்து வேறுபாடு உண்டாகும், குடும்ப பிரச்சனை காரணமாக சகோதரி உடன் விவகாரம் இருக்கும், சொத்து தொடர்பான வழக்கு ஏற்படும், இவர் பிறரை தவறாக புரிந்து கொள்ளுதல் அல்லது இவரை பிறர் தவறாக புரிந்து கொள்ளுதல் போன்ற சிக்கல்கள் ஏற்படும், காதல் போன்றவற்றில் சிக்கிக் கொள்வார், கோள் மூட்டும் சிந்தனை கொண்டவர், இவர் பிறருக்கு நேரம் தவறாமை பற்றி ஆலோசனை வழங்கினாலும் தனது வாழ்க்கையில் சரியாக கடைபிடிக்க மாட்டார்,

பிரதான தன்மைகள்;

புதன் கல்வி, காதல், தகவல் தொடர்பு உறுப்புகள் மற்றும் தன்மை, மாமா, மகள், காதலி, சகோதரி போன்றவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற் குறித்த தன்மைகளை நோக்கியே சிந்திப்பார்,

பொதுத் தன்மைகள்;

ஜாதகர் கலைகள், மக்கள் தொடர்பு, காதல், கல்வி, எழுத்து, லாவகமாக வெளிப்படுத்தும் தன்மை, நளினமான பேச்சு, கூர்ந்து கேட்கும் திறன், கேள்வி ஞானம், சாதுர்யம், கள்ளத்

CamScanner

தொடர்பு, அறிவுக்கூர்மையுடன் அணுகுதல் போன்ற தன்மைகள் நிறைந்தவராவார்,

அருகில் உள்ள இடம்;

ஜாதகர் வரவேற்பறை, பிள்ளைகள் அறை, படிக்கும் அறை, பள்ளிக்கூடம், நூலகம், பார்க், எலக்ரிக் கடை, வங்கி, கல்வி நிலையம், கூட்டுறவு வங்கி, ராமர் கோயில், வணிக வளாகம், வீட்டு உபயோக பொருட்கள் கடை, கொரியர், நூலகம், பத்திரிக்கை, ஜோதிடர் அலுவலகம், மறைவான பகுதி, பூங்கா, கடைவீதி, மண்டபம், கடற்பகுதி போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்,

வீட்டின் வாசல் திசை ; தெற்கு

குலம், சாதி ; அம்பலகாரர், செட்டியார், நாயுடு, ரெட்டியார், பூசாரி, சிற்பி, கோமுட்டி, பிள்ளை, மேளக்காரர், நட்டுவர், ஓதுவார், வைசியர், சித்திரக்காரர், கவிவாணர், சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; பித்தளை

நிறம் ; பச்சை

துணி ; நனைந்த துணி

பழம் ; கொய்யா

தானியம் ; வெந்தயம், பச்சை பயறு

மலர் ; வெண்காந்தல்

CamScanner

மரம் ; கொடி, துளசி

வடிவம் ; முக்கோணம்

தூரம் ; 120

எண் ; 9, 5

மரு,வடு ; கைக்கு கீழ், சிறு எலும்புகள் உள்ள பகுதி மற்றும் விரல்களில் இருக்கும்

பொருள்கள்;

சிமெண்ட், கடிகாரம், புத்தகம், தொலைபேசி, நாணயங்கள், பத்திரம், கடிதம், ஒலி பெருக்கி, ஓவியங்கள், மென்மையான பொருட்கள், படரும் கொடிகள், தானிய சேமிப்புக் கிடங்கு, பென்சில், பேனா, ஐயர்ன் பாக்ஸ், எலெக்ட்ரிக் பொருள், விரிப்பு போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

தொழில்கள்;

கல்வி, கணக்கு, கமிசன், தபால் துறை, டெக்ஸ்டைல்ஸ், கட்டிடப் பணி, வீட்டு உபயோகப் பொருள் விற்பனை, நிதி, பிரிண்ட், ஸ்டிக்கர், செய்தி, நடிப்பு, மடிக்கும் பொருட்கள், கலை, மேஜிக், புத்தக எழுத்தாளர், கணக்குப்பிள்ளை, பதிவுத்துறை, தொலை தொடர்பு மற்றும் தூதரக பணிகள், செல்போன், எலெக்ட்ரிக், வரைகலை, மேடைப்பேச்சாளர், சில்லரை வியாபாரம், கணித புலமை, அனைத்து வியாபாரங்களும், சட்டத்துறை, சிற்ப தொழில், தரகு, செய்தித் துறை, புத்தகக் கடை, ஸ்டேசனரி, தரகு, சூதாட்டம், மீடியா, ஐடி, கேமரா, நவீன தொழில் நுட்பம், மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

CamScanner

உறுப்புகள்;

பொதுவாக புதன் இடை பகுதி மற்றும் முதுகை குறிக்கும், மூளை தொடரிகள், தோள்பட்டை, தோல், உள்ளங்கை, தொண்டை, காது, நாக்கு, நரம்புமண்டலம், நுரையீரல், முதுகுதண்டு, புலன்கள், மூக்கு, இடுப்பு, விரல் போன்ற உறுப்புகளை குறிக்கும்

நோய்கள்;

விரல்களின் உபாதைகள், இடது காது, தோல் நோய்கள், சொரி, சிரங்கு, வெண்குஷ்டம், இ,என்,டி பிரச்சனை, மறதி, தோள்பட்டை தொடர்பான வேதனை, தொண்டை, நரம்பு வலி மற்றும் அது தொடர்பான நோய்கள், உறுப்புகள் வளர்ச்சி குறை, சளிக்கட்டி, டிபி, மூளை தொடர்பு நோய்கள், வலிப்பு, வழுக்கை, விரை வாதம், உளறுவாய், சிற்றெலும்புகள் நொறுங்குதல் அல்லது வளைதல், தொப்புளில் சிக்கல், ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, விபச்சாரத்தின் மூலம் ஏற்படும் நோய்கள், வாதம், நரம்பு தளர்ச்சி, கோமா, மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; ரத்தசோகை, நரம்பு செயல்பாடு

சுக்கிரன்

சுக்	சுக்	சுக்	
	சுக்	சுக்	சுக்

படத்தில் உள்ளது போல சுக்கிரன் மீனம், மேசம், ரிசபம், கன்னி, துலாம், விருச்சகம், என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம் அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; சுக்கிரன் வக்ரம், விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

சுக்கிரன் வக்ரம் அல்லது விளிம்பு அல்லது பரிவர்த்தனை பெற்றால் இல்லற வாழ்க்கை சிக்கலானது, இந்த நிலையில் உள்ள சுக்கிரனுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், குடும்ப உறவில் பெண் அல்லது பண விசயமாக கொலை அல்லது தற்கொலை நிகழ்ந்து இருக்கும், மனைவி மற்றும் சில பெண்களால் உடல் மற்றும் மனதாலும் காயப்படுவார், பெண்களால் அவமானம் தொல்லைகளை அனுபவிப்பார், உறவில் ஆசிரியர் பணி, வட்டி, கொடுக்கல் வாங்கல் தொழிலில் இருப்பார்கள்,

CS CamScanner

நற்பலன்கள்:

இவரது தாத்தா பாட்டிகளுக்கு தீர்க்கஆயுள், பால் சோற்றில் விருப்பம் உடையவர், திருமணம் முன்பே தெரிந்தவருடன் நடக்க அதிகமான வாய்ப்புகள் உண்டு, தன்னை பொலிவாக காட்டிக் கொள்ள விரும்புவார், பணப் புழக்கம் அதிகம் உண்டு, பெண்கள் இவரிடம் பிரியமாக பழகுவர், திருமணத்திற்கு பிறகு மேன்மை உண்டாகும், உபரி வருமானம் அதிகம், உறவில் பெண் இருந்தால் அவருடன் விருப்பம் ஏற்படும், ஆடம்பரமாக வாழ வேண்டும் என நினைப்பார்,

சிக்கலானபலன்;

ஜாதகர் ஆண் எனில் திருமணம் தாமதமாகும் அல்லது குழப்பமான, அவசரமான திருமணம் நடக்கும் அல்லது திருமண வாழ்க்கை மிகுந்த சிரமம் மிகுந்ததாகவும் சச்சரவானதாகவும் இருக்கும், ஜாதகர் பணம், வட்டி போன்ற வகையில் வருமானம் ஈட்ட ஆசைபட்டு பிறகு அதில் சிக்கலை உண்டாக்கிக் கொண்டு தேவையில்லாத இழப்புக்கு ஆளாவார், அவ்வாறு பணம் கொடுக்கல் வாங்கலில் சிக்கல் உண்டானால் பண விசயமாக எதாவது ஒரு பதிலை பொய்யாகவாவது சாக்கு போக்கு சொல்லி கொண்டே கடத்தும் குணமுடையவர், ஜாதகர் பண விசயத்தில் ஏமாற்றம் அடைவார், வீண் டம்பம், பெருமைக்காக அதிகம் கவனம் செலுத்துவார் சதா மோகம் நிறைந்தவர், எப்போதும் அதீத காமம் மிகுந்து காணப்படுவதால் இவர் தனது துணையை உறவு கொள்வதற்காக நச்சரித்துக் கொண்டே இருப்பார்,

பிரதான தன்மைகள்;

சுக்கிரன் மனைவி, பெண் தோழிகள், செல்வநிலை போன்றனவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை நோக்கியே எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருப்பார்

CamScanner

பொது தன்மைகள்;

ஜாதகர் காதல், வசீகரம், கலை, நடிப்பு, கவர்ச்சி, உல்லாசம், பாலுணர்வு, சிற்றின்ப நாட்டம், பட்டப்பெயர் மீது ஆர்வம், இளமையாக தன்னை வெளிபடுத்துதல், பேச்சாற்றல், சுய விளம்பரம், படோபகாரம் டம்பம், போன்ற தன்மைகளை கொண்டவராக இருப்பர்,

அருகில் உள்ள இடம்;

சமையல் அறை, அம்மன் கோயில், சினிமா தியேட்டர், பியூட்டி பார்லர், ஷோரூம், டெக்ஸ்டைல்ஸ், திருமண மண்டபம், ஆடம்பரவீடு, தோட்டம், பெண்கள் கூடும் இடங்கள், திரையரங்கம், ஷோரூம், விளையாட்டு அரங்கம், கேளிக்கை விடுதி, விழா அரங்கங்கள், போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ; வடக்கு மேற்கு

குலம், சாதி ; வேளாளர், கவுண்டர், யாதவர், இடையர், வைசியர், வண்ணார், ரெட்டியார், சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; வெள்ளி

நிறம் ; வெள்ளை

துணி ; ஜீன்ஸ் போல் கெட்டியான துணி

பழம் ; மாம்பழம், அன்னாசி

தானியம் ; மொச்சை, புளி

CamScanner

மலர் ; வெண்தாமரை

மரம் ; மாமரம், புளியமரம், எலுமிச்சை, நெல்லி,

தூரம் ; 240 கி.மீ

எண் ; 16, 6

மரு,வடு ; முகம் குறிப்பாக கன்னத்தில் இருக்கும்,

வடிவம் ; எண்கோணம்

பொருள்கள்;

ஜாதகர் ஒப்பனை பொருட்கள், ஆடை, ஆபரணம், வீடு, மகிழுந்து, வாசனை திரவியங்கள், கண்ணாடி, ஆடை ஆபரணங்கள், ஆடம்பர உணவு, பர்னிச்சர், மது பானம், நறுமண பொருட்கள், பணம், இனிப்பு, விலை உயர்ந்த உணவு, பழங்கள், மலர்கள், வாகனம், ரெக்சின், மைக்கா, போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

தொழில்கள்;

வங்கிப்பணி, சொகுசு வாகன உற்பத்தி மற்றும் வியாபாரம், ஆடை, ஆபரணம், ஏலசீட்டு, மகளீர் குழு, கலை, பூ, பெயிண்ட், இனிப்பு, பேன்சி, பொன் வியாபாரம், பழவியாபாரம், வட்டித்தொழில், மது, விடுதி, சிற்பம், தனிக்கையாளர், முதலீடு, வீடு விற்பனை, திருமணம் சார்ந்த தொழில்கள், மீடியா, மார்கெட்டிங், அயல்நாட்டுப் பணி, விலை உயர்ந்த கால்நடை விற்பனை, பணப்பயிர் வியாபாரம், நட்சத்திர ஹோட்டல் மற்றும் விடுதிகள், கருவூலம், அலங்கார பொருட்கள் விற்பனை, பர்னிச்சர், கண்ணாடி தொழிற்சாலை பணி, அழகு நிலையம், நறுமணப் பொருட்கள் விற்பனை உற்பத்தி, இரத்தின வியாபாரி,

நடிகன், அரச விருந்தினர், மருந்து விற்பனை, ஆப்டிகல்ஸ், பட்டு விற்பனை, தொலைக்காட்சி, நடனம், விளம்பர பணிகள், நுகர்வோர் தொடர்பு பணிகள், வேசி, இசை கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனை,, நவீன புதுமையான தொழில்கள், சலவையகம், பெண் தொழிலாளர்களை கொண்டு செய்யும் தொழில்கள், வேற்று மொழி கற்பித்தல், வசந்தகால பயிர்கள், மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

உறுப்புகள்;

பொதுவாக சுக்கிரன் பிறப்பு குறியை குறிக்கும், கண்கள், தொண்டை, ஆண்குறி, கன்னம், தாடை, புலன்கள், கர்பப்பை, முகம், கருமுட்டை, கழுத்து, தோள்பட்டை போன்றவற்றை குறிக்கும்,

நோய்கள்;

இடது நாசி, பால்வினை தொற்றுகள், சுரப்பி பாதிப்பு, வாதம், கருப்பை சார்ந்த சிக்கல்கள், முகம் மற்றும் கண் உபாதைகள், விந்து உற்பத்தியில் கோளாறுகள், சக்கரை நோய், அந்தரங்க இடத்தில் தொற்று, விந்து வெளியேற்றம், காமத்தால் உண்டாகும் விளைவுகள், உறவு கொள்வதை தடை செய்யும் உபாதைகள், பாலுறுப்பு தொற்று, பித்தம், சன்னி நோய்கள், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு, உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள், தொழுநோய், போதை தொடர்பான நோய்கள், மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; தொற்று, பால்நோய்

வியாழன் (குரு)

குரு			குரு
			குரு
குரு			
குரு			குரு

படத்தில் உள்ளது போல குரு மிதுனம், கடகம், கன்னி, தனுசு, மகரம், மீனம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம் அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; குரு வக்ரம், விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

குரு வக்ரம் அல்லது விளிம்பு அல்லது பரிவர்த்தனை பெற்றால் ஜாதகரின் தன்னை பற்றிய முடிவுகள் சிக்கலானது, இந்த நிலையில் உள்ள குருவுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், குடும்பத்தில் சன்யாசியைப் போல ஒருவர் இருப்பார், இவரும் இவரது குடும்பத்தில் உள்ளோர்களும் குழந்தை பிறப்பு தொடர்பான பிரச்சனைகளை சந்திப்பர், கருக்கலைதல் உண்டாகும், ஆலோசனை, அடகு, வட்டி, ஆன்மீகம் சார் பணிகளில் இருப்பார்கள்,

நற்பலன்கள்:

ஜாதகர் கௌரவத்தை அதிகமாக விரும்புவார், தங்க நகை சேர்ப்பதில் ஆர்வம் நிறைந்தவர், சேர்த்தவற்றை பாதுகாக்க அதிக கவனம் செலுத்துவார், ஜாதகர் தனது சுற்றத்தில் பிரபல்யமாக இருப்பார், சுய அடையாளத்தை தக்க வைப்பதில் போராட்டம் அதிகம் இருக்கும், தூய்மை விரும்பி, சமூகத்தில் உயர் நிலையை அடைவார், புத்திசாலித் தனமானவர், பலருக்கும் இவரை பற்றி சொன்னால் தெரிந்து இருக்கும் அவரது சூழலில் அவர் பிரபலமானவர்,

சிக்கலான பலன்கள்;

சிறு சிறு அவமானங்களுக்கு கூட சோர்ந்து விடுவார், பல இடங்களில் இவராகவே போய் பெயரை கெடுத்துக் கொள்வார், பிறருக்கு கூறும் உபதேசங்கள் தனக்கு ஒரு நாளும் உதவாது, தேவையற்ற விரயம், பணம் சீட்டு வட்டி வரவு வழியாக வருமானம் இருப்பினும் ஏமாற்றம் அதிகமாக இருக்கும், சதா புகழுக்கு ஏங்கிக் கொண்டே இருப்பார், பணத்தை சேமிப்பதில் தடைகள் இருப்பினும் அதை சமாளிப்பார், பிறருக்கு மட்டுமே அறிவுறை கூறுவார் ஆனால் தான் அதை கடைபிடிப்பதில் கோட்டை விடுவார், உணர்ச்சி வசப்பட்டு தன்னை கட்டுபடுத்த இயலாமல் குற்ற காரியங்களை செய்து விட்டு வருந்துவார், தன் உணர்வில் கவனம் குறைவானவர், சமூகத்தின் கட்டுப்பாடுகளில் நம்பிக்கையில்லாமல் அதிலிருந்து ஒதுங்கி நடப்பார்

பிரதான தன்மைகள்;

குரு என்ற கிரகம் ஜாதகர், கௌரவமான நபர், போன்றவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை பற்றியே அதிகமாக சிந்தித்துக் கொண்டே இருப்பார்,

CamScanner

பொது தன்மைகள்;

ஜாதகர் கௌரவம் பார்த்தல், இனிப்பு மீது விருப்பம், தன் நலம் பேணுதல், செல்வாக்கு, உயர் அந்தஸ்து, செல்வம் மற்றும் புகழ் போன்றவற்றின் மீது ஆர்வம், தந்திரம், நல்ல நினைவு திறன், வித்தையில் தேர்ச்சி, அதி மேதாவித்தனம் போன்ற தன்மைகள் நிறைந்து காணப்படுவார்,

அருகில் உள்ள இடம்;

பூஜை அறை, பேங்க், பைனான்ஸ், பூஜை சாமான் கடைகள், யோகா செண்டர், டியூசன் செண்டர், டிரஸ்ட் நீதி மன்றங்கள், கோயில், அரச சபைகள், பஞ்சாயத்து கூடங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ; தெற்கு, மேற்கு

குலம், சாதி ; பிராமணர் , கவுண்டர், சைனர், நாடார் சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; பொன்

நிறம் ; மஞ்சள்

துணி ; ஒருமுறை உடுத்தியது

பழம் ; ஆரஞ்சு

தானியம் ; சுண்டல், சீரகம்

மலர் ; மல்லிகை, முல்லை

CamScanner

மரம் ; தென்னை, அரசு, வெற்றிலை, எலுமிச்சை

வடிவம் ; நீள்வட்டம்

தூரம் ; 135 கி.மீட்டர்

எண் ; 10, 3

மரு,வடு ; கை தசை மிகுந்த பகுதிகளில் தென்படும்,

பொருள்கள்;

பூஜை பொருட்கள், ஞான நூல்கள், தங்கம், எழுதுகோல், உயர் மதிப்புள்ள சீருடைகள், நிதி நிறுவன பெட்டகங்கள், அலுவலர் மேசை, போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

தொழில்கள்;

ஆசிரியர், நீதித்துறை, பொன் வியாபாரம், ட்ராவல் ஏஜென்சீஸ், வாடகை வருமானம், ஆன்மீகப் பயிற்சி, தர்ம ஆசிரியர், நிதித்துறை, ஞான உபாசகர்கள், கௌரவப் பணியாளர்கள், உயர்பதவிகள், யாத்திரை தொழில்கள், புரோகிதம், பொதுப் பணிகள், பக்தி மார்க்கம், அறிவுரை மற்றும் ஆலோசனை பணிகள், சேவை நிறுவனங்கள், தர்மகர்த்தா, அறநிலையத் துறை, தலைவர் பொறுப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாதுகாப்புத் துறை, திருப் பணிகள் மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

CamScanner

உறுப்புகள்;

பொதுவாக குரு வயிறு, மூளை, வயிறு, தசை மற்றும் தசை நார்கள், அனைத்து ஈரல்களும், கொழுப்பு, பாதம், தொடை, மூக்கு, சீரண உறுப்புகள், போன்றவற்றைக் குறிக்கும்.

நோய்கள்;

மூக்கு சார்ந்த நோய்கள், குடல் இறக்கம், வயிற்றுக் கோளாறுகள், கொழுப்பு, மஞ்சள் காமாலை, உள் உறுப்புகள் இயக்கம் சார் பிரச்சினைகள், ஈரல் வீக்கம் மற்றும் குறைகள், கொப்புளம், காதுவலி, அமோனியா குறையால் பதட்டம் இதய படபடப்பு, பாதம், கால் ஆணி, தசை தொடர்பான நோய்கள், வாயுக் கோளாறு, பிறப்புறுப்பில் மாற்றம், உயிரணு குறைபாடு, கருகலைதல், மூளை தொடர்பான நோய்கள், நமைச்சல், அசீரண கோளாறு, குடல், தசை பிடிப்பு, வீக்கம், அடிவயிறு, சீல், டி.பி, சுவாச நோய்கள், மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; கபம், குடல் மற்றும் உள் உறுப்பு செயல்பாடு

சனி

	சனி		
சனி			சனி
சனி			சனி
		சனி	

படத்தில் உள்ளது போல சனி மேசம், கடகம், சிம்மம், துலாம், மகரம், கும்பம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம் அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

குறிப்பு ; சனி வக்ரம், விளிம்பு, பரிவர்த்தனை பெற்றுள்ளதா என கவனிக்கவும்,

சனி வக்ரம் அல்லது விளிம்பு அல்லது பரிவர்த்தனை பெற்றால் ஜாதகரின் வருமானத்தில் சிக்கல் ஏற்படும், இந்த நிலையில் உள்ள சனியுடன் இணைந்த கிரகத்தின் காரகமும் சிக்கலாகும், குடும்பத்தில் சன்யாசியைப் போல ஒருவர் இருப்பார், இவரது வருமானத்தில் 27 வயதில் இருந்து 35 வயது வரை மிகுந்த போராட்டங்கள் இருக்கும் அதன் பிறகு நல்ல நிலையில் இருப்பார், இவர் பிறக்கும் போது இவரது குடும்பம் சற்று சிக்கலாக இருந்து பின்னர் வளர்ந்திருக்கும், சமையல், மருத்துவம், வாகனத்தொழிலில் இருப்பார்கள்,

CamScanner

நற்பலன்கள்:

. பொதுப் பணியில் ஆர்வம், அடுத்தவர் வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வார், ஜாதகர் எல்லா விசயங்களையும் ஓரளவுக்கு தெரிந்து வைத்து இருப்பதால் அனைத்து வேலைகளையும் செய்வார், அறுவருப்பு இல்லாமை, எதையும் செய்யும் துணிச்சல் மிகுந்தவர், பின் சிந்தனை இல்லாமல் எதையும் நேர்த்தியாக செய்ய வேண்டும் என்று ஈடுபாட்டுடன் செய்வார், வித்தை கர்வம் உடையவர், தனது குணம் செயல் வேலை பற்றி யாராவது உயர்வாக பேசினால் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுத்துவிடுவார், எந்த சூழலிலும் ஒத்துப் போவது, நடுநிலை பஞ்சாயத்துகளில் ஆர்வம் காட்டுவது இவரது இயல்பு, அதேசமயம், பிறருக்கு தயவு தாட்சண்யம் பாராதவர், பழையன மறந்துவிட்டு உறவாடும் குணம் உடையவர், அடிமையாக இருந்தாலும் அதிலும் தலைமை பொறுப்புகளை அடைவார், வாதங்கள் செய்தலில் கெட்டிக் காரர், கடினமான மனம் படைத்தவர் உதாரணமாக எதாவது விபத்து நடந்த இடத்தில் விபத்துக்குள்ளானவர் எந்த நிலையில் இருந்தாலும் கொஞ்சம் கூட யோசிக்காமல் இரத்தம் சதை என எதையும் பாராமல் சடாரென உதவுவார், குடும்பத்தில் சிலர் தீர்க்காயுள் உடையவர்கள் தாத்தாவோ பாட்டியோ 90 வயதிற்கும் மேல் இருப்பார்கள், ஜாதகர் அரிய நூல்கள் பொக்கிசங்கள், குடும்ப தொழில் கருவிகளை போன்றவற்றை பத்திரபடுத்தி வைப்பார் அதன் மூலம் நிம்மதியும் பெருமையும் அடைவார், எவ்வளவு தடை வந்தாலும் சளைக்காமல் எதையும் செய்து முடிக்கவல்ல நெஞ்சுரம் படைத்தவர், எதற்கும் அஞ்சாதவர், தான சிந்தனை உடையவர், கடின உழைப்பாளி, சமூக சிந்தனை உடையவர்,

சிக்கலான பலன்கள்;

தேவையற்ற வழக்குகளில் சிக்கிக் கொள்வது, எதிர்பாராத இழப்புகளை சந்தித்தல், எல்லா திட்டங்களிலும் சுணக்கம், ஏன்

நமக்கு மட்டும் இப்படி நடக்கிறது என ஆய்ந்து பார்த்தாலும் உணர முடியாத தொல்லைகள், எல்லா பணிகளிலும் அதீத உழைப்பு, ஆனால் பயன் குறைவு, ஜாதரின் திறமை யாராலும் நினைக்க முடியாத அளவுக்கு இருந்தாலும் அவருக்கு அங்கீகாரம் கிடைக்காது, அனைவரும் வேலை முடியும் வரை பயன்படுத்தி விட்டு பிறகு மறந்து விடுவார்கள், யாரும் மதிக்கவில்லை என சலித்துக் கொள்வார், மரபு சார்ந்த தொடர் நோய் மற்றும் எதாவது குழப்பம் ஏற்படும், இவருக்கு குழப்பத்தை உண்டாக்கும் அல்லது புரிதலை குலைக்கும் சாதுர்ய பேச்சு உண்டு, இவரை பஞ்சாயத்துகளில் பேச அழைத்து போனால் எதிராளியை குழப்பி விடுவார், இவரது பூர்வீக குடும்பம் பிரிந்து போகும் நிலை ஏற்படலாம், இவரது பூர்வீகத்தில் சொத்துக்களை சகோதரிக்கு தராமல் ஏமாற்றுதல் நடந்து இருக்கும், இவரது குடும்ப சொத்துகள் அடையாளம் தெரியாமல் சிதைந்து போகுதல் மெதுமெதுவாக நடக்கும், சிலர் அற்பாயுள் சிறு வயதில் இறந்து போவார்கள், தனது காரியத்தை நிறைவேற்ற குள்ளநரி தந்திரம் செய்வதில் கெட்டிக்காரர், திடீரென அதிகாலையில் எழுந்து உழைப்பர், சில காலங்களில் மதியம் வரை தூங்குவார்,

பிரதான தன்மைகள்;

சனி தொழில், மரபு வினை, ஜீவனம் போன்றவற்றை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை பற்றியே சதா சிந்தனை செய்வார்,

பொது தன்மைகள்;

ஜாதகர் சோம்பேறித்தனம், பீதி, தயக்கம், துயரம், சந்தேகம், மந்தபுத்தி, தோல்விபயம், காரியதாமதம், கஞ்சம், தண்டனை, சிறைபடுதல், குறையுள்ளவர்களுடன் இணை சேருதல், பிடிவாதம், விரக்தி போன்ற தன்மைகளுடன் இருப்பார்,

CamScanner

அருகில் உள்ள இடம்;

சேமிப்பு அறை, சாப்பிடும் இடம், சத்தம் வரும் மிசின், மருத்துவ வார்டு, முனீஸ்வரன் கோயில், மண் குவியல், குப்பை மேடு பழைய கட்டிடம், டயர் கடைகள், கோர்ட், மயானம், நீதி மன்றம், தூக்குமேடை, சேமிப்புகிடங்கு, கிணறு, தூய்மை செய்யும் இடங்கள், பிணவறை, கசாப்புக் கடைகள் போன்ற இடங்களுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ; கிழக்கு

குலம், சாதி ; நாடார், பள்ளர், பறையர், சக்கிலியர், இலை வன்னார், மூப்பார், வாணிபர், சேனைக்குடியோர், குளுவர், கலப்புசாதி, சேனைக்குடியார், சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; இரும்பு

நிறம் ; நீலம்,

துணி ; கிழிந்த துணி

பழம் ; திராட்சை

தானியம் ; கடுகு, எள்

மலர் ; கருங்குவளை

மரம் ; மூங்கில், பனை

வடிவம் ; சுளகு

CamScanner

தூரம் ; 300

எண் ; 4, 8

மரு,வடு ; கால், தொடை, கால் முதுகுதண்டு பகுதி, கையின் எலும்புகள் தொடர்பான இடங்களில் இருக்கும்

பொருள்கள்;

கைத்தடி, குப்பைக் கூடை, துடைப்பம், தைலம், முடி, கம்பளி, வழவழப்பான பொருட்கள், மண் சார்ந்த வேதி பொருட்கள், எண்ணெய் வகைகள், கரி, கல், மண், போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

தொழில்கள்;

இரும்பு, இன்சூரன்ஸ், ஏசி, நீதித்துறை, சிறை காவலர் பணி, ஆயில் கிரீஸ் தொழில்கள், இரும்பு தொழில்கள், ஆடுமாடு வளர்ப்பு, ஆட்டோ மொபைல் தொழில்கள், டயர், மர வேலை, பஞ்சாயத்து, நகராட்சி, உள்ளாட்சி அரசியல் மற்றும் பணிகள், துப்புரவு, சத்தம் வரும் இடங்களில் பணி, கூலிவேலை, பழைய பொருள் வியாபாரம், எடுபிடி வேலை, பலநாள் செய்து முடிக்கும் பணிகள், கல் மற்றும் மண் வியாபாரம், திருட்டு தொழில்கள், துப்புரவு பணி, சுரங்க தொழில்கள், தாது பொருள் விற்பனை, அடிமை தொழில், கால்நடை வளர்ப்பு, முடி வியாபாரம், கம்பளி தொழில்கள் அடிமைகளை வைத்து வேலை வாங்குதல், கழிவுத் தொழில், முடி திருத்துபவர், தோல் தொழில்கள், ரியல் எஸ்டேட், சூது தொழில்கள், அயல் நாட்டு பணிகள், மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

CamScanner

உறுப்புகள்;


பொதுவாக சனி தொடை பகுதிகளை குறிக்கும், முழங்கால், எலும்பு, கணுக்கால், தொடை, தாடை, காது, இயக்க நரம்புகள்,

நோய்கள்;

கால் எலும்பு உடைதல், கால் நரம்பு சுருட்டை, முடக்கு வாதம், மேலிருந்து கீழே விழுதல், கற்களால் தாக்கப்படுதல், வலது காது, தாடை, பிட்டம், வலிப்பு, பல் நொறுங்குதல், சித்த பிரமை, பித்த நோய்கள், காசநோய், குஷ்டம், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், மலடு, அங்க ஊனம், கால் மற்றும் மூட்டு வலி, ஆணி நோய்கள் விரக்த்தியால் மனப்பிரழ்வு, அல்சர், வரண்ட தோல், நாக்கு உளர்ந்து போதல், தொடர் தும்மல், எலும்பு வளைதலால் வரும் சுவாச கோளாறு, கெட்டகனவு, இளநரை, குற்ற உணர்வுகளால் நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; டைபாயிடு, விச சுரம், தவறி விழுதல்,

ராகு கேது



படத்தில் குறியீட்டுப் புள்ளிகள் உள்ளது போல ராகு மற்றும் கேது ரிசபம், கடகம், கும்பம் என எதாவது ஒரு ராசியில் இருந்தால் அதிகாரம் அடைந்துள்ளது என்று பொருள் அந்த ஜாதகருக்கு கீழ்கண்ட பலன்களை கூறலாம்,

ராகு

பலன்:

வாழ்க்கை முழுவதும் காரணம் இல்லாத பயம், தேவையற்ற குழப்பம், கடன் சுமையினால் குடும்ப பிரச்சனை, குலத்தின் பெருமைக்கு ஊறு விழைவிக்கும் சிக்கலான செய்கை, புதுமையான நுட்பங்களை படைத்தல், சேரக் கூடாதவர்களுடன் இணைந்து துர்விசயங்களை செய்வது, குடும்பத்தில் தீராத வினோதமான நோய்கள் திடீரென எதிர்பாராமல் உருவாகுதல், தோலில் புது விதமான சரும வெடிப்பு, போதைக்கு அடிமையாகுதல், அவமானப்படுவது, கெட்ட பெயரை பெறுவது, சமூகத்தால் அருவறுப்பாக பார்க்கும் படியான நிலையை

அடைதல், தொடர் பிரச்சனை, உறவினர்கள் உதவிகள் இல்லாமல் போவது, அமானுஸ்யம் புதையல், லாட்டரி, சூதாட்டம் மீது ஆர்வம்,

பிரதான தன்மைகள்;

ராகு தந்தை வழி மூதாதையர்களை குறிக்கும் , ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை நோக்கியே செல்வார்,

பொது தன்மைகள்;

ஜாதகர் பைத்தியம், வறுமை, நோய், மயக்கம், விதவை போகம், கேடு நினைத்தல், குலத்தின் பெயரைக்கெடுத்தல், திடீர் அதிர்ஷ்டம், அலட்சியம், களவு, லஞ்சம் லாவண்யம், சாதி மாறுதல், கடின வார்த்தைகளை உபயோகித்தல் போன்ற தன்மைகளை கொண்டு இருப்பார்,

அருகில் உள்ள இடம்;

மாடி, நாகம்மா, புத்து கோயில், காளி, துர்க்கா ஆலயங்கள், மதுபான கடைகள், கஞ்சா விற்பனை செய்யும் பகுதி, காயலான் கடை, பாஸ்ட் புட், பரோட்டா கடை, மதுக்கடை, மயானம், மசூதி, குடோன், மாற்றுமத கோயில்கள், நிழலான பகுதி, பரந்து விரிந்த பகுதி போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும்போது, பலன் கேட்க வரும்போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

வீட்டின் வாசல் திசை ;வடக்கு, கிழக்கு

குலம், சாதி : ஆதி திராவிடர், முதலியார், பண்டாரம், மலைவாழ், கள்ளர், புலையர், பாம்பாட்டி, முகமதியர்,

இருளர், சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம்	; கருங்கல்
நிறம்	; கருமை
துணி	; பழைய துணி
பழம்	; வாழை
தானியம்	; கடுகு, உளுந்து, புகையிலை, கேழ்வரகு
மலர்	; மந்தாரை
மரம்	; கருவேலம்
வடிவம்	; மாலை
தூரம்	; அளவில்லாத நெடுந்தூரம்
எண்	; 4
மரு,வடு	; கால் பகுதியில் இருக்கும்

பொருள்கள்;

ஒவ்வொரு காலத்திலும் புதுமையாக இருக்கும் எல்லாமே ராகுதான், ரேடியோ, எலெக்ட்ரானிக்ஸ், காய்ந்த மரம், பதனிட்ட தோல்கள், ரசாயன பொருட்கள், தார், ரப்பர், பிளாஸ்டிக், மக்காத தன்மையுள்ள பொருட்கள், அகண்ட வாயுள்ளவைகள், போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் எதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான எதாவது நடக்கும்,

CamScanner

தொழில்கள்;

பங்கு சந்தை, பைனான்ஸ், நெட் பிசினஸ், பாஸ்ட்புட், ரியல் எஸ்டேட், பெட்ரோலியம், காயலான் கடை, கெமிக்கல், மது, கல் மண் சப்ளை, சட்டத்திற்கு புறம்பான தொழில்கள், விபச்சாரம், கீழ்தர தொழில்கள், சிறைப் பணிகள், மாயாஜாலம், மந்திரம் தந்திரம் பில்லி சூனிய வேலைகள், தலைமறைவு தொழில்கள், தனிமையாக செய்யும் தொழில்கள், தூர தேச தொழில்கள், விஷமருந்து உற்பத்தி மற்றும் விற்பனை, லாட்டரி மற்றும் சூதாட்ட வருமானம், பங்கு சந்தை, தரகு, பெரிய நிறுவனங்களில் பணிகள், உளவுத்துறை, கனரக வாகன பணிகள், பட்டாசு தொழில்கள், அன்னிய தேச மற்றும் பாஷை தொழில்கள், புலனாய்வுத்துறை, மருந்து, சித்த வைத்தியம், சோதிடம், அக்குபஞ்சர், எலெக்ட்ரானிக்ஸ், தூதுவர்கள், போட்டோ, வீடியோ தொழில்கள், அச்சுத் தொழில், நடிப்பு, வேற்று சாதி தொழில்கள், மதம் மாற்றும் தொழில்கள், அயல் நாட்டு பணிகள், மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

உறுப்புகள்;

பொதுவாக ராகு கைகளைக் குறிக்கும், வாய், கை, குடல், உதடு, காது, மலக்குடல், முடி,

நோய்கள்;

வாய், சுவாசம், ஈரல், மரு, வீசிங் (இளைப்பு), காரணம் இல்லாத நோய், காது, தலை, குடல், ரத்தம் மற்றும் அமிலங்கள் பாய்தலை தடுத்தல், விரை வீக்கம், புத்தி தடுமாற்றம், ஆவிகள் போன்ற பயம், பால்வினை நோய், ஓரினசேர்க்கை, சொரியாசிஸ், வெட்டி துண்டாதல், விஷ மரணம், வாயுத் தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன்,

வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து மரணங்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் விங்கி பெரிதாகும் நோய்கள், மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; தொழுநோய், உடல் நஞ்சாகுதல், வித்யாசமான நோய்கள்

கேது

பலன்;

வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் ஏமாற்றம், தொடர் தோல்விகள் மற்றும் சிக்கல்களால் விரக்தி, தனது மனமே தன்னையே நச்சரிப்பது போன்ற உணர்வு, பிறரால் அவசரப்பட்டு செய்த காரியத்தால் வழக்கு பஞ்சாயத்துகளில் சிக்கிக் கொள்வது, ஆர்வ மிகுதியால் பின் சிந்தனையின்றி பயமின்றி துணிச்சலாக எதையும் யோசிக்காமல் செய்து விடுதல், பிறகு அதனால் வாழ்க்கை முழுவதும் சரி செய்யவே முடியாத அளவுக்கு மாட்டிக் கொள்ளுதல், திடீரென கோவித்துக் கொள்தல், முக்கியமானவரிடம் இருந்து திடீரென விலகி விடுவது, விசம் அருந்தும் எண்ணம், தற்கொலை உணர்வு, வழக்குகளில் சிக்கிக் கொண்டு தண்டனை அனுபவித்தல் போன்ற பலன்கள் ஜாதகருக்கு நடக்கும்

பிரதான தன்மைகள்;

கேது தாய் வழி மூதாதையர்களை குறிக்கும், ஜாதகர் தனது வாழ்க்கை முழுவதும் மேற்குறித்த தன்மைகளை நோக்கியே செல்வார்,

CamScanner

பொது தன்மைகள்;

ஜாதகர் விரக்தி, ஞானம், தெளிவு, பற்றின்மை, பரதேசம், ஆய்வு, உதவுதல், கொலை சிந்தனை, தற்கொலை சிந்தனை, ஆய்வு, வறுமை போன்ற எண்ணங்களுக்கு உள்ளாவார்

அருகில் உள்ள இடம்;

மரத்தின் கீழ், ஓய்வறை, படிக்கு கீழ், கோயில், ஆசிரமம், பொது மருத்துவமனை, பாடசாலை, குறுகிய சந்துகள், வலைபொந்துகள், சாக்கடை குழாய்கள், கணேசன் ஆலயம், தையல் கடை, குறுகிய சந்து, சலூன், சிறை சாலை, சர்ச் போன்றவைகளுக்கு அருகில் இவரது வசிக்கும் இடம் இருக்கும், (அல்லது பலன் கேட்கும் போது, பலன் கேட்க வரும் போது இங்கிருந்து வந்திருப்பார், அல்லது அதற்கு முன் நடந்த சம்பவங்களில் மேற்கண்ட இடங்களுடன் தொடர்பில் இருந்து இருப்பார்)

விட்டின் வாசல் திசை ; தெற்கு, மேற்கு

குலம், சாதி ; முடி திருத்துபவர், கிருத்தவர், வேடர், இருளர், சீக், மீனவர், பௌத்த, சமூகத்தினை சார்ந்தவராக இருப்பார் அல்லது இந்த சமூகத்திற்கு நடுவில் இருப்பார்,

உலோகம் ; மைக்கா

துணி ; முருக்கியத் துணி

பழம் ; விளாம்பழம்

தானியம் ; கொள்ளு, சோளம்,

மலர் ; செவ்வல்லி

மரம் ; ஆலமரம், அசோகமரம், கற்றாழை

CamScanner

வடிவம் : மாலை

தூரம் : குறிப்பிட முடியாதது

எண் : 4, 7

மரு,வடு : கால் பகுதி மற்றும் கழிவுகள் வெளியேறும் பகுதியில் இருக்கும்,

பொருள்கள்;

நூல், கயிறு, தையல் மிஷின், வயர்கள், பூஜை சாமான்கள், பண்டைய பொருட்கள், நூல், போன்ற பொருட்களுடன் அடிக்கடி சம்பந்தப்படுவார், இந்த பொருட்களுடன் ஏதாவது சம்பந்தம் உண்டாகும் போது எல்லாம் வாழ்க்கையில் முக்கியமான ஏதாவது நடக்கும்,

தொழில்கள்;

வட்டி, முடி திருத்தும் தொழில், சட்டம், தையல், வெல்டிங், பாரம்பரிய மருத்துவம், ஹீலிங், மேற்கூரை வேலைகள், சன்னியாசம், சட்டம், எலெக்ட்ரானிக்ஸ், நவீன தொழில் நுட்பங்கள், கயிறு உற்பத்தி மற்றும் விற்பனை, கூடை, பாய் போன்ற முடைதல் பணி, உயர் பதவிகள், பொது தொண்டு நிறுவனங்கள், மாந்த்ரீகம், வேத உபாசகம், ஏமாற்றுத் தொழில்கள், குழாய் விற்பனை, தத்துவ நூலாசிரியர்கள், தொடு சிகிச்சை, வர்மம், ஆராய்ச்சி பணிகள், ஜோதிடம், பாவத் தொழில்கள், விபச்சாரம், சிறைவாசம், சுற்றுலாத் துறை, அன்னிய மொழி ஆசிரியர், ஆசிரமம் சேவை நிறுவனங்கள், இறுதியடையும் பணிகளை செய்வது, ரகசியபணிகள், தேசாந்திரம் சார்ந்த வைத்தியம், மேற்கண்ட தொழிலில் ஜாதகர் இருப்பார், மேலும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களும் இது தொடர்பான பணி மற்றும் தொழில்களையே செய்வார்கள்,

CamScanner

உறுப்புகள்;

கேது பொதுவாக கேது கால்களை குறிக்கும், காது, முடி, நரம்பு, நகம், ஆசனவாய், பிறப்புறுப்பு, தோல், குடல் போன்றவற்றை குறிக்கும்,

நோய்கள்;

முரட்டுத்தனமாக தாக்கப்படுதலால் காயம், ஆசணவாய், சிக்கலான நோய், வெளி பொருட்களை பொருத்துதல், நகம், மர்ம உறுப்பு, வைரஸ் தொற்று, பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், பீளை வெளியேருதல், தோல் உரிதல் அரிப்பு ,வயிறு நோய்கள், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, விடைதெரியாத நோய்கள், குடல் புழுக்கள், தேக மெலிவு, மேற்கண்ட நோய்கள் இவருக்கு அல்லது இவரை சுற்றியுள்ளோருக்கு ஏற்படும், முன்னெச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தலாம்

மரணக் காரணம்; தற்கொலை, தவறான நடத்தையினால் தாக்குதலுக்கு உள்ளாகுதல்,

மேற்கண்ட பலன்களை சரியாக சூழலுக்கு ஏற்ப கூறி சிறந்த ஜோதிடராகலாம், மேலும் அதிக ஜாதகங்களுக்கு பலன் கூறக்கூற அனுபவமே பல வித படிப்பினைகளை தந்து உங்களை தலைசிறந்த ஜோதிடராக மாற்றும்,

விடா முயற்சி, இடைவிடாத பயிற்சி ஜோதிடம் மட்டுமல்ல அனைத்து துறையிலும் மிக அவசியம் எனவே தொடர்ந்து இடை விடாமல் ஜாதகங்களை வைத்துக் கொண்டு பலன் கூறி பயிற்சி செய்யுங்கள்,

CamScanner

கிரகங்கள் இராசிகளில் உள்ள பலன்

ஒவ்வொரு கிரகங்களும் தான் உள்ள ராசியின் தன்மையை பெற்று செயல்படும் அதன் அடிப்படையில் கீழ் கண்ட பலன்கள் அளிக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு ராசிக்கும் குறிப்பிட்ட தன்மைகள் உண்டு அதுபோல ஒவ்வொரு கிரகமும் குறிப்பிட்ட உறவுகளைக் குறிக்கும் அதனைக் கொண்டு இந்தப் பகுதியில் பலன் கூறப்பட்டுள்ளது, இதில் ராசிகள் குறிக்கும் நோய்களை அந்த ராசியில் உள்ள கிரகங்களின் வழியாக குறிக்கப்படும் உறவுகள் அனுபவிப்பார்கள் அதன் அடிப்படையிலும் நோய் பற்றி கூறப்பட்டுள்ளது, இருப்பினும் இது மட்டுமே அந்த கிரகத்தின் பலனை தீர்மானிக்காது, அந்த கிரகத்துடன் இணைவு பெற்ற கிரகங்களின் தன்மையை பொறுத்து பலன்கள் மாறுபடும், எனவே இந்த பகுதியுடன் சேர்த்து அனைத்து பகுதிகளையும் படித்துவிட்டு அனைத்தையும் சேர்த்து புரிந்து கொண்டு ஜாதகத்தில் பொருத்தி சீர்தூக்கிப் பார்த்து பலன் கூறவும்,

மேசத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை சற்று முன்கோபியாக இருப்பார், உடல் வலிமை உடையவராகவும் காணப்படுவார், அவர் அரசு சார்ந்த பாதுகாப்பு பணிகள் மற்றும் அதிகாரமிக்க துறைகளில் பணியாற்றுவார், மருத்துவம், எலெக்ட்ரிசியன், அரசு சார் பணிகள் மற்றும் இயந்திரவியல் சார்ந்த நபராகவும் ஜாதகரின் தந்தை மற்றும் மகன் இருப்பார், தந்தை தொடர் உடல் நலம் குறித்த சிக்கலிலும் இருப்பார், ஜாதகர் அல்லது அவரது குடும்பத்தில் அரசுப்பணி மற்றும் சொந்த தொழிலில் இருப்பார்கள், ஜாதகருக்கு பல், தலை மற்றும் தாடை பிரச்சனை உண்டாகும், ஜாதகரின் தந்தை மற்றும் மகன் சமூகத்தில் நல்ல பெயரில் வாழ்வார்கள்,

குழந்தை பிறப்பு தொடர்பான தாமதம் உண்டு, தந்தையின் அனுகூலம் ஜாதகருக்கு திடீரென கிடைக்காமல் போகலாம்,

சந்திரன்:

ஜாதகர் சொந்த வீடு வாகன சுகங்களை உடையவர், ஜாதகரின் தாயார் கடுமையாக பேசக் கூடியவர், எதற்கு எடுத்தாலும் சிடுசிடுவென எரிந்து பேசுவார், முன்கோபமுடையவர், குடும்பத்தை தனது கடுமையான செய்கையால் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார், குடும்பத்தில் தனது கர்வத்தால் பிரச்சனைகளை சந்திப்பார், ஜாதகர் ஆதிக்க சிந்தனை உடையவராக இருப்பார், ஜாதகர் எப்போதும் போரிடும் சிந்தனையுடனே இருப்பார்

புதன்:

ஜாதகரின் சகோதரி மற்றும் மகள் சற்று கடுமையான நபர்களாக இருப்பார்கள், ஜாதகரின் மாமா திடகாத்திரமானவராக இருப்பார், ஜாதகரின் சகோதரி மற்றும் மகள் கடன் அல்லது உடல்நல குறைபாட்டினால் சில காலம் அவதியடைவார்கள், மாமாவில் ஒருவர் தொடர் நோயுள்ளவர், ஜாதகன் விளையாட்டில் ஆர்வமாக இருப்பார், இயந்திர நுட்பம் மற்றும் மருத்துவக்கல்வி. வேளாண்மை, அரசியல் போன்ற கல்வி கற்பார்,

சுக்கிரன்:

கோபமுள்ள இடத்தில்தான் குணமும் இருக்கும் என சொல்வார்கள் அதன் அடிப்படையில் இந்த ஜாதகரின் மனைவி குணமானவர், நல்ல உழைப்பாளி, அனைத்தையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வார், ஆனால் அதை சொல்லிக் காட்டியும் விடுவார், அனைவரையும் தனது கட்டுபாட்டில் கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனையில் அடக்கு முறைகளை கையாள்வார், ஜாதருக்கு வரும் மனைவி உறவாக

இருக்கும், அல்லது முன்பே பார்த்த பழகிய ஒருவர்தான் மனைவியாக வருவார், ஜாதகர் வாழும் இடத்திற்கு கிழக்கு திசையில் இருந்து வருவார்,

செவ்வாய்:

ஜாதகர் பெண் எனில் திருமணம் சில குழப்பங்களுக்கு இடையே நடைபெறும், அல்லது தாமதமாக 27 வயதிற்கு மேல் நடக்கும், ஜாதகரின் சகோதரர் உடல்நலம் சார்ந்த சிக்கலில் இருப்பார், கடும் சொற்களால் பிறர் மனம் நோக பேசுவார், சட்டென கோபமடைவார், ஜாதருக்கு எலும்பு முறிவு பல் பிரச்சனை, மற்றும் நெற்றியில் காயங்கள் உண்டாகும், ஜாதகர் கொடுக்கல் வாங்கல் வழியாக துரோகங்களை சந்திப்பார், கணவருடன் கருத்து வேறுபாடு ஏற்படும், பொறியியல், மருத்துவம் சார்ந்த பணிகளில் குடும்பத்தில் உள்ளவர்கள் இருப்பார்கள், பெண்களுக்கு குடும்ப வாழ்க்கை அவ்வளவு நிம்மதியை தராது, தாமதமாக திருமணம் செய்வது சிறப்பானது,

குரு:

ஜாதகர் விடாப்பிடியான மற்றும் முன்கோபம் உடையவர், அவசரபுத்தி உடையவர், உறவுகளுக்குள் தான் முக்கிய நபராக காட்டிக் கொள்வார், ஜாதகர் பிறருக்கு உதவப்போய் வழக்குகளில் சிக்கும் வாய்ப்பு உண்டு, நிலம் மற்றும் ஆவணங்கள் தொடர்பான விசயங்கள் வழியாக ஆதாயம் அடைவார், கடுமையான குணம் கொண்டவர், எதிரிகளிடம் சிந்தித்து வினையாற்றுவார்,

சனி:

ஜாதகருக்கு வம்சம் வழியாக வரும் மனம் மற்றும் குடும்ப சிக்கல்கள் உண்டாகலாம், கால்களில் பிரச்சனை ஏற்படும், ஜாதகர் பொறியியல் மற்றும் இயந்திரம் காவல் பணிகளை செய்வார், ஜாதகரின் குடும்பத்தில் சதா இயங்கி கொண்டிருக்கும் படியான

CamScanner

வேலையில் ஒருவர் இருப்பார், மருத்துவம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த ஆலோசனைகளை பலருக்கு வழங்குவார், ஜாதகருக்கு வாழ்க்கை முழுவதும் தோல்வியடைவது போலவே பயம் இருக்கும், பிறருக்கு உதவும் குணம் அதிகம் உடையவர், பூர்வீகத்தில் இருந்து வெளியேறுதல், பொது சிந்தனை உடையவர்,

ரிசபத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை ஆடம்பரமாக வாழ விரும்புவார், ஜாதகரின் மகன் செல்வந்தனாக வருவார், ஜாதரின் மகன் மற்றும் தந்தை வட்டி, நிதி, வாசனை திரவியங்கள், ரத்தினங்கள், நிதி சார்ந்த பணிகள், பங்கு சந்தை முதலீடு போன்றவற்றில் ஈடுபடுவார்கள், ஜாதகரின் தந்தை சுகவாசியாக இருப்பதற்கு ஆசைப் படுவார், ஜாதகர் பூர்வீக சொத்து குறித்து கனவிலேயே இருப்பார்,

சந்திரன்:

ஜாதகர் ஆடம்பர எண்ணம் உடையவராக இருப்பார், செல்வத்தின் மீது ஆசை உடையவராகவும் பேராசை எண்ணங்கள் நிறைந்தவராகவும் இருப்பார், சற்று சபல சிந்தனை உடையவர், விலையுயர்ந்த பொருட்களை அனுபவிக்க வேண்டும் என்ற அவா உடையவர், ஜாதகரின் தாயார் வசதியான குடும்பத்தில் பிறந்தவர், தனது குழந்தைகளை கஷ்டம் தெரியாமல் வளர்த்தெடுப்பார், தனது குடும்பத்தை பிற இடங்களில் உயர்த்தி பேசுவதோடு மட்டுமல்லாமல், அவ்வாறு வைத்தும் இருப்பார், ஜாதகர் கற்பனை பயமும் குழப்ப சிந்தனையும் உடையவர், அயல்நாட்டுப் பணி அல்லது அன்னிய நிறுவனங்களில் பணி புரிய ஆவலாய்

இருப்பார், மாற்றி மாற்றி பேசுவார், வாழ்க்கையில் நிம்மதிக்காக ஏங்குவார்,

புதன்:

ஜாதகரின் மகள் மற்றும் சகோதரிகள் ஆடம்பரமாக இருக்க விருப்பம் கொண்டவர்கள், இவர்கள் எப்போதும் வணிகம் மூலம் பொருளீட்டும் குணத்துடன் இருப்பார்கள், ஜாதகர் சதா பொருளாதாரம் பற்றிய தேடுதல்களிலும், அதற்கான பல்வேறு பயிற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வார், ஜாதகரின் மாமா மிகவும் புத்தி சாலியாகவும் ஓரளவுக்கு செல்வ செழிப்பானவராகவும் இருப்பார், ஜாதகர் பொருளாதாரம், வணிகவியல், உணவுசார் கல்வி, கணிதவியல் போன்ற கல்வி கற்பார்,

சுக்கிரன்:

திருமணம் தாமதமாகவும் குடும்ப வாழ்க்கையில் குழப்பம் நிறைந்ததாகவும் இருக்கும் காதல் வயப்படுவார், இவரது மனைவி அழகாகவும் அதே சமயம் ஆடம்பரமான போக்குடனும் இருப்பார், அதிகாரம் படைத்தவராக இருப்பார், ஜாதகருக்கு காம சிந்தனை மேலோங்கி காணப்படும், ஜாதகரின் குடும்பத்தில் நிதி மற்றும் ஆடம்பர பொருட்கள் வழியாக ஜீவனம் இருக்கும், பணம் கொடுத்து அதில் ஏமாற்றம் அடைவார், பணத்திற்காக சில சமயம் பொய் பேச வேண்டிய நிலை உருவாகும், ஜாதகரும் அவரது மனைவியும் நாகரீகமான வாழ்க்கை வாழ ஆசை உடையவர்கள், இவருக்கு வரும் வரன் அருகில் உள்ள பகுதியில் இருந்து வருவார், தெற்கு திசையில் இருந்து வருவார்,

செவ்வாய்:

ஜாதகரின் சகோதரர் ஆடம்பர பிரியராக இருப்பார், அவருக்கும் ஜாதகருக்கும் சில காலம் கழித்து கருத்து வேறுபாடு

CamScanner

உண்டாகும், ஜாதகருக்கு உடல் நலத்தில் சிக்கல் கடன் மற்றும் நண்பர்கள் வழியான துரோகங்கள் உண்டாகும், பங்குதாரர்களிடம் முதலீட்டை இழப்பார், செய் தொழில் கவனம் தேவை, இருப்பினும் சில நண்பர்களை முதலீடு செய்யாமல் நம்பலாம், ஜாதகர் பெண் எனில் திருமணத் தடை, கணவருடனான வாழ்க்கை சிக்கலாக இருக்கும் தாமத திருமணம் செய்தால் சிக்கலில் இருந்து தப்பிக்கலாம், கணவன் அழகானவராக இருப்பார்

குரு:

ஜாதகர் படோபகார சிந்தனை நிரம்பியவர், ஆசைகள் அதிகம் கொண்டவர், வசதியான வாழ்க்கை மீது விருப்பம் உடையவர், பிறருக்கு பொருளாதாரம் தொடர்பான ஆலோசனைகளை வாரி வழங்குவார், காசு விசயத்தில் கணக்கு பார்ப்பவர்,

சனி:

ஜாதகர் விலை உயர்ந்த அல்லது அழகு தொடர்பான பொருட்களை சார்ந்து தனது ஜீவனத்தை செய்வார், ஸ்பெகுலேசன் பங்கு வர்த்தக முதலீடில் பிரியமுள்ளவர், இவர் மற்றும இவரது குடும்பத்தினர் நிதிசார் பணிகளை மேற்கொள்வார்கள், இவரது வாழ்க்கையில் நடக்கும் குழப்பங்கள் இவரது மனைவி வழி குடும்பத்தில் நடப்பதுடன் ஒத்துப் போகும்,

CamScanner

மிதுனத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் மகன் கல்வியில் சிறந்து விளங்குவார், ஜாதகரின் தந்தை சமயோசிதமாக பேசக்கூடியவர், எதையும் வியாபார நோக்குடன் காண்பார், மகன், மற்றும் தந்தை ஆசிரியர், கணக்கு தொடர்பான, தொலை தொடர்பு, கணினி மற்றும் வியபாரம் போன்ற தொழிலில் ஈடுபடுவார்கள், ஜாதகரின் மகன் காதல் வயப்படுவார்,

சந்திரன்:

ஜாதகரின் தாய் புத்திக் கூர்மையுடையவர், கோள் மூட்டுதல், தன்னிடம் நம்பிக்கையாக கூறிய ரகசியங்களை பல இடங்களில் பரப்பி பிரச்சனைகளுக்கு காரணமாக இருப்பார், ரகசியங்களை காப்பாற்ற தெரியாதவர், இருப்பினும் அனைவருடனும் நல்ல உறவுகளை வைத்திருப்பார், பழக இனிமையானவராகவும் எதையும் நாசூக்காக கூறி புரிய வைப்பதிலும் கெட்டிக்காரரர், ஜாதகர் தனது விகடகவி பேச்சுகளின் மூலம் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வார், ஜாதகருக்கு பார்த்த அனைத்தையும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும், காதல் சிந்தனையும் இருக்கும், ஜாதகருக்கு வீடு வாகன யோகங்கள் எளிதாக அமையும்

புதன்:

ஜாதகரின் மாமா மிகவும் புத்திசாலித்தனம் மிக்கவர், வணிகத்தில் மிகுந்த தேர்ச்சியுடையவர், ஜாதகர் சகோதரி மற்றும் மகள் விசயமாக கவலை அடைவார், காதல் கல்வியில் தடை அல்லது இடர்பாடுகள் ஏற்பட்டு சரியாகும், அது போலவே ஜாதகரின், மகள் மற்றும் சகோதரிகள் புத்திக் கூர்மையானவர்கள், நல்லகல்வி கற்றவர்கள், ஜாதகரும் எதையாவது கற்க வேண்டும்

என்ற சிந்தனையுடயவ்ர், ஜாதகரின் மகள் மற்றும் சகோதரிகள் கோள்மூட்டும் தன்மையுடையவர்கள், ஜாதகர் கணிதம், கணினி பொறியியல், வணிகவியல், கல்வித்துறை போன்ற கல்விகள் கற்பார், ஜாதகர் இளமையான தோற்றத்துடன் காணப்படுவார்,

சுக்கிரன்:

ஜாதகரின் மனைவி சாமர்த்தியமாக அனைவருடனும் பழகுவார், புத்திசாலி, கோள் சொல்லும் குணமுடையவர், நன்றி மறக்காதவர், அவர் வங்கி மற்று கல்வி சார்ந்த பணிகளை உடைய குடும்பத்தில் இருந்து வருவார், ஜாதகன் வாழும் இடத்திற்கு மேற்கு திசையில் இருந்து வருவார், ஜாதகருக்கு தூரத்து சொந்தத்தில் இருந்து வருவார், ஜாதகன் காதல் வயப்படுவார், மனைவிக்கு நரம்பு மற்றும் தோல் சார்ந்த சிக்கல் வந்து போகும், ஜாதகரின் மனைவியும் சகோதரியும் கருத்து வேறுபாட்டால் சண்டை செய்து கொள்வர் ஜாதகருக்கு அது தொல்லையாக மாறும், படிக்கும் இடத்தில் பெண் தோழிகள் வழியாக ஜாதகர் தொல்லைகளை சந்திப்பார்,

செவ்வாய்:

ஜாதகர் ரத்த சோகை மற்றும் குறைந்த ரத்த அழுத்த சிக்கலால் அவ்வப்போது அவதியுறுவார், ஜாதகரின் கணவர் இளைமையானவர், அதிபுத்திசாலி, காதல் சிந்தனை மிகுந்தவர், ஆனால் அவருடன் உரையாடலில் புரியவைக்க முடியாமல் அடிக்கடி சண்டை உண்டாகும், ஜாதகரின் சகோதரர்கள் வழியாக சொத்து சம்பந்தமான வழக்குகள் ஏற்பட வாய்ப்புண்டு, ஆனால் அது பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வரும்,

குரு:

ஜாதகர் தனது பேச்சினால் அனைவரையும் கவர்வார், தனது சுய மரியாதைக்காக மிகுந்த போராட்டங்களை சந்திப்பர்,

இருப்பினும் சமூகத்தில் நன் மதிப்புடன் வாழ்வார், குழந்தை பிறப்பு மற்றும் கரு கலைதல் போன்றவற்றால் மன அழுத்தத்தை சந்திப்பார், ஜாதகரின் குடும்பத்தில் நிதி சார்ந்த பணிகள் வழியாக பணம் ஈட்டுவார்கள், ஜாதகர் பிறருக்கு சதா ஆலோசனை சொல்லிக் கொண்டே இருப்பார், இவருக்கு பயிற்சியளிக்கும் குணம் எதற்கெடுத்தாலும் கருத்து கூறும் குணம் அதிகமாக இருக்கும்

சனி:

ஜாதகரின் சிந்தனை மாற்றாக தலைகீழாகவும் இருக்கும் இதனால் ஜாதகரின் செயலும் சிந்தனையும் ஒத்து போகாது, இவர் அதீத சோம்பேறித் தனமாகவும் திடீரென சுறுசுறுப்பாகவும் இருப்பார் அதாவது வேகமும் நிதானமும் கலந்து இருக்கும், இவர் கணக்கு வழக்கு ஆவணங்கள் சார்ந்த தொழில் சொல்லித்தரும் தொழில் வழியாக வருமானத்தையும் பெறுவார், ஜாதகருக்கு காலில் நரம்பு சார்ந்த சிக்கல் வரலாம், இவருக்கு மூத்தவர்கள் இவருடன் நிலம் தொடர்பான விவாதங்கள் செய்வார்கள்,

கடகத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை சதா பிரயாணம் செய்வதில் ஆர்வம் உடையவர், அவர் சற்று சபல சிந்தனையுடன் இருப்பார், ஜாதகரின் மகன் சில சமயங்களில் அவமானங்களை சந்திப்பார், இவர் நிலையில்லாத குணங்களுடன் இருப்பார், ஜாதகரின் மகன் மற்றும் தந்தை போக்குவரத்து, வேளாண்மை, மாநில அரசியல், மற்றும் கலைகளில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள்,

CamScanner

சந்திரன்:

ஜாதகர் இடத்திற்கு தகுந்தாற் போல பேசுபவர், கலைகளில் நாட்டமுடையவர், சபல சிந்தனை உள்ளவர், ஜாதகரின் தாயார் அழகானவர், மிகுந்த பாசமுடையவர், இரக்கம் மற்றும் தயாள குணமிக்கவர், சில சமயங்களில் அவமானங்களை சந்திப்பார், இவரும் கலைகளின் மீது ஆர்வமுடையவர், மொழி பற்றிய ஆர்வமுடையவர், ஜாதகருக்கு சுவாசம் சளி கண்கள் சார்ந்த உடல் நலப் பிரச்சனை மற்றும் வயிறு கர்ப்பை பிரச்சனை உருவாகும் ஐடி துறை, மருத்துவம் மற்றும் வெளிநாட்டு தொழில்கள் அமையும், ஜாதகர் குழப்பமான சிந்தனையுடனே வாழ்வார், வீடு, வாகனகள் மீது ஆசை, அதனால் வருமானம் அதன் வழியாக சிக்கலையும் சந்திப்பார், இவருடன் இருப்பவர்களை தனது பிரச்சனையை புலம்பி புலம்பி எரிச்சலாக்குவர், பல சமயங்கள் இவரது போன் நம்பரை பலரும் பிளாக் செய்வார்கள்,

புதன்:

ஜாதகரின் சகோதரி மிகவும் கனிவானவராக இருப்பினும் சொத்து தொடர்பான தொல்லைகளை தருவார், ஜாதகர் காதல் விவகாரத்தினால் அவமானம் அடைவார், விட்டுப் பத்திரம் வழியாக சிக்கல் இருக்கும், ஜாதகருக்கு பிறக்கும் பெண் குழந்தை மூலமாக ஜாதகருக்கு அவப்பெயர் உண்டாவது போல பயம் இருக்கும், ஜாதகர் செவிலியர், கலை, இலக்கியம், உணவு சார் கல்வி, வேளாண்மை, விடுதி மேலாண்மை. தொடர்பான கல்வி கற்பார், ஜாதகர் சிறு நீரக தொல்லை அதன் விளைவான தோல் உபாதைகளை சந்திப்பார், கால்களில் அரிப்பு அதிகமாகும், ஜாதகரின் மகள் அல்லது சகோதரி தொலை தூரத்தில் வசிப்பாள்,

CamScanner

சுக்கிரன்:

ஜாதகரின் குடும்பத்தில் ஆசிரியர் அல்லது தையல் சார் பணிகள் செய்பவர் இருப்பார், ஜாதகர் காம சிந்தனைகளால் அவதியுறுவார், பாலுறுப்பு தொற்றுகள் உண்டாகும், மனைவி வடக்கு திசையில் இருந்து வருவார், அவர் லட்சணமாகவும் இருப்பார், மன அழுத்தம் மிக்கவராகவும் நீர் சார் நோய்கள் கொண்டவராகவும் இருப்பார், ஜாதகர் மனைவியால் அவமானம் அடைவார், தாய் உறவின் வழி வரன் அமையும் பெண் தோழிகள் வழியாக நிம்மதி இழப்பு உண்டாகும், கண்ணில் நீர் வடிதல் போன்ற கோளாறுகள் ஏற்படும், ஜாதகரின் மனைவி சதா தொல்லை செய்பவராகவும் சந்தேக குணம் கொண்டவராகவும் இருப்பார், ஜாதகருக்கு வீடு வாகன சேர்க்கை அதனால் வருமானமும் உண்டு, கணவனின் குடும்பம் தொல்லை தரும். அதே சமயம் திடீரென உடல் நலமில்லாமல் போன சமயத்தில் அனுசரனை மற்றும் அன்பு காட்டி கருணையுடன் நடந்து கொள்வார்கள்,

செவ்வாய்:

ஜாதகர் பெண் எனில் திருமணம் தாமதமாகும் அல்லது திருமண வாழ்க்கை சிக்கலாக இருக்கும், ஜாதகர் கடன் நட்பின் மூலம் ஏமாற்றம் பங்குதாரர் வழியாக நஷ்டம் போன்றவைகளால் மன அழுத்தமடைவார், மேலும் உடல்நலம் சார்ந்த சிக்கலகளையும் சந்திப்பார், சகோதரர் உறவில் விரிசல் இருந்தாலும் அவசர காலத்தில் சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும், கணவன் தாய் வழியில் வருவார், கணவன் அழகானவராகவும் இருப்பார், இருப்பினும் திருமண வாழ்க்கை அவ்வளவு நிம்மதியாக இருக்காது, ஒருவேளை விரும்பிய வரணை மணந்தால் நிம்மதியான திருமண வாழ்க்கை உண்டு, அல்லது 27 வயதிற்கு மேல் திருமணம் சிறப்பானது, கணவனின் இல்லத்தின் அருகே நீர் நிலைகள் இருக்கும் அவர் வாகனம்

மற்று வீடுகள் மீது ஆர்வமும் அதனால் வருமானத்தையும் பெறுவார், மருத்துவம் பொறியியல் தொடர்பான பணியில் குடும்பத்தில் இருப்பார்கள்,

குரு:

ஜாதகர் தாயின் மீதி நம்பிக்கை மற்றும் பிரியம் கொண்டவர், தாழ்வு மனப்பான்மை நிறைந்தவர், இவர் சதாகலமும் குழப்பத்திலும் பயத்திலும் சுய மரியாதை குறித்த விழிப்புணர்வுடனும் இருப்பார், இருப்பினும் பல இடங்களில் இவரது தேவையற்ற தலையீடுகளால் அவமானமடைவார், ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம் ஏற்படும், வயிறு குடல் சார் நோய்களுக்கு ஆளாவார், சற்று தேகம் பருமனாக இருக்கும், வாயு மற்றும் அஜீரணக் கோளாருகள் உண்டு, பல இடங்களுக்கு சுற்றி திரியும் ஆசை கொண்டவர், அடுத்தவருக்கு வண்டி வண்டியாக அறிவுரை கூறுவதில் வல்லவர், ஆனால் அனைவரின் மீதும் அக்கறை கொள்வார், அதே சமயம் பலராலும் தூக்கி எறியப்படுவார், இவர் கருணை குணம் கொண்டவர், பிடிக்காத சிலரிடத்தில் கடுமையானவராக காட்டிக் கொள்வார்

சனி:

ஜாதகர் மற்றும் ஜாதகரின் குடும்பத்தில் அயல்நாடு மற்றும் தொலை தூரத்தில் பணிக்கு செல்பவர் இருப்பார், ஜாதகர் உணவு சார் பணிகளின் வழியாக ஆதாயம் பெறுவார், ஜாதி மாறிய திருமணங்கள் இவர் குடும்பத்தில் நடக்கும் பூர்வீகத்தில் இருந்து வெளியேறி நல்ல நிலையை அடைவார், கால் மற்றும் கால் நரம்பு பிரச்சனைக்காக மருத்துவம் பார்ப்பார், சதா உழைத்துக் கொண்டே இருக்கும் நபராக இருப்பார், தொழிலில் திடீரென பெரிய ஆளாக வேண்டும் என்ற பேராசை, புதையல், அதிர்ஷ்டம் போன்றவற்றினை எதிர்பார்ப்பார், இவரது குடும்பத்தில்

CamScanner

ஒருவருக்கு கருவில் குழந்தைக்கு பிரச்சனை ஏற்படும், கால் ஊனம் அல்லது காலில் அறுவை சிகிச்சை ஒருவருக்கு நடக்கும்,

சிம்மத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை ஆளுமை குணம் மிக்கவராக இருப்பார், அரசியல் சிந்தனை மிகுந்தவர், ஜாதகரின் மகன் நிர்வாக திறமையுள்ளவராகவும் மதிப்பு மிக்க பொறுப்புகளையும் பெறுவார், இவர்கள் இருவரும் சமூகத்தில் தலைமை பொறுப்புகள் வகிப்பதில் அதிக ஆர்வமுடன் இருப்பர், தந்தை தொடர் உடல் நலம் குறித்த சிக்கலிலும் இருப்பார், ஜாதகர் அல்லது அவரது குடும்பத்தில் அரசுப் பணி மற்றும் சொந்த தொழிலில் இருப்பார்கள், ஜாதகருக்கு பல், தலை மற்றும் தாடை பிரச்சனை உண்டாகும், ஜாதகருக்கு தந்தையின் அனுகூலம் குறைவாகவே இருக்கும்,

சந்திரன்:

ஜாதகரின் தாயார் நிர்வாக திறமை மிக்கவராக இருப்பார், சுய நலவாதியாக அனேக இடங்களில் நடந்து கொள்வார், ஜாதகன் தலைமை தாங்கும் ஆசையுடையவர், அரசியல் ஆர்வம் உடையவராக இருப்பார், தனது அரசியல் திறமையை காட்ட முற்படுவார், ஜாதகரும் அவரது தாயாரும் எந்த விசயமாக இருந்தாலும் விடாப்பிடியாக அதை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள்,

CamScanner

புதன்:

ஜாதகரின் சகோதரி மிகவும் பொறுப்பனவர், ஜாதகரின் மகள் குடும்ப பொறுப்புகளை நிர்வாகம் செய்வார், ஜாதகர் பல சமயங்களில் அதிகார தோரணையில் பேசுவார், தோலில் கொப்புளங்கள் சூட்டினால் ஏற்படும், ஜாதகர் திருமண வாழ்க்கை குறித்த குழப்பமான பயமான முடிவுகளை வைத்து இருப்பர், ஜாதகர் தனது மாமன்களால் வழி நடத்தப்படலாம் பல சமயங்களில் அவர்களுடன் கருத்து வேறுபாடுகளும் தோன்றும், ஜாதகர் நேரம் தவறாமையில் கவனமாக இருப்பார், கல்வியில் தடைகள் உண்டாகும், ஜாதகருக்கு விரல் போன்ற சிறு எலும்புகளில் அடிக்கடி முறிவு அல்லது வலி ஏற்படும், மனிதவள மேலாண்மை, மருத்துவம், சமூக கல்வி, பொருளாதாரம் போன்றவற்றை கற்பார்,

சுக்கிரன்:

ஜாதகர் பணம் பொருள் சம்பாதிப்பதில் மிகவும் குறியாக இருப்பார், தனது செல்வத்தின் மூலம் அனைவரையும் தனது வசம் இழுக்க முடியும் என்ற முடிவில் இருப்பார், இவர் திருமணத்திற்கு பின் நல்ல வளர்ச்சியை சந்திப்பார், இவரது மனைவி ஆளுமை அடக்கியாளும் குணம் மற்றும் கடுமையான குணமுடையவர், அவர்தான் குடும்ப பொறுப்புகளை ஏற்று நடத்தும் நிலை உருவாகும், அவரது குடும்பத்தில் அரசு அல்லது சொந்த தொழில் மூலம் ஜீவனம் செய்பவர்கள் உண்டு, மனைவி கிழக்கு திசையில் இருந்து வருவார், இந்த ஜாதகர் எப்பொழுதுமே தோழிகளின் அன்புக்கு கட்டுப்பட்டவராக இருப்பார், தோழிகளுடன் அவ்வப்பொழுது உரிமையின் காரணமாக கருத்து வேறுபாடு உண்டு,

CamScanner

செவ்வாய்:

ஜாதகர் துணிச்சலானவர், ஜாதகரின் கணவர் மிகவும் அதிகாரம் செய்யும் குணம் கொண்டவர், தொழில் அல்லது அதிகார பணிகள் வழியாக பொருள் ஈட்டுவார், இவரது சகோதரர் ஆளுமையான நபராகவும், புகழ்பெற்ற நபராகவும் இருப்பார், ஜாதகர் எவ்வளவு துன்பம் ஏற்படினும் பொறுமை இழக்காதவர், கடின சித்தத்துடன் போராடும் சிந்தனை உடையவர், நண்பர்களின் கட்டுபாட்டில் இருப்பார் அவர்கள் சொல்வதுதான் சரியென வாதிடுவார்,

குரு:

ஜாதகர் படைப்பாற்றல் மிக்கவர், எதையும் தானாகவே உருவாக்கி வளர்த்தெடுக்கும் ஆசை உடையவர், அரசு மற்றும் ஆளுமை சார்ந்த வழியாக வருமானம் பெறுவார், அரசியல் ஆர்வமும் சமூக சிந்தனையும் கொண்டவர், குடும்ப கௌரவம் குறித்து அக்கறையுடன் செயலாற்றுவார், இவருக்கு சிறந்த ஆசிரியர் அல்லது குரு கிடைப்பார், இவரும் தனக்கு அனுபவத்தில் கிடைத்த அவற்றை பலருக்கு அறிவுரையாக சொல்லும் குணம் கொண்டவர், ஜாதகர் புகழுக்காக ஏங்குவார், குழந்தைகள் தொடர்பான கவலைகளுடனே இருப்பார்,

சனி:

ஜாதகரின் குடும்பத்தில் பல விதமான விடை தெரியாத குழப்பங்கள் ஏற்படும் பில்லி சூனியம் போன்ற நம்பிக்கை உண்டாகும், ஜாதகர் தானம் தர்மம் செய்யும் குணம் உடையவர், வெட்டி வீராப்பு பேசுவார், ஜாதகருக்கு வாழ்க்கை முழுவதும் தோல்வியடைவது போலவே பயம் இருக்கும், பிறருக்கு உதவும் குணம் அதிகம் உடையவர், பூர்வீகத்தில் இருந்து வெளியேறுவார், பொது சிந்தனை உடையவர், ஜாதகர் அரசு மற்றும் தந்தையின் தொழிலில் ஈடுபடுவார், சுயமாக தொழில் செய்யும் ஆசை

CamScanner

இருக்கும், கால்களில் சிகிச்சை குடும்பத்தில் யாருக்கேனும் நடக்கும், ஜாதி மாறிய திருமணம் செய்தவர் குடும்பத்தில் இருப்பார், இரட்டை குழந்தைகள் குடும்பத்தில் பிறக்கும்

கன்னியில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை மற்றும் மகன் இருவருமே பிறரிடம் லாவகமாக பேசும் தன்மை கொண்டவர்கள், வியாபாரத்திற்கு ஏற்றவர்கள், பலரையும் அனுசரித்து செல்லும் வல்லமை பெற்றவர்கள், இவர்கள் வேளாண்மை, ஆசிரியர்பணி, கணக்கு பார்த்தல், நிலத்தரகு, உணவுப் பொருள் சில்லரை வணிகத்தில் இருப்பார்கள்

சந்திரன்:

தாய் சமயோசித புத்தியுடையவர், குடும்ப சிக்கல்களை லாவகமாக கையாண்டு சமாளிக்கும் திறன் கொண்டவர், எதையும் சாமர்த்தியமான பேச்சாற்றல் மூலமாக கையாளக் கூடியவர், ஜாதகர் தர்க்க சிந்தனையுடையவர், ஜாதகருக்கு காதல் சிந்தனையிருக்கும், அனைத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமிருக்கும்,

புதன்:

ஜாதகர் நளினமானவர், மிகவும் நுட்பமானவர், மிகவும் இளமை மற்றும் சுறுசுறுப்பானவர், பெண்கள் வழியில் தொல்லைகளை எதிர் கொள்வார், ஜாதகர் காதல் தொடர்பான சிக்கலை சந்திப்பர், நல்ல கல்வி உண்டு, மகள் மற்றும்

சகோதரியின் வாழ்க்கையில் சிக்கல் உண்டு, உதவும் எண்ணம் கொண்டவர், அவ்வப்போது சிறுபிள்ளைத் தனத்துடன் குறும்பு செய்யும் குணம் கொண்டவர், தான் சொல்ல வருவதை சரியாக சொல்ல தெரியாமல் பகைகளை உண்டாக்கிக் கொள்வார், தோல் நோய்கள் வந்து போகும், கணிதம், கட்டிடக்கலை, கல்வித்துறை, கணினி பொறியியல், மின்னணுவியல், வணிகவியல், சட்டம் போன்ற கல்விகளில் இருப்பார், ஜாதகர் டெக்ஷ்டைல்ஸ், எலெக்ட்ரானிக் கட்டுமானம் துறைகளில் தொழில் செய்யும் ஆர்வத்துடன் இருப்பர்,

சுக்கிரன்:

ஆணாக இருந்தால் திருமண விசயத்தில் குழப்பம் உண்டு தாமதமான திருமணம் அல்லது குழப்ப திருமணம் உண்டு, பெண்ணாக இருந்தால் ஜாதகருக்கு வரும் கணவரின் வயது 28 க்கு மேல் இருக்கும் அல்லது காதல் திருமணமாக இருக்கலாம், ஜாதகர் பாலுணர்வு மிக்கவராகவும் சதா தாம்பத்ய ஆசை உடையவராகவும் இருப்பர், காதல் விருப்பம் இருக்கும், இவர் பணம் பொருளாதாரம் வழியாக சீட்டு போடுதல் வட்டிக்கு விடுதல் போன்ற வழியில் வருமானம் ஈட்டுவார், இவர் பணம் சார்ந்த விசயங்களில் பொய் சொல்ல வேண்டிய நிலை உண்டாகும், கன்னம், மூத்திர தாரை போன்ற உறுப்புகளில் தொற்றுகள் உண்டாகும், ஜாதகரின் மனைவி இளமையாகவும் அழகு பொருந்திய நபராகவும், சுருட்டையான கேசம் உடையவராகவும் இருப்பார், மனைவி ஜாதகர் வசிக்கும் இடத்திற்கு தெற்கு திசையில் இருந்து வருவார்,

செவ்வாய்:

ஜாதகர் ரத்த சிவப்பு அணு குறைபாடு உடையவர், எப்பொழுதும் இயலாமையை குறித்து சிறுமை பட்டுக் கொண்டே இருப்பார், இவரது சகோதரர் வழியாக உதவிகள் கிடைக்கும்

CamScanner

இருந்த போதிலும் நிலம் தொடர்பான வழக்கு பூர்வீக சொத்தில் சிக்கல்கள் சதிப்பார், ஜாதகரின் கணவர் வசீகரமானவராகவும் சிறு வயது நபரைப் போலவும் இருப்பார், உருவம் மற்றும் குணம் இரண்டிலும் இளமையாக இருப்பார், பல இடங்களுக்கு சென்று வியாபாரம் தொழில்கள் மூலம் வருமானம் உற்பத்தி செய்வார், கணிதம் தரகு, சொல்லித்தருதல் போன்ற தொழில்கள் செய்வார், கடன் தொல்லைகள் உண்டு,

குரு:

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தொடர்பான சிக்கல் உண்டு, ஜாதகர் தாழ்வு மனோநிலை கொண்டவர், தனது கௌரவம் குறித்து அதிகமாக கவலை கொள்வார், அதே சமயம் பலருக்கும் தெரிந்த நபராகவும் சுய கௌரவம் நிறைந்தவராகவும் நல்லவராகவும் அறியப்படுவார், இவர் சில வெளியே சொல்ல கௌரவ குறைச்சலான காரியங்களை உணர்ச்சி வயத்தால் செய்து இட்டு அதற்காக தன்னையே நொந்து கொள்வார், இவருக்கு கருக்கலைதல் உண்டாகும் அதேபோல இவருடன் பிறக்க இருந்த ஒரு கருவும் கலைக்கப்பட்டு இருக்கும், ஜாதகர் நிதி சார்ந்த வழியில் வருமானம் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர், கலக புத்தி கொண்டவர், குறுக்கு புத்திக்காரர், காதல் சிந்தனை கொண்டவர், தன்னை சிறு வயது நபர் போலவே எப்போதும் நினைத்துக் கொள்வார் அதே சமயம் கண்ணியமான வெளிப்பாடுகளையும் காட்டுவார், இவர் ஒரு குழப்பவாதி, ஆனாலும் அனுபவம் மிக்கவர், குறிப்பிட்ட காலத்திற்கு பின் இவர் வாழ்க்கை அனுபவத்தினால் பலருக்கு ஆலோசனை வழங்குவார்,

சனி:

ஜாதகரின் சகோதரிகளால் தொல்லையுண்டு, கல்வி, வங்கி வீட்டு உபயோக பொருட்கள் வழியாக வருமானம் குடும்பத்தில் ஒருவர் பெறுவார், ஜாதகருக்கு அல்லது அவரது குடுமபத்தில்

CamScanner

கால் நரம்பு சம்பத்தப்பட்ட உபாதைகள் உண்டாகும், ஜாதகரின் குடும்பத்தில் பெண்கள் வழியான பிரச்சனை அல்லது வழி வழியாக பெண்களுக்கு பிரச்சனை போன்ற சிக்கல்கள் இருக்கும், இவர்கள் இவரது குடும்பத்தில் ஒரு பெண்ணை வணங்கும் வழக்கம் உடையவர்கள்,

துலாத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகருக்கு குழந்தை தொடர்பான சிக்கலிருக்கும் இவர் எப்போதும் குழந்தைகள் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருப்பார், ஜாதகரின் தந்தை, மகன் இருவரும் ஆடம்பர வாழ்க்கை மீது ஆர்வம் கொண்டவர்கள், தன்னை விளம்பரம் செய்து கொள்வதில் அதிக முனைப்பு காட்டுபவர்கள், நல்ல வசதியான வாழ்க்கையை பெறுபவர்கள், பார்ப்பதற்கு கவரும் வண்ணம் தோற்றம் உடையவர்கள், இவர்கள் விளம்பரப் பணி, கலைத்துறை, நிதி மற்றும் விற்பனை பிரிவில் பணியாற்றுவார்கள், தந்தை தொடர் உடல் நலம் குறித்த சிக்கலிலும் இருப்பார், ஜாதகர் அல்லது அவரது குடும்பத்தில் அரசுப் பணி மற்றும் சொந்த தொழிலில் இருப்பார்கள், ஜாதகருக்கு பல், தலை மற்றும் தாடை பிரச்சனை உண்டாகும், ஜாதகருக்கு தந்தையின் அனுகூலம் குறைவாகவே இருக்கும், சொந்த தொழில் ஆர்வம் உண்டு,

சந்திரன்:

ஜாதகர் அலங்காரப் பிரியர், ஜாதகரின் தாயார் தன்னிடம் உள்ளதை கொண்டு நிறைவாக வாழ்க்கை நடத்துபவர், கனிவும், அனுசரனையும் கொண்டவர், ஜாதகருக்கு எப்படியாவது தான்

செல்வ செழிப்புடன் இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும், தன்னை அவ்வாறு வெளிக் காட்டியும் கொள்வார், இவரின் தாயர் விட்டிற்குள் எப்படி இருந்தாலும் தமது குடும்பம் செழிப்புடன் உள்ளது போல சமூகத்திடம் காட்டிக் கொள்வார், ஆசிரியர், கட்டுமானம் சார் தொழில் மூலமாக வருமானம் பெறுவார், காம சிந்தனை நிறைந்தவராகவும் இருப்பார்,

புதன்:

ஜாதகர் காதல் குணம் நிறைந்தவர், ஜாதகரின் சகோதரியுடன் நிதி விசயமாக கருத்து வேற்றுமை உண்டாகும், ஜாதகரின் மகள் அழகாகவும் தன்னை ஆடம்பரமாகவும் காட்டிக் கொள்வார், ஜாதகர் கல்வி வழியாக அடையாளத்தை அடைவார், வணிகம் வழியாக ஆதாயம் உண்டு, மகள் நல்ல வசதியான வாழ்க்கை வாழ்வார், வேற்றுமொழி இலக்கியம், ஊடகவியல், ஒப்பனையியல், கலை, வணிகவியல், தாதுப் பொருள் சார் கல்வி கற்கும் நாட்டமுடையவர், நிலம் தொடர்பான லாபமுண்டு,

சுக்கிரன்:

ஜாதகர் குடும்ப வாழ்க்கை குறித்து தேடுதலுடனே இருப்பார், காம சிந்தனை மேலோங்கி காணப்படும், மனைவியினால் சிக்கல் நிம்மதியின்மை அவ்வப்போது விரிசல் இருக்கும், இவர் காதல் அல்லது உறவுகார வழியில் திருமணம் செய்தால் ஓரளவுக்கு சிக்கல் குறையும் அல்லது 29 வயதுக்கு மேல் திருமணம் செய்வது உத்தமம், இல்லாவிட்டால் திருமண வாழ்க்கை மிகுந்த தொல்லையாக இருக்கும், பெண் ஜாதகம் எனில் தோழிகள் வழியாக பகை நிம்மதி இழப்பு உண்டாகும் இவருக்கு வரும் கணவருக்கு வயது அதிகமாக இருக்கும், ஜாதகர் மற்றும் அவரது குடும்பத்தில் உள்ளவர்கள் ஆடம்பரமான பொருட்கள் அல்லது நிதி சார்ந்த தொழில் மூலம் வருமானம்

CamScanner

பெறுவார்கள், ஜாதகருக்கு வரும் வரன் இவர் வசிக்கும் அல்லது இவரது பூர்வீகத்திற்கு மேற்கில் இருந்து வருவார்

செவ்வாய்:

ஜாதகர் நண்பர்களால் சூழப்பட்டு இருப்பார், நண்பர்கள் வழியாக மிகுந்த சிரமங்களை சந்திப்பார், வியாபாரம் தொழிலில் உறவுக்காரர் அல்லது நண்பர்களுடனோ அல்லது அவர்களுக்கு உதவுவதாலோ பெரிய எமாற்றம் மற்றும் நஷ்டங்களை எதிர் கொள்வார், ஜாதகர் கடன் கொடுக்கல் மற்றும் வாங்கல் இதன் வழியாகவும் நிம்மதியை இழப்பார், இவரது சகோதரன் இவருக்கு தொல்லையாக இருப்பினும் மிக முக்கியமான காலத்தில் உதவுவார், இது பெண் ஜாதகமாக இருந்தால் இவருக்கு தாமத திருமணம், திருமணத்தில் குழப்பம் ஏற்படும், இவருக்கு கணவன் மூலமாக நிம்மதி இருக்காது, ஜாதகர் கடன், வழக்கு, மேலும் உடல்நலம் சார்ந்த மருத்துவ செலவுகளை சந்திப்பர், இவரது குடும்பத்தில் மருத்துவம் பொறியியல், சமையல் பணிகளில் இருப்பார்கள்,

குரு:

ஜாதகர் படோபகாரி தன்னை மிக முக்கிய நபராகவும் அழகானவராகவும் செல்வ செழிப்பானவராகவும் காட்டிக் கொள்வார், எதிர்பாலின நபர்களுடன் இயல்பாகவும் கவரும் வகையிலும் பேசக்கூடியவர், எப்போதும் வசதி வாய்ப்புகளோடு வாழ வேண்டும் என்ற ஆசை கொண்டவர், கல்வியில் தடை, வேறெதிலோ நாட்டம், எதாவது செய்து வருமானம் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்புகள் கொண்டவர், தனது குறைகளை உணர்ந்து மாற்றிக் கொள்ளும் பக்குவம் கொண்டவர்,

CamScanner

சனி:

ஜாதகர் வியாபார நுணுக்கம் நிறைந்தவர், ஆடம்பர பொருட்கள் சார்ந்த வழியில் வருமானம் பெறுவார், பூர்வீகத்தில் இருந்து வெளியே சென்று ஜீவனம் செய்வார், குடும்பம் பெரியதாக இருந்து காலங்கள் செல்ல செல்ல சிதறி ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் வாழ்வார்கள், பூர்வீக சொத்தை பற்றிய ஆசை இருக்கும் இவர் பொது சிந்தனை உடையவர், பிறருக்கு உதவும், தானம் செய்யும் வேட்கை கொண்டவராக இருப்பார், இவரது குடும்பத்தில் கால் பிரச்சனை உருவாகும், உறவுகளில் திடீரென சிறு வயதில் உள்ளவர்கள் வரிசையாக தவறி விடுவார்கள், வயதான நபர்கள் அதிக காலம் இருப்பார்கள், யாரோ மருந்து மாயம் வைத்து விட்டதாக உணர்வு இருக்கும் மனதிற்கு பிடிக்காதவர் மீது மிகுந்த வன்மத்துடன் இருப்பார், இருப்பினும் வெளியளவில் அனைத்தயும் மறந்து விட்டு தானக முன்வந்து வருத்தம் தெரிவிக்கும் குணம் கொண்டவர், பணம், விளம்பரம், சந்தை படுத்துதல், பிரதினிதி, மார்கெட்டிங் பணிகளில் உறவில் ஒருவர் இருப்பார்,

விருச்சகத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை மற்றும் மகன் இருவரும் தான் என்ற கர்வம் கொண்டவர்கள், சதா சண்டை சச்சரவுகளில் ஆர்வம் உடையவர்கள், கனிமம், சட்டம், பாதுகாப்பு, உடலுழைப்பு மற்றும் வெப்பம் தொடர்பான பணிகளை மேற்கொள்வார்கள், ஜாதகரின் மகன் உடல் நலம் சார் சிக்கலை ஆரம்ப காலத்தில் சந்தித்து பிறகு மீண்டு வருவார், தந்தை மற்றும் மகன் வழக்கு, கடன் ஏமாற்றங்களை சந்தித்து இருப்பார்கள், அடுத்தவர்களை காயப்படுத்தும் படி சுறுக்கென பேசும் குணம் கொண்டவர்கள்,

CamScanner

சந்திரன்:

தாயுடன் அவ்வப்போது சிறுசிறு சண்டையும் மகிழ்ச்சியும் கலந்து வாழ்க்கை இருக்கும், ஜாதகர் கடல் கடந்து செல்லுதல் மற்றும் அன்னிய நாடுகள் வழியான வருமானத்தை பெறுதல் ஆன்லைன் வழியான தொழிலை செய்வார், அல்லது அவரது குடும்பத்தில் ஒருவர் இது போல தொழில்களில் ஈடுபடுவார், தாய் மூர்க்க குணமுடையவர், தனது அதிகாரத்தால் குடும்பத்தை நடத்துவார், குழந்தைகளை கண்டிப்புடன் வளர்ப்பார், ஜாதகர் முன்கோபி, சில சமயங்களில் அவமானங்களை சந்திப்பார், இவரும் கலைகளின் மீது ஆர்வமுடயவர், மொழி பற்றிய ஆர்வமுடையவர், ஜாதகருக்கு சுவாசம் சளி கண்கள் சார்ந்த உடல் நலப் பிரச்சனை மற்றும் வயிறு, கர்ப்பை பிரச்சனை உருவாகும், ஐடித் துறை, மருத்துவம் மற்றும் வெளிநாட்டு தொழில்கள் அமையும், ஜாதகர் குழப்பமான சிந்தனையுடனே வாழ்வார், வீடு, வாகனகள் மீது ஆசை அதனால் வருமானம் அதன் வழியாக சிக்கலையும் சந்திப்பார், இவருடன் இருப்பவர்களை தனது பிரச்சனையை பொழம்பி பொழம்பி எரிச்சலாக்குவர், ஜாதகரின் தாயார் எதிலும் சுயநலத்துடன் நடந்து கொள்வார், எந்த சூழலையும் எதிர் கொள்ளும் வல்லமை உடையவர், ஜாதகருக்கு வம்பிழுக்கும் குணம் இருக்கும், மருத்துவம் மற்றும் வாகனத் துறை வழியாக வருமானம் பெறுவார்,

புதன்:

ஜாதகர் நரம்பு மற்றும் ரத்த அழுத்தம் தொடர்பான உபாதைகளுக்கு ஆளாவர், மின்னியல், கட்டுமானம் போன்ற தொழில் வழியான வருமானம் குடும்பத்தில் உண்டு, ஜாதகரின் மகள் மற்றும் சகோதரியும் மருத்துவ செலவுகளை சந்திப்பர்கள், இவர்கள் வழியாக ஜாதகர் தொல்லைகளை அனுபவிப்பார், நிலம் சார்ந்த வழக்குகளை சந்திப்பார் இயந்திர நுட்பம், மருத்துவக்

CamScanner

கல்வி, ரசாயனம், சமூகவியல், மேலாண்மை, வேளாண்மை போன்ற கல்விகள் கற்பார்,

சுக்கிரன்:

ஜாதகரின் மனைவி இவர் வசிக்கும் இடம் அல்லது அவரின் பூர்வீகத்திற்கு வடக்கு திசையில் இருந்து வருவார் கடுமையாக நடந்து கொள்வார், இல்லற வாழ்க்கையில் சிக்கல் உண்டு, ஜாதகர் காம சிந்தனை மிகுந்தவராக இருப்பர், மனைவியின் சொல்படி நடக்கும் குணம் இருக்கும் இருப்பினும் குடும்பத்தில் குழப்பம் உண்டு, ஜாதகர் காதல் திருமணம் அல்லது உறவில் திருமணம் செய்திருந்தால் குடும்ப பிரச்சனை சற்று குறையும், தாமத திருமணம் நடக்கும் மேலும் தாமத திருமணம் நன்மையை செய்யும், சிறு வயதில் திருமணம் பிரிவுக்கு வழி வகுக்கும், 28 வயதிற்கு மேற்பட்ட வயதில் திருமணம் சிறப்பு, ஜாதகருக்கு வரும் கணவனுக்கு 29 வயதிற்கு மேல் இருக்கும் நிதி மற்றும் ஆடம்பர பொருட்கள் அழகு நிலையங்கள் ஆசிரியர், மற்றும் கட்டுமானம் தொடர்பான வழிகளில் வருமானம் கிடைக்கும், மனைவி உடல் நலக் குறைகளால் அவதியுறுவார்,

செவ்வாய்:

ஜாதகர் தனது நண்பர்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர், ஜாதகர் பெண் எனில் திருமணம் தாமதம், திருமண வாழ்க்கையில் நிம்மதியின்மை போன்றவற்றால் வேதனை அடைவார், ஜாதகருக்கு உடல் நலம் வம்பு வழக்கு துரோகங்கள் தானாக தேடி வரும், இவர் சிக்கலில் இருக்கும் போது சகோதர்ர் மற்றும் நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள் பிறகு அதுவே ஏமாற்றமாகவும் மாறிவிடும், மருத்துவம், பொறியியல், ஆட்டோமொபைல் போன்ற பணிகள் வழியாக ஜீவனம் நடக்கும், இவர் அனைவருடனும் சச்சரவுடனே இருப்பார்,

CamScanner

குரு:

ஜாதகர் முரட்டு சுபாவம் கொண்டவர், போராடும் குணமும், ஆத்திரமும், விடாப்பிடியாக எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் கொண்டவர், பல இடங்களில் இவராகவே சண்டையை ஏற்படுத்தும் படி பேசுவார், உணர்ச்சி வயப்படும் தன்மையும் சிடுசிடு என்ற முகத்துடனும் இருப்பார், ஜாதகர் நிலம் மற்றும் ஆவணங்கள் வழியாக நன்மைகளை அடைவார், இவருக்கு மருத்துவம் கொஞ்சம் தெரியும் அனைவருக்கும் மருத்துவம் ஆரோக்கியம் குறித்த ஐடியா தருவார், இவருக்கும் சிறு சிறு அறுவை சிகிச்சைகள் நடக்கும்,

சனி:

ஜாதகர் சதா சுற்றிக் கொண்டிருக்கும், இயங்கி கொண்டிருக்கும் பணியில் இருப்பார், பொறியியல் மற்றும் இயந்திரம் தொடர்பான கல்வி அதன் வழியாக வருமானம் ஈட்டுவார், கால்கள் மற்றும் இடுப்பு பகுதியில் சிறு சிகிச்சை செய்ய வேண்டிய நிலை உண்டாகும், தொழில் ரீதியாக சகோதரர் உதவிகள் கிடைக்கும், மருத்துவம் உலோகம் சார் தொழில் தொடர்பும் கிடைக்கும்,

தனுசில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் மகன் மற்றும் தந்தை சமூகத்தில் கௌரவமான நிலையில் இருப்பார்கள், பொறுப்பு மிக்க மற்றும் தொன்மையான வழிமுறைகளை நிர்வகிக்கும் தன்மையை கொண்டவர்கள், வாழ்க்கை முறைகளை கற்றறிந்தவர்கள், தீயவைகளை கண்டு ஒதுங்கி செல்லும் குணமுடையவர்கள், பின்னால் இருந்து காய்

நகர்த்தும் சாமர்த்தியசாலிகள், இவர்கள் மிக முக்கிய பொறுப்புகள், வழிவழியாக வரும் ஸ்தாபனங்களின் பொறுப்பாளர்கள், ஆலோசனை கூறும் பணிகளையும் செய்வார்கள், சுய கௌரவம் குறித்த கவனம் உடையவர், தொழில் குறித்த ஆலோசனைகளை பிறருக்கு சொல்லுவார்,

சந்திரன்:

ஜாதகரின் தாயார் கண்ணியமிக்கவர், கௌரவமான குடும்பத்தில் இருந்து வந்தவர், குழந்தைகளை மாண்புடைய நபர்களாக வளர்த்தெடுப்பார், நிர்வாக திறன் மிக்கவர், தன்நம்பிக்கை உடையவர், ஜாதகர் உயர்வான சிந்தனை கொண்டவர், பலருக்கு ஆலோசனை கூறும் திறன் மிக்கவர், உதவும் எண்ணமுடையவர்,

புதன்:

ஜாதகர் தோல் அலர்ச்சியால் சில காலம் அவதியுறுவார், கல்வி காதல் போன்றவற்றில் தாமதம் தடை ஏற்படும், மகள் குறித்த கவலையிலேயே இருப்பார், நிலம் வகையில் அனுகூலம் உண்டு அதேசமயம் வழக்குகளுக்கும் வழிவகுக்கும், யாருக்கும் தனது நிலத்தை சூரிட்டியாக வைத்து உதவினால் தேவையற்ற சிக்கலைத் தரும், மனிதவளம் மேலாண்மை, பொருளாதாரம், வேதம், கணிதவியல், மனோதத்துவம். போன்ற கல்விகளை கற்பார்,

சுக்கிரன்:

ஜாதகருக்கு அவரின் குடும்பத்தை காட்டிலும் கௌரவமான குடும்பத்தில் இருந்து வரன் கிடைக்கும், ஜாதகர் வசிக்கும் அல்லது பூர்வீகத்திற்கு கிழக்கில் இருந்து வரன் கிடைக்கும், ஜாதகரின் மனைவி மிகவும் சாமர்த்தியம் நிறைந்தவர், சிறிது வஞ்சக குணமும் உண்டு, அவர் பிறர் இடம்

CamScanner

தன்னை நிரூபிக்க முயல்வார், எப்பொதுமே சமூகம் என்ன நினைக்கும் என்று மட்டுமே நினைப்பர், நிதி மற்றும் ஆலோசனை தொழில் வழியாக பொருள் ஈட்டுவார்,

செவ்வாய்:

இரத்த அழுத்தம் தொடர்பான உபாதைகளை எதிர்கொள்வார், ஜாதகரின் கணவர் கண்ணியமானவர் திடீரென அவரது கௌரவத்திற்கு பிரச்சனை வந்து சரியாகும், ஜாதகர் அதிகமாக நிலங்களை பெற்று இருப்பார், நண்பர்கள் வழியாக உதவிகள் உண்டு, ஜாதகருக்கு அவ்வப்போது கட்டி கொப்புளம் போன்றவைகளுக்காக அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை வரும்,

குரு:

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம் அல்லது குழந்தை பற்றிய கவலையும் இருக்கும் ஜாதகருக்கு குடல் தொடர்பான சிகிச்சை நடக்கும், சமூகத்தில் உயரிய நிலையை அடைவார் இருப்பினும் அதற்காக பல இடங்களில் அவமானங்களை எதிர் கொள்வார், ஏஜென்சீஸ், கன்சல்டன்சி போன்றவைகள் மற்றும் வட்டிக்கு விடுதல், அடகு வாங்குதல் தொழில் செய்பவர் குடும்பத்தில் இருப்பார்கள், ஜாதகர் ஆன்மீக சிந்தனை உடையவர், அதே சமயம் வக்ரமான சிந்தனைகள் உள் இருக்கும் அதனோடு போராடுவார், இவருக்கு வெளியே சொல்ல இயலாத குணங்கள், சிக்கல்கள் மற்றும் நோய்கள் உண்டாகும், பாலினம் தொடர்பான வித்யாசமான, சிக்கலான சிந்தனை கொண்டவர்,

சனி:

ஜாதகர் ஆலோசனை, மற்றும் கற்பிக்கும் குணம் கொண்டவர், இவரது பகுதியில் அல்லது இவரின் பணியிடத்தில் பிரபலமானவராக இருப்பார், பலருக்கும் இவரை தெரியும்,

CamScanner

அனைவருடனும் அவர்களுக்கு பிடித்த விசயங்களை பேசுவதன் மூலம் நட்பாவார், கடினமான உழைப்பாளி, யாரிடமும் கையேந்தக் கூடாது என்பதில் விடாப் பிடியாக வாழ்வார், சுய கௌரவத்திற்காக எதையும் விட்டுக் கொடுக்கும் நபர்,

மகரத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

சூரியன்:

ஜாதகரின் தந்தை மற்றும் மகன் பிறந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் குடிபெயர்வர், சிறிது சோம்பேறித்தனம் கொண்டவர்கள், அயல் நாட்டு தொடர்புகள் அதிகம் உடையவர்கள், தொழில் சிந்தனை கொண்டவர்கள், அதற்காக பலரை விரோதிக்கவும் செய்வார், அயல்நாட்டு பணிகள், போக்குவரத்து, மருத்துவம், ரசாயனம், மற்றும் உணவு தொடர்பான தொழில்களில் ஈடுபடுவர்,

சந்திரன்:

ஜாதகரின் தாயார் வருமானத்தின் மீது கண்ணாய் இருப்பார், சற்று கண்டிப்பு மற்றும் தடித்த பேச்சுகள் உடையவர், அடுத்தவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் நடந்து கொள்வார், ஜாதகர் அந்நிய பொருட்கள் மீது ஆர்வம் உடையவர், ஜாதகர் கற்பனை பயமும் குழப்ப சிந்தனையும் உடையவர், அயல்நாட்டுப் பணி அல்லது அன்னிய நிறுவனங்களில் பணி புரிய ஆவலாய் இருப்பார், மாற்றி மாற்றி பேசுவார், வாழ்க்கையில் நிம்மதிக்காக ஏங்குவார், ஜாதகர் முன்கோபி, சில சமயங்களில்

அவமானங்களை சந்திப்பார், இவரும் கலைகளின் மீது ஆர்வமுடையவர், மொழி பற்றிய ஆர்வமுடையவர், ஜாதகருக்கு சுவாசம், சளி, கண்கள் சார்ந்த உடல் நலப் பிரச்சனை மற்றும் வயிறு, கருப்பை பிரச்சனை உருவாகும், ஐடி துறை மருத்துவம் மற்றும் வெளிநாட்டு தொழில்கள் அமையும், ஜாதகர் குழப்பமான சிந்தனையுடனே வாழ்வார், வீடு, வாகனங்கள் மீது ஆசை அதனால் வருமானம் அதன் வழியாக சிக்கலையும் சந்திப்பார், இவருடன் இருப்பவர்களை தனது பிரச்சனையை புலம்பி புலம்பி எரிச்சலாக்குவர்,

புதன்:

ஜாதகர் காலில் நரம்பு பிரச்சனை மற்றும் மரபு வழியாக வரும் பிரச்சனைகளை சந்திப்பார், திடீரென குடும்பத்தில் குழப்பம் உருவாகி நிம்மதியை இழக்க வைக்கும் அதை சரி செய்ய இயலாது சில காலங்களுக்கு பின் அதாகவே சரியாகும், அது உடல் ரீதியாகவோ அல்லது உறவு ரீதியாகவோ இருக்கலாம், இவருடைய மகள் சொகுசாக வாழும் ஆசை கொண்டவர் அவரும் ஜாதகரின் சகோதரியும் கஷ்டங்களை கடந்து பிற்காலத்தில் நல்ல நிலையில் இருப்பார்கள் ஜாதகருடைய குடும்பத்தில் ரசாயனம், அன்னிய வழிக்கல்வி, வேளாண்மை, கனிம அறிவியல், வேதியியல், மற்றும் மனநலம் போன்ற கல்விகளை கற்ப்பார்கள்,

சுக்கிரன்:

ஜாதகருக்கு வரன் ஜாதகர் இருக்கும் வீட்டிற்கு தெற்கு திசையில் இருந்து வருவார், ஜாதகரின் மனைவி, விடாப்பிடியான குணம் உடையவர், ஆனாலும் நிதானமாக செயலட்டு தனக்கு ஆக வேண்டியதை சாதித்துக் கொள்வார், ஜாதகர் திருமணத்திற்கு பிறகு பொருளாதார உயர்வடைவார், ஜாதகர் பணம் ஈட்ட கடுமையாக முயற்சி செய்வார், திடீரென வாழ்க்கையில் சில

CamScanner

காலத்தில் சோம்பேறி போல வேலைக்கு செல்லாமலும் இருப்பார், இருப்பினும் வாழ்க்கைக்கு தேவையான செல்வ நிலை இருக்கும்,

செவ்வாய்:

ஜாதகர் பெண் எனில் அவரது திருமண வாழ்க்கை குறையானதாகவே இருக்கும், கணவன் அழகானவராகவும் இருப்பார், இருப்பினும் திருமண வாழ்க்கை அவ்வளவு நிம்மதியாக இருக்காது, ஒருவேளை விரும்பிய வரனை மணந்தால் நிம்மதியான திருமண வாழ்க்கை உண்டு, அல்லது 27 வயதிற்கு மேல் திருமணம் சிறப்பானது, கணவனின் ஜாதகர் கடன் நட்பின் மூலம் ஏமாற்றம் பங்குதாரர் வழியாக நஷ்டம் போன்றவைகளால் மன அழுத்தமடைவார், மேலும் உடல்நலம் சார்ந்த சிக்கலகளையும் சந்திப்பார், சகோதரர் உறவில் விரிசல் இருந்தாலும் அவசர காலத்தில் சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும், இல்லத்தின் அருகே நீர்நிலைகள் இருக்கும், பாட்னர்சிப் தொழில் அல்லது யாருக்காவது தொழிலில் உதவியதால் மிகப்பெரிய நம்பிக்கை துரோகத்தை சந்திப்பார், மருத்துவம், பொறியியல் இயந்திரங்கள் சமையல் வழியான வருமானம் உண்டு,

குரு:

ஜாதகர் தனது அடையாளம் குறித்து மிகவும் கவனமாக இருப்பார், ஜாதகருக்கு குழந்தை பிறப்பு சிக்கல் மேலும் குழந்தை பிறந்த பின் அந்த குழந்தையை வளர்ப்பதில் சிக்கல் மகன் மகள் தொடர்பான பயம் இருக்கும், நிதி மற்றும் ஆலோசனை பணிகள் வழியாக சம்பாதிப்பார், ஜாதகர் மற்றும் அவரது குடும்பத்தில் மூலம், குடல் இறக்கம் போன்ற பிரச்சனை ஏற்பட்டு சரியாகும், இவர் சில அவமானங்களை சந்திப்பார், தாழ்வு மனப்பான்மை கொண்டவர், இருப்பினும் மிகவும் முக்கிய நபராக இருப்பார்,

சனி:

தனக்கு எதாவது தனது இயலாமை குறித்து அவமானம் நடந்தால் அதை மனதில் வைத்து அதை மீண்டும் அவர்களுக்கு அப்படியே செய்வார், இந்த குணத்தினால் தனது வாழ்க்கையையே இழப்பர், இதை வாழ்க்கை முழுவதும் தனது அடையாளமாக சொல்வார், நான் அவனையே தூக்கி எறிந்து விட்டேன், எல்லாரும் என்னிடம் கத்துக் கொண்டவர்கள் என கூறுவார், தனக்கு எதுவும் இல்லாமல் இருக்கும் போதும் இயலாதவர்களுக்காக சமூகத்தில் வசூல் செய்து உதவுவார், தனக்கு அல்லது தனது குடும்பத்திற்கு எதுவும் நடந்தால் கண்டு கொள்ளாமல், ஆனால் பிறருக்காக பிச்சை கூட எடுத்து உதவுவார், இருப்பினும் இவர் பிற்கால வாழ்கையில் சாதிப்பார், பூர்வீகத்தில் இருந்து வெளியே சென்று ஜீவனம் செய்வார், குடும்பம் பெரியதாக இருந்து காலங்கள் செல்ல செல்ல சிதறி ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் வாழ்வார்கள், பூர்வீக சொத்தை பற்றிய ஆசை இருக்கும், இவர் பொது சிந்தனை உடையவர், பிறருக்கு உதவ தானம் செய்யும் வேட்கை கொண்டவராக இருப்பார், இவரது குடும்பத்தில் கால் பிரச்சனை உருவாகும்,

கும்பத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

எந்த ஒரு ஜாதகமானாலும் கும்ப ராசியில் எந்த ஒரு கிரகம் இருந்தாலும் அந்த ஜாதகர் அல்லது அவரது குடும்பத்தில் யாராவது ஒருவர் தரம் மற்றும் உடல் பரிசோதனை, துப்பறிதல், கண்டுபிடித்தல், ஆய்வு சார்ந்த தொழில்களில் இருக்கிறார்கள்,

சூரியன்:

ஜாதகரின் தந்தை மற்றும் மகன் பிறரால் புரிந்து கொள்ள முடியாத குணங்களை உடையவர்கள், ரகசியம் காப்பதில்

CamScanner

வல்லவர்கள், இவர்கள் பிறருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பிறரின் செயல்களில் உள்ள குறைகளை கண்டறிந்து அதைக் கொண்டு ஆலோசனை வழங்குவர், இருவரும் சோம்பேறித்தனமாக இருந்தாலும் இருந்த இடத்தில் இருந்தே காரியங்களை சாதித்துக் கொள்வர், இவர்கள் மனோதத்துவம், தர பரிசோதனை, ஆய்வு தொடர்பான பணிகள், வெளியே கூறி புரிய வைக்க முடியாத பணிகளில் இருப்பர், தந்தை தொடர் உடல் நலம் குறித்த சிக்கலிலும் இருப்பார், ஜாதகர் அல்லது அவரது குடும்பத்தில் அரசுப் பணி மற்றும் சொந்த தொழிலில் இருப்பார்கள், ஜாதகருக்கு பல், தலை மற்றும் தாடை பிரச்சனை உண்டாகும், ஜாதகருக்கு தந்தையின் அனுகூலம் குறைவாகவே இருக்கும்,

சந்திரன்:

ஜாதகரின் தாயார் எதிரில் உள்ளவரின் மன ஓட்டத்தை எளிதில் கண்டறியும் ஆற்றல் நிறைந்தவர், தனக்குள் எதோ ஒன்றை ரகசியமாக வைத்திருப்பார், புராதான பொருட்கள் மீது நாட்டம் உள்ளவர், விட்டில் அது அது போல் உள்ள பொருட்களை சேகரித்து வைப்பார், ஜாதகர் ஆய்வு குணம் கொண்டவர், ஜாதகர் எதையும் ஆழமாகவும் பெரிதுபடுத்தியும் சிந்திப்பார், பரிசோதிக்கும் குணம் உடையவர்,

புதன்:

ஜாதகரின் மகள் வெளிப்படையாக பேச மாட்டார், உள்ளே எதையாவது வைத்துக் கொண்டு மறைமுகமாக பேசி வெறுக்கும் படியாக நடந்து கொள்வார், அவர் தனது குணத்தினால் குடும்பத்துடன் பகிராமல் பல பிரச்சனைகளை வளர்ந்த பிறகு சரி செய்ய இயலாமல் சிக்கிக் கொள்வார், இவரின் குடும்பத்தில் ஆய்வுக்கல்வி, மனோதத்துவம், சட்டம், தத்துவம், மரபுசார் மருத்துவம். போன்ற கல்விகளும் அவற்றின் வழி ஜீவனத்தையும்

CamScanner

பெறுவார்கள், ஜாதகரின் சகோதரி உள்ளுணர்வு கொண்டவர் ஜாதகரின் மகளுக்கும் அது இருக்கும் எதாக இருந்தாலும் எப்படியாவது கண்டு பிடித்து விடுவார்கள், ஜாதகரும் பலருக்கு புரிய முடியாத சிக்கல்களுக்கு வழி காட்டுவார்,

சுக்கிரன்:

ஜாதகர் தனக்கு வரும் வரனின் மனதில் உள்ளதை கண்டறிய இயலாமல் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகும், அவரது மனைவி எதாவது ரகசியத்தை மறைப்பது போலவும் அதை வைத்து ஜாதகரை பணிய வைப்பது போலவும் நடந்து கொள்வார், ஜாதகருக்கு வரும் வரன் ஜாதகரின் வசிப்பிடத்திற்கு மேற்கு திசையாக இருக்கும், மனைவி சற்று நிதானமாகவும் அதே சமயம் கருத்தாகவும் செயல் படுவார், தனது அன்பை ஜாதகரிடம் நேரடியாக காட்டமாட்டார், நேரில் சண்டையும் அருகில் இல்லாத போது பிரியமாகவும் இருப்பார்,

செவ்வாய்:

ஜாதகரால் கணவனை புரிந்து கொள்ள முடியாது இருப்பினும் குடும்ப உறவில் ஓரளவுக்கு சராசரியான ஒற்றுமை இருக்கும், ஜாதகி கணவனின் நடவடிக்கை குறித்து வருத்தம் கொள்வார், ஜாதகரின் கணவர் எல்லாவற்றிலும் குறை காண்பவராக இருப்பார், அவர் பலருக்கு மிக முக்கியமான ஆலோசனை வழங்கும் பணிகளை செய்வார் ஜாதகரின் சகோதரர் வழி உதவி கிடைக்கும், இவரின் சகோதரர் சத்தமில்லாமல் நல்ல பெயரை வாங்கி கொண்டு கனகச்சிதமாக காய் நகர்த்துவார், அவரின் வழியாக சொத்து பிரிப்பதில் மனக்கசப்பு உண்டாகும்

குரு:

ஜாதகர் ஏகாந்த சிந்தனை உடையவர், யாராலும் புரிந்து கொள்ள இயலாத அளவுக்கு பிறருக்கு தன்னை உள்ளபடி

CamScanner

வெளிபடுத்திக் கொள்ளமாட்டார், இவருக்கு மிகுந்த நிதானமும் அனுபவமும் கிடைக்கும், வாழ்க்கையில் பல போராட்டங்களை கடந்து வருவார், சற்று சோம்பேறியாகவும் பிறரை நயந்துபேசி வேலை வாங்கும் திறனும் உடையவர், மற்றவர்கள் செய்யும் தவறுகளை வெளிப்படையாக எடுத்துக் கூறுவார், ஆன்மீகத்தில் ஆர்வமுடையவர், எல்லா விசயத்திலும் பொடிவைத்து பேசுவார், அரசியல்வாதி போல சூழ்ச்சி செய்வார்,

சனி:

குலத்தின் பெருமை, தற்பெருமை, தான் வாழ்ந்த வாழ்க்கையில் பட்ட அவமானங்களையும் கூட எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பது, அதனால் தனது புகழ் அல்லது தனது முக்கியத்துவத்தினை காட்டுவதுமாக இருந்தாலும் இவர் வாழ்க்கையில் கஷ்டப்படுவார், பின்னர் மீண்டு வருவார், அனைத்தையும் ஊற்றுக் கண்ணில் இருந்து துருவி துருவி எடுத்து வாதிடும் குணம் கொண்டவர், ஆனால் இவரது குடும்பத்தில் நடக்கும் குழப்பத்திற்கு இவர் என்ன தேடினாலும் விடை கிடைக்காது, இவர் பல ஊர்களுக்கு அல்லது தொலை தூரத்தில் சென்று ஜீவனம் செய்வார், யரோ மருந்து மாயம் வைத்து விட்டதாக உணர்வு இருக்கும் மனதிற்கு பிடிக்காதவர் மீது மிகுந்த வன்மத்துடன் இருப்பார், இருப்பினும் வெளியளவில் அனைத்தையும் மறந்து விட்டு தானாக முன்வந்து வருத்தம் தெரிவிக்கும் குணம் கொண்டவர், இவரது வாழ்க்கை இவரது குடும்பத்தில் உள்ள பலராலும் விமர்சிக்கபட்டாலும் இவர் தனது வாழ்க்கையில் எதையோ சாதித்து விட்டதாக பெருமையடைவார்,

மீனத்தில் கீழ்கண்ட கிரகங்களின் பலன்

எந்த ஒரு ஜாதகமானாலும் மீன ராசியில் எந்த ஒரு கிரகம் இருந்தாலும் அந்த ஜாதகர் அல்லது அவரது குடும்பத்தில் யாரவது ஒருவர் ஆடை அலங்காரம், ஆபரணம், மீடியா, பொருளாதாரம், விளம்பரம், மற்றும் அழகுக்கலை ஒப்பனை தொழில்களில் இருக்கிறார்கள்,

சூரியன்:

ஜாதகரின் மகன் மற்றும் தந்தை இருவரும் சிக்கனமானவர்கள், கௌரவமான வாழ்க்கையை நடத்தக் கூடியவர்கள், பிற்காலத்தில் வாழ்வதற்கு தேவையானதை வாழும் போதே வடிவமைத்துக் கொள்வார்கள், பிறருக்கு உதவுவதில் கூட தனக்கு என்ன ஆதாயம் உள்ளது என கணக்கு போடுபவர்கள், இவர்கள் நிதி, கணக்கு, ஆபரணம், பூர்வீக கலை மற்றும் சடங்குகள் சார்ந்த தொழிலில் ஈடுபடுவார்கள்,

சந்திரன்:

ஜாதகரின் தாயார் சிக்கனமானவர், சேமிப்பு குணமுடையவர், வீட்டையும் தன்னையும் எப்போதும் புதுமையாகவே வைத்திருப்பர், பிள்ளைகளை அக்கறையுடன் வளர்த்தெடுப்பார், பக்தி நிறைந்தவர், ஆடை, ஆபரணத்தின் மீது ஆசையுடையவர், ஜாதகர் குடும்ப பின்னனி குறித்து பெருமை கொள்பவரகவும் அதை பல இடங்களில் பேசுபவராகவும் இருப்பார், ஜாதகர் எதிலும் சுத்தமிருக்க வேண்டும் என்ற சிந்தனை உடையவர், திரைத் துறையில் ஆர்வம் கொண்டவர்,

புதன்:

, ஜாதகர் நளினமானவர், இசை நடனம் போன்றவைகளை சிறு வயதில் பயில்வார், விரல்களில் எதாவது மாற்றம் இருக்கும்,

CamScanner

இரண்டு பெயர்களால் அழைக்கப்படுவார், இளமை மற்றும் சுறுசுறுப்பானவர், பெண்கள் வழியில் தொல்லைகளை எதிர் கொள்வார், ஜாதகர் காதல் தொடர்பான சிக்கலை சந்திப்பர், நல்ல கல்வி உண்டு, மகள் மற்றும் சகோதரியின் வாழ்க்கையில் சிக்கல் உண்டு, உதவும் எண்ணம் கொண்டவர், அவ்வப்போது சிறுபிள்ளைத் தனத்துடன் குறும்பு செய்யும் குணம் கொண்டவர், தான் சொல்ல வருவதை சரியாக சொல்ல தெரியாமல் பகைகளை உண்டாக்கிக் கொள்வார், தோல் நோய்கள் வந்து போகும், குடும்பத்தில் உள்ளவர்கள் பொருளாதாரம், நிதிமேலாண்மை, மனிதவளம், வணிகம். போன்ற கல்விகளை கற்பர், வங்கி அல்லது கருவூலம் சார்ந்த பணிகளில் இவரது குடும்பத்தில் யாராவது பணி செய்வார்கள்,

சுக்கிரன்:

ஜாதகருக்கு மிக முக்கியமான சிக்கலே திருமணம்தான், வெகுகாலமாக திருமணம் நடக்காமல் இருக்கும் அல்லது திடீரென குடும்பத்தை மீறிய திருமணம் நடக்கும், ஜாதகர் குடும்ப வாழ்க்கை குறித்து தேடுதலுடனே இருப்பார், காம சிந்தனை மேலோங்கி காணப்படும், மனைவியினால் சிக்கல் நிம்மதியின்மை அவ்வப்போது விரிசல் இருக்கும், இவர் காதல் அல்லது உறவுக்கார வழியில் திருமணம் செய்தால் ஓரளவுக்கு சிக்கல் குறையும் அல்லது 29 வயதுக்கு மேல் திருமணம் செய்வது உத்தமம், இல்லாவிட்டால் திருமண வாழ்க்கை மிகுந்த தொல்லையாக இருக்கும், பெண் ஜாதகம் எனில் தோழிகள் வழியாக பகை நிம்மதி இழப்பு உண்டாகும் இவருக்கு வரும் கணவருக்கு வயது அதிகமாக இருக்கும், ஜாதகர் இருக்கும் பகுதிக்கு வடக்கு திசையில் இருந்து வரன் வரும்,

CamScanner

செவ்வாய்:

ஜாதகரின் கணவர் குணமானவர், எதையும் தீர சிந்தித்து செயல்படுவார், அவருக்கு குடல் சார்ந்த சிக்கல் உண்டு, அவர் நிதி சார்ந்த பணிகள் செய்யும் குடும்பத்தில் பிறந்திருப்பார்,, எப்போதும் சிந்தனையில் இருப்பதும் அதனால் நிம்மதி இழப்பதும் நடக்கும், சகோதரர் வழியாக சிறு சிறு அவமானங்கள் நிகழும், நிலம் தொடர்பான அனுகூலம் வாழ்க்கை முழுவதும் உண்டு குடல் ஆசணவாய் மற்றும் ரத்த அழுத்தம் தொடர்பான சிகிச்சைகளை மேற்கொள்வார், கல்லடைப்பு பிரச்சனை வந்து மறையும்

குரு:

ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதம் அல்லது குழந்தை பற்றிய கவலையும் இருக்கும் ஜாதகருக்கு குடல் தொடர்பான சிகிச்சை நடக்கும், சமூகத்தில் உயரிய நிலையை அடைவார் இருப்பினும் அதற்காக பல இடங்களில் அவமானங்களை எதிர் கொள்வார், ஏஜென்சீஸ், கன்சல்டன்சி போன்றவைகள் மற்றும் வட்டிக்கு விடுதல் அடகு வாங்குதல் தொழில் செய்பவர் குடும்பத்தில் இருப்பார்கள், ஜாதகர் ஆன்மீக சிந்தனை உடையவர், அதே சமயம் வக்ரமான சிந்தனைகள் உள் இருக்கும் அதனோடு போராடுவார், ஜாதகர் சுய கௌரவத்திற்காக எதையும் இழக்கும் அளவுக்கு விடாப்பிடியாக இருப்பார்

சனி:

அயல்நாட்டு பயணம் மற்றும் நிதி தொடர்பான வழியிலும், விலை உயர்ந்த உலோகங்களினால் பொருள் ஈட்டுவார், ஜாதகர் தனது வேலையை நேசிப்பார், இருப்பினும் அங்கீகாரம் இல்லாமலும் தகுதி அற்றவர்களிடம் தோற்பதும் தொடர் கதையாக இருக்கும், விளம்பரம் திரைத் துறை மீது நாட்டம் உடையவர், அதீத கற்பனை ஆற்றல் உண்டு இருப்பினும் அதை

காசாக்குவதில் திறமை இல்லை, பணம் என்ன முக்கியமா என சொன்னாலும் அதை சதா தேடிக் கொண்டும் இருப்பார், இவருக்கு காலில் கட்டிகள் இரத்த ஓட்டம் தொடர்பான சிக்கல் உண்டு, இவரது குடும்பத்தில் குழந்தை இல்லாத ஒருவர் உண்டு,

கிரக இணைவு பலன்கள்

ஒரு ஜாதகத்தில் ஒரு கிரகம் கூடி நின்ற கிரகம் மற்றும் பார்வை பெற்ற கிரகங்கள் மேலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ள ராசிகளில் உள்ள கிரகம் இவை அனைத்தும் இணைந்துள்ளது என்ற அடிப்படையில் பலன்கள் கூறப்படுகிறது, பிறப்பு ஜாதகத்தில் ஒரு கிரகம் மற்றொரு கிரகத்துடன் இணைவு பெற்றிருப்பது குறிப்பிட்ட பலன்களை வழங்கும், இவ்வாறு ஒரு குறிப்பிட்ட இடங்களில் இணைவு பெறுவதை ஜோதிடத் துறை யோகமென அழைக்கிறது,

ஆனால் நாம் அவ்வாறு ஒவ்வொரு கிரகமும் உள்ள ராசியில் இருந்து ஒவ்வொரு கிரகத்திற்கும் வெவ்வேறு இடங்களை கூறி குழப்பாமல் இருக்க பொது இணைவு விதியான ஒவ்வொரு கிரகத்திற்கும், அந்த கிரகம் உள்ள ராசியில் இருந்து 1, 5, 7, 9, 3, 11 ஆம் ராசிககளையே பயன்படுத்துகிறோம்,

எனவே கீழ்கண்ட பகுதி கூறும் கிரக இணைவுகள் என்பது, பிறப்பு ஜாதகத்தில் ஒரு கிரகம் உள்ள ராசியில் இருந்து 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் மற்றும் 3, 11 (50%) ஆம் ராசிகளிலும் உள்ள கிரகங்கள் இணைவை பெறும்,

அவ்வாறு ஒரு கிரகத்தின் செயல்பாடு ஒவ்வொரு கிரகத்துடன் இணையும் போது மாறுபடும், மேலும் இணைந்த கிரகங்களின் குணங்களை அந்த பிரதான கிரகத்தின் முக்கிய காரகத்துவத்துடன் சேர்த்து செயல் படுத்தும்,

CamScanner

இதில் 3, 11 (50%) என குறித்துள்ளேன் அதாவது ஒரு கிரகம் உள்ள ராசியில் இருந்து 1 5 7 9 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்கள் முழுமையான இணைவாகவும், மற்ற 3,11 ஆம் ராசிகளில் உள்ள கிரகம் பாதி அளவு இணைவானது போலவே பலன்கள் இருக்கும்,

மேலும் கீழுள்ள இணைவு பலன் பகுதியில் நோய்கள் மற்றும் எதிர்மறையான பலன்களை அந்த கிரகம் ராகு மற்றும் கேதுவுடன் கொண்ட இணைவு பாகையை வைத்தே கூற வேண்டும், பழகும் வரை ஊக்கப்படுத்தும் வகையில் நேர்மறை பலன்களையே கூறவும், அதுமட்டுமல்லாமல் இந்த பகுதி மட்டும் இல்லை இந்த நூலில் தந்துள்ள அனைத்து நோய் பற்றிய தகவலும் ஜாதகருக்கோ அல்லது அவரை சார்ந்தவருக்கோ வரலாம், அல்லது வந்துவிட்டது என்ற பயம் கூட எழலாம், எப்படியோ அந்த ஜாதகர் அல்லது அதில் குறிப்பிட்ட உறவினருக்கு அந்த நோய் சார்ந்த பயமோ அல்லது அறிகுறியோ அல்லது அதை போன்ற நோய்களோ வரலாம், எனவே முடிந்த வரை நோய்கள் பற்றி ஜாதகருக்கு அச்சமூட்டும் வகையில் பலன்கள் கூறுவதை தவிர்கவும், ஆனால் அவருக்கு முன் எச்சரிக்கையாகவும் அது போன்ற நோய் ஏற்படாமல் இருக்க விழிப்புணர்வுடனும் நடந்து கொள்ள அறிவுரை கூறலாம், குறிப்பாக குழந்தைகளுக்கு தேவைப் பட்டால் ஒழிய எதிர்மறையான பலன்களை தவிர்க்கவும்,

சூரியன்

சூரியனுடன் சந்திரன்;

குழந்தை பிறப்பு தாமதம் உண்டாகும், ஜாதகர் நிர்வாகத் திறனுடையவர், ஜாதகர் தலைமை பொறுப்புகளை விரும்புவார், ஜாதகர் கர்வ சிந்தனையுடன் இருப்பார், தான் என்ற அகம்பாவம்

உடையவர், ஜாதகரின் தந்தை உதவி குறையும், தந்தை வேறு இடங்களுக்கு பிழைப்பு தேடி செல்வார், அடிக்கடி இடமாறுதல், தொழில் மாறுதல் உடையவர், தந்தை மாற்றுப் பெண்களிடம் சபல புத்தியுடன் நடந்து கொள்வார், ஜாதகரின் தந்தை பிறந்த இடமருகே நீர்நிலைகள் இருக்கும், ஜாதகரின் மகனும் மேற்படி குணமுடையவர், ஜாதகரின் தாயார் குடும்பத்தை பேணிக் காக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார், தாயார் ஆளுமை நிறைந்தவராக காணப்படுவார், தாய் கண் குறைபாடு, உஷ்ணப் பிரச்சனை, மாதவிடாய் பிரச்சனை, எலும்பு உடைதல், போன்றவற்றாலும் தந்தை கபம் தொடர்பான பிரச்சனை ரத்த ஓட்டத்தில் தடை, சளி, திடீர் நோய் தொற்றுகள், ஈர காற்றால் வரும் சரும நோய்கள், இரத்த சோகை, விரை வீக்கம், மற்றும் மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாவார்கள், ஜாதகரின் தந்தை போக்குவரத்து, சமையல், கட்டிடப்பணி, வெளியிடங்களில் பணியாற்றுதல் போன்றவற்றையும், ஜாதகரின் தாய் தந்தையின் தொழிலில் உதவி, அரசு சார்ந்த பணிகள், நிர்வாகத் திறன் சார்ந்த பணிகள், அரசியல், போன்றவற்றில் ஆர்வமுடையவர், ஜாதகருக்கு கண் திறன் குறைபாடு, கண்களில் நீர் வடிதல், மனம் சார்ந்த அழுத்தம் உண்டாகும்,

சூரியனுடன் செவ்வாய்:

ஜாதகரின் தந்தை சில நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பார், ஆக்ரோஷமான குணங்கள் நிறைந்தவராக இருப்பார், சகோதரன் ஆளுமை நிறைந்தவராக காணப்படுவார், ஜாதகரின் தந்தை அதிகாரத்தை நிலைநாட்டும் தன்மையை கொண்டவராக இருப்பார், சகோதரன் ஆதரவு ஜாதகருக்கு எப்போதும் இருக்கும், ஜாதகரின் சகோதரன் பிறந்த இடம் அருகே அரசு அலுவலகங்கள் இருக்கும், ஜாதகருக்கு கண் தொடர்பான ஒற்றை தலை வலி வரும், இரத்தம் தொடர்பான நரம்பு கட்டிகள் தோன்றி மறையும், எலும்பு தொடர்பான பிரச்சனைகள் வரும், இரத்த உஷ்ண நோய்கள் உண்டாகும், ஜாதகரின் தந்தை இதய அடைப்பு, ரத்த

அழுத்தம் போன்ற நோய்களாலும், சகோதரர் மற்றும் கணவர் பித்தநீர் குறைபாடுகள், விந்தணு குறைபாடுகள், உஷ்ணம் தொடர்பான நோய்களால் அவதிப்படுவார், ஜாதகரின் கணவன் மிகவும் அதிகாரம் செய்பவராக இருப்பார், ஜாதகரின் தந்தை இயந்திரவியல், எலெக்ட்ரிக்கல், பொறியியல், காவல் பணி, மருத்துவம் போன்ற தொழில்களிலும், சகோதரர் மற்றும் கணவர், அரசுபணி, நிர்வாகிக்கும் பணி, தந்தையின் பணி போன்றவற்றையும் செய்வார்,

சூரியனுடன் புதன்:

ஜாதகரின் தந்தை புத்தி கூர்மையானவர், கவர்ச்சியாக பேசக்கூடியவர், சிந்தித்து செயலாற்றுபவர், சமயோஜித புத்தி உடையவர், சாதுர்யமானவர், ஜாதகரின் மகள் ஆளுமை திறனுடன் இருப்பார், ஜாதகரின் தந்தை கல்வி நிறுவனம் அருகே வசிப்பார் அல்லது பிறந்திருப்பார், ஜாதகரின் தந்தைக்கு நிலம் இருக்கும், வியாபார நுணக்கங்கள் கொண்டவர், எழுத்து பணிகளில் விருப்பம் உடையவர், ஜாதகரின் தந்தை காதல் சிந்தனை உடையவர், ஜாதகரின் தந்தைக்கு இருதயம் கண்களில் குறைபாடு, தோல் வியாதிகள் இருக்கும், ஜாதகரின் குடும்பத்தில் ஒருவருக்கு திருமணம் இல்லாமல் இருக்கலாம், அல்லது மிகவும் தாமதமாக நடக்கும், குழந்தை பிறப்புக்காக சிகிச்சை, அல்லது உறவுகளில் இருந்து ஏதோ காரணத்திற்காக விலகி இருக்கும் நிலை உருவாகும், ஜாதகர் படிக்கும் இடம் அருகே அரசு நிறுவனங்கள் இருக்கும், ஜாதகரின் மகள் மற்றும் சகோதரிகள் அரசு மருத்துவமனை அல்லது அரசு அலுவலகங்களுக்கு அருகே பிறந்திருப்பர், ஜாதகருக்கும் தோல் நோய்கள் இருக்கும், வாக்கு குழறுதல், செவித்திறன் குறைபாடு ஜாதகருக்கும் அவரது தந்தைக்கும் இருக்கும், ஜாதகரின் மகளுக்கு வாதம் தொடர்பான சிக்கல், தானியங்கு உறுப்பில் நோய்கள், ஒற்றை தலை வலி, உஷ்ணம் தொடர்பான சிக்கல், மாதவிடாய் பிரச்சனைகள் இருக்கும், இந்த

CamScanner

சூரியனுடன் சுக்கிரன்:

மனைவி ஆளுமை நிறைந்தவர், குடும்பத்தை வழி நடத்தும் திறன் மிக்கவர், மனைவியுடன் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், ஜாதகரின் மகன் மற்றும் தந்தை அழகாகவும், கவரும் வகையிலும் பேசும் திறன் உடையவர்கள், ஆடை, ஆபரணம் மீது ஆர்வம் உடையவர்கள், செல்வம் பற்றிய சிந்தனை உடையவர்கள், தந்தை தாய் அன்யோன்யமாக இருப்பர், ஜாதகரின் மனைவி உஷ்ணம் தொடர்பான நோய்கள் இருக்கும், மாதவிடாய் அல்லது வெள்ளைப்படுதல் பிரச்சனை இருக்கும், கண்கள் தொடர்பான ஒற்றை தலைவலி, ஒவ்வாமையால் ஏற்படும் ஒற்றை தலை வலி இருக்கும், ஜாதகரின் தந்தைக்கு சிறுநீரக கோளாறுகள், கண்களில் பிரச்சனை ஏற்படும்,

சூரியனுடன் குரு :

ஜாதகர் நிர்வாகத் திறமை உடையவர், ஜாதகர் தனது பொறுப்புகளை புரிந்து செயல்படுவார், பெரிய மனிதர்களின் நட்பும், அறிவுரைகளும் கிடைக்க பெறுவார், ஜாதகரின் தந்தை கௌரவமான குடும்பத்தில் பிறந்திருப்பார், ஆன்மீக சிந்தனை உடையவர், நல்ல சிந்தனையாளர், ஜாதகரின் மகனும் குடும்ப கௌரவத்தினை மேம்படுத்துவார், அற செயல்களில் ஈடுபடுவர், பொது பொறுப்புகள் தேடிவரும், ஜாதகர் நுணுக்கமான சிந்தனைகளை கொண்டவர், ஜாதகர் பிறந்த இடத்தில் அரசு அலுவலகங்கள் இருக்கும், ஜாதகரின் தந்தை மற்றும் மகனுக்கு, நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் ஏற்பட நேரிடும், ஜாதகருக்கு விந்தணு உற்பத்தி குறைபாடுகள், கடினமான பகுதி உடைந்து சிதருதல், ஜுரம், ஒற்றை தலைவலி, மஞ்சள் காமாலை, தானியங்கு உறுப்புகள்

CamScanner

தொடர்பான நோய்கள், சூடு தொடர்பான நோய்கள், வாதம் ஏற்படும்.

சூரியனுடன் சனி :

அடிக்கடிபணியி இருந்து வெளியேறுவார், தந்தை சற்று நிதானமாக செயல்படுபவர், ஜாதகருக்கு உத்யோகத்தில் ஆளுமை அதிகமாக செலுத்தும் எண்ணம் தோன்றும், அரசு அல்லது தந்தை தொழில் செய்பவர், அரசியல் ஆர்வம் இருக்கும், குடும்பத்தில் தலையில் அடிபடுதல், விபத்து மற்றும் தற்கொலைகள் நிகழ்ந்திருக்கும், எப்போதும் பணி அல்லது தொழிலை விட்டுவிட வேண்டும் என்று தோன்றும், மகன் தொழிலில் உதவி, அனுபவ தொழில், தலைமை நிர்வாகம், காவல், பொன் வியாபாரம், இராணுவம், அறுவைசிகிச்சை, இரத்தின வியாபாரம், துப்பறிதல், நீதிபதி, தலைமை, சமூகசேவகர், மந்திரி, மருத்துவர், பண்பாளர், அரசு அதிகாரிகள், உயர்நிலை பதவி, ஆராய்ச்சி பணிகள், அரசு உதவி பெறும் தொழில்கள், நரம்பியல் அறுவைசிகிச்சை மருத்துவம், பேச்சாளர், நூற்புதொழில், ரசாயனத்தொழில், போன்ற தொழில்கள் அமையும், தந்தை மற்றும் மகனுக்கு கால் நரம்பு பிரச்சனை, எலும்பு தொடர்பான வியாதிகள், ஊனம், பித்த நோய்கள், உடல் இளைத்தல், இருமல், மலடு, கால் மற்றும் மூட்டு வலி புண்கள், இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் போன்ற நோய்கள் உண்டாகும்,

சூரியனுடன் ராகு :

ஜாதகர் தந்தை வழியில் இருந்து வாழ்க்கை பற்றி கற்று கொள்வார், ஜாதகரின் தாத்தா ஆளுமை பண்பு நிறைந்தவர், ஜாதகரின் தந்தை குறுக்கு சிந்தனை அதிகமாக உள்ளவர், ஜாதகர்

தந்தையையோ மகனையோ எதோ ஒரு காரணத்தினால் பிரிந்து இருக்கும் சூழல் உருவாகும், குழந்தை பிறப்பு, திருமணம் தாமதப்படும், தீமை செய்ய வரட்டு தைரியம் உருவாகும், ஜாதகருக்கு உஷ்ணம் தொடர்பாக வாய்ப்புண்கள், குடல் நோய்கள், முடி உதிர்தல் ஏற்படும், தந்தை மற்றும் மகனுக்கு வாயுத்தொல்லைகள், ஊணம், பித்த நோய், விஷக்கடி, ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், வெட்டுக்காயங்கள், தோல் நோய்கள் ஏற்படும், ஜாதகருக்கு மூளை, தண்டுவடம், கண் நோய்கள் உண்டாகும்,

சூரியனுடன் கேது :

தந்தை பெருந்தன்மையானவர், தந்தை மற்றும் மகன் வாழ்க்கை பற்றி விழிப்புணர்வு உடையவர், ஜாதகர் தந்தையையோ மகனையோ எதோ ஒரு காரணத்தினால் பிரிந்து இருக்கும் சூழல் உருவாகும், குழந்தை பிறப்பு, திருமணம் தாமதப்படும், ஜாதகரின் தந்தை மற்றும் மகன் வழக்கு தொடர்பான சிக்கலில் சிக்கி கொள்வர், பொது காரியங்களில் ஈடுபாட்டுடன் இருப்பர், ஜாதகரின் தந்தை மற்றும் மகன் முடி உதிர்தல், வழுக்கை தலை ஏற்படுதல், நரம்பு, நகம், ஆசணவாய், பிறப்புறுப்பு, தோல், குடல் ஆகியவற்றில் உஷ்ண நோய்கள் ஏற்படும், பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், பீளை வெளியேறுதல், தோல் உரிதல் அரிப்பு, நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, குடல் புழுக்கள், தேக மெலிவு போன்ற நோய்கள் உண்டாகும், ஜாதகருக்கு மூளை, தண்டுவடம், கண் ஆகியவற்றில் கட்டிகள் உண்டாகும்,

CamScanner

சந்திரன்

சந்திரனுடன் சூரியன்;

ஜாதகர் நிர்வாகத் திறனுடையவர், ஜாதகர் தலைமை பொறுப்புகளை விரும்புவார், ஜாதகர் கர்வ சிந்தனையுடன் இருப்பார், தான் என்ற அகம்பாவம் உடையவர், ஜாதகரின் தந்தை உதவி குறையும், தந்தை வேறு இடங்களுக்கு பிழைப்பு தேடி செல்வார், அடிக்கடி இடமாறுதல், தொழில் மாறுதல் உடையவர், தந்தை மாற்றுப் பெண்களிடம் சபல புத்தியுடன் நடந்து கொள்வார், ஜாதகரின் தந்தை பிறந்த இடமருகே நீர்நிலைகள் இருக்கும், ஜாதகரின் மகனும் மேற்படி குணமுடையவர், ஜாதகரின் தாயார் குடும்பத்தை பேணிக் காக்கும் நிலைக்கு தள்ளப்படுவார், தாயார் ஆளுமை நிறைந்தவராக காணப்படுவார், தாய் கண் குறைபாடு, உஷ்ண பிரச்சனை, மாதவிடாய் பிரச்சனை, எலும்பு உடைதல், போன்றவற்றாலும், தந்தை கபம் தொடர்பான பிரச்சனை ரத்த ஓட்டத்தில் தடை, சளி, திடீர் நோய் தொற்றுகள், ஈர கற்றால் வரும் சரும் நோய்கள், இரத்த சோகை, விரை வீக்கம், மற்றும் மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாவார்கள், ஜாதகரின் தந்தை போக்குவரத்து, சமையல், கட்டிடப்பணி, வெளியிடங்களில் பணியாற்றுதல், போன்றவற்றையும், ஜாதகரின் தாய் தந்தையின் தொழிலில் உதவி, அரசு சார்ந்த பணிகள், நிர்வாக திறன் சார்ந்த பணிகள், அரசியல், போன்றவற்றில் ஆர்வமுடையவர், ஜாதகருக்கு கண் திறன் குறைபாடு, கண்களில் நீர் வடிதல், மனம் சார்ந்த அழுத்தம் உண்டாகும்,

சந்திரனுடன் செவ்வாய்:

ஜாதகரின் சகோதரர் அழகானவர், ஜாதகரின் தாய் கோப சிந்தனை உடையவர், அடிக்கடி நோய்வாய்ப்படுபவர், ஜாதகரின் சகோதரர் சந்தேக புத்தியும், சபல சிந்தனைகளும் கொண்டவர்,

சகோதரர் தொழில் விசயமாக பல இடங்களுக்கு பயணம் செய்வார், கலை சிந்தனை கொண்டவராவார், ஜாதகர் தெளிவான, வைராக்கியமான மனோநிலை கொண்டவர், அனைவரின் மீதும் சந்தேக பார்வை கொண்டவர், கணவனை அடிக்கடி பிரிந்து வாழ நேரும், கணவனின் நடத்தை மீது சந்தேகம் தோன்றும், ஜாதகர் உடல் எடைபோடுதல் குறித்து கவலை கொள்வார், ஜாதகரின் தாய் வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், குடல் இறக்கம், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், செப்டிக், டான்சிலஸ், இணைவுகளில் வலிவீக்கம், பித்த நோய்கள் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் சகோதரர் சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், இரத்த அழுத்தம், குடல்வால், உணவு குழாய் தொடர்பான நோய்கள், காற்றின் ஈரப்பதம் தொடர்பான தோல் நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், விரைவீக்கம், இரத்தசோகை, சிறுநீரக கல், தூக்கமின்மையால் வரும் நோய்கள் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகருக்கு முறையற்ற மாதவிலக்கு பிரச்சனை, இதய கோளாறுகள், நீர் தொடர்பான நோய்கள் உருவாகும், மனோ நிலை குழப்பம் உண்டாகும்,

சந்திரனுடன் புதன்:

ஜாதகரின் தாய் மிகுந்த சாமர்த்தியசாலி, வியாபார சிந்தனையுடன் பேசக் கூடியவர், எந்த சூழலையும் கையாளத் தெரிந்தவர், கேள்வி அறிவு உடையவர், புத்திசாலிதனம் நிறைந்தவர், மிகவும் நுணுக்கமானவர், சிண்டு மூட்டும் குணம் நிறைந்தவர், ஜாதகர் மனோநலம் குறித்தகல்வி, உணவு தொடர்பான கல்வி, கலைகள், வாகன வடிவமைப்பு, விவசாயம் போன்ற கல்விகளை கற்பார், ஜாதகர் காதல் சிந்தனை உடையவர், அலைபாயும் புத்தி உடையவர், பெண்களால் அவமானமடைவார், கல்வி தொடர்பாக அல்லது பணி, தொழில் பயிற்சி தொடர்பாக பயணம் மேற்கொள்வார், நட்பு சிந்தனை

அதிகம் உடையவர், ஏமாற்றும் எண்ணம் உடையவர், அசையா சொத்துக்கள் வாங்குதல், விற்றல் மூலமாக ஏமாற்றம் அடைவார், ஜாதகரின் தாய் தோல் நோயால் பாதிக்கப்படுவார், ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, மூளை கோளாறு, கோமா, தோல் நோய்கள், சொறி, சிரங்கு, போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் மகள் மற்றும் மாமா சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், குடல்வால், உணவு குழாய் தொடர்பான நோய்கள், காற்றின் ஈரப்பதம் தொடர்பான தோல் நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், விரைவீக்கம், இரத்தசோகை, சிறுநீரக கல், நீர் கட்டிகள் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் தொடர்பு புலன்கள் குறித்த நோய்கள், தோல் நோய்கள், வாய், வயிறு, ஜீரண உறுப்புகளின் இயக்க குறைபாடுகளால் அவதிப்படுவார்,

சந்திரனுடன் சுக்கிரன்:

அழகான மனைவி அமைவார், ஜாதகரின் தாயாரும் அழகானவர், மனைவி சந்தேக குணம் கொண்டவர், பயணங்களை விரும்புபவர், மனைவியின் ஊர் தூரமாக இருக்கும், ஜாதகரின் தாய் இனிமையாக பேசக்கூடியவர், செல்வ செழிப்பானவர், ஜாதகர் காம சிந்தனை நிறைந்தவராக இருப்பார், ஆடம்பர பொருட்களை விரும்புபவராகவும், அதை அடைய முயற்சியும் செய்வார், ஜாதகரின் மனைவி ஏமாற்றும் குணங்களை கொண்டிருப்பார், ஜாதகரின் தாயார் பித்தம், சன்னி நோய்கள், சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு, உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள், போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் மனைவி சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், இரத்தசோகை,

CamScanner

சிறுநீரக கல், போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் மாதவிடாய் கோளாறுகள், கபம் தொடர்பான நோய்கள், கண் நோய், சர்க்கரை நோய் போன்றவற்றிற்கு ஆளாவார்.

சந்திரனுடன் குரு:

ஜாதகர் குறுக்கு சிந்தனை கொண்டவர், அவமானம் அடைவார், மேன்மையாக வாழ ஆசை கொள்வார், தொழில் விசயமாகவோ ஆன்மீகம் தொடர்பாகவோ பயணங்கள் மேற்கொள்வார், சமூக அந்தஸ்த்தை விரும்புவார், பெரியோர்களின் நட்புகள் கிடைக்கும், ஜாதகரின் தாயால் நல்ல பெயரை பெறுவார், ஜாதகரின் தாய் தர்ம சிந்தனை கொண்டவர், ஆன்மீக பணிகளை செய்பவராக இருப்பார், ஜாதகர் தூரமான இடத்தில் பணி அல்லது தொழில் செய்ய விருப்பமுடையவர், ஜாதகரின் தாய், வயிறு, தசை மற்றும் தசை நார்கள், அனைத்து ஈரல்களும், கொழுப்பு, சீரண உறுப்புகள், மூளை தொடர்பான நோய்கள், நமைச்சல், குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை போன்ற நோய்களால் அவதிபடுவார், ஜாதகருக்கு ஈரல் தொடர்பான நோய்கள், சளி, வாந்தி, மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், தூக்கமின்மையால் வரும் நோய்கள், ஆசை தொடர்பால் வரும் நோய்கள், நீர் கட்டிகள், உண்டாகும், இரத்த ஓட்டத்தில் குறைபாடுகள், மனோரீதியான கோளாறுகள் தோன்றும்.

சந்திரனுடன் சனி:

ஜாதகர் நிதானமாக செயல்பட கூடியவர், சிலசமயம் சோம்பேறி போலக்கூட தோன்றலாம், ஜாதகரின் தாயாரும் பெரிதாக சுறுசுறுப்பற்றவர், ஜாதகர் தொழில் நிமித்தமாக பயணம் செய்பவராக இருப்பார், தொழில் தொடர்பான பல அவமானங்களை சந்திப்பார், ஜாதகர் கலைகள், ஜோதிடம்,

அரிசிவியாபரம், பூ மற்றும் பழவியாபாரம், கவிதை, கட்டுரை, இலக்கியம், ஓவியம், நீர் தொடர்பான தொழில், ஏமாற்றுத் தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, அயல்நாட்டு பணி ,அயல்நாடு தொழில், வேளாண்மை, மாலுமி, கப்பல், கப்பல் பணி, செவிலியர், மருத்துவம், போக்குவரத்து தொழில், வாகனம், வாகன உற்பத்தி, வாகன பழுது நீக்குதல், குளிர்சாதன பொருட்கள் உற்பத்தி மற்றும் பழுதுநீக்குதல், கலை சார்ந்த கல்வி, பேச்சாளர், சலவை, கட்டிடத்துறை, மாறும் அரசியல்வாதி, தினமும் விற்றுதீரும் பொருள் விற்பனை, ஆடு மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, சாஸ்திர விற்பனர், நடிப்பு, இசை, எழுத்தாளர், ரயில்வே பணிகள், விமான நிலைய பணிகள், சுற்றுலாத்துறை, சேவை நிறுவனம், தோட்ட வேலை போன்ற தொழில்கள் செய்பவராக இருப்பார், ஜாதகரின் தாயார் ஊனம், சித்த பிரமை, பித்த நோய்கள், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாவார், ஜாதகருக்கு மனம் தொடர்பான அழுத்தம், மூட்டுகளில் வலி, கால்களில் நீர் சேருதல், நரம்பு சுருட்டை நோய் ஏற்படும்,

சந்திரனுடன் ராகு:

தாய் நோய்வாய்ப்பட்டவர், தாயுடன் ஜாதகருக்கு கருத்து வேறுபாடு தோன்றும், தாயார் வாழ்க்கையில் போராடி வெற்றி பெற வேண்டும், ஜாதகர் மனோ குழப்பம் உடையவர், சில நேரங்களில் தவறான சிந்தனைகளும் தோன்றலாம், கெட்ட கனவுகள் தோன்றும், பய உணர்வு அதிகமாக இருக்கும், ஜாதகரின் மூதாதையர் பயணித்துக் கொண்டே இருப்பவர், ஜாதகருக்கு அடிக்கடி தற்கொலை எண்ணம் தோன்றும், திருட்டு, ஏமாற்றும் சிந்தனை அவ்வப்போது வரும், ஜாதகரின் தாயார் வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி,

CamScanner

குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள், போன்றவற்றால் அவதிப்படுவார், ஜாதகர் குடல் மற்றும் ஜீரண உறுப்புகள் குறைபாடுகளுடன் இருப்பார், கண் பார்வை குறைபாடு, தோல் நோய், விஷைக்கடி போன்றவற்றால் பாதிப்படைவார்,

சந்திரனுடன் கேது:

ஜாதகர் விரக்தி தன்மையுடையவர், சுய தேடுதல்களுக்காக பயணங்களை மேற்கொள்வார், ஜாதகரின் தாயார் வழக்குகளை சந்திப்பார், எதையோ இழந்தது போல காணப்படுவார், பக்தியானவராக இருப்பார், யாத்திரைகள் மேற்கொள்வார், ஜாதகர் வஞ்சக எண்ணம் நிறைந்தவர், ஜாதகர் குழப்ப சிந்தனை உடையவர், வாழ்க்கை மீது வெறுப்பு உடையவர், நிலையான மனோநிலையற்றவர், வழக்குகளுக்காக பயணம் செய்வார், ஜாதகரின் தாய் பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், தோல் உரிதல் அரிப்பு ,வயிறு நோய்கள், நகநோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் மன நோய், வயிற்று உபாதைகள், கண்கள் தொடர்பான நோய்களால் அவதிப்படுவார்.

செவ்வாய்

செவ்வாயுடன் சூரியன்:

ஜாதகரின் தந்தை சில நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பார், ஆக்ரோஷமான குணங்கள் நிறைந்தவராக இருப்பார், சகோதரன் ஆளுமை நிறைந்தவராக காணப்படுவார், ஜாதகரின் தந்தை அதிகாரத்தை நிலைநாட்டும் தன்மையை கொண்டவராக இருப்பார், சகோதரன் ஆதரவு ஜாதகருக்கு எப்போதும் இருக்கும், ஜாதகரின் சகோதரன் பிறந்த இடம் அருகே அரசு அலுவலகங்கள்

இருக்கும், ஜாதகருக்கு கண் தொடர்பான ஒற்றை தலை வலி வரும், இரத்தம் தொடர்பான நரம்பு கட்டிகள் தோன்றி மறையும், எலும்பு தொடர்பான பிரச்சனைகள் வரும், இரத்த உஷ்ண நோய்கள் உண்டாகும், ஜாதகரின் தந்தை இதய அடைப்பு, ரத்த அழுத்தம் போன்ற நோய்களாலும், சகோதரர் மற்றும் கணவர் பித்தநீர் குறைபாடுகள், விந்தணு குறைபாடுகள், உஷ்ணம் தொடர்பான நோய்களால் அவதிப்படுவார், ஜாதகரின் கணவன் மிகவும் அதிகாரம் செய்பவராக இருப்பார், ஜாதகரின் தந்தை இயந்திரவியல், எலெக்ட்ரிக்கல், பொறியியல், காவல் பணி, மருத்துவம் போன்ற தொழில்களிலும், சகோதரர் மற்றும் கணவர், அரசுப்பணி, நிர்வாகிக்கும் பணி, தந்தையின் பணி போன்றவற்றையும் செய்வார்,

செவ்வாயுடன் சந்திரன்:

ஜாதகரின் சகோதரர் அழகானவர், ஜாதகரின் தாய் கோப சிந்தனை உடையவர், அடிக்கடி நோய்வாய்படுபவர், ஜாதகரின் சகோதரர் சந்தேக புத்தியும், சபல சிந்தனைகளும் கொண்டவர், சகோதரர் தொழில் விசயமாக பல இடங்களுக்கு பயணம் செய்வார், கலை சிந்தனை கொண்டவராவார், ஜாதகர் மிகவும் தெளிவான, வைராக்கியமான மனோநிலை கொண்டவர், அனைவரின் மீதும் சந்தேக பார்வை கொண்டவர், கணவனை அடிக்கடி பிரிந்து வாழ நேரும், கணவனின் நடத்தை மீது சந்தேகம் தோன்றும், ஜாதகர் உடல் எடைபோடுதல் குறித்து கவலை கொள்வார், ஜாதகரின் தாய் வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், குடல் இறக்கம், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், செப்டிக், டான்சிலஸ், இணைவுகளில் வலிவீக்கம், பித்த நோய்கள் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் சகோதரர் சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், இரத்த அழுத்தம், குடல்வால், உணவு குழாய் தொடர்பான நோய்கள், காற்றின் ஈரப்பதம் தொடர்பான தோல்

நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், விரை வீக்கம், இரத்தசோகை, சிறுநீரக கல், தூக்கமின்மையால் வரும் நோய்கள் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகருக்கு முறையற்ற மாதவிலக்கு பிரச்சனை, இதய கோளாறுகள், நீர் தொடர்பான நோய்கள் உருவாகும், மனோ நிலை குழப்பம் உண்டாகும்,

செவ்வாயுடன் புதன்:

ஜாதகர் பொறியியல் சார்ந்த கல்வி, மருத்துவம், உணவு உற்பத்தி, கணிதவியல் போன்ற துறைசார்ந்த கல்வி கற்பார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் புத்தி கூர்மையானவர், சிண்டு மூட்டும் சிந்தனை உடையவர், வியாபார நுணுக்கங்களை தெரிந்தவர், அன்யோன்யமானவர், காதல் சிந்தனை உடையவர், அசையா சொத்துக்கள் சார்ந்த கருத்து வேறுபாடு தோன்றும், ஜாதகர் வழக்குகளை சந்திப்பார், ஜாதகர் துடிப்பான அணுகுமுறை கொண்டவர், எதிலும் உடனடியாக முடிவு எடுப்பவர், இவரின் அணுகுமுறை முரட்டுத்தனமாக தோன்றும், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, மனநல அழுத்தம், தோல் நோய்கள், சொரி, சிரங்கு, வெண்குஷ்டம் போன்றவற்றால் பாதிப்படைவர், ஜாதகருக்கு இரத்தம் தொடர்பான நோய்கள், நரம்பு மற்றும் கண் நோய்கள் ஏற்படும்,

செவ்வாயுடன் சுக்கிரன்:

ஜாதகரின் மனைவி திமிர், ஆணவம், கோபம் நிறைந்தவர், எதற்கெடுத்தாலும் சண்டையிடும் குணமுடையவர், ஜாதகருக்கும் அவரது மனைவிக்கும் அவ்வப்போது கருத்து வேற்றுமை உண்டாகும், அவரின் மனைவி உடல் நலம் குன்றியவர், எதாவது ஒரு உடல்நல சிக்கல் இருந்து கொண்டே இருக்கும், கணவன் மனைவிக்குள் காதல் அதீதமான காதல் இருக்கும், ஜாதகரின் சகோதரர், மற்றும் கணவர் அழகானவராகவும்

CamScanner

வசீகரமானவராகவும் இருப்பர், செல்வ நிலை திருப்தியளிக்கும், ஆடம்பர பொருட்கள் மீது பிரியமாக இருப்பார், ஜாதகரின் மனைவி அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், குடல் இறக்கம், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம் கலைதல், செப்டிக், டான்சிலஸ், இணைவுகளில் வலிவீக்கம், தழும்பு போன்ற நோய்களால் அவதிப்படுவார், ஜாதகரின் சகோதரர் பித்தம், சன்னி நோய்கள், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு, உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள், போன்ற நோய்களால் அவதிப்படுவார், ஜாதகர் சுரப்பி குறைபாடுகள், மாதவிடாய் கோளாறுகள், கட்டி, கொப்புளங்கள், அடிக்கடி காயப்படுதல் போன்றவற்றால் பாதிக்கப்படுவார்.

செவ்வாயுடன் குரு:

ஜாதகர் உணர்ச்சி வயப்படக்கூடியவர், முன் கோபி, அதிகாரம் செய்யும் எண்ணம் உடையவர், கர்வம் உடையவர், வீரமானவர், துணிந்து எதையும் செய்து முடிப்பவர், அனைவரையும் அடக்கி ஆள நினைப்பவர், வம்பு வழக்குகளில் ஆர்வம் கொண்டவர், நோயுள்ளவர், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் கண்ணியமானவர், ஒழுக்கசீலர், மதிப்பானவர், கௌரவமான பின்னனி கொண்டவர், நல்ல நிலையில் இருப்பார், பொது காரியங்களில் ஈடுபடுவார், முக்கிய பொறுப்புகளில் இருப்பார், கணவருடன் அதீத காதல் இருக்கும், ஒற்றுமையும் இருக்கும், ஜாதகரின் கணவர் மற்றும் சகோதரர் நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை போன்றவற்றால் பாதிக்கப்படுவார், ஜாதகருக்கு அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம்

CS CamScanner

கலைதல், செப்டிக், டான்சிலஸ், இணைவுகளில் வலிவீக்கம், தழும்பு, பித்த நோய்கள், மூளை காய்ச்சல், ஊனம் போன்றவற்றால் தொல்லை ஏற்படும்.

செவ்வாயுடன் சனி:

ஜாதகரின் கணவர் மற்றும் சகோதரர் பொறுமையாக செயல்படக்கூடியவர், தொழில் மீது கண்ணாய் இருப்பவர், பொருளுக்காக கடுமையாக உழைக்க வேண்டிவரும், ஜாதகர் தொழில் ரீதியான சிக்கல்களையும், வழக்குகளையும் சந்திப்பார், அடிக்கடி விவாதம் செய்பவராக இருப்பார், தொழில் தொடர்பான நோய்களால் பீடிக்கப்படுவார், சகோதரர் மற்றும் கணவன் மீது வெறுப்பு உணர்வு அவ்வப்போது தோன்றும், ஜாதகர் மருத்துவம், சவரத்தொழில், பொறியியல், மெக்கானிக், வாகனம் தொடர்பான தொழில்கள், காவல், திருடுதல், சண்டை தொழில்கள், அடியாட்கள், விளையாட்டு வீரர்கள், தற்காப்பு கலைகள், சமையல், உணவு விடுதிகள், சுரங்க பணிகள், ஆயுதம் தயாரிப்பு, ஆயுதப்படை, இராணுவம், அரசு சர்வாதிகாரம், எலெக்ட்ரிக்கல் சார்ந்த தொழில்கள், சிற்ப பணிகள், ரியல் எஸ்டேட், கட்டிட துறை பொருட்கள் விற்பனை, கூலி மற்றும் கடின உழைப்பு, புரட்சியாளர், வித்தை காட்டுதல், போர் தளவாட உற்பத்தி, தீவிரவாதம், மண்பாண்ட உற்பத்தி, மந்திரம், உருக்காலை, இயந்திர உற்பத்தி, குழு தலைமை, விவசாயப் பொறியியல், தீயணைப்புத் துறை, செங்கல்ச் சூலை, ரசாயன தொழில், சமையல்ப் பாத்திரம் உற்பத்தி மற்றும் விற்பனை, லேத், தொழிற்சாலை பணிகள், மருந்து உற்பத்தி, தையல், தாதுபொருட்கள் தொழில், இன்சூரன்ஸ், ரவுடித் தொழில், வெல்டிங், செக்யூரிட்டி, கைவினைஞர், லேப், மருத்துவ உபகரணம் உற்பத்தி மற்றும் விற்பனை, சேனாதிபதி, தொல்பொருள் ஆய்வு தொடர்பான தொழில்கள், நுணுக்கப்பொருட்கள் உற்பத்தி, அகழாய்வுத் துறை போன்ற துறைகள் சார்ந்த பணியில் அல்லது தொழிலில் இருப்பார்,

ஜாதகரின் கணவன் மற்றும் சகோதரர் அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, பல் நோய்கள், செப்டிக், டான்சிலஸ், விதவை போகத்தால் நோய்கள், இணைவுகளில் வலிவீக்கம், தழும்பு, பித்த நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்படுவார், ஜாதகர் பற்கள், கால் எலும்பு தொடர்பான பிரச்சனைகள், மூட்டுகளில் தேய்மானம் போன்றவற்றால் அவதியுறுவார்.

செவ்வாயுடன் ராகு:

ஜாதகர் சகோதரனுடன் கருத்து வேறுபாடு கொண்டவர், ஜாதகர் கடன், வழக்கு, விபத்து மற்றும் தொடர் நோய்களுக்கு ஆளாவார், அறுவை சிகிச்சை ஏற்படும், கணவரை பிரிய நேரிடும், கணவர் அயல் நாடுகளில் பணிபுரிவார், பெண்களுக்கு திருமண தாமதம் ஏற்படும், தேவையற்ற பிரச்சனைகளில் மூக்கை நுழைத்து விவகாரங்களை வாங்கி கொள்வார், பங்குதாரர்களால் ஏமாற்றம் ஏற்படும், தொழிலில் நம்பிக்கை துரோகத்தை சந்திப்பார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் எரிச்சலூட்டும் வகையில் நடந்து கொள்வர், அவர்களுக்கு பெரிய நிறுவனங்களில் பணி அல்லது தொழில் தொடர்புகள் கிடைக்கும், திடீர் வரவுகள் ஏற்படும், சட்ட விரோத வழியில் வருமானம் கிடைக்கும், லாட்டரி, ரேஸ் போன்ற விருப்பங்கள் இருக்கும் ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவருக்கு வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், விஷக்கடி, ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், வெட்டுக்காயங்கள், விபத்து, தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், சிறு நீரக கற்கள், மூலம், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள், மரண பயம் போன்ற மனோ வியாதிகள் தோன்றும், ஜாதகருக்கு பல் நோய், தொற்று கிருமிகளால் தொல்லை, இரத்தம் கெட்டு போதல், எலும்புகள் உடைதல், மாதவிடாய் கோளாறுகள், கர்பப்பை சிக்கல், விந்தணுக் குறைபாடுகள், போன்றவற்றால் அவதியுறுவார்.

செவ்வாயுடன் கேது:

ஜாதகர் வழக்குகளை சந்திப்பார், ஜாதகர் தன் உடல் ஆரோக்கியம் மீது கவனம் செலுத்த மாட்டார், ஜாதகர் வழக்குகளில் சிக்கிக் கொள்வார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவருடன் கருத்து வேறுபாட்டில் இருப்பார், அவர்கள் மீது ஜாதகருக்கு விரக்தி ஏற்படும், அவர்கள் வாழ்க்கை பற்றி கவலை அற்றவர்களாக இருப்பர், ஆன்மீகம் மற்றும் பொது காரியங்களில் ஈடுபாடு இருக்கும், வீட்டைப் பற்றி கவனம் இல்லாதவர்கள் அதனாலேயே சண்டை சச்சரவுகள் உண்டாகும், ஜாதகர் கணவனை பிரிந்து வாழும் நிலை ஏற்படலாம், திருமணம் தாமதமாக நடக்கும், ஜாதகர் நோய்வாய்ப் பட்டிருப்பார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், தோல் உரிதல் அரிப்பு, வயிறு நோய்கள், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, விடைதெரியாத நோய்கள், குடல் புழுக்கள், தேக மெலிவு போன்றவற்றால் அவதிப்படுவார், ஜாதகர் எதையும் அதிகம் நுகர்வதால் உண்டாகும் நோய்கள், விசக்கடி, குடல் பிரச்சனை, மூலம், விசக்கடி போன்றவற்றால் பாதிப்படைவார்.

புதன்

புதனுடன் சூரியன்:

ஜாதகரின் தந்தை புத்தி கூர்மயானவர், கவர்ச்சியாக பேசக்கூடியவர், சிந்தித்து செயலாற்றுபவர், சமயோஜித புத்தி உடையவர், சாதூர்யமானவர், ஜாதகரின் மகள் ஆளுமைத் திறனுடன் இருப்பார், ஜாதகரின் தந்தை கல்வி நிறுவனம் அருகே வசிப்பார் அல்லது பிறந்திருப்பார், ஜாதகரின் தந்தைக்கு நிலம் இருக்கும், வியாபார நுணுக்கங்கள் கொண்டவர், எழுத்து

CamScanner

பணிகளில் விருப்பம் உடையவர், ஜாதகரின் தந்தை காதல் சிந்தனை உடையவர், ஜாதகரின் தந்தைக்கு இருதயம் கண்களில் குறைபாடு, தோல் வியாதிகள் இருக்கும், ஜாதகர் படிக்கும் இடம் அருகே அரசு நிறுவனங்கள் இருக்கும், ஜாதகரின் மகள் மற்றும் சகோதரிகள் அரசு மருத்துவமனை அல்லது அரசு அலுவலகங்களுக்கு அருகே பிறந்திருப்பர், ஜாதகருக்கும் தோல் நோய்கள் இருக்கும், வாக்கு குழருதல், செவித்திறன் குறைபாடு ஜாதகருக்கும் அவரது தந்தைக்கும் இருக்கும், ஜாதகரின் மகளுக்கு வாதம் தொடர்பான சிக்கல், தானியங்கு உறுப்பில் நோய்கள், ஒற்றை தலை வலி, உஷ்ணம் தொடர்பான சிக்கல், மாதவிடாய் பிரச்சனைகள் இருக்கும்,

புதனுடன் சந்திரன்:

ஜாதகரின் தாய் மிகுந்த சாமர்த்தியசாலி, வியாபார சிந்தனையுடன் பேசக் கூடியவர், எந்த சூழலையும் கையாளத் தெரிந்தவர், கேள்வி அறிவு உடையவர், புத்திசாலிதனம் நிறைந்தவர், மிகவும் நுணுக்கமானவர், சிண்டு மூட்டும் குணம் நிறைந்தவர், ஜாதகர் காதல் சிந்தனை உடையவர், அலைபாயும் புத்தி உடையவர், பெண்களால் அவமானமடைவார், ஜாதகர் மனோநலம் குறித்த கல்வி, உணவு தொடர்பான கல்வி, கலைகள், வாகன வடிவமைப்பு, விவசாயம் போன்ற கல்விகளை கற்பார், கல்வி தொடர்பாக அல்லது பணி, தொழில் பயிற்சி தொடர்பாக பயணம் மேற்கொள்வார், நட்பு சிந்தனை அதிகம் உடையவர், ஏமாற்றும் என்னம் உடையவர், அசையா சொத்துக்கள் வாங்குதல், விற்றல் மூலமாக ஏமாற்றம் அடைவார், ஜாதகரின் தாய் தோல் நோயால் பாதிக்கப்படுவார், ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, மூளை கோளாறு, கோமா, தோல் நோய்கள், சொரி, சிரங்கு, போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் மகள் மற்றும் மாமா சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம்,

குடல்வால், உணவு குழாய் தொடர்பான நோய்கள், காற்றின் ஈரப்பதம் தொடர்பான தோல் நோய்கள், நீரினால் ஏற்படும் நோய்கள், விரைவீக்கம், இரத்தசோகை, சிறுநீரக கல், நீர் கட்டிகள் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் தொடர்பு புலன்கள் குறித்த நோய்கள், தோல் நோய்கள், வாய், வயிறு, ஜீரண உறுப்புகளின் இயக்க குறைபாடுகளால் அவதிப்படுவார்,

புதனுடன் செவ்வாய்:

ஜாதகர் பொறியியல் சார்ந்த கல்வி, மருத்துவம், உணவு உற்பத்தி, கணிதவியல் போன்ற துறைசார்ந்த கல்வி கற்பார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் புத்தி கூர்மையானவர், சிண்டு மூட்டும் சிந்தனை உடையவர், வியாபார நுணுக்கங்களை தெரிந்தவர், அன்யோன்யமானவர், காதல் சிந்தனை உடையவர், அசையா சொத்துக்கள் சார்ந்த கருத்து வேறுபாடு தோன்றும், ஜாதகர் வழக்குகளை சந்திப்பார், ஜாதகர் துடிப்பான அணுகுமுறை கொண்டவர், எதிலும் உடனடியாக முடிவு எடுப்பவர், இவரின் அணுகுமுறை முரட்டுத்தனமாக தோன்றும், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, மனநல அழுத்தம், தோல் நோய்கள், சொறி, சிரங்கு, வெண்குஷ்டம் போன்றவற்றால் பாதிப்படைவர், ஜாதகருக்கு இரத்தம் தொடர்பான நோய்கள், நரம்பு மற்றும் கண் நோய்கள் ஏற்படும்,

புதனுடன் சுக்கிரன்:

ஜாதகர் காதல் வயப்படுவார், காதல் திருமணம் உண்டாகும், மனைவியுடன் கருத்தொற்றுமை இருக்கும், மனைவி புத்திசாலித்தனம் மிகுந்தவர், நல்ல கல்வி தகுதி உடையவர், மற்றவர்களுடன் உரையாடும் போது அழகாக, அறிவுடன் பேசுபவர், ஜாதகர் கவர்ச்சியாக காணப்படுவார் எதிர்பாலின நபர்களை கவரும் வண்ணம் பேசுவார், செல்வம் சேர்க்கை

இருக்கும், ஜாதகர் செல்வம் குறித்து ஆசையுடையவர், கலை, பொருளாதாரம், விளம்பரம் சார்ந்த கல்வி உடையவர், ஜாதகர் பெண்கள் விசயத்தில் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு அதிகம், ஜாதகரின் மகள் அழகானவர், இனிமையாக பேசுபவர் செல்வ செழிப்பானவர், ஜாதகரின் மனைவி ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, மூளை கோளாறு, தோல் நோய்கள், சொரி, சிரங்கு, வெண்குஷ்டம் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் மகள் பித்தம், சன்னி நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்த சோகையால் வரும் தோல் நோய்கள் இவைகளால் அவதிப்படுவார், ஜாதகர் சுரப்பிகள் குறைபாடு, கண்கள், வாய் மற்றும் காது தொடர்பான பிரச்சனைகளை சந்திப்பார்,

புதனுடன் குரு:

ஜாதகர் உயரிய சிந்தனை உடையவர், புத்திசாலித்தனம் மிக்கவர், கவரும் வகையில் பேசக்கூடியவர், உயர் கல்விக்கான வாய்ப்புண்டு, காதல் சிந்தனை கொண்டவர், ஜாதகர் பெரியோர்களின் நட்பை பெறுவார், தனக்கு வயதுக்கு மீரிய நபர்களுடன் தொடர்பு வைத்திருப்பார், ஜாதகரின் மகள் கௌரவமான குடும்பத்தில் வாழ்வார், ஜாதகர் நிர்வாகம், பொதுப் பணி, வேதம், மத நூல்கள் தொடர்பான கல்வி கற்பார், வியாபர நுணுக்கங்களை அறிந்திருப்பார், எதையும் வியாபார கண்ணோட்டத்துடன் காண்பார், ஜாதகரின் மகள் அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை, ஜாதகர் பார்வை குறைபாடு, பேசுவதில் குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, நோய்கள், சொரி, சிரங்கு, போன்றவற்றால் பாதிப்படைவார்,

புதனுடன் சனி:

ஜாதகர் வியாபார நுணுக்கங்களை அறிந்திருப்பார், ஜாதகர் நிதானமாக செயல்படுவார், தொடர்பு புலன்களில் குறைபாடு உடையவர், ஜாதகருக்கு வேற்று மத நண்பர்கள் உதவி கிடைக்கும், கல்வியில் சிறப்பு இல்லை, ஆனால் கேள்வியறிவு அதிகமானவர், ஜாதகரின் மகள் சோம்பேறித்தனமானவர், ஜாதகர் ஆசிரியர், புத்தக எழுத்தாளர், கணக்குப்பிள்ளை, பதிவுத்துறை, மேடைபேச்சாளர், தபால் துறை, சில்லரை வியாபாரம், கணித புலமை, அனைத்து வியாபாரங்களும், சட்டத்துறை, சிற்ப தொழில், ஓவியர், வரலாற்று ஆசிரியர்கள், தொலை தொடர்புத் துறை, தூதரக பணிகள், சிற்பத் தொழில், தரகு, செய்தித்துறை, புத்தக கடை, ஸ்டேசனரி, அச்சு தொழில், தரகு, சூதாட்டம், மீடியா, ஐடி, கேமரா, மளிகை கடை, கல்விசார்ந்த ஆராய்ச்சி, நவீன தொழில் நுட்பம், போன்ற தொழில்களில் ஈடுபடுவார், ஜாதகரின் மகளுக்கு ஊனம், பித்த நோய்கள், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், மன அழுத்தம் போன்ற அவதிகள் இருக்கும் , ஜாதகர் தோல் நோய், குடல் தொடர்பான நோய்கள், கால் நரம்பு சிக்கல், ஜல, மல உபாதிகளை சந்திப்பார்,

புதனுடன் ராகு:

ஜாதகர் எதையும் பெரிதாக செய்யும் சிந்தனை உடையவர், உழைக்காமல் சம்பாதிக்கும் எண்ணம் உடையவர், ஏமாற்று சிந்தனை உடையவர், சூது போன்ற வழியில் பணம் ஈட்டும் ஆசை கொண்டவர், பேசும் திறன், கேட்கும் திறன் குறைபாடு இருக்கும், கல்வியில் தடைபட்டு தொடருவார், மற்ற மத நண்பர்கள் தொடர்புகள் இருக்கும், காதல் விவாகரத்தில் தோல்வியை சந்திப்பார், சரியாக பேச இயலாமல் வரும்

CamScanner

வாய்ப்புகளை இழப்பார், ஜாதகரின் மகள் எப்போது சிக்கலாகவே இருப்பார், அவரால் ஜாதகர் துயரப்படுவார், ஜாதகரின் மகள் வாயுத்தொல்லைகள், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து மரணங்கள், தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள் போன்றவைகளை சந்திப்பார், ஜாதகர் குஷ்டம், தோல் நோய்கள், மனநல அழுத்தம், காது, வாய், கண் பிரச்சனைகளால் அவதியடைவார்,

புதனுடன் கேது:

ஜாதகர் பேச்சு, மற்றும் கேட்கும் திறன் குறைபாடு உடையவர், கல்வியில் தடைகள் இருக்கும், காதல் தோல்வியடையும், குறுக்கு சிந்தனை உடையவர், மேன்மையான சிந்தனை இருக்கும், கடவுள் நம்பிக்கை இருக்காது, அதை வரவழைத்து கொண்டால் வாழ்வில் வெற்றி பெறுவார், வழக்கு தொடர்பான சிக்கல்களை சந்திப்பார், வியாபாரத்தில் புதுப்புது உக்திகளை கையாள்வார், அதிலும் பல தோல்விகளை சந்திப்பார், அனைவருடனும் கருத்து வேறுபாடு ஏற்படும், ஜாதகரின் மகள் சாந்தமானவர், வாழ்க்கை பற்றிய தேடல் கொண்டவர், ஜாதகரின் மகள் பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், அரிப்பு, வயிறு நோய்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, குடல் புழுக்கள், தேக மெலிவு போன்றவற்றிற்கு ஆளாவார், ஜாதகருக்கு நரம்பு மண்டலம், தோல், மனநலம் தொடர்பான சிக்கல் இருக்கும்.

சுக்கிரன்

சுக்கிரனுடன் சூரியன்:

மனைவி ஆளுமை நிறைந்தவர், குடும்பத்தை வழி நடத்தும் திறன் மிக்கவர், மனைவியுடன் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், ஜாதகரின் மகன் மற்றும் தந்தை அழகாகவும், கவரும் வகையிலும் பேசும் திறன் உடையவர்கள், ஆடை, ஆபரணம் மீது ஆர்வம் உடையவர்கள், செல்வம் பற்றிய சிந்தனை உடையவர்கள், தந்தை தாய் அன்யோன்யமாக இருப்பர், ஜாதகரின் மனைவி உஷ்ணம் தொடர்பான நோய்கள் இருக்கும், மாடவிடாய் அல்லது வெள்ளைப்படுதல் பிரச்சனை இருக்கும், கண்கள் தொடர்பான ஒற்றை தலைவலி, ஒவ்வாமையால் ஏற்படும் ஒற்றை தலை வலி இருக்கும், ஜாதகரின் தந்தைக்கு சிறு நீரக கோளாருகள், கண்களில் பிரச்சனை ஏற்படும்,

சுக்கிரனுடன் சந்திரன்:

அழகான மனைவி அமைவார், ஜாதகரின் தாயாரும் அழகானவர், மனைவி சந்தேக குணம் கொண்டவர், பயணங்களை விரும்புபவர், மனைவியின் ஊர் தூரமாக இருக்கும், ஜாதகரின் தாய் இனிமையாக பேசக்கூடியவர், செல்வ செழிப்பானவர், ஜாதகர் காம சிந்தனை நிறைந்தவராக இருப்பார், ஆடம்பர பொருட்களை விரும்புபவராகவும், அதை அடைய முயற்சியும் செய்வார், ஜாதகரின் மனைவி ஏமாற்றும் குணங்களை கொண்டிருப்பார், ஜாதகரின் தாயர் பித்தம், சன்னி நோய்கள், சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு, உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள், போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் மனைவி சளி, சிறு நீர் தொற்று, திடீர் தொற்று நோய்கள், வயிற்றுபோக்கு, வாந்தி, கபம், மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், இரத்தசோகை,

சிறுநீரக கல், போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் மாதவிடாய் கோளாறுகள், கபம் தொடர்பான நோய்கள், கண் நோய், சர்க்கரை நோய் போன்றவற்றிற்கு ஆளாவார்,

சுக்கிரனுடன் செவ்வாய்:

ஜாதகரின் மனைவி திமிர், ஆணவம், கோபம் நிறைந்தவர், எதற்கெடுத்தாலும் சண்டையிடும் குணமுடையவர், ஜாதகருக்கும் அவரது மனைவிக்கும் அவ்வப்போது கருத்து வேற்றுமை உண்டாகும், அவரின் மனைவி உடல் நலம் குன்றியவர், எதாவது ஒரு உடல்நல சிக்கல் இருந்து கொண்டே இருக்கும், கணவன் மனைவிக்குள் அதீதமான காதல் இருக்கும், ஜாதகரின் சகோதரர், மற்றும் கணவர் அழகானவராகவும் வசீகரமானவராகவும் இருப்பர், செல்வ நிலை திருப்தியளிக்கும், ஆடம்பர பொருட்கள் மீது பிரியமாக இருப்பர், ஜாதகரின் மனைவி அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், குடல் இறக்கம், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம் கலைதல், செப்டிக், டான்சிலஸ், இணைவுகளில் வலிவீக்கம், தழும்பு போன்ற நோய்களால் அவதிப்படுவார், ஜாதகரின் சகோதரர் பித்தம், சன்னி நோய்கள், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு, உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள், போன்ற நோய்களால் அவதிப்படுவார், ஜாதகர் சுரப்பி குறைபாடுகள், மாதவிடாய் கோளாறுகள், கட்டி, கொப்புளங்கள், அடிக்கடி காயப்படுதல் போன்றவற்றால் பாதிக்கப்படுவார்.

சுக்கிரனுடன் புதன்:

ஜாதகர் காதல் வயப்படுவார், காதல் திருமணம் உண்டாகும், மனைவியுடன் கருத்தொற்றுமை இருக்கும், மனைவி புத்திசாலித்தனம் மிகுந்தவர், நல்ல கல்வி தகுதி உடையவர்,

CamScanner

மற்றவர்களுடன் உரையாடும் போது அழகாக, அறிவுடன் பேசுபவர், ஜாதகர் கவர்ச்சியாக காணப்படுவார் எதிர்பாலின நபர்களை கவரும் வண்ணம் பேசுவார், செல்வம் சேர்க்கை இருக்கும், ஜாதகர் செல்வம் குறித்து ஆசையுடையவர், கலை, பொருளாதாரம், விளம்பரம் சார்ந்த கல்விஉடையவர், ஜாதகர் பெண்கள் விசயத்தில் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு அதிகம், ஜாதகரின் மகள் அழகானவர், இனிமையாக பேசுபவர் செல்வ செழிப்பானவர், ஜாதகரின் மனைவி ஊமை, செவிடு, திக்குவாய், பார்வை குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, மூளை கோளாறு, தோல் நோய்கள், சொரி, சிரங்கு, வெண்குஷ்டம் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகரின் மகள் பித்தம், சன்னி நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள் இவைகளால் அவதிப்படுவார், ஜாதகர் சுரப்பிகள் குறைபாடு, கண்கள், வாய் மற்றும் காது தொடர்பான பிரச்சனைகளை சந்திப்பார்,

சுக்கிரனுடன் குரு:

ஜாதகர் கவர்ச்சியானவர், வசீகரம் மிக்கவர், ஆடம்பர பொருட்கள் மீது விருப்பம் கொண்டவர், எதையும் தான் அனுபவிக்க, அடைய நினைப்பவர், சுகவாழ்வு வாழ ஆசை உடையவர், எதிர்பாலின வேட்க்கை உடையவர், ஆசைப் பட்டவருடன் வாழ ஆசை கொள்பவர், திருமண வாழ்க்கை விரும்பியவருடன் அமைந்தால் நன்மை இல்லாவிடில் இவர் மீது நடத்தை குறித்த பழிச் சொற்கள் ஏற்படும், படோபகார வாழ்வுக்கு எப்போது ஆசைப்படுபவர், மாற்றான் பொருளை அடையும் எண்ணம் இருக்கும், கட்டுப்பாடு அவசியம், ஜாதகரின் மனைவி மிகவும் குணமானவர், கௌரவமான குடும்பத்தில் இருந்து வருவார், அவர் தர்ம சிந்தனை கொண்டொழுகுவார், ஜாதகர் மனைவியால் மதிப்படைவார், ஜாதகரின் மனைவி மூளை தொடர்பான நோய்கள், அசீரண கோளாறு, குடல் தொடர்பான

நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை ஆகியவற்றால் அவதிப்படுவார், ஜாதகர் பித்தம், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு போன்ற நோய்களால் வருத்தமடைவார்.

சுக்கிரனுடன் சனி:

ஜாதகர் செல்வ செழிப்படைவார், விரும்பும் வாழ்க்கையை அனுபவிப்பார், பொருளாதாரம் தொடர்ந்து மேம்படும், தொழில் மூலம் அதிகம் சம்பாதிப்பார், ஜாதகரின் மனைவி சுறுசுறுப்பற்றவர், சொகுசான வாழ்க்கையை விரும்புபவர், அதிக ஆசை இல்லாதவர், தொழிலில் கருத்தானவர், பணம் ஒன்றே பிரதானமாக கருதுபவர், ஆடம்பர மற்றும் அத்யாவசிய பொருளுக்கு குறைவிருக்காது, ஜாதகர் பாடகன், நடிகன், வீடு விற்பனை, திருமணம் சார்ந்த தொழில்கள், மீடியா, ஒப்பனை, மார்கெட்டிங், பெய்ண்டிங், விலை உயர்ந்த கால்நடை விற்பனை, பணப்பயிர் வியாபாரம், வங்கிப்பணி, சொகுசுவாகன உற்பத்தி மற்றும் வியாபாரம், அயல்நாட்டுப் பணி, நட்சத்திர ஹோட்டல் மற்றும் விடுதிகள், கருவூலம், அலங்கார பொருட்கள் விற்பனை, பர்னிச்சர், கண்ணாடி தொழிற்சாலை பணி, அழகு நிலையம், நறுமணப் பொருட்கள் விற்பனை உற்பத்தி, இரத்தின வியாபாரி, பொன் வியாபரம், பழவியாபாரம், பணப்பயிர் வேளாண்மை, வட்டித்தொழில், கவிஞர், நிதி துறை, அரச விருந்தினர், மாளிகை பணி, மருந்து விற்பனை, ஆப்டிகல்ஸ், பட்டு விற்பனை, தொலைக்காட்சி, நடனம், விளம்பர பணிகள், நுகர்வோர் தொடர்பு பணிகள், இசை கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனை, வாகன தொழில், புதுமையான தொழில்கள், ஆடிட்டர், சலவையகம், பெண்தொழிலாளர்களை கொண்டு செய்யும் தொழில்கள், வேற்று மொழி கற்பித்தல், வசந்தகால பயிர்கள் போன்ற தொழில்களின்

மூலம் பணம் ஈட்டுவார், ஜாதகரின் மனைவி சர்க்கரை நோய், பிறப்புறுப்பு நோய்கள், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்தசோகையால் வரும் தோல் நோய்கள் போன்றவற்றால் பதிப்படைவார், ஜாதகர் கண், கால், பிறப்புறுப்பு கோளாறு, இல்லற நாட்டமின்மை போன்ற சிக்கல்களை சந்திப்பார்,

சுக்கிரனுடன் ராகு:

ஜாதகருக்கு திருமண தாமதமாகும், இல்லாவிடில் திருமண முறிவு அல்லது அதற்கிணையான சிக்கல்களை சந்திப்பார், ஜாதகரின் மனைவி தொடர் நோயால் அவதிப்படுவார், ஜாதகர் குடும்பத்தை பிரிந்து தொழில் விசயமாக வேறு இடம் செல்வார், மனைவி சதா பிரச்சனை செய்பவராக இருப்பார், ஏமாற்றும் சிந்தனையுடனும் இருப்பார், ஜாதகருக்கு திடீர் பொருள் வரவு உண்டாகும், ஜாதகரின் மனைவி பய உணர்வினாலும், கெட்ட கனவுகளாலும், பில்லி சூன்ய அச்சத்தாலும் குழப்பம் அடைவார், வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து, தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள் போன்றவற்றால் கவலை கொள்வார், ஜாதகர் சுரப்பிகள், வாயு கோளாறு, அதீத காம சிந்தனை, பிறப்புறுப்புகளில் புண்களால் தொல்லைகளை சந்திப்பார்,

சுக்கிரனுடன் கேது:

திருமணம் தாமதமாகும், இல்லாவிடில் மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றும், சட்டப்படியாக பிரிவு நேரலாம், ஜாதகரின் மனைவி எதையோ இழந்தது போன்றே காணப்படுவார், ஆன்மீக ஈடுபாடுடையவர், ஜாதகர் பெண்கள் மீது

CS CamScanner

வெறுப்புடையவர், ஜாதகரின் மனைவி கர்பப்பை கோளாறுகள், பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, குடல் புழுக்கள், பிறப்புறுப்பில் ரணம் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் கண், ஆசனவாய், பிறப்புறுப்பு விரைப்புத் தன்மை போன்ற நோய்களுக்கு ஆளாவார்,

குரு

குருவுடன் சூரியன்:

ஜாதகர் நிர்வாகத் திறமை உடையவர், ஜாதகர் தனது பொறுப்புகளை புரிந்து செல்படுவார், பெரிய மனிதர்களின் நட்பும், அறிவுரைகளும் கிடைக்க பெறுவார், ஜாதகரின் தந்தை கௌரவமான குடும்பத்தில் பிறந்திருப்பார், ஆன்மீக சிந்தனை உடையவர், நல்ல சிந்தனையாளர், ஜாதகரின் மகனும் குடும்ப கௌரவத்தினை மேம்படுத்துவார், அற செயல்களில் ஈடுபடுவர், பொது பொறுப்புகள் தேடிவரும், ஜாதகர் நுணுக்கமான சிந்தனைகளை கொண்டவர், ஜாதகர் பிறந்த இடத்தில் அரசு அலுவலகங்கள் இருக்கும், ஜாதரின் தந்தை மற்றும் மகனுக்கு, நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் ஏற்பட நேரிடும், ஜாதகருக்கு விந்தணு உற்பத்தி குறைபாடுகள், கடினமான பகுதி உடைந்து சிதருதல், ஜுரம், ஒற்றை தலைவலி, மஞ்சள் காமாலை, தானியங்கு உறுப்புகள் தொடர்பான நோய்கள், சூடு தொடர்பான நோய்கள், வாதம் ஏற்படும்.

CamScanner

குருவுடன் சந்திரன்:

ஜாதகர் குறுக்கு சிந்தனை கொண்டவர், அவமானம் அடைவார், மேன்மையாக வாழ ஆசை கொள்வார், தொழில் விசயமாகவோ ஆன்மீகம் தொடர்பாகவோ பயணங்கள் மேற்கொள்வார், சமூக அந்தஸ்த்தை விரும்புவார், பெரியோர்களின் நட்புகள் கிடைக்கும், ஜாதகரின் தாயால் நல்ல பெயரை பெறுவார், ஜாதகரின் தாய் தர்ம சிந்தனை கொண்டவர், ஆன்மீக பணிகளை செய்பவராக இருப்பார், ஜாதகர் தூரமான இடத்தில் பணி அல்லது தொழில் செய்ய விருப்பமுடையவர், ஜாதகரின் தாய், வயிறு, தசை மற்றும் தசை நார்கள், அனைத்து ஈரல்களும், கொழுப்பு, சீரண உறுப்புகள், மூளை தொடர்பான நோய்கள், நமைச்சல், குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாசநோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை போன்ற நோய்களால் அவதிப்படுவார், ஜாதகருக்கு ஈரல் தொடர்பான நோய்கள், சளி, வாந்தி, மனநோய், அஜீரணம், மாதவிடாய் கோளாறுகள், இரத்த அழுத்தம், தூக்கமின்மையால் வரும் நோய்கள், ஆசை தொடர்பால் வரும் நோய்கள், நீர் கட்டிகள், உண்டாகும், இரத்த ஓட்டத்தில் குறைபாடுகள், மனோரீதியான கோளாறுகள் தோன்றும்.

குருவுடன் செவ்வாய்:

ஜாதகர் உணர்ச்சி வயப்படக்கூடியவர், முன் கோபி, அதிகாரம் செய்யும் எண்ணம் உடையவர், கர்வம் உடையவர், வீரமானவர், துணிந்து எதையும் செய்து முடிப்பவர், சிறு வயதில் இருந்து எதாவது ஒரு ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனை ஒன்று மாற்றி ஒன்றாக வரும் குறிப்பாக சளி, கட்டி ஜுரம் என அடிக்கடி மருத்துவானைக்கு செல்லும் நிலை இருக்கலாம், ஜாதகர் தனது வாழ்நாளில் வழக்குகளை சந்திப்பார், பிறருக்காக உதவுதல், கொடுக்கல் வாங்கல் வழியான வழக்குகள், பிறருக்கு தூரிட்டி போடுவதனால் இஅவர் சிக்குவது மற்று குடும்பநல

வழக்குகளில் ஒன்றை சந்திப்பார், அனைவரையும் அடக்கி ஆள நினைப்பவர், வம்பு வழக்குகளில் ஆர்வம் கொண்டவர், நோயுள்ளவர், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் கண்ணியமானவர், ஒழுக்கசீலர், மதிப்பானவர், கௌர்வமான பின்னணி கொண்டவர், நல்ல நிலையில் இருப்பார், பொது காரியங்களில் ஈடுபடுவார், முக்கிய பொறுப்புகளில் இருப்பார், கணவருடன் அதீத காதல் இருக்கும், ஒற்றுமையும் இருக்கும், ஜாதகரின் கணவர் மற்றும் சகோதரர் நமைச்சல், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை போன்றவற்றால் பாதிக்கப்படுவார், ஜாதகருக்கு அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், தீக்காயங்கள், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, ஈரல் நோய்கள், பல் நோய்கள், கர்ப்பம் கலைதல், செப்டிக், டான்சிலஸ், இணைவுகளில் வலிவீக்கம், தழும்பு, பித்த நோய்கள், மூளை காய்ச்சல், ஊனம் போன்றவற்றால் தொல்லை ஏற்படும்.

குருவுடன் புதன்:

ஜாதக உயரிய சிந்தனை உடையவர், புத்திசாலித்தனம் மிக்கவர், கவரும் வகையில் பேசக்கூடியவர், உயர் கல்விக்கான வாய்ப்புண்டு, காதல் சிந்தனை கொண்டவர், ஜாதகர் பெரியோர்களின் நட்பை பெறுவார், தனக்கு வயதுக்கு மீறிய நபர்களுடன் தொடர்பு வைத்திருப்பார், ஜாதகரின் மகள் கௌரவமான குடும்பத்தில் வாழ்வார், ஜாதகர் நிர்வாகம், பொதுப் பணி, வேதம், மத நூல்கள் தொடர்பான கல்வி கற்பார், வியாபார நுணுக்கங்களை அறிந்திருப்பார், எதையும் வியாபார கண்ணோட்டத்துடன் காண்பார், ஜாதகரின் மகள் அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை, ஜாதகர்

CamScanner

பார்வை குறைபாடு, பேசுவதில் குறைபாடு, வாதம், நரம்பு தளர்ச்சி, நோய்கள், சொரி, சிரங்கு, போன்றவற்றால் பாதிப்படைவார்,

குருவுடன் சுக்கிரன்:

ஜாதகர் கவர்ச்சியானவர், வசீகரம் மிக்கவர், ஆடம்பர பொருட்கள் மீது விருப்பம் கொண்டவர், எதையும் தான் அனுபவிக்க அடைய நினைப்பவர், சுகவழ்வு வாழ ஆசை உடையவர், எதிர்பாலின வேட்கை உடையவர், ஆசைப் பட்டவருடன் வாழ ஆசை கொள்பவர், திருமண வாழ்க்கை விரும்பியவருடன் அமைந்தால் நன்மை இல்லாவிடில் இவர் மீது நடத்தை குறித்த பழிச் சொற்கள் ஏற்படும், படோபகார வாழ்வுக்கு எப்பொழுதும் ஆசைப்படுபவர், மாற்றான் பொருளை அடையும் எண்ணம் இருக்கும், கட்டுபாடு அவசியம், ஜாதகரின் மனைவி மிகவும் குனமானவர், கௌரவமான குடும்பத்தில் இருந்து வருவார், அவர் தர்ம சிந்தனை கொண்டொழுகுவார், ஜாதகர் மனைவியால் மதிப்படைவார், ஜாதகரின் மனைவி மூளை தொடர்பான நோய்கள், அசீரண கோளாறு, குடல் தொடர்பான நோய்கள், தசை பிடிப்பு, வயிற்று வலி மற்றும் நோய்கள், வாயு தொடர்பான பிரச்சனை, வீக்கம், சுவாச நோய்கள், ஈரல் வீக்கம், மஞ்சள் காமாலை ஆகியவற்றால் அவதிப்படுவார், ஜாதகர் பித்தம், ஆண்குறியில் நோய்கள், முகப்பரு, சர்க்கரை நோய், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், விந்து குறைபாடு, நீர் கடுப்பு போன்ற நோய்களால் வருத்தமடைவார்.

குருவுடன் சனி:

சிறு வயதிலேயே கல்வியை விட்டுவிட்டு வருமானம் ஈடுவார், பிற்காலத்தில் பலவிசயங்களை கற்பார், குடும்பத்தினை பொறுப்பெடுக்க வேண்டிய நிலை உண்டாகலாம், படித்த்து ஒன்று

CamScanner

பார்ப்பது ஒன்று எனறது போல பிற்காலத்தில் வெவ்வேறு தொலிழ்கள் மூலம் வருமானம் பெறுவார், தொழிலில் செய்த முதலீட்டை எப்பாடு பட்டாவது எடுத்து விடுவார், ஜாதகர் திறமையானவர், எந்தவித சூழலையும் தனக்கானதாக மாற்றும் திறன்மிக்கவர், எந்தவித தொழில் அல்லது பணி செய்தாலும் தனக்கென ஒரு கௌரவத்தை உண்டாக்கி கொள்வார், தொழில் ரீதியாக வளர்ச்சியடைவார், பொது தொண்டுகளாற்றுவார், ஜாதகர் திருப்தியான வாழ்க்கையை வாழ்வார், சுயமாக நல்ல நிலையை அடைவார், உறவுகளுடன் ஒட்டாத தன்மை கொண்டவர், பிற்காலத்தில் உறவினர்களுக்கு இடையே பலருக்கு உதவுவார், தொழில் வட்டாரத்தில் நேர்மையானவர் என்ற பெயரெடுப்பார், சிறிது கால உழைப்பிற்கு பின் சுகமாக பொருள் ஈட்டுவார், தர்ம காரியங்களில் முன் நிற்பார், ஆசிரியர், நிதித் துறை, பொன் வியாபாரம், ஞான உபாசகர்கள், கௌரவப்பணியாளர்கள், உயர்பதவிகள், யாத்திரை தொழில்கள், ப்ரோகிதம், பொதுபணிகள், பக்தி மார்க்கம், அறிவுரை மற்றும் ஆலோசனை பணிகள், சேவை நிறுவனங்கள், நீதித்துறை, ஆன்மீகப் பணிகள், தர்மகர்த்தா, அறநிலையத்துறை, தலைவர் பொறுப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாதுகாப்புத் துறை, அமைச்சர், திருப் பணிகள் போன்ற தொழில்கள் மூலம் பொருள் ஈட்டுவார், ஜாதகருக்கு பித்த நோய்கள், காசநோய், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், மலடு, கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீழ் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் போன்ற சிக்கல்கள் இருக்கும்.

குருவுடன் ராகு:

ஜாதகர் பயந்த சிந்தனை உடையவர், கெட்ட கனவுகளால் அவதியுறுவார், எதிர்மறை சிந்தனை உடையவர், தான் அமானுஷ்ய சக்தி நிறைந்தவர் என அவரையே நினைத்துக்

CamScanner

கொள்வார், தற்கொலை எண்ணம் தோன்றும், இவர் பிறக்கும் போது குடும்பத்தில் துர் காரியம் ஒன்று நிகழ்ந்திருக்கும், சோம்பேறிதனம் மிகுந்தவர், திடீர் அதிர்ஷ்டத்திற்கு காத்திருப்பார், ஏமாற்றும் விசயத்தில் கைதேர்ந்தவர், வெளியிடங்களில் சென்று பணமீட்டுவார், சூதாட்டங்களில் ஆர்வம் உடையவர், பங்கு வர்த்தகமும், ஜாதகர் எப்பொழுதும் எதோ ஒரு நோயுடன் இருப்பதாக பிரமை கொள்வார், ஜாதகருக்கு விஷ மரணம், வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து, தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள் போன்ற பிரச்சனை இருக்கும்.

குருவுடன் கேது:

ஜாதகர் வாழ்வின் பொருளை உணர ஆவல் கொண்டிருப்பார், ஞான மார்க்க சிந்தனை தோன்றும், அனைத்தின் மீது ஈடுபாடு இருக்காது, எதையும் எளிதாக எடுத்து கொள்வார், சமூக கட்டுபாட்டின் மீது சற்று நம்பிக்கை இல்லாமல் அல்லது அதனை மீறி நடக்கும் நிலைக்கு செல்வார், உதாரணமாக சன்யாசியாக திடீரென செல்வது அல்லது திடீரென யாரையாவது திருமணம் முடித்துக் கொள்வது, அல்லது யாருடனாவது வரம்பு மீறி உறவாடுவது போன்ற குழப்பமான முடிவுகளை எடுப்பார், இவரது மொத்த குடும்பத்தில் இரண்டு திருமணம் முடித்தவர்கள் அல்லது தவறான உறவில் வாழும் நபர்கள் இருக்கலாம், போதை பழக்கத்திற்கு ஆளாவார், வழக்குகளில் சிக்கி கொள்வார், தொழிலில் கருத்தாக இருப்பார், இவர் நினைத்தால் விட்டு கொடுப்பர் முடிவு செய்தால் எந்த அளவுக்கும் ஏமாற்றுவார், தன்னிச்சையான முடிவு எடுக்க கூடியவர், யாருக்காகவும் முடிவை மாற்றாதவர், சுயநலவாதி, எவ்வளவு பெரிய குற்றமானாலும் துனிச்சலுடன் செய்வார், சமூக கட்டமைப்பின் மீதும், சட்ட திட்டங்கள் மீதும் அக்கறை இல்லாதவர், ஜாதகருக்கு

CamScanner

முடி, நரம்பு, நகம், ஆசணவாய், பிறப்புறுப்பு, தோல், குடல், பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், தோல் உரிதல் அரிப்பு ,வயிறு நோய்கள், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், விசக்கடி, விடை தெரியாத நோய்கள், குடல் புழுக்கள், போன்றவை ஏற்படும்.

சனி

சனியுடன் சூரியன்:

தந்தை சற்று நிதானமாக செயல்படுபவர், ஜாதகருக்கு உத்யோகத்தில் ஆளுமை அதிகமாக செலுத்தும் எண்ணம் தோன்றும், அரசு அல்லது தந்தை தொழில் செய்பவர், அரசியல் ஆர்வம் இருக்கும், குடும்பத்தில் தலையில் அடிபடுதல், விபத்து மற்றும் தற்கொலைகள் நிகழ்ந்திருக்கும், எப்போதும் பணி அல்லது தொழிலை விட்டுவிட வேண்டுகம் என்று தோன்றும், மகன் தொழிலில் உதவி, அனுபவ தொழில், தலைமை நிர்வாகம், காவல், பொன் வியாபாரம், இராணுவம், அறுவைசிகிச்சை, இரத்தின வியாபாரம், துப்பறிதல், நீதிபதி, தலைமை, சமூகசேவகர், மந்திரி, மருத்துவர், பண்பாளர், அரசு அதிகாரிகள், உயர்நிலை பதவி, ஆராய்ச்சி பணிகள், அரசு உதவி பெரும் தொழில்கள், நரம்பியல் அறுவைசிகிச்சை மருத்துவம், பேச்சாளர், நூற்புதொழில், ரசாயனத்தொழில், போன்ற தொழில்கள் அமையும், தந்தை மற்றும் மகனுக்கு கால் நரம்பு பிரச்சனை, எலும்பு தொடர்பான வியாதிகள், ஊனம், பித்த நோய்கள், உடல் இளைத்தல், இருமல், மலடு, கால் மற்றும் மூட்டு வலி புண்கள், இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள்

CS CamScanner

அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் போன்ற நோய்கள் உண்டாகும்,

சனியுடன் சந்திரன்:

ஜாதகர் நிதானமாக செயல்பட கூடியவர், சிலசமயம் சோம்பேறி போலக்கூட தோன்றலாம், ஜாதகரின் தாயாரும் பெரிதாக சுறுசுறுப்பற்றவர், ஜாதகர் தொழில் நிமித்தமாக பயணம் செய்பவராக இருப்பார், தொழில் தொடர்பான பல அவமானங்களை சந்திப்பார், ஜாதகர் கலைகள், ஜோதிடம், அரிசிவியாபரம், பூ மற்றும் பழ வியாபாரம், கவிதை, கட்டுரை, இலக்கியம், ஓவியம், நீர் தொடர்பான தொழில், ஏமாற்றுத் தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, அயல்நாட்டு பணி, அயல்நாடு தொழில், வேளாண்மை, மாலுமி, கப்பல், கப்பல் பணி, செவிலியர், மருத்துவம், போக்குவரத்து தொழில், வாகனம், வாகன உற்பத்தி, வாகன பழுது நீக்குதல், குளிர்சாதன பொருட்கள் உற்பத்தி மற்றும் பழுது நீக்குதல், கலை சார்ந்த கல்வி, பேச்சாளர், சலவை, கட்டிடத்துறை, மாறும் அரசியல்வாதி, தினமும் விற்றுத்தீரும் பொருள் விற்பனை, ஆடு மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, சாஸ்திர விற்பனர், நடிப்பு, இசை, எழுத்தாளர், ரயில்வே பணிகள், விமான நிலைய பணிகள், சுற்றுலாத்துறை, சேவை நிறுவனம், தோட்ட வேலை போன்ற தொழில்கள் செய்பவராக இருப்பார், ஜாதகரின் தாயார் ஊனம், சித்த பிரமை, பித்த நோய்கள், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாவார், ஜாதகருக்கு மனம் தொடர்பான அழுத்தம், மூட்டுகளில் வலி, கால்களில் நீர் சேருதல், நரம்பு சுருட்டை நோய் ஏற்படும்,

CamScanner

சனியுடன் செவ்வாய்:

ஜாதகரின் கணவர் மற்றும் சகோதரர் பொறுமையாக செயல்படக்கூடியவர், தொழில் மீது கண்ணாய் இருப்பவர், பொருளுக்காக கடுமையாக உழைக்க வேண்டிவரும், ஜாதகன் தொழில் ரீதியான சிக்கல்களையும், வழக்குகளையும் சந்திப்பார், அடிக்கடி விவாதம் செய்பவராக இருப்பார், தொழில் தொடர்பான நோய்களால் பீடிக்கபடுவார், சகோதரர் மற்றும் கணவன் மீது வெறுப்பு உணர்வு அவ்வப்போது தோன்றும், ஜாதகர் மருத்துவம், சவரத்தொழில், பொறியியல், மெக்கானிக், வாகனம் தொடர்பான தொழில்கள், காவல், திருடுதல், சண்டை தொழில்கள், அடியாட்கள், விளையாட்டு விரர்கள், தற்காப்பு கலைகள், சமையல், உணவு விடுதிகள், சுரங்க பணிகள், ஆயுதம் தயாரிப்பு, ஆயுதப்படை, இராணுவம், அரசு சர்வாதிகாரம், எலெக்ட்ரிக்கல் சார்ந்த தொழில்கள், சிற்ப பணிகள், ரியல் எஸ்டேட், கட்டிடத் துறை பொருட்கள் விற்பனை, கூலி மற்றும் கடின உழைப்பு, புரட்சியாளர், வித்தை காட்டுதல், போர் தளவாட உற்பத்தி, தீவிரவாதம், மண்பாண்ட உற்பத்தி, மந்திரம், உருக்காலை, இயந்திர உற்பத்தி, குழு தலைமை, விவசாயப் பொறியியல், தீயணைப்பு துறை, செங்கல் சூலை, ரசாயன தொழில், சமையல் பாத்திரம் உற்பத்தி மற்றும் விற்பனை, லேத், தொழிற்சாலை பணிகள், மருந்து உற்பத்தி, தையல், தாதுபொருட்கள் தொழில், இன்சூரன்ஸ், ரவுடித்தொழில், வெல்டிங், செக்யூரிட்டி, கைவினைஞர், லேப், மருத்துவ உபகரணம் உற்பத்தி மற்றும் விற்பனை, சேனாதிபதி, தொல்பொருள் ஆய்வு தொடர்பான தொழில்கள், நுணுக்கப் பொருட்கள் உற்பத்தி, அகழாய்வுத் துறை போன்ற துறைகள் சார்ந்த பணியில் அல்லது தொழிலில் இருப்பார், ஜாதகரின் கணவன் மற்றும் சகோதரர் அம்மை, வெட்டு காயங்கள், கட்டிகள், கொப்புளங்கள், அறுவை சிகிச்சை, சிராய்ப்பு, பல் நோய்கள், செப்டிக், டான்சிலஸ், விதவை போகத்தால் நோய்கள், இணைவுகளில் வலி, வீக்கம், தழும்பு, பித்த நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப் படுவார், ஜாதகர் பற்கள், கால் எலும்பு

CamScanner

தொடர்பான பிரச்சனைகள், மூட்டுகளில் தேய்மானம் போன்றவற்றால் அவதியுறுவார்.

சனியுடன் புதன்:

ஜாதகர் வியாபார நுணுக்கங்களை அறிந்திருப்பார், ஜாதகர் நிதானமாக செயல் படுவார், தொடர்பு புலன்களில் குறைபாடு உடையவர், ஜாதகருக்கு வேற்று மத நண்பர்கள் உதவி கிடைக்கும், கல்வியில் சிறப்பு இல்லை, ஆனால் கேள்வியறிவு அதிகமானவர், ஜாதகரின் மகள் சோம்பேறித் தனமானவர், ஜாதகர் ஆசிரியர், புத்தக எழுத்தாளர், கணக்குப்பிள்ளை, பதிவுதுறை, மேடைபேச்சாளர், தபால் துறை, சில்லரை வியாபாரம், கணிதப் புலமை, அனைத்து வியாபாரங்களும், சட்டத்துறை, சிற்ப தொழில், ஓவியர், வரலாற்று ஆசிரியர்கள், தொலை தொடர்பு துறை, தூதரக பணிகள், சிற்ப தொழில், தரகு, செய்திதுறை, புத்தக கடை, ஸ்டேசனரி, அச்சு தொழில், தரகு, சூதாட்டம், மீடியா, ஐடி, கேமரா, மளிகை கடை, கல்விசார்ந்த ஆராய்ச்சி, நவீன தொழில் நுட்பம், போன்ற தொழில்களில் ஈடுபடுவார், ஜாதகரின் மகளுக்கு ஊனம், பித்த நோய்கள், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், மன அழுத்தம் போன்ற அவதிகள் இருக்கும் , ஜாதகர் தோல் நோய், குடல் தொடர்பான நோய்கள், கால் நரம்பு சிக்கல், ஜல, மல உபாதிகளை சந்திப்பார்,

சனியுடன் சுக்கிரன்:

ஜாதகர் செல்வ செழிப்படைவார், விரும்பும் வாழ்க்கையை அனுபவிப்பார், பொருளாதாரம் தொடர்ந்து மேம்படும், தொழில் மூலம் அதிகம் சம்பாதிப்பார், ஜாதகரின் மனைவி சுறுசுறுப்பற்றவர், சொகுசான வாழ்க்கையை விரும்புபவர், அதிக

ஆசை இல்லாதவர், தொழிலில் கருத்தானவர், பணம் ஒன்றே பிரதானமாக கருதுபவர், ஆடம்பர மற்றும் அத்யாவசிய பொருளுக்கு குறைவிருக்காது, ஜாதகர் பாடகன், நடிகன், வீடு விற்பனை, திருமணம் சார்ந்த தொழில்கள், மீடியா, ஒப்பனை, மார்கெட்டிங், பெய்ண்டிங், விலை உயர்ந்த கால்நடை விற்பனை, பணப்பயிர் வியாபாரம், வங்கிப்பணி, சொகுசுவாகன உற்பத்தி மற்றும் வியாபாரம், அயல்நாட்டுப் பணி, நட்சத்திர ஹோட்டல் மற்றும் விடுதிகள், கருவூலம், அலங்கார பொருட்கள் விற்பனை, பர்னிச்சர், கண்ணாடி தொழிற்சாலை பணி, அழகு நிலையம், நறுமணப் பொருட்கள் விற்பனை உற்பத்தி, இரத்தின வியாபாரி, பொன் வியாபரம், பழவியாபாரம், பணப்பயிர் வேளாண்மை, வட்டித்தொழில், கவிஞர், நிதித்துறை, அரச விருந்தினர், மாளிகை பணி, மருந்து விற்பனை, ஆப்டிகல்ஸ், பட்டு விற்பனை, தொலைக்காட்சி, நடனம், விளம்பர பணிகள், நுகர்வோர் தொடர்பு பணிகள், இசை கருவிகள் உற்பத்தி மற்றும் விற்பனை, வாகன தொழில், புதுமையான தொழில்கள், ஆடிட்டர், சலவையகம், பெண்தொழிலாளர்களை கொண்டு செய்யும் தொழில்கள், வேற்று மொழி கற்பித்தல், வசந்தகால பயிர்கள் போன்ற தொழில்களின் மூலம் பணம் ஈட்டுவார், ஜாதகரின் மனைவி சர்க்கரை நோய், பிறப்புறுப்பு நோய்கள், கிளர்ச்சி சுரப்பிகள் குறைபாடு உப்புசத்து அதிகரித்தல், தோல் வியாதிகள், நீர் கடுப்பு, இரத்த சோகையால் வரும் தோல் நோய்கள் போன்றவற்றால் பதிப்படைவார், ஜாதகர் கண், கால், பிறப்புறுப்பு கோளாறு, இல்லற நாட்டமின்மை போன்ற சிக்கல்களை சந்திப்பார்,

சனியுடன் குரு:

ஜாதகர் திறமையானவர், எந்தவித சூழலையும் தனக்கானதாக மாற்றும் திறன்மிக்கவர், எந்தவித தொழில் அல்லது பணி செய்தாலும் தனக்கென ஒரு கௌரவத்தினை உண்டாக்கி கொள்வார், தொழில் ரீதியாக வளர்ச்சியடைவார், பொது தொண்டுகளாற்றுவார், ஜாதகர் திருப்தியான வாழ்க்கையை

CamScanner

வாழ்வார், சுயமாக நல்ல நிலையை அடைவார், தொழில் வட்டாரத்தில் நேர்மையானவர் என்ற பெயரெடுப்பார், சிறிது கால உழைப்பிற்கு பின் சுகமாக பொருள் ஈட்டுவார், தர்ம காரியங்களில் முன் நிற்பார், ஆசிரியர், நிதித் துறை, பொன் வியாபாரம், ஞான உபாசகர்கள், கௌரவப் பணியாளர்கள், உயர்பதவிகள், யாத்திரை தொழில்கள், ப்ரோகிதம், பொதுப்பணிகள், பக்தி மார்க்கம், அறிவுரை மற்றும் ஆலோசனை பணிகள், சேவை நிறுவனங்கள், நீதித்துறை, ஆன்மீகப் பணிகள், தர்மகர்த்தா, அறநிலையத்துறை, தலைவர் பொறுப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாதுகாப்பு துறை, அமைச்சர், திருப்பணிகள் போன்ற தொழில்கள் மூலம் பொருள் ஈட்டுவார், ஜாதகருக்கு பித்த நோய்கள், காசநோய், உடல் இளைத்தல், கக்குவான் இருமல், மலடு, கால் மற்றும் மூட்டு வலி, இளநரை, கால் நரம்பு சுருட்டை, ஆணி நோய்கள், வாயு பிரச்சனைகள், சொத்தை பல், அசீரணம், உடற்பாகங்கள் அழுகுதல், காதில் சீல் வடிதல், முடி தொடர்பான நோய்கள், பக்கவாதம், போதைக்கு அடிமையாதல், மன அழுத்தம் போன்ற சிக்கல்கள் இருக்கும்.

சனியுடன் ராகு:

ஜாதகர் அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கை உடையவர், எந்த வேலையாயினும் இறங்கி செய்வார், குறுக்கு சிந்தனை உடையவர், திடீர் பொருளாதார வரவு இருக்கும், எதையும் பிரமாண்டமாக செய்ய வேண்டும் என ஆசை கொள்பவர், சட்டத்திற்கு புறம்பான தொழில்கள், விபச்சாரம், கீழ்தர தொழில்கள், சிறைபணிகள், மாயாஜாலம், மந்திரம் தந்திரம் பில்லி சூனிய வேலைகள், தலைமறைவு தொழில்கள், தனிமையாக செய்யும் தொழில்கள், தூர தேச தொழில்கள், விஷமருந்து உற்பத்தி மற்றும் விற்பனை, லாட்டரி மற்றும் சூதாட்டக்கிளப்புகளில் பணி, சூதாட்ட வருமானம், பங்கு சந்தை, தரகு, பெரிய நிறுவனங்களில் பணிகள், உளவுத்துறை, கனரக வாகன பணிகள், பட்டாசு தொழில்கள், அன்னிய தேச மற்றும்

பாஷை தொழில்கள், புலனாய்வுத்துறை, மருந்து, சித்த வைத்தியம், சோதிடம், அக்குபஞ்சர், எலெக்ட்ரானிக்ஸ், தூதுவர்கள், போட்டோ, வீடியோ தொழில்கள், அச்சுத் தொழில், நடிப்பு, வேற்று சதி தொழில்கள், மதம் மாற்றும் தொழில்கள், அயல் நாட்டு பணிகள் போறவற்றின் மூலம் பொருள் ஈட்டுவார், ஜாதகருக்கு மல, ஜல வழியில் தொற்று, வலி இரத்தம் வடிதல், தோல் நோய்கள், கால்களில் நரம்பு மண்டல பாதிப்பு ஏற்கெனவே செய்த அறுவை சிகிச்சைகளில் சீல் வடிதல் போன்ற பிரச்சனைகளை சந்திப்பார்.

சனியுடன் கேது:

ஜாதகர் பல தொழில்களுக்கு மாறி கொண்டே இருப்பார், எதிலும் திருப்தி அடையமாட்டார், பணியிடங்களில் பிறருக்காக உதவுவதற்காக தனது நிலையை தக்க வைக்க முடியாமல் கஷ்டத்தை சந்திப்பார், எதிலும் முழுமையை விரும்புவார் ஆனால் அடைய முடியாமல் திணறுவார், பொது காரியங்கள், அரசு உயர் பதவிகள், தொண்டு நிறுவனங்களில் தன்னை இணைத்துக் கொண்டால் மேல்நிலை அடைவார், அளவுக்கு அதிகமாக பிறருக்கு உதவுவதால் பெரும் செழிப்பை அடைவார், இருப்பினும் இறுதியில் பொருள் மீது பற்றுகளை விட்டு விடுவார், இந்த இணைவு இருந்து தீமையான சிந்தனை இருப்பவர்கள் பெரும்பாலும் சிறைவாசம் செல்கிறார்கள், நல்ல சிந்தனை உடையவர்கள் மேல்நிலை அடைகிறார்கள்.

CamScanner

ராகு

ராகுவுடன் சூரியன்:

ஜாதகர் தந்தை வழியில் இருந்து வாழ்க்கை பற்றி கற்று கொள்வார், ஜாதகரின் தாத்தா ஆளுமை பண்பு நிறைந்தவர், ஜாதகரின் தந்தை குறுக்கு சிந்தனை அதிகமாக உள்ளவர், ஜாதகர் தந்தையையோ மகனையோ எதோ ஒரு காணத்தினல் பிரிந்து இருக்கும் சூழல் உருவாகும், குழந்தை பிறப்பு, திருமணம் தாமதப்படும், தீமை செய்ய வறட்டு தைரியம் உருவாகும் ஜாதகருக்கு உஷ்ணம் தொடர்பாக வாய்ப்புண்கள், குடல் நோய்கள், முடி உதிர்தல் ஏற்படும், தந்தை மற்றும் மகனுக்கு வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், விஷக்கடி, ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், வெட்டுக்காயங்கள், தோல் நோய்கள் ஏற்படும், ஜாதகருக்கு மூளை, தண்டுவடம், கண் நோய்கள் உண்டாகும்,

ாகுவுடன் சந்திரன்:

தாய் நோய்வாய்ப்பட்டவர், தாயுடன் ஜாதகருக்கு கருத்து வேறுபாடு தோன்றும், தாயார் வாழ்க்கையில் போராடி வெற்றி பெற வேண்டும், ஜாதகர் மனோ குழப்பம் உடையவர், சில நேரங்களில் தவறான சிந்தனைகளும் தோன்றலாம், கெட்ட கணவுகள் தோன்றும், பய உணர்வு அதிகமாக இருக்கும், ஜாதகரின் மூதாதையர் பயணித்துக் கொண்டே இருப்பவர், ஜாதகருக்கு அடிக்கடி தற்கொலை எண்ணம் தோன்றும், திருட்டு, ஏமற்றும் சிந்தனை அவ்வப்போது வரும், ஜாதகரின் தாயார் வாயுத் தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் விங்கி பெரிதாகும் நோய்கள், போன்றவற்றால் அவதிப்படுவார், ஜாதகர் குடல் மற்றும் ஜீரண உறுப்புகள் குறைபாடுகளுடன்

CamScanner

இருப்பார், கண் பார்வை குறைபாடு, தோல் நோய், விஷக்கடி போன்றவற்றால் பாதிப்படைவார்,

ராகுவுடன் செவ்வாய்:

ஜாதகர் சகோதரனுடன் கருத்து வேறுபாடு கொண்டவர், ஜாதகர் கடன், வழக்கு, விபத்து மற்றும் தொடர் நோய்களுக்கு ஆளாவார், அறுவை சிகிச்சை ஏற்படும், கணவரை பிரிய நேரிடும், கணவர் அயல் நாடுகளில் பணிபுரிவர், பெண்களுக்கு திருமண தாமதம் ஏற்படும், தேவையற்ற பிரச்சனைகளில் மூக்கை நுழைத்து விவகாரங்களை வாங்கி கொள்வார், பங்குதாரர்களால் ஏமாற்றம் ஏற்படும், தொழிலில் நம்பிக்கை துரோகத்தை சந்திப்பார், ஜாதகனின் சகோதரர் மற்றும் கணவர் எரிச்சலூட்டும் வகையில் நடந்து கொள்வர், அவர்களுக்கு பெரிய நிறுவனங்களில் பணி அல்லது தொழில் தொடர்புகள் கிடைக்கும், திடீர் வரவுகள் ஏற்படும், சட்ட விரோத வழியில் வருமானம் கிடைக்கும், லாட்டரி, ரேஸ் போன்ற விருப்பங்கள் இருக்கும் ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவருக்கு விஷ மரணம், வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், விஷக்கடி, புட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், வெட்டுக்காயங்கள், விபத்து மரணங்கள், தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், சிறு நீரக கற்கள், மூலம், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள், மரண பயம் போன்ற மனோ வியாதிகள் தோன்றும், ஜாதகருக்கு பல் நோய், தொற்று கிருமிகளால் தொல்லை, இரத்தம் கெட்டு போதல், எலும்புகள் உடைதல், மாதவிடாய் கோளாறுகள், கர்பப்பை சிக்கல், விந்தனு குறைபாடுகள், போன்றவற்றால் அவதியுறுவார்.

CamScanner

ராகுவுடன் புதன்:

ஜாதகர் எதையும் பெரிதாக செய்யும் சிந்தனை உடையவர், உழைக்காமல் சம்பாதிக்கும் எண்ணம் உடையவர், ஏமாற்று சிந்தனை உடையவர், சூது போன்ற வழியில் பணம் ஈட்டும் ஆசை கொண்டவர், பேசும் திறன், கேட்கும் திறன் குறைபாடு இருக்கும், கல்வியில் தடைபட்டு தொடர்வார், மற்ற மத நண்பர்கள் தொடர்புகள் இருக்கும், காதல் விவாகரத்தில் தோல்வியை சந்திப்பார், சரியாக பேச இயலாமல் வரும் வாய்ப்புகளை இழப்பார், ஜாதகரின் மகள் எப்போது சிக்கலாகவே இருப்பார், அவரால் ஜாதகர் துயரப்படுவார், ஜாதகரின் மகள் வாயுத் தொல்லைகள், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து மரணங்கள், தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள் போன்றவைகளை சந்திப்பார், ஜாதகர் குஷ்டம், தோல் நோய்கள், மனநல அழுத்தம், காது, வாய், கண் பிரச்சனைகளால் அவதியடைவார்,

ராகுவுடன் சுக்கிரன்:

ஜாதகருக்கு திருமணம் தாமதமாகும், இல்லாவிடில் திருமண முறிவு அல்லது அதற்கிணையான சிக்கல்களை சந்திப்பார், ஜாதகரின் மனைவி தொடர் நோயால் அவதிப்படுவார், ஜாதகர் குடும்பத்தை பிரிந்து தொழில் விசயமாக வேறு இடம் செல்வார், மனைவி சதா பிரச்சனை செய்பவராக இருப்பார், ஏமாற்றும் சிந்தனையுடனும் இருப்பார், ஜாதகருக்கு திடீர் பொருள் வரவு உண்டாகும், ஜாதகரின் மனைவி பய உணர்வினாலும், கெட்ட கனவுகளாலும், பில்லி சூன்ய அச்சத்தாலும் குழப்பம் அடைவார், வாயுத் தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், ஃபுட் பாய்சன், வலிப்பு, தொற்று

நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து, தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள், உறுப்புகள் வீங்கி பெரிதாகும் நோய்கள் போன்றவற்றால் கவலை கொள்வார், ஜாதகர் சுரப்பிகள், வாயு கோளாறு, அதீத காம சிந்தனை, பிறப்புறுப்புகளில் புண்களால் தொல்லைகளை சந்திப்பார்.

ராகுவுடன் குரு:

ஜாதகர் பயந்த சிந்தனை உடையவர், கெட்ட கனவுகளால் அவதியுறுவார், எதிர்மறை சிந்தனை உடையவர், தான் அமானுஷ்ய சக்தி நிறைந்தவர் என அவரயே நினைத்துக் கொள்வார், தற்கொலை எண்ணம் தோன்றும், இவர் பிறக்கும் போது குடும்பத்தில் துர்காரியம் ஒன்று நிகழ்ந்திருக்கும், சோம்பேரித்தனம் மிகுந்தவர், திடீர் அதிர்ஷ்டத்திற்கு காத்திருப்பார், ஏமாற்றும் விசயத்தில் கைதேர்ந்தவர், வெளியிடங்ளில் சென்று பணமீட்டுவார், சூதாட்டங்களில் ஆர்வம் உடையவர், பங்கு வர்த்தகமும், ஜாதகர் எப்பொதும் எதோ ஒரு நோயுடன் இருப்பதாக பிரமை கொள்வார், ஜாதகருக்கு விஷ மரணம், வாயுத்தொல்லைகள், ஊனம், பித்த நோய், குஷ்டம், விஷக்கடி, குடல் அழுகுதல், தொற்று நோய்கள், முடி உதிர்தல், பரம்பரை நோய்கள், நீரில் மூழ்குதல், வெட்டுக்காயங்கள், விபத்து, தோல் நோய்கள், மருந்தில்லா நோய்கள், நாட்பட்ட நோய்கள் போன்ற பிரச்சனை இருக்கும்.

ராகுவுடன் சனி:

ஜாதகர் அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கை உடையவர், எந்த வேலையாயினும் இறங்கி செய்வார், குறுக்கு சிந்தனை உடையவர், திடீர் பொருளாதார வரவு இருக்கும், எதையும் பிரமாண்டமாக செய்ய வேண்டும் என ஆசை கொள்பவர், சட்டத்திற்கு புறம்பான தொழில்கள், விபச்சாரம், கீழ்தர

CamScanner

தொழில்கள், சிறைபணிகள், மாயாஜாலம், மந்திரம் தந்திரம் பில்லி சூனிய வேலைகள், தலைமறைவு தொழில்கள், தனிமையாக செய்யும் தொழில்கள், தூர தேச தொழில்கள், விஷமருந்து உற்பத்தி மற்றும் விற்பனை, லாட்டரி மற்றும் சூதாட்டக் கிளப்புகளில் பணி, சூதாட்ட வருமானம், பங்குச் சந்தை, தரகு, பெரிய நிறுவனங்களில் பணிகள், உளவுத்துறை, கனரக வாகன பணிகள், பட்டாசு தொழில்கள், அன்னிய தேச மற்றும் பாஷை தொழில்கள், புலனாய்வுத்துறை, மருந்து, சித்த வைத்தியம், சோதிடம், அக்குபஞ்சர், எலெக்ட்ரானிக்ஸ், தூதுவர்கள், போட்டோ, வீடியோ தொழில்கள், அச்சுத் தொழில், நடிப்பு, வேற்று சதி தொழில்கள், மதம் மாற்றும் தொழில்கள், அயல் நாட்டு பணிகள் போன்றவற்றின் மூலம் பொருள் ஈட்டுவார், ஜாதகருக்கு மல, ஜல வழியில் தொற்று, வலி இரத்தம் வடிதல், தோல் நோய்கள், கால்களில் நரம்பு மண்டல பாதிப்பு ஏற்கெனவே செய்த அறுவை சிகிச்சைகளில் சீல் வடிதல் போன்ற பிரச்சனைகளை சந்திப்பார்.

கேது

கேதுவுடன் சூரியன்:

தந்தை பெருந்தன்மையானவர், தந்தை மற்றும் மகன் வாழ்க்கை பற்றி விழிப்புணர்வு உடையவர், ஜாதகர் தந்தையையோ மகனையோ எதோ ஒரு காரணத்தினல் பிரிந்து இருக்கும் சூழல் உருவாகும், குழந்தை பிறப்பு, திருமணம் தாமதப்படும், ஜாதகரின் தந்தை மற்றும் மகன் வழக்கு தொடர்பான சிக்கலில் சிக்கி கொள்வர், பொது காரியங்களில் ஈடுபாட்டுடன் இருப்பர், ஜதகரின் தந்தை மற்றும் மகன் முடி உதிர்தல், வழுக்கை தலை ஏற்படுதல், நரம்பு, நகம், ஆசனவாய், பிறப்புறுப்பு, தோல், குடல் ஆகியவற்றில் உஷ்ண நோய்கள் ஏற்படும், பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், பீளை

வெளியேருதல், தோல் உரிதல் அரிப்பு, நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, குடல் புழுக்கள், தேக மெலிவு போன்ற நோய்கள் உண்டாகும், ஜாதகருக்கு மூளை, தண்டுவடம், கண் நோய்கள் உண்டாகும்,

கேதுவுடன் சந்திரன்:

ஜாதகர் விரக்தி தன்மையுடையவர், சுய தேடுதல்களுக்காக பயணங்களை மேற்கொள்வார், ஜாதகரின் தாயார் வழக்குகளை சந்திப்பார், எதையோ இழந்தது போல காணப்படுவார், பக்தியானவராக இருப்பார், யாத்திரைகள் மேற்கொள்வார், ஜாதகர் வஞ்சக எண்ணம் நிறைந்தவர், ஜாதகர் குழப்ப சிந்தனை உடையவர், வாழ்க்கை மீது வெறுப்பு உடையவர், நிலையான மனோநிலையற்றவர், வ்ழக்குகளுக்காக பயணம் செய்வார், ஜாதகரின் தாய் பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், தோல் உரிதல் அரிப்பு ,வயிறு நோய்கள், நகநோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் மன நோய், வயிற்று உபாதைகள், கண்கள் தொடர்பான நோய்களால் அவதிப்படுவார்.

கேதுவுடன் செவ்வாய்:

ஜாதகர் வழக்குகளை சந்திப்பார், ஜாதகர் தன் உடல் ஆரோக்கியம் மீது கவனம் செலுத்த மாட்டார், ஜாதகர் வழக்குகளில் சிக்கி கொள்வார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவ்ருடன் கருத்து வேறுபாட்டில் இருப்பார், அவர்கள் மீது ஜாதகருக்கு விரக்தி ஏற்படும், அவர்கள் வாழ்க்கை பற்றி கவலை அற்றவர்களாக இருப்பர், ஆன்மீகம் மற்றும் பொது காரியங்களில் ஈடுபாடு இருக்கும், விட்டை பற்றி கவனம் இல்லாதவர்கள் அதனாலே சண்டை சச்சரவுகள் உண்டாகும், ஜாதகர் கணவனை

CamScanner

பிரிந்து வாழும் நிலை ஏற்படலாம், திருமணம் தாமதமாக நடக்கும், ஜாதகர் நோய்வாய்ப் பட்டிருப்பார், ஜாதகரின் சகோதரர் மற்றும் கணவர் பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், தோல் உரிதல் அரிப்பு, வயிறு நோய்கள், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, விடைதெரியாத நோய்கள், குடல் புழுக்கள், தேக மெலிவு போன்றவற்றால் அவதிப்படுவார், ஜாதகர் எதையும் அதிகம் நுகர்வதில் உண்டாகும் நோய்கள், விசக்கடி, குடல் பிரச்சனை, மூலம், விசக்கடி போன்றவற்றால் பாதிப்படைவார்

கேதுவுடன் புதன்:

ஜாதகர் பேச்சு, மற்றும் கேட்கும் திறன் குறைபாடு உடையவர், கல்வியில் தடைகள் இருக்கும், காதல் தோல்வியடையும், குறுக்கு சிந்தனை உடையவர், மேன்மையான சிந்தனை இருக்கும், கடவுள் நம்பிக்கை இருக்காது, அதை வரவழைத்து கொண்டால் வாழ்வில் வெற்றி பெறுவார், வழக்கு தொடர்பான சிக்கல்களை சந்திப்பார், வியாப்பரத்தில் புதுப்புது யுக்திகளை கையாள்வார், அதிலும் பல தோல்விகளை சந்திப்பார், அனைவருடனும் கருத்து வேறுபாடு ஏற்படும், ஜாதகரின் மகள் சாந்தமானவர், வாழ்க்கை பற்றிய தேடல் கொண்டவர், ஜாதகரின் மகள் பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், அரிப்பு, வயிறு நோய்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, குடல் புழுக்கள், தேக மெலிவு போன்றவற்றிற்கு ஆளாவார், ஜாதகருக்கு நரம்பு மண்டலம், தோல், மனநலம் தொடர்பான சிக்கல் இருக்கும்.

கேதுவுடன் சுக்கிரன்:

திருமணம் தாமதமாகும், இல்லாவிடில் மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றும், சட்டப்படியாக பிரிவு நேரலாம்,

CamScanner

ஜாதகரின் மனைவி எதையோ இழந்தது போன்றே காணப்படுவார், ஆன்மீக ஈடுபாடுடையவர், ஜாதகர் பெண்கள் மீது வெறுப்புடையவர், ஜாதகரின் மனைவி கர்பப்பை கோளாறுகள், பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், தீக்காயங்கள், விசக்கடி, உடல் சத்து குறைவு, குடல் புழுக்கள், பிறப்புறுப்பில் ரணம் போன்றவற்றால் பாதிப்படைவார், ஜாதகர் கண், ஆசணவாய், பிறப்புறுப்பு விரைப்பு தன்மை போன்ற நோய்களுக்கு ஆளாவார்,

கேதுவுடன் குரு:

ஜாதகர் வாழ்வின் பொருளை உணர ஆவல் கொண்டிருப்பார், ஞான மார்க்க சிந்தனை தோன்றும், அனைத்தின் மீது ஈடுபாடு இருக்காது, எதையும் எளிதாக எடுத்து கொள்வார், சமூக கட்டுபாட்டின் மீது சற்று நம்பிக்கை இல்லாமல் அல்லது அதனை மீறி நடக்கும் நிலைக்கு செல்வார், உதாரணமாக சன்யாசியாக திடீரென செல்வது அல்லது திடீரென யாரையாவது திருமணம் முடித்துக் கொள்வது, அல்லது யாருடனாவது வரம்பு மீறி உறவாடுவது போன்ற குழப்பமான முடிவுகளை எடுப்பார், இவரது மொத்த குடும்பத்தில் இரண்டு திருமணம் முடித்தவர்கள் அல்லது தவறான உறவில் வாழும் நபர்கள் இருக்கலாம், போதை பழக்கத்திற்கு ஆளாவார், வழக்குகளில் சிக்கி கொள்வார், தொழிலில் கருத்தாக இருப்பார், இவர் நினைத்தால் விட்டு கொடுப்பர் முடிவு செய்தால் எந்த அளவுக்கும் ஏமாற்றுவார், தன்னிச்சையான முடிவு எடுக்க கூடியவர், யாருக்காகவும் முடிவை மாற்றாதவர், சுயநலவாதி, எவ்வளவு பெரிய குற்றமானாலும் துனிச்சலுடன் செய்வார், சமூக கட்டமைப்பின் மீதும், சட்ட திட்டங்கள் மீதும் அக்கறை இல்லாதவர், ஜாதகருக்கு முடி, நரம்பு, நகம், ஆசணவாய், பிறப்புறுப்பு, தோல், குடல், பரம்பரை நோய்கள், மன நோய், மன அழுத்தம், நரம்பு மண்டல பாதிப்புகள், மயக்கம், தலை சுற்றல், தோல் உரிதல் அரிப்பு

CamScanner

,வயிறு நோய்கள், நகநோய்கள், புற்று நோய்கள், வயிற்று வலி, இரத்தநோய்கள், விசக்கடி, விடை தெரியாத நோய்கள், குடல் புழுக்கள், போன்றவை ஏற்படும்.

கேதுவுடன் சனி:

ஜாதகர் பல தொழில்களுக்கு மாறி கொண்டே இருப்பார், எதிலும் திருப்தி அடையமாட்டார், பணியிடங்களில் பிறருக்காக உதவுவதற்காக தனது நிலையை தக்க வைக்க முடியாமல் கஷ்டத்தை சந்திப்பார், எதிலும் முழுமையை விரும்புவார் ஆனால் அடைய முடியாமல் திணறுவார், பொது காரியங்கள், அரசு உயர் பதவிகள், தொண்டு நிறுவனங்களில் தன்னை இணைத்துக் கொண்டால் மேல்நிலை அடைவார், அளவுக்கு அதிகமாக பிறருக்கு உதவுவதால் பெரும் செழிப்பை அடைவார், இருப்பினும் இறுதியில் பொருள் மீது பற்றுகளை விட்டு விடுவார், இந்த இணைவு இருந்து தீமையான சிந்தனை இருப்பவர்கள் பெரும்பாலும் சிறைவாசம் செல்கிறார்கள், நல்ல சிந்தனை உடையவர்கள் மேல்நிலை அடைகிறார்கள்.

நடப்பு கிரக பலன் கூறும் முறை

வழக்கத்தில் உள்ள கோச்சார பலன்களையே நாம் நடப்பு கிரக பலன் என அழைக்கிறோம், இருப்பினும் பொதுவாக கோச்சார பலன்கள் என்பது சந்திரன் நிலையை வைத்து, அதுவும் சந்திரனில் இருந்து அல்லது லக்னத்தில் இருந்து இப்போதைய கிரக சஞ்சாரங்கள் அளவிடப்படுகிறது,

ஆனால் நாம் பிறப்பு ஜாதகத்தில் உள்ள கிரகங்கள் துவங்கு புள்ளியில் இருப்பதாக பாவித்து, அதில் இருந்து நடப்பு கிரக பலன்களை கூற வேண்டும்,

CamScanner

ஒவ்வொரு நடப்பு கிரகமும் தான் நகர்ந்து கொண்டுள்ள இடத்தில் இருந்து 1, 5, 7, 9 ஆம் வீடுகளில், பிறப்பு ஜாதகத்தில் கிரகங்கள் இருந்தால் அந்த கிரகத்தை தூண்டும்,

அவ்வாறு நடப்பு கிரகம் தான் நகர்ந்து கொண்டுள்ள இடத்தில் இருந்து 1, 5, 7, 9 ஆம் வீடுகளில், பிறப்பு ஜாதகத்தில் எந்த கிரகமும் இல்லாவிடில் நன்மையோ அல்லது தீமையோ நேராது,

ஒவ்வொரு கிரகமும் தனக்கென தனித்தனியான வேகத்தில் பயணித்துக் கொண்டுள்ளன, அவை ஒவ்வொரு ராசியையும் கடக்க எடுத்து கொள்ளும் கால அளவுகள்,

1. சூரியன் - 1 மாதம்,
2. சந்திரன் - 2.25 நாள்,
3. செவ்வாய்- 1.6 மாதம்,
4. சுக்கிரன் - 1 மாதம்,
5. புதன் - 1 மாதம்,
6. குரு - 1 வருடம்,
7. சனி - 2.5 வருடம்,
8. ராகு மற்றும் கேது - 1.6 வருடம்,

இவ்வாறாக கிரகங்கள் ஒவ்வொரு ராசியாக கடந்து ராசி சக்கரத்தை சுற்றி கொண்டுள்ளன, நாம் பிறப்பு ஜாதகத்தில் அவரது வாழ்நாள் முழுமையிலுமான பலன்களை கூறினாலும் அப்பலன்கள் நடைபெறும் காலங்களை நடப்பு கிரகங்களை கொண்டே அறிந்து கொள்ளவேண்டும்,

ஒரு ஜாதகத்தை பலன் கூறத் துவங்கும் போது, அந்த ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளை அப்படியே வைத்துக் கொண்டு, நடப்பு கிரகம் ஒவ்வொன்றாக எடுத்து பலன் கூறவேண்டும்,

CamScanner

உதாரணமாக :

ஒரு ஜாதகத்தில் ஏதோ ஒரு வீட்டில் சனி இருந்தால்,

ஜாதகத்தில் உள்ள ஒன்பது கிரகங்களையும் அப்படியே வைத்துக் கொண்டு நமது நினைவில் மற்றொரு சனியை வைத்துக் கொள்ள வேண்டும், நாம் நினைவில் வைத்துள்ள சனியை ஒவ்வொரு ராசியாக "சனி "ஜாதகத்தில் உள்ள வீட்டில் இருந்து நகர்த்த வேண்டும், ஜாதகத்தில் உள்ள சனி அதே இடத்தில் இருந்தாலும் நமது நினைவில் உள்ள சனி நகர்வது போல் நகர்த்தவும், அதை சனி-2 என அழைப்போம்,

பிறப்பு கால சனி மேசத்தில் இருக்கிறது, சனி-2 ரிசபத்தில் வைக்கும் போது ஜாதகர் 2.5 வயதை அடைந்திருப்பார், என புரிந்து கொண்டு, மேசத்தில் இருந்து 1, 5, 7, 9 ல் ஏதாவது கிரகம் இருந்தால் அந்த கிரக அளிக்கும் தன்மையை நடப்பு சனி தூண்டியிருக்கும், அந்தபலனை ஜாதகர் 2.5 - 5 வயதில் அனுபவித்திருப்பார் எனக் கூறவேண்டும், அடுத்து மிதுனத்திற்கு சனி-2 ஐ நகர்த்தி அந்தவீட்டில் இருந்து 1, 5, 7, 9 ல் ஏதாவது கிரகம் இருந்தால் அந்த கிரக அளிக்கும் தன்மையை நடப்பு சனி தூண்டியிருக்கும், அந்தபலனை ஜாதகர் 5 - 7.5 வயதில் அனுபவித்திருப்பார் எனக் கூறவேண்டும், இவ்வாறாக ஜாதகம் பார்க்கும் நாள் வரை வயதின் அடிப்படையில் பலன் கூறவேண்டும், இது போலவே இனிவரும் நாட்களுக்கான பலன்களை கூறவேண்டும்,

நாம் பார்த்த உதாரண கிரகம் சனியை போலவே மற்ற கிரகங்களையும் பார்க்க வேண்டும், அதில் நெடுங்கால மாற்றங்களை கூற சனி, குரு, ராகு, கேது போன்றவற்றையும், குறுகிய கால பலன்களுக்கு சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், போன்றவற்றையும், மிக குறுகிய பலன்களுக்கு சந்திரனையும், ஒவ்வொரு கிரகங்களும் நடப்பு தொடர்பில் ஒவ்வொன்றை

CamScanner

வழங்கும். அவற்றை வரிசையாக காணலாம். எந்த ஒரு கிரகமானலும் பிறப்பு ஜாதகத்தில் ராகு அல்லது கேது இணைவு பெற்றிருந்தால் நடப்பு கிரகம் பெரும்பாலும் அந்த தொடர்பு பெற்ற கிரகத்தின் தன்மையின் எதிர்மறை (நெகட்டிவ்) பலன்களையே வழங்கும்.

ராகு கேது தொடர்பிருந்தாலும் சில கிரகங்கள் வழங்கும் முக்கிய சுப நிகழ்வுகள் நடை பெற தடையில்லை. பிறப்பு ஜாதகத்தில் ராகு அல்லது கேது இணைவினால் தாமதம் என்பதால், தாமதம் ஆகலாமே தவிர நடப்பு கிரகங்களை இணைத்து தாமதம் கணிக்க கூடாது.

இந்த நடப்பு கிரக பலனறியும் பட்டியலில் நடப்பு கிரகமானது பிறப்பு கிரகங்களுடன் இணைந்தால் நடக்கும் நிகழ்வுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் வரும் எதிர்மறையான பலன்களை அனைவருக்கும் கூறாமல் பிறப்பு ஜாதகத்தில் ராகு அல்லது கேதுவுடன் இணைந்த கிரகங்கள் உள்ள ஜாதகர்களுக்கு மட்டும் குறிப்பாக கூறவும். மற்றவர்களுக்கு சாதாரணமான பலன்களும், நேர்மறை பலன்களையும் கூறவும்.

நடப்பில் குரு சென்று கொண்டுள்ள ராரசியில் இருந்து 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் பிறப்பு கிரகங்கள் இருந்தால் அந்த கிரகங்கள் குறிக்கும் தன்மையை ஜாதகர் பெற முயற்சியை மேற்கொண்டு அடைவார்.

நடப்பில் சனி சென்று கொண்டுள்ள ராசியில் இருந்து 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் பிறப்பு கிரகங்கள் இருந்தால் அந்த கிரகங்கள் குறிக்கும் தன்மையை ஜாதகர் முயற்சியை செய்யாமல் இருப்பினும் காலத்தின் மாற்றத்தால் அதை அடைவார்.

மேலும் நடப்பு கிரகம் தான் சென்று கொண்டுள்ள ராசியில் இருந்து 1, 5, 7, 9, ஆம் ராசிகளில் பிறந்த ஜாதகத்தில் எதாவது கிரகம் இருந்தால் அதைத் தூண்டும் எனப் பார்த்தோம்.

CamScanner

அதோடு மட்டுமல்லாமல் நடப்பு கிரகம் சென்று கொண்டுள்ள ராசியில் இருந்து 3, 11 ஆம் ராசிகளில் பிறப்பு ஜாதகத்தில் எதாவது கிரகம் இருந்தால் பாதியளவு அதாவது 50% அளவுக்கு அந்த கிரகத்தை தூண்டும், எனவே இதையும் ஜாதகருக்கு நடக்க உள்ள பலன்களைக் கூறப் பயன்படுத்தலாம்,

பொதுவாக மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு

நாம் காண வேண்டிய கிரகம்,

ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு பிரச்சனை எனினும் மக்களுக்கு பொதுவாகவே அதிக கேள்விகள் இருக்கும், ஜாதகர் எது தொடர்பாக கேள்விகள் கேட்கிறாரோ, அதற்கான கிரகத்தை நடப்பு கிரகங்கள் தூண்டும் போது அந்த செயல் நடக்கும், அதிலும் வருட கிரகமான சனி மற்றும் குருவின் கோச்சாரம் மிக முக்கியமாக பார்க்க வேண்டும், உதாரணமாக ஒருவருக்கு வேலை அல்லது தொழில் எப்பொழுது துவங்க முடியும் என கேள்வி இருந்தால், ஜாதகத்தில் உள்ள சூரியன் உள்ள ராசிக்கு கோச்சாரத்தில் சனி அல்லது குரு 1,5,7,9,3,11 ஆம் ராசிகளில் வரும் போது புதிய மாற்றம் நடக்கும்,

இதை ஜாதகர் கேட்க தேவையில்லை நாமாகவே ஜாதகருக்கு இனி வரும் காலங்களில் எந்த கிரகங்கள் எந்த காலத்தில் தூண்டப்பட இருக்கிறது அதில் என்ன நடக்கும், அடுத்து வரும் ஆண்டுகளில் ஜாதகர் சந்திக்கவுள்ள அனைத்தையும் கூறலாம்,

- வேலை, தொழில் - சூரியன்
- குழந்தை - சூரியன்
- பயணம் - சந்திரன்
- வெளிநாடு - சந்திரன்

CamScanner

- வீடு - சந்திரன்
- நிலம் - புதன்
- கல்வி - புதன்
- திருமணம் - சுக்கிரன்
- பணம் - சுக்கிரன்
- வாகனம் - சுக்கிரன் அல்லது சந்திரன்
- தாய் - சந்திரன்
- தந்தை, மகன் - சூரியன்
- அயல்நாடு - சந்திரன்
- சகோதரி, மகள் - புதன்
- வழக்கு - செவ்வாய்
- கடன் - செவ்வாய்
- முதலீடு - குரு, சுக்கிரன்
- உடல்நலம், மருத்துவம் - செவ்வாய்
- குழந்தை பேறு - சூரியன்

போன்ற தகவல்களை ஜாதகருக்கு கூற அந்த கிரகங்கள் தூண்டப்பட வேண்டும் அதுமட்டுமல்லாமல் அடுத்து வரும் பலன் பகுதியை பயன்படுத்தி, ஜாதகர் ஒவ்வொரு காலத்திலும் அனுபவிக்கும் வாழ்க்கை அனுபவங்களை வரிசைப்படுத்தி பலன் கூறலாம்,

அடுத்து வரும் பகுதியில் நடப்பு கிரகத்துடன் இணைவு பெறும் கிரக பலன் என கொடுத்துள்ளேன், உதாரணமாக நடப்பு சூரியனுடன் இணைவு பெறும் கிரகபலன் என்றால், நடப்பில் (கோச்சாரத்தில்) சூரியன் ஒரு ஜாதகத்திற்கு அளிக்கும் பலன்களை கூறுவது ஆகும், அதற்கு கீழே ஒவ்வொரு கிரகமாக கொடுத்துள்ளேன் அது ஜாதகத்தில் உள்ள கிரகமாகும்,

உதாரணமாக ஒரு ஜாதகத்தில் மேச ராசியில் சுக்கிரன் இருக்கிறது, ஒவ்வொரு ஆண்டும் குறிபிட்ட மாதத்தில் சூரியன் அந்த மேச ராசிக்கு வரும், அந்த காலத்தில். கிழே நடப்பு கிரகம்

பகுதியில் நடப்பு சூரியனுடன் இணைவு பெறும் கிரகபலன் பிரிவில் சுக்கிரன் என்பதில் உள்ள பலன்கள் நடைபெறும், அதே போல் அந்த ஜாதகத்தில் மேச ராசியில் உள்ள சுக்கிரன், மேச ர்ரசியில் இருந்து 1, 5, 7, 9, 3, 11 ஆம் ராசிகளில் நடப்பு சூரியன் வரும் போதும் அந்த பலன்களை சொல்லலாம், சூரியனுக்கு பதிலாக நடப்பு சனிக்கு பலன் தெரிந்து கொள்ள நடப்பு சனியுடன் இணைவு பெறும் கிரகபலன் பகுதியில் பார்க்க வேண்டும்,

நடப்பு கிரகங்களின் நிலைகளை வைத்து பலனறிதல்

நடப்பு சூரியனுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. ஜாதகருக்கு ஆளுமை தன்மை அதிகரிக்கும்,
2. ஜாதகருக்கு சிறிய புதிய வாய்ப்புகள் கிடைக்கும்,
3. ஜாதகரின் தந்தை உடல் நலம் தேறும்,
4. வெற்றி உண்டாகும்,
5. உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும்,

சந்திரன்:

1. பயணங்கள் உண்டாகும்,
2. முடிவெடுப்பதில் குழப்பம் ஏற்படும்,
3. மகன் அல்லது தந்தைக்கு குழப்பமும், தெளிவின்மையும் ஏற்படும்,
4. தந்தை பயணங்கள் மேற்கொள்வார்,
5. தாயின் பொறுப்புகள் அதிகரிக்கும்,

6. ஜாதகருக்கு அஜீரண கோளாறுகள் ஏற்படும்,
7. பொறாமை உணர்வு அதிகரிக்கும்,

புதன்:

1. சொத்துக்கள் சார்ந்த விசயங்களில் திருப்தி உண்டாகும்,
2. மகளின் ஆதரவு கிடைக்கும்,
3. காதல் விசயங்களில் மேன்மை கிடைக்கும்,
4. வியாபாரம் திருப்தி தரும்,

சுக்கிரன்:

1. எதிர்பார்த்த பணம் வந்து சேரும்,
2. மனைவி வழி அனுகூலம் பெருகும்,
3. மனைவியுடன் ஆளுமை தொடர்பான சச்சரவுகள் ஏற்படலாம்,
4. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும்,
5. திருமண வாய்ப்புகள் ஏற்படும்,
6. கேட்ட இடத்தில் இருந்து பணம் வரும்,

செவ்வாய்:

1. வழக்கு தொடர்பான முன்னேற்றம் கிடைக்கும்,
2. உடல் நலம் தொடர்பான சிக்கல் ஏற்படும்,
3. பெண்களுக்கு கணவருடன் ஆளுமை தொடர்பான சண்டைகள் ஏற்படும்,
4. கடன் தொகை வந்து சேரும் (கேட்டாலும், கொடுத்த பணமாக இருந்தாலும்),
5. உஷ்ணம் தொடர்பான வியாதிகள் ஏற்படும்,
6. உதிரபோக்கு சிக்கல் உண்டாகும்,

குரு:

1. சுய ஆளுமையை வெளிபடுத்த வாய்ப்பு உண்டாகும்,
2. வீட்டில் பொறுப்புகள் கிடைக்கும்,
3. ஆன்மீக நட்பு பெருகும்,

CamScanner

சனி:

1. தந்தையின், மகனின் சுறுசுறுப்பு குறையும்,
2. ஜாதகரின் தொழில் சார்ந்த ஆளுமை திறன் கூடும்,
3. தொழிலில் சிறு வளர்ச்சி ஏற்படும்,
4. வேலையாட்கள் சிக்கல் உண்டாகும்,

ராகு:

1. தந்தையின் வழியில் உதவி கிடைக்கும்,
2. திடீர் வரவுகள் கிடைக்கும்,
3. வாயு தொடர்பான உபாதைகள் தோன்றி மறையும்,

கேது;

1. தாய் வழியில் உதவி கிடைக்கும்,
2. தந்தை மற்றும் குழந்தைகளுடன் கருத்து வேறுபாடு எற்படும்,
3. தொழில் சூழலில் விரக்தி உருவாகும்,
4. எதிலும் ஒரு போதும் என்ற நிலை உருவாகும்,

நடப்பு சந்திரனுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. மகனுடனும், தந்தையுடனும் சில மன கசப்புகள் ஏற்படும்,
2. தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படும்,
3. நீர் தொடர்பான உடல் தொந்தரவுகள் ஏற்படும்,

சந்திரன்:

1. மனத்தெளிவில் மாற்றம் இருக்கும்,
2. தாயிடம் வாக்கு வாதங்கள் ஏற்படும்,
3. சிறிய அவமானங்கள் நிகழும்,

CamScanner

4. பிறர் புறக்கணிப்பதாக தோன்றும்,

புதன்:

1. மகளுக்கு சில குழப்பங்கள் ஏற்படும்,
2. வியாபார நிமித்தம் பிரயாணங்கள் ஏற்படும்,
3. சொத்து சார்ந்த சச்சரவுகள் தோன்றும்,
4. நரம்பு பிடிப்பு, சுளுக்கு, தோல் தொந்தரவுகள் அதிகரிக்கும்,

சுக்கிரன்:

1. பெண்கள் (மனைவி) வழி சிக்கல்கள் வரும்,
2. பணம் தொடர்பான பயணங்கள், பணத்திற்காக அடிபணிந்து போதல் ஏற்படும்,
3. நண்பர்களின் மீது உள்ள நம்பிக்கையில் குறைவு உண்டாகும்,

செவ்வாய்:

1. கணவர், சகோதரர்கள், நண்பர்களுக்கு சில தூர வேலைகள் வரும், அது குறித்த அச்சம் எற்படும்,
2. சிறு காயங்கள், சிறிய கொப்புளங்கள் எற்படும்,
3. சளி, அல்லது நீர் குறைபாடு நோய்கள் வரும்,
4. தாய் படபடப்புடன் காணப்படுவார்,
5. கணவரின் நடத்தை குறித்த குழப்பம் உண்டாகும்,

குரு:

1. ஜாதகர் சிறிய பயணத்தை எடுத்து கொள்வார்,
2. தாயுடன் இணக்கம் உண்டாகும்,
3. சிறு அவமானங்கள் ஏற்படுவதாக உணர்வார்,
4. வேறு பெண்கள் மீது ஆசை கொள்வார்,
5. புதிய பொருட்கள் மீது ஆசை ஏற்படும்,

CamScanner

சனி:

1. தொழில் விசயமாக வேறு இடத்திற்கு செல்ல நேரலாம்,
2. பணியிடங்களில் அவமானப்படுத்தபடுவார்,
3. விதவை, திருமணமான பெண்கள் மீது ஆசை உண்டாகும்,
4. வயதான ஆண்களின் இடையூறுகள் வரும்(பெண்களுக்கு),

ராகு:

1. தாயின் உடல் நிலையில் பிரச்சனை,
2. வயிறு தொடர்பான அஜீரண மற்றும் வாயு தொல்லைகள் தோன்றி மறையும்,
3. திடீர் பயணங்கள் ஏற்படும்,

கேது:

1. தாயுடன் கருத்து வேறுபாடு வரும்,
2. மனம் குழப்பத்துடன் காணப்படும்,
3. சிறிய சண்டைகள் உருவாகும்,

நடப்பு புதனுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. ஆளுமையில் புத்தி கூர்மை அதிகரிக்கும்,
2. மகள் ஆளுமையை செலுத்துவார் அதனால் சிறு சண்டைகள் உருவாகும்,
3. தொழிலில் தொடர்புகள் அதிகரிக்கும்,
4. மகனின் கல்விநிலையில் திருப்தி அளிக்கும்,
5. சொத்து தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும்,
6. உறவுகளுடனான இணக்கம் அதிகமாகும்,
7. தந்தையின் நட்பு வட்டம் உதவியளிக்கும்,
8. சமூகத்தில் தொடர்புகள் கிடைக்கும்,

CamScanner

சந்திரன்:

1. பெண்கள் விசயத்தில் விரக்தி ஏற்படும்,
2. நண்பர்களுடனான பயணங்கள் நிகழும்,
3. கல்வி தொடர்பான பயணங்கள் நடக்கும்,
4. தோலில் நீர் கொப்புளங்கள் உருவாகும்,
5. சொத்து தொடர்பான பிரயாணங்கள் நடக்கும்,

புதன்:

1. காதலில் அன்யோன்யம் பெருகும்,
2. கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்,

சுக்கிரன்:

1. பணத்தின் மீது நாட்டம் ஏற்படும்,
2. காதல் வெளிப்படும்,
3. குடும்பத்தில் அன்யோன்யம் பெருகும்,

செவ்வாய்:

1. சகோதரர்களுக்குள் நட்பு பலப்படும்,
2. நட்பு வட்டாரம் விரிவடையும்,
3. கணவனுடன் ஈர்ப்பு அதிகரிக்கும்,
4. கணவன் மற்றும் சகோதரர்களின் மீது சந்தேகம் ஏற்படும்,

குரு:

1. ஜாதகர் கவர்ச்சியாக தோற்றமளிப்பார்,
2. புதிய தொடர்புகள் தோன்றும்,
3. புதிய விசயங்களை கற்பார்,
4. தாய்வழி மற்றும் மகள் வழி உறவுகள் நன்மை தரும்,

சனி:

1. வியாபார விருத்தி ஓங்கும்,

CamScanner

2. நிலம் சார்ந்த செல்வம் சேரும்,
3. மகளின் கல்வியில் சுணக்கம் ஏற்படும்,
4. காதலில் மந்த நிலை ஏற்படும்,
5. தோல் நோய்கள் தோன்றும்,

ராகு:

1. தந்தை வழியில் இருந்து சொத்து தொடர்பான செய்திகள் வரும்,
2. பயம் ஏற்படும்,
3. காதலர் மீது சந்தேகம் ஏற்படும்,
4. கல்வியில் சில விசயங்கள் பிடிபடும்,

கேது;

1. காதலியுடன் கருத்து வேறுபாடு நிகழும்,
2. தொழிலில் விரக்தி ஏற்படும்,
3. முடி தொடர்பான நோய்கள் வந்து மறையும்,

நடப்பு சுக்கிரனுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. தாய் தந்தை உறவில் மேன்மை ஏற்படும்,
2. தந்தைக்கு பணவருமானம் பெருகும்,
3. தந்தை பேச்சில் சாதூர்யம் மேம்படும்,
4. மனைவியுடன் சிறு வாக்கு வாதம் ஏற்படும்,
5. மனைவியின் கை ஓங்கி இருக்கும்,

சந்திரன்:

1. மனோ தைரியம் அதிகமாகும்,
2. தாயின் செல்வ நிலை அதிகரிக்கும்,

CamScanner

3. ஆடம்பர பொருட்கள் மீது நாட்டம் அதிகரிக்கும்,
4. பெண்கள் தொடர்பான பிரயாணங்கள் ஏற்படும்,
5. பணத்தின் மீது ஆசை உண்டாகும்,

புதன்:

1. தொழிலில் வருமானம் பெருகும்,
2. சொத்து தொடர்பான வருவாய் அதிகரிக்கும்,
3. கல்விக்கான கடன் தொகை வந்து சேரும்,
4. காதல் உணர்வுகள் அதிகரிக்கும்,
5. பெண்களுடன் உறவுகள் மேம்படும்,

சுக்கிரன்:

1. பணம் கிடைக்கும்,
2. மனைவியுடன் உறவில் மகிழ்ச்சி அதிகமாகும்,
3. மனைவியின் தொழில் சார்ந்த அறிவுரைகளால் லாபம் பெருகும்,
4. பெண் தொடர்புகள் கிடைக்கும்,

செவ்வாய்:

1. நண்பர்களால் ஆதாயம் ஏற்படும்,
2. வாகனம் ஆதாயம் அதிகமாகும்,
3. சகோதரர்களின் பொருளாதாரம் சீராக இருக்கும்,
4. மனைவிக்கு உடல் நலம் குறையும்,
5. திருமணம் தொடர்பான பேச்சுக்கள் எழும்,

குரு:

1. வசீகரம் ஏற்படும்,
2. பணவரவு உண்டாகும்,
3. குடும்ப அன்யோன்யம் பெருகும்,
4. மனைவியின் மதிப்பு உயரும்,
5. மனைவி வழி சொந்தங்களால் நன்மை கிடைக்கும்,

CamScanner

6. வாகன யோகம் வரும்,

சனி:

1. பணிக்கான வாய்ப்புகள் கிடைக்கும்,
2. மனைவியின் சுறுசுறுப்பு குறையும்,
3. பொருளாதார திருப்தி உண்டாகும்,
4. தொழில் மற்றும் பணியிடங்களில் வருவாய் அதிகமாகும்,
5. தொழிலுக்கு மனைவியின் மூலமான ஆதரவு கிடைக்கும்,

ராகு:

1. தந்தை வழியில் லாபங்கள்வரும்,
2. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்,
3. கடன் தொடர்பான குழப்பங்கள் வரும்,
4. மனைவியின் உடல்நலம் குறையும்,

கேது;

1. தாய் வழியில் லாபங்கள் வரும்,
2. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்,
3. கடன் தொடர்பான விரக்தி வரும்,
4. மனைவியின் மீது வெறுப்பு உண்டாகும்
5. தொழிலில் சுணக்கம் ஏற்படும்,

நடப்பு செவ்வாயுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. கண்களில் வலி ,எரிச்சல் வரும்,
2. அதீதமான கோப உணர்வு எழும்,
3. நட்பு வட்டாரத்தில் பிளவுகள் ஏற்படும்,
4. சகோதரர்களின் ஆலோசனை கிடைக்கும்,

CamScanner

5. தந்தை ,மகனுக்கு உடல் நலத்தில் சிக்கல், அடிபடுதல் ஏற்படும்,

சந்திரன்:

1. தாயின் உடல்நலம் சீராகும்,
2. தாயின் அதிகாரம் மேம்படும்,
3. மனதில் தேவையற்ற கர்வம் தோன்றும்,
4. தந்தையிடம் முரண்பாடுகள் உருவாகும்,

புதன்:

1. தொழிலில் புதிய உக்திகள் தோன்றும்,
2. மகளின் கல்வி சீராக இருக்கும்,
3. பணியிடங்களில் தகராறுகள் உண்டாகும்,
4. சொத்து தொடர்பான சிந்தனைகள் ஏற்படும்,
5. தாய் வழி உறவுகளால் உதவி கிடைக்கும்,

சுக்கிரன்:

1. மனைவியின் உடல் நலம் குறையும்,
2. மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றும்,
3. கணவனுடன் அன்யோன்யம் அதிகரிக்கும்,
4. சகோதர ஆதரவு பெருகும்,
5. நட்பு வட்டாரம் விரிவடையும்,
6. பணவரவு அதிகமாகும்,

செவ்வாய்:

1. உடல் நல தொந்தரவுகள் வந்து மறையும்,
2. அறுவை சிகிச்சை ஏற்படும்,
3. வேலைப்பளு அதிகமாகும்,
4. உஷ்ணம் அதிகரிக்கும்,
5. சிறிய தகராறுகள் ஏற்படும்,
6. கணவரின் கோபத்திற்கு ஆளாகலாம்,

CamScanner

குரு:

1. அறுவை சிகிச்சை நடக்கும்,
2. உடல் நலத்தில் குறைபாடு,
3. கடன் தொல்லைகள் அதிகமாகும்,
4. சகோதர ஆதரவு கிடைக்கும்,
5. கணவனுடன் காதல் அதிகமாகும்,
6. விக்கம் , சிராய்ப்பு, வெட்டு காயங்கள் ஏற்படும்,
7. சகோதர வழியில் குடியிருப்பு அல்லது பயணம் ,மாற்றம் நிகழும்,
8. இரத்தம் தொடர்பான தொந்தரவுகள் உண்டாகும்,

சனி:

1. தொழில் சார்ந்த விபத்துகள் நடக்கும்,
2. தொழிலில் சகோதர, நட்பு வட்டார ஆதரவு கிடைக்கும்,
3. தொழில் சச்சரவுகள் உண்டாகும்,
4. தொழிலுக்கான இயந்திரங்கள் கிடைக்கும்,
5. தொழிலாளர்களுடன் கருத்து மோதல் ஏற்படும்,
6. உடல் சோர்வு உண்டாகும்,

ராகு:

1. கணவருக்கு உடல் நலமின்மை ஏற்படும்,
2. நண்பர்களால் ஏமாற்றப்படலாம்,
3. கணவனுடன் வாதம் , வம்பு சண்டை ஏற்படும்,
4. தந்தை வழி பெரியோர்கள் உடல் நிலை மோசமடையும்,
5. உடலில் காயங்கள் உண்டாகும்,

கேது:

1. கணவர் மீது விரக்தி ஏற்படும்,
2. கணவர் போதைக்கு அடிமையாவார்,
3. நரம்பு சார் நோய்கள் வந்து மறையும்,

CamScanner

நடப்பு குருவுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. பணி உயர்வு கிடைக்கும்,
2. பணி நியமனங்கள் நடைபெறும்,
3. தொழில் துவங்கும் வாய்ப்புகள் வந்து சேரும்,
4. குழந்தை பிறப்பு உண்டாகும்,
5. மதிப்பு மரியாதை உயரும்,
6. தொழில் சார்ந்த புதிய முயற்சிகள் உண்டாகும்,
7. ஆளுமை பண்பு அதிகரிக்கும்,
8. தந்தையின் வழி பெரியோர்களின் ஆதரவு பெருகும்,
9. அனைவரும் ஆதரவாக செயல் படுவர்,

சந்திரன்:

1. பயணங்கள் ஏற்படும்,
2. இடமாற்றங்கள் எற்படும்,
3. தாய்க்கு வாத நோய்கள் தோன்றும்,
4. அவமானங்கள் நிகழும்,
5. குழப்பம் தோன்றும்,
6. நீர் சார் நோய்கள் உருவாகும்,
7. சபல எண்ணங்கள் உருவாகும்,
8. ஏமாற்றம் எற்படும்,
9. சுற்றுலா செல்லும் வாய்ப்பு,
10. தாய் வழி உதவி கிடைக்கும்,

புதன்:

1. கல்வி முன்னேற்றங்கள் உருவாகும்,
2. பெண்கள் தொடர்பால் நன்மை உண்டாகும்,
3. அசையா சொத்துக்கள் வந்து சேரும்,
4. தோல் தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை கிடைக்கும்,
5. பேச்சு சாதுர்யம் பெருகும்,

6. வியாபார தொடர்புகள் கிடைக்கும்,
7. காதல் எண்ணம் அதிகமாகும்,
8. தாய் வழி நன்மை ஏற்படும்,

சுக்கிரன்:

1. திருமண வாய்ப்பு ஏற்படும்,
2. ஆடம்பர பொருள் சேர்க்கை,
3. வீடு வாகன யோகம்,
4. குழந்தை பிறப்பு ஏற்படும்,
5. கேளிக்கை மீது நாட்டம் அதிகரிக்கும்,
6. பொருள் சேர்க்கை கிடைக்கும்,
7. குடும்ப அன்யோன்யம் பெருகும்,
8. பணத்தின் மீது ஆசை அதிகமாகும்,

செவ்வாய்:

1. உடல் நலத்தில் குறைபாடு,
2. காயங்கள், வீக்கங்கள், சிகிச்சைகள் ஏற்படுதல்,
3. சுற்றத்தாரின் எதிர்ப்புகள் உண்டாகும்,
4. பணியிடங்களில் தொல்லைகள்,
5. கணவனுடன் அன்யோன்யம் அதிகமாகும்,
6. நண்பர்கள் ஆதரவு கிடைக்கும்,
7. அறுவை சிகிச்சைகள் வெற்றி பெரும்,
8. இரத்தம் தொடர்பான பிணிகள் தோன்றி மறையும்,

குரு:

1. ஆண் குழந்தை பிறப்பு,
2. பெரியோர் நட்பு கிடைக்கும் ,
3. அவர்கள் மூலமாக நன்மை கிடைக்கும்,
4. பணி உயர்வு, வேண்டிய படி இடமாற்றம் உண்டாகும்,
5. நிம்மதி கிடைக்கும்,
6. தன்நம்பிக்கை அதிகமாகும்,

CamScanner

சனி:

1. இடமாற்றம் ஏற்படும்,
2. சோம்பேறித்தனம் அதிகரிக்கும்,
3. தொழில் வளர்ச்சி, எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்,
4. தொழில் சிக்கல் குறையும்,

ராகு:

1. வயிற்று உபாதைகள், வாதம் சார்ந்த சிக்கல்கள் ஏற்படும்,
2. மரணத்திற்கு நிகரான சிக்கல்கள்,
3. குடும்பத்தில் துர் நிகழ்வுகள் நிகழும்,
4. குழப்பமான காலமாகவே இருக்கும்,
5. தற்கொலை எண்ணங்கள் தோன்றும்,
6. மற்ற மதத்தினரோடு உறவு ஏற்படும்,
7. பயம், அச்சம் ஏற்படும்,
8. கல்வியில் தடை உண்டாகும்,

கேது;

1. விரக்தி மேலோங்கும்,
2. இறை தொடர்பான விசயங்கள் மீது ஆர்வம் அதிகரிக்கும்,
3. நிம்மதிக்காக பயணங்கள் ஏற்படும்,
4. குடல் நோய்கள் தோன்றும்,
5. மலத்தில் இரத்தம் போன்ற வெளியில் சொல்ல கூச்சப்படும் நோய்கள் வந்து மறையும்,
6. உடலில் சக்தி இல்லாதது போல் தோன்றும்,
7. கல்வியில் தடை உண்டாகும்,

நடப்பு சனியுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. பதவி உயர்வு கிடைக்கும்,
2. தந்தை சுறுசுறுப்பை இழப்பார்,
3. ஆடம்பர பொருட்கள் வந்து சேரும்,
4. தொழில் இடங்களில் அங்கீகாரம் கிடைக்கும்,
5. குழந்தை பிறப்பு ஏற்படும்,
6. புதிய தொழில் மற்றும் பணிவாய்ப்புகள் வந்து சேரும்,
7. குடும்பத்திலும், சமூகத்திலும் மதிப்பு உயரும்,
8. புதிய அந்தஸ்த்து கிடைக்கும்,
9. அரசு அனுகூலம்,
10. தந்தை நிலையில் சிறு சரிவுகளை சந்திப்பார்

சந்திரன்:

1. தொழில் சார்ந்த பயணங்கள் ஏற்படும்,
2. கலைகள் மீது நாட்டங்கள் ஏற்படும் ,
3. சிறு சிறு அவமானங்கள் தோன்றும்,
4. நீர் தொடர்பான நோய்கள் தோன்றும்,
5. ஆடம்பர பொருட்கள் சேரும்,
6. வீடு கட்டும் எண்ணம் நிறைவேறும்,
7. மாதவிடாய் பிரச்சனைகள் தோன்றும்,
8. தாய்க்கு உடல் நலத்தில் சிக்கல் ஏற்படும்,
9. சந்தோசம் அதிகரிக்கும்,
10. காலம் தாழ்த்தி உண்ணும் நிலை உண்டாகும்,
11. அஜீரண கோளாறுகள் உண்டாகும்,

புதன்:

1. சொத்துக்கள் வாங்கும் நிலை ஏற்படும்,
2. பூர்வீக சொத்துகள் கிடைக்கும்,
3. தொழிலில் லாபம் பெருகும்,

CamScanner

4. குழந்தை பிறப்பு உண்டாகும்,
5. மகளின் நிலையில் வருத்தம் ஏற்படும்,
6. புதிய தொடர்புகள் உண்டாகும்,
7. கற்பதில் ஆர்வம் பெருகும்,
8. கல்வியில் புதிய வெற்றிகள் கிடைக்கும்,
9. காதலில் வெற்றி கிடைக்கும்,
10. தாய் வழி உறவுகளால் நன்மை கிடைக்கும்,

சுக்கிரன்:

1. பொருள், பணம் சேர்க்கை அதிகமாகும்,
2. நெடுநாட்களாக வராத பணம் வந்து சேரும்,
3. திருமண வாய்ப்புகள் உண்டாகும்,
4. மனைவியின் உடல் நிலையில் பின்னடைவு ஏற்படும்,
5. வீடு, வாகனங்கள் சேரும்,
6. மனைவியால் தொழிலில் உதவி கிடைக்கும்,
7. தொழிலில் மேன்மை கிடக்கும்,

செவ்வாய்:

1. சச்சரவுகள் ஏற்படும்,
2. கணவருடைய நிலையில் தாழ்வு உண்டாகும்,
3. பல நாட்பட்ட நோய்களுக்கான சிகிச்சை நடைபெறும்,
4. கால்களில் காயம் ஏற்படுதல்,

குரு:

1. இடமாறுதல் ஏற்படும்,
2. பணி உயர்வு ஏற்படும்,
3. தொழில் முன்னேற்றம் உண்டாகும்,
4. தொழில் வளர்ச்சி பெருகும்,
5. வாதம் தொடர்பான உடல்நல கோளாறு உண்டாகும்,
6. தொழிலில் பலரின் ஆதரவு கிடைக்கும்,
7. குடியிருப்பு மாற்றம் ஏற்படும்,
8. கல்வி தொடர்பாக வெளியூரில் தங்க நேரும்,

CamScanner

சனி:

1. தொழில் சராசரியாக நடக்கும்,
2. மந்த எண்ணம் தோன்றும்,
3. தொழிலை புதுப்பிக்கும் எண்ணம் தோன்றும்,
4. பலரது உதவி எதிர்பார்த்த அளவு கிடைக்காது,

ராகு:

1. வயதான உறவினர்களுக்கு உடல் நல சிக்கல் ஏற்படும்,
2. தொழிலில் ஏமாற்றும் சிந்தனை அதிகரிக்கும்,
3. பணியிடங்களில் பிரச்சனைகள் ஏற்படும்,
4. தொழில் பயம் உண்டாகும்,
5. தொழில் விரிவடையும்,
6. தந்தை வழியில் தொழில் மூலதன உதவி கிடைக்கும்,
7. ஜாதகத்தில் ராகுவுடன் இணைந்த கிரகங்களின் வழியே சிக்கல் உருவாகும்,

கேது;

1. அனைத்திலும் விரக்தி மேலோங்கும்,
2. தொழிலிடங்களில் மன அழுத்தம் அதிகமாகும்,
3. பணியை விட்டுவிடும் எண்ணம் தோன்றும்,
4. ஞான மார்க்கமான தொடர்புகள் உண்டாகும்,
5. உயர்வானவர்களின் நட்புகள் கிடைக்கும்,
6. தாய் வழியில் தொழில் ஆலோசனை மற்றும் உதவிகள் கிடைக்கும்,

CamScanner

நடப்பு ராகுவுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. தந்தையின் உடல் நலத்தில் சிக்கல் உண்டாகும்,
2. ஆளுமையில் தவறுகள் உண்டாகும்,
3. தந்தையின் மனம் குழப்பமடையும்,
4. தந்தையுடன் கருத்து வேற்றுமை தோன்றும்,

சந்திரன்:

1. தாயின் உடல் நலத்தில் சிக்கல் உண்டாகும்,
2. மன அழுத்தம்,
3. வாழ்க்கை மீது பயம்,
4. தேவையற்ற கனவுகள்,
5. யாரோ ஒருவரால் தனது முன்னேற்றம் தடை பட்டதாக உணர்வது,
6. பேய், பிசாசு, செய்வினை போன்ற நம்பிக்கை உருவாகும்,
7. அதன் மீது அச்சமும் ஏற்படும்,
8. மனநோய்க்கு நிகரான குழப்பம் வரும்,

புதன்:

1. மகளின் உடல் நிலை பாதிப்படையும்,
2. புத்தி தெளிவின்மை உண்டாகும்,
3. தோல்நோய்கள் வரும்,
4. கல்வி தொடர்பான அச்சம் ஏற்படும்,
5. வியாபாரத்தில் குழப்பமும், பயமும் உருவாகும்,
6. பெண்களால் தொல்லைகள் வந்து சேரும்,
7. சொத்து தொடர்பான பிரச்சனைகள் முடிவுக்கு வரும்,
8. பல நாட்களாக உள்ள பெரிய பிரச்சனைகளை தீர்க்கும் வாய்ப்பு கிடைக்கும்,

CamScanner

சுக்கிரன்:

1. மனைவிக்கு உடல் நலக்கோளாறு தோன்றும்,
2. மனைவியை ஏமாற்றுதலுக்கான சூழ்நிலை உருவாகும்,
3. திடீர் பணவரவு,
4. தவறான வழியில் பணவரவு உண்டாகும்,
5. ஆடம்பர பொருட்கள் களவு போதல் நடைபெறும்,
6. புதிய பொருள் சேர்க்கை உண்டாகும்,
7. வழக்கு முடிவாகும்

செவ்வாய்:

1. விபத்துகள் ஏற்படும்,
2. சகோதரர்கள், மற்றும் நண்பர்களின் உடல்நலம் குறையும்,
3. காயங்கள், அறுவை சிகிச்சைகள் உண்டாகும்,
4. கணவனின் உடல்நலம் மோசமாகும்,
5. கணவனுடன் கருத்து வேறுபாடு தோன்றும்,
6. தீராத வியாதிகளுக்கு சிகிச்சை கிடைக்கும்,

குரு:

1. வாயு தொடர்பான சிக்கல் உருவாகும்,
2. வாழ்க்கை மீது பயம் தோன்றும்,
3. குழப்பமான சிந்தனைகள் உண்டாகும்,
4. குறுக்கு புத்தி உண்டாகும்,
5. திருட்டு எண்ணங்கள் தோன்றும்,
6. உறவினர் மரணம் நிகழும்,
7. பில்லி, சூன்ய நம்பிக்கை ஏற்படும்,
8. முகம் அல்லது உடலில் வெளியே தெரியும் பாகங்களில் வாதத்தால் உருவ மாற்றம் சிறிதாக தோன்றும்,

சனி:

1. திருட்டுத்தனம் அதிகமாகும்,
2. தொழில் ரீதியான விபத்துகள் உண்டாகும்,

CamScanner

3. திடீர் அதிர்ஷ்டம் கிடைக்கும்,
4. பணி மற்றும் தொழில் இடங்களில் துர்செய்திகள் கேட்க நேரும்,
5. உழைக்காமல் வருமானம் வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றும்,

ராகு:

- பாதிப்பும், நன்மையும் இல்லை, ஆனால் ராகுவிடம் பிறப்பு ஜாதகத்தில் தொடர்பு கொண்ட கிரகங்களில் எதிர்மறையான தன்மைகளைத் தூண்டிவிடும்

கேது:

- பாதிப்பும், நன்மையும் இல்லை, ஆனால் கேதுவிடம் பிறப்பு ஜாதகத்தில் தொடர்பு கொண்ட கிரகங்களில் எதிர்மறையான தன்மைகளைத் தூண்டிவிடும்

நடப்பு கேதுவுடன் இணைவு பெறும் கிரக பலன்

சூரியன்:

1. தந்தை, மகன் மீது வெறுப்பு உண்டாகும்,
2. பணி மற்றும் தொழிலில் ஆளுமையை செலுத்த இயலாமல் போகும்,
3. தந்தையின் பெருந்தன்மை, புகழ் அதிகமாகும்,
4. பெரியோர்களில் நட்பு கிடைக்கும்,
5. குடும்பத்தில் நிம்மதி அதிகமாகும்,

சந்திரன்:

1. தாயின் மீது விரக்தி அதிகமாகும்,
2. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்,

CamScanner

3. ஆன்மீக பயணங்கள் உண்டாகும்,
4. வாழ்க்கை மீது விரக்தி தோன்றும்,
5. அறம் சார்ந்த பணிகள் மீது ஈர்ப்பு ஏற்படும்,

புதன்:

1. கல்வியில் கவனிக்க இயலாத நிலை தோன்றும்,
2. தோல் நோய்கள் அதிகமாகும்,
3. வணிகத்தில் சிக்கலும், சண்டைகளும் விரக்தியும் உண்டாகும்,
4. மகளின் செயல்பாடுகள் மீது விரக்தி ஏற்படும்,
5. சொத்து தொடர்பான பிரச்சனைகள், வழக்குகள் வந்து சேரும்,
6. காதல் , குடும்ப அன்யோன்யத்தில் குறைவு உருவாகும்,
7. பெண்களுடன் தொடர்புகள் ஏற்படும்,

சுக்கிரன்:

1. மனைவியுடன் கருத்து வேறுபாடு தோன்றும்,
2. தற்காலிகமாக பிரிவு ஏற்படும்,
3. பணி நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிரிவு உண்டாகும்,
4. செல்வ நிலையில் சிறு பின்னடைவு ஏற்படும்,
5. வாகனங்கள் தொடர்பான செலவுகள் மேலோங்கும்,

செவ்வாய்:

1. திடீர் நோய்கள் தோன்றும்,
2. நண்பர்களுடன் கருத்து மோதல் வரும்,
3. கணவனுடன் வாழ்வதில் இடர்பாடுகள் உண்டாகும்,
4. கடன் தொல்லை அதிகமாகும்,
5. காயங்கள் உண்டாகும்,
6. சிறிய அறுவை சிகிச்சை நடைபெறும்,
7. பயணங்களின் போது விபத்துகளால் சிறு காயங்கள், சிராய்ப்புகள் ஏற்படலாம்,

CamScanner

குரு:

1. ஆன்மீக சிந்தனை அதிகமாகும்,
2. விரக்தி எண்ணம் மேலோங்கும்,
3. ஆன்மீக பயணங்கள் உண்டாகும்,
4. எதிலும் ஈடுபாடில்லாத நிலை ஏற்படும்,
5. யாருடனும் ஒட்டாமல் விலகி செல்ல தோன்றும்,
6. வழக்குகள் ஏற்படும்,
7. தீராத நோய்களின் தொந்தரவுக்கு ஆளாவார்கள்,

சனி:

1. தொழில் தடை உண்டாகும்,
2. ஒரு விசயத்தை முடிக்க பல முறை அலைச்சல் ஏற்படும்,
3. தொழில் ரீதியான வழக்குகள் உண்டாகும்
4. ஆன்மீக சிந்தனை தோன்றும்,
5. பணியிடங்களில் சச்சரவுகளால் பணியிழப்புகள் ஏற்படும்,

ராகு:

- பாதிப்பும், நன்மையும் இல்லை, ஆனால் ராகுவிடம் பிறப்பு ஜாதகத்தில் தொடர்பு கொண்ட கிரகங்களில் எதிர்மறையான தன்மைகளைத் தூண்டிவிடும்

கேது:

- பாதிப்பும், நன்மையும் இல்லை, ஆனால் கேதுவிடம் பிறப்பு ஜாதகத்தில் தொடர்பு கொண்ட கிரகங்களில் எதிர்மறையான தன்மைகளைத் தூண்டிவிடும்.

— நன்றி —

CamScanner

சிறப்பு பகுதிகள்

காபாநூறு அனுபவ குறிப்புகள்

பின்வரும் பகுதியில் அனுபவத்தில் கண்ட பல பலன்களுக்கான கிரக அமைப்புகளை அளித்துள்ளேன், அதில் இரண்டு மூன்று கிரக பெயர்களை கொடுத்து இருப்பேன், அதில் உள்ள கிரகங்கள் ஒன்றுக்கொன்று 1,5,7,9 ஆம் ராசிகளில் இணைவு பெற்று இருந்தால் அந்த குறிப்பிட்ட பலன்கள் நடக்கும் என புரிந்து கொள்ளவும், மேலும் ஒரு கிரக பெயரைக் கொடுத்து பலன் கூறி இருப்பேன், அது அதிகார கிரகத்திற்கான பலன் ஆகும்,

1) சூரியன் குரு மஞ்சள் குடும்ப உறவுகளில் காமாலை, மாரடைப்பு, காரணங்களால் அவதியுறும் நபர்கள் இருப்பார்கள்,
2) சூரியன் சனி இணைவு உறவுகளில் விபத்து, விச மரணம், மனநலம், தலை மூளை சிகிச்சை நடைபெறும்,
3) சூரியன் செவ்வாய் ஹோட்டல் தொழில் வழியாக வருமானம் பெறுவாரகள்,
4) சூரியன் சனி, சனி ராகு ஒரே ஜாதகத்தில் வாழ்க்கை முழுவதும் நிம்மதி இல்லை, எதுவுமே உருப்படியில்லை என்று புலம்புவார்,, தொடர் துர் விசயங்கள் உறவுகளில் இருக்கும்,
5) சூரியன் புதன் பரிவர்த்தனை, அவருடைய குழந்தைக்கு ஆபத்து இருக்கிறது, அல்லது அந்த குழந்தை குடும்ப வாழ்க்கையில் சிக்கலை சந்திக்கிறது, வீட்டில் ராஜேஷ், ஈஸ்வரி, வேல், ஆனந்த், போன்ற பெயர்கள் இருக்கும்
6) சூரியன் சனி அதில் சூரியன் புதன் பரிவர்த்தனை தந்தை இரண்டு மனைவி, மனநலம் இல்லாதவர் குடும்பத்தில் இருப்பார்
7) சூரியன் சனி வேலையை திடீர் என விட்டு விடுவது, திடீர் என உறவுகளை இழப்பது நடக்கும்,
8) சூரியன் சந்திரன் இணைவு வீட்டில் அம்மாவின் (சந்திரன்) அதிகாரம் இருக்கும், இந்த ஜாதகருக்கு குழந்தை பிறப்பு தாமதமாகிறது
9) சூரியன் சந்திரன் தாய் குடும்ப நிர்வாகம் செய்யும் நிலை ஏற்படும்,

CamScanner

10) சூரியன் சனி வலிப்பு நோய், தலையில் சிகிச்சை, விபத்து உறவுகளில் யாருக்காவது ஏற்படும்,
11) சூரியன் அதிகாரம் உள்ள நபர்களை மத்தியஸ்தம் செய்ய அழைத்து செல்லலாம்,
12) குழந்தை பிறக்கும் காலத்தில் பணி அல்லது தொழிலில் குழப்பம் வரும்
13) சூரியன் அதிகாரமானவர்களை திருமணம் செய்தால் அவர் வந்தவுடன் மாமனாருக்கு உடல் மற்றும் தீராத பிரச்சனை உண்டாகும்,
14) சூரியன் சனி தலையில் அடிபடும் போது கீர்த்தி, மூர்த்தி, ஆனந்த், சந்தோஷ், ஆனந்தி, ராஜேஷ் என்பவர் இருப்பார், இந்த பெயருள்ளவர்கள் இருந்தால் தலை தொடர்பான பிரச்சனை இருக்கும்,
15) சூரியன் புதன் தனியாக வேறு எந்த கிரகமும் இல்லாமல் ஒரு ராசியில் இருந்தால் குடும்பத்தில் திருமணம் செய்யாத அல்லது குடும்பம் பிரிந்த உறவுக்காரர் இருக்கலாம், இவருக்கும் திருமணம் கசந்து அல்லது நடக்காமல் கூட போகலாம், அல்லது குழந்தைகல் இல்லாமல் போவது, குடுபத்தில் இருந்து பிரிந்து வாழ்வது இருக்கும்,
16) சூரியன் புதன் தனியாக வேறு எந்த கிரகமும் இல்லாமல் ஒரு ராசியில் இருந்தால் இவருக்கு தாம்பத்ய தடை வரும், அதனாலேயே குழந்தை பிறப்பு தடை உண்டாகிறது, இவர் பிறந்த பிறகு இவரது பெற்றோர்களுக்கும் தாம்பத்தியத்தில் பிரிவு உண்டாகிறது,
17) சூரியன் புதன் தனியாக வேறு எந்த கிரகமும் இல்லாமல் ஒரு ராசியில் இருந்தால் ஜாதகர் ஒரே குழந்தையாக இருக்கும் வாய்ப்பு, அல்லது இவரது சகோதர்ர்களுக்கு 4 வயதுக்கு மேல் வித்யாசம் உள்ளது, ஜாதகருக்கும் ஒரு குழந்தையோ அல்லது குழந்தைகளுக்குள் அதிக இடை வெளி இருக்கும்,
18) சூரியன் புதன் தனியாக வேறு எந்த கிரகமும் இல்லாமல் ஒரு ராசியில் இருந்தால் அந்த ராசிக்கு 1,5,7,9 ஆம் ராசியில் சந்திரன் இருந்தால் குடும்பத்தில் தத்து குழந்தை இருக்கலாம், அல்லது வேறு ஒரு குழந்தை வேறு வீட்டில் வளரலாம், அல்லது

குழந்தை உடன் உள்ள ஒருவரை குடும்பத்தில் யாராவது மறு திருமணம் செய்யலாம்.

19) சூரியன் புதன் தனித்து இருந்து அந்த ராசிக்கு 1,5,7,9, ல் சந்திரன் இருந்தால் உறவுகளில் தத்து பிள்ளை உண்டு.

20) சூரியன் புதன் பரிவர்த்தனை இருந்தால் சந்ததி விருத்தி தடை அல்லது சந்ததி குறித்து எதோ ஒரு சோகம் நிகழ்கிறது.

21) சூரியன் சனி நரை முடி இருக்கும், பல் நோய், பல் உடைதல் இருக்கும்

22) சூரியன் செவ்வாய் அதிகாரம் ஆனால், வீட்டுக்கு அருகில் சிலிண்டர், தீப்பெட்டி பொன்ற குடோன் இருக்கும்,

23) சூரியன் செவ்வாய் பரிவர்த்தனை சந்ததி விருத்தி பிரச்சனை, தாம்பத்யத்தில் ஈடுபடுவதில் உடல் பிரச்சனை,

24) கணவன் மனைவி ஜாதகத்தில் சந்திரன் சூரியனுக்கு 1, 5, 7, 9, ராசிகளில் இருந்தால் குழந்தைகள் ஜாதகத்தில் சந்திரன் அதிகாரம் ஆகும் அவர்கள் வம்சம் முழுவதுமே பெண்கள் ஆளுமை மட்டுமே இருக்கும்

25) ஒருவர் ஜாதகத்தில் சூரியன் சந்திரன் இணைவு இருந்தால் பெரும்பாலும் அவருக்கு வரும் வரனுக்கும் அதே சூரியன் சந்திரன் இணைவு இருக்கும்,

26) சூரியன் சனி இந்த இணைவுடன் இணைந்த கிரகம் குறிக்கும் உறவினரின் வாழ்க்கையில் விபரீதமாக எதாவது நடக்கிறது.

27) சூரியன் சந்திரன் அல்லது சனி சந்திரன் தாய் வழி மரபு நோய், சூரியன் சனி தந்தை வழி மரபு நோய்

28) சூரியன் சனி செவ்வாய் குடும்பத்தில் விபத்துகள்

29) சூரியன் அதிகார கிரகம் ஆனால் சொந்த தொழில் மற்றும் ஆளுமையான பணிகளை செய்வார்

30) சூரியன் சனி புதன் புதுவகையான கேட்க புதுமையான குடும்ப சிக்கல், நோய்கள் திடீரென ஏற்படும்.

31) சூரியன் சனி புதன் புற்று நோய் உள்ளவர்கள் உறவுகளில் உண்டு.

32) சூரியன் சனி இணைவு ஜாதகருடைய வாழ்க்கையில் திடீரென சில இழப்புகள் நடக்கிறது. உதாரனமாக திடீரென வேலை

போகிறது அல்லது காதல் திருமண வாழ்க்கை முறிவு போன்ற சிக்கல் இருக்கிறது,

33) சூரியன் பற்றிய கேள்வி எனில் சமீபத்தில் பல், எலும்பு பிரச்சனை,

34) சந்திரன் சுக்கிரன் - ஆசிரியர், டெய்லர், லேண்ட் புரோக்கர் சிவில் கண்ட்ராக்ட், பொதுப்பணித் துறை காண்ட்ராக்ட் தொழில்களில் குடும்பத்தில் ஒருவர் உண்டு,

35) சந்திரன் செவ்வாய் இணைவு அடிக்கடி வண்டி ரிப்பேர், வாகனம், உணவு, மருத்துவம் ஏற்படும்

36) சந்திரன் அதிகாரம் ஆனால் ஐடி மற்றும் அயல்நாட்டு பணி, செல்போன் தொழில், இதில் உள்ளவர்களுக்கு இதய நோய் இருக்கும்

37) சந்திரன் சார்ந்த கேள்வி எனில் வீட்டில் பைப், டிரைனேஜ், தண்ணீர் பிரச்சனை சரியாகி இருக்கும்,

38) சந்திரன் அதிகாரம் ஆனால் அவருடைய பாட்டி குடும்பத்தினை நடத்துவார், தாத்தா அனுகூலம் குறைவு, இதே போல அவருடைய தாத்தா பாட்டி நிலை என வம்சம் தொடர்ந்து வரும், பெண்களுக்கு மகரம், கடகம், விருச்சகம், ரிசபம் ராசி இருந்தால் அவருடைய பேரன் பேத்திகளுக்கு தொடரும், எனவே சந்திரன் அதிகாரம் தொடர்ச்சியாக பெண்கள் வழி நடத்தும் குடும்பம்

39) சந்திரன் அதிகாரம் ஆன ஜாதகர் தனது தாயை திட்டிக்கொண்டே இருப்பார்,

40) தாய் தலைமை தாங்கிய குடும்பத்தில் ஒருவராவது வெளிநாட்டு பணிகளில் இருப்பர்

41) சந்திரன் அதிகாரம் ஆனால் தாத்தாவை விட பாட்டி பொறுப்பாக இருந்து குடும்பத்தை காப்பார்,

42) சந்திரன் செவ்வாய் இரத்த அழுத்தம் மாத்திரை, இரத்தம் அடர்த்தி குறைக்கும் மாத்திரைகள் சாப்பிடும் நபர்கள் குடும்பத்தில் உண்டு,

43) சனி சந்திரன் செவ்வாய் சேர்க்கை விபத்தில் வண்டி மற்றும் ஓட்டுனர் இருவருக்கும் சேதம் உண்டாகும்,

44) புதன் மிதுனம் கன்னி, தனுசு, மீனம் ராசிகளில் இருந்தால் கல்வி நன்றாக இருக்கும். கல்வி தடை ஏற்பட்டு தொடரும்.

45) குரு செவ்வாய் டாக்குமெண்ட் தொடர்பான சிக்கல் இருக்கும். பிறருக்கு உதவுவதற்கு காசோலை, ஆவணங்களை அடகு கொடுத்து பிற்காலத்தில் இவர் சிக்கிக் கொள்வார்.

46) செவ்வாய் சனி இவர் வசிக்கும் இடத்திற்கு அருகில் கசாப்புக் கடை இருக்கும்.

47) செவ்வாய் சனி வெற்றிகள் அனைத்தும் தாமதமாக கிடைக்கும் ஆனால் பொறுமை இருக்காது.

48) செவ்வாய் எந்த கிரகத்துடன் பரிவர்த்தனை பெற்றாலும் ஏதாவது முக்கியமான உடல் நம் சார்ந்த பிரச்சனை இருக்கிறது.

49) சனி ராகு வலிப்பு உள்ளவர், உயரத்தில் இருந்து விழுந்தவர், வட்டி தொழில் செய்தவர், பல் செட் வைத்தவர் நரம்பு மாத்திரை சாப்பிடுபவர் வீட்டில் இருப்பார்கள் இரவில் யாரோ பற்களை கடிப்பார்கள், உறக்கத்தில் எழுந்து அழுவார்கள்

50) ஒரே ராசியில் மூன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் இருந்தால் ஜாதகர் பிறரின் வார்த்தைக்கு மதிப்பு தருவதில்லை விதண்டவாதமாக மறுத்து பேசுவார், ஜோதிடம் பார்க்கும் போது கூட பலன்கள் சொல்வதில் ஏற்புடன் இருக்கமாட்டார்,

51) குரு சனி பெரும்பாலும் இக்கட்டான சூழல் வந்தாலும் கூட லீவு எடுக்க மாட்டார்கள்,

52) குரு சனி தனக்கு நெருங்கிய நண்பர்களுடைய தொழிலில் வேலை பார்ப்பார்கள்,

53) குரு சனி வரதட்சனை இல்லாமல் திருமணம் செய்வார்,

54) குரு சனி கணவன் மனைவி இருவருக்கும் இருக்க வேண்டும் இல்லாவிட்டால், சில நாட்கள் கழித்து வாரதட்சனை வருகிறது.

55) குரு கேது. டாஸ்மாக் போன்ற தொழில், அவமானமாக சிலர் கருதும் தொழில்களை செய்வர்

56) குரு சந்திரன் அவமானம், அடுத்தவர் விசயத்தில் மூக்கை நுழைப்பதும் பிறகு வருத்தப்படுவதும் இருக்கும்.

57) குரு அதிகாரம் தனது அல்லது குடும்பத்தினரின் நடத்தை தொடர்பான அவமானங்களை சந்திப்பார்கள்

CamScanner

58) சனி செவ்வாய் செல்போன் வழியாக திடீரென குடும்பத்தில் பிரச்சனை உண்டாகும்

59) செவ்வாய் சனி வேல் என்ற பெயர் இருக்கும், வேல் உருவம் அடையாளம், வேல், திரிசூலம் ஸ்டிக்கர் வீட்டில் வண்டி எதிலாவது ஒட்டி இருக்கும்

60) சனி செவ்வாய் ஆயுதம் கருவிகள் வண்டி வாங்கும் போது பிரச்சனை, காது குத்தும் போது தகறாறு ஏற்படும், இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் கலவரத்தில் முடியும்

61) சனி கேது பிள்ளையார் பெயர், தையல் மிசின், மனநலம் பாதிப்பு உறவுகளில் உண்டு

62) புதன் வீட்டில் (மிதுனம், கன்னி) செவ்வாய் இரத்த சோகை, ஹீமோகுளோபின் குறைபாடு

63) குரு செவ்வாய் சமீபத்தில் ஆவணங்கள் தொடர்பான விசயங்களை செய்திருப்பார்,

64) சனி வக்கிரம் ஜாதகர் பிறக்கும் போது குடும்பம் தாழ்ந்த நிலையில் இருந்து ஜாதகர் வளர வளர உயர்வடைந்து இருக்கும், ஜாதகர் தனது 27-35 வயது வரை தொழில் ரீதியான இன்னல்களை சந்திப்பார், பிற்காலத்தில் நல்ல வருமானம் ஈட்டுவார்

65) அதிகார கிரகங்களின் காரகங்கள் வழியாக ஜாதகர் துன்பத்தை சந்தித்தாலும் மீண்டும் மீண்டும் முயன்றால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும் ,

66) கணவன் மனைவி யாராவது ஒருவர் ஜாதகத்தில் சனி வக்கிரம் இருந்தால் 35 வயதிற்கு பிறகு நல்ல வளர்ச்சி இருக்கும்

67) சுக்கிரன் புதன் திருமணம் செய்பவர் திருமணத்திற்கு முன்பே பழக்கமானவராக இருப்பார், காதல் திருமண வாய்ப்பு அதிகம்,

68) குரு கேது - மூலநோய், ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் அல்லது கலவரமான திருமணம் நடக்கும்

69) குரு சுக்கிரன் இணைவு அல்லது பரிவர்த்தனை எதிலும் நிலையற்ற முடிவு, விடாப்பிடியாக எதியும் செய்வது இல்லை ஒன்றை துவங்கி விட்டு பாதியிலேயே விட்டு விட்டு அடுத்ததை துவங்குவது,

CamScanner

70) குரு சந்திரன் தாய் தந்தை இல்லாமல் ஜாதகர் சிறுவயதில் வேறு ஒருவரிடமும் வளருவார்

71) புதன் அதிகாரம் உள்ள பெயருடையவருக்கு பெண் குழந்தை பிறக்கிறது. அந்த குழந்தை வாழ்க்கையில் சிக்கலை சந்திக்கிறது

72) குரு சந்திரன் குழந்தை வெளி இடம், ஹாஸ்டல் அல்லது பாட்டி, அத்தை சித்தி கைகளில் வளரும்,

73) சனி ராகு மேலே இருந்து விழுதல், வலிப்பு குடும்பத்தில் யாருக்காவது இருக்கும்,

74) சனி ராகு பல்செட், நரம்பு மாத்திரை, தைராய்டு மாத்திரை, பிரசர் மாத்திரை யாராவது குடும்பத்தில் எடுத்து கொள்வாரகள்,

75) சனி+செவ்வாய் உள்ள நபருக்கு அருகில் ஆரம்பித்த வீடு தடை படும்

76) செவ்வாய் மின்சாரம், பொறியியல், ரயில்வே துறை அல்லது அந்த இடங்களின் அருகே இருப்பார்,

77) புதன் அதிகார கிரகமானால் ஜாதகர் இசை ஆர்வம், பாட்டு, நடன பயிற்சி பெறுவார்,

78) மிதுனம், கன்னி, தனுசு மற்றும் மீனம் ராசிகளில் செவ்வாய் இருந்தால் ஜாதகர் ரத்த தொற்றுகளுக்கு ஆளாகிறார், ரத்த கொழுப்பு, உப்பு, சிறு வயதில் சர்க்கரை பிரச்சனைகள் வருகிறது, பெண்களுக்கு ரத்த சோகை, நீர் கட்டிகள் மாதவிடாய் பிரச்சனை இருக்கிறது, இந்த ராசிகளில் செவ்வாய் வக்ரமாகி இருந்தால் குடும்பத்தில் யாருக்காவது ரத்த புற்று இருக்கிறது,

79) செவ்வாய் வக்ரம் மின்சாரத்துறை, கட்டுமான பொருள் விற்பனை, செங்கல் ஜல்லி விற்பனை செகிறார்கள்,

80) சுக்கிரன் அதிகாரம் பெற்றால் அதிக வயதுடைய தாத்தா பாட்டி இருப்பார்கள்,

81) சுக்கிரன் சந்திரன் இடம் மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு விட்டு வருமானம் பெறுவார்கள்,

82) சுக்கிரன் செவ்வாய் இணைவு முன் பற்களில் பிரச்சனை உடைதல்,

83) மகரம், கடகம், விருச்சகம், ரிசபம் ராசி இருந்தால் அவருடைய தாய் தந்தை ஜாதகத்தில் சூரியனுக்கு 1, 5, 7, 9 ஆம் ராசிகளில் சந்திரன் இருக்கும்,

CamScanner

84) குரு சந்திரன் உடல் எடை அதிகரிக்கும்

85) சனி கேது மனநலம் பதிப்புள்ளவர் ஒருவர் குடும்பத்தில் பிறப்பார்

86) சனி செவ்வாய் பாண்டிசேரி மதுரை தொடர்புடைய நபர்களுடன் பழக்கம் உண்டாகும்,

87) சனியுடன் உள்ள கிரகம் வக்கிரம் பரிவர்த்தனை விளிம்பு இதில் எதாவதாக இருந்தால் ஜாதரின் தொழில் வழியாக பலரும் உதவி பெறுகிறார்கள்

88) செவ்வாய் வக்ரம் இரத்த சோகை,

89) செவ்வாயுடன் ஒரே ராசியில் இணைந்து உள்ள கிரகத்தின் சொந்த ராசிக்கு அடுத்த ராசியில், செவ்வாய் அமர்ந்துள்ள ராசியின் அதிபதி வக்ரமாக இருந்தால் ஜாதகர் ஏற்கெனவே திருமணமான ஆணை மணக்க வாய்ப்புள்ளது,

90) செவ்வாய் வக்ரம் தீ மற்றும் எலெக்ட்ரிக் சார்ந்த தொழில் யாராவது இருப்பார்கள், குடும்பத்திதில் யாருக்காவது தீ விபத்து, எலெக்ட்ரிக் சார்ந்த காயம் தழும்புகள் இருக்கும், அதே ஜாதகத்தில் சூரியன் சனி இணைவு இருந்தால் சாக் அடித்து, நெருப்பு விபத்தில் இறந்தவர் குரும்பத்தில் ஒருவர் இருந்திருப்பார்

91) குரு சனி வரதட்சனை இல்லாத திருமணம்

92) குரு செவ்வாய் ஆவணம், செக் மோசடிகளில் சிக்கிக் கொள்வது, பிறருக்கு உதவ ஆவணம் செக் போன்ற வழிகளில் உதவி வழக்குகளையும் ஏமாற்றங்களையும் சந்திப்பது

93) எந்த கிரகம் பரிவர்த்தனை அல்லது வக்ரம் ஆனால் அந்த கிரகத்தின் காரக நோய்க்கு அதிக வீரியம் உள்ள மருந்து சாப்பிட்டு பக்கவிளைவுகள் உண்டாகும்,

94) குரு அதிகாரமாக உள்ளவர்கள் பலவிதமாக வினோதமாக தாம்பத்யம் செய்ய விருப்பம் உடையவர்கள்,

95) குரு சந்திரன் இணைவு உள்ளவர்கள் சிறுவயதில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்கள்,

96) குரு அதிகாரம் ஆனால் தென்னை மரம் உள்ள வீட்டில் இருக்கிறது, குழந்தை பிறப்பு தாமதம், பூர்வீகத்தொழில் வட்டி வரவுசெலவு தொழில் அல்லது பணியில் இருப்பார்கள், அவர்

CamScanner

விட்டில் அவமானமாக எதாவது நடக்கிறது, காதல் தொடர்பாக சிக்கல்கள் வரும்,

97) குரு ராகு ஜாதகர் பிறக்கும் போது குடும்பத்தில் இழப்பு இருந்திருக்கும்,

98) குரு சனி மனநிறைவு மற்றும் நிம்மதி, சுயமரியாதை நிறைந்த வாழ்க்கை,

99) குரு சுக்கிரன் இணைவு படிப்பில் தடை, எந்த செயலையும் தொடர்ந்து செய்வதில்லை எல்லாவற்றையும் பாதியில் விட்டு விடுவது,

100) சுக்கிரன் பரிவர்த்தனை வக்ரம் ஆனால் மனைவியுடன் கருத்து வேறுபாடு பிரிவு,

101) குரு செவ்வாய் இணைவு வழக்குறைஞர் அல்லது அவருக்கே வழக்குகள் வருகிறது, விவாகரத்து ஆகும் எல்லா ஜாதகத்திலும் இந்த இணைவு இருக்கிறது,

102) வக்கிரமான கிரகம் உள்ள ராசிக்கு பின் ராசியில் உள்ள கிரக காரகம் பாதிப்படையும் உதாரணமாக கன்னியில் வக்கிர கிரகம் இருந்தால் சிம்மத்தில் எதாவது கிரகம் இருந்தால் பாதிக்கும்,

103) புதன் வக்கிரம் சகோதரி சிறுவயதில் தவறி இருப்பார். அல்லது கருவில் கலைந்து இருக்கும்,

104) புதன் வக்ரம், பரிவர்த்தனை மற்றும் விளிம்பு நீர்மமான ஒன்றை வைத்து செய்யும் தொழில் உதாரணமாக, மருத்துவம், பால், ஆயில், கெமிக்கல், பெட்ரோல், எண்ணெய், மருந்து, கப்பல், சிமெண்ட், பெயிண்ட், மை, இன்க், தொழிலகள் செய்பவர் குடும்பத்தில் இருப்பார், விஷம் அருந்தி அல்லது நீரில் விழுந்து யாரவது இறந்திருப்பார்கள், இந்த குடும்பத்தில் வழிவழியாக பெண்கள் கஷ்டத்தில் இருக்கிறார்கள்

105) புதனுடன் உள்ள கிரகம் வக்ரம் பரிவர்த்தனை ஆனால் ஜாதகரின் காதலர் அவரை விட்டு விட்டு வேறொருவரை காதலிப்பார்,

106) புதன் வக்கிரம் பரிவர்த்தனை விளிம்பு ஆனால் நிலம் தொடர்பான குழப்பம் வரும்,

107) மருத்துவ தொழிலுக்கு புதன் வக்கிரம் அல்லது பரிவர்த்தனை அல்லது விளிம்பில் இருக்க வேண்டும்,

CamScanner

108) செவ்வாய் வக்கிரம் அல்லது பரிவர்த்தனை கணவனால் தாக்கப்பட்டு மனதாலோ உடலாலோ காயமடைவார்,

109) செவ்வாய் மிதுனம் கன்னி, தனுசு, மீனம் ராசியில் இருந்தால் ரத்தம் தொடர்பான ஆரோக்கிய குறைபாடு உள்ளது, நீரிழிவு நோய் சிறு வயதிலேயே உண்டாகிறது, வீடு கட்டும் பொருட்கள் விற்பனை செய்கிறார்கள்

110) சுக்கிரன் வக்கிரம் அல்லது பரிவர்த்தனை மனைவியால் உடலாலும் மனதாலும் காயப்படுவார்,

111) சுக்கிரன் மீது கோச்சார ராகு, கேது கண் அரிப்பு வலி வீக்கம்,

112) சுக்கிரனுடன் ஒரே ராசியில் இணைந்து உள்ள கிரகத்தின் சொந்த ராசிக்கு அடுத்த ராசியில், சுக்கிரன் அமர்ந்துள்ள ராசியின் அதிபதி வக்ரமாக இருந்தால் ஜாதகர் ஏற்கெனெவே திருமணமான பெண்ணை மணக்க வாய்ப்புள்ளது,

113) சனி வக்கிரம் அருவறுப்பான தொழில்களையும் மனம் ஏற்று செய்வார்

114) ஒரு ஜாதகத்தில் சூரியன் அதிகாரம் பெற்று அதே ஜாதகத்தில் சனி வக்கிரம் அல்லது பரிவர்த்தனை ஆனால் ஜாதகருக்கு வேலையில் திடீரென போராட்டங்கள் ஏற்பட்டு பல பிரச்சனைகளை கடந்து பல வேலைகளை செய்து சொந்தமாக தொழிலில் வந்து அமருவார்

115) குரு சுக்கிரன் இணைவு முக்கியமானவற்றை விட்டு விட்டு தேவையற்ற மற்றவைகளில் ஆசை போகும் கல்வியில் கூட தடைகளை ஏற்படுத்தும், வாழ்க்கையில் அனைத்திலும் தடை என புலம்புவார்,

116) சுக்கிரன் அதிகாரம் ஆனால் தொடர்ந்து பண விசயமாக பதில் தருவது மற்றும் பொய் சொல்வது, போனில் அவர் இல்லை வெளியே போய் இருக்கிறார், என சொல்ல சொல்வது போன்றவை நடக்கும்,

117) சுக்கிரன் வக்கிரம் பரிவர்த்தனை விளிம்பு கண் குறைபாடு, சிலருக்கு பிரசவத்திற்கு பிறகு சுவாசம் மற்றும் கண் குறைபாடு,

118) ஈஸ்வரி குழந்தை பிறப்பில் சிக்கல் அல்லது குழந்தை வாழ்வில் சிக்கல்,

119) பிரியா, குமார் பெயர்கள் குழந்தை பிறப்பு சிக்கலை குறிக்கும்

CamScanner

120) சரவணன் பெயருள்ளவர்கள் குடும்பத்தில் குடிபழக்கம் உள்ளவர் இருப்பர்,

121) சரவணன் பெயருள்ளவர்கள் நடத்தைகள் தொடர்பான அவப்பெயரை பெறுகிறார்கள்,

122) ராஜேஸ்வரி பெயருடயவரின் குழந்தை பல சிக்கலை சந்திக்கும், பல சமயங்களில் அவரது ஒரு குழந்தையை இழக்க வேண்டி இருக்கிறது

123) குரு புதன் சந்திரன் - பிரியா, குமார், சரண்யா என்ற பெயர் இருக்கும்

124) புதன் தொடர்பான கேள்வி கேட்டால் சமீபத்தில் வீட்டில் சிமெண்ட் வேலை நடந்து இருக்கும், விரல்களில் வெட்டு தழும்பு உண்டாவதும் புதன்

125) செவ்வாய் பிரச்சனை சாய்பாபா வழிபாடு கடன் உடல்நலம் சார்ந்த பிரச்சனை

126) செவ்வாய் புதன் பரிவர்த்தனை சகோதரர் பெயரில் சொத்துகள் இருக்கிறது,

127) குரு மற்றும் சூரியன் பிரச்சனை மகரிஷி வழிபாடு, குழந்தை பிறப்பு தாமதம், குழந்தைகளின் வாழ்வில் சிக்கல்

128) சுக்கிரன், மற்றும் செவ்வாய் பிரச்சனை லிங்க வழிபாடு, தாம்பத்யம், அன்யோன்யம், குடும்ப உறவில் சிக்கல்,

129) ஒரு நாள் முன் பின் தேதிகளில் உள்ள கிரக நிலையில் எந்த கிரகம் மாறியுள்ளதோ அது முக்கியமானது,

130) வாக்கியம் திருக்கணிதம் இடையே எதாவது கிரகம் மாற்றம் இருந்தால் அந்த கிரகம் முக்கியமானது,

131) அதிகார கிரகத்துடன் இணைந்துள்ள கிரகம் முக்கியத்துவமானது,

132) ஒரு ராசியின் விளிம்பில் உள்ள கிரகம் முக்கியத்துவமாகிறது,

133) ஒரு ஜாதகத்தில் அதிகார கிரகத்துடன் கூடியுள்ள கிரகம் அவரை சுற்றி குடும்பத்தில் உள்ளவர்கள் ஜாதகத்தில் முக்கியத்துவமாக இருக்கும்,

134) சனி+ செவ்வாய் - முருகேஷ், மணி, பாண்டி - ட்ரைவர், எலெக்ட்ரிக் தொழில்,

135) ஜெய என்ற பெயர் உள்ளவர்களுக்கு பெண் குழந்தை பிறக்கிறது

CamScanner

136) ஜெய என்ற பெயருள்ளவர்கள் வீட்டில் மருத்துவம் தொடர்பான பணிகளில் இருப்பார்கள்,
137) அபி என்ற பெயர் குழப்பமான வாழ்க்கை ராகு தன்மை
138) கார்த்திக் என்ற பெயர் திருமணம் தாமதம்
139) கார்த்திகா என்ற பெயர் குழந்தை பிறப்பு தாமதம், இல்வாழ்க்கை நிம்மதி இல்லை
140) சரன்யா சர்மிளா குழந்தை பிரச்சனை,
141) ராமன் திருமண தடை,
142) கல்பனா வாகன தொழிலில் குடும்பத்தில் இருப்பார்கள்
143) லாவன்யா அயல்நாடு, குடும்ப உறவில் சிக்கல், தேவையற்ற உறவு,
144) விமலா டெக்ஸ்டைல்ஸ், எலெக்ட்ரிக் பணிகளில் இருப்பார்கள்,
145) சுக்கிரன் பெயர் வந்தால் அவருக்கு வரும் மனைவி வீட்டில் அதிகமாக பெண் குழந்தைகள் இருப்பார்கள்,
146) பாலாஜி என்ற பெயர் உள்ளவர் வீட்டில் உடல் குறை ஒருவருக்கு இருக்கும்
147) சாம், நவீன், வினோத் ராகுவின் பெயர்கள் ஜாதகத்தில் புதன் சந்திரன் இணைவு இருந்தாலும் அந்த பெயர்கள் இருக்கும்
148) மலர்கள் பெயரில் உள்ளவர்கள் குடும்ப வாழ்க்கையில் சிக்கல் மற்றும் பிரிவுகளை சந்திக்கிறார்கள்,
149) சரண்யா ராகு தன்மை, குழந்தை பிறப்பு சிக்கல், தோல்நோய்,
150) சதீஷ் உடன் உள்ளவர் அரசியலில் இருப்பார்
151) கோமதி ஆறுமுகம், அரவிந்த் கண் தெரியாதவர் வீட்டில் இருப்பர்
152) அசோக் இரண்டு வாழ்க்கை,
153) தினேஷ் ஆட்டோ மொபைல், உணவு, செல்போன் மற்றும் அயல் நாட்டு பணிகள்,
154) சுக்கிரன் புதன் தெரிந்தவருடன் வாழ்க்கை, காதல்
155) சனி கிரகம் குறிக்கும் பெயர்களில் உள்ளவர்கள் பஞ்சாயத்து பணிகளில் இருப்பார்கள்,
156) நாக என்ற பெயருள்ளவர்கள் குடும்பத்தில் மருத்துவத்தில் இருப்பர்கள்

CamScanner

157) அருண், அஜித் என்ற பெயரில் உள்ளவர் குடும்பத்தில் ஒருவருக்கு காலில் பிரச்சனை உண்டாகும்,

158) நிர்மலா என்ற பெயர் உள்ளவர் விட்டில் கால் அல்லது கை வைரல் பிரச்சனை உள்ளது,

159) ஆசிரியர்களுக்கு கர்பபை நோய் ஏற்படும்

160) புறா வளர்ப்பு புற்று நோய் குடும்பத்தில் ஒருவருக்கு வரும்.

161) மீனத்தில் ஒரு கிரகம் கிரகம் இருந்தால் மீடியா போன்ற விளம்பர துறை, மைக் செட், பேனர், பிரிண்டிங், மக்கள் தொடர்பு, மற்றும் வங்கி போன்ற பொருளாதாரம் சார்ந்த தொழில் செய்பவர்களாக ஜாதகரோ அல்லது அவரது குடும்பத்தில் யாரோ இருப்பார்கள்,

162) ஸ்ரீதர் என்ற பெயர் உள்ள குடும்பத்தில் அகிலா, லோக பார், தரணி போற உலகத்தினுடய பெயர் இருக்கும்

163) பூமியின் பெயர்களில் அதாவது அகில், பார், லோக போன்ற பெயர்களில் உள்ளவர்களுக்கு ஒருமுறையாவது கருக்கலைதல் உண்டாகும்,

164) ஒரு ஜாதகத்தில் பரிவர்த்தனை இருந்தால் வாழப் போன இடத்தில் இருந்து ஊருக்கு திரும்பி வந்து வாழ்கிறார்கள்,

165) ஒரு கிரகத்திற்கு அடுத்த ராசியில் ராகு அல்லது கேது இருந்தாலும் அந்த கிரகத்தின் காரக வழியில் ஜாதகர் சிரமத்தை சந்திப்பார்,

166) தசாவோ புத்தியோ மாறும் போது தொழில் மாறுகிறது தசா அல்லது புத்தியின் கிரக காரக தொழிலை ஜாதகர் அந்த காலத்தில் செய்கிறார்,

167) கிரகங்கள் பரிவர்த்தனை இருந்தால் அதிக வீரியமான மருந்துகளை தவிர்க்க வேண்டும் பக்க விளைவுகள் உண்டாகும்,

168) மீனத்தில் ஏதவது கிரகம் இருந்தால் மீடியா, கேமரா, வங்கி, விளம்பரம், ஆன்லை டெலிவரி பணிகள்

CamScanner

கல்வியை அறிதல்

பொதுவாக தனது குழந்தைகள் எதிர்காலம் குறித்து கவலை அடையாத பெற்றோர்கள் இல்லை என்றே கூறலாம், அதிலும் இந்த சமூக சூழலில் மனிதனின் வாழ்க்கை என்பது அவனின் கல்வியை வைத்தே நிர்ணயிக்கப் படுகிறது என்பதால், ஒவ்வொருவருக்கும் தனது குழந்தையின் எதிர்காலம் குறித்த கவலை வரும் போதெல்லாம் முதலில் வரும் குழப்பம் மற்றும் பயம் அவர்களின் கல்வியை பற்றியதுதான்,

ஆனாலும் ஒரு மனிதனின் எதிர்காலம் என்பதும், அதில் கல்வியின் முக்கியத்துவம் என்பதும் மிக முக்கியமானதாக இருப்பினும் இந்த கல்வி என்பது பல்வேறு காரணிகளை மையமாக கொண்டுள்ளது, இதனை தீர்மானிக்க நாமும் கூட பல்வேறு கோணத்தில் தேடுதலை செய்ய வேண்டியது மிக அவசியமானதும் கூட, எனவே ஒரு ஜாதகத்தில் ஒருவரது கல்வி என்பது அவரது குணம், ஆசை, அவர் செல்லவுள்ள தொழில் அவரது பொருளாதர நிலை என பல்வேறு வகையில் கவனிக்கப் படவேண்டிய ஒன்றாகும், இருப்பினும் பொதுவாக, அதிகமாக இந்த கல்வியானது புதன் என்ற கிரகத்தை சார்ந்தே கணிக்கப்படுகிறது,

இயற்கையாகவே நமது விதி நம்மை வழிநடத்திச் செல்லும், எனவே நமது ஆசைகளை எல்லாம் குழந்தைகளின் மீது ஏற்றி, நமக்கு நடக்காததை எல்லாம் குழந்தைகளை வைத்து அனுபவித்துப் பார்ப்பது சிலருக்கு இயல்பாக இருக்கும், அந்த சிந்தனைகளை ஓரம் வைத்துவிட்டு, உங்கள் குழந்தைகளின் ஆசையை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள், பிறகு அவர்கள் ஜாதகத்தை எடுத்துக்கொண்டு இந்த நூலின் உதவியுடன், ஒரு நிம்மதியான முடிவுக்கு வாருங்கள்,

அதற்கு முன்பு விதியின் மீது நம்பிக்கை வையுங்கள், ஒரு குழந்தையின் வாழ்க்கை மற்றும் அதன் கல்வி எல்லாமே பிறக்கும் போதே தீர்மானிக்கப் பட்டது, இன்னும் சொல்லப் போனால் அதற்கும் முன்பே தீர்மானமானது எனவே அதிகமாக குழப்பிக் கொள்ளாமல் முடிவுக்கு வரவும், இந்த நூல் தங்களுக்கு உதவும் வகையில்

CamScanner

அமைய வேண்டும் என்று இயற்கை உண்மையிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்,

ஜோதிடத்தில் மிக முக்கியத்துவம் வாய்த்த ஒரு சொல் உண்டு 'காலதேசவர்தமானம்'இந்த சொல் குறிப்பது எந்த வித பலனாக இருப்பினும், எவ்வளவு நுணுக்கமாக ஜாதகத்தை பார்த்தாலும் அதனுடன் காலத்திற்கு, தேசத்திற்கு, சமூக மாற்றங்களுக்கு ஏற்றாற் போலவும் உத்திகளை கையாள வேண்டும், 1980 காலகட்டத்தில் அனேகமானோர் கற்றது தொழிற்கல்விதான் அதாவது எதோ ஒரு சான்றிதழைப் பெற்றுக் கொண்டு பணியை தேடி பெற்றனர், அப்போது குழந்தையாக உள்ள யாரிடம் கேட்டாலும் இஞ்னியரிங், டாக்டர் படிக்க போவதாக கூறுவார்கள், ஆனால் சமீப காலத்தில் அவை எல்லாம் சாதாரண கல்வியாக மாறி விட்டது, மேலும் சான்றிதழ் சார்ந்த தொழிற் கல்விகளுக்கு இப்பொழுது பெரிய அளவில் வரவேற்பு இல்லை, அனைவருக்கும் எதாவது ஒரு பட்டப்படிப்பை முடித்து விட வேண்டும் என்று ஆசை, எனவே தற்போது உள்ள சமூகம் கல்வியை எப்படி அணுகுகிறது என்று புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் இந்த நூலை பயன்படுத்த வேண்டும்,

ஜோதிடத்தில் வித்யா ஸ்தானமாக 12 வீடுகளுமே கருத்தில் கொள்ளப் பட்டுள்ளது, லக்னம் என்பது உடல்வலிமையை வளர்த்தெடுக்கும் வித்தைகளையும், இரண்டாம் வீடு தர்க்க சாஸ்திர வித்தைகளையும் அதாவது வாதம் செய்வதற்கான வித்தைகள், மூன்றாமிடம் லோகாதாய விருத்தி மற்றும் போகசுகங்களை அனுபவிக்கதக்க உத்திகளை கற்கும் வித்தையாகவும், நான்காமிடம் ஞானத்தினை போதித்து அஞ்ஞானத்தை போக்கும் வித்தையாகவும், ஐந்தாமிடம் பூர்வகலைகளை கற்றறிதல் மற்றும் தர்மம் சார் வித்தையாகவும், ஆறாமிடம் என்பது நீதி குறித்த வித்தை, ஏழாமிடம் வசிய வித்தைகள், எட்டாமிடம் யுத்த வித்தைகளையும், ஒன்பதாமிடம் தன்னை உணர்தல், பத்தாமிடம் வினை சார் வித்தைகளையும், பதினொன்றாமிடம் ரசவாதங்களையும், பன்னிரண்டாம் வீடு சமாதி வித்தை அதாவது சித்தி வித்தையான சாகாகல்வியையும் கூறும்,


CamScanner

ஆனால் நாம் தற்போது கற்கும் கல்வியானது மேற்கண்டவற்றில் மூன்றாமிடத்தின் வழியாக அறியும் லோகாதாய விருத்தி மற்றும் போகசுகங்களை அனுபவிக்கதக்க உத்தியாக மட்டுமே உள்ளது, எனவே கால புருசாத்தத்தின் படி மூன்றாமிடத்தின் கோளான புதனே வித்யா காரகனா எடுத்துக் கொள்கிறோம்,

ஒரு மனிதனின் சூழலும் கல்வியில் அவனது உயர்வுக்கு மிக முக்கிய காரணம் ஆகையால் சிலருக்கு குறைவான வயதிலேயே பணிக்கு செல்லும் தேவையோ அல்லது வாய்ப்போ அமையுமானால் அவரது கல்வி தடை படலாம், மேலும் குடும்பத்தில் சிலர் இல்லாமையால் வருமானம் ஈட்ட வேண்டிய அவசியம் வரலாம், எனவே இவைகளை சார்ந்தும் ஜாதகத்தை காண வேண்டும், **பொதுவாக குரு+சனி, சூரியன்+சந்திரன், புதன் +ராகு, புதன்+கேது இது போல இணைவுகள் ஜாதகர் தொடர்ந்து கற்பதை தடுக்கிறது, இதில் புதனுடன் குரு, சுக்கிரன் மற்றும் சூரியன் இணைவு ஓரளவு தடையை கடக்க வைக்கிறது, பொதுவாக புதனுடன் குரு, சுக்கிரன் சிறந்த கல்வியை தரும்,**

நாம் புரிந்து கொள்ள வேண்டியது எந்த ஜாதகமானாலும் அதில் புதன் உள்ள ராசி எது என்றும், மேலும் புதனுக்கு வலிமை அளிக்கும் கிரகங்கள் எவை என்றும், அவ்வாறு வலு சேர்ப்பதால் அந்த ஜாதகரின் கல்வி எப்படி அமையும் என்றும் காணலாம்.

இங்கு இணைவு என்பது ஒரே ராசியில் இருப்பதும் , புதன் உள்ள ராசியில் இருந்து 1,3,5,7,9,11 ஆம் ராசிகளில் இதை ஏக பாலின ராசிகள் என்றும், ஏக வர்க்க ராசிகள் என்றும், ஏக படை ராசிகள் என்றும் கூறுவர், இங்கு குறிபிட்டுள்ள ராசிகள் ஒன்றுவிட்டு ஒன்றாக இருக்கும், நீங்கள் காணவுள்ள ஜாதகத்தில் புதன் உள்ள ராசியை ஒன்று என எடுத்துக் கொள்ள வேண்டும், அதிலிருந்து எண்ணும் போது வரும் 3,5,7,9,11 ஆம் ராசிகளை குறித்துக் கொண்டு, புதன் உள்ள இராசி மற்றும் 3,5,7,9,11 ஆம் ராசிகளில் எந்தெந்த கிரகங்கள் உள்ளனவோ அதற்கேற்ப ஜாதகரின் கல்வி அமையும், உதாரணமாக கீழே உள்ள ஜாதகத்தை பாருங்கள்



மேலே காட்டப் பட்டுள்ள ஜாதகத்தில் புதன் மேசராசியில் உள்ளது, எனவே முதலில் மேச ராசியில் புதன் உள்ளதற்கான பலனை படித்து தெரிந்து கொள்ள வேண்டும், அதற்கு அடுத்தபடியாக புதனுடன் சூரியன் இணைவு பெற்றுள்ளது எனவே கிரக இணைவு பலன் பகுதியில் சூரியன் இணைவுக்கு உள்ள பலனையும் பார்த்துக் கொள்ளவும், அடுத்து 7 ல் சனி எனவே சனி இணைவுக்கான பலனையும் பார்க்கவும், அடுத்ததாக புதனுடன் சூரியன், சனி இணைவுக்கான பலனைக் காணவும், அடுத்தபடியாக புதனுக்கு 3,5,7,9,11 ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களின் இணைவு பலனை தெரிந்து கொள்ளவும்,

- **இதில் கவனிக்க வேண்டியது ராகு மற்றும் கேதுவுக்கு 3,7,11 ஆம் இணைவு பார்க்க தேவையில்லை.**
- **எந்த கிரகமாக இருந்தாலும் புதன் உள்ள இராசியில் இருந்து 3,11 ஆம் ராசிகளில் இருக்குமானால் அது புதனுக்கு 50% தன்மையயே வழங்கும்,**

அதன் படி பார்க்கும் போது நாம் இந்த ஜாதகத்திற்கு கீழ்கண்ட முடிவுக்கு வரலாம்,

- மேச ராசியில் புதன்,
- புதனுடன் சேர்ந்த சூரியன்,
- புதனுக்கு 7 ல் சனி,

CamScanner

➤ புதனுக்கு 9 ல் ராகு. (50%)

இவை அனைத்திற்குமான பலன்களை வாசித்து அதில் பொதுவான ஒரு துறையில் கல்வி அமையும் என்ற முடிவுக்கு வர வேண்டும்.

மேற்கண்ட ஜாதகர் அரசியல், சமூகம் பற்றிய கல்வி கற்பார்.

இதைபோல நீங்கள் காணவுள்ள ஜாதகத்தில் முதலில், புதன் வக்ரமாக உள்ளதா என்றும், அடுத்து பரிவர்த்தனை அடைந்துள்ளதா என்றும் காண வேண்டும், அவ்வாறு இருந்தால் கல்வியில் ஏற்ற இறக்கங்கள் நிச்சயமாக உண்டாகும், இருப்பினும் இறுதியில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்,

அடுத்ததாக புதன் உள்ள ராசியின் அடிபடையில் கிழுள்ள பலன்களை பார்த்து குறித்துக் கொள்ளவும்.

மூன்றாவதாக புதன் உள்ள ராசிக்கு 1,5,7,9, ஆம் ராசிகளில் உள்ள கிரகங்களை குறித்துக் கொள்ளவும், 3,11 ராசிகளில் உள்ள கிரகங்கள் சிறிதளவு மட்டுமே இணைவு பெறும் அதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம், அவ்வாறு கண்ட கிரகங்களை கிழே உள்ள பலன்களோடு பொருத்திப் பார்க்கவும், சிலருக்கு மூன்றுக்கும் மேற்பட்ட கிரகங்கள் இணைவு பெறும் அப்போது அந்தந்த கிரகங்களுக்கான இணைவுகளை வைத்து, அதில் பொதுவானவற்றை எடுத்துக் கொள்ளவும்,

பொதுவாக ஜோதிடத்தில் "யோகம்" என்ற சொல் உண்டு, அதற்கு பொருள் இணைவு என்பதாகும், அதன் அடிப்படையில் ஒரு ராசி சக்கரத்தில் பல இணைவுப் புள்ளிகள் உள்ளன, அவற்றை கேந்திரம், திரிகோணம், பணபரம், உபஜெயம், அபோக்லிபம் ... இன்னும் பல பெயர்களில் குறிப்பார்கள் இவை உலகலாவிய ஜோதிடத்தின் ஆதி அடிப்படை, அனைத்து நாட்டு ஜோதிடமுறைகளிலும் இதுவே அடிப்படை, இவற்றை ஆங்கிலத்தில்

CamScanner

opposition, trine, square, sextile, semi sextile, conjuction, quincunx, quintile, septile, semi square, novile, என்ற பல்வேறு யோக புள்ளிகள் உள்ளன, இவை அனைத்தும் ராசி சக்கர அடிப்படை வடிவமைப்பு கோட்பாடுகளின் நீட்சிதான், உலகம் முழுமையிலும், இதுதான் அடிப்படை ஜோதிட கோட்பாடு அதன் அடிப்படையில் நாமும் அந்த யோகபுள்ளி அடிப்படையில்தான் பலன் காண்கிறோம், இந்த புள்ளிகளில், குறிகாட்டிகளான கிரகங்களின் நிலையைக் கொண்டு பலன் காண்கிறோம், எனவே ஒரு ஜாதகத்தில் புதன் உள்ள நிலை அதனை இயக்கும் கிரகங்களின் குணத்தின் அடிப்படையில் இந்த நூலில் பலன் அளிக்கப்பட்டுள்ளது,

ஒவ்வொரு ராசிகளிலும் புதன் இருக்கும் பலன்கள்

மேச ராசியில் புதன் இருந்தால்:

இயந்திர நுட்பம் மற்றும் மருத்துவக்கல்வி. வேளாண்மை, அரசியல்

ரிசபத்தில் புதன் இருந்தால்;

பொருளாதாரம், வணிகவியல், உணவுசார் கல்வி, கணிதவியல்,

மிதுனத்தில் புதன் இருந்தால்:

கணிதம், கணினி பொறியியல், வணிகவியல், கல்வித்துறை,

கடகத்தில் புதன் இருந்தால்:

செவிலியர், கலை, இலக்கியம், உணவு சார் கல்வி, வேளாண்மை.

சிம்மத்தில் புதன் இருந்தால்:

அரசியல், மனிதவள மேலாண்மை, மருத்துவம், சமூக கல்வி, பொருளாதாரம்,

CamScanner

கன்னியில் புதன் இருந்தால்;

கணிதம், கல்வித்துறை, கணினி பொறியியல், மின்னணுவியல், வணிகவியல், சட்டம்.

துலாமில் புதன் இருந்தால்;

வேற்றுமொழி இலக்கியம், ஊடகவியல், ஒப்பனையியல், கலை, வணிகவியல், தாதுப் பொருள் சார் கல்வி

விருச்சிகத்தில் புதன் இருந்தால்:

இயந்திர நுட்பம், மருத்துவக்கல்வி, ரசாயனம், சமூகவியல், மேலாண்மை, வேளாண்மை

தனுசுவில் புதன் இருந்தால்;

மனிதவள மேலாண்மை,பொருளாதாரம், வேதம், கணிதவியல், மனோதத்துவம்.

மகரத்தில் புதன் இருந்தால்;

ரசாயனம், அன்னிய வழிக் கல்வி, வேளாண்மை, கனிம அறிவியல், வேதியியல்,

கும்பத்தில் புதன் இருந்தால்;

ஆய்வுக்கல்வி, மனோதத்துவம், சட்டம், தத்துவம், மரபுசார் மருத்துவம்.

மீனத்தில் புதன் இருந்தால்;

பொருளாதாரம், நிதிமேலாண்மை, மனிதவளம், வணிகம்.

புதனுடன் இணைவு பெற்ற கிரகங்களால் உண்டாகும் கல்விகள்

புதன், சூரியன்

அரசியல், மனிதவளம், மருத்துவம், அதிகாரம் சார்ந்தகல்வி, சமூக கல்வி, சட்டம், மற்றும் ஆசிரியருக்கான கல்விகள்

CamScanner

புதன், சந்திரன்

கலை, உணவு உற்பத்தி கல்வி, போக்குவரத்து தொழில் நுட்பம், மனோதத்துவம், வேளாண்மை, கட்டிடக் கலை, செவிலியர், துப்புரவு மற்றும் மேலாண்மை,

புதன், செவ்வாய்

பொறியியல், காவல் பணிக்கான கல்வி, மருத்துவம், இயற்பியல்,

புதன், சுக்கிரன்

ஒப்பனை, ஆடை ஆபரனம் உற்பத்திக் கல்வி, டெக்ஸ்டைல்ஸ், விளம்பரம், செய்தித் துறை, ஏற்றுமதி, வணிகம், தொல்பொருளியல்,

புதன், குரு

நிதிமேலாண்மை, மனோதத்துவம், சட்டம், வேதம், தத்துவவியல், நிதி மற்றும் பொன் மதிப்பீடு மற்றும் ஆலோசனை வழங்கும் கல்வி,

புதன், சனி

வணிகம், கனிமவளம், தொழிற்கல்வி.

புதன், ராகு

புகைப்பட நுட்பம், கணினி, மின்னணுவியல், வேறுமொழி இலக்கியம், ஜோதிடம், மனோ தத்துவம்,

புதன், கேது

சட்டம், மரபுசார் தொழில் சார்ந்த கல்வி, மருந்துவம், சாஸ்த்திரம், பதப்படுத்துதல்

புதன், சூரியன், சந்திரன்

சமூகவியல், செவிலியர், அரசியல் பொருளாதரம், கலை, ஹோட்டல் மேனேஜ்மெண்ட், வேளாண்மை

புதன், சூரியன், செவ்வாய்

கணினி பொறியியல், கட்டிட பொறியியல், மனிதவள மேலாண்மை

புதன், சூரியன், சுக்கிரன்

கப்பல் பொறியியல், மின்னணுவியல், நகை மதிப்பீட்டாளர், பொருளாதாரம்,

புதன், சூரியன், குரு

மின்னணுவியல், பொருளாதாரம், கல்வியியல்

புதன், சூரியன், சனி

அரசு பணிக்கான கல்வி, சட்டம், மின்னணுவியல்

புதன், சூரியன், ராகு

விமான பொறியியல், வேதியியல், ரசாயனம்,

புதன், சூரியன், கேது

சட்டம், சாஸ்திரம், ஆய்வுக்கல்வி,

புதன், சந்திரன், செவ்வாய்

கப்பல் பொறியியல், சமயற்கலை, வேளாண்பொறியியல், மருத்துவ ரசாயனம், கட்டிட பொறியியல்,

புதன், சந்திரன், சுக்கிரன்

வாகனப்பொறியியல், அழகுக்கலை, இசை, இலக்கியம், பொருளாதாரம், கட்டிட வரைகலை,

புதன், சந்திரன், குரு

கலை, மனோதத்துவம், பொன் மதிபீட்டாளர், ஆசிரியருக்கான கல்வி, பொருளாதாரம், கணக்கியல், ரசாயனம், செவிலியர்

CamScanner

புதன், சந்திரன், சனி

கட்டிடபொறியியல், உணவு சார் கல்வி, ஹோட்டல் மேனேஜ்மெண்ட், மின் கல்வி

புதன், சந்திரன், ராகு

மனோ தத்துவம், கட்டிட வரைகலை, வணிகம்,

புதன், சந்திரன், கேது

அயல் நாட்டுக்கல்வி, இசை, மின்னணுவியல்,

புதன், செவ்வாய், சுக்கிரன்

கட்டிடக்கலை, பொறியியல், கணினி பொறியியல், நிர்வாகம்,

புதன், செவ்வாய், குரு

இந்திய அரசுப் பணி, மருத்துவம்,

புதன், செவ்வாய், சனி

கணினி, மின்னணுவியல், சட்டம்

புதன், செவ்வாய், ராகு

பொறியியல், அறுவைசிகிச்சை மருத்துவம், ரசாயனம்

புதன், செவ்வாய், கேது

மருத்துவம், பொறியியல்,

புதன், சுக்கிரன், குரு

வேற்று மொழி இலக்கியம், மனோதத்துவ மருத்துவம், நிதி கணக்காளர், நீதித்துறை, பொருளாதாரம்,

புதன், சுக்கிரன், சனி

பொறியியல், சட்டம், தொழிற்கல்வி

CamScanner

புதன், சுக்கிரன், ராகு

மின்னணுவியல், நிதி மேலாண்மை,

புதன், சுக்கிரன், கேது

சட்டம், கணினி

புதன், குரு, சனி

மனிதவளம், மனோ தத்துவம், கணினி

புதன், குரு, ராகு

வேதக்கல்வி, மரபுசார் தொழிற்கல்வி,

புதன், குரு, கேது

மருத்துவம், ஆலோசனை அளிக்கும் கல்வி, சாஸ்திரம், சட்டம்

புதன், சனி, ராகு

வணிகம், ஊடகம் சார் கல்வி, புகைப்படக் கல்வி, அச்சு கல்வி,

புதன், சனி, கேது

சட்டம், தத்துவம், ரசாயனம்.

இதைக்கொண்டு ஜாதகர் என்ன கல்வி கற்பார் என அறியலாம், மேலே குறிப்பிட்டுள்ள புதனுடன் இணைவு பெற்ற கிரக அடிப்படையிலும் அந்த குறிப்பிட்ட கிரகங்கள் அதிகாரம் பெறும் நிலையை வைத்தும் கல்வி பற்றி கூறலாம்,

ராஜநாடி அதிகாரகிரகம்
மருத்துவ ஜோதிடம்

நோய்களை முக்கிய பிரிவுகளாக மூன்றாகப் பிரிக்கலாம்,

மரபுசார்ந்த நோய்

வாழ்க்கை சார்ந்த நோய்

காரணங்கள் அறிய இயலாத நோய்

முதல் பிரிவான மரபு சார்ந்த நோய் என்பதும் மிக முக்கியமாக மூன்றாக பிரிகிறது. இந்த நோய்கள் மரபு வழியாக அதாவது தாய் தந்தை வழியாகவும் அவர்கள் வம்சத்தில் யாரோ ஒருவருக்கு உள்ள நோயாகவும், அவர்கள் செய்த பாவ புண்ணிய நிலைகளுக்கு ஏற்பவும் வருகின்றது.

சனி - நிதானமாக வளரும் நோய்கள்

சூரியன் - திடீரென தெரியவரும் நோய்கள்

செவ்வாய் - தொற்றுதலால் வருவது போல இருக்கும் நோய்கள்.

இந்த நோய்களின் அறிகுறிகளாக இரட்டை குழந்தை பிறப்பது. தலை, மூளை, முதுகுத் தண்டு தொடர்பான மற்றும் கால் கை எலும்புகள் விபத்துகளினால் நொறுங்குவது. தற்கொலை செய்வது போன்றவைகளாகும். இந்த பிரிவின் தன்மையில் வரும் நோய்கள் குணமடையாத தீராத வேதனையை தருகிறது. மேலே கொடுத்த நோய்கள் பல விசயங்கள் உதாரணமாக விபத்து இதற்கு மரபு காரணமில்லை எனத் தோன்றலாம். ஆனால் ஒரு குடும்பத்தில் அனைவருக்கும் ஒன்று போல மாற்றி நிகழ்வது அனுபவத்தில் தெரிந்து கொள்ள முடிகிறது. இது வம்சாவழி பிரச்சனையாக தொடர்வதால் சனி காரகமாகிறது. இதில் ரத்தம் தொடர்பான நோயாக அல்லது ரணமாக இருந்தால் அதில் செவ்வாய் பங்கு உள்ளது. விபத்து. நொறுங்குதல், தெறித்தல், உடைதல் என இருந்தால் சூரியனாகவும் இருக்கிறது. இதில் குரு ஒரு சிறிய பங்கு எடுக்கிறது. குரு ஒரு வம்சம் மட்டுமே முன்பு உள்ள பிரச்சனைகளை கூறும் அதாவது தாய், தந்தைக்கு இருந்த நோய் தொடர்ச்சியை மட்டுமே குறிக்கும்

அடுத்து வாழ்வியல் சார்ந்த நோய், இதுவும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது,

சந்திரன் - உணவு மற்றும் உட்செல்லும் அனைத்தினாலும் வரும் நோய்கள்

சுக்கிரன் - ஆசை அபிலாசைகள் அது தொடர்பான பழக்கத்தால் வரும் நோய்கள்

புதன் - அடையாளத்திற்காக நமது செயல்களால் ஏற்பட்ட நோய்கள்

இதில் வரும் நோய்கள் வாழ்க்கை முறையை மாற்றுவதால் சரி செய்யமுடியும், மேலும் இந்த நோய்கள் அவ்வப்போது நிலை மாறும் வரும் போகும் இது அச்சத்தினை உண்டாக்காது, இருப்பினும் சில நோய்கள் இதிலும் தொடர்ந்து இருக்கும் சர்க்கரை, (நீரிழிவு) இந்த வகைதான் இருப்பினும் இது ஏறத்தாழ முதல் வகையை சார்ந்தது, காரணம் சந்திரன் குறிக்கும் சில நோய்கள் சூரியன் தன்மையின் பிரதிபலிப்பினால் உண்டாவதால் பாரம்பர்ய அல்லது தீராத நோய்களாக இருக்கிறது,

மூன்றாவதாக அறிய இயலாத நோய்கள், இந்த நோய் உடம்பில் உள்ளதே தெரியாது வேறு ஒன்றினை பரிசோதிக்கும் போது இது வெளிப்படும், மேலும் இதற்கான காரணமும் இதுதான் என கூறமுடியாது, அல்லது திடீரென தப்பிக்க நினைப்பதற்குள் தாக்கத்தை உண்டாக்கும் நோய்கள் உதாரணமாக வேதி பொருள் விபத்து, அணு வெடிப்பு, விச வாயு தாக்குதல், இது போல தப்பிக்க இயலாத விசயம் கொரொனாவைக் கூட சொல்லலாம் இதற்கு பயந்து ஓடக்கூட முடியாது, இந்த நோய்கள் காலத்திற்கேற்ப குணமாகலாம் அல்லது மருத்துவமே கிடைக்காமல் போகலாம், இது காலத்தினால் உருவானது,

ராகு அறிகுறிகள் இருக்காது, ஆனால் வெளியே கூறி தெரிந்து கொள்ளவும் முடியாது,

கேது அறிகுறிகள் அருவருப்பை உண்டாக்கும் படியோ அல்லது மறைக்கும் படியான நோயாகவோ இருக்கும்,

CamScanner

சுருக்கமாக கூறுவது என்றால்.

உற்பத்தி தொடர்பான மற்றும் நிற்காத உறுப்புகள் தானாக இயங்கும் உறுப்புகள், தலையாய உறுப்புகளான மூளை, முதுகுத்தண்டு, இதயம் போன்றவற்றின் இயக்கங்களை குறிப்பது சூரியன்,

உட்செலுத்தும் உணவு போன்றவற்றை சக்தியாக மாற்றுவதற்கான உறுப்புகள், மனம் உணர்ச்சி மிகுந்த உறுப்புகள், மேலும் நீர்மத்தினடிப்படையில் இயங்கும் உயிர் தன்மைகளை சந்திரன் குறிக்கும்,

உடல் மற்றும் மன இயக்கம் மேலும் சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் உறுப்புகள், நரம்பு, புத்தி தகவல் தொடர்பான உறுப்புகள் நமது அடையாளமாக உதாரணம் தோல் போன்ற உறுப்புகள் இவைகள் புதன் கிரகத்தினால் குறிக்கப்படுகிறது. இன விருத்தி தொடர்பான உறுப்புகள், எதிர்பாலினத்தை கவர்வது துவங்கி இணை சேர்வது தொடர்பான அனைத்தும் மேலும் சுரப்பிகள் தொடர்பான அனைத்தும் சுக்கிரனால் குறிக்கப்படுகிறது,

கவச உறுப்புகள், அல்லது இயங்கும் உறுப்புகள், இயந்திரம் போன்ற பொறியியல் போன்ற உறுப்புகள் உதாரணமாக எலும்புகள் அதன் இணைப்புகள், இமை, மார்புக்கூடு, மற்ற பாதுகாப்பு உறுப்புகள் நகம் கடினமான எலும்புகள் இவைகள் அனைத்தும் செவ்வாய் குறிக்கும்,

சதை அறிவு என்ற ஒரு விசயம் உள்ளது, ஒவ்வொரு பகுதி சதையும் ஒவ்வொரு அறிவுடன் இயங்கும், மூளையும் சதைதான், இதயமும் சதைதான், தொடையும் சதைதான் ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொறு அறிவுடன் இயங்குகிறது, இதுபோல தானியங்கி தசைகளால் உருவான உள் உறுப்புகள், இவைகள் குரு கிரகம் குறிக்கும், அதிலும் மிக முக்கிய உறுப்புகள் குரு,

CamScanner

மனிதன் தொழில் செய்ய, தொழில் என்றால் எல்லா செயல்களையும் செய்ய நகர்தல், இயங்குதல், போன்ற கர்மங்களை குறிக்கும் கிரகம் சனி,

உடலில் புரிந்து கொள்ள இயலாத திடீர் விளைவுகளை ராகுவும் கேதுவும் குறிக்கிறது,

கீழே நோய்களும் அதற்கான கிரகங்களும் அளித்துள்ளேன் பயனுள்ளதாக இருக்கும்,

ஒரு ஜாதகத்தில் உள்ள அதிகார கிரகம் எதுவோ அந்த நோய் ஜாதகருக்கு ஏற்படும், மேலும் ஜாதரின் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் இந்த நோயின் தாக்கம் இருக்கும்,

சூரியன்;

வலது கண், கண், எலும்பு, பல், மூளை, கால்சியம் குறை, திருட்டுபயம், பாம்பு, அக்கி, அரசு தண்டனை, ஒற்றை தலைவலி, ரத்தப்போக்கு, உற்பத்தி குறைபாடு, தானாக இயங்கும் உறுப்புகள் குறை,

சந்திரன்'

இடதுகண், வயிறு, மார்பகம், இதயம், நீரிழிவு, மாதவிடாய், சிறுநீர், சளி, சைனஸ், மனம், கொம்புள்ள மிருக தாக்குதல், நீரின் வழியாக ஆபத்து, பெண் போகநோய், தோல் நோய், மண்ணீரல், நுரையீரல் குறைபாடு, சோம்பல்

புதன்;

விரல், இடது காது, தோல், இ,என்,டி பிரச்சனை, மறதி, தோள்பட்டை, தொண்டை, நரம்பு, வளர்ச்சி குறை, சளிக்கட்டி, டிபி,

மூளை தொடர்பு வலிப்பு வழுக்கை விரை வாதம் உறையாய், சிற்றெலும்புகள்

சுக்கிரன்:

இடது நாசி, சுரப்பி, பால்வினை, தொழுநோய், வாதம், கருப்பை, முகம், கண், விந்து சக்கரை நோய், சுரப்பி பாதிப்பு, அந்தரங்க இடத்தில் தொற்று, விந்து வெளியேற்றம், சிறு நீரில் புரதம் வெளியாகுதல்

செவ்வாய்:

நாய்க்கடி, மூத்திர துவாரம், ரத்தம்,பல், இதயம், பருவம், அம்மை, ஃப்ளு, உஷ்ண நோய், தீக்காயம், வெட்டு, ஜாயின்ட் பெயின், குடல்வால், சண்டைகளால் காயம், விபத்து, மார்புபகுதியில் காயம், எலும்பு மஞ்சை

குரு:

மூக்கு, குடல் இறக்கம், வயிறு, கொழுப்பு, காமாலை, உள் உறுப்புகள், மூளை, பாதம், பதட்டம், அடிவயிறு, சில் டிபி, ஈரல் நுரைகள், கொப்புளம், காதுவலி.

சனி:

முடக்கு வாதம், மேலிருந்து கீழே விழுதல், கற்களால் தாக்கப்படுதல், வலது காது, தாடைபிட்டம், வழுப்பு முடி, கால், நரம்பு செவிடு, குருடு, விரக்தியால் மனப்பிறழ்வு, அல்சர், வரண்ட தோல், நாக்கு உளர்ந்து போதல், இடுப்பு கால் எலும்பு, முதுகு தண்டு திடீரென உடைதல் அல்லது சிகிச்சை, உலோகங்களை பொருத்துதல்.

ராகு:

வாய், சுவாசம், ஈரல், மரு, விசிங், காரணம் இல்லாத நோய், காது, தலை, குடல், உடலுக்குள் இரத்தம், காற்று மற்றும் நீர் பாய்தலை

தடுத்தல், விரை விக்கம், புத்தி தடுமாற்றம், ஆவிகள் போன்ற பயம், பால்வினை நோய், ஓரினச்சேர்க்கை,

கேது;

முரட்டுத்தனமாக தாக்கப்படுதலால் காயம், ஆசனவாய், சிக்கலான நோய், வெளி பொருட்களை பொருத்துதல், நகம், மர்ம உறுப்பு, வைரஸ் தொற்று,

இதில் குறிப்பிட்டுள்ள கிரகங்களை அடிப்படையாகக் கொண்டு பெயர்களை வைத்து அதற்கான கிரகங்களை கண்டறிந்து அவருக்கான நோய் குறிப்புகளை கூறலாம், மேலும் ஒருவருக்கான உடல் உபாதைகளை அந்த நோய் வந்த பிறகே கூறுவார்கள், ஆனால் நாம் நமது விதிகளை வைத்து ஜாதகர் பிறக்கும் போதே கூறலாம், ஆனால் அனுபவம் மிகவும் மிக்கியமானது எனவே முடிந்த வரை தொடர்ந்து பயிற்சி செய்வது துல்லியத்தை தரும்,

அதிகாரகிரக ஆரூடம்

உங்களிடம் பலன் கேட்க யார் வந்தாலும் அன்றைய கிரக நிலையில் அதிகாரகிரகம் எது எனப் பாருங்கள், அந்த கிரகங்கள் குறிக்கும் கேள்விகளை மட்டுமே கேட்பார்கள், மேலும் அவர் உடுத்தியுள்ள ஆடைகளின் நிறமும் கூட அதிகார கிரகங்கள் குறிக்கும் நிறங்களில் ஒன்றாகத்தான் இருக்கும், மேலும் அன்றைய அதிகார கிரகத்தின் அனைத்து தன்மைகளும் அவருக்கும் அவருடைய கேள்விகளிலும் இருக்கும்,

ஒருவர் உங்களிடம் ஏதோ ஒரு கேள்வி கேட்டு வருகிறார், அல்லது ஏதோ ஒன்று தொலைந்து விட்டது, அல்லது அது போல ஏதோ ஒரு தேவைக்காக வருகிறார் என்றால் அப்போதைய கிரக நிலைகளை போட்டு அதில் அதிகார கிரகங்கள் எவை என்று பாருங்கள், அந்த கிரகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள இடம், தூரம், வடிவம், எண்,

போன்றவைகளை தொடர்பு படுத்தி பலனாக கூறலாம். உதாரணமாக ஒரு நபர் செல் போனை காணோம் என்று வருகிறார். அப்போது அதிகார கிரகம் சந்திரன் என்று வைத்துக் கொள்வோம். சந்திரன் குறிக்கும் இடம் பிள்ளையார் கோயில், நீர் நிலை, வயல், கடல், உணவகம் என்று இருக்கும் அவரிடம் இதில் உள்ள எந்த இடத்திற்கு போனார் என கேட்டு, அதன் பிறகு அந்த இடத்தில் இடது புற ஜன்னல் என்று உள்ளதால் அதை கூறலாம். ஒரு வேளை அதை யாராவது எடுத்து கொண்டு போயிருந்தால் அவர் 15 கி.மீட்டருக்குள் இருப்பார். வாழை அல்லது கரும்புக் காடு அருகே அல்லது முருங்கை மரத்தின் கீழ் இருக்கிறார் சாம்பல் நிற ஆடை என்று கூறலாம். இது போல அனுபவத்திற்கு ஏற்ப பயன்படுத்தவும்.

பலன் கூறும் போது செய்ய வேண்டியவைகள் மற்றும் செய்யக் கூடாதவைகள்

- ஜோதிட பலன் கூறும் போது நமது ஆடைகள் மற்றும் நமது செயல் பாடுகள் மேம்பட்டதாக இருக்கும் படி பார்த்துக் கொள்வது அவசியம்.

- ஜாதகரிடம் நமக்கு தேவையான குறிப்புகளை முழுவதுமாக ஒரே சமயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- ஜாதகரை சந்திக்கும் போது கனிவுடன் உபசரித்து அவருடன் இனக்கமான சூழலை உருவாக்க வேண்டும்.

- ஜாதகர் உங்களிடம் பேசும் போது மனதில் உள்ள பாரங்கள் அகன்றதாக கருதும் வகையில் உங்கள் நடவடிக்கை இருக்க வேண்டும்.

- ஜாதகருடைய வாழ்வில் நாம் அக்கறையுடன் இருந்து அவரது வாழ்க்கை குறித்த உயர்வுகளுக்கான சாத்திய கூறுகளை அவர் புரியும் படி எடுத்துரைக்க வேண்டும்.

CamScanner

- பலன் கூறும் போது ஜாதகருக்கு புரியாத ஜோதிட சொற்களை தவிர்க்க வேண்டும், நாம் பலனை அறிய பயன்படுத்திய விதிகளை ஜாதகருக்கு கூறுவதால் அவருக்கு எந்த பயனும் இல்லை,

- முடிந்த வரை ஒரு நபருக்கு ஜாதகப்பலன் கூறும் சமயத்தில் அந்த ஜாதகரின் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகங்களை பெற்று அதை மேலோட்டமாக பார்ப்பது நமக்கு அதிகமான தகவல்களை அளிக்கும்,

- ஜாதகர்கள் நம்மை நாடி வருவதே தனது வேதனைகளுக்கு தீர்வு தேடித்தான் என்பதால் முடிந்த வரை ஊக்கபடுத்தும் வகையில் பேச வேண்டும்,

- நல்ல பலன்களை மணிக் கணக்கிலும், தீமையான பலன்களை நொடிக் கணக்கிலும் பேச வேண்டும்,

- ஜாதரிடம் பத்து நிமிடங்களுக்கு மேல் பலன் கூற வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அந்த பத்து நிமிடத்தில் நாம் கண்டறிந்த பலனை அவர்களுக்கு புரிய வைக்க எவ்வளவு நேரமும் எடுத்துக் கொள்ளலாம்,

- முடிந்தவரை நேரில் ஜாதகம் பார்க்க வருபவர்களுக்கு தங்களின் முகவரி குறித்துள்ள காகிதத்தில் ஜாதக குறிப்புகளை கொடுத்து அனுப்பவும், பிரிண்டர் இருந்தால் ஒரு பக்கம் ஜாதக குறிப்பை அவர்களுக்கு வழங்கலாம், அதற்கு ஆகும் செலவை கட்டணத்தில் சேர்த்து பெறலாம், நீங்கள் அளிக்கும் அந்த ஒருபக்க ஜோதிடகுறிப்பை நல்ல தரமான வெள்ளை நிற தபால் உறையில் வைத்து, அந்த தபால் உறையில் தங்களது ஜோதிட நிலைய விலாசத்தை ஸ்டாம்ப் செய்து வழங்கலாம்,

- முதலில் ஜாதகத்தில் உள்ள கிரக நிலை, ஒவ்வொரு கிரகத்துடன் இணைவு பெற்ற கிரகம், ரீதியாக பலன் கூற வேண்டும், முக்கியமாக ராகு மற்றும் கேதுவுடன் இணைவு பெற்ற கிரகங்கள், வக்ரமான கிரகங்கள், பரிவர்த்தனை பெற்ற கிரகங்களை கொண்டு பலனைக் கூறி உறுதிப்படுத்திக் கொண்டு, நடப்பு கிரகங்களைக் கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகள் கடந்து வந்த நன்மை மற்றும் தீமைகள் என்னவெனக் கூறி நடப்பில் உள்ள வாழ்க்கை பற்றிக் கூறி இறுதியாக அடுத்து வரவுள்ள இரண்டு ஆண்டுகளுக்கான பலன்களை கூற வேண்டும், ஜாதகர் ஜாதகம் பார்க்க வந்த்தற்கான காரணமே அடுத்து வரவுள்ள இரண்டு ஆண்டுகளுக்கான நடப்பு பலன்களை குறித்துதான், எனவே வரிசையாக கூறி அவர் வந்ததற்கான நோக்கத்தையும் நாமே கூறி, அது எந்த காலத்தில் நடக்கும் என்பதையும் கூற வேண்டும், பலன்களை கூறி முடித்தவுடன் உங்களுக்கு உள்ள கேள்விகளை கேளுங்கள் என அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்,

- நாமே சதா பேசிக்கொண்டே இருக்கக் கூடாது, வந்தவர்களுக்கு பேச அதிகமான அவகாசம் கொடுக்க வேண்டும், அவர்கள் பேசுவதை நிதானமாக கவனிக்க வேண்டும், அவர்கள் பேசுவதை முழுவதுமாக கேட்டு உள்வாங்கிய பிறகு உங்கள் கருத்துக்களை, பலன்களை கூற வேண்டும்,

- சிலர் முக்கியமான தேவைகளை விட்டு விட்டு தேவையற்ற விசயங்களை மட்டுமே கேட்டுக் கொண்டிருப்பார்கள், இது போல பேசுபவர்கள் பெரும்பாலும் ஜாதகருடன் வந்த மற்ற நபர்கள், வயதான பெண்கள், எதிலாவது ஜோதிடத்தை படித்து அதை அரைகுறையாக தெரிந்து கொண்ட நபர்கள் இருப்பார்கள், ஒன்று அவர்களை உங்களது ஆளுமை திறனால் அமைதி படுத்த வேண்டும், இல்லாவிட்டால் ஜாதகருடன் தனியாக பேச வேண்டும் என்று கூறி அவர்களை

வெளியே அமரச் செய்யாலாம், காரணம் இவர்களால் ஜாதகர் ஜாதகம் பார்க்க வந்ததன் நோக்கமே கெட்டுப் போகும்,

- ஜாதகர்களுக்கு சில பலன்களை எடுத்துக் கூறும் போது அவர்களுக்கு அது புரியாமல் போகலாம், நாம்தான் அதை வெறுப்படையாமல் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும், ஏனெனில் அதில் குழப்பம் உள்ளதால்தானே ஜாதகம் பார்க்கவே வந்துள்ளனர், அவர்களுக்கு புரிய வைக்க வேண்டியது ஜோதிடர்களின் கடமை,

- ஜாதகத்தை முழுவது சீர்தூக்கி பார்த்த பிறகு அனைத்து பலன்களையும் ஒன்று சேர்த்து என்ன பலன் என நிச்சயித்த பிறகு பலன் கூற வேண்டும், அவசர அவசரமாக பலன் கூறக்கூடாது, பார்த்த மாத்திரத்தில் பலன் கூற அனுபவம் வந்த பிறகு உடனுக்குடனே பலன் கூறலாம் அதுவரை நிதானமாக தீர ஆராய்ந்து நம்பிக்கையுடன் பலன் கூற வேண்டும்,

- நீங்கள் பலன்களை கணிக்கும் வரை எதுவும் பேசாமல் ஜாதகத்தை முழுவதும் அனுமானிக்க சில நிமிடங்கள் எடுத்துக் கொள்வதாக இருந்தால், ஒரு தாளில் குறிப்பு எடுத்துக் கொண்டு பலனை காண வேண்டும், ஏனெனில் நீங்கள் ஜாதகத்தையே அதிக நேரம் பாத்துக் கொண்டு இருப்பதால் அங்கு ஏற்படும் அமைதியான சூழல் ஜாதகருக்கு இறுக்கத்தை உண்டாக்கும், ஒன்று அவருடன் பேச்சு கொடுத்துக் கொண்டே பலனை கணிக்க வேண்டும், அல்லது ஒரு தாளில் எழுதிக் கொண்டே கணிப்பதால் ஜாதகருக்கு ஏதோ கணிதம் செய்கிறார் என்ற எண்ணம் உண்டாகி அந்த இடத்தில் வெறுமையை போக்கும், சிலர் ஜாதகத்தை பெற்றுக் கொண்டு பல நிமிடங்கள் வரை ஜாதகத்தையே வெறித்து பார்க்கிறார்கள், அந்த செயல் ஜாதகருக்கு குழப்பத்தை உண்டாக்கும்,

CamScanner

- ஜாதக நோட்டுகளில் அடித்தல் திருத்தல் செய்வது, துருவ குறிப்புகளை எழுதுவது தவிர்க்க வேண்டும், உங்களுக்கு குறிப்பு எடுக்க வேண்டும் என்றால் தனித் தாளில் எழுதிக் கொள்ள வேண்டும், எக்காரணம் கொண்டும் துருவத்தை வைத்து பலன் கூறுதல் கூடாது, சில ஜாதகர்கள் அந்த ஜோதிடரிடம் போனால், கூட பிறந்தவர்கள் பற்றி கூறுகிறார், நீங்கள் ஏன் கூறவில்லை என்று கேட்கலாம், அவர்களுக்கு அதை அந்த ஜோதிடர் எப்படி கூறுகிறார் என்று எடுத்துக் கூறி புரிய வைக்கலாமே ஒழிய நாமும் துருவத்தை வைத்து மக்களை ஏமாற்றக் கூடாது,

- நமது ஜோதிடம் சொல்லும் அறை வருவோருக்கு ஆறுதலை அளிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும், சிலர் மாய மந்திரங்கள் செய்பவர்களைப் போல தன்னை அடையாளம் காட்ட ஜோதிட நிலையத்தில் பல வித விசயங்களை அமைத்து இருப்பார்கள், அது அவர்களை அமானுஷ்யமாக காட்டினாலும், அந்த ஜோதிடரை ஜாதகர்கள் மந்திரவாதிபோல் நினைத்து வெளிப்படையாக பழக மாட்டார்கள், இது போல ஜோதிடர்களை சமூகம் தன்னில் இருந்து ஒதுக்கியே வைத்திருக்கும், ஆனால் நாம் அவ்வாறு இல்லாமல் ஜாதகருக்கு நெருக்கமாக, அவரின் உறவினர் போன்ற சூழலை ஏற்படுத்துவதன் மூலம் அவருக்கு நெருக்கமாகவும், சமூகத்தில் அந்தஸ்துடன் வாழலாம்,

- இறுதியாக நாம் வாழ்க்கை பற்றி சில கணிதங்களின் உதவியால் அனுமானத்தின் பெயரால் ஆலோசனை வழங்கும் நபர் மட்டுமே என்பதை மறந்து விட்டு, கொஞ்சம் மதிப்பு கிடைத்ததும் தலையில் போய் அமர்வது போல, தன்னை கடவுளின் அவதாரமாக நினைத்துக் கொண்டு விதியையே மாற்றும் வழிகளை கூறுவது போல வந்தவர்களை ஏமாற்றக்கூடாது, காரணம் விதியில் சில சிதறிய துணுக்குகளை மட்டுமே நம்மால் அறிய முடியும், நாம் ஜோதிடத்தில் அறிந்தது சில சதவீதம் மட்டுமே, ஆனால்

அதை அறிந்து கொண்டு வாழ்க்கையை ஆனந்தமாக வாழ வழியை அறிய வேண்டுமே தவிர, விதியை மாற்ற புறப்பட்டால் அனைத்தையும் இழந்து நிற்க வேண்டும், நீங்களே பரிசோதித்துக் கொள்ளுங்கள் உங்கள் அருகாமையில் பரிகாரம் கூறும் மற்றும் பரிகாரங்களை செய்து வரும் ஜோதிடர்களின் குடும்பத்தைப் பற்றி விசாரித்துப் பாருங்கள், அந்த ஊரில் அதிகமான வேதனைகள் அவர் குடும்பத்தில்தான் நடந்திருக்கும், மனைவியை விட்டு பிரிதல், மகன் மகளின் திருமண முறிவு, மனநலம் குறைந்த வாரிசுகள், வாரிசுகளில் பலருக்கு மறு திருமணம் அல்லது தவறான தொடர்புகள், துர்மரணம் என அவர்கள் குடும்பத்தில் அடுக்கடுக்காக துன்பங்கள் மட்டுமே இருக்கும், இது பாவம் செய்ததால் வந்தது என்று கூறவில்லை, ஒரு மனிதன் ஓரளவுக்கு எதிர்மறை சிந்தனைகள் கொண்டிருக்கலாம், ஆனால் பரிகாரம் செய்யும் ஜோதிடர்கள் எதிர்மறை சிந்தனைகளின் மொத்த உருவமாக மாறி விடுவதால் அவர்கள் வாயில் இருந்து முதலில் வருவது தோசம், சாபம், மருந்து, செய்வினை, விபத்து, கெட்டது, கர்மா, விஷ காலம், மரணம் என அவர்கள் சிந்தனை முழுவதும் துர் விசயங்கள் நிரம்பி விடுவதால் அவர்கள் வாழ்க்கையில் அது மட்டுமே நடக்கிறது, ஆனால் நாம் அவ்வாறு இல்லாமல் நம்மை அணுகி வந்த ஜாதகர்களின் வாழ்க்கை மேம்பட ஜாதகத்தில் உள்ள சாத்தியக் கூறுகளை எடுத்துரைத்து அவர்களை ஊக்கப்படுத்த மட்டுமே வேண்டும், தீமையான காலமாக நமக்கு தென்பட்டால் அந்த காலத்தை எடுத்துக் கூறி அந்த சமயத்தில் மிக முக்கிய காரியத்தில் இறங்குதல், தேவையற்ற செயல்களை செய்தல், குடும்பம் சார்ந்த பிரச்சனைகளை பற்றி விவாதித்தல் போன்றவற்றை தவிர்க்கும் படியும், குறைவான சேதாரம் வரும்படி அக்காலத்தை மாற்றி அமைக்க ஆலோசனை அளிக்கலாம், இருப்பினும் விதி மாறாதது, அதனால் ஜாதகர் நொடிந்து விடாமல் மனோதிடத்துடன் இருக்க எச்சரிக்கை விடுக்கலாம்,

- எந்த தொழில் செய்தாலும் நேர்த்தியுடனும், ஈடுபாட்டுடனும், பணம் மட்டுமே பிரதானமாக கொள்ளாமல், தனக்கான பெயரை அத்துறையில் தக்க வைத்துக் கொள்வதில் கவனத்துடனும், புதிய அணுகு முறைகளால் நமது வாடிக்கையாளர்களிடம் நற்பெயரை பெருவதிலும், செய்யும் தொழிலில் நவீன காலத்திற்கேற்ப மாறுபாடு செய்வதிலும், சுய நிறைவுடனும் இருந்தால் வெற்றியும் அதே சமயம் புகழும் வந்து சேரும்,

மஹாதசாவில் அதிகார கிரகத்தின் பலன்கள்

ராஜநாடி முறையில் தசா புத்திகளின் பயன்பாடு கிடையாது, இருப்பினும் மக்களில் பெருபாலானோர் மற்ற ஜோதிடர்களிடம் பழகிய பல விசயங்களை நம்மிடம் கூறி அதில் நமது ஆலோசனைகளை கேட்பது வழக்கம், அது போன்ற நேரங்களில் மஹாதசா காலம் தொடர்பான தகவல்களை தெரிந்து வைத்திருப்பது கூடுதல் பலத்தினை உங்களுக்கு தரும்,

இந்த மஹாதசா பலனை நீங்களாகவே எடுத்தவுடன் கூறத் தேவையில்லை, ஜாதகர்கள் விருப்பத்தின் பேரில் கேட்கும் பட்சத்தில் அவர்களுக்கு பொதுவாக மட்டுமே கூறலாம், பொதுவாக தசா பலன்கள் ஜாதகத்தில் உள்ள பாவக அடிப்படையில் கிரகங்களின் நிலை, அதன் ஆதிபத்தியம் (ஆதிபத்தியம் என்றால் ஒருகிரகம் எந்த வீட்டின் அதிபதி, அந்த வீடு எத்தனாவது பாவம், அந்த பாவத்தின் காரகம் என்ன என்பதை சுருக்கமாக கூறுவதற்கான வார்த்தை ஆகும்) மற்றும் வாங்கிய சாரம் (சாரம் என்பது ஒரு கிரகம் உள்ள நட்சத்திர பகுதி) பார்வைகள், சேர்க்கைகள், பார்த்த சேர்ந்த கிரகங்களின் நிலைகள் போன்ற இன்னும் பல தவல்களின் அடிப்படையில் கூறப்படுகிறது, ஆனால் நாம் அதை எதுவும் காணத் தேவைஇல்லை,

CamScanner

காரணம் நாம் பலன்களை நமது ராஜநாடி விதிகள் அடிப்படையில் பார்க்க முடியும், ஜாதகர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மட்டுமே தசா காலத்தில் நடக்கும் மிக முக்கிய தகவல்களை அதிகார கிரக அடிப்படையில் தருகிறோம்,

சிலருக்கு சந்தேகம் வரலாம் அதெப்படி தசா பலன்கள் பொதுவாக நடக்கும், மேலும் எந்த தசா நடந்தாலும் கல்வி கற்கும் வயதில் கல்வி, அந்தந்த வயதில் காதல், அதற்கெடுத்து திருமணம் குழந்தை மற்ற பல விசயங்கள் வயதின் அடிப்படையில் நடக்கிறது, ஒருவருக்கு ஆகாத திசை குறிபிட்ட வயதில் வந்தாலும் அந்த வயதில் நடப்பது நடக்கிறது, எனவே பாவக ரிதியாக பல குறிப்புகளை வைத்து கூறும் பலன் மட்டுமே நடக்கும் என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை, அனால் நமது அதிகார கிரக அடிப்படையில் கூறும் மஹாதசா பலனானது ஒவ்வொரு கிரகத்தின் தசா புத்தி அந்தர சூட்சும காலங்களிலும் சரியான நிகழ்வுகளை அறிய உதவும், இருப்பினும் அந்தந்த வயதிற்கேற்ப நிகழ்வுகளை சரியாக புரிந்து கொள்வதும் அந்த காலத்திற்கான பலனைச்சொல்வதும் மிக முக்கியமானதும் ஆகும்

அதற்கு முன் இந்த மஹாதசா பற்றிய அடிப்படை தகவல்களை தெரிந்து கொள்வதும் முக்கியமானது, வேத ஜோதிடத்தில் தாஜிகம் எனப்படக் கூடிய காலங்களில் வரிசையாக நிகழும் பலன்களை கூற கோச்சாரம் பயன்படுத்தப் படுகிறது, இருப்பினும் அது லக்னத்தில் இருந்து எந்த விட்டில் ஒரு கிரகம் சஞ்சாரம் செய்கிறது என்ற அடிப்படையிலும் மேலும் சந்திரனுக்கு எத்தைனையாவது விட்டில் கோச்சார கிரகம் சஞ்சாரிக்கிறது என்று மட்டுமே கணகிடப்படுகிறது, பெரும்பாலும் கால அடிப்படையிலான பலன்கள் இந்த தசா கணக்கீடுகள் வழியாகவே அறியப்படுகிறது, இவ்வாறு அறிய உதவும் தசா முறைகள் மொத்தம் 31 வகைகள் மேலும் அங்குமிங்குமாக அதற்கு மேலும் உள்ளன. அவை

அஸ்டோத்தரி தசா, சோதசசோத்தரி தசா, த்வாதசசோத்தரி தசா, விம்சோத்தரி தசா, பஞ்சோத்தரி தசா, ஷதாப்திஹா தசா, சதூரசதி சம தசா, ஷ்ஸ்தி ஹயானி தசா, த்விசப்த்தி சம தசா, சத்

CamScanner

திரிம்ஸ சம தசா, கால தசா, சக்ர தசா, கலசக்ர தசா, த்வாதஸ் ராசித சவ்விய சக்ர தசா, த்வாதஸ் ராசித அபசவ்விய சக்ர தசா, த்வாதஸ் ராசித சவ்விய அபசவ்விய சக்ர தசா, யோகார்த்த தசா, கேந்திராதி தசா, காரக தசா, மண்டூக தசா, சூல தசா, த்ரிகோண தசா, த்ரீக தசா, லக்னாதி ராசி தசா, பஞ்சஸ்வர தசா, யோகினி தசா, பிண்ட அம்ச தசா, நைசர்கிக தசா, சந்தியா தசா, பஞ்சக சந்தியா தசா, தாரா தசா

இவை அனைத்திற்கும் வெவ்வேறு காரணங்களும் கணிதங்களும் உள்ளன, இதில் இவ்வளவு பிரிவுகள் உள்ளது என்பது பெரும்பாலான அனுபவமுள்ள ஜோதிடர்களுக்கு கூட தெரியாது, ஒரு சிலரைத் தவிர பிறருக்கு இவைகளின் கணிதங்களும் தெரியாது, இவைகளின் கணிதங்கள் பற்றி தனியாக ஒரு நூலில் குறிப்பிட முயல்கிறேன்,

இருப்பினும் தற்போது பயன்பாட்டில் உள்ளது விம்சோத்தரி எனப்படும் தசா முறைதான், இதற்கு சமஸ்கிருதத்தில் 120 என்று பொருள், அதாவது 120 ஆண்டுகள் கணிதம் என்பதால் இந்த பெயரால் அழைக்கப் படுகிறது, இந்த முறை இருப்பதிலேயே கணிப்பதற்கு எளிதானது மற்றும் நட்சத்திர பாத கணிதங்களுடன் இருப்பதாலும் சந்திரனின் நிலையில் இருந்து கணிப்பதாலும் இதை பயன்படுத்தி வருகின்றனர், இது சுலபமாக புரிந்து கொள்ளும் கணக்குகளை கொண்ட ஒரு தசா முறையாகும், அவற்றை பற்றி காணலாம், மேலும் லக்னம் போன்றவற்றை பயன்படுத்தாமல் தசா புத்தி பலன்களை எளிதாக அதிகார பலன்கள் அடிப்படையில் எவ்வாறு கூறுவது எனவும் காணலாம், அதற்கு முன் தசா என்பது என்ன, எனவும் அவற்றில் உள்ள அடிப்படை கட்டமைப்பு பற்றியும் அவைகளின் கணித முறைகளையும் காணலாம்,

பொதுவாக ஜோதிடத்தில் அனைத்து கிரகங்களையும் விட சந்திரனுக்கு முக்கியத்துவம் அதிகமாக இருக்கும், காரணம் ராசி மற்றும் நட்சத்திர பிரிவுகள் துவங்கி பல்வேறு அளவீடுகள் சந்திரனை மையமா கொண்டே உருவாகியிருக்கிறது, நாம் காணும் ராசி மற்று நட்சத்திர சக்கரங்கள் பொதுவாக கிரக நிலைகளை வடக்கு உச்சியில்

CamScanner

வெகு தூரத்திலிருந்து பார்ப்பது போன்ற தோற்றமாகும், மற்றொரு பார்வை பக்கவாட்டில் இருந்து பார்ப்பது போல, இதில் கிரகங்கள் சுற்றி வருவது போல தெரியாது மேலும் கீழுமோ அல்லது பக்கவாட்டிலோ நகர்வது போல மட்டுமே பார்க்க முடியும்,

சூரியன் மற்றும் பூமியின் மத்திய ரேகைகளுக்கு மட்டமாக ஒரு தளம் உள்ளதாக நினைத்துக் கொள்ளுங்கள் அதாவது சூரியனின் மேல் பகுதி மற்றும் கீழ் பகுதி தனித்தனியாக பிரிப்பது போல ஒரு ஜவ்வு போல நினைத்துக் கொள்ளுங்கள் அதில் தோசை போல எல்லா கிரகங்களும் மட்டமாக இல்லை, மேலும் கீழும் ஏறி இறங்கி இருக்கிறது, இந்த அளவிட்டையும் சந்திரனின் நகர்வை வைத்துதான் கணிக்கிறோம்,

சந்திரன் ஒரு முறை ராசி கட்டத்தை சுற்றி வர 27.5 நாட்கள் ஏறத்தாள எடுத்துக் கொள்கிறது, அப்படி என்றால் பூமியை சுற்றி வர அத்தனை நாட்கள் ஆகிறது, அதாவது ராசி கட்டம் என்பது பூமியை மையமாக கொண்டு வான் வெளியை சிறு சிறு அளவீடுகளாக பிரித்த பிரிவுகள்தான், அதே போல பக்கவாட்டில் இருந்து இந்த கிரக நகர்வுகளை அளவிடவும் சந்திரனை சார்ந்துள்ளது, இதை படம் போட்டு விளக்கி தனியாக ஒரு புத்தகமாகவே கூறும் அளவுக்கு மிகவும் பெரிய விசயம் இருப்பினும் சுருக்கமாக புரிய வைக்கிறேன்,

சந்திரன் பூமியை சுற்றி வரும் பாதை 5 பாகை சாய்வாக இருக்கிறது, அதாவது சூரிய பரப்பு தட்டிற்கு மேல் பாதியும் கீழ்பாதியும் இருக்கும், இந்த சந்திரப்பாதையில் சந்திரன் சுற்றி வரும், இந்த தட்டுநிலயாக இல்லாமல் மேலும் கீழுமாக ஆடுகிறது, இதற்கு காரணம் பூமியின் தலையாட்டு இயக்கத்தினை சரிகட்ட பூமியின் ஈர்ப்புடன் இணைந்த சந்திரன் பாதை சிறு சிறு சரி செய்தலை செய்கிறது, அதன் அடிப்படையில் இந்த சந்திரப் பாதை 18.6 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட துவங்கிய இடத்தை அடையும், இதன் அடிப்படையில்தான் ராகு, கேது கணிதமும் உள்ளது, சரியாக புரிந்து கொள்ள வேண்டும்,

சந்திரன் பக்கவாட்டில் இருந்து பார்க்கும் போது அதன் பாதை கிடை மட்டத்தில் இருந்து 5 பாகை சாய்ந்துள்ளது, அது மெதுவாக

CamScanner

நகர்ந்து கிடைமட்டத்தினை அடைந்து அதன் எதிர்புறம் சாய்ந்து அந்த பக்கம் 5 பாகை வரை சென்று மீண்டும் கிடை மட்டத்தை அடைந்து பழைய 5 பாகை சாய்வை அடைகிறது. துவங்கிய இடத்தை அடைய 5 பாகை சாய்வில் இருந்து மட்டத்தை அடைந்து -5 பாகை வரை செல்கிறது அதாவது அதன் மொத்த பயணம் 10 பாகை, அடுத்து அங்கிருந்து மீண்டும் 10 பாகையை கடந்து துவங்கிய இடத்தை அடைகிறது, ஆக மொத்தம் 20 பாகை இதை கடக்க ஏறத்தாழ ராகுவின் ஒரு சுற்று அதாவது சந்திரன் மேலிருந்து கீழாக மாறி மீண்டும் தனது நிலையை அடைய 19 ஆண்டுகள் ஆகிறது. 20 பாகையை 19 ஆண்டுகளில் கடக்கிறது. எனவே ஏறத்தாழ ஒரு பாகை ஒரு ஆண்டு சந்திரனின் பக்க வாட்டு நகர்வு, இதை அடிப்படையாக கொண்டுதான் ஒரு பாகை ஒரு ஆண்டு என்பதால் 360 பாகை 360 ஆண்டுகள், எனவும், மற்ற கிரகங்கள் இந்த அடிப்படையில் நகரும் பக்கவாட்டு இயக்க பாகை அடிப்படையில் மொத்தமாக 120 பாகை வரும் காரணத்தாலும் 120 ஆண்டுகள் வந்தது தசா காலமாக கருதுகின்றனர், இதை முழு தகவலுடன் அதற்கான புத்தகத்தில் வெளியிடுகிறேன்,

மேலும் முன்பே பார்த்தது போல கிரகங்களின் வேகத்திற்கேற்ப கிரக காரக மாற்றங்கள் உருவானது. அதாவது விரைவாக நகரும் கிரகம் சந்திரன், நமக்குள் விரைவாக மாறுவது மனம் எனவே சந்திரன் மனோ காரகன், அடுத்த வேகம் புதன் எனவே மனதிற்கு அடுத்த வேகம் புத்தி, அதைப்போல ஆசை சுக்கிரன், அறிவு சூரியன், உடல் செவ்வாய், உள்ளம் குரு, ஜீவனம் சனி என புரிந்து கொள்ளப் படுகிறது, இவை அப்படியே இல்லை, சற்று மாறுபடுகிறது. அதாவது மனித மனதின் மாற்றமும் சந்திரனின் மாற்றமும் சிறு மாற்றத்துடன் இருக்கிறது அதை ஈடுகட்ட மெல்லிய மாற்றமாக அந்த ஜாதகரின் சிந்தையின் மாற்றமாக சந்திர தசா கணிதம் பயன்படுகிறது.

தசா என்பது ஒரு ஜாதகத்தில் அவர் பிறக்கும் போது சந்திரன் உள்ள நட்சத்திரத்தின் அடிப்படையில் இருந்து துவங்கும் அதில் இருந்து அவரின் வாழ்க்கை துவங்குவதாகவும் அடுத்து அடுத்து தசா

குறிப்பிட்ட கணித அடிப்படையில் மாறுவதாகவும் கணிக்கப்படுகிறது. அதைபற்றி காண்போம்,

தசா என்பது ஒரு ஜாதகர் வளரும் போது அவருக்கான பலன்களும் மாறி வளர்ந்து கொண்டே வரும் என்பது போல வைத்துக் கொள்ளுங்கள், ஒரு ஜாதக கட்டம் என்பது ஒரு வட்டம் போல அதில் 12 ராசி பிரிவுகள் உண்டு, அதே வட்டத்தில் இன்னும் கொஞ்சம் துல்லியமாக அளவிட அதை 27 பிரிவுகளாக பிரிக்கிறோம், அதற்கு காரணம் சந்திரன் பூமியை சுற்றி வரும் பாதையில் ஒரு புள்ளியில் இருந்து கிளம்பி மீண்டும் அதே புள்ளியை அடைய 27.3 நாட்கள் ஆகும் எனவே ஒவ்வொரு நாளும் ஒரு நட்சத்திரமாக பாவித்து ராசி மண்டலத்தை 27 நட்சத்திரமாக பிரித்தனர், அது அசுவனியில் இருந்து துவங்கி ரேவதி வரை இருக்கிறது,

ஜாதகம் என்பது அந்த ஜாதகர் பிறக்கும் போது பூமியை சுற்றி வானில் உள்ள கிரகங்கள் உள்ள நிலையை குறிப்பதுதான், அதன் படி ஒரு ஜாதகத்தில் சந்திரன் 360 பாகையில் எங்காவது இருக்கும், அவ்வாறு இருக்கும் ராசி பகுதியை ஜாதகரின் ஜன்ம ராசி என்கிறார்கள், அந்த சந்திரன் உள்ள நட்சத்திர பிரிவை ஜாதகரின் ஜன்ம நட்சத்திரம் என்கிறார்கள்,

ஒவ்வொரு ராசிக்கும் அதிபதி கிரகம் இருப்பது போல நட்சத்திரங்களுக்கும் அதிபதி இருக்கிறது, மேலும் மொத்தமே 9 கிரகங்கள் மட்டுமே இருக்கிறது அதை 27 பிரிவுகளுக்கும் அதிபதி ஆக்குவதில் சிக்கல் எதும் இல்லை, (9*3=27) எனவே ஒரு கிரகம் மூன்று பிரிவுகளுக்கு அதிபதி ஆகும் ஆனால் முதலில் ஒரு வரிசையில் எல்லா கிரகமும் அதிபதி ஆகும், மீண்டும் அதே வரிசையில் என மூன்று முறை அதிபதி பதவிகளை பெறும்,

புதன் (கேது) சுக்கிரன் சூரியன் - சந்திரன் செவ்வாய் (ராகு) குரு சனி

மேலே உள்ள வரிசையை பாருங்கள் அதில் இடது புறம் புதன் சுக்கிரன் இருக்கும் இவை இரண்டும் பூமியின் பாதைக்கு உள்ளே சுற்றி வரும் கிரகங்கள் அவையும், இவைகளுக்கு லீடர் போல


CamScanner

சூரியன், அடுத்து வலது பக்கமாக பாருங்கள் செவ்வாய், குரு, சனி வரிசையாக பூமியின் பாதைக்கு வெளியே இருக்கும் வரிசையிலேயே, இதற்கு இடையே ராகு கேது இணைந்த காரணங்களும் இருக்கிறது அவற்றை நாம் அதற்கான நூலில் விரிவாக காணலாம்,

இவ்வாறாக நட்சத்திர அதிபதிகள் வரிசையில் ஒன்பது கிரகங்களும் மீண்டும் மீண்டும் மூன்று முறை ஒரு சக்கரம் போல இருக்கும் கீழே உள்ள பட்த்தில் பாருங்கள் அசுவனி நட்சத்திரத்திற்கு கேது அதிபதி, அதற்கடுத்து சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு, சனி, புதன் வந்த பிறகு மீண்டும் மகம் நட்சத்திரத்தின் அதிபதி கேதுவாக வரும், அதே போல தனுசு ராசியில் மூல நட்சத்திரம் கேதுவின் நட்சத்திரத்தில் இருந்து துவங்கும்,

ஒரு ஜாதகர் பிறக்கும் போது ஜாதகத்தில் சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறதோ அதன் அதிபதி தசா துவங்கும், ஒவ்வொரு நட்சத்திரமும் குறிபிட்ட காலம் தசா ஆண்டுகளை கொண்டது, அந்த ஆண்டுகள் முடிந்ததும் அடுத்த நட்சத்திர அதிபதியின் தசா துவங்கும்,

CamScanner



ஒரு ராசி என்பது 30 பாகைகள் (டிகிரி) கொண்ட ஒரு பிரிவு, அதுபோல ஒரு நட்சத்திரம் என்பது 13 பாகை (டிகிரி) 20 கலை (மினிட்) கொண்டது, சந்திரன் ஒரு நட்சத்திர பகுதியின் ஆரம்பத்தில் இருந்தால் அந்த நட்சத்திர தசாவின் முழு காலமும் தசா நடக்கும், ஒரு வேளை அந்த நட்சத்திர பகுதியில் அதாவது 13 பாகை 20 கலையில் பாதியில் சந்திரன் இருக்கிறது என்றால் அந்த குறிபிட்ட தசா காலத்தில் பாதி மட்டுமே கடக்க வேண்டும்

உதாரணமாக ஒருவர் மேச ராசி அசுவினி நட்சத்திரத்தில் பிறந்து இருக்கிறார் அதாவது சந்திரன் மேசத்தில் இருக்கிறது என பொருள், மேலும் அந்த மேச ராசி என்ற ராசி பிரிவு, அதில் மூன்று நட்சத்திர பிரிவுகள் இருக்கிறது, அசுவனி, பரணி, கார்த்திகை இதில் அவர் பரணி நட்சத்திரத்தில் பிறந்து உள்ளார்,

உங்களுக்கு குழப்பமாக இருக்கலாம். மேச ராசி என்ற பகுதியில் பூமியில் இருந்து பார்க்கும் போது ஜாதகர் பிறக்கும் போது சந்திரன் இருந்தது. அதே சமயம் பரணி நட்சத்திரத்திலும் எப்படி இருக்கும் என்று.

சந்திரன் என்ற ஒருவர் தமிழ் நாட்டில் வசிக்கிறார். அவர் மதுரை மாவட்டத்தில் வசிக்கிறார். அவர் மதுரையில் 3 வது வார்டில் இருக்கிறார். இதை உதாரணமாக வைத்துக் கொள்ளுங்கள். தமிழ்நாடு என்பது ராசி. மதுரை என்பது நட்சத்திரம். வார்டு என்பது பாதம். அதன் அடிப்படையில் சந்திரன் மேச ராசியில். பரணி முதல் பாதத்தில் உள்ளது. பரணி என்பது சுக்கிர நட்சத்திரம். சுக்கிரனுக்கு தசா ஆண்டு 20 ஆண்டுகள் ஆகும் எனவே அவர் பிறக்கும் போது பரணியின் ஆரம்பத்தில் சந்திரன் இருந்தால் அவருக்கு சுக்கிரனின் முழுமையான தசா ஆண்டு காலமான 20 ஆண்டுகள் வரை அதாவது ஜாதகர் தனது 20 வயது வரை சுக்கிர தசாவில் வாழ்வார். அது முடிந்ததும் அதற்கு அடுத்த சூரிய தசாவில் இருப்பார்.

அதே சமயம் சந்திரன் பரணி நட்சத்திரத்தில் 2 பாதங்கள் கடந்து 3 ஆம் பாதத்தில் இருக்கும். அப்படி என்றால் பரணியில் சந்திரன் பாதியை கடந்துள்ளது. இந்த நிலையில் ஜாதகர் பிறந்தால் சுக்கிர தசா காலம் 20 ல் பாதி மட்டுமே அவருக்கு இருக்கும். அவருக்கு 10 வயது வரை சுக்கிர தசாவும் அதன் பின்னர் சூரிய தசாவும் இருக்கும். இதை ஜாதகத்தில் உதாரணமாக சுக்கிரதசா இருப்பு பத்து ஆண்டுகள் மூன்று மாதம் 22 நாட்கள் என குறிப்பார்கள். அத்தனை காலம் சுக்கிரதசா காலம். நாம் இந்த கணிதத்தை முழுமையாக தெரிந்து கொள்ளப் போவது இல்லை மேலோட்டமாக மட்டுமே தெரிந்து கொண்டால் போதும். முதலில் ஒவ்வொரு கிரகத்திற்கும் தசா காலம் தெரிந்திருக்க வேண்டும் அதை தொடர்ந்து சில தகவல்களும் தேவை.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்குமான அதிபதி, மற்றும் அந்த கிரகத்திற்கான தசா காலம்

சூரியன் - 6 ஆண்டுகள் - கார்த்திகை, உத்திரம், உத்திராடம்

CamScanner

சந்திரன் - 10 ஆண்டுகள் - ரோகிணி, அஸ்தம், திருவோணம்

செவ்வாய் - 7 ஆண்டுகள் - மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்

ராகு - 18 ஆண்டுகள் - திருவாதிரை, சுவாதி, சதயம்

குரு - 16 ஆண்டுகள் - புனர்பூசம், விசாகம், பூரட்டாதி

சனி - 19 ஆண்டுகள் - பூசம், அனுசம், உத்திரட்டாதி

புதன் - 17 ஆண்டுகள் - ஆயில்யம், கேட்டை, ரேவதி

கேது - 7 ஆண்டுகள் - அசுவனி, மகம், மூலம்,

சுக்கிரன் - 20 ஆண்டுகள் - பரணி, பூரம், பூராடம்

இதில் குறிப்பிட்டுள்ள வருடங்கள் அந்தந்த கிரகத்தின் தசா காலமாகும், அவ்வாறு உள்ள தசா காலத்திலும் உட்பிரிவு உண்டு, ஒவ்வொரு தசாவும் ஒன்பது பிரிவுகளை உடையது, இதை புக்தி என்று அழைப்பர், எந்த தசாவானாலும் அதே கிரகத்தின் புக்தி முதலில் வரும், இவ்வாறு வருவதை சுய புக்தி என அழைப்பார்கள், அதைத் தொடர்ந்து தசா கிரக வரிசைப்படி அடுத்தடுத்து புக்திகள் வரும், தசா ஒன்பது புக்திகளாக பிரிக்கபட்டது போலவே புக்தியும் ஒன்பதாக பிரிக்கப் பட்டுள்ளது இதை அந்தரம் என்பார்கள், அந்தரமும் ஒன்பது உட்பிரிவுகளான சூட்சுமத்தை கொண்டது, இதில் ஒவ்வொரு தசா கால அடிப்படையில் அதற்கு கீழ் வரும் புக்தி, அந்தரம், சூட்சம காலங்கள் மாறுபடும்,

பொதுவாக ஜோதிடர்கள் தசா வருடத்தையும் அடுத்து புக்தியையும் முக்கியமாக பார்ப்பார்கள், தசாவை விட புக்தி மிக முக்கியமானதாக பாவிக்கப் படுகிறது,

உதாரணமாக சுக்கிர தசா 20 ஆண்டுகள் ஆகும் அந்த 20 ஆண்டுகள் எவ்வாறு பிரிகிறது என்று பார்க்கலாம்,

சுக்கிர தசாவில் முதலில் வருவது சுக்கிர புத்தியாகும், இதன் கால அளவை பிரிப்பதற்கான கணிதம்

தசா கிரகத்தின் ஆண்டு மற்றும் புத்தி கிரகத்தின் தசா ஆண்டை பெருக்க வேண்டும்,

CamScanner

நாம் கண்டறியபோகும் சுக்கிரனின் தசா ஆண்டுகள் 20 மேலும் நாம் கண்டறிய இருப்பது சுக்கிரபுத்தி என்பதால் அதுவும் 20 எனவே

20 x 20 = 400 இதில் வலது புறத்தில் உள்ள ஒரு இலக்கத்தை விட்டு விட்டு மீதியை மாதமாக எடுக்க வேண்டும், அதாவது 400 ல் 40,0 இதில் 40 என்பது மாதங்கள், அந்த 0 வை 3 ஆல் பெருக்கி கிடைக்கும் விடை நாள் ஆகும், எனவே சுக்கிர தசாவில் சுக்கிர புத்தி 40 மாதங்கள் ஆகும்.

வேறு உதாரணம் காண்போம்,

ராகு தசாவில் சனி புத்தியின் காலம் அறிவது, ராகுவின் தசா வருடம் 18 சனியின் தசா வருடம் 19 எனவே

18 x 19 = 342 = 34,2

34 மாதங்கள்

அடுத்து 34.2 உள்ள 2 ஐ 3 ஆல் பெருக்க 6 ஆக ராகு தசாவில் சனியின் புத்தியின் காலம், 34 மாதங்கள் 6 நாட்கள் ஆகும்

இதை எளிதாக காண அட்டவனை தந்துள்ளேன்,

சூரிய தசா 6 ஆண்டுகள்

புத்திகள்

சூரியன்	- 3 மாதங்கள் 18 நாட்கள்
சந்திரன்	- 6 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 4 மாதங்கள் 6 நாட்கள்
ராகு	- 10 மாதங்கள் 24 நாட்கள்
குரு	- 9 மாதங்கள் 18 நாட்கள்
சனி	- 11 மாதங்கள் 12 நாட்கள்
புதன்	- 10 மாதங்கள் 6 நாட்கள்
கேது	- 4 மாதங்கள் 6 நாட்கள்
சுக்கிரன்	- 12 மாதங்கள் 0 நாட்கள்

CamScanner

சந்திர தசா 10 ஆண்டுகள்

புத்திகள்

சந்திரன்	- 10 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 7 மாதங்கள் 0 நாட்கள்
ராகு	- 18 மாதங்கள் 0 நாட்கள்
குரு	- 16 மாதங்கள் 0 நாட்கள்
சனி	- 19 மாதங்கள் 0 நாட்கள்
புதன்	- 17 மாதங்கள் 0 நாட்கள்
கேது	- 7 மாதங்கள் 0 நாட்கள்
சுக்கிரன்	- 20 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 6 மாதங்கள் 0 நாட்கள்

செவ்வாய் தசா 7 ஆண்டுகள்

புத்திகள்

செவ்வாய்	- 4 மாதங்கள் 27 நாட்கள்
ராகு	- 12 மாதங்கள் 18 நாட்கள்
குரு	- 11 மாதங்கள் 6 நாட்கள்
சனி	- 13 மாதங்கள் 9 நாட்கள்
புதன்	- 11 மாதங்கள் 27 நாட்கள்
கேது	- 4 மாதங்கள் 27 நாட்கள்
சுக்கிரன்	- 14 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 4 மாதங்கள் 6 நாட்கள்
சந்திரன்	- 7 மாதங்கள் 0 நாட்கள்

ராகு தசா 18 ஆண்டுகள்

புத்திகள்

ராகு	- 32 மாதங்கள் 12 நாட்கள்
குரு	- 28 மாதங்கள் 24 நாட்கள்
சனி	- 34 மாதங்கள் 6 நாட்கள்

CamScanner

புதன்	- 30 மாதங்கள் 18 நாட்கள்
கேது	- 12 மாதங்கள் 18 நாட்கள்
சுக்கிரன்	- 36 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 10 மாதங்கள் 24 நாட்கள்
சந்திரன்	- 18 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 12 மாதங்கள் 18 நாட்கள்

குரு தசா 16 ஆண்டுகள்

புத்திகள்

குரு	- 25 மாதங்கள் 18 நாட்கள்
சனி	- 30 மாதங்கள் 12 நாட்கள்
புதன்	- 27 மாதங்கள் 6 நாட்கள்
கேது	- 11 மாதங்கள் 6 நாட்கள்
சுக்கிரன்	- 32 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 9 மாதங்கள் 18 நாட்கள்
சந்திரன்	- 16 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 11 மாதங்கள் 6 நாட்கள்
ராகு	- 28 மாதங்கள் 24 நாட்கள்

சனி தசா 19 ஆண்டுகள்

புத்திகள்

சனி	- 36 மாதங்கள் 3 நாட்கள்
புதன்	- 32 மாதங்கள் 9 நாட்கள்
கேது	- 13 மாதங்கள் 9 நாட்கள்
சுக்கிரன்	- 38 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 11 மாதங்கள் 12 நாட்கள்
சந்திரன்	- 19 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 13 மாதங்கள் 9 நாட்கள்
ராகு	- 34 மாதங்கள் 6 நாட்கள்
குரு	- 30 மாதங்கள் 12 நாட்கள்

CamScanner

புதன் தசா 17 ஆண்டுகள்

புத்திகள்

புதன்	- 28 மாதங்கள் 27 நாட்கள்
கேது	- 11 மாதங்கள் 27 நாட்கள்
சுக்கிரன்	- 34 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 10 மாதங்கள் 6 நாட்கள்
சந்திரன்	- 17 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 11 மாதங்கள் 27 நாட்கள்
ராகு	- 30 மாதங்கள் 18 நாட்கள்
குரு	- 27 மாதங்கள் 06 நாட்கள்
சனி	- 32 மாதங்கள் 9 நாட்கள்

கேது தசா 7 ஆண்டுகள்

புத்திகள்

கேது	- 04 மாதங்கள் 27 நாட்கள்
சுக்கிரன்	- 14 மாதங்கள் 0 நாட்கள்
சூரியன்	- 4 மாதங்கள் 6 நாட்கள்
சந்திரன்	- 7 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	- 4 மாதங்கள் 27 நாட்கள்
ராகு	- 12 மாதங்கள் 18 நாட்கள்
குரு	- 11 மாதங்கள் 06 நாட்கள்
சனி	- 13 மாதங்கள் 9 நாட்கள்
புதன்	- 11 மாதங்கள் 27 நாட்கள்

சுக்கிர தசா 20 ஆண்டுகள்

புத்திகள்

சுக்கிரன்	- 40 மாதங்கள் 0 நாட்கள்

CamScanner

சூரியன்	-	12 மாதங்கள் 0 நாட்கள்
சந்திரன்	-	20 மாதங்கள் 0 நாட்கள்
செவ்வாய்	-	14 மாதங்கள் 0 நாட்கள்
ராகு	-	36 மாதங்கள் 0 நாட்கள்
குரு	-	32 மாதங்கள் 0 நாட்கள்
சனி	-	38 மாதங்கள் 0 நாட்கள்
புதன்	-	34 மாதங்கள் 0 நாட்கள்
கேது	-	14 மாதங்கள் 0 நாட்கள்

இதில் உள்ள ஒவ்வொரு புத்தி காலத்தினையும் அந்தரமாக பிரிக்கலாம், பொதுவாக தசாவை புத்தியாக மாற்ற, அல்லது புத்தியை அந்தரமாக மாற்ற அந்த காலத்தை 120 பாகங்களாக பிரித்து விடை காண வேண்டிய கிரகத்தின் தசா வருட எண்ணிக்கையின் மடங்காக்கினால் விடை கிடைக்கும் இதுதான் அடிப்படை இது சிலரால் புரிந்து கொள்ள முடியாது என்பதால் சுலபமான சில வழிகளை குறிபிட்டுள்ளேன், மேலும் புத்தியை அந்தரமாக்க அந்தரத்தை சுட்சுமம் ஆக்க சில விதிகள் உள்ளது, அதே போல அதற்கான அட்டவனையும் உண்டு இருப்பினும் தற்போது உள்ள காலத்தில் தசா வருடங்கள் மற்றும் அதற்கான காலங்களை மென்பொருள் உதவியுடன் தெரிந்து கொள்ளும் வசதி இருக்கிறது, எனவே அதை பயன்படுத்துதல் இன்னும் இதை சுலபமாக்கும்,

பொதுவாக ஒரு ஜாதகருக்கு நடக்கும் தசாவிற்கு பலன் கூற அந்த தசாவின் கிரகம் ஜாதகத்தில் உள்ள நிலையை வைத்து மட்டுமே பலன் கூறுவார்கள் இருப்பினும் பொதுவாக ஒவ்வொரு தசா மற்றும் புத்திகாலத்தில் குறிபிட்ட பலன் நடக்கும் இதற்கான பலன் அறிவது மிகவும் எளிதானது ஆகும் அதிகார கிரகத்திற்கான பலனை வைத்துக் கொண்டு பலனை மிகவும் சரியாக கூறிவிடலாம்,

உதாரணமாக ஒருவருக்கு சந்திர தசா அல்லது புத்தி நடந்தா வீடு வாகனம் தொடர்பான விசயம் அக்காலத்தில் நடை பெறும், உணவு மீது அலாதி பிரிய உண்டாகும், தாயின் முக்கியத்துவம் அதிகரிக்கும் அவருடன் சிக்கலை ஏற்படுத்தும், இது ஒரு ஜாதகத்தில்

CamScanner

சந்திரன் எந்த இடத்தில் இருந்தாலும் நடக்கும், அதே போல ஒவ்வொரு கிரகத்தின் தசா மற்றும் புத்தி காலங்களில் குறிப்பிட்ட பலன்கள் நடப்பதை அனுபவத்தில் அறிய முடிகிறது,

நாம் வரும் ஜாதகர்களுக்கு தசா அடிப்படையில் பலன் சொல்ல போவது கிடையாது, ஆனாலும் ஜாதகர்கள் தசா புத்தியை ஜோதிடத்தில் முக்கியமானது என ஜோதிடத்தின் மீது உள்ள அறியாமை காரணமாக நம்புகின்றனர், நாமும் அவர்களுக்கு விளக்கம் கொடுத்து புரிய வைப்பது சிரமம், எனவே நமது அதிகார கிரக காரகத்தின் அடிப்படையில் பொருந்தும் பலன்களை கூறலாம், இருப்பினும் அதோடு மிக முக்கியமாக நடப்பு கிரகத்தின் அடிப்படையிலும் பலனை ஜாதகருக்கு எடுத்துரைப்பது அவசியமாகும்,

தசா புத்தி என்பது சந்திரன் என்ற ஒரு கிரகத்தின் அடிப்படையில் உருவான கணிதம் மட்டுமே என்பதால் அந்த ஒரு கிரக அடிப்படையில் மொத்த வாழ்க்கையையும் அனுமானிக்க முடியாது என்ற காரணத்தால் தசா புத்தி பலனானது தர்க்க ரீதியானதாக இருக்காது எனினும் சந்திரன் மனோ நிலையை குறிக்கும் கிரகம் ஆகையால் ஒருவரது மனோ நிலையின் போக்குகளை அனுமானிப்பதன் மூலமாக அந்த மனிதன் உள்ள சூழலலின் தன்மையை புரிந்து கொள்ள முடியும் ஏனெனில் சிந்தனை என்பதும் சூழலும் ஒன்றோடு ஒன்று பினைந்தவை, ஒருவரது சிந்தனை எண்ணம் ஆகியவை அனைத்தும் சூழலின் விளைவுதான் என்பதால் சந்திரனை வைத்து மனதை அறிந்து அதன் அடிப்படையில் வாழ்க்கையை பற்றி விவரிக்க தசா கால பலனை ஒருவாறு கூறுவதற்கு காரணம் இருக்கலாம், இருப்பினும் நாம் இதில் அதிகமாக ஈடுபாடு செலுத்த தேவையில்லை ஜாதகரின் விருப்பத்திற்காக மட்டுமே பொதுவாக தசா காலத்தில் நடக்க உள்ளனவற்றின் தன்மையை கூறுகிறோம்,

தசா மற்றும் புக்தி, அந்தர, சூட்சமங்களுக்கு கிரகத்தின் தன்மையை வைத்து பலன் கூறியுள்ளேன், இது அந்த தசா காலத்தில் நடக்கும், அதில் வேறு கருத்து இல்லை, ஆனால் ஜாதகத்தில் அந்த கிரகம் அதிகாரம் பெற்று இருந்தால் மிக முக்கிய மாற்றங்களும்,

CamScanner

அதிகாரம் பெறாத கிரகத்தின் தசா புத்தி காலம் மிகப் பெரிய அளவிலான மாற்றங்கள் இல்லாமலும் இருக்கும்.

அதே போல ஒரு தசாவும் ஒரு புத்தியும் நடக்கும் காலத்தில் அந்த இரண்டு கிரகங்களும் இணைவு பெறும் பலனையும் அந்த காலத்தில் நடக்கும் என்றும் கூறலாம். உதாரணமாக சந்திர தசா குரு புத்தி, அல்லது குரு தசா சந்திர புத்தி இரண்டிலும் சந்திரன் குரு இணைவை குறிக்கும் அந்த காலத்தில் அவமானங்களை சந்திப்பார். ஏனெனில் குரு சந்திரன் அவமானம்.

மஹாதசா, புக்தி, அந்தர மற்றும் சூட்சும கால பலன்கள்

ஒவ்வொரு கிரகத்திற்குமான பலனை அடுத்து தந்துள்ளேன். ஒருவருக்கு எந்த கிரகத்தின் தசா, புக்தி, அந்தரம் மற்றும் சூட்சமம் எது நடந்தாலும் அந்த கிரகத்திற்கான பலனை கூறலாம். பலன் தசா, புக்தி, அந்தரம் மற்றும் சூட்சமம் அனைத்திற்கும் பலன் பொதுவானதுதான்.

கேது தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

புதிய கல்விகள் கற்கும் வாய்ப்பு உருவாகும். வாழ்க்கையின் நெளிவு சுழிவு புரியும். வம்சத்தின் மீது ஆர்வம். வாழ்க்கையை கற்றுக் கொள்ளும் சூழல். யாரவது பார்த்துக் கொள்வார்கள் என்ற குருட்டு நம்பிக்கை. சோம்பேறித் தனம். சமூகத்தின் கட்டுபாடுகளை விமர்சிக்கும் துணிவு மற்றும் மனோநிலை. அரசு வழியில் அவமானம். உடலில் கழிவுகளால் உண்டாகும் தொற்றுகள். கழிவு வழிகளில் உபாதை. மரபு சார் நோய்களினால் அவதி. தொடர் மருத்துவம். மிருகங்கள் மற்றும் பூச்சி தாக்குதல். முக்கியமான சூழலில் உறவினர் இழப்பு. உறவுகளில் பகை மற்றும் பிரிவு. குடும்பத்திற்கு அவப்பெயர். பொருளாதாரம் மீது அதீத ஆர்வம் அதே சமயம் விரக்தியான போக்கு. உள்ளுறுப்புகளில் வலி. தேவையற்ற

பயம், முன்னோர்களின் செய்கையால் தனக்கு எதுவும் ஆவது போல பயம், உடல் இளைப்பது, மூலம் மற்றும் குடல் தொற்றுகள்,

சுக்கிரன் தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

திருமணம் சார்ந்த பலன்கள் உண்டாகும், விடு, வாகனங்கள் ஆபரணங்கள், சேர்க்கை உண்டாகும், அனைத்தின் மீதும் ஆசை, வெகுமதிகள் மற்றும் பாராட்டுகளை பெறுதல், பெண்கள் சார்ந்த அவப்பெயர்கள் ஏற்படும், சுயமாக முடிவுகள் எடுப்பதால் உறவினர்களை விரோதித்துக் கொள்ளுதல், வயதான முக்கியமானவரை பகைப்பது அல்லது இழப்பது, பல காலமாக காத்திருந்த சொத்து மற்றும் பொருளாதரத்தை மீட்டெடுத்தல், வழக்குகளை சந்தித்தல், எதையும் அனுபவிக்கும் ஆர்வம், வாழ்க்கை மீது பயம், குழந்தை பிறப்பு, உறவுகளுடன் நெருங்கி போய் பகைகளை உண்டாக்கிக் கொள்தல், முகவாதம் தோன்றி மறைதல், நீரிழிவு, சிறு நீரக தொற்று, அந்தரங்க விசயத்தில் ஆர்வம், அது தொடர்பான தொற்றுகளால் சிக்கல், தோல் நோய், கண் மற்றும் பிறப்புறுப்பில் மருத்துவம், பருவமடைதல், தாம்பத்யத்தில் பிரச்சனை, கருத்து வேறுபாடுகள், மனைவி மீது சந்தேகம் தம்பதிகளுக்குள் எதோ ஒரு காரணமாக பிரிவு, உறவுகளின் மீது பற்று, தொழில் லாபம், வட்டி வழியான வருமானம்,

சூரியன் தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

புகழின் மீது விருப்பம், எடுத்த காரியத்தில் விடாப்பிடியான பிடிப்பு, அரசியல் மற்றும் ஆளுமையின் மீது ஆர்வம், தொழில் சிந்தனை, குழந்தை பேறு, சுய மதிப்பு மீது கவனம், உத்யோகத்தில் உயர்வு, தந்தையுடனான உறவில் புதிய குழப்பங்கள், அரசு மற்றும் அரசியல் ரீதியான புதிய முயற்சி மற்றும் அதன் வழியான சிக்கல்கள், குடும்பத்தில் முக்கியமான விசேஷங்கள் நடை பெறுதல், குடும்ப முன்னேற்றம் தொடர்பான முயற்சிகளை மேற்கொள்ளுதல்,

CamScanner

பருவமடைதல் பணி இடங்களில் அங்கீகாரம் தொடர்பான போராட்டம், பொறுப்புகள் மாற்றம், தந்தை நலம் தொடர்பான சிக்கல்கள், வழக்குகள், நீதிமன்றம், காவல் நிலையத்திற்கு பிரச்சனைக்காக செல்லுதல், திருடர்களால் இழப்பு, உயிர் மீது பிறரின் தாக்குதல் தொடர்பான பயம், வாகனங்கள் சேர்க்கை, பலவிதமான தொழில்களில் ஈடுபாடு, பல், தலை, தாடை மற்றும் முடி தொடர்பான சிகிச்சைகள், கண் தொடர்பான சிகிச்சை, குழந்தைகள் பற்றிய ஏக்கம், நெருப்பு அல்லது வெப்பம் தொடர்பான பணிகளை ஆர்வமாக செய்தல், தலை மற்றும் முக்கிய உறுப்புகளில் உருவாகும் நோய் பற்றிய பயம், முக்கிய நகரங்களுக்கு செல்லுதல், அறிவு தெளிவு உண்டாகும், புதிதாக ஆளுமை செய்ய இடம் கிடைக்கும், பூர்வீகம் வழியான உறவுகள் மேம்படும், முக்கியமான திரு தலங்களுக்கு செல்லுதல், உறவுகளில் அல்லது உறவுகளினால் அவமானம், குழந்தைகளின் எதிர்காலம் குறித்த அச்சம்,

சந்திரன் தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

உடல் பருமனாகுதல், புதிய கல்வி கற்கும் ஆர்வம், உயர் படிப்புகளை நிறைவு செய்தல், நீர் தொடர்பான உபாதைகள், ஆரோக்கியத்தில் குறை, ஜோதிடம் மற்று புகைப்படம் மற்றும் கலைகள் மீது ஆர்வம், புதிய மொழிகள் மீது கற்கும் ஆவம், அனைவரிடமும் நட்புடன் பழகுதல் அதே சமயம் அவர்கள் மீது சதா சந்தேக எண்ணம், குடும்பத்தில் பருவமடைதல் போன்ற சுப நிகழ்வுகள், தொடர் பயணம், வீடு கட்டுதல் தொடர்பான ஆர்வம் முயற்சி அதில் போராட்டங்களை சந்தித்தல், தாயிடம் கருத்து வேறுபாடு, மனம் சார்ந்த புரிதல் அதே சமயம் மனதின் அழுத்தம் அதிகமாகுதல், குழப்பம், திடீரென அவமானத்தை சந்தித்தல், உறவுக்கார வயது மூத்த பெண்கள் மற்றும் உறவுகளுடன் சுமூக போக்கு, பயம் உண்டாகும், தேவையற்ற எதிரிகளால் நச்சரிப்பு ஏற்படும், வீண் சண்டை அண்டை விட்டினருடன் கருத்து வேறுபாடு, போதையில் இருந்து மீளுதல், வயிறு மற்றும் சுவாசம் தொடர்பான தொற்றுகளினால் அவஸ்த்தை, பிறருடைய விசயத்தில் தலையிட்டு அவமானமடைதல், குருட்டு தைரியம், பயணம் தொடர்பான உடல்

CamScanner

நலப் பிரச்சானை, முறையற்ற பழகத்தினால் பால்வினை தொடர்பான பயம்

செவ்வாய் தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

சகோதர்ர் அனுகூலம், கணவனுடன் கருத்து முரண்பாடு, நண்பர்கள் வகையில் உதவி அதே சமயம் அதன் வழியாக இழப்புகள், செங்கல், கிறில், எலெக்ட்ரிக் வழியாக அனுகூலம், பங்குதாரர் மற்றும் பங்கு சந்தைகளில் ஆர்வம் அதன் வழியாக இழப்புகள், நண்பர்களை புரிந்து கொள்ளுதல், துரோகங்களை சந்திக்கும் நிலை, பிறருக்கு உதவப் போய் வழக்குளை சந்திப்பது, அரசனைப் போல நம்பியவர்களிடம் ஏமாற்றம் அடைவது, உடல் ரீதியான அச்சம் மற்றும் ஆரோக்கியத்தின் மீது பயம் உண்டாகும், செல்வத்தின் மீது அதிக ஆர்வம், ஜெயிக்க வேண்டும் என்ற அவசியம் உண்டாகும், நாட்பட்ட நோய்களுக்கான மருத்துவம், தொழில் ரீதியான வாகணங்களை வாங்குவது, புதிய முதலீடு, நம்பிக்கை அதிகமாகுதல், எடுத்த காரியங்கள் எதாவது ஒரு தடையை சந்திப்பது, நாய் பூனை வளர்ப்பு மற்றும் அவைகளால் தாக்கப்படுதல், சேமிப்பின் மீது நம்பிக்கை, திடீரென சம்பாதிக்க சூதாட்டங்களில் கலந்து கொள்ளுதல்,

ராகு தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

பல காலமாக தொடரும் இடையூறுகள் மற்றும் வழக்கு போன்றவைகளை முடிவுக்கு கொண்டு வரும், முயற்சிகள் வெற்றி, அயல்நாடு பயணம், தொலை தூர பணிகள், தனிமையான உணர்வு, திடீரென முடிவுகளால் வாழ்க்கையில் உயர்வு, குடும்பத்தில் திடீரென விபத்துகள் அல்லது அசம்பாவிதங்கள் உண்டாகுதல், சுப காரியங்கள் தடைபடுவது போல அச்சமும் சூழலும் இருந்து சரியாகும், எதிர்மறை சிந்தனை தோன்றும், தவறாக எல்லாம் போவது போல அச்சம் ஏற்படும், தற்கொலை உணர்வுகள், காரணமே தெரியாத பகைமை அதனால் தொல்லை, குடும்பத்தில் அதீத எதிர்பார்ப்பு, ஒருவரை

CS CamScanner

ஒருவர் கட்டுபடுத்தும் குணத்தினால் விரோதங்கள் உண்டாகும், அதிக ஆசை, பெரிய முயற்சிகள், அதிஷ்டத்தின் மீது நம்பிக்கை, விபத்து மற்றும் உடல் நலம் குறித்த தேவையற்ற பயம், பில்லி சூன்யம் போன்றவைகள் குறித்து குழப்பம், பூச்சி கடி, தொடர் ஒவ்வாமை, தோல் சார்ந்த நோய்கள், ரத்தம் கட்டிபடுதல், உடலில் கட்டி கொப்பளங்கள் உண்டாகுதல்,

குரு தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

புகழின் மீது நாட்டம், அதே சமயம் அதற்கான போராட்டம், சேமிப்பு மற்றும் தங்கம் தொடர்பான முடிவுகளில் மாற்றம், வாழ்க்கையில் மிகச் சிறந்த வழிகாட்டுதலை பெறுதல், குழந்தை பிறப்பு தொடர்பான கவலைகள், அது தொடர்பான சிகிச்சைகள், குழந்தை பிறப்பு, குடும்பத்தில் அவமானமான சம்பவங்கள், இடமாற்றம் பதவி உயர்வுகள், யாத்திரை, தொழில் துவங்கும் ஆர்வம், உடல் எடை அதிகத்தால் அவதியுருதல், புரோக்கர், ஏஜென்சீஸ் போன்றவற்றின் வழியாக அதாயம், வட்டி, சீட்டு பிடிப்பது போன்ற வழியில் வருமானம், பலருடைய உறவுகள் உருவாகுதல், திருமணம் மற்றும் குழந்தை பிறப்பு உண்டாகுதல், உறவினர்களின் உன்மை முகத்தை புரிந்து கொள்ளுதல், போதை பழக்கம் ஏற்படுதலும் அதிலிருந்து மீள்வதும், தெய்வ வழிபாடு தொடர்பான பூர்வீக நடை முறைகளை செய்வது, பதவி உயர்வு, இடமாற்றம், குடல் சார்ந்த உபாதைகள், உறவுகளில் காதல் திருமணம் ஜாதி மாறிய திருமணம் குடும்பத்தை எதிர்த்து திருமணம் நடைபெறும், கருக் கலைதை, உண்டாகும், உயர் அதிகாரிகளல் தொல்லை ஏற்படும்,

சனி தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

புதிய பொறுப்புகள், உறவினர்களுடன் கலகம், பூர்வீகத்தில் இருந்து சொத்து வரவு, தொழில் ரீதியான முயற்சி, அதிகமான ஆபத்துகளை தானாகவே தொழிலில் உருவாக்கிக் கொண்டு நிம்மதியை இழப்பது, இடுப்பு, கால்கள் மற்றும் எலும்புகளில்

பிரச்சனை, பொது சேவை ஆர்வம், சமூக சிந்தனை, பிறருக்கு உதவும் சிந்தனை, தொழில் ரீதியான மிகப் பெரிய முன்னேற்றம், வாரிசுகள் குறித்த கவலை, குடும்பத்தில் சந்தோசம் அதே சமயம் பழைய நினைவுகள் வழியான ஏக்கம்வயதான நபர்கள் இருக்கும் போது வாலிப ப்ருவத்தில் உள்ளவர்களுக்கு கண்டம், ஜாதி மாறிய திருமணங்கள் தொடர்ச்சியாக, பொது மக்களுடன் பழகும் நிலை, இரட்டை குழந்தை பிறப்பு, தொழிலால் அவமானங்கள், எதிரிகளிடம் இருந்து வெற்றி, தூர தேச பயணம், நிதானம் அதிகரிப்பு, தேவையற்ற நட்புகளுடன் பழக்கம், உயிர் ஆபத்துகள், தொழில் மீது முடிவு எடுக்க முடியாத நிலை, மரபு சார் நோய்களினால் அவதி, தண்டனைகளை அனுபவித்தல்,

புதன் தசா மற்றும் புத்தி காலத்தில் நடக்கும் பலன்கள்

குடும்பத்தில் பேசுதல் கேட்கும் மற்றும் பார்க்கும் குறைபாடுகளுக்கு சிகிச்சை பெறுதல், பெண் குழந்தைகள் தொடர்பான குழப்பம், பருவமடைதல் பற்றிய பயம், கல்வியின் வழியாக நிம்மதியை இழப்பதும் கலவியினால் அனுகூலம் பெறுதலும், அடிக்கடி கட்டுமான வேலைகள், பிளாஸ்டிக் சார்ந்த பணிகளில் தொடர்பு, நீர்ம வஸ்துகளின் வழியாக வருமானம் கிடைக்கும், உயர் கல்விக்கான வாய்ப்பு, நிலம் போன்ற அசையா சொத்து சேர்க்கை, வழக்குகள் மூலம் நன்மை, சகோதரியின் வாழ்க்கையில் குழப்பம், சகோதரியாலும் நிம்மதி இழப்பு போன்ற அச்சம், வியாபார ஆசை, நரம்பு மற்றும் தோல் நோய் திடீரென மன நலம் சார்ந்த சிக்கலை சந்திப்பது, வழக்குகள் சாட்சியங்கள் வழியாக தொல்லை, குழந்தைகளின் மருத்துவ செலவுகள், பேச்சில் நக்கல் நையாண்டித் தனம் மிகுதியாகுதல், நடனம் நாட்டியம் மற்றும் இசை கற்கும் ஆர்வம்,

அதிகார ராசிகள்

ஜோதிடத்தில் காரகங்கள் மிக முக்கியமானது, உலகில் உள்ள அனைத்து ஜோதிடத்தின் அடிப்படையும் வாழ்க்கையை புரிந்து கொள்வது மட்டுமே, ஒரு ஜாதகத்தில் ஒவ்வொரு வீடுகளும் எப்படி இருக்கிறது என பாரம்பரிய ஜோதிடத்தில் பார்ப்பார்கள், கிரக நிலைகள் எப்படி எனவும் எல்லா ஜோதிடத்திலும் பார்ப்பார்கள், அதே போல ராசிகளுக்கும் காரகம் உள்ளது, ஒவ்வொரு ராசிகளும் எதைக் குறிக்கும் என்று எல்லா ஜோதிட முறைகளிலும் கூறப்படுகிறது,

நாம் ஏற்கெனவே பார்த்தது போல ராசிகளின் குணங்கள் ஏறத்தாழ அந்த ராசி அதிபதிகளின் காரகம்தான், அதே போல வீடுகளின் அதாவது பாவகம் எனக் கூறப்படும் லக்னம், இரண்டாம் வீடு எனக் கூறுவார்களே அதுவும் மேச ராசியை முதல் வீடாக வைத்துப் பார்த்தால் அந்தந்த வீட்டின் அதிபதியின் குணம்தான்

எப்படி பார்த்தாலும் ஜோதிடம் எல்லாம் ஒன்றுதான் எனவே ஒவ்வொரு பாவங்களும் முக்கியமடைந்த என பார்த்து அந்த பாவ பலன்ங்களை பாரம்பரிய ஜோதிடத்தில் கூறுவார்கள் அது போலவே ராஜநாடி முறையில் நாம் ஒரு கிரகம் குறிப்பிட்ட ராசிகளில் அமர்ந்தால் அதை அதிகார கிரகம் என்று கூறுகிறோம், அதன் அனைத்து காரகங்களும் ஜாதகருடைய வாழ்க்கையில் முக்கியமாகும் எனவும் கூறுகிறோம், அதே போலவே ஒவ்வொரு ராசிகளும் இயங்கும் நிலையை வைத்து பலன் கூற முடியும், இதை நாம் அதிகார ராசி எனக் கூறுகிறோம்,

இது மிகவும் எளிதானது, அதாவது எதாவது ஒரு கிரகம் எந்த ராசியில் அமர்ந்தாலும் அந்த ராசி அதிகாரமாகிவிடும், அப்படி அதிகாரமான ராசியின் காரகத்துவம் வழியாக ஜாதகர் ஆரம்பகாலத்தில் தடைகளை எதிர் கொண்டாலும் பிற்காலத்தில் அதனால் நன்மையை அடைவார், ஜாதகர்கள் பொதுவாக கேட்பார்கள் நான் எதுலையாவது சக்சஸ் ஆவேனா என்று, அவர்கள் ஜாதகத்தில் கிரகங்கள் நின்ற ராசிகளின் காரகத்தில் வெற்றி அடைவீர்கள் எனக் கூறலாம்,

CamScanner

ஒரே ராசியில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கிரகம் இருந்தாலும் அந்த ராசி அதிகாரமாகும், ஒரு ஜாதகத்தில் கிரகம் உள்ள ராசிகள் அனைத்துமே அதிகாரமடையும், அவ்வாறு அதிகாரமான ராசிகளின் பலனை ஜாதகரின் வயதினை மனதில் கொண்டு கூறவேண்டும், வக்கிரம் அல்லது பரிவர்த்தனை அல்லது விளிம்பு கிரகங்கள் உள்ள ராசிகள் அடைந்த ஆரம்பத்தில் சிக்கலை உண்டாக்கும் பிற்பகுதியில் அதன் வழியாக நன்மையை செய்யும், அதே போல உச்சம், நீச்ச, ஆட்சி அல்லது தனது ராசிக்கு ஏழாம் ராசியில் உள்ள கிரகங்கள் அம்ர்ந்த ராசிகள் குழப்பத்தினை அளித்து பிற்பகுதியில் அவருக்கு நிறைவான உணர்வை வழங்கும்,

அதிகார கிரகங்கள் அமர்ந்த ராசிகளுக்கு முன்னுரிமை தந்து பலன் கூறவேண்டும் அதே சமயம் அதிகாரமாகாத கிரகம் எந்த ஒரு ராசியில் அமர்ந்திருந்தாலும் அந்த ராசியும் அதிகார ராசிதான்,

அதிகாரமான ராசியின் காரகத்துவத்தில் ஜாதகர் பாடுபட்டாவது நிறைவை அடைவார்.

மேசராசி அதிகாரமானால்

ஜாதகர் புகழடைவார், அரசியலில் ஆர்வமுடையவர், தன்மானம் மற்றும் பெருந்தன்மையுடையவர், பிறரின் நிலையை உணரும் ஆற்றல் உடையவர், குடும்பத்தில் முக்கிய நபராக மாறுவார், ஆரம்ப காலத்தில் தனது நிலையை தக்க வைக்க பல்வேறு சிக்கல்களை கடந்து வருவார், கடன் தொல்லை நம்பிக்கை ஏமாற்றம், சிறு வழக்குகளை சந்திக்கும் நிலை உண்டாகலாம், தலைமை உறுப்புகளில் உபாதைகள் இருக்கும், இதயம் மற்றும் தலை தொடர்பான பிரச்சனைகளுக்காக சிகிச்சை பெறுவார், அனைவரையும் கட்டுப்படுத்தும் மனம் மற்றும் உடலமைப்பு கொண்டவர், வார்த்தைகளில் கடுமை உள்ளவராக இருப்பார், தனக்கு ஏதாவது சிக்கல் வரும் போது சட்டத்தின் துணையை நாடக்கூடியவர்,

CamScanner

ஆரம்ப காலத்தில் அவசரபுத்தியில் தவறுகள் செய்வார், முடி பல் கண் மற்றும் தலை சார் சிக்கலை சந்திப்பார், ஜாதகர் பெண் எனில் குடும்ப வாழ்க்கையில் சில தடைகளை கடந்து வருவார், நிச்சயமாக தன்னை ஒரு சரியான நபராக தன்னை சுற்றி உள்ளவர்களிடம் நிரூபிப்பார், இவரும் தனது வாழ்க்கையில் சரியான நிறைவை அடைந்ததாக உணருவார், அதிகமான காலங்கள் வாழ்வார், பிற்காலத்திற்கான செல்வங்களை சேகரித்து வைத்திருப்பார், எந்த நிலையில் இருந்தாலும் அதில் உயர்வான செயல்கள் செயவதில் ஆர்வமுடையவராக இருப்பார், தானம் தர்ம சிந்தனை மிக்கவராக இருப்பார், இவருடைய குணங்களினால் புகழடைவார், பொதுவாக செவ்வாய் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்

ரிஷபம் அதிகாரமானால்

குடும்ப விசயத்தில் சிக்கல்களை கடந்து வருவார், ஆரம்ப காலத்தில் இல்லற வாழ்க்கையை கையாள சில போராட்டங்களை சந்திப்பார், தெரிந்த அல்லது பழகி திருமணம் செய்வார், கல்வியால் மேன்மயடைவார், தன்னை பகட்டாக காட்டி கொள்வதில் ஆர்வமுடையவர், முதலீடுகளினால் சிலரை நம்பி கைப்பொருளை இழப்பார், தெரிந்த தெரியாத இடங்களில் முதலீடுகளை செய்து பிற்காலத்தில் நல்ல அனுபவத்தை பெறுவார், ஆடம்பர பொருள் மற்றும் நிதி சார் பணிகள், பணப்பயிர், விலையுயர்ந்த வஷ்துகளின் வழி வருமானம் பெறுவார், பண முதலீட்டில் ஆர்வமுடையவர், வாக்கு சாதுர்யமுடையவர், பிறரை பேசி கவரக்கூடியவர், கண், கன்னம், பல் போன்ற உறுப்புகளில் சிக்கலை சந்திப்பார், உணவு வெறியர், சுவையான உணவுகளுக்கு அடிமையாக இருப்பார், மருந்தினால் பக்க விளைவுகளை சந்திப்பர், கல்வியறிவு உடையவர், வெள்ளி மற்றும் பல உலோகங்களை சேகரிக்கும் குணமுண்டு, தனது பணிகளை சாதூர்யமாக பேசி பிறரின் மீது சுமத்தும் திறனுடையவர், பிற்காலத்தில் நல்ல குடும்பம் வழியாக நிம்மதியை அடைவார், சேமித்து வைத்த சொத்துகளினால் நன்மையை அடைவார், பொதுவாக சுக்கிரன் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்

CamScanner

மிதுனம் அதிகாரமானால்

புத்தி சாதுர்யமானவர், வித்தை தேர்ச்சியுள்ளவர், எதையும் லாவகமாக கையாளக்கூடியவர், எந்த காரியமானலும் அதில் எவ்வளவு தடை வந்தாலும் சூழலை திறம்படக் கையாளும் சாதுர்யமுண்டு, காது தோள்பட்டை வலி, தோல் மற்றும் நரம்பு தொடர்பான உபாதைகளுக்கு ஆளாவர், எதையும் பார்த்தவுடன் கற்கும் திறனுண்டு, வித்தை ஆர்வமுடையவர், அனவரிடமும் பொதுவானவர் போலவே பேசக் கூடியவர், புரோக்கர், மருந்து, எலெக்ட்ரோனிக், கணித கல்வி, நீர்மமான வஷ்துகளால் வருமானமுண்டு, சகோதரி மற்றும் பெண் குழந்தைகள் வழியில் இடர்பாடுகளை எதிர்கொள்வார், அனைவருக்கும் புரியும் படியாக தன்னை வெளிப் படுத்துவதில் தடைகள சந்தித்தாலும் அதில் புதுமையான வகையில் சிறப்படைவார், பெண் குழந்தை உண்டு, தனது பேச்சினால் விரோதிகளை அடைவார் இருப்பினும் பிற்காலத்தில் அவர்களிடம் சமாதானம் பேசி சரி செய்யும் ஆற்றலும் அதிகம் உடையவர், காமம் மிகுந்து காணப்படும், எதிர்பாலினத்தை ஈர்க்கும் திறனும் உடையவர், கலைகள் மீது நடனம் பாடல், இசை கற்கும் ஆர்வம் உடையவர், வாழ்க்கையின் பிற்பகுதியில் தான சமூகத்தில் கற்றுக் கொண்ட திறமைகளால் நிறைவான வாழ்க்கையை வாழ்வார், சொத்து மற்றும் பொருள்களுடன் வாழ்வார், பிற மொழிகளை கற்கும் ஆர்வமுடையவர், தனது சுய முயற்சியால் புகழை அடைவார், பொதுவாக புதன் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்

கடகம் அதிகாரமானால்

ஜாதகருக்கு மனக் குழப்பம் தாழ்வு மனோநிலை உண்டு, ஜாதகரின் தாயர் ஆளுமையுடையவராக இருப்பார், ஜாதகர், காருண்யமிக்கவராகவும் இருப்பார், வீடு நிலம் சார்ந்த விசயங்களில் சிக்கலை சந்தித்து பிற்காலத்தில் நிம்மதியான வீடு

வாகன சுகங்களை அனுபவிப்பார், உணவு, வாகனம், மருத்துவம் மற்றும் கணினி வழியில் வருமானம் ஈட்டுவார், பயண விரும்பி அதிலும் தடைகளை கடந்து வெற்றியடைவார், ஜாதகர் பிறரின் பாராட்டுக்களுக்காக ஏங்குவார், பிறருடைய கருத்துகளை கவனித்து வாழ்வார், பிறருடைய வாழ்க்கையிலும் தானக நுழைந்து அவமானமடைவார், முக்கியமான நபராக இருப்பார், கண், சளி, வயிறு, மார்பு மற்றும் சிறுநீரக பிரச்சனைகளை சந்திப்பர், பல இடங்களுக்கு பிரயாணம் செய்து இவருடைய முயற்சியினால் புகழடைவார், கேள்வி ஞானத்தில் சிறந்தவர், அகண்ட அறிவுடையவராக இருப்பார், உடல் உபாதகளை அடிக்கடி சந்தித்தாலும் அதற்கு மருத்துவமும் கிடைக்கும், கனவுகளாலும் அதீத கற்பனையாலும் குழப்பமடைந்தாலும் அதுபோன்ற கற்பனை திறனால் பிரச்சனைகளை சரி செய்யும் ஆற்றலை பெறுவார், பல பிரச்சனைகளுக்கு லாஜிக்கான தீர்வுகளை கண்டறிவார், பல விசயங்களை மறந்து விடுவார், இது அவருக்கு சில சமயங்களில் நன்மையை கொண்டுவரும், தாய் மிகவும் முக்கியமானவராக இருந்தாலும் அவருடன் அவ்வப்போது கருத்து மோதல்கள் உண்டாகும், இவரின் தாயரின் வாழ்க்கையில் மிகுந்த சிரமங்கள் இருக்கும், இருப்பினும் இவரின் வாழ்க்கை உயர்வுக்கு தாயின் ஒத்துழைப்பு அதிகம் இருக்கும், கர்ப்பை சார்ந்த சிக்கலை ஜாதகர் சந்திப்பார், கபம் தொடர்பான உடல் பிரச்சனைகள் உருவாகும், பொதுவாக சந்திரன் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்

சிம்மம் அதிகாரமானால்

ஜாதகர் தனக்கென தனித்துவமான சூழலை விரும்புவார், அதனாலேயே பிறரிடம் பணி செய்யும் நிலை ஏற்பட்டால் அதில் நிலைப்பது கடினம், தந்தை முக்கியமாக இருப்பினும் ஜாதகருக்கு நேரடியாக உதவுவதில் சிக்கலுண்டு, ஜாதகருக்கு எப்போதும் குழந்தைகளின் நலனில் அக்கறை அதிகம், குழந்தை பிறப்பு

அல்லது குழந்தைகளின் உடல் நலம் குறித்த சிக்கல் உண்டு, அரசுப் பணி அல்லது சொந்த தொழில் அல்லது அயல்நாடு வழியாக வருமானம் பெறுவார், பாரம்பரிய மற்றும் தனது மரபுகளின் மீது பெருமை கொண்டவர், தலைமை பன்பு அதிகமாக இருக்கும் பிறரை அடக்கி ஆளும் குணமுடையவர், பிறருக்கு உதவும் கருனையும், பெருந்தன்மையும் இருக்கும், சில சமயங்களில் சுயநலத்துடன் நடப்பார், பிறரிடம் நயந்து பேச தெரியாமல் விரோதித்து கொள்வார், எதையும் நேரடியாக பேசுவதால் பலரை பகைத்துக் கொள்வார், வீண் பெருமைகளுக்காக வாழ்வார், அரசு மற்றும் அரசியல் ரீதியாக சிக்கலை சந்திப்பார், ஆன்மிகம் மற்றும் பக்தி உடையவர், பிறருக்கு வழிகாட்டும் திறனுடையவர், பூர்வீக சொத்துகளால் பயனடைவார், ஆனால் அதைப் பெறுவதில் சிக்கலும் உண்டு, எதையும் புதிதாக கட்டியமைக்கும் வல்லமையுடயவர், தனது குலத்தின் கீர்த்தி வழியாகவும் தனது சொந்த ஆற்றலினாலும் நற்பெயரினை அடைவார், தனது ஆளுமையினால் புகழடைவார், பொதுவாக சூரியன் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார், மேலாண்மை குணம் உள்ளவர், முதலீடு மற்றும் நிர்வாகம் வகையில் நிம்மதியடைவார்

கன்னி அதிகாரமானால்

ஜாதகர் வழக்குகளினால் சிக்கலை சந்திப்பார், நம்பிக்கை துரோகங்களை கடந்து வருவார், ஆரோக்கியம் சார்ந்த பிரச்சனைகள் சிறு சிறு அறுவை சிகிச்சைகள் உண்டு, இவருக்கு கிடைக்க வேண்டிய சொத்துகளில் வழக்குகள் உண்டு, குடும்பத்தினரால் இவருக்கு வர வேண்டிய சொத்துகள் அபகரிக்கப்படும், தோல், உணர்ச்சி நரம்புகள், சிறிய எலும்புகள் ரீதியான சிகிச்சைகள் உண்டாகும், தேவையற்ற வழக்குகள் கூட வரலாம், சிலர் காவல் நிலையம், சிறை வரை செல்கிறார்கள், தாயரின் உறவுகளினால் சிக்கல் இருந்தாலும் பல சமயங்களில்

CamScanner

ஏதாவது ஆதரவு கிடைக்கும், பொருளை பறி கொடுத்தல், ஏமாற்றமடைதலால் பொருள் இழப்புகள் இருக்கும், பிறர் மீது சந்தேகம் நிறைந்தவர், இருப்பினும் வெளியே காட்டிக் கொள்ளாதவர், எதையும் விவேகத்துடன் சமாளிக்கும் நபர், நீரினால் மற்றும் விசத்தினால் இவரது குடும்பத்தில் ஒருவருக்கு ஆபத்து உண்டாகும் நிலம், கணக்கு, மருந்து, கெமிக்கல், பாட்டில் சிமெண்ட் பெயிண்ட் மை போன்ற வழிகளில் ஜீவனம் செய்வார், மேலும் ஆடம்பரம் நிதி அழகு பொருட்கள் வழியாகவும் வருமானம் கிடைக்கும், பொது காரியங்களில் முன் நிற்பார், சமூக பற்றாளர், புரட்சி சிந்தையுடயவர், புதுமையான சிந்தனையுடயவர், கற்பிக்கும் ஆற்றலுடையவர், தந்து புத்திசாலிதனத்தினாலும் சமயோஜித புத்தியினாலும், வாதத் திறனாலும் புகழடைவார், பலருடைய சிக்கலுக்கு தீர்வு வழங்கக் கூடியவர், மிகவும் சாமர்த்தியசாலி, மனிதாபிமானமும் நகைசுவை உணர்வுடனும் பேசுவார் ஆனால் எல்லா வார்த்தைகளும் உள்ளர்த்தம் இருக்கும், சகுனி குணம் நிறைந்தவர், சொத்து, அறிவு, திறமை ஆகியவைகளால் பிற்காலத்தில் நிறைவை அடைவார்,

துலாம் அதிகாரமானால்

ஜாதகர் திருமண விசயத்தில் இடையூறுகளை சந்திப்பார், தாமதமான திருமணம் அல்லது பழகியவருடன் திருமணம் செய்து கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகலாம், எப்படி இருந்தாலும் குடும்ப விவகாரங்களினால் மனக் குழப்பமடைவார், பிற்பகுதியில் உறவுகளை சாதுர்யமாக கையாளும் திறன்களை வளர்த்துக் கொண்டு குடும்பத்தில் நிறைவை சந்திப்பார், வியாபார நுனுக்கம் கொண்டவர், தொழில் விவகாரங்களில் பணத்தினால் ஏமாற்றங்களை கடந்து வருவார், சந்தைபடுத்துதல், வியாபாரம், விளம்பரம், நிதி மற்றும் ஆடம்பர அழகு அலங்கார தொழில்கள் வழியாக வருமானம் பெறுவார், ஜாதகருக்கு சர்க்கரை, சிறுநீரக தொற்று, கண் சார் பிரச்சனைகள் உண்டாகும், ஆடம்பரமான பகட்டான வாழ்க்கை மீது

பிரியமுள்ளவர், அதிகமான செல்வம் சேர்க்க ஆசையுடையவர், பிறருடைய பணத்தை அடுத்தவருக்கு தந்துவிட்டு அது திரும்ப வராமல் சிக்கிக் கொள்வார், துணைவரின் மீது சந்தேகத்துடன் இருப்பார், பிறர் நிலை அறியாமல் பேசும் குணமுடையவர், அதீத தலைவலி, போகத்தினால் நிறைவை அடைவார், போகத்தினால் வரும் பக்கவிளைவுகளால் அவதிப்படுவார், கர்ப்பை மற்றும் பிறப்பு உறுப்பு தொற்று உடையவர், சந்ததி விருத்தியில் தடை தாமதத்தினை கடந்து வருவார், தந்து வசீகரத்தினால் காரியங்களை சாதித்துக் கொள்வார், குடும்பம் மற்றும் கூட்டாளிகள் போன்றவர்களோடு கருத்து வேற்றுமைகள் இருப்பினும் அனைவராலும் விரும்பப்படும் நபராக இருப்பதால் அனைத்திலும் ஓரளவுக்கு நிறைவை அடைவார், இவர் ஆரம்பகாலத்தில் அனைத்தின் மீது ஆசை இருப்பினும் பிற்காலத்தில் சுற்றம், இன்பம், வசதிகளை அடைவார், இவர் தனது உறவுகளின் வழியாக புகழடைவார், சுக்கிரன் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்,

விருச்சகம் அதிகாரமானால்

ஜாதகர் நண்பர்களால் சிக்கலை சந்திப்பார், இருப்பினும் போராடும் குணமுடையவராகையால் துவண்டு போகாமல் நினைத்ததை சாதிக்கும் குணமுடையவர், பிறரால் அச்சுறுத்தப்படுவார், வாகனம் இயந்திர மருத்துவம் ஆகியவற்றால் பொருள் ஈட்டுவார், பல வகையான துரோகங்களை கடந்து வருவார், அதிஷ்டத்தின் மீது நம்பிக்கையுடையவர், ஊக வணிகத்திலும் நம்பிக்கை அடிப்படையில் செய்த முதலீடுகளிலும் இழப்பு மற்றும் துரோகங்களை சந்திப்பார், உயிர் தொடர்பான பயம் அதிகம் கொண்டவர், உடல் நலம் குறித்த சிக்கலை சந்திப்பர், உயர் அதிகாரிகளுடன் மோதல் போக்குகளால் பணியில் இடையூறுகளை கடந்து வருவார், தவறி விழுதல், ரத்தம் தொடர்பான உபாதைகள் நெருப்பு, மின்சாரத்தின் வழியாக விபத்துகளை சந்திப்பது போன்றவற்றால் அவதியுறுவார், விச ஜந்துக்களினாலும், மிருகங்களாலும் தாக்கப்படும் அபாயம் உண்டு, குடும்பத்தில் பகை, சகோதரன் கணவனுடன் விரோதம் சச்சரவுகளை சந்திப்பார், வருமானத்தை கடந்த செலவு, கணக்கில்லாத முதலீடுகள்,

CamScanner

பேராசையினால் தொழிலில் அவசரம் ஆகியவற்றால் ஆரம்பத்தில் சிக்கலை சந்தித்து அதனால் பெற்ற அனுபவங்களினால் வாழ்வின் பிற்பகுதியில் நம்பிக்கை விசயத்தில் நிறைவை அடைவார், ஆரோக்கிய சிக்கல்களை எதிர் கொள்வார், செவ்வாய் அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்,

தனுசு அதிகாரமானால்

ஜாதகர் சாமர்த்தியசாலி, தரும சிந்தை மிக்கவர், தலைமை பன்பு மிக்கவர், சுய கௌரவம் நிறைந்தவர், புகழின் மீது விருப்பம் உடையவர், சபல சிந்தனையும் உண்டு ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார், பிறருக்கு அறிவுறை வழங்கும் நிலைக்கு உயருவார், நிதி, ஆன்மீகம், கற்பித்தல், மற்றும் ஏஜென்சீஸ் தொழில்கள் வழியாக வருமானம் ஈட்டுவார், எப்போதும் வாழ்க்கையின் உண்மையை அறிந்து கொள்வதில் முனைப்புக் காட்டுவார், பிறருக்கு உதவுதலில் திருப்தி அடைவார், புன்னியம் சேர்ப்பதில் சிரத்தை எடுத்துக் கொள்வார், யாத்திரைகள் மேற்கொள்வார், குழந்தை பிறப்பு தொடர்பான சிக்கல்களை கடந்து வருவார், இவர் குழந்தைகளின் வாழ்க்கை குறித்து அச்சத்துடன் இருப்பார், குடல் செரிமானம், தசை மண்டலத்தில் உபாதைகளை சந்திப்பார், தொலை தூர பயணங்களில் ஆர்வம் உடையவர், நெறிகள் கலைகள் வாழ்க்கை பற்றி சதா பேசிக்கொண்டே இருப்பார், தனக்கு அனைத்தும் தெரியும் என்ற நினைப்பு அதிகம் உண்டு, எதாவது கொள்கையை சார்ந்து யாரவது ஒருவரின் வழியில் நடக்க முயற்சி செய்வார், ஆரம்ப காலத்தில் பிறரால் தவிர்க்கப் பட்டாலும் பிற்காலத்தில் தவிர்க்க இயலாதபடி நல்ல நிலையை அடைவார், தனது செயல்பாடுகளால் புகழை அடைவார், தொழில் மற்றும் வருமான தொடர்பான கல்விகளில் இடையூறுகளை சந்திப்பார், தனது கருத்துகளை காலத்திற்கேற்றபடி ஆவணப்படுத்துவதில் விருப்பம் காட்டுவார், சமூகத்தில் உயர்ந்தவர்களின் நன்மதிப்பை பெற்றவர், குரு அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார், தருமத்தினால் புகழடைவார்,

CamScanner

மகரம் அதிகாரமானால்

சமூக பொறுப்புடையவர், மரபு ரீதியான மனோ நிலை பிரச்சனைகள் இருக்கும், பூர்வீகத்தில் இருந்து விலகி இருப்பார், பிறருக்கு உதவும் குணமுண்டு, பிறரின் நிலையை உணர்ந்து செயலாற்றுபவர், தொழில் தேர்ச்சியும் வித்தை கர்வமும் அதிகம் இருக்கும், தொழில் விசயத்தில் திறமை அதிகம் இருப்பினும் அங்கீகாரமில்லாமல் ஆரம்பகாலத்தில் அலைகழிக்கப்படுவார் வாழ்க்கையின் பிற்பகுதியில் தொழில் மூலம் நிம்மதியடைவார், தனது லட்சியத்திற்காக போராடுவார், பிறர் தாழ்வாக கருதும் தொழிலானாலும் பொறுப்புடன் செய்வார், எதிலும் புதுமை படைக்கக் கூடியவர், ஆரம்பகாலத்தில் வருமானம் குறித்த இடையூறுகள் இருப்பினும் வாழ்க்கையின் மிக முக்கியமான காலகட்டத்தில் நல்ல வருமானத்தை பெறுவார், உதவும் குணம் அதிகம் உண்டு, அனாதைகள் முதியோர், கை விடபட்டவர்களுக்கு உதவுவார், எதாவது பொதுகாரியத்தில் முன் நிற்பார், தொழில் விசயத்தில் இவரது திறமை மீது விமர்சனத்தை சந்திப்பார், அதோடு போராடுவார், குல மரபுகள் மீது பெருமையும் நம்பிக்கையும் உடையவர் அதே சமயம் புதுமையான சிந்தனையும் நிறந்தவராக இருப்பார், சேவை, போக்குவரத்து அலைச்சல் மிகுந்த பணிகள், அரசியல், அயல்நாட்டு வழியாக வருமானம் ஈட்டுவார், அனுபவத்தினால் வாழ்க்கையை கற்று வைத்திருப்பர், தனது கடமையை உணர்ந்து செயல்படுவார், சனி அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார், நிதானம் மிக்கவர், தனது வருமானம் மற்றும் சேவைகளின் வழியாக வாழ்க்கையில் நிறைவை அடைவார்,

கும்பம் அதிகாரமானால்

ஜாதகர் ரகசியங்கள் நிறைந்தவர், இவரது குடும்பத்தில் உள்ளவர்களும் எதையோ மறைத்து பேசுவது போலவே இருக்கும், ஆய்வு மேஜிக், தொல்பொருள், துப்பறிதல், தரம் பரிசோதனை லேப் போன்ற கண்டறியும் பணிகளை செய்வார், இவரது தொழிலை

CamScanner

பிறருக்கு சொல்லும் போதே சிறு விளக்கம் கொடுக்க வேண்டும் அதுபோல புதுமையான பணிகளை செய்வார், ஜாதகர் தனது ஆதயத்திற்காக எந்த மாதிரியான தொழிலையும் கூச்சம் பார்க்காமல் செய்வார், பலருடைய நட்பை பெற்று இருப்பார், பிறருக்கு உதவுவது மற்றும் அறிவுரை கூறுவது போன்றவைகளால் பிரபலமடைவார், தனது அனுபவங்களினால் புகழையும் பெருமையையும் அடைவார், கால் நரம்பு மற்றும் மன அழுத்தம் தொடர்பான அவஸ்தைகளை சந்திப்பார், மிகுந்த குழப்பத்தினை ஆரம்பகால பணிகளில் எதிர் கொண்டாலும் பிற்காலத்தில் உயர்வை அடைவார், குற்றத்தினை மறக்கும் குணம் கொண்டவர், தன்னை நிரூபிக்க பல விசயங்களை இழக்க வேண்டும், வாகனங்கள் பயணங்களின் மீது பிரியம் கொண்டவர், போக விசயத்தில் ஆர்வம் உடையவராக இருப்பார், பூர்வீக சடங்குகளை செய்யும் ஆசையுடையவர், அமானுஸ்ய நம்பிக்கை, பில்லி, மை மாயம் மீது பயம் கொண்டவர், குடும்பத்தில் அழுத்தம் நிறைந்த சூழல் இருக்கும், உறவுகளுடன் மோதல் போக்கு உடையவர், தந்து குலத்தினை பெருமை பாடக்கூடியவர், சனி அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்,

மீனம் அதிகாரமானால்

ஜாதகர் பிரபலமடைவார், மக்கள் தொடர்பில் இருக்கும் பணிகள் விளம்பரம், ஊடகம், நிதி, ஆன்லைன் பணிகள், பிரிண்ட், ஆடை ஆபரணம், அழகுகளை சார்ந்த வருமானத்தை பெறுவார், ஆன்லைன் வர்த்தகம், டெலிவரி பணிகள், ஜாதகர் செல்வங்களை சேர்த்து வைத்திருப்பார், ஆனால் ஆரம்ப காலத்தில் பல இழப்புகளை கடக்க வேண்டும், வயிறு, இதயம், கல்லீரல், குடல், மற்றும் மனம் ரீதியாக சிக்கலுண்டு, அது தொடர்பான ஆலோசனைகளையும் பலருக்கு வழங்குவார், தந்து வாழ்க்கையே ஏதோ ஒரு பெரிய விசயம் போல நினைத்து பெருமிதமும் நிம்மதியும் அடைவார், கனவுகள் கற்பனைகளால் அவதியுறுவார், சந்ததிகளுக்கு தேவையானதை சேகரிப்பார், தனது வேலையை முடித்துக் கொள்ள பலருடன் பகைத்துக் கொள்வார், சுயம் மற்றும் ஆன்மீக காரணங்களுக்காக

பிரயானங்களை மேற்கொள்வார், குற்ற உணர்வுடையவர், தன்னை வெளிக்காட்டிக் கொள்வதில் தயக்கம் உண்டு, அவமானங்களை சந்திப்பர், வாழ்க்கை பற்றிய பெரிய திட்டங்களை வைத்திருப்பார், உயர் பதவிகளை அடைய முயற்சி செய்வார், குழந்தைகளின் வாழ்க்கையில் குழப்பங்கள் இருக்கும் ஜாதகருக்கு குழந்தை பிறப்பது மற்றும் அந்த குழந்தையை வளர்ப்பது ஆகியவற்றில் ஏதாவது சிக்கல் இருக்கும், புன்னியத்தின் மீது நம்பிக்கை இருக்கும், பொருளின் மதிப்பு தெரியாமல் சில சமயங்களில் ஏமாறுவார், ஏதாவது தொடர் பழக்கத்திற்கு அடிமையாவார், பல சமயங்களில் பிறரை கடுமையாக மனதளவில் காயப்படுத்துவார், எது எப்படி போனாலும் ஒவ்வொரு செயல்களிலும் சிறு சிறு நிறைவடைவதன் மூலம் வாழ்க்கையில் நடக்கும் அனைத்தையும் கடந்து செல்லும் திறனை அடைவார், குரு அதிகாரமானது போன்ற பலன்களையும் அனுபவிப்பார்,

நன்றி

ஜோதிடக் கலை அரசு, பால்வீதி ஜோதிடன்

ராஜநாடி. **காந்திராஜன். பார்த்திபன்**

9941220631, 8610578792



Rajanaadi®

Complete astrology solution

வெளியிடுவோர் :

லலாடம் ஜோதிட குழுமம்

(ராஜநாடி பயிற்சி மையம்)

22, லட்சுமிபுரம், செம்பரம்பாக்கம், சென்னை - 600 123.

CamScanner